# வியவகார சிந்தாமணி.

என்னும்

# தமிழ் லா ஜர்னல்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 AUG 1914
MADRAS

1913

1193-ஜூலை முதல் டிசம்பர் முடிய I-வது வாலியூமில் பிரசுரமான
திர்மானங்களின்

## பெயர்வாரி அட்டவணை.

### பிரிவிகௌன்ஸிலி் தீர்மானங்கள்.

| பெயர். | | பக்கம். | இங்கிலீஷ் பிரசுரம் |
|---|---|---|---|
| அஜிமா VS முன்ஷீ ஷாமலானந்தா | ... | 85 | 25 MLJ 55 |
| அஹமத்பாயி ஹபீபாய VS பம்பாய் பைர் & மாரைன் இன்ஷியூரென்ஸ் கம்பெனி | ... | 20 | 24 " 328 |
| இந்தர் ஸாஹேய் VS ஷாய்யாம் பகதூர் | ... | 83 | 25 " 57 |
| ஹரிலால் இச்சாலால் VS தேசாய் சர்வீலால் சதர்புஜதாஸ் | ... | 87 | ,, " 101 |
| ஹஸான் பக்ஷ் VS இலாஹி பக்ஷி | ... | 84 | ,, " 61 |
| கன்னியலால் Vs நேஷனல் பாங்கி ஆப் இந்தியா | ... | 85 | ,, " 104 |
| கற்பாலசிங் VS பல்வந்தசிங் | ... | 38 | 24 " 318 |
| கெடார் நாத் VS ஜயநாராயன் ராம்ராஜ் பால் | ... | 133 | 25 " 512 |
| லாலூலா ஹேய் VS ராஜ்பன்ஸ் பாரதி | ... | 46 | 24 " 355 |
| மூல்ராஜ கட்வா VS விஸ்வநாத் பிரபுராம் | ... | 4 | ,, " 60 |
| நெட்ராம்சிங் VS மூஸம்மத்தர்ஸ் கன்வார் | ... | 136 | 25 " 469 |
| பிருஜராஜ சிங் VS ஷியோதான் சிங் | ... | 74 | 25 " 188 |
| பர்டாப் சிங் VS பஹபூதி சிங் | ... | 168 | ,, " 492 |
| பம்பாய் பாங்கி VS நந்தலால் தாகர்ஸி தாஸ் | ... | 14 | 24 " 176 |
| ஸயித் அப்துல்லாகான் VS ஸயித் பஸரத் உசேன் | ... | 90 | 25 " 91 |
| வைத்தியநாத பிள்ளை VS ஸர்க்கார் வாதி | ... | 57 | ,, " ,, |
| தரணி காந்தலாஹிரி VS கர்பார் அலிகான் | ... | 87 | ,, " 95 |

165405



| | பெயர். | | பக்கம். | இங்கிலீஷ் பிரசுரம் |
|---|---|---|---|---|
| A. | அ[illegible]ப்பராஜு vs [illegible] யாசேந்துருலு | ... | 50 | 24 " 402 |
| | [illegible]ப்ப செட்டி | ... | 34 | ,, " 293 |
| | அ[illegible] vs அக்கய்யா | ... | 41 | ,, " 333 |
| | அப்பளஸாமி vs விஜயநகரம் மகாராஜா (S A 214) | ... | 49 | 25 " 50 |
| | அர்த்த ராமராகு vs அர்த்தபதி | ... | 79 | ,, " 249 |
| | அருணாசல செட்டி vs பிரபய்ய செட்டி | ... | 73 | ,, " 174 |
| | ஆதிநாராயண vs ராமுடு (S A 931) | ... | 12 | 24 " 17 |
| | ஆதித்யமய்யர் vs ராமகிருஷ்ணய்யர் | ... | 145 | 25 " 602 |
| B. | பாலசுப்பிரமணிய செட்டி vs ஸொர்ணம்மாள் | ... | 49 | ,, " 367 |
| | பாச்சாஸேட் vs அப்துல்கனி | ... | 138 | ,, " 507 |
| | போடி vs வெங்கடசாமி | ... | 117 | ,, " 363 |
| C. | சிதம்பரம் செட்டி vs நாகப்ப செட்டி C M A 206 | ... | 5 | 24 " 73 |
| | சேர்மென் ஸ்ரீரங்கம் முனிஸிபாலிடி vs சுப்பாபண்டிதர் | ... | 97 | 25 " 297 |
| | கன்னைய்ய செட்டி vs டி. ராமானுஜாச்சாரியார் (S A 1018) | ... | 11 | 24 " 48 |
| | சக்கிரபாணி மிஸ்ரோ vs சதாசிவசோடங்கி S A 1979 | ... | 112 | 25 " 352 |
| D. | துரைசிங்கம் vs வைரவன் செட்டியார் C R P 301 | ... | 50 | ,, " 464 |
| E. | எற்றந்தி பக்றன் vs பாதும்மா | ... | 102 | ,, " 4279 |
| G. | கங்கய்யா vs ராமஸாமி C R P 528 | ... | 51 | 24 " 428 |
| | கணபதிபட்டர | ... | 56 | ,, " 463 |
| | கெஜபதி கிருஷ்ணசந்திரதேயோ vs ஸ்ரீனிவாஸாசார்லு | ... | 157 | 25 " 433 |
| | கங்குரெட்டி vs சமரபதி முதலி | ... | 137 | ,, " 510 |
| I. | இனுகுண்டி பிரகாச ராஜஸிம்காரு vs வெங்கடராவ் | ... | 115 | 25 " 360 |
| J. | ஜயிதம்பி vs நபீசாஹிப் (A S 24) | ... | 8 | 24 " 15 |
| K. | கொளத்து அய்யர் vs ரங்க வாத்தியார் (S A 1949) | ... | 6 | ,, " 84 |
| | குப்புசாமி அய்யர் vs ரங்கமோபாய் | ... | 24 | ,, " 190 |
| | கிருஷ்ணமாச்சாரியார் vs சின்னம்மாள் | ... | 25 | ,, " 192 |
| | கேசவஸ்வாமி அய்யர் vs நாராயண செட்டி | ... | 28 | ,, " 228 |
| | கிருஷ்ணபட்டா vs ஜில்லா கலக்டர் | ... | 74 | 25 " 161 |
| | காயாரோஹணப்பத்தன் vs சுப்பருயத்தேவன் | ... | 100 | ,, " 251 |
| | கோரபாலு vs நாருடணு | ... | 69 | ,, " 315 |
| | கிருஷ்ணசாமி அய்யர் vs சந்திரவதனு | ... | 111 | ,, " 349 |
| | கரிபாஸன்னு vs வீரபத்திரப்பா | ... | 61 | ,, " 3 |
| | கே. ஆர். வீ. கம்பெனி vs சீதாராமஸாமி | ... | 163 | ,, " 501 |
| | காமாக்ஷம்மா vs ஸர்க்கார் வாதி | ... | 150 | ,, " 445 |
| | கேலுநாயர் vs மீனாக்ஷி | ... | 198 | ,, " 586 |
| | கிருஷ்ண ஹண்டே vs பத்மனபஹண்டே | ... | 74 | ,, " 161 |
| | கோனே நாயகர் vs கோபாலய்யர் | ... | 175 | ,, " 425 |
| L. | லாட் கோவிந்ததாஸ் vs ராம்தாஸ் விஷ்ணுதாஸ் ( S 88) | | 6 | 24 " 88 |
| | லட்சுமி நரசிம்மா vs சீதாராமஸாமி (S A 1166) | ... | 18 | ,, " 289 |



| | பெயர். | | பக்கம். | இங்கிலீஷ் பிரசுரம் |
|---|---|---|---|---|
| | லட்சுமணய்யர் vs சங்கரமூர்த்தி பிள்ளை | ... | 78 | 25 M L J 245 |
| | லட்சுமம்மா vs தியாகராஜா | ... | 54 | 24 " 450 |
| | லட்சுமி நரசிம்மம் vs ராமசந்திரா (S A 1259) | ... | 34 | ,, " 290 |
| | லட்சுமம்மா vs ரத்தினம்மா | ... | 125 | 25 " 556 |
| | லட்சுமிநரசிம்மா vs லட்சுமம்மா | ... | 131 | ,, " 531 |
| M. | மீனாட்சி அம்மாள் vs ராமய்யர் | ... | 8 | 24 " 106 |
| | முத்து கிருஷ்ணய்யர் vs சங்கரலிங்கம் பிள்ளை (L P A 60) | ... | 13 | ,, " 135 |
| | முத்தம்மாள் vs ஜில்லா கலக்டர் A S 199 | ... | 32 | ,, " 405 |
| | முனியக்கோனன் vs பெருமாள் கோனன் S A 499 | ... | 45 | ,, " 352 |
| | மொட்டய்யப்பன் vs பழனிக்கவுண்டன் | ... | 98 | 25 " 290 |
| | மங்களசாமித்தேவர் vs சட்டயப்பப்புரண்டன் | ... | 112 | ,, " 351 |
| | மொய்தீன ... | ... | 140 | ,, " 355 |
| | முத்தய்ய செட்டியார் vs ராமஸாமி செட்டியார் | ... | 91 | ,, " 205 |
| | மொய்தீன் பாச்சாசாகிப் | ... | 129 | ,, " 484 |
| | மானேஜர் சிவகங்கை ஜமீன் vs சிதம்பரம் செட்டி | ... | 196 | ,, " 641 |
| | மனோன்மணியம்மாள் vs வைத்தியலிங்க நாயக்கா | ... | 130 | ,, " 481 |
| | முத்துகிருஷ்ணய்யர் vs வீரராகவய்யர் | ... | 114 | ,, " 356 |
| N | நரசிம்மா vs ராமஸ்வாமி | ... | 2 | 24 " 91 |
| | நத்துராம் சிவாஜீ vs கிருஷ்ண C M S A 50 | ... | 31 | ,, " 270 |
| | நாராயணசாமி நாயுடு vs திருமல செட்டி சுப்பய்யா S A 516 | ... | 5 | ,, " 79 |
| | நாராயணசாமி நாயுடு vs ஜில்லா கலக்டர் S A 1445 | ... | 10 | ,, " 36 |
| | நரசரிஸாஹு vs கொண்டன் நாயுடு S A 837 | ... | 52 | ,, " 462 |
| | நாருமய்யா vs திருவேங்கிடத்தான் செட்டி | ... | 27 | ,, " 223 |
| | நாராயணய்யர் vs ராமய்யர் | ... | 65 | 25 " 219 |
| | நாராயணசாமித்தேவர் vs அய்யாசாமி அய்யங்கார் C R P 346 | ... | 23 | 24 " 184 |
| | நரஸய்யா vs ஒப்பய்யா | ... | 160 | 25 " 601 |
| | நாராயணசாமி நாயுடு vs நம்புரிபத்திரிராஜு | ... | 150 | ,, " 451 |
| P. | பாபராயுடு vs ரட்டம்மா S A 950 | ... | 4 | 24 " 62 |
| | பொங்கமேஸ்திரி vs ஸர்க்கார் வாதி Crll R C 80 | ... | 23 | ,, " 186 |
| | பரமேச்வரபட்டர் vs ஸ்ரீதேவி | ... | 81 | 25 " 51 |
| | பப்ளிக் பிராஸிக்யூடர் vs கன்னம்மாள் | ... | 26 | ,, " 211 |
| | பரசுராமபட்டர் vs வெங்கடாசலய்யர் | ... | 123 | ,, " 561 |
| | பொன்னுசாமி பிள்ளை vs சொக்கலிங்கம் பிள்ளை | ... | 144 | ,, " 593 |
| | பொன்னுசாமி செட்டி vs நரசிம்ம செட்டி | ... | 147 | ,, " 545 |
| R. | ரங்கனுதஞ்செட்டி vs லட்சுமி அம்மாள் 379 | ... | 183 | 25 " ,, |
| | ரஹிம்துல்லா சாகப் vs அபிஷியல் அஸைனீ | ... | 123 | Do " 560 |
| | ராஜாராம் vs ராம்பாய் M L J 75 S A 744 | ... | 5 | 24 " ,, |
| | ராமஸ்வாமி அய்யர் vs வெங்கடேசுவரய்யர் Crll R C 253 | | 7 | Do " 1 |
| | ராமகிருஷ்ண செட்டி vs சுப்பராய அய்யர் S A 1293 | | 11 | Do " 54 |
| | ராமண்ணு vs பாபு C M A 268 | ... | 12 | Do " 96 |

| | பெயர். | பக்கம். | இங்கிலீஷ் பிரசுரம் | |
|---|---|---|---|---|
| | ராம அய்யங்கார் vs ஜகனுதபாண்டிய அய்யர் ... | 42 | 24 M L J | 842 |
| | ராமண்ணு vs அன்னம்மா A S 203 | 22 | Do | 183 |
| | ராமலிங்க செட்டி vs அனந்தாச்சாரியார் S A 44 | 45 | Do | 350 |
| | ராமய்யா vs ருக்மணியம்மாள் | 38 | Do | 313 |
| | ராமஸாமி செட்டி vs லட்சுமி ஆச்சி C R P 127 | 29 | D0 | 231 |
| | ராமய்யா vs ராமஸாமி C R P 244 ... | 29 | Do | 233 |
| | ராமஸாமி செட்டி vs ராமனுதன் செட்டி C M S A 8 | 96 | 25 | 354 |
| | ராமண்ண கவுண்டன் vs ராமலிங்க முதலியார் S A 881 | 63 | Do | 24 |
| | ராஜா ஆப் காளாஸ்தி vs வெங்கடகிரிமகாராஜா ... | 76 | Do | 195 |
| S. | சங்காராயம்மா vs வெங்கடரத்னம் C M A 30 | 9 | 24 | 30 |
| | ஸெக்ரெடரி ஆப் ஸ்டேட் vs ரகுநாததாதாசாரியார் S A 1834 | 9 | Do | 31 |
| | சுந்தரரெட்டியார் vs சுப்பையகவுண்டன் C M A 53 ... | 11 | Do | 28 |
| | ஸ்ரீனிவாஸய்யங்கார் vs இந்தியகாரியதரிசியாரவர்கள் A S 2104 | 10 | Do | 41 |
| | சுப்பிரமணிய செட்டி vs துரைசிங்கத்தேவர் S A 523 ... | 11 | Do | 49 |
| | ஸ்ரீராமுலு vs ஜோகிராஜு C R P 74 & 77 ... | 23 | Do | 138 |
| | சாமராவ் vs துரைசாமி செட்டியார் S A. 1222 ... | 31 | Do | 266 |
| | ஸெக்ரெடெரி ஆப் ஸ்டேட் vs அப்துல்ரஹிமான் A S 124 | 51 | Do | 426 |
| | ஸூராஜ நாராயின் vs இக்பால்நாரயன் ... | 43 | Do | 345 |
| | சத்திரிராஜு vs பாலப்பா ... | 44 | ,, | 363 |
| | சுப்பிரமணிய பிள்ளை vs சிதையம்மாள் LPA 9 ... | 52 | ,, | 457 |
| | சுப்பிரமணிய முதலியார் vs ரங்ககனுதன் செட்டியார் ... | 40 | ,, | 301 |
| | சந்நியாஸி பாரித்ய vs அர்தேஸ்வரு ... | 37 | ,, | 321 |
| | ஸ்ரீனிவாஸ பிள்ளை vs வெங்கடம்மாள் ... | 35 | ,, | 296 |
| | ஷேக்மீராசாகிப் vs ஷேக்கயினலப்பை ... | 105 | 25 | 259 |
| | சீதாராமசெட்டி vs கிருஷ்ண சாமி செட்டி ... | 109 | ,, | 264 |
| | சங்கரப்ப நாயக்கர் vs ராணிநாச்சியார் ... | 103 | ,, | 276 |
| | ஷேக்மீரான் சாகிப் vs ரத்னவேலு முதலி ... | 60 | ,, | 1 |
| | ஸூரியநாராயணு vs ஸ்ரீராமுலு SA 122 ... | 63 | ,, | 16 |
| | சபாபதி பிள்ளை vs சொக்கலிங்கம் பிள்ளை ... | 141 | ,, | 552 |
| | சிவசுப்பிரமணிய முதலியார் vs சோமசுந்தரஞ் செட்டியார் ... | 181 | ,, | 422 |
| | ஸ்ரீனிவாஸராவ் vs பிச்சைபிள்ளை ... | 193 | ,, | 567 |
| | சுப்பிரமணிய அய்யர் vs சுப்பா நாயுடு ... | 170 | ,, | 452 |
| | சுப்பிரமணிய நாடான் vs ராமஸ்வாமி நாடான் ... | 122 | ,, | 568 |
| | சோலை கவுண்டன் ... | 166 | ,, | 403 |
| T. | தோளன் vs குன்னிகுட்டி ... | 2 | 24 | 93 |
| V. | வேலாயுதம் பிள்ளை vs வைதிலிங்கம் பிள்ளை C R P 313 | 4 | ,, | 66 |
| | வேலாயுதமூப்பன் vs சுப்பிரமணியஞ் செட்டி S A 1569... | 5 | ,, | 70 |
| | வைத்தியனுத சாஸ்திரியார் vs சோமசுந்திரம் பிள்ளை AS 76... | 8 | ,, | 9 |



1-ம் பிரதிவாதியின் பாகத்திற்குறிய கடன்களைத் தீர்ப்பதாக வாதிகள் ஒப்புக்கொண்டதே ராஜிநாமாவுக்கு முக்கிய காரணமாகவும் சொல்லப்படுகிறது. தவிற 2-ம் வாதியின் புருஷனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கனுஸரணையாகவே இந்த ராஜிநாமா ஏற்பட்டிருக்கிறது. மேற்கூறிய இரண்டுவிதமான உடன்படிக்கைகளினால் 1-ம் பிரதிவாதிக்கு வாக்களிக்கப்பட்ட பிரதிபிரயோஜனத்தைக் கவனித்தால் இந்த ராஜிநாமா உடன்படிக்கையானது உத்தியோக விக்கிறய உடன்படிக்கையென்றே சொல்லப்படவேண்டும். தனக்குக் கிடைத்த டிக்கிரீயின் நன்மையை பிரதிபிரயோஜனத்திற்காக மாற்றிக்கொடுக்கும் ஏற்பாடு விக்கிறய ஏற்பாடேயொழிய வேரல்ல. (அப்பீல் ஈறுங்கியில் தோல்வியடைவோம் என்ற பயம் 1-ம் பிரதிவாதிக்கு ஏற்படுவதற்குறிய சந்தாப்பங்கள் யாதொன்றும் துலங்கவில்லை. எடுத்துக் காட்டப்படவுமில்லை.)

விக்கிறயமாக வாதிகளுக்கு 1-ம் பிரதிவாதி மாற்றுகிற உத்தியோகத்தின் நிலமையென்னவென்றால் மூல விக்கிறகத்தைக் கையால் தொட்டு, அபிஷேகாதிகளைச் செய்து அலங்காரங்களையும் ஆபரணங்களையுமணிந்து நைவேத்தியங்களை ஸமர்ப்பித்து மந்திரோச்சாரணங்களால் அர்ச்சனை செய்து பற்பல ஸேவகமும் செய்யவேண்டிய கடமைகள் பூஜாவிதிகளைச் சேர்ந்தவைகளாகும். இவைகள் தினபிரதி நடக்கவேண்டும். உத்ஸவகாலங்களில் இன்னும் விசேஷமாக அநேகவிதமான பூஜாவிதிகள் நடக்கவேண்டியதாகும். அவ்வித உத்தியோகங்களை நடத்திவருவதற்காக தேவஸ்தானபண்டிலிருந்து தக்ஷிணை பூர்வமான வருமானங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. பூஜை செய்யும் உத்தியோகமானது பரம்பரையானது. ஹிந்துலாப்படிக்கு தலைமுறை தலைமுறையாக அது மாறிவருகிறது. ஆனால் அடுத்த வாரிஸ்தார் ஸ்திரீ ஜன்மமாகப் போய்விட்டால் அவள் மேற்கூறிய பூஜாவிதிகளை நடத்த யோக்கியதையற்றுப் போகிறாள். மூல விக்கிரகத்தைத் தொடவும் மந்திரோச்சாரணம் செய்யவும் ஸ்திரீயானவள் அர்கமல்ல. அவள்தானே பூஜை செய்யக்கூடாது. ஆகையால் அந்த உத்தியோகத்தையும் வகிக்க சாத்தியமாகாது. இவ்விதமான உத்தியோகத்திற்குறிய வருமானங்களையடையும் பாத்தியதை முக்கியமானதல்ல. ஆனால் தேவதைக்கு பூஜைகள் நடந்தேறி வரவேண்டிய கடமைதான் முக்கியமாகும். உத்தியோகத்தை யனுசரித்து வேலைகளை செய்யவேண்டியது முக்கியமேயொழிய வேலைக்குறிய சம்பளம் அடைவது முக்கிய அம்சமல்ல. மற்ற லௌகீகமான உத்தியோகத்தைப் பற்றி யோஜிக்கும்பொழுது அதாவது ஒரு ஆபீஸில் ரைட்டர் வேலையைப்பற்றி நினைக்கும் பொழுது அவன் செய்யவேண்டிய டியூடி இன்னதென்று மனதில் படுகிறதேயொழிய அவனுக்கு சம்பளம் இத்தனை என்ற விஷயத்தைப்பற்றி முதலில் எண்ணம் போகிறதில்லை. ஆனால் பரம்பரையாகப் பார்த்துவரும் உத்தியோகத்திற்கு வருமான விஷயம் முக்கியமாய் யோஜிக்கப்படுகிறது வாஸ்தவம்தான். அப்படிக்கிருந்தாலும் உத்தியோகம் முக்கியமானதாயும் வருமானம் அதற்கடுத்தபடியாகவும் சொல்லப்படவேண்டும். ஒரு மத சம்பந்தமான உத்தியோகமானது பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வரலாமென்று இப்பொழுது தெளிவாய் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவவித உத்தியோகத்தை வகிப்பதற்குஒருவனுடையபரம்பரைபாத்தியதையைமட்டும் ஆதாரமாகக்கொண்டுமெற்றப்படிக்குஅவனிடத்தில்யோக்கியதைக் குறைவிருந்தால் அந்த உத்தியோகத்திற்குப் பாத்திரனாக ஏற்படுத்துவது நியாயமாகாது. மூன் உத்தியோகம் பார்த்து வந்தவனுடைய குமாரன் வாரிஸ் பாத்தியதையால் அந்த உத்தியோகத்தைப் பார்க்க யோக்கியமில்லாமல் அந்நியமாாக்கத்தைத் தழுவிச் சென்றுவிட்டால் 1850-ம் வருஷத்திய 21-வது ஆக்ட்படிக்கு அவனுக்குக் குடும்ப சொத்தில் பாகம்கிடைக்க நியாயமேற்பட்டாலும் ஹிந்து மத சம்பந்தமான ஷெ உத்தியோகத்தை நடத்திவரக்கூடாமற் போகிறானல்லவா? சொற்பகாலத்து யோக்கியதைக்குறைவுகளால் அர்ச்சக உத்தியோகத்திற்குப் பரம்பரை பாத்தியம் விலகிப்போகாது. அதாவது மைனர் தசை, நிவர்த்தியாகக் கூடிய சித்தப்பிரமை (பயித்தியக்காரத்தனம்) ஸூதகம், விருத்திமுதலிய விலக்கங்கள் ஆகிய சொற்பகாலத்துஅசந்தர்ப்பங்களால்யோக்கியதைக்குறைவானால் அவைகளால் பரம்பரையான அர்ச்சக பாத்தியதையானது இழக்கத்தகாது. ஆனால் சாசுவதமான ஒருகுறை அல்லது ஊனம் பரம்பரை பாத்தியதைக்கு இடையூறுண்டாக்கு

மென்பதில் தடையில்லை. சிவாலயத்தில் ஸ்திரீகள் அர்ச்சக உத்தியோகத்தை நடத்த யோக்கியமானவர்களல்லவென்று வழக்கமாய் ஏற்பட்டிருக்கிறது. வாதிகளே இந்த வழக்கத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்த வழக்கமானது சாஸ்திர ரீதியாக இருக்கிறதா என்று யோஜிக்கவேண்டியது ஸ்வாரஸ்யமான பாயிண்டாகும். ஜன்மத்தில் பிராமணர்களான ஸ்திரீகளுக்கு விவாகம் என்ற வைதீக முறையானது துவிஜர்களென்னும் நிலமையைத் தந்து அவர்கள் வேதமந்திரங்களை உச்சரிக்கவும் வைதீகமான மத சம்பந்தமான உத்தியோகங்களைப் பார்த்துவரவும் அதிகாரமுடையவர்களாகிறார்கள். ஆனால் மத்திய காலத்து சட்டத்தீர்மானங்களால் ஸ்திரீகள் மத சம்பந்தமான உத்தியோகங்களை வகிக்க யோக்கியர்களல்லவென்று ஏற்பட்டிருக்கிறபடியால் சாஸ்திர ரீதியான நியாயங்களைப்பற்றித் தர்க்கித்து யாதொரு அபிப்பிராயங் கொடுப்பதனாவசியமாகும். ஸ்திரீயானவள் அர்ச்சக உத்தியோகத்தை நடத்திவர யோக்கியமில்லாதிருக்க அந்த உத்தியோக பாத்தியதை பாரம்பர்யத்தால் வகித்து அதற்குறிய வேலைகளைத் தனக்கு பதிலாக ஒரு பிரதிநிதியை வைத்து நடத்திவரலாமா? கூடாதென்றே சொல்லவேண்டும். ஒரு உத்தியோக பாத்தியதையை இழந்துபோவதற்கு மார்க்கபேதம், பயித்தியம், பெண்ணினம் ஆகிய குறைவுகள் சமமான குறைவுகளாகும். ஒன்றைவிட மற்றொருகுறைவு தாழ்ந்ததாகச் சொல்லக் கூடாது. [கிறிஸ்து மதத்திற்கு மாறினவன் எவ்விதம் அர்ச்சகபாத்தியதையை இழந்துவிடுகிறானோ அதுபோலவே பெண்ணாய் பிறந்த தோஷமும் அந்த பாத்தியதையைக் கெடுத்துவிடுகிறது.]

வாதியின் வியவகாரத்திற்குறிய பற்பல அதாரிட்டிகளைப்பற்றி யோஜிக்குமிடத்து அவைகள் வாதிகளுக்கு விரோதமாகவே யிருக்கின்றன. அதாரிடிகளை மூன்றுவகையாகப்பிரித்து மதசம்பந்தமான உத்தியோக பாத்தியதையை (அர்ச்சக பாத்தியதையை) ஒருவன் மற்றவனுக்கு விக்கிறயம் செய்யலாமா என்ற பாயிண்டைப்பற்றி முதலாவது கவனிப்போம். 6 மதராஸ் 76-ல் 3 மதராஸ் ஹைகோர்ட் ரிபோர்ட் 380-யும், 1876-ம் வருஷத்திய ஸ்பெஷல் அப்பீல் நெ. 759-ல் ஏற்பட்ட தீர்மானத்தையும் அனுசரித்து கோவில் பூஜாரி உத்தியோகத்தை விக்கிறயத்தால் மாற்றினது சட்ட விரோதமென்ற பாயிண்டானது கீழ்கோர்ட்டுகளில் ஆக்ஷேபிக்கப்படாத போதிலும் ஹைகோர்ட் 2-வது அப்பீலில் ஆக்ஷேபிக்கப்பட்டு அவ்வித விக்கிறயமானது சட்ட விரோதமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதும் தவிர 6 பம்பாய் 298-ல் அவ்வித மதசம்பந்தமான உத்தியோகத்தை நடத்திவருகிறவன் அதே வம்சத்தில் வாரிஸ் வரிசையிலுள்ளவனும் அந்த உத்தியோகத்தை நடத்திவருவதற்குறிய யோக்கியதையுடையவனுமுள்ள ஒருவனுக்கு விக்கிறயத்தால் மாற்றிவிடுவதில் சட்ட விரோதமில்லையென்ற பம்பாய் ஹைகோர்ட்டாருடைய தீர்மான அபிப்பிராயத்தின் நேர்மையானது மதராஸ் ஹைகோர்ட்டாரால் ஷை 6 மதராஸ் 76-ல் சந்தேகிக்கப்பட்டிருக்கிறது. 23 பம்பாய் 131-ல் 6 மதராஸ் 76-ன் அபிப்பிராயம் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. 23 பம்பாய் தீர்மானத்தில் அந்நியர்களுக்குவிக்கிறயம்செய்வதிலும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே விக்கிறயம் செய்வதிலும், பரம்பரையான தேவஸ்தான ஊழியங்களுக்கும் அந்தக்கேஸில் விவாதமாயிருந்த ஒரு விர்த்தி ஆபீஸ் உத்தியோகத்திற்கும் வித்தியாஸமிருப்பதாகவும் ஆனால் அவ்வித சந்தர்ப்பங்களில் வழக்கத்தையும் ஆசாரத்யையும் கவனித்து யாதொரு தீர்மானமடையவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 1910 மதராஸ் வாரக்குறிப்புகளின் 71ப-ல் பரம்பரைல்லாத மதசம்பந்தமான உத்தியோகத்தை ஒருவன் மற்றொருவனுக்கு (தன்னிஷ்டம்போல்) மாற்றக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தலைவன் பார்த்துவரும் அவ்வித உத்தியோகத்தைத் தனக்கடுத்த படியிலுள்ள வாரிஸுக்கும் மாற்றுவது செல்லத்தகாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மதராஸ் ஹைகோர்ட்டார் பம்பாய், கல்கத்தா ஹைகோர்ட் அபிப்பிராயங்களுக்கு விரோதமாக வாரிஸ் பாத்தியதையில் அடுத்த பாத்தியஸ்தனுக்கும் உத்யோகத்தை மாற்றக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஒரு லௌகீக உத்தியோகத்திற்கும் அர்ச்சகன் வேலைக்கும் மிக்க வித்தியாஸமுண்டு. அர்ச்சகனுக்கு பரம்பரையான ஆதீனமிருந்தபோதிலும் 21 மதராஸ் லா ஜர்னல் 580-ல் அர்ச்சகனை ஒரு வேலைக்காரன் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. தர்ம கர்த்தா



வுக்கு அடங்கி நடக்கவேண்டிய வேலைக்காரனாகின்றான். வருமானங்கள் சம்பளம் முதலியவைகளுடன் கூடிய ஒரு அர்ச்சக உத்தியோகத்தை தன் இஷ்டப்படி எஜமானுடைய (தர்மகர்த்தாவினுடைய) அனுமதியின்றியில் ஒருவனுக்கு மாற்றிவிடுவது சாத்தியமாகாது. யோக்கியதையுள்ளவனுக்கும் அப்படி மாற்றக்கூடாது. எஜமானுடைய அதிகார பாத்தியதையை நிராகரித்த பாவனையாகும். அப்படிப்பட்ட மகம்மதிய மத சம்பந்தமான உத்தியோகத்தை மாற்றகூடாதென்று 24 கல்கத்தா 83-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 9 W. R. 266-ல் சொல்லியிருக்கிறபடி ஒருவன் தன் உத்தியோக பாத்தியதையை மற்றொருவனுக்கு மாற்றிவிடலாமென்றால் பூஜை செய்யும்பொருட்டு ஆதியில் ஏற்பாடு செய்கிறவர்களுடைய கருத்தே மாறிப்போக இடமாகும். ஹிந்து தேவாலயத்தில் ஒரு மகம்மதியன் அல்லது கிரிஸ்தவன் கிறய பாத்தியதையை அனுசரித்து பூஜை செய்ய இடங்கொடுக்கப்படவேண்டியதாகும். தவிர 1 இந்தியன் அப்பீல் 209-ல் பிரிவி கௌன்ஸிலார் அபிப்பிராயத்தில் ஒரு தர்மகர்த்தா தன் ஸ்வய லாபததை உத்தேசித்து உத்தியோகத்தை மற்றவனுக்கு விக்கிறயம் செய்வது பிசகென்றும் அது வழக்கமுறையால் அங்கீகரிக்கப்பட்டாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றும் சொல்லியிருக்கிறார்கள். தன லாபத்திற்காக விக்கிறயம் செய்கிற விஷயம் ஒன்றே அந்த வழக்கத்தை சட்ட விரோதமான வழக்கமென்று சொல்வதற்குப் போதுமானதாகும். ஆகையால் வழக்கத்தை ஸ்தாபிக்கும் சந்தர்ப்பத்திலும் பணத்துக்காசைப்பட்டு ஒருவன் மத சம்பந்தமான தன் உத்தியோகத்தை மற்றவர்களுக்கு மாற்றினால் அது செல்லாதென்றே சொல்லவேண்டும். வாதி தரப்பில் தாகல் செய்யப்பட்ட சில பிரமாணப் பத்திரிகையில் அர்ச்சக பாத்தியமும் அதற்குறிய மற்றவருமான பாத்தியதையும் யோக்கியதையில்லாத வெள்ளாளர்களுக்கும் செட்டிமார்களுக்கும் அடமானம், கிறயம் முதலிய நடவடிக்கைகளால் மாற்றப்பட்டிருந்ததாக ருஜுபாகத்தில் ஏற்பட்டு அவ்வித சந்தர்ப்பங்களில் செட்டிமாரும் வேளாளர்களும் பிராமணர்களை பிரதிநிதிகளாய் வைத்து நடத்திவந்ததாகவும் அவ்விதம் நடத்தி வருமானத்தைமட்டும் அடமானதார்களும் கிறயதார்களும் அடைந்துவந்ததாகவும் ஆகையால் அவ்விதமான வழக்கமுறையிருந்ததாகச்சொல்லி அதை அனுசரித்து தாவா விக்கிறய நடவடிக்கை சட்ட விரோதமல்லவென்று தீர்மானிக்கும்படி கோறப்படுகிறது. அவ்வித வழக்கமுறைகள் முற்றிலும் சட்ட விரோதமென்றே சொல்லவேண்டும்.

இரண்டாவதாக ஸ்திரீயானவள் ஒரு அர்ச்சக உத்தியோகத்தை நடத்த லாயக்கில்லாதவள் என்பதைப்பற்றி அதாரிடிகளை கவனித்துப்பார்த்தால் ஒரு மத சம்பந்தமான தர்மத்தை மானேஜ்மெண்டு செய்வதற்கு ஸ்திரீயானவள் தகுதியற்றவளல்லவென்று சந்தேகமில்லாமல் தீர்மானங்களிருக்கின்றன. 20 மதராஸ் 162-ல் ஒரு தர்மசொத்தைப் பரிபாலனம் பண்ணிவந்த வம்சத்தில் ஒரு விதவையானவள் அந்த நிலமைக்கு வாரிஸ் பாத்தியதையால் வந்ததில் அவள் அந்த தர்மத்தை நடத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1 பம்பாய் லாரிபோர்ட் 743-ல் ஒரு பைராகி மடத்துக்கு ஸ்திரீயானவள் மஹந்தவாயிருக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக்கேஸில் பைராகி வம்சத்தின் சம்பிரதாயத்தின்படி ஸ்திரீயானவளும் மஹந்தவாயிருக்கலாமென்ற காரணத்தால் அவ்வித தீர்மானம் ஏற்பட்டிருக்கலாம். 23 வாரக் குறிப்புகளின் 369-ல் சொல்லியிருக்கிறபடி அநேகதேவாலயங்களுக்கு சூத்திரர்கள் மானேஜர்களாயிருந்திருக்கிறார்கள். தென் இந்தியாவில் அநேககோவில்களுக்கு பிராமணர்களல்லாத தம்பிரான்கள் வாஸ்தவமாகவே மானேஜர்களாயிருக்கிறார்கள். ஆகையால் கோவில் மானேஜ்மெண்டு விஷயத்தில் பெண் என்ற யோக்கியதைக் குறைவானது அவமதிக்கப்படுகிறதில்லை. ஆனால் பூஜாரி அல்லது ஆசார்யபுருஷன் என்ற நிலமை வித்தியாஸமானதாகும். அந்த உத்தியோகத்திற்கு ஸ்திரீயானவள் உதவமாட்டாள் என்பதற்கு அதாரிடிகளிருக்கின்றன. 1853-ம் வருஷத்திய மதராஸ் ஸதர்கோர்ட் அப்பீல் தீர்ப்புகளின் 261-ல் ஸ்திரீயானவள் ஆசார்ய புருஷனாக மதிக்கப்படக்கூடாதென்று பண்டிதர்களால் அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த தீர்மானத்தில் பண்டிதர்கள் அர்ச்சக உத்தியோகத்தையும் புரோகித உத்தியோகத்தையும் ஆசார்ய புருஷ ஸ்தானத்திற்குத் தாழ்மையாகச்சொல்லி [illegible]

ங்களுக்கு ஸ்திரீகளும் வாரிஸ் பாத்தியதையால் வரலாமென்றும் அந்த உத்தியோகத்திற் குறிய வேலைகளை சம்பளத்திற்கு ஆஸாமிகளை (பிரதிநிதிகளை)க்கொண்டு நடத்திவந்து அவைகளில் ஏற்படும் வருமானங்களை ஸ்திரீ வாரிஸ்கள் அடையலாமென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். அந்த அபிப்பிராயமானது கேஸின் தீர்மானத்திற்கு அவசியமில்லாத சந்தர்ப்பத்திலும் காரணம் அதாரடியில்லாமலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை ஒப்புக்கொள்ள நியாயமில்லை. பிருகந்நாரதீய புராணத்தில் சிவனுடைய பிம்பங்களையும் விஷ்ணு பிம்பங்களையும் ஸ்திரீகள் கையால் தொடுவதற்கே யோக்கியதையில்லையென்று சொல்லியிருக்கிறது. பத்ம புராணத்திலும் ஸ்திரீகளின் யோக்கியதைக் குறைவைப்பற்றி பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கோல் புருக் துரையவர்களின் கிரந்தத்தில் "சக்தியற்றவர்களும் அறிவீனர்களும் சிற்சில சடங்காச்சாரங்களைச் செய்ய முடியாதபடியால் சட்டப்படி அவர்களை நீக்கவேண்டுமென்றும் அவ்விதமாய் விலக்கப்பட்டவர்கள் செய்யவேண்டிய கிரியைகளை அவர்களுக்கு பர்த்தியாக யாரைக்கொண்டும் செய்து முடிக்கலாமென்றும் அறிவீனர்கள் சடங்காச்சாரங்களில் சேர்க்கப்படும் வருமானங்களை அடையலாமென்றும் ஒருவனுடைய அடிமை சம்பாதித்தபொருளுக்கு எஜமான் பாத்தியப்பட்டவன்போல் அறிவீனனும் சக்தியற்றவனும் பிரதிநிதியைக்கொண்டு நடத்தப்படும் வேலைகளில் கிடைக்கிற வருமானங்களுக்கு பாத்தியப்பட்டவனாகிறானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சக்தியற்றவன் தனக்குபதிலாளை நியமித்து வேலையை நடத்திவைக்கலாமென்ற சாஸ்திரத்தைப் பொருத்ததாக மேற்கூறிய வாதம் ஏற்படுகிறது. ஆனால் ஒரு ஜாதி பிரஷ்டனும், கிரியைகளை நடத்த யோக்கியதையில்லாதவனும் பித்ரார்ஜித சொத்தில் பாத்தியதையை இழந்துபோவதைப்போல் ஸ்வய பாத்தியதையால் அடையக்கூடிய சொத்தையும் இழந்துவிடலாகும். ஸ்திரீகள் வேதோக்தமான கிரியைகளை நடத்த யோக்கியமற்றவர்களாதலால் அவர்கள் குரு ஸ்தானத்தில் அர்ச்சக ஸ்தானத்தில் நிற்க லாயக்கில்லை." மேற்கண்ட வசனங்கள் கோல்ப்ருக் துரையவர்களின் கிரந்தத்தில் காணப்படுகிறது. முடிவான தீர்மான அபிப்பிராயம் ஷை கிரந்தகர்த்தாவால் சொல்லப்படாதபோதிலும் ஜாதிப்பிரஷ்டன் ஒரு மத சம்பந்தமான உத்தியோகத்தை வகிக்கயோக்கியமற்றவன் என்றது போல் ஸ்திரீயானவள் அவ்வித உத்தியோகத்தை வகிக்கலாகாதென்றே சொல்லவேண்டும். ஸ்திரமான குறையையுடையவர்கள் த உத்தியோக பாத்தியதையையும் அதைச்சார்ந்த வருமானங்களையும் அடைய லாயக்குள்ளவர்களல்ல.

கடைசியாக தாவா உத்தியோகத்தைப் பற்றிய வழக்குகள் கோர்ட்டாருடைய தீர்மானத்திற்கு வந்தால் அதைப் பார்ட்டிகளின் இஷ்டம்போல் ராஜிநாமா செய்துகொள்ளும்படி அனுமதி கொடுக்கலாமா, அந்த ராஜீநாமாவுக்குத் தக்கபடி டிக்கிரீயளிக்கலாமா என்ற பாயிண்டைப்பற்றிய அதாரிடிகளைப் பார்க்குமிடத்து, 31 கல்கத்தா 357-ல் "ஒரு மரண சாஸனத்தைக் கோர்ட்டில் தாகல் செய்து அதில் கண்டபடி சொத்துக்களை விநியோகம் செய்து பரிபாலிக்கவேண்டுமென்று (Probate) அதிகாரமடையக் கோருகிற விண்ணப்ப நடவடிக்கையில் (எதிரிகளுக்கு அதாவது மரண சாஸனத்தை ஆக்ஷேபிக்கத்தக்க சொத்தில் பாத்தியதையுடையவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டபின்) இருதரத்தாருடைய சம்மதத்தின்பேரிலாவது அல்லது இருதரத்தாருடைய பாத்தியதைமட்டுமல்லாமல் பொதுஜனங்களின் பாத்தியதையும் சம்பந்தப்பட்டிருக்கிற விஷயத்தில் [தர்மத்திற்காக மரண சாஸனத்தில் யாதொரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அது பொது ஜனங்களுடைய பாத்தியதையை அடுத்தவிஷயமாகும்] ராஜீநாமா உடன்படிக்கையை அனுசரித்தாவது கோர்ட்டார் யாதொரு புரொபேட் அதிகாரம் கொடுக்கக்கூடாதென்றும் ஏனெனில் ஸி. பி. ஸி. 375-வது பிரிவின்படிக்கு ஒரு உயிலின் உண்மையைப்பற்றிக் கோர்ட்டார் விஜாரணைமூலமாய்த்தீர்மானமடையவேண்டியது சட்டமுறையாக இருக்க அவ்வித சந்தர்ப்பத்தைக் கோர்ட்டாருக்குக் கொடுக்காமல் இருதரத்தாரும் யாதொரு ராஜீநாமா செய்துகொண்டு அந்தப்படி. கோர்ட்டாரை டிக்கிரீயளிக்கும்படி கேட்பது சரியல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது." பொது ஜனங்களுடைய பாத்தியதையையும் ஒரு மத சம்பந்தமான தர்மபரிபாலனத்திற்குறிய உத்தியோக பாத்தியதையையும் குறித்து யாதொரு தீர்மானம் கொடுக்கிற விஷயத்தில் கோர்ட்டாருக்கு சில கடமைகளேற்பட்டிருக்கின்றன. அதுபோலவே ஒரு மைனர் அல்லது அசக்தன் விஷயமாய் ஏற்படும் வியவகாரத்திலும் கோர்ட்டாருக்கு சில கடமைகளுண்டு. (தாவாவில்மைனருடையநன்மையைக்கோர்ட்டார் ஸ்வயமாக கவனித்துவரக் கடமைப்பட்டவர்களென்று சட்ட முறைகளிருக்கின்றன.) ஆகையால் மேற்கூறிய விதமான வழக்குகள் கோர்ட்டார்முன் வந்தால் அதை ராஜிநாமா செய்துகொள்ளும்படி கோர்ட்டார் அனுமதி கொடுப்பது சட்டமுறையை அடுத்ததல்லவென்று சொல்லவேண்டும்.

32 அலகபாத் 503-ல் "ஸிவில் பாத்தியதையைப்பற்றி ஒருவனுடைய சொந்த வியவகாரத்தை மத்தியஸ்தர்களுடைய பைசலுக்கனுப்ப நியாயமுண்டென்றும் ஆனால் தனக்குமட்டும் சொந்தமல்லாத ஸிவில்பாத்தியதையைப்பற்றிய வழக்கை அவ்விதமாய்ப் பஞ்சாயத்தாரின் தீர்மானத்திற் கனுப்பக்கூடாதென்றும் அவ்வித நியாயமுறையை அனுசரித்து அலகபாத் ஹைகோர்ட்டார் 30 அலகபாத் 137-ல் புல்பெஞ்சு தீர்மானத்தில் ஒரு மைனருக்கு கார்டியன் நியமனம் செய்யும் விஷயமானது பஞ்சாயத்தாருடைய தீர்மானத்திற் கனுப்பத்தக்கதாய் பார்ட்டிகளின் இஷ்டத்தைப் பொருத்த விஷயமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாகவும்" சொல்லப்பட்டிருக்கிறது. பொதுஜனங்களுடைய தர்மத்தைப் பரிபாலனம் செய்யும் தர்மகர்த்தா உத்தியோக பாத்தியதையைப்பற்றிய வியவகாரமும் மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்திற் கனுப்பத்தக்கதல்லவென்று அதே அலகபாத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முன் எடுத்துக்காட்டியபடி அர்ச்சகனுடைய உத்தியோகபாத்தியமானது தேவதையின் அர்ச்சனை பாத்தியதையைவிட தாழ்மையானது. ஸ்வாமிக்குப் பூஜை செய்யவேண்டியகடமை மேலானதாகும். பூஜை செய்வதற்காக ஏற்படும் வருமான லாபங்கள் தாழ்ந்த விஷயமாகும். கோர்ட்டார் பூஜை செய்யவேண்டிய கடமையைப்பற்றி அதிக கவனமாய் நிதானித்துத் தீர்மானம் கொடுக்கவேண்டியதாகையால் ராஜிநாமா உடன்படிக்கையால் வியவகாரத்தைப் பைசல்செய்ய விடுவது உசிதமாகாது. சுருக்கிச்சொன்னால் (1) இந்தக்கேஸில் ராஜிநாமாவானது அர்ச்சக உத்தியோகத்தை அதாவது அதற்குறிய வருஷவாரியான வருமான பாத்தியதையை மற்றொருவனுக்கு மாற்றிவிட்ட பாவனையாக மதிக்கப்படவேண்டும். (2) அந்த உத்தியோகம் சாசுவதமான யோக்கியதைக்குறையை உடைத்தான ஒரு ஸ்திரீயின்பேரில் மாற்றப்பட்டிருக்கிறது. (3) ஹிந்து மதஸ்தர்கள்யாவருடைய நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் மதசம்பந்தமானஉத்தியோகவிஷயமானது ராஜிநாமா உடன்படிக்கையினால் பைசல் செய்துகொள்ள யத்தனிப்பதாகும். இந்த மூன்று விஷயங்களும் சட்ட விரோதமே.

தவிர சாணார்கள் கமுதிக்கோவிலுக்குள் பிரவேசிக்க பாத்தியமுண்டென்று வழக்காடினதில் எதிரிகளுக்காக ராமனாதபுரம் ராஜா அவர்கள் எதிரிகளின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு வியவகாரத்தை நடத்தவேண்டியதாயிருக்க சாணார்களுடன்கூடி ஒருவிதமான ராஜிநாமாசெய்துகொண்டதைக் கோர்ட்டார் அங்கீகரிக்கவில்லை. ஆகவே மேற்கூறிய பற்பல காரணங்களாலும் தீர்மான நியாயங்களாலும் வாதிகள் ராஜீநாமாபடிக்கு டிக்கிரீயளிக்க வேண்டுமென்று செய்துகொண்ட விண்ணப்பமானது தள்ளுபடியாகவேண்டியதென்றும் ஆனால் எதிரிகள் தங்களின் சொந்த ஆக்ஷேபனையை முன்னிட்டு ஜயமடையாமல் பொது ஜனங்களின் பாத்தியதையை அனுசரித்து இந்தத்தீர்மானம் கொடுக்கப்பட்டபடியால் இந்தவிண்ணப்பத்திற்குறியசெலவுகளைப் பற்றி யாதொரு உத்தரவுமளிக்கப்படவில்லை.

———:O:———

## கல்கத்தா ஹைகோர்ட் தீர்ப்பின்பேரில் பிறந்த பிரிவி கௌன்ஸில் தீர்மானம்.

### ஸ்ரீமதி ராணிமணிதாஸி Vs ராதா பிரஸாத மல்லிக்

ஒரு ஹிந்து எழுதிவைத்த உயில்சாஸனத்தில் தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் தன்னுடைய இரண்டு குமாரத்திகளுக்கும் சமபாக

மாய்ப் பிரித்துக் கொடுக்கவேண்டியதென்றும் அவைகளைத் தன் குமாரத்திகளுக்கும் அவரவர்களின் புத்திரர்களுக்கும் ஷை உயிலினால் கொடுத்து அர்ப்பணம் செய்துவிட்டதாயும், இரண்டு குமாரத்திகளில் யாராவது தனக்குப்பின் புத்திரனில்லாமல் காலஞ்சென்றுவிட்டால் அந்தக்குமாரத்தியின் பாகத்தை மற்றொரு குமாரத்தியும் அவளுடைய புத்திரர்களும் அடையவேண்டியதென்றும் ஆனால் இரண்டு குமாரத்திகளில் யாராவது புத்திரர்களைவிட்டுக் காலஞ்சென்றால் காலஞ்சென்ற குமாரத்தியின் பாகத்தை அவளுடைய புத்திரன் அல்லது புத்திரர்கள் அடையவேண்டியதென்றும் எக்ஸிகியூடர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். இளைய குமாரத்தியானவள் புத்திரர்களைவிட்டு இறந்த உடன் புத்திரர்கள் உயில்படி சொத்தின் சமபாகத்தை யடையவேண்டுமென்று தாவா செய்தார்கள். மூத்தமகளோ தன் சகோதரி இறந்தபின் தன் ஜீவதசைமட்டும் தான் அனுபவிக்க லாயக்குண்டென்று ஆக்ஷேபித்தாள். உயில் சாஸனம் எழுதிவைத்த மூலபுருஷன் காலஞ்சென்றபிறகு மூத்தமகள் ஒரு புத்திரனை ஸ்வீகாரமெடுக்கவே அவனையும் வாதிகள் பார்ட்டியாக சேர்த்ததில் கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் இளைய குமாரத்தி இறந்தபின் உயில்படி மூலபுருஷ அடைய மரணகாலத்தில் ஜீவித்துவந்த (உண்டாயிருந்த) புத்திரர்கள் அவளுடைய பாகத்தை அடையவேண்டியதென்றும் அதற்குப்பின் பிறந்து அல்லது ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளப்பட்ட புத்திரனுக்கு உயில்படி யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் அபிப்பிராயம் கொடுத்ததின்பேரில் மூத்த மகளும் அவளுடைய ஸ்வீகார புத்திரனும் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் இளையகுமாரத்தி இறந்தபின மூலபுருஷனுடைய மரணகாலத்தில் உண்டாயிருந்த அவளுடைய புத்திரர்களே அவளுடைய சொத்தையடையவேண்டியதென்று கொடுத்த ஹைகோர்ட்டார் தீர்மானம் சரியானதென்று அப்பீலைத் தள்ளுபடிசெய்ததில் ஸ்வீகார புத்திரனுடைய பாத்தியதையைப்பற்றி இந் அப்பீலில் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமல் ஸ்வீகார புத்திரனுடைய பாத்திய வியவகாரம் யாதொன்றும் இதே கோர்ட்டின் தீர்மானத்திற்கு வந்தால் அவருடைய நிலைமையானது இந்த அப்பீலில் பிறந்த உத்தரவினால் எவ்விதமும் கெடாதென்று உத்தரவளித்தார்கள். இருதரப்பாருடைய செலவுதகை எஸ்டேட்டைப் பொருத்ததாகுமென்று உத்தரவாச்சுது. [மூத்தமகள் இறந்தபின் ஸ்வீகார புத்திரனுடைய பாதியதையைக்குறித்த வியவகார நியாயம் எவ்விதமாய் ஏற்படுமென்பதைப்பற்றி பிரிவிகௌன்ஸிலார் யாதொன்றும் சொல்லாமல் ஆனால் ஸ்வீகார புத்திரனுக்கு இந்த உத்தரவை ரிஜுடிகேடா தோஷத்திலிருந்து நிவர்த்தி செய்தார்கள்போலும்.] 26 M. L. J. 653

———:O:———

## பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பின்
### பேரில் செய்யப்பட்ட
### பிரிவிகௌன்ஸில் அப்பீல் தீர்மானம்.

சுனிலால் பார்வதிசங்கர் Vs பாய் ஸாமர்த்.

ஸூரத்என்னும்நகரத்தில் பார்வதிசங்கர் என்னும் ஒரு ஹிந்து கனவான் 1899-ல் அதாவது மறித்த இரண்டு வருஷங்களுக்குமுன் எழுதிவைத்த உயில்படிக்குத்தன் சொத்துக்கள் யாவற்றையும் தன்னைவிட்டு வெகு காலத்திற்குமுன் பிறிந்து போனவராயும் தனக்கு முன் ஒரு புத்திரனை விட்டு மரணமடைந்த வருமாகியஸூராஜலால் என்ற புத்திரனைத் தவிர்த்து தன்னுடன்கூடவே வசித்துவந்த சம்புப்ரஸாத்-சூனிலால் எனற மற்ற இரண்டு புத்திரர்களுக்கும் சமபாகமாய் பகிர்ந்து கொடுத்துவிட்டார். பார்வதிசங்கர் 1901-ல் இறந்தபின் இரண்டு புத்திரர்களும் ஷை சொத்துக்களை உயிலில்கண்ட பிரகாரம் சமபாகமாய்ப் பகிர்ந்துகொண்டார்கள். 1903-ல் சம்புப்ரஸாத் என்றவர் ஆண்ஸந்ததியில்லாமல் ஒரு மனைவியையும் மகளையும்விட்டுக் காலஞ்சென்றுவிட்டார். சூனிலால் என்றவர் உயிலில் கண்ட சில வசனங்களின் கருத்தைத்தனக்கு ஆதாரமாகக்கொண்டு ஆண்ஸந்ததியன்னியில் காலஞ்சென்ற தன் சகோதரனுடைய சுவாதீனத்திலிருந்த சொத்துபாகத்திற்குத் தான் பாத்தியஸ்தன் என்று தீர்மானமடையும் பொருட்டு சப்கோர்ட்டில் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்த 42 வது பிரிவின்படி டிக்லெரேஷன் தாவா செய்தார். உயிலின் 9-வது பாராவில் கண்டிருக்கிற வசனங்களாவன:—"என்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் மேல்கண்டவிதமாய் சம்புப்ரசாத், சூனிலால் என்ற இரண்டு புத்திரர்களுக்கும் சமபாக



மாகப்பிரித்துக் கொடுத்துவிட்டேன். ஆனால் இருவர்களில ஒருவர் ஆண்சந்ததியில்லாமல் காலஞ்சென்றுவிடும் பட்சத்தில் அவனுடைய பாகத்தை ஜீவனோடிருக்கிற மற்றொருமகன் அடையவேண்டியது. ஆனால் அப்படிக்கடையுமுன் காலஞ்சென்ற சகோதரனுடைய பெண்சாதியின் ஜீவனாம்சத்திற்காகவும் அவளுடைய மைனர் குமாரத்திகளின் விவாகத்திற்காகவும் தக்க ஏற்பாடு செய்து விடக்கடவது. ஆனால் அவ்வித சந்தர்ப்பம் நேர்ந்தால் பிரிந்துபோன ஸூராஜ்லால் என்றவனுடைய சந்ததியாருக்கு யாதொரு பாத்தியதையும் ஏற்படக்கூடாது." இவ்விதமான வசனங்களின்கருத்தைப்பற்றி பலவிதமாய் வாதம் செய்யப்பட்டதில் சப்கோர்ட்டார் விவாதமான விஷயத்தில் வாதிக்குக் கொஞ்சம் அனுகூலமாகவும் எதிர்வாதம் செய்த பாய்ஸாமர்த் என்னும் சம்புப்ரசாத் என்றவருடைய மனைவிக்கு கொஞ்சம் அனுகூலமாகவும் தீர்ப்பளித்தார். ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் உயிலின் 9-வது கிளாஸில் கண்ட வசனங்களை வாதிக்கனுகூலமாய் நிதானித்து காலஞ்சென்ற சம்புப்ரசாத் என்றவருடைய சொத்து பாகத்திற்கு வாதியே பாத்தியஸ்தனாகிறானென்றும் அவனுடையமனைவிக்கும் மகளுக்கும் ஜீவனாம்சம், விவாகச்செலவு இவைகள்மட்டும் கிடைக்கவேண்டியதாகுமென்றும் தீர்மானித்தார்கள். பம்பாய் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் கீழ்கோர்ட் தீர்மானங்களை முற்றிலும் பிசகென்று சொல்லி 9-வது கிளாஸின் வசனங்களை விபரீதமான கருத்துடன் நிதானித்து அதாவது "இருவரில் ஒருவர் காலஞ்சென்றுவிட்டால்" என்ற வசனங்களுக்கு "தான் மரணமடையுமுன் இருவரில் ஒருவர் காலஞ்சென்றால்" என்ற கருத்தைக் கொடுத்து பார்வதிசங்கர் மரணமடைந்த உடன் சொத்தில் ஒருபாதி பாகத்திற்கு சம்புப்ரசாத் என்ற புத்திரன் ஸர்வஸ்வதந்திரபாத்தியஸ்தனாகிவிட்டானென்றும் ஆகையால் அவனுக்குப்பின் அவன் பெண்சாதியும் மற்ற வாரிஸ்களும் விபக்த சகோதரனுக்குச்சமானமாக அடையவேண்டியதாகுமென்றும், தவிர பார்வதிசங்கர் தன் உயில்படி பிரித்துக் கொடுக்கும் காலத்தை தன் மரணாந்தரமென்று உத்தேசித்திருந்ததாயும் அப்படிப்பட்டகாலம் வருமுன் இருவரில் ஒருவர் காலம்சென்றால்மட்டும் 9-வது கிளாஸின்படி சொத்தானது மற்றவனைச் சேரவேண்டியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் தாவா கேஸின் சந்தர்ப்பத்தில் அதாவது பார்வதிசங்கருடைய மரணகாலமட்டும் இரண்டு புத்திரர்களும் ஜீவனோடிருந்தமையால் 9-வது கிளாஸின் அம்சம் பிரயோகிக்கத்தகாத நிஷ்பிரயோஜனமான அம்சமென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி சூனிலால் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் அங்கு பம்பாய் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயம் தப்பென்று ஏற்பட்டு வாதிக்கு அனுகூலமாக ஜீவனாம்ச விஷயமாகவும் பெண் குழந்தைகளுடைய விவாகச் செலவுக்காகவும் ஹைகோர்ட்டாருக்குத் தக்க ஜாமீன் கொடுத்துவிட்டால் வாதி காலஞ்சென்ற சகோதரனுடைய பாகத்தை அடைய லாயக்குள்ளவனாகிறானென்று தீர்மானங் கொடுத்தார்கள்.

பிரிவிகௌன்ஸில் தீர்ப்பில் சொல்லப்பட்ட சில முக்கிய அம்சங்களாவன:— உயிலின் வசனங்களுடைய கருத்தையே பரிபூரணமாய் நிதானித்தறிந்து தீர்மானமடையவேண்டியது கோர்ட்டாருடைய கடமையென்று இங்கிலீஷ் முறையிலாவது குறிப்பிடப்படவில்லை. ஆனால் வசனங்களினால் தெளிவாக கர்த்தாவின் எண்ணம் புலப்படுமானால் அதைஏற்றுக்கொள்வதவசியமாகும். வசனங்களை தன் வழக்கம்போலுள்ள கருத்துடன் உபயோகித்த விஷயத்தால் கருத்தின்னதென்று அரிய சந்தேகமுண்டானாலும் வசனங்களினால் தெளிவாய்ப் புலப்படுகிற பிரகாரம் கருத்தை யூகிக்கவேண்டியது அவசியமாகும். மற்றப்படிக்கு சாதாரணமான சந்தர்ப்பங்களில் சாதாரணமான வசனங்களுக்கு வழக்கமான கருத்தை (அர்த்தத்தை) க்கொடுக்கவேண்டும். தவிர உயில் முழுவதையும் கவனித்து மொத்தக்கருத்தை யூகித்து கர்த்தாவின் மனோக்கத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமேயொழிய தனித்தனி வசனங்களால் கருத்தை நிதானிக்கக்கூடாது. ஆகையால் பொதுவான அர்த்தமுடைய சொற்களையெடுத்து அவைகளுக்கு அவசியமில்லாதபடி குறுகின கருத்தைத்தரகூடாது. தாவா உயில் சாஸனத்தில் கண்டிருக்கிற "இருவர்களில் ஒருவர் ஆண்சந்ததியில்லாமல் காலஞ்சென்றால்" என்ற வசனங்களினால் அவ்வித சம்பவமா

னது சாஸன கர்த்தாவின் மரணத்திற்கு முந்தி நடந்தால் என்று யூகிக்கவேண்டுமென்று பழயகாலத்து அதாரிடிகளிருக்கின்றன. ஆனால் தாவா உயிலில் அவ்விதமான வார்த்தைகளில்லை. அதாவது தன் மரணத்திற்கு முந்தி இரண்டு குமாரர்களில் ஒருவர் இறந்தால் என்றவசனம் கிடையாது. ஆகையால் இப்பொழுது வெகுகாலமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறபடி இத்தகைய வார்த்தைகளுக்கு முழு அர்த்தமும் கொடுக்கவேண்டும். அதாவது இருவரில் ஒருவர் காலஞ்சென்றால் என்ற சம்பவம் சாஸன கர்த்தாவின் மரணத்திற்கு முன்னும் அல்லது பின்னும் என்று யூகிக்கப்படவேண்டும். உயில் எழுதப்பட்டதேதிமுதல் எக்காலத்தில் சம்பவித்தாலும் 9-வது கிளாவில் கண்டபடி சொத்து பாத்தியதையானது செல்லத்தகுமென்று சொல்லவேண்டும். கோர்ட்டாருடைய கடமையானது உயில் முழுவதையும் ஜாக்கிறதையோடு கவனித்துப்பார்த்து அதிலுள்ள பற்பல கிளாஸ்களின் அம்சங்களையும் உத்தேசித்து சாஸன கர்த்தாவின் பரிபூரணமான எண்ணம் என்னவென்று கண்டறியவேண்டியதாகுமென்று 7 H L 388ல் சொல்லப்பட்டிருக்கிறதும் தவிர (1852) 51 E R 576ல் "உயிலின் நன்மையை முதலில் அடைகிறவன் காலஞ்சென்ற தேதிமுதல் அந்த உயிலில் ஏற்படுத்தப்படுகிற மற்ற பாவங்களெல்லாம் நமோதுக்கு வரவேண்டுமென்றும் அப்படிக்கில்லாத பட்சத்தில் வேறுவிதமான ஏற்பாடுகள் உயிலிலேயே கண்டிருக்கவேண்டுமென்றும்" சொல்லப்பட்டிருக்கிறது. தாவா உயிலில் கண்ட வசனங்களை கவனித்தால் சந்தேக அர்த்தத்திற்கிடமே கிடையாதென்று சொல்ல வேண்டும் 9-வது கிளாவில் கண்ட சம்பவம் எப்பொழுது நேரிடுகிறதோ அப்பொழுது அதில் குறித்தபடி சொத்து பாத்தியதை மாறவேண்டுமென்ற கருத்து மிகவும் தெளிவாய்த்துலங்குகிறது. சம்புப்ரஸாத், சுனிலால் என்ற இருவரும் தகப்பனுக்குப்பின் ஜீவித்துவந்து அவர்களில் ஒருவர் ஆண்சந்ததியின்னியில் மனைவியையும் மகளையும் விட்டு இறந்த விஷயத்திற்கு உயிலின் வசனம் மிகவும் பொருந்தியிருக்கிறது. ஏனெனில் சந்ததியன்னியில் இறந்துபோன மகனுடைய பாகத்தை மற்ற மகன் அடையவேண்டுமென்று சொன்னதுமட்டுமல்ல. இறந்து போன மகனுடைய பெண்சாதிக்கும் மகளுக்கும் செய்யவேண்டிய கடமையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் 9-வது கிளாவில் கண்ட சம்பவம் எப்பொழுது நேரிட்டாலும் என்ற கருத்தைக்கொண்டு பிந்திய ஏற்பாடு குறித்தெழுதப்பட்டிருக்கிறதாகச் சொல்ல வேண்டும். ஆகவே சுனிலால் காலஞ்சென்ற சகோதரனுடைய சொத்தை அடையப்பாத்திரனாகிறானென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கண்டவிதமாய் உத்தரவளிக்கப்பட்டது. ஆனால் உயிலின் 9-வது கிளாவில் குறித்த வசனத்தை வாதிக்கனுகூலமாக அர்த்தப்படுத்துவதற்கு அதிக கஷ்டமேற்பட்டபடியால் வாதி பிரதிவாதியின் செலவுகள் யாவற்றையும் கொடுக்கவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது. XXVI. M. L. J. 647

---

ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

தென் ஆர்காட் ஜில்லா

A. S. No. 249 of 1909—3 ஏப்ரல் 1914

ரத்தின செட்டி Vs நாராயணசாமி செட்டியார்

கோவிந்த செட்டி என்ற மூலபுருஷன் டிசம்பர் 1877-ல் தன் சொத்துக்களைப்பற்றி தன் பெண்சாதிக்கும் தன் சகோதரியின் மகனும் தன் பெண்ணை கட்டின மருமகனுமாகிய முத்து அருணாசல செட்டி என்றவனுக்கும் உயில் தஸ்தவேஜினால் விநியோகம் செய்துவிட்டு சொற்ப காலத்திற்குப்பின் காலஞ்சென்றுவிட்டார். முத்து அருணாசல செட்டி என்றவர் 2-3 பிரதிவாதிகளாகிய ஒரு மனைவியையும் விதவையாய்ப்போன ஒரு மகளையும் விட்டுவிட்டு 1878-ல் காலஞ்சென்றார். 1908-ல் மூலபுருஷனுடைய பெண்சாதி செங்கழனியம்மாள் தானே தன் பார்த்தாவின் சொத்துக்கு பாத்தியமுடையவளாக பாவித்துக்கொண்டு ஒரு உயில் சாஸனமெழுதிவைத்து சொத்துக்களைப் பலவாறாய் விநியோகப்படுத்திவிட்டு சொற்ப காலத்திற்குப்பின் அவளும் காலஞ்சென்றாள். ஆகவே முத்து அருணாசல செட்டியின் அனந்தரவாரிஸ்தார்களாகிய வாதிகள் மூலபுருஷனாகிய கோவிந்த செட்டியாரின் சொத்தை செங்கழனியம்மாள் உயில் சாஸனத்தால் விநியோகம் செய்ய நியாயமில்லையென்றும் கோவிந்தசெட்டியார் எழுதிவைத்த உயில்படிக்கு முத்து அருணாசல செட்டி இறந்துபோகும் காலத்தில் தாவா சொத்துக்களில் பின் பாத்தியதையை வகித்தவனாய் விட்டபடியால் அவ்வித பாத்தியதையை செங்கழனியம்மாள் நிராகரித்து உயில் சாஸனத்தால் வேறுவிதமாய் விநியோகம் செய்ய நியாயமில்லையென்றும் தீர்மானமடையும்பொருட்டு ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 42-வது பிரிவின்படி டிக்ளெரேஷன் தாவா செய்தார்கள். அதாவது கோவிந்த செட்டியின் உயில்படி செங்கழனியம்மாள் மரணத்திற்குப்பின் முத்து அருணாசல செட்டி அல்லது அவனுடைய வாரிஸ்கள் அடையவேண்டியதாயிருக்கிறபடியால் செங்கழனியம்மாளுக்குப்பின் முத்து அருணாசல செட்டியின் பாரியாளும் மகளும் அனுபவிக்கவேண்டியதாகுமென்றும் அவ்விருவருடைய ஜீவதசைக்குப்பின் வாதிகள் தாவா சொத்துக்களை அடைந்தனுபவிக்கப் பாத்திரர்களென்ற வியவகாரமாடி டிக்ளெரேஷன் தாவா செய்து தீர்மானமடையப் பிரயத்தனப்பட்டார்கள். ஜில்லா ஜட்ஜியவர்கள் வாதிகளுக்கு விரோதமாக முத்து அருணாசல செட்டிக்கு உயிலில் கண்ட சொத்தில் பிற்கால பாத்தியமானது ஏற்பட்டதேயில்லையென்றும் அப்படிக்கிருந்தபோதிலும் முத்து அருணாசல செட்டியின் பாரியாளும் மகளும் காலஞ்சென்ற பிறகு தான் வாதிகளுக்கு யாதொரு பாத்தியதையும் ஏற்படக்கூடுமாதலால் (எட்டிய ஸ்தானத்திலுள்ள) வாதிகள் செங்கழனியம்மாளுடைய உயில் செல்லாதென்று சொல்லித்தங்கள் பின் பாத்தியத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்று செய்த இந்த டிக்ளெரேஷன் தாவாவில் கோர்ட்டாருடைய யுக்தானுசாரத்தைப்பற்றிய தான பரிகாரம் கொடுக்க நியாயமில்லையென்று அபிப்பிராயப்பட்டு வாதிகளின் பிராதை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாதிகள் அதன்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் பிசகென்று ஏற்பட்டு வாதிக்கனுகூலமாய் டிக்ரீயளிக்கப்பட்டது.



ஹைகோர்ட் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:— வழக்கெடுக்கவேண்டிய அடுத்த வாரிஸ்தார் எதிரியுடன் உடந்தையாயிருந்தாலும் அல்லது சுவாதீனத்திலுள்ள ஓர் விதவையின் சட்டவிரோதமான நடவடிக்கைகளை நிராகரித்து அதை ரத்துசெய்வதில் சிரத்தையில்லாதவள் என்று கண்டாலும் அடுத்த அனந்தர வாரிஸ்தார் அல்லது எட்டின ஸ்தானத்திலுள்ள அனந்தர வாரிஸ்தார் டிக்ளெரேஷன் தாவா செய்து சட்ட விரோதமான நடவடிக்கைகளை ரத்து செய்ய பிரயத்தனப்படலாமென்று இந்தியாவிலுள்ள பற்பல கோர்ட்களின் தீர்மானங்களிருக்கின்றன. செங்கழனியம்மாள் எழுதி வைத்திருக்கிற உயில் சாஸனத்தில் 3-ம் பிரதிவாதியாகிய முத்து அருணாசல செட்டியின் மகளுக்கும் சில நன்கொடையளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மேற்படி 2-3 பிரதிவாதிகள் அந்த உயிலைப்பற்றி ஆக்ஷேபிக்க அக்கறையற்றவர்களாய்விட்டார்கள். அப்படியிருக்க 33 மதராஸ் 410-ல் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தையனுசரித்து வாதிகளாகிய எட்டிய அனந்தர வாரிஸ்கள் இந்த தாவாவைக் கொண்டுவர லாயக்குள்ளவர்களென்றே சொல்லவேண்டும். தவிர 10 கல்கத்தா 324-ன் 333-ல் பிரிவி கௌன்ஸிலார் தீர்மானித்திருக்கிறபடி கோவிந்த செட்டியார் எழுதிவைத்த உயிலின் கருத்தைப்பற்றி தீர்மான அபிப்பிராயம் கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தைக்கொடுத்த வாதியின் இந்தப் பிராதினால் பிந்திய வீண் வியவகாரங்கள் நிவர்த்தியாய்விடக்கூடிய காரணத்தால் வாதியின் பிராதைப்பிடித்து யுக்தானுசாரத்தைச் செலுத்தி தீர்மானங்கொடுக்கத்தகுமென்று சொல்லவேண்டும். ஜில்லா ஜட்ஜியவர்கள் உயிலின் வசனங்களை அர்த்தப்படுத்தி தீர்மானங்கொடுத்திருக்கிறார். ஆகையால் ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டபடி வாதிகளாகிய எட்டிய அனந்தர வாரிஸ்கள் இந்த தாவாவைக் கொண்டுவர நியாயமில்லையென்றும் இந்த டிக்ளெரேஷன் பிராதின்பேரில் யுக்தானுசாரத்தைச் செலுத்தித் தீர்மானங் கொடுக்கத்தகாதென்றும் சொல்வது சரியல்ல.

இரண்டாவதாக உயிலின் கருத்தைப்பற்றி ஜில்லா ஜட்ஜியவர்களின் அபிப்பிராயம் சரியாவென்று பார்க்குமிடத்து உயிலில் நான்கு முக்கிய அம்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன. "(1) என் மனைவிக்கும் மருமகனுக்கும் எழுதிவைக்கிற உயில்சாஸனமென்னவென்றால் என்றும், (2) பிறந்தமுதல் என்னுடனே வசித்து வந்த என் மருமகனும் என்பெண்சாதியும் எனக்குப்பின் ஏககுடும்பமாக வசித்து வரவேண்டுமென்றும், என்னு

டைய எல்லா சொத்துக்களையும் என் பெண்சாதி எனக்குப்பின் சுவாதீனப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், (3) என் பெண்சாதியும் மருமகனும் சமாதானமாய் ஒத்துக்கூடி வசிக்ககூடாவிட்டால் என் பெண்சாதி மருமகனுக்கு ரூ 4000 கொடுத்து அவனை விலக்கிவிட்டு அவளே மிகுதியான சொத்துக்கள் யாவற்றையும் ஸர்வஸ்வதந்திர பாத்தியத்துடன் அனுபவிக்க வேண்டியதென்றும், (4) இருவரும் ஒத்து வசிக்கும் பட்சத்தில் என் பெண்சாதியின் மரணத்திற்குப்பின் நிற்கிற (மிகுதியாய் நிற்கிற என்ற கருத்துடைய இங்கிலீஷ்வசனம் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது) சொத்துக்கள் யாவற்றையும் அடைந்து அனுபவிக்கவேண்டியதென்றும், ஆக நான்கு விதமான அம்சங்கள் உயிலில் கண்டிருக்கிறது. தாவாகேசில் மருமகன் கோவிந்த செட்டி உயில் எழுதி வைத்த மறு வருஷத்திலேயே இறந்துபோய்விட்டார். அப்படியிருக்க மருமகனுக்கு கோவிந்த செட்டியாருடைய உயிலினால் சொத்தில் பிந்திய பாத்தியதையானது ஏற்பட்டிருக்கிறதாவென்று கவனிக்கவேண்டியது முக்கியமான விஷயம். உயிலின் அம்சங்களைப் பார்த்தால் மூலபுருஷனுடைய மனதில் மருமகனுக்குத்தன் சொத்தில் ஸிலபாகம் கொடுக்கவேண்டுமென்ற கருத்திருந்தாகவே சொல்லவேண்டும். தன் பெண்சாதிக்குப்பிரியமானால் மருமகனை விலக்கி அவனுக்கு ரூ 4000 கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சச்சரவில்லாமல் ஒத்திருந்தால் தன் பெண்சாதி இறந்தபின் மிகுதியிருக்கும் சொத்துக்களுக்குத்தான் மருமகனே வாரிஸாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரதிவாதிக்காக வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ டி. ஆர். ராமசந்திரய்யரவர்கள் வாதத்தில் மூலபுருஷனுடைய பெண்சாதி தன்னுடன் அருணாசல செட்டி கூடி ஒன்றாய் வசித்த போதிலும் அவனுக்கு யாதொரு சொத்து பாத்தியதையும் கிடைக்காமல் செய்யக்கூடுமென்றும், அதாவது அவளுக்குப்பின் மிகுதியிருக்கும் சொத்துக்களைமட்டும் மருமகன் அடையக்கூடுமாதலால் அவள் தன் ஜீவிய காலத்திலேயே சகலசொத்துக்களையும் விநியோகம் செய்துவிட்டு அவனுக்கு யாதொன்றும் மிகுதியில்லாமல் செய்துவிடலாமென்றும், எடுத்துச்சொல்லப்பட்டு ஆகையால் உயிலின் கருத்தால் கூடிவசிக்கும் சந்தர்ப்பத்தில் மருமகனுக்கு சொத்து பாத்தியதை கிடைக்கத்தகாதமார்க்கமிருக்கிறதென்பதாய் மூலபுருஷனுடைய கருத்தில் அவனுக்குசேர்த்து பாத்தியதையைகட்டாயம் உண்டுபண்ணவேண்டுமென்ற நினைவில்லையென்றும் சொல்லப்பட்டது, தவிர கோவிந்த செட்டி தன் பெண்சாதிக்கு அவளுடைய இஷ்டம்போல் சொத்துக்களை விநியோகம் செய்யும் அதிகாரம் கொடுத்திருப்பதாகவும் ஏனெனில் அவள் தயாளகுணத்துடன் மருமகனுக்கு யாதொரு பாகத்தைக் கொடுத்துவிடுவாளென்று நம்பி அவ்வித அநுகூலமான ஸிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறாரென்றும் ஆகவே அவருடைய எண்ணத்தில் மருமகனுக்கு யாதொரு சொத்தை உறுதியாகக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்ற விருப்பம் இல்லையென்றும் வாதிக்கப்பட்டது. முதல் நோக்கத்தில் மிகுதியான சொத்தை மட்டும் மருமகன் அடையவேண்டியதென்று கண்டிருந்த வசனத்தால் தன்பெண்சாதிக்கு சொத்தைபூராவும் விநியோகம் செய்ய அதிகாரம் கொடுத்திருந்ததாக யூகிக்கலாமென்று தோன்றினபோதிலும் ஆழ்ந்த யோஜனையின்பேரில் அவள் ஹிந்துலாப்படிக்கு பின்பாத்தியஸ்தர்களைக் கட்டுப்படுத்தும் வண்ணமாய அவசியமான காரணத்திற்குமட்டும்சொத்துகளில் யாதொன்றையும் விநியோகப்படுத்தலாமென்ற கருத்துடன் அவ்விதமாய், செலவானது போக மிகுதியிருக்கும் சொத்துக்களை மருமகன் அடையவேண்டியதென்று சாஸனகர்த்தா உத்தேசித்து எழுதியிருக்கிறாரென்று சொல்லத்தகும். 2-வது கிளாஸில் தன்பெண்சாதியைத்தன் சொத்துகளுக்கு ஏகவாரிஸாகச்சொல்லி 3-வது கிளாஸில் மருமகனுக்கு ரூ 4000 கொடுத்தபின் சொத்தில் ஸர்வஸ்வதந்திர பாத்தியதையை அடையவேண்டியதென்றுசொல்லியிருக்கிறார். தன் பெண்சாதியே தனக்கு வாரிஸாக வேண்டியதென்றதால் அவளுக்கு ஸர்வ ஸ்வதந்திரத்தையும் கொடுத்துவிட்டதாகச் சொல்லவேண்டுமென்று சொல்லி அதற்காதாரமாக 30 அலகபாத் 84 எடுத்துக்காட்டப்பட்டது. அலகபாத் கேஸில் பெண்சாதிக்கு எஜமான் அதிகாரத்துடன் கூடிய அனுபோக பாத்தியதை யளிக்கப்பட்டிருந்தது. கோவிந்த செட்டியாரின் உயிலில் அவ்விதமான அம்சம் கிடையாது. 35 I. A. 118-ல் சொல்லியிருக்கிறபடி ஹிந்துக்கள் உயில்எழுதும் பொழுது தன்கொ-



டையைப் பெறுகிறவர்களுக்கு ஹிந்துலாப்படிக்கு என்ன விதமான பாத்தியதை ஏற்பட்டிருக்கிறதென்று மனதில் வைத்து யாதொரு விநியோகம்செய்கிறார்கள். 35 பம்பாய் 279-லே உயிலில் ஒருவருக்குசொத்தில் சொந்த பாத்யதையைக்கொடுத்ததாக வசனமிருந்தால் அது ஸர்வஸ்வதந்திரத்தையும் தரக்கூடிய அம்சமாக பாவிக்கப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உயிலின் வசனங்கள் தெளிவாயும் இருவிதமான சந்தேக அர்த்தத்தைத்தரக்கூடாதிருந்தால் தன்கொடையைப்பெறுகிறவர் ஆண்பெண்என்றவித்தியாஸத்தால் வித்தியாஸமானபலனை யடைகிறார்கள். ஆனால் வசனங்களின் கருத்தும் சட்டமுறையின் போக்கும் இசைவாயிருந்தால் உயிலெழுதினவர் சட்ட முறையைக்கவனித்து யாதொரு ஏற்பாடு செய்திருக்கிறாரென்று சொல்லவேண்டும். [தன் மனைவிக்குபின் தன் மருமகன்தான் அடையவேண்டியதென்ற ஹிந்துலாமுறையை நிதானித்து மேற்கண்ட விதமாய் உயிலில் குறித்தெழுதியிருக்கிறார். ஆகவே பெண்சாதியைத் தனக்கு வாரிஸாகச்சொல்லியும் பின்னால் ஒரு சம்பவத்தைச் சார்ந்து சொத்தில் அவளுக்கு ஸர்வஸ்வதந்திர பாத்தியதை கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் வாரிஸ் என்ற வசனம் அவ்வித பாத்தியதையைத்தராது. உயிலில் அருணாசலம் செட்டிக்கு பிரத்தியக்ஷமான தன்கொடையாதொன்றும் குறித்தெழுதப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. அவ்வித வசனங்கள் இங்கிலீஷ் உயிலில் காணப்படும். சட்டமுறை யறியாதவர்கள் அவ்விதமான (நேர்மையுள்ள) வசனங்களை உபயோகிக்கமாட்டார்கள். உயிலைப்பார்த்தாலே எழுதினவனுடைய சட்ட அனுபோகக்குறைவைக்காட்டும். தன் பெண்சாதிக்கும் மருமகனுக்கும் எழுதிவைத்த உயில் என்று துவக்கி தன் பெண்சாதியை மட்டும் தனக்குவாரிஸாகச்சொல்லியிருக்கிறது. கடைசியில் மிகுதியான சொத்தில் மருமகனுக்கு பெண்சாதிக்குப்பின் பாத்தியதை கொடுக்கப்படுகிறது. இந்த வசனங்களைக்கவனித்தால் அருணாசலசெட்டிக்கும் சொத்து பாத்தியதை உண்டாகியிருப்பதாகவே சொல்லவேண்டும். அது எப்பொழுது நமோதுக்குவரவேண்டும்? தன்மனைவி காலஞ்சென்றபின் அந்தபாத்தியதையானது நமோதுக்குவரவேண்டும். அப்பொழுதுதான் மருமகன் சொத்துக்கு சொந்தக்காரனாகிறான். அதற்கு முந்தியே ரூபா 4000 கொடுக்கப்பட்டு விலக்கப்படலாமென்ற விஷயத்தால் பின்னால் சொத்தை அடையக்கூடியவனென்று சொல்லத்தகாது.

முதல் முதல் அருணாசல செட்டிக்கு பாத்தியதையானது மூத்து வாழும் நிபந்தனையைச் சார்ந்ததாயினும் அவனுடைய மரண காலத்தில் அதாவது துகையைக்கொடுத்து விலக்குவதற்கு சாத்தியப்படாத சமயமாகிய மரணகாலத்தில் சொத்து பாத்தியதையானது யாதொரு நிபந்தனையிலுமடங்காமல் செங்கழணியம்மாளுடைய மரணத்திற்குப்பின் நமோதுக்கு வரக்கூடியவிதமாய் ஏற்பட்டுவிடுகிறது. அதாவது செங்கழணியம்மாளுடைய மரணத்திற்குப்பின் அருணாசல செட்டியாருக்கு சொத்து சேரவேண்டியதென்ற விஷயம அருணாசல செட்டியாரின் மரணத்திற்குமுன் ஏற்பட்டுவிடுகிறது அப்படி ஏற்பட்ட பாத்தியதையை மாற்ற சாத்தியப்படாது. செட்டியார் உயிரோடிருந்தால்மட்டும் அவரை துகைகொடுத்து விலக்கக்கூடும். அவ்விதமாய் துகை கொடுக்கப்படவுமில்லை விலக்கப்படவுமில்லை. ஆகச்சே அருணாசலஞ்செட்டியார் தாவா சொத்தில் பின்பாத்தியதையை வகித்தவராய் மரணமடைந்திருக்கிறார். அவ்விதபாத்தியம் நிறைவேறுவதற்கு மரணகாலமட்டும் செங்கழணியம்மாளுடன்கூடவே சமாதானமாயிருந்திருக்கிறார்கள். ஆகையால் அருணாசல செட்டியாருக்கிருந்த பாத்தியதை வாதிகளாகிய அனந்தர வாரிஸ்களுக்கும் முறைப்படி செல்லவேண்டியதாகையால் செட்டியாருக்கடுத்த வாரிஸ்களாகிய 2-3 பிரதிவாதிகளின் ஜீவதசைக்குப்பின்வாதிகள் அடைய லாயக்குள்ளவர்களாகும். அப்படியிருக்க செங்கழணியம்மாள் தன்னிஷ்டப்படி அந்த சொத்துக்களை உயில் சாஸனத்தால் விநியோகம் செய்யக்கூடாது. அதைப்பற்றி வாதிகள் கொண்டுவந்த டிக்லேரேஷன் தாவா ஜெயிக்கவேண்டியது நியாயமாகும். மேற்கூறிய காரணங்களால் அப்பீல் வாதிக்கனுகூலமாகி ஆனால் இருதாத்தாருடைய செலவுதுகையானது எஸ்டேட்டிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்று டிக்கிரியளிக்கப்பட்டது.

XXVI M. L. J. 516

———o———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

திருநெல்வேலி ஜில்லா.

S. A- 1631 of 1911—2 ஏப்ரல் 1914.

வைகுண்ட ராமபிள்ளை Vs ஆதிமூலம் செட்டியார்

1-ம் பிரதிவாதி மைனராயிருக்கிற பொழுது

3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரத்தை 3-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்குப் பிரதிப்பிரயோஜனம் பெற்றுக்கொண்டு மேடோவர் செய்துவிட்டார், 4-ம் பிரதிவாதியும் தன்னுடைய மேடோவர் பாத்தியதையை வாதிக்கு மாற்றிக்கொடுத்துவிட்டார். 3-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்கு மேடோவர் செய்த தஸ்தாவேஜில் 1-ம் பிரதிவாதி சாட்சியொப்பம் செய்துமிருக்கிறார். ஆனால் அப்பொழுது அவர் மெஜாரிட்டியடைந்துவிட்டார். 1-ம் பிரதிவாதி மேற்கூறிய சாட்சியொப்பம் செய்யுமுன் அதாவது 3-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்கு அடமானத்தை மேடோவர் செய்யுமுன் ஆனால் மைனர் தசை நீங்கின பிறகு தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் தன்னுடைய மைனர் குமாரனுக்காக தன் தாயார்பேரிலும் தன் பெண்சாதியின்பேரிலும் (செட்டில்மெண்டு பத்திரத்தால்)மாற்றிவிட்டார். வாதி ஆதிமூலம் செட்டியார் தான் மேடோவர் பெற்ற அடமானக்கடன் தொகையை அடைய மார்க்கமில்லாமற் போனதால் 1-ம் பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்டு பத்திரம் மோசக்கருத்தாய்ப் பிறந்ததென்றும் ஆகையால் அது ரத்தாக வேண்டுமென்றும் திருநெல்வேலி டி-மு-கோர்ட்டில் செட்டில்மெண்டுபடிக்கு நன்மையடைந்த 1-ம் பிரதிவாதியின் மைனர் குமாரனை 2 ம பிரதிவாதியாகச் சேர்த்து அசல் தாவா செய்ததில் டி மு கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக வாதிக்கு அனுகூல டிக்கிரியளித்து செட்டில்மெண்டு தஸ்தவேஜை ரத்துசெய்துவிட்டார்கள். அதன்பேரில் 2-ம் பிரதிவாதிக்காக ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டதில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் பிசகென்று ஏற்பட்டு வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஆகையால் செட்டில்மெண்டுபத்திரம் உறுதியாகி அதின்படி வைகுண்டராம பிள்ளை என்ற மைனர் குமாரனுக்கு தகப்பன் சொத்தில் ஏற்படுத்தப்பட்ட பாத்தியதையானது நிலைத்தது.

ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய காரணங்களாவன:— செட்டில்மெண்டு பத்திரம் அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமென்ற கருத்துடனே எழுதப்பட்டது வாஸ்தவமென்றும் ஆனால் 1-ம் பிரதிவாதி தன்னுடைய பாக்கிதார்களை நஷ்டப்படுத்தவும் ஆலஸ்யம் செய்யவும் எண்ணங்கொண்டு அவ்விதம் ஏற்பாடு செய்துவிட்டதாகவும் சில பாக்கிதார்களில் வாதியும் மோசம் செய்யப்பட்ட ஒரு பாக்கிதாரனாகிறானென்றும் ஆகையால் வாதி ப்ராபர்டி ஆக்ட் 53-வது பிரிவின்படிக்கு அந்த செட்டில்மெண்டை ரத்துசெய்ய லாயக்குள்ளவனென்றும் ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்படுகிறார். செட்டில்மெண்ட் பிறந்தகாலத்தில் 3-ம் பிரதிவாதி தன் அடமானத்தை மேடோவர் செய்யாதிருந்தமையால் 3-ம் பிரதிவாதி பாக்கிதாரனாக இருந்திருக்கிறாரேயொழிய வாதிக்கு செட்டில்மெண்ட் காலத்தில் யாதொரு நிலைமையும் ஏற்படவில்லையென்றும் 2-ம் பிரதிவாதிக்காகச் சொல்லப்பட்டது. 1-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதிக்கு மைனர் தசையில் வாங்கின கடனைக் கொடுக்கக் கடமைப்பட்டவனா? ஒரு மைனர் தன் உண்மையான வயதை மறைத்துச் சொல்லி யாதொரு தொகையைக் கடன் வாங்கியிருந்தால் அது மோசமாகும்.) அப்படி வாங்கின தொகையைத்திரும்பிக் கொடுக்கவேண்டியது நியாயம் தான் ஆனால் மோசமில்லாத பட்சத்தில் திரும்பிக்கொடுக்க நியாயமாகாது. இங்கிலீஷிலாவிலும் இந்தியன் கண்ட்ராக்ட் ஆக்டிலும் ஒரு மைனர் செய்துகொள்ளுகிற ஒப்பந்தமானது செல்லத்தகாதென்று பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கிறது. மைனர் தசையில் மோச நடவடிக்கையினால் யாதொருபொருளைப் பெற்றிருந்தால்மட்டும் அதை மேஜரான பிறகு வாபீஸ் செய்யவேண்டியதாகுமென்று இங்கிலீஷ் தீர்மானங்கள் இருக்கின்றன. 25 Times L. R. 265 (1881) 18 ch D. 109, (1912) [illegible] K. B. 235, இவைகளில் பிரசுரமாயிருக்கும் இங்கிலீஷ் தீர்மானங்களைப் பார்க்கவும்.

தவிர 30 கல்கத்தா 539-ல் மைனர் செய்த ஒப்பந்தம் செல்லத்தகாத நிஷ்பிரயோஜனமுள்ள ஒப்பந்தமென்றும் (1902) 1. சான்ஸரி 1-ல் சொல்லியிருக்கிறபடி சட்டமுறையால் செல்லத்தகாதென்ற உடன்படிக்கையின்படி ஒருவன் வாங்கியிருக்கிற தொகையை தர்ம நியாயத்தின் காரணத்தைப் பிரயோகித்துத் திரும்பிக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மோசம் என்ற பாயிண்டை ஆதாரங்கொண்டு வாதி தொகையை திரும்பியடையக் கோரினாலொழிய மைனர் என்ற எதிர் வாதம் செல்லத்தகுமென்று சொல்லவேண்டும். 8-அலகாபாத் லா ஜர்னல் 1058 - பார்க்கவும். இந்தக் கேஸில் 1-ம் பிரதிவாதி மோசமான நடவடிக்கையால் அல்லது சொற்களால் 3-ம் பிரதிவாதியிடம் தொகையைப்பெற்றதாக ருஜுவாகவில்லை. ஆகையால் 3-ம் பிரதிவாதிக்கு அந்தத்தொகையைத் திரும்பிக்கொடுக்கக் கடமைப்பட்டவனல்ல. ஆகவே செட்டில்மெண்ட் காலத்தில் 3-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் ஒரு பாக்கிதாரென்று ஏற்படாது. அப்படியிருந்தும் இரண்டு கீழ்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் வாதி செட்டில்மெண்டை ரத்துசெய்யக்கூடுமென்று சொல்லப்படுகிறது. 1-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதியின் பத்திரத்தில் தான்மேஜரானபிறகும் பல தடவைகளில் தொகை செலுத்தி செல்லுவைத்திருப்பதாயும் அவரை பாக்கிதாரனென்று பாவித்துவந்திருப்பதாயும் 4-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட மேடோவர் பத்திரத்தில் சாட்சியொப்பமிட்டிருக்கிறகாரணத்தையும், தவிர 1-ம் பிரதிவாதியே கேஸின் ஈரங்கிகாலத்தில் வாதியின் பாக்கியை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்திருக்கிற விஷயத்தையும் ஆதாரமாகக்கொண்டு கீழ்கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். 1-ம் பிரதிவாதி வாதியின் கடனை ஒப்புக்கொண்டதால் 2-ம பிரதிவாதிக்கு விரோதமாக செட்டில்மெண்டை வாதி ரத்துசெய்ய நியாயமாகாது. செட்டில்மெண்ட்காலத்தில் ஏற்பட்டிருந்த பாக்கிதார்களல்லாத பிந்திய பாக்கிதார்களை மோசம் செய்ய எண்ணங்கொண்டு செய்த செட்டில்மெண்டாகச் சொல்லி அந்தகாரணத்தைவிட்டு ரத்துசெய்யவேண்டுமென்று கோறப்படவில்லை. ஆகையால் வாதியைப்பிந்திய பாக்கிதார் என்று மதித்து அப்படிப்பட்ட பாக்கிதார் செட்டில்மெண்டை ரத்துசெய்யலாமாவென்று யோஜிக்கத் தேவையில்லை. செட்டில்மெண்டின் காலத்தில் வாதி பாக்கிதாரல்ல. ஒரு இங்கிலீஷ் தீர்மானத்தில் (1856 3 K & G 90 at 100) S. C. 69 E. R. 1035) கடன்காரர்களை மோசம் செய்யும்பொருட்டு செட்டில்மெண்ட் எழுதப்பட்டபின் அந்த பாக்கிதார்களுக்கு தொகைகொடுத்துத் தீர்க்கப்பட்டபின் வேறு சில பாக்கிதார்கள் ஏற்பட்டு அதே ஸ்தானத்தில் (பழய பாக்கிதார்களுடைய ஸ்தானத்தில்) வந்தால் அவ்விதமான பிந்திய பாக்கிதார்களுக்கு விரோதமாகவும் செட்டில்மெண்டானது செல்லாமல் போய்விடுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கேஸில் வாதி செட்டில்மெண்ட் காலத்திலுள்ள பாக்கிதாரின் ஸ்தானத்தில் வந்தவராக பாவிக்கப்பட நியாயமில்லை. (3-ம் பிரதிவாதியே பாக்கிதாரல்லவென்று முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது.) ஆகையால் வாதி 1-ம் பிரதிவாதியின் செட்டில்மெண்டை ரத்துசெய்ய நியாயமில்லையென்று ஏற்பட்டு 2-ம் பிரதிவாதிக்கனுகூலமாய் வாதியின் பிராது தள்ளுபடியாச்சுது. 26 M.L.J.612

———:o:———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

தஞ்சாவூர் ஜில்லா

C. R. P. 477 of 1913–17 ஏப்பிரல் 1914

முத்துசாமி அய்யர் Vs சோலைக்கோனன்.

ஒரு சொத்துக்குடையவளாகிய (ஸ்வான்தாராகிய) காமாக்ஷியம்மாள் என்றவளுக்காக ஷியாளுடைய விருப்பத்தின்படி முத்துசாமி அய்யர் என்ற வாதியின் பேரில் பேரிரவலாக பிரதிவாதி சோலைக்கோனன் எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டின் பேரில் ஏற்பட்ட பாக்கிக்காக வாதி வலங்கிமான் டி-மு கோர்ட்டில் செய்த ஸ்மால் காஸ் நம்பரில் தீர்வைத்தொகையைக் காமாக்ஷியம்மாளுக்குப் பிரதிவாதி செலுத்திவிட்டதாகவும் ஆகையால் தீர்வைபாக்கி யாதொன்றும் கிடையாதென்றும் எதிர் ஆன்ஸர்சொல்லப்பட்டது. டி-மு கோர்ட்டார் பிரதிவாதியின் எதிர்வாதத்தை ஏற்றுக்கொண்டு பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்ததில் ஹைகோர்ட்டார் ரிவிஷன் மனுவைத் தள்ளுபடிசெய்ததில் சொன்ன முக்கிய காரணங்களாவன:— காமாக்ஷியம்மாளுக்காக வாதியின்பேருக்கு ஷியாளுடைய உத்தரவின்பேரில் (விருப்பத்தின்படி) பிரதிவாதி குத்தகைச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக ருஜுவாகியிருக்கிறது. அதைக் கீழ்கோர்ட்டார் நம்புகிறார்கள். அதை ஒப்புக்கொள்ளத்தகும். என்றாலும் வாதி வக்கில் வாதத்தில் தஸ்தவேஜானது வாதியின் பேருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட காரணத்தால் எதிரி காமாக்ஷியம்மாளிடம் தொகையைச் செலுத்

தியிருந்தபோதிலும் வாதிக்கு தஸ்தவேஜின்படி பாக்கியைச்செலுத்துங்கடமை நீங்கிப்போகாதென்று சொல்லப்பட்டு அதற்காதாரமாக 7 பங்களா லா ரிபோர்ட்டுகளின் 723-ம் பக்கத்தை எடுத்துக்காட்டப்பட்டது. இந்தப் பாயிண்டு விஷயமாய் அபிப்பிராயங்கள் பற்பல கோர்ட்டுகளில் வித்தியாஸமாய் ஏற்பட்டிருக்கிறபோதிலும் மதராஸ் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயங்கள் ஒரேவிதமாயிருக்கின்றன. 30 மதராஸ் 245-ல் சுவான்தார் தனக்கு வரவேண்டிய பாக்கியைப்பற்றியாகிலும் அல்லது சொத்தைப்பற்றியாகிலும் ஸ்வதாவில் தாவா செய்து பரிகாரம் தேடிக்கொள்ள லாயக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சொத்து பாத்தியதையைக் கொண்டாடுகிறவன் அந்த பாத்தியதையை அனுசரித்துப் பரிகாரம் கேட்கத்தானே ஸ்வதாவில் தாவா செய்யலாம். 30 மதராஸ் தீர்மானத்தை யனுசரித்தே ஹானரபில் ஜஸ்டிஸ் வாலிஸ்துரையவர்கள் 31 மதராஸ் 461-ல் 'ஒருகுத்தகைதார் ஸ்வான்தாருடைய பாத்தியதையை நிராகரிக்கக்கூடாதென்றும் [அதாவது பெயரிவல்காரன் செய்யும் பிராதில் எதிர்வாதம் செய்யலாமென்றும் ஸ்வான்தார் கொண்டுவரும் பிராதில் ஆக்ஷேபனை செய்யக்கூடாதென்றும், இன்னும் விளக்கிச்சொன்னால் ஸ்வான்தார் கொண்டுவரும் பிராதில் பெயரிவல்காரனிடம் துகை கொடுத்துவிட்டதாக ஆக்ஷேபிக்கக்கூடாதென்றும் ஆனால் பெயரிவல்காரன் செய்யும் பிராதில் ஸ்வான்தாரிடம் துகை செலுத்திவிட்டதாக எதிர்வாதம் செய்யலாமென்றும்] தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத்தீர்மானம் ஒப்புக்கொள்ளத்தகும். ஆகையால் பிரதிவாதி காமாக்ஷியம்மாளிடம் துகையைச் செலுத்திவிட்டமையால் வாதிக்குச் செலுத்தவேண்டிய கடமை நீங்கிவிட்டதாகச் சொல்லவேண்டும். ஆகையால் டி-மு கோர்ட்டார் வாதியின் பிராதைத தள்ளுபடிசெய்தது சரியென்று ஏற்பட்டு ரிவிஷன் விண்ணப்பமும் தள்ளுபடியாச்சுது. XXVI M, L J. 597

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

கஞ்சம் ஜில்லா.

S. A. 563 of 1912—30 மார்ச் 1914.

பிருந்தாவன சந்திர ஹரிசந்திர ராஜா

*Vs*

ராமய்யா.

ஒரு ஜமீனை ஜீவதசையில் மட்டும் அனுபவிக்க பாத்தியமுடையவரான காலஞ்சென்ற ஜமீன்தாரின் ஸம்ஸாரத்தினிடத்தில் M என்று அடையாளமிடப்பட்ட ஆதாவால் குறிக்கப்படாதகாலத்திற்கு சில பழயதரிசு நிலங்களை கிராண்டாகப் பெற்ற 1-ம் பிரதிவாதி 1884-ம் வருஷத்தில் A-ஆதாவால் ஷை தரிசு நிலங்களை சாகுபடிசெய்து அனுபவிக்கும்படி 2-ம் பிரதிவாதிக்கு ஷை பழய தரிசு நிலங்களை சுவாதீனப்படுத்திக் கொடுத்துவிட்டார். 2-ம் பிரதிவாதி ஷை நிலங்களை அனுபவித்துவருகையில் காலஞ்சென்ற ஜமீன்தாரின் அனந்தர வாரிஸ்தாராகிய வாதி 1901-ல் டி-மு-கோர்ட்டில் 2-ம் பிரதிவாதியை ஷை நிலங்களின் சுவாதீனத்திலிருந்து விலக்கும்பொருட்டு தாவா செய்ததில் டி-மு கோர்ட்டிலும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டிலும் தோல்வியடைந்து வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் அனுகூலமாகாமல் 2-வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:— வாதி அப்பீலில் செய்த முக்கியமான வாதங்களாவன:—"2-ம் பிரதிவாதி மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 3-வது பிரிவு 15-வது கிளாஸின் கருத்துப்படி ரயட்டாகமாட்டான். (2) அப்படிக்கு யாதொரு காரணத்தால் ரயட்டென்னும் நிலைமையை 2-ம் பிரதிவாதி அடைந்ததாகச் சொன்னாலும் ஆக்டின் 16-வது பிரிவில் சொல்லப்பட்ட விதமாய் அவன் ஒரு எஸ்டேட் நிலத்தில் நிலச்சுவான்தாரால் ரயட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டு சுவாதீனமடைந்தவராகச் சொல்லக்கூடாது, (3) மேற்கூறிய இரண்டு அம்சங்களும் ஸ்தாபிக்கப்பட்டால் 2-ம் பிரதிவாதியை வாதிகள் ஷை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்த லாயக்குள்ளவராகிறார்கள்." வாதியின் வாதங்கள் ஒரே பாயிண்டில் அடக்கப்படலாம். அதாவது 1884-ல் ஜமீனைச்சேர்ந்த பழயதரிசு நிலங்களின் சுவாதீனத்தையடைந்த ஒருமனிதன் மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டில் கண்டவிதமான ரயட்டுக்குறிய அனுமான பாத்தியதையைக் கொண்டாடி



சாசுவதமான குடிவார பாத்தியதையைப் பாராட்டலாமா வென்பதுதான் இந்த அப்பீலில் தீர்மானிக்கவேண்டிய முக்கிய விஷயமாகும்.

எஸ்டேட்ஸ் ஆக்டில் 3-(15)-ல் ரயட்டென்ற வசனத்திற்கு சாகுபடிசெய்யும் பொருட்டு எஸ்டேட்டில் சாகுபடிக்கு லாயக்கான நிலத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு சட்டப்படிக்கு அதற்காக செலுத்தவேண்டிய தீர்வையை நிலச்சுவான்தாருக்குச் செலுத்திவருவதாய் ஒப்புக்கொண்டு ஷை நிலங்களை அனுபவிக்கிறவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராண்டு பெற்ற 1-ம் பிரதிவாதியாவது அவரிடமிருந்து நிலத்தைப்பெற்ற 2-ம் பிரதிவாதியாவது தீர்வையைச் செலுத்துவதாய் ஒப்புக்கொண்ட நிபந்தனை இந்தக்கேஸின் அம்சத்தில் கிடையாதென்று வாதிகளாச் சொல்லப்படுகிறது. ஆனால் A ஆதாவில் 1-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி ஏகர் 1-க்கு ரூ 1-வீதம் செலுத்திவரவேண்டுமென்ற ஷரத்து கண்டிருக்கிறது. அந்தத்துகையை நிலத்தீர்வையென்றே சொல்லத்தகும். அதை வேறு வகைக்காக ஏற்பட்ட துகையென்று யோசிக்கத்தகாது. கிராண்டுபெற்ற 1-ம் பிரதிவாதி நிலச்சுவான்தாரல்லவென்றும் ஆகையால் அவனிடமிருந்து நிலச்சுவாதீனமடைந்த 2-ம் பிரதிவாதி 6-வது பிரிவில் கண்டபடி குடிவார பாத்தியதையை அடைந்தவனாகமாட்டானென்று சொல்லப்பட்டது. M ஆதாவின்படி ஜீவதசைமட்டும் ஜமீனை அனுபவிக்க லாயக்குள்ள ஜமீன்தாரின் மனைவியிடமிருந்து கிராண்டுபெற்ற 1-ம் பிரதிவாதிக்கு ஷையாளுடைய ஜீவதசைமட்டும் ஷை நிலங்களில் கிராண்டின்படிக்கு சுவான் பாத்தியதையுண்டு. அக்காலத்தில் 1-ம் பிரதிவாதியைத் தவிர்த்து வேறு யாதொருவரும் சுவான் பாத்தியதையைப்பாராட்டி அந்த நிலங்களைச் சாகுபடிக்காக டெனண்டுகளிடம் ஒப்படைக்க லாயக்குள்ளவர்களல்ல. ஆகையால் 1-ம் பிரதிவாதி பெற்ற கிராண்டின் யோக்கியதையானது குறைவாக ஏற்படாது. அவருக்கு நிலச்சுவான்தாரென்னும் அந்தஸ்தும் ஏற்பட்டிருக்கவேண்டும். 1-ம் பிரதிவாதி நிலச்சுவான்தாரென்று ஒப்புக்கொள்ளப்பட்டாலும் 6-வது பிரிவின்படி 2-ம் பிரதிவாதி குடிவாரபாத்தியதையைக் கொண்டாடுவதற்கு, நிலச்சுவான்தாரால் சாகுபடிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலமானது 3-(2)-வது பிரிவின் கருத்துப்படி எஸ்டேட் நிலமாயிருக்கவேண்டுமென்றும் தாவா நிலமானது செட்டில்மெண்டில் அடங்காத பாளையம் அல்லது ஜாகீர் நிலமாகவும் சாசுவதமான உள் குத்தகைக்குவிடப்பட்ட நிலமாகாதென்றும் வாதிக்காகச் சொல்லப்படுகிறது. தாவா நிலத்தை 3-வது பிரிவின் 2-(c) யில் கண்டபடி சாசுவதமாய் செட்டில்மெண்டாகாத போதிலும் சொற்பகாலத்திற்கு டெம்பொரரியாக செட்டிலான எஸ்டேட் நிலமென்று சொல்லத்தகும் ஜமீனில் ஒருபாகம் எஸ்டேட் என்பதாய்ச் சொல்லத்தகாதென்று வாதிக்கப்படுகிறது. அதாவது ஜமீனில் ஒருபாகத்தைமட்டும் 1-ம் பிரதிவாதி கிராண்டாகப்பெற்றிருக்க அந்த பாகத்தை எஸ்டேட் என்று சொல்லக்கூடாதென்றும் ஆகையால் அதில் 2-ம் பிரதிவாதிக்குக் குடிவார பாத்தியதை ஏற்படாதென்று வாதிக்கப்படுகிறது. ஜமீன்தார்கள் ஜமீன் நிலங்களில் தீர்வையை வசூலிக்கும் பாத்தியதையைப் பிரதானமாக உடைத்தாயிருக்கவேண்டியதும் தவிர அதில் யாதொரு பாகத்தைத் தமக்குச்சொந்தமாக வைத்துக்கொள்ளலாமென்று வெகுகாலமாய் அங்கீகரிக்கப்பட்ட முறையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சொந்தமாக வைத்துக்கொள்ளப்பட்ட பாகத்திற்குத்தான் ஜமீன்தார்கள் மேல்வார பாத்தியதையைக் கொண்டாடி சாகுபடி அனுபோகத்தைக் குடிகளுக்கு ஒப்படைத்துவிடுகிறார்கள். ஆகையால் ஜமீனில் ஒருபாகத்திற்குமட்டும் மேல்வாரமென்றும் குடிவாரமென்றும் நிலைமை ஏற்பட்டிருப்பதால் அவ்விதபாகமும் எஸ்டேட் நிலமென்று சொல்லப்படவேண்டும். ஆகையால் தாவாநிலம் 3-வது பிரிவின் 2-(a)-யில் கண்டவிதமான எஸ்டேட் நிலமாகும். ஜமீனில் மற்ற நிலங்களைச் சாகுபடி செய்துவரும் குடிகளுக்கு சாசுவதமான பாத்தியதை ஏற்பட்டிருந்தால் நூதனமாக யாதொரு நிலத்தைச்சாகுபடிக்காகப் பெற்ற குடிகளும் அதேவிதமாக சாசுவத பாத்தியதையுடன் நிலத்தைச்சுவாதீனப்படுத்திக்கொண்டதாகச் சொல்லப்படலாமென்றும் இந்த ஜமீனில் மற்ற நிலங்களை அனுபவிக்கிற குடிகளுக்கு சாசுவத பாத்தியதை உண்டென்ற விஷயம் ருஜூப்படுத்தப்படவில்லையென்றும் சொல்லப்படுகிறது. ஜமீன் நிலங்களைச்சாதாரணமாய் அனுபவிக்கிற குடிகளுக்கு சாசுவதமான குடிவார பாத்தியதையும் உண்டென்று

பூஜிக்கவேண்டும். அவ்வித பாத்தியதை இருப்பதானவே கோர்ட்டாரும் ருஜுபாகமில்லாவிடினும சம்பிரதாயத்தை அனுசரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். தாவா ஜமீனில் அவ்விதமான வழக்கமில்லையென்று அசாவது குடிகள் எல்லோரும் சாசுவத பாத்தியதையில்லாமல் அனுபவித்து வருகிறார்களென்று வாதி சொல்லும் பட்சத்தில் அந்த விபரீதமான நிலைமையைப்பற்றி ருஜுப்படுத்தவேண்டியது வாதியின் கடமையாகும். அவ்வித ருஜுபாகம் வாதியால் விடப்படவுமில்லை, இனியாவது ருஜுபடுத்தவதாய்ச் சொல்லப்படவுமில்லை. ஆகையால் அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தகாது.

இரண்டு காலத்தில் தாவா நிலங்கள் பழயதரிசாய்க்கிடந்தமையால் அவைகளையடைந்த குடிகளுக்கு மற்ற குடிகளுக்குரிய பாத்தியதைக்கு சமானமாக சாசுவத பாத்தியதை ஏற்படாதென்று வாதிக்கப்படுகிறது. உடன் காலத்தில் சாகுபடிக்கு யோக்கியமான நிலங்களைச் சுவாதீனமடையும் குடிகளுக்கு சாசுவத பாத்தியதை ஏற்படும்பட்சத்தில் தரிசுநிலங்களை சாகுபடிக்கு லாயக்காய்ச்செய்து அனுபவிப்பதாய் ஒப்புக்கொண்டுசுவாதீனமடைகிற ரயட்டுக்கு சாசுவதபாத்தியதை ஏற்படவேண்டியது மேலான நியாயத்தைப் பொருத்ததாகும். கடைசியாக தாவா நிலம் 1884-முதல்சாகுபடிக்கு யோக்கியமாகி அனுபவித்து வரப்பட்டமையாலும், எஸ்டேட்ஸ் ஆக்ட் அமோதுக்குவந்த வருஷமாகிய 1908-முதல் 10-வருஷகாலம் தொடர்ச்சியாக சாகுபடி செய்யப்படாமலும், அல்லது 1908-க்கு முன்னும் பின்னுமாகத் தொடர்ச்சியாக 10 வருஷகாலம் அவ்விதமான நிலைமையிலும் அல்லது 1908-க்கு முன் தொடர்ச்சியாக 20 வருஷகாலம் சாகுபடியன்னியிலும் இருந்தால்மட்டும் பழயதரிசென்று யாதொரு நிலத்தைச் சொல்லத்தகுமாதலாலும், மேற்கூறிய மூன்றுவித சந்தர்ப்பத்திலடங்காத தாவா நிலங்கள் பழயதரிசாகமாட்டாதென்றும் சொல்லப்படவேண்டும். 1874-ல் தாவா நிலங்கள் தரிசாய்க்கிடந்தபோதிலும் 1884 முதல் அவைகள் தொடர்ச்சியாய்ச் சாகுபடிசெய்யப்பட்டு வருகின்றன. ஆகையால் தாவாநிலங்கள் பழயதரிசாகமாட்டாது. வாதி ஷை நிலங்களை வசப்படுத்திக்கொள்ள நியாயமில்லை; 2வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVI M. L. J. 600

———:O:———

ஜஸ்டிஸ் எயிலிங்

கோயமுத்தூர் ஜில்லா

Ref'd case10 of 1914 & Crl R. c. No. 91 of 1914—23 ஏப்பிரல்1914

கல்லிவீரத்தேவனும் மற்றொருவனும் எதிரிகள்

வாதியின் கால்நடை ஒன்று சோரம்போனதில் எதிரிகளிருவரும் வாதியினிடம் சென்று காணாமற்போன கால்நடையைக்கண்டுபிடித்துக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு அதற்காக வாதியிடம் இனாம் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் திருடினவன் இன்னாரென்று ஒப்பந்தப்படி கண்டுபிடித்து காட்டவில்லை. அதனால் இருவரும் இ. பி. கோ. 215-வது பிரிவின்படி குற்றவாளிகளானார்கள். கடைசியில் திருட்டுப்போன கால்நடையானது 2-வது எதிரியின் வசத்திலிருக்கதாகக் காணப்பட்டு 1, 2 எதிரிகளை பிராஷிக்யூட் செய்ததில் ஈரோட் சப் மாஜிஸ்டிரேட்டாவர்கள் இரண்டு எதிரிகள்பேரிலும் இ. பி. கோ 215-வது பிரிவின்படியும், தவிர அவர்களையே திருடர்களென்று சந்தேகித்து 379-வது பிரிவின்படியாவதும் அல்லது திருட்டு சொத்தைப் வைத்துக்கொண்டிருந்ததாக 411-வது பிரிவின்படியாவது குற்றவாளிகளென்று தீர்மானித்து இருவருக்கும் காவல் தண்டனை விதித்தார்கள். ஆகவே இருவரும் 215-வது பிரிவின்படிக்குற்றம் சாட்டப்பட்டதும் தவிர இருவரும் 379 அல்லது 411-வது பிரிவின்படி குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு குற்றங்களுக்காகவும் தண்டனையடைந்தார்கள். ஜில்லா ஜட்ஜியவர்கள் சப் மாஜிஸ்டிரேட்டாருடைய தீர்மானம் சட்ட விரோதமாயிருப்பதாக ஹைகோர்ட்டாருக்குத்தெரிவித்து உத்தரவளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதில் ஹைகோர்ட்டார் செய்த உத்தரவென்னவென்றால்:—ருஜு அம்சத்தைக்கவனித்தால் 2-வது எதிரி திருடினவனாக அல்லது திருட்டுசொத்தைத் தெரிந்துவைத்துக் கொண்டிருந்தவனாகச் சொல்லப்படவேண்டும். ஆகையால் 2-வது எதிரி 379 அல்லது 411-வது பிரிவின்படி குற்றவாளியாகிறதில் சந்தேகமில்லை. 1-வது எதிரியின்வசம் திருட்டு சொத்தில்லை. அவன்பேரில் திருட்டுக்குற்றம் சாட்டவும் ருஜு அம்சம் கிடையாது. ஆனால் அவன் திருட்டைக் கண்டுபிடிப்பதாய் வாதியிடமிருந்து இனாம் பெற்றும் திருடனைக் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே 1-வது எதிரி 215-வது பிரிவின்படி மட்டும் குற்றவாளியாகிறான். அவனை 379, அல்லது 411-வது பிரிவின்படிக்கு தண்டித்தது நியாயமில்லை. 2-வது எதிரியையும் 215-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டியிருக்கிறார். 23 அலகாபாத் 81-ல் தீர்மானித்திருக்கிறபடி திருடனே திருட்டைக் கண்டுபிடிப்பதாய் ஒப்புக்கொண்டு வாதியிடம் இனாம் பெற்று திருட்டைக் கண்டுபிடிக்காமல்போனால் 215-வது பிரிவின்படி அவனை குற்றஞ்சாட்ட நியாயமில்லையென்றும் 379-வது பிரிவின்படி திருட்டுக்காகமட்டும் அவனை தண்டிக்கலாமென்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் திருடனல்லாமல் திருட்டு சொத்தைத்தெரிந்து தன்வசம் வைத்துக்கொண்டிருக்கிறகாரணத்தால் 411-வது பிரிவின்படி குற்றஞ் சாட்டப்படுகிறவனை 215-வது பிரிவின்படியும் குற்றஞ்சாட்டலாமாவென்பதைப் பற்றி சந்தேகமாய்த் தோன்றினபோதிலும் இந்தக்கேசில் 2-வது எதிரி 379 அல்லது 411-வது பிரிவின்படி தண்டிக்கப்பட்டிருப்பதால் அவனை 215-வது பிரிவின்படியும் தண்டிக்கக்கூடாதென்று சொல்லவேண்டும். 23 அலகாபாத் தீர்மானத்தின் கருத்தை 2-வது எதிரியின் விஷயமாய் பிரயோகப்படுவது நியாயமாகும். மூன்றுவிதமான குற்றங்களைப்பற்றி ஒரே விசாரணையில் தீர்மானம் கொடுத்தது சட்டவிரோதமல்ல. ஏனெனில் இரண்டு எதிரிகளும் ஒருவருக்கொருவர் நெருங்கின தோழர்களாயிருந்ததைக் கவனித்தால், திருட்டும் திருட்டுச்சொத்தை வைத்துக்கொண்டிருந்த விஷயமும் துகையைச்செலுத்தினால் திருட்டுசொத்தைக் கொடுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்ட டத்தையும் எல்லாம் இருவருடைய பொதுவான ஏற்பாடென்று சொல்லத்தகும். ஆகையால் மூன்று குற்றங்களுக்கிடம் கொடுத்த நடவடிக்கை புரோஸிஜர் கோட் 239-வது பிரிவின்படி ஒரே நடவடிக்கையாக பூஜிக்கப்படவேண்டுமாதலால் அவைகளை ஒரே விசாரணையில் விசாரித்துப்பைசலளித்தது சட்டவிரோதமல்ல. ஆகவே 2-வது எதிரியை 379 அல்லது 411-வது பிரிவின்படிக்கும் 1-ம் எதிரியை 215-வது பிரிவின்படிக்கும் குற்றஞ்சாட்டி இருவருக்கும் முன் விதிக்கப்பட்ட தண்டனையை குறைத்து 6-மாத கடின காவல் தண்டனையாக மாற்றித் தீர்மானம் கொடுக்கப்பட்டது.— XXVI M. L. J. 599



———:O:———

ஜஸ்டிஸ் வாலிஸ்

மதராஸ்

O. S. No. 363 of 1914-21 நவம்பர் 1913

சீதாராம நாயுடு Vs பாலகிருஷ்ண நாயுடு

சென்னையில் கண்டலம்மாள் என்றதாஸி தன் சகோதரிகளுடன்சேர்ந்து வேசித்தொழிலினால்பலசொத்துக்களைச் சம்பாத்தியம் செய்து1874-ல் தன் சகோதரிகளுடன் பாகப்பிரிவினை செய்துகொண்டு தானும் தன் மக்களும் தனியாக வசித்து வந்ததில் அவளுக்குமுன் அவளுடைய இரண்டு பெண்மக்கள் மரித்தமையால் 1882-ல் கண்டலம்மாள் இறந்துபோன சமயத்தில் அவளுடைய குமாரனாகிய வெங்கடசாமி அவளுடைய சொத்துக்கள்யாவற்றையும்கைப்பற்றிக் கொண்டு அதைவிருத்திசெய்துஅனுபவித்துவந்தார். வெங்கடசாமிக்குபாலகிருஷ்ணன்என்ற,ஒருபுத்திரனும் இரண்டுபெண்மக்களும்உண்டானார்கள். வெங்கடசாமி காலஞ்சென்றபிறகுஅவனுடையமகனும்1ம் பிரதிவாதியுமாகிய பாலகிருஷ்ணன்தன்னுடைய இரண்டு சகோதரிகளுக்கும் 1893-ல் C. ஆதாரமாகிய பாக தஸ்தவேஜினால் குடும்ப சொத்துக்களின் சமபாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு மறு பதியைத்தான் ஸ்வதந்தர பாத்தியதையுடன் அடைந்து அனுபவித்துவந்து அவைகளில் அநேகத்தைத் பலர்களுக்கு துர்விநியோகம் செய்து ஈன கிரயத்திற்கு விற்று பற்பல விதமாய் பராதீனம் செய்துவிட்டார். பாலகிருஷ்ணனுடைய இரண்டு புத்திரர்களும் தன் தகப்பன் சகோதரிகளுக்கு C-ஆதாரவின்படி பாகப்பிரிவினையால் சொத்துக்களைக் கொடுத்துவிட்டது பிசகென்றும் தங்கள் பாட்டனாகிய வெங்கடசாமியின் சொத்துக்குத் தாங்களும் தங்கள்பிதாவாகிய பாலகிருஷ்ணனும் கூட்டுக்குடும்பத்தவர்களாக அடையவேண்டியது நியாயமாகுமென்றும், பாலகிருஷ்ணன் செய்திருக்கிற பற்பல விக்கிரய நடவடிக்கைகள் அநுசிதமாகவும் துர்விநியோகத்திற்காகவும் ஏற்பட்டிருப்பதால் அவைகள் தங்கள்பாகத்தைக் கட்டுப்படுத்தாதென்றும் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் 1911-ல் தகப்பனை 1-ம் பிர

திவாதியாகவும் ஷியாலுடைய சகோதரிகளிடமிருந்து விக்கிறயம் பெற்றவர்களை 2-3 பிரதிவாதிகளாகவும் தகப்பனிடமிருந்துகிறயம்பெற்று சொத்துக்கள் பலவற்றையும் சுவாதீனப்படுத்திக் கொண்டு அனுபவிக்கிறவர்களை மற்ற பிரதிவாதிகளாகவும் சேர்த்து அசல் தாவா செய்தார்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் C ஆதாரவால் பாலகிருஷ்ணன்தன் சகோதரிகளுக்கு பாகம் பிரித்துக் கொடுத்தது நியாயமென்றும் பாலகிருஷ்ணனிடமிருந்து கிறயம் பெற்றவர்கள் அவசியமான குடும்பச் செலவுக்காக தங்கள் விக்கிறயத்துகை சென்றதாக ருஜுப்படுத்த வேண்டியகடமையாகுமென்றும், பிராதில் கண்ட 4, 6, 8, 9, அயிடம் சொத்துக்களை கிறயம் பெற்றவர்கள் அவ்விதமான ருஜு அம்சம் கொடுக்காதபடியால் அந்த சொத்துக்களைப் பற்றிய விக்கிறயங்கள் வாதிகளின் பாகத்தைப் பற்றினமட்டில் ரத்தாகவேண்டுமென்றும் அந்த விக்கிறயங்கள் ஏற்பட்டகாலத்தில் பாலகிருஷ்ணனுக்கு ஒரே புத்திரனிருந்தமையால் கிறயம் பெற்றவர்களுக்கு பாலகிருஷ்ணனுக்குறிய ஒரு பாகம் செல்லத்தகுமாதலால் மேற்கூறிய 4, 6, 8, 9, அயிடங்களில் ஒரு பாதி பாகம் ரத்தாகக்கடவதென்றும், 10வது அயிடம் சொத்தின் விக்கிறயத்தைப்பற்றிய ருஜு அம்சமே கிடையாதபடியால் அது வாதிகளைக் கட்டுப்படுத்தாதென்றும், 11-வது அயிடம் சொத்தானது அவசியமான காரணத்திற்காக விக்கிறயமானபடியால் அது வாதிகளைக் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானித்து, 5-வது அயிடம் சொத்து விஷயமாய் விக்கிறயத்துகை ரூ 550-ல் ரூ 414-மட்டும் குடும்பத்தைப் பூராவும் கட்டுப்படுத்துமென்றும், மிகுதிரூப் பணப்பற்று விவரம் அல்லது காரணம்ஏற்படாதபடியால் அந்த அயிடம் விஷயமாய் பிரத்தியேகமான ஈக்விட்டி கேட்டு கிறயம் பெற்றவர்களுக்கு 1-ம் பிரதிவாதியின் பாகமாகிய 3-ல் ஒருபங்கு சேரவேண்டியது நியாயமென்றும், குடும்ப அவசியத்திற்காக ஏற்பட்ட ரூ 414-க்குறிய வீதாசாரத்தையும் மூன்றாய்ப்பகிர்ந்து கணித்துப்பார்த்ததில் கிறயம் பெற்ற பிரதிவாதிகளுக்கு கிறய சொத்தில் 3-ல் ஒருபாகமும், ரூ-414-ல்3-ல்2பாகமாகிய ரூ276க்குமிகுதியான சொத்து பாகத்தில் ஒரு ஹக்கு பாத்தியதையும் அளிக்கப்பட்டு, முற்றிலும் ஜயமடைந்த 2, 13, 14,-ம் பிரதிவாதிகளுக்கு அதாவது C ஆதரவு நிலைத்தமையால்2ம் பிரதிவாதிக்கும் 11-வது அயிடத்தைப்பற்றிய விக்கிறயம் நிலைத்தமையால் அதை கிறயம் பெற்ற 13, 14-வது பிரதிவாதிகளுக்கும் வாதிகள் செலவுதொகை கொடுக்கவேண்டியதாகையால் தோல்வியடைந்தமட்டில் மற்ற பிரதிவாதிகளால் வாதிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய செலவுதொகையை வாதி வசூலித்து அதை 2, 13, 14 பிரதிவாதிகளுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டது.

இந்தக்கேசில் C. ஆதாரவைப்பற்றி கோர்ட்டார் கொண்ட தீர்மான அபிப்பிராயமாவது:— C. ஆதாரவில் கண்டலம்மாளும் அவளுடைய பெண்மக்களும் வேசித்தொழிலை யனுசரித்து சம்பாத்தியம் செய்து வந்தார்களென்றும் அவள் தன் சொத்தில் ஒரு பாகத்தைத்தன் மகன் வெங்கடசாமிக்கும் மறுபாகத்தை தன் பெண்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருந்ததாகவும் ஆனால் அவளுக்குமுன் பெண்கள் இறந்துவிட்டமையால் வேசித்தொழிலை அனுசரித்துவந்த வெங்கடசாமியின் பெண்மக்களுக்கு அந்த பாகத்தைக் கொடுக்க உத்தேசித்திருந்ததாகவும், 1882-ல் கண்டலம்மாள் காலஞ்சென்றமையால் அது முதல் வெங்கடசாமி சொத்துக்கள் யாவற்றையும் அனுபவித்துவந்ததாகவும் குறித்தெழுதப்பட்டிருக்கிறது. சொத்துக்கள் யாவற்றும் கண்டலம்மாளுடைய ஜீவ்ய காலத்தில் சம்பாதிக்கப்பட்டபோதிலும் அல்லது அவளுக்குப்பின் வெங்கடசாமியால் சம்பாதிக்கப்பட்ட போதிலும் அவைகள் வெங்கடசாமியின் பெயரிலிருப்பதாயும் அதிகவிலை உயர்ந்த சொத்துக்கள் கண்டலம்மாளுடைய மரணத்திற்குப்பின் வாங்கப்பட்டதாயும் தவிற வெங்கடசாமி ஒரு சின்ன மருந்து ஷாப்பு வைத்திருந்தாயும் ஆனால் அந்த ஷாப்புவரும்படியைக் கொண்டே இந்தசொத்துக்கள் வாங்கப்பட்டதாகச் சொல்லும்படி ஷாப்பு வியாபாரம் அவ்வளவு பெரியதல்லவென்றும் ருஜுபாகத்தில் ஏற்படுகிறது. வாதிகள் தாவாசொத்துக்களை வெங்கடசாமியினுடையதாக பாவித்து அதைத்தாங்களும் தங்கள் பிரதிவாதிய பாலகிருஷ்ணனும் கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களான நிலமையில் பாபித்துக்கொள்ளவேண்டியதாயிருக்க அவைகளை பாலகிருஷ்ணன் C-ஆதாரவால் தன் சகோதரிகளுக்குப் பாகம்பிரித்துக்கொடுத்தது பிசகென்று பிராதில் சொல்லு



கிறார்கள். தவிற பாலகிருஷ்ணன் தன்னுடைய பாகத்தைப் பற்பலவிதமான விநியோகம் செய்தது குடும்ப நன்மைக்காகவும் முந்திய கடனுக்காகவும் ஏற்படாதபடியால் வாதிகள் அவ்வித பராதீனங்களுக்குக் கட்டுப்பட நியாயமில்லையென்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது. பாலகிருஷ்ணனுடைய சகோதரிகளிடம்கிறயம்பெற்ற2,3பிரதிவாதிகளுக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் வாதியின் வாதத்திற்கு எதிராக பாலகிருஷ்ணனுடைய சகோதரிகளுக்கு குடும்பசொத்தில் ஜீவனாம்சத்திற்காகவும் மற்றவிஷயமாகவும் பாத்தியம்கொண்டாட லாயக்குள்ளவர்களாதலால் C ஆதாரவை பாலகிருஷ்ணன் ஒரு குடும்ப ஏற்பாடாகச்செய்துமுடித்து சொத்தில் ஒருபாகத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறானென்று சமாதானம் சொல்லுகிறார். மற்ற பிரதிவாதிகளுக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ மகாதேவய்யரவர்கள் இன்னும் பலமான எதிர்வாதம் செய்கிறார்கள். அதாவது சகல சொத்துக்களும் மூன்றுதலைமுறையாகவேசித்தொழிலைநடத்திவந்தகுடும்பசம்பாத்தியமென்றும்சென்னை இராஜதானியில் வேசிகளுக்குள்வழங்கி வரும் ஸித்தலாமுறைப்படிக்குஅந்த சொத்துக்கள்குடும்பத்தின்பெண்ணினங்களுக்கு பாத்தியப்பட்டதாகுமென்றும்,வெங்கடசாமியின் பேரில்அவைகள்நின்றபோதிலும்அவைகள்பெண்ணினங்களின்சொத்தாயிருக்கபாலகிருஷ்ணன் C ஆதாரவால் அவைகளில் தனக்கு ஒருபாகத்தை ஸ்வதந்தரப்படுத்திக்கொண்டது மிகவும் நன்மையான ஏற்பாடென்றும் ஆகவே, C ஆதாரவால் பாலகிருஷ்ணனுக்குக் கிடைத்த பாகத்தில் அவனுக்கு ஸ்வயார்ஜித பாத்தியதை உண்டாயிருப்பதாக பாவிக்கப்படவேண்டுமென்றும் எதிர்வாதம் செய்கிறார். ஆனால் மிஸ்டர் மகாதேவய்யரவர்களுடைய வாதம் பிராதிலாவது ஸ்டேட்மெண்டிலாவது கிடையாது. குடும்பத்தின் வாஸ்தவமான நிலமை முந்தியே தெரியாதகாரணத்தால் ஸ்டேட்மெண்டில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படவில்லையென்று மிஸ்டர் மகாதேவய்யரவர்கள் சமாதானம் சொல்லுகிறார். கண்டலம்மாளுடைய சொத்துக்களை அவளுடைய பெண்மக்கள் அடையக்கூடாமல் தாய்க்கு முன் மரித்தமையால் கண்டலம்மாள்வெங்கடசாமியின்பெண்களை அதாவது தன்பேத்திகளை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டிருந்தால் கண்டலம்மாளுடைய சொத்தானது பேத்திகளுக்கு பாத்தியமாகும். ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதாக ருஜுவில்லை அப்படி எடுத்துக்கொண்டிருந்தால் சொத்து பாத்தியதை விஷயமாய் யாதொரு தீர்மான அபிப்பிராயம் கொடுக்கத்தகும். ஆகவே வெங்கடசாமி தன் தாயாருடைய முழு சொத்தையும் அடைந்தவனாகிறான். சன்மார்க்கத்தில் அவன் திரும்பி, விவாகம்செய்துகொண்டு ஒருபுத்திரனையும் இரண்டுபுத்திரிகளையும் அடைந்திருக்கிறான். ஆனால் இரண்டு புத்திரிகளையும் வேசித்தொழிலுக்கு விட்டு தன்னுடன் கூடவே வைத்துக்கொண்டிருந்திருக்கிறார். தவிற தாவா சொத்துக்களில் அநேகம் அந்தப்புத்திரிகளின் சம்பாத்தியத்தைக்கொண்டே வாங்கப்பட்டதாக ருஜு பாகம் மிகவும் தெளிவாய் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கண்டலம்மாளுக்குப் பின் வெங்கடசாமி சொத்து பாத்தியஸ்தனாகப் போய்விட்டாலும்அநேக சொத்துக்கள்அவனுடையபெண்களின் சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கப்பட்டதால் குடும்பத்தைச்சேர்ந்த ஆண்வாரிஸ்களைவிட அதிகபாத்தியதையானது வெங்கடசாமியின் பெண்மக்களுக்கு உண்டாகவேண்டும். ஆகையால் C-ஆதாரவால் பாலகிருஷ்ணன் ஒருபாகத்தைத் தன் சகோதரிகளுக்கு பாகித்துக்கொடுத்தது நியாயமாகும் 2-3 பிரதிவாதிகள் அவர்களிடமிருந்து கிறயம்பெற்றது நிலையாச்சுது.

இரண்டாவதாக பாலகிருஷ்ணனுக்குக் கிடைத்த பாகம் ஸ்வயார்ஜிதமாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் அதை அவர் இஷ்டம்போல் விநியோகம் செய்யலாமென்றுவக்கில் மிஸ்டர் மகாதேவய்யர் மற்ற பிரதிவாதிகளுக்காக வாதிக்கிறார். C-ஆதாரவால் பாலகிருஷ்ணன் சொத்து பாகத்தை அடைந்தபோதிலும் வெங்கடசாமியின் மகனாகிற நிலமையில் அதை அடைந்தானேயொழிய தன் சகோதரிகளுக்குறிய சொத்தில் அவனுக்கு ஒரு பாகம் கிடைத்ததென்றும் மற்றப்படி அதில் பாத்தியதை கிடையாதென்றும் சொல்லத்தகாது. விவாகம் செய்துகொண்ட தன் தகப்பனிடமிருந்து சொத்து பாத்தியதையை அடைந்ததாகச் சொல்லவேண்டும். ஆகையால் C ஆதாரவால் கிடைத்தசொத்து பாகத்திற்கு கூட்டுக்குடும்ப சொத்தின் பாத்தியதையிருந்ததாகவும் அவ்விதமான யோக்கியதை

யுடன் பாகித்துக்கொண்டானென்றும் சொல்லத்தகும். ஸ்வயார்ஜிதமாக பாவிக்கத்தகாத சொத்துபாகத்தை பாலகிருஷ்ணன் பலவாராய்ப் பராதீனம் செய்திருக்க அவைகள் குடும்ப நன்மைக்காக அல்லது மூந்திய கடன்களைத் தீர்பதற்காக பராதீனம் செய்யப்பட்டதாக ஏற்பட்டால் பாலகிருஷ்ணனுடைய குமாரர்களுக்கு அந்தப் பராதீனங்களை ஆக்ஷேபிக்க நியாயமாகாது. அவ்விதமான காரணங்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு பாலகிருஷ்ணனிடம் விக்கிறயம் பெற்றதாகருஜுப்படுத்தவேண்டிய பொருப்புகிறயம் பெற்ற பிரதிவாதிகளைச் சேர்ந்ததாகும். அதாவது கூட்டுக்குடும்பத் தலைவனிடம் கிறயம் பெற்றவர்தன் கிறயத்துகையை மூந்திய கடனுக்காவது அல்லது குடும்ப நன்மைக்காக உபயோகிக்கப்பட்டதென்று கவனித்துப்பார்த்து அதைப்பற்றி ருஜுப்படுத்தி தங்கள் கிறயங்களை நிலைக்கச் செய்யவேண்டும். ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு கிறயம்பெற்றவர்கள் பேரிலிருக்க அதைப்பற்றி தாவாகேஸில் ஏற்பட்ட இஷுவில், 1-ம் பிரதிவாதியின் விக்கிறய நடவடிக்கைகள் துர் விநியோகத்திற்காகவும் சட்டவிரோதமான காரணங்களுக்காகவும் ஏற்பட்டதாவென்று விஜாரணைக்குக் குறிக்கப்பட்டது. அந்த இஷுவில் மூந்திய கடன் அல்லது குடும்ப நன்மைக்கென்ற பாயிண்டானது அடங்கவில்லை. இந்தப்பாயிண்டைப்பற்றி வாதிகளே ருஜுப்படுத்துவதாய் அதாவது தகப்பன் குடும்ப நன்மைக்காவது அல்லது மூந்திய கடனுக்காகவாவது சொத்துக்களை விக்கிறயம் செய்யவில்லையென்ற விஷயத்தை தாங்களே ருஜுப்படுத்துவதாய் ஒப்புக்கொண்டதாக யூகிக்கவேண்டுமென்று பிரதிவாதிகளுக்காகச் சொல்லப்பட்டது. பிராதிலாவது மற்ற சிகார்டுகளிலாவது வாதிகள் அந்த ருஜு அம்சத்தின் பொருப்பை ஏற்றுக்கொண்டதாகக் காணப்படவில்லை. ஆகவே தாவா விநியோகங்கள் குடும்ப நன்மைக்காகச் செய்யப்பட்டதா அல்லது மூன் கடன் தொல்லையைத்தீர்ப்பதற்காக ஏற்பட்டதாவென்று ஒரு புதிய இஷு ஏற்படுத்தப்பட்டது. அதன்பேரில் அதைப்பற்றி ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு கிறயம்பெற்றவர்களைச் சேர்ந்ததா அல்லது கிறயத்தை ஆக்ஷேபிக்கிறவனைச் சேர்ந்ததாவென்று கவனிக்குமிடத்து அலகபாத் ஹைகோர்ட்டில் (1908) 3 I A 176 (F. B.)-ல் அந்த விஷயத்தைப்பற்றி சீவ் ஜஸ்டிஸ் ஸ்டான்லீ துரையவர்கள் மூந்திய கடனுக்காக விக்கிறயம் செய்யப்பட்டதாக ருஜுப்படுத்தவேண்டிய அவசியமென்றும் ஜஸ்டிஸ் பெனர்ஜியவர்கள் அவ்வித ருஜுபாகமே அவசியமில்லையென்றும் வித்தியாஸமான அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜஸ்டிஸ் பெனர்ஜியவர்கள் அவ்வித ருஜுபாகம் அவசியமென்று அபிப்பிராயப்பட்டிருந்தால் அதை ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு கிறயம்பெற்றவனைச் சேர்ந்ததென்றே தீர்மானித்திருப்பார். மதராஸ் ஹைகோர்ட்டார் 29 மதராஸ் 200-ல் புல்பெஞ்சு தீர்மானத்தில் குடும்ப நன்மைக்காக விக்கிறயம் செய்யாதபட்சத்தில் மூந்திய கடனுக்காக விக்கிறயம் செய்யப்பட்டதாக ருஜு அம்சம் இருக்கவேண்டுமென்றும் இல்லாவிடில் கூட்டுக்குடும்பச்சொத்தை ஒருவன் விக்கிறயம் செய்யக்கூடாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 25 மதராஸ் லா ஜர்னல் 27-ல் பிரிவிகௌன்ஸிலார் செய்திருக்கிற தீர்மானம் பிரதிவாதிகளுக்காக எடுத்துக்காட்டப்பட்டது. அந்தக்கேஸில் மூந்திய கடனுக்காகக் கிறயம் செய்யப்பட்டதாக வாதியே ஒப்புக்கொண்டமையால் ருஜுபாகத்தின்பொருப்பைப்பற்றி பிரிவிகௌன்ஸிலார் கீழ்கோர்ட் அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாகத் தீர்ப்பளித்ததில் பிரிவிகௌன்ஸிலார் ஸ்வதாவில் யாதொரு காரணங்களையும் சொல்லவில்லை. இந்தியர்களுக்கு மிகவும் முக்கியமான பாயிண்டைப் பற்றி யாதொரு காரணங்களையும் எடுத்துச்சொல்லாத பிரிவிகௌன்ஸிலாருடைய தீர்மானத்தை அனுசரிப்பது நியாயமல்ல. ஆகவே மதராஸ் ஹைகோர்ட் புல்பெஞ்சு தீர்மானத்தையும் அலகபாத் ஹைகோர்ட் சீவ் ஜஸ்டிஸ் ஸ்டான்லீ துரையவர்களுடைய அபிப்பிராயத்தையும் அனுசரித்து தாவா விக்கிறயங்கள் குடும்ப நன்மைக்காக அல்லது மூந்திய கடன்களைத் தீர்க்க ஏற்பட்டதென்று ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு பிரதிவாதிகளைச் சேர்ந்ததென்றும் ஆனால் அந்தப்படி பிரதிவாதிகள் திருப்திகரமாய் ருஜுப்படுத்தவில்லையென்று சொல்லவேண்டும்.

[illegible]-ஆதாரவால் 2-3 பிரதிவாதிகள் கிறயம்பெற்றசொத்துக்களைப்பற்றி வாதிகளுக்கு விசேஷ



மாகத் தீர்மானிக்கப்பட்டதென்று முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. பாலகிருஷ்ணனிடம் கிறயம்பெற்ற மற்ற பிரதிவாதிகளடைந்த அயிடங்களில் வாதிகள் கட்டுப்படவேண்டியவைகள் இன்னதென்றும் அவர்கள் கட்டுப்படத்தகாத விக்கிறயங்கள் இன்னதென்றும், செலவு விஷயமாகவும் ஹைகோர்ட்டார் அளித்த உத்தரவைப்பற்றி முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது.

5-வது அயிடம், ரூ 850க்கு விக்கிறயமாகியும் அதில் ரூ 364 முந்திய அடமானக்கடனுக்காகச் செல்லாகி ரூ 50 சில சர்க்கார் வரிக்காகச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே ரூ 414-ம் வாதிகளைக்கட்டுப்படுத்தும். மிகுதியான விக்கிறய ரூ-436-க்கு விவரம் காணப்படவில்லை. ருஜு அம்சம் யாதொன்றும் காணப்படவில்லை. ஆகவே தாவா விக்கிறயத்திற்கு ஒருபாகம் அவசியமாகவும் ஒருபாகத்திற்குக் காரணமில்லாமலுமிருக்கிறது. இவ்வித விக்கிறயம் பூராவும் ரத்தாகவேண்டியதா அல்லவாவென்று யோஜிக்குமிடத்து, ஒரு விதவை, மைனரின் கார்டியன் அல்லது ஒரு தர்மகர்த்தா இந்தவிதமான விக்கிறயம் செய்திருந்தால் கிறய நடவடிக்கை பூராவும் ரத்தாகி எம்மட்டில் கிறயத்துகை அவசியமானபடி உபயோகப்பட்டதோ அத்துகையை மட்டும் கிறயம்பெற்றவனுக்கு செலுத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கவேண்டியதாகும். ஆனால் ஒரு கூட்டுப்பங்காளி (தாயாதி) அவசியத்திற்கு மேலாக ஒரு சொத்தை விக்கிறயம் செய்து அவசியமானகடன் முதலிய செலவுகளைத்தீர்த்து மிகுதியான துகையை அனவசியமாய் உபயோகப்படுத்திக்கொண்டால் விக்கிறயம் பூராவும் ரத்தாகக்கூடாதென்றும் ஏனெனில் ஹிந்து லாப்படிக்கு கிறயம் செய்த பங்காளியின் சொத்துபாகமாவது கிறயதாரனுக்குச் சேரவேண்டியது நியாயமாகுமென்றும் ஆகையால் விக்கிறய காலத்தில் 1-ம் பிரதிவாதிக்கு ஷை சொத்தில் என்னபாத்தியதை இருந்ததோ அதைக்கிறயம் பெற்ற பிரதிவாதிகள் அடைய லாயக்குண்டென்றும், 5-வது அயிடத்தைக் கிறயம்பெற்ற பிரதிவாதிகளுக்கு அந்த சொத்தில் 3-ல் ஒருபாகம் கட்டாயம் பாத்தியமுண்டென்றும் வாதிக்கப்படுகிறது. அந்த வாதம் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். தவிற குடும்பத்தார் யாவரும் கட்டுப்படவேண்டிய, ரூ. 414 க்கு கிறயம்செய்த 1 ம் பிரதிவாதியின் பாகமாகிய மூன்றிலொருபங்குக்குமட்டும் கிறயம் பெற்ற பிரதிவாதி ஹக்குபாத்தியதையை உடையவனாகிறானென்ற 23 மதராஸ் 89-ன் தீர்மானத்தை பிரதிவாதிகளுக்காக எடுத்துக்காட்டப்பட்டது. அதாவது சொத்திலும் கடனிலும் 1 ம் பிரதிவாதிக்கு என்னபங்குண்டோ அம்மட்டில் விக்கிறயம் செல்லத்தகுமென்றும் அதற்குமேல் வாதிகளைக் கட்டுப்படுத்தாதென்றும் வாதிக்கப்படுகிறது. (அந்தவாதத்தை ஏற்றுக்கொண்டால் பிரதிவாதிகளுக்கு சொத்தில் $\frac{1}{3}$ பங்கு சேரவேண்டியதும் தவிற பிரதிவாதிகள் கடன் வகை ரூ. 414ல் 2/8 பங்கை வாதிகளுக்காகச் செலுத்தியும் அதை இழந்து போகவேண்டியதாகும்.) 23 மதராஸ் தீர்மானம் சரியான நியாயத்தை அனுசரித்து ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது. தவிற (1912) மதராஸ் லா டைமஸ் 192-ல் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் 23 மதராஸ் தீர்மானத்திற்குமாறான அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். கிறயம் பெற்ற பிரதிவாதிக்கு 1-ம் பிரதிவாதியினுடைய பாகம் அதாவது 3-ல் ஒருபாகம் நிலைக்கவேண்டியது நியாயமாகும். அந்த 3-ல் ஒருபாகமானது கடன் துகை ரூ 414-ல் 3-ல் ஒருபாகத்திற்குட்பட்டிருக்கவேண்டியது நியாயமே. அதுபோலவே மற்ற இரண்டு பங்காளிகளாலும் ரூ 414-ல் 2/3 பங்கு செலுத்தப்படவேண்டியது நியாயமாகையால் கிறயம்பெற்றவர்களுடைய துகையானது அந்தக் கடன் விகிதத்திற்கும் செல்லாகிவிட்டபடியால் அந்தக்கடனை கிறயம்பெற்ற பிரதிவாதிகள் வாதிகளுக்காகச செலுத்திவிட்டதாக் பாவித்து அந்தத்துகையை பிரதிவாதிகள் வாதிகளிடமிருந்து அடைய லாயக்குண்டு. ஆகவே இவ்விதமாய்க் கணக்கிட்டால் வாதிகள் பிரதிவாதிகளுக்கு கடன் விகிதத்திற்காக ரூ 276 செலுத்தவேண்டியதாகும். பிரதிவாதிகளுக்கு 5வது அயிடத்தில் மூன்றிலொருபாகம் உண்டென்றும் ரூ 276க்கு, வாதிகளுக்குச்சேரவேண்டிய மற்ற இரண்டு பாகத்தில் ஹக்கு ஏற்படவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. செலவு விஷயமாய் ஏற்பட்ட உத்தரவு முந்தியே குறித்தெழுதப்பட்டிருக்கிறது. XXVI M. L. J. 604

—:o:—

ஜஸ்டிஸ் சதாதிவய்யர் &
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

(கிருஷ்ணு ஜில்லா)

C. M. S. A. 189 to 196 of 1911

18 மார்ச்சு 1914

வெங்கடசாஸ்திரிலு Vs சீதாராமுடு

கிருஷ்ணு ஜில்லாவில் 300 எகர் விஸ்திரணமுள்ள பில்லபாடு என்னும் கிராமத்தை 1748-ல் வாதியின் முன்னோர்கள் இனும் கிராண்டாகப் பெற்று அந்த கிராமத்தில் 240 எக்கர்களைச்சொந்தமாக சாகுபடி செய்துகொண்டு வந்த குடிகளிடத்தில் நிலத்தீர்வையை(மேல்வாரத்தைமட்டும்) வசூலித்துவந்து நினைவுள்ள காலமுதல் சாகுபடிக்கு லாயக்கில்லாமல் தரிசாய்க்கிடந்த 60 எகர் நிலங்களை வாதியின் முன்னோர்கள் பற்பலவகையான குடிகளுக்கு சாகுபடிசெய்தனுபவிக்கும் பொருட்டு ஒப்படைத்துவந்து ஆனால் அவர்களுக்கு அந்த நிலங்களில் குடிவார பாத்தியதையை உண்டாக்காமல் 1317-ம் பசலியில் அனுபவித்து வந்த குடிகள் அந்த நிலங்களை விட்டு விலகிக்கொண்ட உடன் அவைகளை பிரதிவாதிகளுக்கு ஒருவருஷகாலத்திற்கு சாகுபடிக் குத்தகைக்காக ஒப்படைத்து ஒருவருஷகாலம் முடிந்ததும் அதாவது 1908எப்பிரல் 1ல் இனும்தாராகியவாதி, பிரதிவாதிகளைஷை நிலங்களின் சுவாதீனத்திலிருந்து வெளிப்படுத்தும்பொருட்டு கூடிவர்டா டி-மு கோர்ட்டில் இஜக்ட்மெண்ட் பிராது கொடுத்ததில் பிரதிவாதிகள் எதிர் ஆன்ஸரில் இந்த தாவா ஸிவில் கோர்ட்டில்பிடிக்கத்தகாதென்றும் தாவா நிலங்கள் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 3-வது பிரிவின் 2 (d)-யில் அடங்கிய எஸ்டேட் நிலமாகச் சொல்லப்படவேண்டுமென்றும் எஸ்டேட் நிலத்தின் விஷயமாய் யாதொரு தாவா ரெவினியூ கோர்ட்டில் செய்யப்படவேண்டுமேயொழிய ஸிவில் கோர்ட்டில் செய்யக்கூடாதென்றும் ஏனெனில் பிரதிவாதிகள் எஸ்டேட்டைச் சேர்ந்த சாகுபடிக்கு லாயக்கான நிலத்தை அனுபவிக்கிறபடியால் அதை விட்டு அவர்களை வெளிப்படுத்த ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்யவேண்டுமென்றும் ஆக்ஷேபித்தார்கள். அந்த எதிர்வாதத்திற்குச் சமாதானமாக தாவா இனும் நிலங்களை எஸ்டேட் நிலங்களல்லவென்றும் அதாவது ஆக்டின் கருத்துப்படி இனுமளிக்கப்படும் நிலத்தில் தீர்வையை வசூலிக்கும் பாத்தியதையைத்தவிர வேறு எவவித ஸ்வதந்தரமும் அந்த நிலங்களில் ஏற்படாதாகையால் தாவா இனும் நிலங்கள் அவ்விதமாய் வாதிகளுக்கு கிராண்டானதல்லவென்றும் அப்படிக்கு இனும் நிலங்கள் ஆக்டின் கருத்துப்படி கிராண்டானலும் தாவா நிலங்களாகிய 60 ஏகராக்களும் கிராண்டுக்கு முன்னும் கிராண்டின் காலத்திலும்தரிசாய்க்கிடந்தமையால் அவைகள் எஸ்டேட்டில் சேர்ந்ததாகாதென்றும் அல்லது அவைகளை பிரதிவாதிகளுக்குமுன் அனுபவித்தவர்கள் விட்டு விலகிப்போனதால் வாதி அதைக் கைவசப்படுத்திக்கொண்ட காரணத்தையிட்டு அவைகள் அது முதல் இனும்தாருடைய சொந்த நிலங்களுக்கு ஒப்பாகி எஸ்டேட் என்னும் நிலமையிலிருந்து நீங்கிவிட்டதாகச் சொல்லப்படவேண்டுமென்றும் அப்படிப்பட்ட நிலங்களின் விஷயமாய் செய்யும் தாவாவை ஏற்றுக்கொள்ள ஸிவில் கோர்ட்டாரின் அதிகாரவரம்பு எடுபட்டுப் போகவில்லையென்றும் வாதிகளுக்காகச் சொல்லப்பட்டது. டி-மு கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய் டிக்கிரியளித்தும் ஜில்லாகோர்ட்டார் அப்பீலில் தாவா நிலங்களை எஸ்டேட் நிலங்களுடன் சேர்ந்ததாக (எஸ்டேட் நிலங்களாக) மதித்து அவைகள் சாகுபடிக்கு லாயக்கான ரயட்டிலாண்டுகளாய் தொடர்ந்து அனுபவிக்கப்பட்டுவந்தமையாலும் கிராண்டு காலத்தில் வாதியின் முன்னோருக்கு அந்த நிலங்களில் குடிவாரபாத்தியதையும் இருந்ததாக ஏற்படாதபடியாலும் ஆகவே தாவா நிலங்களில் வாதிகளுக்கு கிராண்டினுல் மேல்வாரபாத்தியதைமட்டும் ஏற்பட்டதால் அவைகள் எஸ்டேட் நிலங்களாகவே பாவிக்கப்பட்டு இந்ததவாரெவினியூகோர்ட்டில் செய்யப்படவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு பிராதை சரியானகோர்ட்டில் தாகல் செய்யவேண்டுமென்று சொல்லி வாபிஸ் செய்து விட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் ஜில்லாகோர்ட் அபிப்பிராயம் சரியென்று தீர்மானித்து 2 வது அப்பீலைத்தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய காரணங்களாவன:-

வாதிக்காக 20 மதராஸ் லா ஜர்னல் 290-ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானம் எடுத்துக்காட்டப்



பட்டது. ஆனால் அதில் சொல்லப்பட்ட நியாயமானது பின்வரும் கருத்துக்குமேல் போகவில்லையென்று சொல்லவேண்டும். அதாவது:— ஒரு கிராமம் முழுவதும் தரிசாகக்கிடந்து அதேஸ்திதியில் கிராண்டாகக் கொடுக்கப்பட்டாலும் அல்லது ஒரு கிராமத்தில் குறித்த ஒரு பாகமானது தரிசாகக்கிடந்து அந்தபாகம் மட்டும் மைனர் இனும் கிராண்டென்று சொல்லப்படுகிறவிதமாய் கிராண்டாகக் கொடுக்கப்பட்டாலும் அப்படிப்பட்ட நிலங்கள் எஸ்டேட் ஆக்ட் 3-வது பிரிவின் க்ளாஸ் 2 (d)-யின் கருத்தின்படி எஸ்டேட் நிலமென்று சொல்லத்தகாதென்று 20 மதராஸ் லா ஜர்னல் தீர்மானத்தில் ஏற்பட்டிருக்கிறதேயொழிய தாவாகேஸின் சந்தர்ப்பத்திற்குதவக்கூடிய தீர்மானமாகாது. தாவா கேஸில் கிராண்டுகாலத்தில் கிராண்டிலடங்கிய 300 ஏகராவில் 240 ஏகர் குடிவார பாத்தியதையுடன் ரயட்டுகளுடைய அனுபோகத்திலிருந்திருக்கிறது. 60 ஏகர் மட்டும் தரிசாய்க் கிடந்திருக்கிறது. ஆகவே வாதியின் முன்னோர் பெற்ற கிராண்டானது 20 மதராஸ் லா ஜர்னல் தீர்ப்பில்கண்ட விதமான கிராண்டல்ல. அதாவது முழுவதும் தரிசாய்க்கிடந்த மேல்வாரம் குடிவாரம் ஆகிய இரண்டு வகையான பாத்தியதையும் கூடிய நிலத்தைப்பற்றிய கிராண்டல்ல. ஆகையால் தாவா கிராண்டிலடங்கிய 60 ஏகர் தரிசு நிலங்கள் கிராண்ட் காலத்தில் எஸ்டேட்டைச் சேர்ந்ததாகச் சொல்லப்படவேண்டும். இனும்தாருடைய சொந்த அனுபோகத்திலிருக்கிற நிலங்கள் எஸ்டேட்டைச் சேர்ந்ததாகச் சொல்லப்படுவதுபோல் நினைவுள்ள காலமுதல் தரிசாய்க்கிடந்த கிராண்டிலடங்கிய நிலங்களும் எஸ்டேட்டைச்சேர்ந்த நிலங்களென்று அழைக்கப்படவேண்டும். ஏனெனில் கிராண்டினுல் நிலவருமானம் அதாவது மேல்வாரபாத்தியதை மட்டும் அளிக்கப்பட்டதாக ஏற்படுகிறது. குடிவாரபாத்தியதையும் சேர்த்துக் கொடுக்கப்பட்டதாக கிராண்டில் ஸ்பஷ்டமான வசனங்களில்லாவிடில் அல்லது கிராண்டுகாலத்தில் இனும்தாருக்கே அந்த நிலங்களில் குடிவாரபாத்தியதை இல்லாவிடில் கிராண்டினுல் மேல்வார பாத்தியதைமட்டும்அளிக்கப்பட்டதாக அனுமானிக்கவேண்டும். கிராண்டிலடங்கியசிலபாகங்கள் தரிசாய்க்கிடந்து அதில் இனும்தாருக்கு குடிவாரபாத்தியதையை யாவருக்கும் உண்டாக்க அதிகாரமிருந்தபோதிலும் இனும்தாருக்கே அந்தத்தரிசு நிலங்களில் குடிவாரபாத்தியதை இருப்பதாகச் சொல்லக்கூடாது. அவைகளை சாகுபடிக்காக ஒப்படைத்து அதில் இதராளுக்குக் குடிவாரபாத்தியதையை உண்டாக்கலாம். அல்லது அவைகளைத் தம்முடைய சொந்த அனுபோகத்தில் வைத்துக் கொண்டு தன்னுடைய வேலைக்காரர்களைக் கொண்டு சாகுபடிசெய்து வந்து அவ்விதமாகக் குடிவார பாத்தியதையைத் தம்மிடமே வகிக்கும்படி செய்து கொள்ளலாம். இரண்டு விதத்தில் அந்த நிலங்களைச் சாகுபடிக்காக ஒப்படைக்கு மட்டும் (அவைகளுக்குக் குடிவாரபாத்தியதையை ஏற்படுத்துமட்டும்) அவைகள் இனும்தாருக்குச் சொந்தமாகியும் தரிசாய்க் கிடக்கவேண்டும். அப்படி தரிசாய்க்கிடந்தால் அதில் இனும்தாருக்கு குடிவாரபாத்தியதை ஏற்படாது. குடிவாரமென்றால் நிலச்சாகுபடியில் நேரான சம்பந்தமிருக்கவேண்டும். தரிசாய்க்கிடந்தநிலங்களிலும் குடிவாரபாத்தியதையாருக்காவது இருப்பதாகச் அவசியமாய் சொல்லவேண்டுமென்று யூகிக்கத்தகாது. ஒருவருக்கும் குடிவாரபாத்தியதை ஏற்படாததரிசு நிலங்களில் குடிவார பாத்தியதை நிலச்சுவான்தாருக்கிருப்பதாக யூகிக்கவேண்டுமானால் ஒரு நிலத்தைச் சாகுபடிசெய்த ரயட்டானவன் அதைவிட்டுப் போனபின் சுவான்தார் அதைக் கைப்பற்றிக்கொண்டால் சுவான்தாருக்குக் குடிவாரபாத்தியதை மாறிவிட்டதாகச் சொல்லவேண்டியதாகும். அந்த நிலங்கள் சுவான்தாருடைய சொந்த நிலங்களுடன் சேர்ந்துபோனதாக ஏற்படவேண்டும். இதனால் குடிவார பாத்தியதையானது சுவான்தாரிடத்தில் வகித்துப்போகிறது. சட்டத்தின் கருத்து அவ்விதமாகக்குடிவாரபாத்தியதை மாறி சுவான்தாரிடம் செல்வதைத் தடுப்பதே முக்கியமான நோக்கமாதலால் விட்டுப்போன நிலங்களை மற்றவர்களிடம் ஒப்படைக்கச்செய்து குடிவார பாத்தியதையைத் தன்னிடம் வைத்துக்கொள்ளாமல் இதராளுக்கு மாற்றவேண்டியது சுவான்தாரின் கடமையென்பது எஸ்டேட் ஆக்டின் உள் கருத்தாகும். ஆகவே தாவா நிலங்களை பிரதிவாதிகளுக்கு முன் அனுபவித்தவர்கள் விட்டுப்போனபின் பிரதிவாதிகளிடம் அதை ஒப்படைத்தமையால் அதில் குடிவார பாத்தியதை பிரதிவாதிகளுக்கு மாற்றப்பட்டதாகச் சொல்லவேண்டும். பிரதிவாதிகளுக்கு அதில் சாசுவதமான

குடிவார பாத்தியமில்லையென்று ஒருவருஷகாலத்திற்கு மட்டும் ஒப்படைக்கப்பட்ட விஷயத்தை தவிட்டுச் சொல்லப்பட்டாலும் தாவா நிலம் ரயட்டிலாண்டென்று தான் சொல்லப்படவேண்டும். அதாவது சாகுபடிக்கு லாயக்கான நிலமென்று சொல்லப்படவேண்டும். ஆகவே அது எஸ்டேட் நிலமென்று சொல்லப்படவேண்டும். ஒருநிலம் இனாம்தாருடையசொந்தஅனுபோகத்திலுமில்லாமல் யாதொருவருடைய சாசுவதமான குடிவார பாத்தியதையிலுமில்லாமலிருக்கும் பட்சத்தில் அவைகள் எஸ்டேட் நிலமாகமாட்டாதென்று 26 மதராஸ் லா ஜானல் 285-ல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அது சரியான அபிப்பிராயமல்லவென்று அதிக வணக்கத்துடன் சொல்லவேண்டியதாகும். அதே கேசில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் வித்தியாஸமான அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். சாசுவத பாத்தியதையில்லாமல் பழயதரிசை ஆக்டுக்கு முன் அனுபவித்து வந்து காலத்தவணைமுடியாதபடி சுவாதீனத்திலிருக்கிற ரயட்டை எஸ்டேட் ஆக்ட் 153வது பிரிவில் சொல்லப்பட்ட காரணங்களல்லாத வேறு முகாந்தரத்தால் வெளிப்படுத்தவேண்டுமானால் ஸிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமென்று 26 மதராஸ் லா ஜர்னல் கேசின் தீர்ப்பினால் ஏற்படுகிறது. அது தாவா கேசின் சந்தர்ப்பத்திற்குதவக்கூடியதல்ல. பிரதிவாதிகளுக்கு முன் அனுபவித்தவர்கள் விட்டுப்போன உடன் அந்த நிலங்கள் இனாம்தாருடைய சொந்த நிலத்தோடு ஐக்கியமானபோதிலும் அவைகள் ரயடிலாண்டாகவே மதிக்கப்பட்டு எஸ்டேட் நிலமென்ற நிலைமையை இழக்க நியாயமாகாது. ஆகவே தாவா கிராமத்தில் முழுவதிலும் இனாம்தாருக்கு மேல்வாரம்மட்டும் கிராண்டாகியிருப்பதாலும் இனாம்தாருக்கு அதில் முந்தியே குடிவார பாத்தியதை இல்லாதபடியாலும் தாவா கிராமம் எஸ்டேட் என்றும் அதிலடங்கிய 60 ஏகரும் எஸ்டேட்டைச்சேர்ந்த நிலமென்றும் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியே. ஆக்டின் 23-வது பிரிவில் கண்டபடி பழயதரிசாக ஏற்படாவிட்டால், அதாவது தொடர்ச்சியாய் ஆக்டுக்குப்பின் 10 வருஷம் அல்லது ஆக்டுக்குமுன்னும பின்னுமாகத் தொடர்ச்சியாய் 10 வருஷம் அல்லது ஆக்ட்டுக்கு முன் தொடர்ச்சியாய் 20-வருஷம் சாகுபடியன்னியில் கிடந்துபழயதரிசென்றகருதிலடங்கினாலொழிய நினைவுள்ள காலமுதல் தரிசாய்க்கிடந்த காரணத்தால் எஸ்டேட்டிலுள்ள தரிசு நிலங்கள் ரயடிலாண்டென்று சொல்லப்படவேண்டும். வெகுகாலம் தரிசாய்க்கிடந்த நிலங்களில் இனாம்தாருக்குறிய பாத்தியதையானது குடிவாரம்தாருக்குத்தன்னுடையவசத்திலுள்ளநிலத்தின் பாத்தியதைக்குச் சமானமாகயில்லையென்று 29 பம்பாய் 120ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தாவாநிலங்கள்ரயடிலாண்டாகும்-இனாம்தாருடையசொந்தநிலமாகாது. கிராண்டுகாலத்தில்அவைகள் இனாம்தாருடையசொந்த அனுபோகத்தில் சென்ற நிலங்களல்ல. ஆகவே அவைகள் எஸ்டேட் நிலத்தைச் சேர்ந்த நிலமாகும். அதைப்பற்றிய வழக்குகள் ரெவினியூ கோர்ட்டில் செய்யப்படவேண்டும். தாவா நிலங்களை சாசுவத பாத்தியதையில்லாமல் ஒரு வருஷத்திற்குமட்டும் சாகுபடிக்கு ஒப்படைத்து வந்தாலும் அந்த நிலங்களில் சாசுவத பாத்தியதை வாதிக்கு ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது. ஒப்படைக்கிற பொழுது தன்னுடைய சொந்த நிலமென்று தெளிவான வசனங்களால் சொல்லி சாகுபடிக்குவிடப்பட்டதாகருஜுபாகமில்லை. தாவா நிலங்களை சாகுபடி செய்து வருகிறவர்களை சுவாதீன பாத்தியதையை ஒருவருக்குப்பின் ஒருவாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிலத்தைவிட்டுப்போன உடன் வாதி அதைக் கைப்பற்றிக் கொண்டபோதிலும் விட்டுப்போனவனுக்கு சாசுவத பாத்தியதை கிடையாதபடியால் வாதிக்கும் அவ்வித பாத்தியதை ஏற்படாது. (வேரொருவருக்கு ஒப்படைக்குமட்டும் வாதி அவைகளை அனுபவித்து வந்த காலத்தில் சாசுவத பாத்தியதையுண்டாகாது.) ஆகவே தாவா ரயடிலாண்டுகளிலிருந்து டெனெண்டை வெளிப்படுத்த தாவா செய்யவேண்டுமானால் ரெவினியூ கோர்ட்டில் பிராதுகொடுக்கவேண்டுமென்று 25 மதராஸ் லா ஜர்னல் 617, 21 I. C. 916-லும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வாதி செய்த 2-வது மனு அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது நியாயமென்று தீர்மானிக்கபட்டது.

இவ்வித அபிப்பிராயங் கொடுத்த ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுக்கு ஒற்றுமையாக ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் ஆக்டின் 8-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற புறகுடையம்சத்திற்கு தாவா நிலங்கள் அடங்காதபடியால் அதாவது தாவா நிலங்களின் குடிவசர பாத்தியதையை வாதிகள் வாரிஸ் பாத்தியதையாலாவது அல்லது இறைய பாத்தியதையாலாவது சம்பாதிக்காததால் தாவா நிலங்கள் எஸ்டேட் நிலமென்ற நிலைமையை இழக்காதென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் அப்பீல் தள்ளுபடியாகவேண்டியதென்று தீர்மானங்கொடுத்தார்கள். மற்ற பல காரணங்களை விவரிக்க அவசியமாயினும் ஜர்னலின்இடச்சுருக்கத்தால்எடுத்துகாட்டச்சந்தர்ப்பப்படவில்லை. முடிவான அபிப்பிராயமொன்றாயிருக்கும் சந்தர்ப்பங்களில் காரணங்கள் பற்பல விதமாய் வெவ்வேறு தீர்மானங்களில் சொல்லப்பட்டபோதிலும் இடச்சுருக்கத்தால் காரணங்களையெல்லாம் எடுத்துரைக்கக் கூடவில்லை. XXVI M. L. J. 585

—:o:—



OFFICE 1914 MADRAS

## புல்பெஞ்சு கேஸ்.

**சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ**

**கிருஷ்ணா ஜில்லா**

**S. A. 2003 of 1911—1 ஏப்பிரல் 1913**

*பாலாம்பா Vs கிருஷ்ணய்யா.*

வெங்கடரத்னம் என்றமூலபுருஷன் ரூ 2000க்கு-ஒரு மரணபண்டில் சேர்ந்து தன்னுடைய ஜீவதசைமட்டுக்கு ஒரு மரடும் ஷை பண்டுக்குரூல்படி கட்டணத்தொகை செலுத்திவருவதாய் ஒப்புக்கொண்டதின்பேரில் கம்பெனியார் மூலபுருஷனுடைய விருப்பத்தின்படிபாலிஸியை அவர்பேருக்கே பிறப்பித்து அதனால் ஏற்படும் தொகைரூ 2000-யும் மூலபுருஷனுடைய மரணத்திற்குப்பின் அவன் பெண்சாதிக்காவது அல்லது பெண்சாதிக்கும் மக்களுக்காவது அல்லது அவர்களில் யாதாமொருவருக்காவது செலுத்திவிடுவதாய் ஒப்புக்கொண்டார்கள். வெங்கடரத்னம் என்ற மூலபுருஷன் காலஞ்சென்றபிறகு அவருடைய டிக்கிரீ பாக்கிதாராகிய வாதி கம்பெனியாரால் செலுத்தப்படவேண்டிய தொகையில் மூலபுருஷனுடைய மகளாகிய 1-ம் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய பாகமாகிய ரூபா 400-யும் சேர்த்துத் தன் டிக்கிரீ பாக்கிக்காக ஜப்திசெய்ய லாயக்குண்டென்று தீர்மானமடையும் பொருட்டு மசுலிப்பட்டணம் டி-மு கோர்ட்டில் தாவா செய்தார். மூலபுருஷனுடைய இரண்டு ஆண்மக்களும் 2-3 பிரதிவாதிகளாய்ச்சேர்க்கப்பட்டிருந்தார்கள். பிரதிவாதுகள்எதிரான்ஸரில், 1874ம் வருஷத்திய III-வது ஆக்டின்6வதுபிரிவில்ஏற்பட்டிருக்கிற அம்சங்களை ஆதாரமாகக்காட்டி "விவாகமான யாதொருவன் தான்மரணபண்டில்சேர்ந்துஜீவதசைமட்டும் ஒழுங்காய் ஏற்படுமவாய்தாத்தொகைகளைக் கட்டிவருவதாய் ஒப்புக்கொண்டு அதற்காகக் கம்பெனியார் தன் மரணத்திற்குப்பின் செலுத்தவேண்டிய தொகையைத் தன் பெண்சாதியின் நன்மைக்காகவும் அல்லது பெண்சாதி பிள்ளைகளின் நன்மைக்கென்றாவது அல்லது அவர்களில் யாதொருவருடைய நன்மைக்கென்றாவது ஏற்பாடுசெய்திருந்தால் அவ்வித நன்மையை அடைய பாத்தியமுள்ளவர்கள் ஜீவனோடிருந்தால் கம்பெனியார்செலுத்தவேண்டிய தொகையில் மூலபுருஷனுக்கு வேறுவிதமான பாத்தியதையும் ஒறக்கும் கிடையாதென்றும் மூ[illegible]டைய பாக்கிதார்களுக்கும் அத்தொகையின்பேரில் தொடர லாயக்கில்லை"யென்றும் விதிக்கப்பட்டிருக்கிறதால் அந்தஆக்டின்(Married Woman's Property Act III of 1874-விவாகமான ஸ்திரீகளின் சொத்தைப்பற்றி ஏற்பட்ட சட்டம்) 6-வது பிரிவினால் வாதி 1-ம் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய பங்கு விகிதத்தையும் சேர்த்து ஜப்திசெய்ய நியாயமில்லையென்று ஆக்ஷேபித்தார்கள். இந்த வியாஜ்ஜியம், டி-மு கோர்ட் தீர்மானத்தின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலாகி, அங்கு 35 மதராஸ் 162-ல் ஏற்பட்ட தீர்மானத்தை அனுசரித்து 1874-ம் வருஷத்திய III-ஆக்டானது விவாகம் புரிந்த ஹிந்து ஸ்திரீயாகிய 1-ம் பிரதிவாதிக்கு உதவக்கூடிய சட்டமுறையல்லவென்று ஷை ஆக்ட் 2-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் 1-ம் பிரதிவாதியின் எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளிக்கப்பட்டது. அதன்பேரில் 1-ம் பிரதியாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஒரே அபிப்பிராயமாக இந்தக்கேஸில் ஏற்படும் பாயிண்டுகளைப்பற்றி புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்காக ரிபர் செய்தனுப்பின உத்தரவில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் சொன்ன முக்கியமான வியவகார நியாயங்களாவன:—

மூலபுருஷன் தன் ஸ்வயார்ஜிதத்திலிருந்து மரணபண்டுக்குறிய கட்டணத்தைச் செலுத்தவந்தாரென்று ருஜுபாகத்தினால் ஏற்படுகிறபடியால் அதை யதார்த்தமென்று ஏற்றுக்கொள்ளவேண்டியது நியாயமாகும். புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்காக ரிபர் செய்யவேண்டிய பாயிண்டானது அதிக முக்கியமானது. அதாவது:- ஒரு ஹிந்துபுமானுடைய மரணத்திற்குப்பின் கம்பெனியார் அவருடைய பெண்சாதிகளுக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்டிருக்க அந்தத் தொகையை அவருடைய மனைவியும குழந்தைகளும் அல்லது அவருடைய குழந்தைகளாகிலும் அடைய பாத்தியமுண்டா அல்லது அவைகள் ஆண்வாரிஸ்களுக்குமட்டும் சேரத்தக்கதாய் எஸ்டேட்டுடன் சேரவேண்டிய சொத்தாகுமாவென்பது தான் இந்தக் கேசில் தீர்மா

ணிக்கவேண்டிய முக்கியமான விஷயமாகும். 35 மதராஸ் 162-ல் இத்தகைய சந்தர்ப்பத்தில் மரணபண்டார் செலுத்தவேண்டிய தொகைக்கு ஆண் வாரிஸ்கள் உறித்தானவர்களென்றும் 1874-ம் வருஷத்திய 3-வது ஆக்டின் அம்சங்கள் 1-ம் பிரதிவாதியாகிய மூலபுருஷனுடைய மகளுக்கு உதவாதென்று ஷை ஆக்டின் 2-வதுபிரிவையனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் நியாயத்தைத் திரும்பவும் ஆலோசனை செய்வது அவசியமென்று சொல்லவேண்டும். தாவா வியவகாரத்தை 4 விதமாகப் பிரித்து யோஜிக்கலாம். (1) காண்டிராக்ட் ஆக்ட்படிக்கு கம்பெனியார் பெண்சாதிக்கும் பிள்ளைகளுக்கும் செலுத்துவதாய் ஒப்புக்கொண்டபடியால் அந்த ஒப்பந்தத்தைப் பெண்சாதிகளும் பிள்ளைகளும் நிறைவேற்றும்படி தாவா செய்யலாமா(2) 1874 ம் வருஷத்திய III வது ஆக்டின் 6வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற நிபந்தனையின்படி 1-ம் பிரதிவாதியின் பாகத்தை மூலபுருஷனாகிலும் அவனுடைய பாக்கிதார்களாகிலும் வேறு விநியோகம் செய்யவாவது தொடரவாவது லாயக்கில்லையென்று சொல்லத்தகுமா? (3) மேற்கூறிய இரண்டு ஆக்டுகளின் அம்சங்களைப் பிரயோகிக்காமல் பெண்சாதியும் பிள்ளைகளும் மூலபுருஷனுடைய பந்துகளாகிறபடியால் அந்த நிலைமையைக் கொண்டு கம்பெனியார் மூலபுருஷனுடன்செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி 1-ப் பிரதிவாதி அபேக்ஷிக்கலாமா (4) டிரஸ்ட்ஆக்டின்ஷரத்துக்களின்படிகம்பெனியார் டிரஸ்டியாகவும்பெண்சாதி பிள்ளைகள்டிரஸ்டுகளிடம்ஒப்புவிக்கப்பட்டசொத்தை அடையத்தக்கவர்களென்றும் மூலபுருஷன் டிரஸ்டை ஏற்படுத்தினவராகவும் பாவிக்கப்பட்டு டிரஸ்டின் நன்மையை அடையப் பாத்திரர்களான பெண்சாதி பிள்ளைகள் டிரஸ்டியின்பேரில் தாவா செய்து சேரவேண்டிய தொகையை அடைய நியாயமுண்டா.

இந்த நான்கு பாயிண்டுகளையும் முறையே கவனித்துப்பார்க்கவேண்டிய தவசியமாகும். முதல் பாயிண்டைப்பற்றி கவனித்தால் 4 மதராஸ் 137-ல் ஒப்பந்தத்திற்குப் பார்டியல்லாத மூன்றுவது மனிதனும் ஒப்பந்தம் செய்துகொண்டவன் பேரில் தொடர்ந்து தாவா செய்யலாமென்றும் ஒப்பந்தத்திற்குறிய பிரதிபிரயோஜனமானது ஷை மூன்றுவது மனிதனால் செலுத்தப்படாத விஷயம் அதற்கு பாதகமாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்கேசில் வாதிக்காக அவனுடைய சிறியதாயார் தொகை செலுத்திவந்திருக்க அது வாதியாகிய மூன்றுவது மனிதனிடமிருந்து சென்றதாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் ஒப்பந்தம் செய்துகொண்ட மூன்றுவது மனிதனுடன் எதிரி ஒப்பந்தம் செய்துகொண்டதாக யூகித்து மூன்றுவது மனிதனுக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றும் அதிகாரம் ஏற்படுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதும் தவிர, காண்டிராக்ட் ஆக்ட் 2 (d)-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரதிப்பிரயோஜனம் செலுத்தினவனுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய கட்டாயமில்லையென்றும் பிரதிப்பிரயோஜனம் யாரால் செலுத்தப்பட்டாலும் மூன்றுவது மனிதன் உடன்படிக்கையின் பார்ட்டியாக நின்று தாவாசெய்யலாமென்றும், ஷை தீர்மானத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர அந்தக்கேசில் தொகை செலுத்தின சிறிய தாயாருக்கும் வாதிக்குமுறிய பந்துத்வத்தை உத்தேசித்துக் கோர்ட்டார் வாதிக்கு ஒப்பந்தத்தின் பார்ட்டியாகிற நிலைமையில் தாவாசெய்யும் பாத்தியதை உண்டென்று (1868) 2 Lev 210-ஐ அனுசரித்துத் தீர்மானித்திருக்கிறார்கள். அதே தீர்மானத்தில் ஜஸ்டிஸ் கிண்டர்ஸ்லி துரையவர்களின் அபிப்பிராயத்தில் தொகை செலுத்தினவருடைய பந்துத்துவம் முக்கியமான விஷயமல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவருக்காக (ஒருவருடைய நன்மைக்காக) மற்றொருவர் தொகை செலுத்திவந்தாலும் இருவருக்கும் பந்துத்வமில்லாவிடினும் நன்மையடையவேண்டிய மூன்றுவது மனிதன் ஒப்பந்தத்தில் பார்ட்டியாக பாவிக்கப்படலாமென்று ஜஸ்டிஸ் கிண்டர்ஸ்லி துரையவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மேற்கூறிய 4 மதராஸ் கேசின் தீர்மான அபிப்பிராயமானது, 6 மதராஸ் 351-ல் அனுசரிக்கப்பட்டுமிருக்கிறது. ஆகவே 4 மதராஸ் தீர்மானம் சரியான சட்டமுறையாக ஏற்பட்டால் பெண்சாதியும் பிள்ளைகளும் கம்பெனியார் மூலபுருஷனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி வற்புறுத்தலாம். அதாவது கம்பெனியார் செலுத்தவேண்டிய தொகையை அடைய பாத்தியமுண்டு. (மூலபுரு-



ஷனுடைய பாக்கிதார்கள் அதன்மேல் தொடர நியாயமாகாது) மேற்கூறிய இரண்டு மதராஸ் கேஸ்களின் பழயகாலத்து அபிப்பிராய நியாயங்களை பல்லாக்-முல்லா என்ற இரண்டுவியாக்கியானகர்த்தாக்கள் பிசகென்று ஆக்ஷேபித்திருக்கிறார்கள். அதாவது காண்டிராக்ட் ஆக்ட் 2 (d)யில் ஒப்பந்தக்காரன் பிரதிப் பிரயோஜனமாகிய தொகையைச் செலுத்தியிருக்கவேண்டிய தவசியமில்லையென்று விதிக்கப்பட்டிருக்கிறபோதிலும், மேற்கூறிய மதராஸ் தீர்மானங்களில் காண்டிராக்ட் ஆக்ட் 2 a, 2 b, 2 eயில் சொல்லப்பட்டிருக்கிற அம்சங்கள் கவனிக்கப்படவில்லையென்றும், அதாவது நன்மையடையவேண்டிய மூன்றுவது மனிதனுடைய சம்மதியில்லாவிடில் அவனை ஒப்பந்தத்திற்குப் பார்டியென்று சொல்லத்தகாதென்றும், அதாவது கம்பெனியார் மூன்றுவதுமனிதனிடம் ஒப்பந்த விஷயத்தைப்பற்றித் தெரிவித்து அவர் சம்மதித்திருந்தால் மட்டும் அவரைப் பார்ட்டியாக பாவித்து நன்மை லாபத்திற்குறிய பரிகாரம் தேட அதாவது ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி தாவா செய்ய அனுமதிகொடுக்கலாமென்றும் அவ்வித சம்மதியில்லாமலும் தகவல் தெரியாமலுமிருக்கிற 3 வது மனிதனுக்கு தாவா செய்யும் பாத்தியதை அல்லது தொகையை அடையும் பாத்தியதை ஏற்படாதென்றும் அந்த இரண்டு வியாக்கியான கர்த்தாக்கள் ஆக்ஷேபித்திருக்கிறார்கள். இந்தக்கேசில் ஒப்பந்தத்தைப்பற்றி பெண்சாதிபிள்ளைகளின் சம்மதம் கேட்கப்படவுமில்லை. அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவுமில்லை. ஆகையால் காண்டிராக்ட் ஆக்டில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவன் என்ற பதத்திற்கு அவர்கள் யோக்கியமாக மாட்டார்கள். என்றாலும் 1881-ம் வருஷத்தில் ஏற்பட்டிருக்கிற 4 மதராஸ் தீர்மானத்தின் நியாயத்தை அனுசரிப்பது உசிதமாகும். வியாக்கியான கர்த்தாக்களின் அபிப்பிராயம் மாறாக இருந்தாலும் மேற்கூறிய தீர்மானம் கோர்ட்டாரால் மாற்றப்படவில்லை. ஆக்டின் வசனங்களை அர்த்தப்படுத்தச் சொன்னால் வியாக்கியான கர்த்தாக்களுக்கு ஒற்றுமையான அபிப்பிராயம் கொடுக்கவேண்டுமானாலும் மாறுதலடையாத பழயதீர்மானங்களையே அனுசரித்து அபிப்பிராயப்படுவது நியாயமென்று சொல்லவேண்டும். ஆகவே முதல் பாயிண்டைப்பற்றி 1-வது பிரதிவாதிக்கனுகூலமாய்த் தீர்மானம் கொடுக்கலாம்.

இரண்டாவதாக 1874 ம் வருஷத்திய III-வது ஆக்ட் 6-வது பிரிவின் அம்சங்கள் 1-ம் பிரதிவாதிக்கு உதவுமா அல்லது 2 வது பிரிவால் அவளுக்கு அந்தப்பிரிவின் அம்சம் பயனற்றதாகுமாவென்று யோஜிக்குமிடத்து 2-வது பிரிவின் அம்சங்கள் 1-ம் பிரதிவாதியை பாதிக்காதென்றும் ஆகையால் 6 வது பிரிவின் அம்சத்தால் 1-ம் பிரதிவாதியின் பாகத்தை மூலபுருஷனுடைய பாக்கிதார்கள் ஜப்திசெய்யக் கூடாதென்று சொல்லவேண்டும். 2 வது பிரிவைப்பற்றி மூன்று விதமாய் சமாதானம் சொல்லலாம். (1) 6 வது பிரிவானது விவாகம் புரிந்த எந்த புருஷனும் செய்துகொள்ளும் மரணபண்டின் உடன்படிக்கை ஏற்பாட்டைப்பற்றி பிரஸ்தாபிக்கிறது. 2-வது பிரிவில் விவாகம் புரிந்த ஹிந்து ஸ்திரீக்கு இந்த ஆக்டின் அம்சங்கள் ஏற்காதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 6-வது பிரிவுக்கு 2-வது பிரிவு இடையூறாகாது. (2) 2-வது பிரிவின் அம்சத்தால் ஒரு விவாகமான ஹிந்து ஸ்திரீக்கு மரணபண்டின் ஏற்பாட்டில் கிடைக்கக்கூடிய நன்மை நீங்கிவிட்டதாகச் சொன்னாலும் மரணபண்டில் ஏற்பாடுசெய்துகொண்ட மூலபுருஷனுடைய மக்களுக்குறிய நன்மையாதொன்றும் நீங்க நியாயமில்லை. மக்களை விவாகம் புரிந்த ஹிந்து ஸ்திரீயின் ஸ்தானத்தில் அதாவது மூலபுருஷனுடைய பெண்சாதியின் நிலைமையில்வைத்து 2 வது பிரிவை மக்களுக்கு விரோதமாய்ப் பிரயோகிக்கக்கூடாது. பெண்சாதிக்குதவாத சிலாக்கியம் மக்களுக்கும் உதவக்கூடாதென்று சொல்ல நியாயமில்லை. தவிர 6 வது பிரிவானது எம்மதஸ்தர்களுக்கும் உதவக்கூடிய கருத்துடன் சட்டகர்த்தாக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று சொல்லப்போதுமான காரணங்களிருக்கின்றபடியால் 2 வது பிரிவில் விவாகம் புரிந்த ஹிந்து ஸ்திரீயானவள் 6-வது பிரிவின் சிலாக்கியத்திற்குப் பாத்திரமாகாளென்று சொல்லக்கூடாது. III-வது ஆக்டை ஏற்படுத்தும்பொழுது அதில்கண்ட அம்சங்கள் ஹிந்துக்கள்மகம்மதியர்கள் முதலிய புறமதஸ்தர்களுக்கு ஏற்காதென்று சொல்லப்படவில்லை. விவாகம் புரிந்த ஸ்திரீகளின் சொத்துக்களைப்பற்றி ஏற்பட்ட இந்த ஆக்டில் ஸ்திரீகளுக்கு மரணபண்டின் ஏற்பாட்டி-

னால் கிடைக்கும் சொத்துக்களைப்பற்றியும் சட்டமுறைகள் ஏற்படுத்தவேண்டுமென்று யோஜிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவே 6 வது பிரிவு ஏற்பட்டு ஸ்திரீகளுக்காக யாதொரு நன்மை மரணபண்டின் ஷரத்துக்களால் உண்டாகும்பட்சத்தில் அந்த சொத்தை அந்நியர்கள் அதாவது மூலபுருஷன் அல்லது அவனுடைய பாக்கிதார்களும் கையாட அல்லது விநியோகப்படுத்த அதிகாரம் கிடையாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. [2-வது பிரிவானது ஆக்டின் மற்ற பிரிவுகளின் அம்சத்தைப்பற்றி ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லவேண்டும் 6-வது பிரிவுக்கு 2-வது பிரிவு பாதிக்காது. அவ்விதமான வசனங்கள் ஆக்டில் குறிக்கப்படாத போதிலும் ஆக்டில் மரணபண்டைப்பற்றிய முறையானது 5-6-வது பிரிவுகளில் தான் ஏற்பட்டிருக்கிறது. 2-வது பிரிவானது ஆக்டின் மற்றபிரிவுகளுக்காக ஏற்பட்டிருக்கிறதென்றும் அதாவது மற்றபிரிவுகள் ஸ்வதாவில் அல்லது விவாகத்தால் ஹிந்துவின் பதவியை அடைந்த ஸ்திரீகளுக்கு உதவாதென்று 2-வது பிரிவினால் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லவேண்டும்.] ஆகவே 6வது பிரிவு எம்மதஸ்தர்களுக்கும் 2வது பிரிவினால் ஏற்பட்டதாகும். அதிக தீர்க்கமான ஆலோசனையுடன் 6-வது பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் ஸ்திரீகளுடைய சொத்தை புருஷர்கள் அடையக்கூடாதென்ற கருத்துடன் ஸ்திரீ மரணபண்டில் சேர்ந்து தொகையைச் செலுத்திவந்தால் அதையிட்டு வரும் பணத்தை அவளுக்குப்பின் அவளுடைய புருஷன் அடையக்கூடாதென்று பழய இங்கிலீஷ் தீர்மானங்களிருக்கின்றன. ஆனால் இங்கிலீஷ் சட்டகர்த்தாக்கள் புருஷனுடைய மரணபண்டின் ஏற்பாட்டினால் அவனுடைய பெண்சாதியும் பிள்ளைகளும் நன்மையடையலாமென்று சட்டம் ஏற்படுத்த மனமுள்ளவர்களாயிருந்து அதற்காக தீர்மானங்களுக்கு விரோதமாகவே சட்டமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது போலவே இந்தியாவிலும் பெண்சாதிபிள்ளைகளுக்கு நன்மை லாபமுண்டாகும்படிக்குறிய சாதகத்தை சட்டரூபமாக ஏற்படுத்தவேண்டுமென்று மரணபண்டை நடத்திவரும் கம்பெனியார்கள் கேட்டுக்கொண்டபடியால் அதற்காகவே 6-வது பிரிவு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் பெண்சாதிபிள்ளைகளுக்குப் புருஷன் ஒரு ஆதரவு ஏற்படுத்தவேண்டியது அவசியமான கடமையாகும். புருஷன் கம்பெனிக்குத் தொகைசெலுத்திவந்த போதிலும் பெண்சாதி குடும்பக் காரியாதிகளை நடத்திவருவதால் அவள் தகப்பன் வீட்டிலிருந்து யாதொரு தனத்தையும் கொண்டுவராதபோதிலும் அவளுடைய குடும்ப மானேஜ்மெண்டாகிய உத்தியோகமே அவள் கொண்டுவந்த பொக்கிஷமாக மதிக்கப்பட்டு புருஷனுடைய வரும்படியிலிருந்து மரணபண்டுக்குத் தொகை கட்டிவரப்பட்டபோதிலும் அதைப் பெண்சாதியின் பணமென்றும் சொல்லத்தகும். ஆதலால் அதனால் ஏற்படும் நன்மையைப் பெண்சாதி யாதொரு இடையூறும் ஆக்ஷேபணையுமில்லாமல் அடையவேண்டியது நியாயமாதலால் சட்டத்தில் 6 வது பிரிவானது ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். 2-வது பிரிவு 1-ம் பிரதிவாதியின் பாத்தியதைக்கு இடையூறாகாது 6 வது பிரிவின்படி கம்பெனியிலிருந்து வரும் தொகையில் 1-ம் பிரதிவாதி வீதாசாரத்தை அடைவது நியாயமாகுமென்று சொல்லவேண்டும் அதனால் 35 மதராஸ் தீர்மானத்தை மாற்றவேண்டியதாகிறது இது முக்கியமான பாயிண்டாகையால் புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்புவது அவசியம்.

மூன்றாவதாக இந்தியாவில் வழங்கும் சம்பிரதாய முறையை அனுசரித்து தொகை செலுத்திவந்தவனுடைய சமீப பந்துவானவன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி தாவா செய்யலாமாவென்று யோஜிக்குமிடத்து [1868] 2 Lev 210-ல் அவ்விதமான தாவா செய்யலாமென்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் தன்னை அடுத்திருக்கும் பந்துக்களுக்கு ஜீவனாம்சமான ஏற்பாடு செய்து வைக்கவேண்டியது இந்தியர்களுக்குரிய கடமையாதலால் ஷியான் தொகையைச் செலுத்திவந்தபோதிலும் அதனால் நன்மையடையவேண்டிய பந்துவையே தொகைசெலுத்தினவனுடைய பாவித்து அந்த பந்துவே நன்மையை லாபத்தை யடையும்பொருட்டு தாவா செய்யலாமென்று சொல்லவேண்டும். பந்துவல்லாத ஒரு அந்நியனுக்கு அவ்வித பாத்தியம் உண்டாகக்கூடாதபோதிலும் பந்துவுக்கு அந்த சிலாக்கியமிருக்கவேண்டியது அவசியமாகும். 4 மதராஸ் 137-ம் 6 மதராஸ் 361-ம் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கனுஸரணையாக இருக்கிறதும் தவிர 32 அலகாபாத் 410-ல் பிரிவிகௌன்ஸிலார் அபிப்பிராயப்பட்டிருக்கிறபடி இந்தியாவில் இந்துக்களும் மகம்மதியர்களும் தங்கள் மக்களுக்கு விவாக ஏற்பாடு செய்து முடிக்கிற வழக்கமாதலால் யாதொரு ஒப்பந்தத்திற்குப் பார்டிகளல்லாதவர்கள் அது விஷயமாய் தாவாசெய்யக்கூடாதென்ற இங்கிலீஷ் சட்ட முறையானது இந்தியாவில் அனுஷ்டிக்கத்தகாது. அதுபோலவே தர்ம நியாயத்தை அனுசரித்து இந்தியாவில் ஒருவன் தன் பெண்சாதி பிள்ளைகளுக்கு யாதொரு மரணபண்டின வருமானத்த ஏற்பாடு செய்துவைத்தால் அதற்கு இங்கிலீஷ் தீர்மான முறைகளைப் பிரயோகிக்கக் கூடாது. ஒப்பந்தத்திற்குப் பார்ட்டியல்லாதவர் இங்கிலீஷ் தீர்மானப்படி தாவாசெய்யக்கூடாது. தவிர சிற்சில வகையான பேர்வழிகளின் சொத்தைமட்டும் இங்கிலீஷ் தீர்மானப்படிக்கு மற்றொருவன் மரணபண்டின் ஏற்பாட்டினால் அடையலாம். அவ்விதமான நிர்ப்பந்தங்களை இந்தியாவுக்குப் பிரயோகப்படுத்தக்கூடாது. ஆகையால் 1-ம் பிரதிவாதி ஒப்பந்தத்தின் பார்ட்டியல்லாத போதிலும் மரணபண்டுக்கு அவள் தொகை செலுத்திவராதபோதிலும் மூலபுருஷனுடைய பந்துவாகிய நிலமையைக்கொண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றும்பொருட்டு, கம்பெனியாரிடமிருந்து தன் பாகத்தை அடையும் பொருட்டு தாவா செய்யலாம்.

நான்காவதாக ஒருவன் மரணபண்டில் சேர்ந்து தன் பெண்சாதிபிள்ளைக்கு அந்த கம்பெனியார் கொடுக்கும் தொகை சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்துவிட்டால் கம்பெனியார் அவனுடைய பெண்சாதிபிள்ளைகளுக்குக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டமையால் மூலபுருஷன் கம்பெனியாரை ஒரு டிரஸ்டியாக நியமித்த பாவனையாகுமென்றும் ஆகவே மூலபுருஷனுடைய மரணத்திற்குப்பின் டிரஸ்டின் நன்மை லாபத்தை அடையவேண்டியவர்கள் டிரஸ்டியின் பேரில் தாவாசெய்து சேரவேண்டிய தொகையை வசூலிக்கலாமென்று சொல்லத்தகும். 33 மதராஸ் 238, 10 மதராஸ் லா டைம்ஸ் 214, 6 பம்பாய் 421, 5 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 386, இவைகளில் ஏற்பட்டிருக்கிற தீர்மானம் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கனுஸரணையாயிருக்கிறது. தகப்பன் பிள்ளைகளுக்காக ஏற்படுத்தின நன்மையை அடையும்பொருட்டு பிள்ளைகள் கேரில் டிரஸ்டியின்பேரில் தாவாசெய்ய இடம் கொடுப்பது அவசியமான காரியமாகும்.

ஆகவே மேற்கூறிய நான்குவிதமான பாயிண்டுகளைப்பற்றி ஏற்படும் அபிப்பிராயத்தை கவனித்தால் 1874-ம் வருஷத்திய 3-வது ஆக்ட் 6 வது பிரிவின் அம்சங்கள் தாவா கேசுக்கு உதவக்கூடுமா என்ற இரண்டாவது பாயிண்டைப்பற்றி மதராஸ் ஹைகோர்ட்டார் 35 மதராஸ் 162-ல் விபரீதமான அபிப்பிராயம்கொண்டமையால் அதாவது ஷை ஆக்டின் 2 வது பிரிவினால் 1-ம் பிரதிவாதிக்கு 6-ம் பிரிவின் அம்சம் உதவாதென்று தீர்மானிக்கப்பட்டதால் அது சரியான தீர்மானமல்லவென்று தோன்றினபோதிலும் விஷயம் முக்கியமானதாகையால் அந்தப்பாயிண்டைப்பற்றி புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்தை அடைவது அவசியமென்று தீர்மானித்து, (1) விவாகம் புரிந்த ஹிந்து பூமான்களுக்கு 1874-ம் வருஷத்திய 3-வது ஆக்டு செல்லுமா செல்லாதா? (2) அப்படிச்செல்லுமானால் தாவா கேசைப்போலொத்த சந்தர்ப்பத்தில் மகள் தன் விகிதத்திற்காக 6 வது பிரிவின் சிலாக்கியத்தை அனுசரித்து தாவா செய்து வசூலிக்க நியாயமுண்டா?

ஆகிய இரண்டு அம்சங்கள் புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்காக அனுப்பப்பட்டதில் புல்பெஞ்சார் முதல் பாயிண்டைப்பற்றி 1874-ம் வருஷத்திய III வது ஆக்டின் 6 வது பிரிவை ஒரு விவாகம் புரிந்த ஹிந்து பூமான் உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்றும் ஆனால் தாவா கேசைப்போலொத்த சந்தர்ப்பத்தில் 1-ம் பிரதிவாதி தனக்குறிய விகிதத்தைக்கம்பெனியாரிடமிருந்தாவது மூல புருஷனுடைய பாக்கிதார்களின் பாத்தியதைக்கு இடம் கொடாமல் வசூலிக்கக் கூடாதென்றும் அபிப்பிராயங் கொடுத்தார்கள். ஆகையால் 1-ம் பிரதிவாதியின் விகிதத்தின்பேரிலும் வாதிபாக்கிதார் செல்லத்தகுமென்று ஏற்பட்டது. புல்பெஞ்சில் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் கொடுத்த அபிப்பிராய தீர்மானத்தின் காரணச்சுருக்கமாவது:—

புல்பெஞ்சின் அபிப்பிராயத்திற்காக அனுப்பப்பட்ட முதல் பாயிண்டானது 1874-ம் வருஷத்திய III வது ஆக்ட் ஹிந்து பூமான்களுக்கு ஏற்குமா ஏற்காதா என்பதுதான். ஆனால் புல்பெஞ்சின்முன் பின்வரும் விஷயத்தைமட்டும் குறித்து வாதம் செய்யப்பட்டது. அதாவது ஒரு

ஹிந்து பூமான் மரணபண்டில் சேர்ந்து பணம் கட்டிவந்து கம்பெனியால் கொடுக்கப்பட்ட பாலிஸியைத் தன் பேருக்கென்று எழுதிவாங்கியும் அந்தபாலிஸியின் நன்மைலாபமானது தன் மனைவிக்காவது, தன் பெண்சாதிபிள்ளைகளுக்கென்றாவது, அல்லது அவர்களில் யாருக்காவது சேரவேண்டியதென்ற வசனம் பாலிஸியில் காணப்பட்டிருந்தால் அந்தப்பாலிஸியின் நன்மையை அடையக்கோறும் 1-ம் பிரதிவாதிக்கு 1874ம் வருஷத்திய 111 வது ஆக்டின் 6 வது பிரிவு உபயோகப்படுத்தக்கூடுமா என்ற பாயிண்டுதான் முதலாவது பாயிண்டாக வாதம் செய்யப்பட்டது. [புல்பெஞ்சுக்கு ரிபர்செய்த ஹானரபில் ஜட்ஜிமார்கள் முதல் பாயிண்டை மேல்கண்ட விதமாய்க் குறித்தெழுதினதற்குக் காரணமென்னவென்று யூகித்துப்பார்க்குமிடத்து 35 மதராஸ் கேசில் மதராஸ் ஹைகோர்ட்டார் ஷை ஆக்ட் ஹிந்துக்களுக்கே முற்றிலும் ஏற்காதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஷை ஆக்டின் 2 வது பிரிவிலேயே விவாகமான ஹிந்து ஸ்திரீகளுக்கும் அல்லது ஹிந்து பூமானை விவாகம் செய்து கொண்ட ஸ்திரீகளுக்கும் ஷை ஆக்டின் அம்சங்கள் யாதொன்றும ஏற்காதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 6 வது பிரிவில் விவாகம்புரிந்த எந்த பூமானும் என்ற வசனத்தைச் செப்பி அவர்கள் செய்யும் மரணபண்டின் ஏற்பாட்டுக்கு ஒரு சட்டமுறை விதிக்கப்பட்டிருக்கிறபடியால் விவாகம் புரிந்த எந்தமனிதனும் என்றவசனத்தில் ஹிந்து பூமானும் சேர்க்கப்பட்டதாக சட்டகர்த்தாக்களின் கருத்தா என்பதை அறியும்பொருட்டு அவ்விதமான வசனங்களால் முதல்பாயிண்டைக் குறித்து புல்பெஞ்சின அபிப்பிராயத்திற்கனுப்பியிருக்கிறார்கள் போலும்.]

விவாகமான ஹிந்து ஸ்திரீகளுக்கு 111 வது ஆக்டு உபயோகப்படாதென்று 2-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆக்டின் 4, 5, 7, 8-வது பிரிவிகளில் விவாகமான ஸ்திரீகளுக்குறிய சட்ட விதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆகவே 4, 5, 7, 8 வதுபிரிவுகளின் அம்சங்கள் ஹிந்து ஸ்திரீகளுக்கு உதவாதென்ற கருத்தைக் காட்டவே 2-வது பிரிவு ஏற்பட்டிருக்கிறது. ஷை பிரிவுகள் ஹிந்துக்களல்லாத மற்றமதஸ்தர்களுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லவேண்டும். இங்கிலாந்திலுள்ள சட்டமுறைகளால் ஸ்திரீகளுக்குக் கிடைக்காத சிலாக்கியங்களை இந்தியாவிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துடன் ஷை ஆக்டும் அதிலுள்ள 4, 5, 7, 8-வது பிரிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. மேற்கூறிய பிரிவுகளின் முறைகள் ஹிந்துலாவை அனுசரிக்கிற ஸ்திரீகளுக்குதவாது. ஆனால் ஹிந்துலாவின் நீதிமுறைகளுக்கு ஷை பிரிவின் அம்சங்கள் விபரீதமாயில்லாவிட்டாலும் அவைகள் ஹிந்துலாவுக்கு யாதொரு சம்பந்தமுமில்லாத அம்சங்களாயிருக்கின்றன. 9-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற அம்சங்களில் விவாகமான ஸ்திரீகளுக்குறிய யாதொரு சட்டமுறை ஏற்பட்டிருக்கிறபோதிலும் அதன் விதிகள் ஹிந்துலாவில் கொஞ்சமும் பிரஸ்தாபிக்கப்படாத அம்சங்களாயிருக்கின்றன.

ஆனால் 6-வது பிரிவிலோ விவாகமான ஸ்திரீகள் என்ற பதமே கிடையாது. அது பெண்சாதிபிள்ளைகளின் நன்மைக்காக ஏற்பட்டிருந்தாலும் ஒரு புமான் தன் பெண்சாதி பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான தஸ்தவேஜினால் யாதொரு ஜீவாதாரத்துக்குறிய ஏற்பாடு செய்ய அவசியமில்லாமல் மரணபண்டில் ஏற்படும் பாலிஸியிலேயே அவர்களுக்கு ஸ்திரமான ஒரு நன்மையை ஏற்படுத்திவைக்கக்கூடியதாக 6-வதுபிரிவில் முக்கியமாய்க் கருதப்பட்டிருக்கிறது. 6-வது பிரிவில்லாவிடில் ஒரு ஹிந்து தன் பெண்சாதிபிள்ளைகளுக்கு மரணபண்டின் பாலிஸியால் யாதொரு ஏற்பாடு செய்ய முடியாது. ஆகவே 2வது பிரிவால் ஹிந்து ஸ்திரீகளுக்கு இந்த ஆக்ட் செல்லாதென்ற பொதுவான சட்ட விதியின் காரணத்தால் 6-வது பிரிவினுடைய நன்மையான ஏற்பாட்டுக்கு ஹிந்து ஸ்திரீயானவள் விலக்கப்பட்டவளென்று சொல்லத்தகாது. இங்கிலீஷ் ஆக்ட் 10-வது பிரிவுக்குப்பிரதியாக இந்தியன் ஆக்டில் 5, 6 பிரிவுகள் இரட்டையாய்ப்பிரிக்கப்பட்டு 5-வது பிரிவு ஹிந்து ஸ்திரீகளுக்குதவாதபடிக்கும் 6-வது பிரிவு ஹிந்து ஸ்திரீகளுக்குதவக்கூடியதாகவும் ஏற்பட்டிருக்கிறதாக ஹானரபில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் சொல்லுகிறபடி 6-வது பிரிவின் நன்மையை ஹிந்து ஸ்திரீகளுக்குதவுமென்றே சொல்லவேண்டும்.

தவிர 2-வது பிரிவானது விவாகமான ஹிந்து ஸ்திரீகளை ஆக்டின் அனுஷ்டானத்திலிருந்து விலக்குகிறது. ஆனால் மக்களை விலக்கவில்லை. ஆதலால் ஒரு ஹிந்துபுமான் தன் பெண்சாதிக்கு யாதொரு ஏற்பாட்டை செய்யக்கூடாதென்றும் ஆனால் தன் மகளுக்கு 6-வது பிரிவை அனுசரித்து யாதொரு நன்மையை ஏற்படுத்தலாமென்றும் சொல்லவேண்டியதாகும். இவ்வித வித்தியாஸமான சிலாக்கியம் அதிக அதிசயமானமுறையாகிறது. சட்ட கர்த்தாக்களுக்கு இவ்வித வித்தியாஸமான சிலாக்கியத்தைக் கொடுக்க எண்ணம் ஏற்பட்டு 6-வது பிரிவும் 2-வது பிரிவும் விதிக்கப்பட்டதாகச் சொல்லவே நியாயமில்லை. சட்ட கர்த்தாக்கள் மக்களுக்குமட்டும் ஒரு ஹிந்துபுமான் யாதொரு நன்மையை ஏற்படுத்தலாமென்றும் ஆனால் பெண்சாதிக்கு அவ்வித ஏற்பாட்டைச் செய்யக்கூடாதென்று 2-வது பிரிவை விதித்திருக்கிறார்கள் என்ற அதிசயமான அனுமானத்திற்கனுஸரணையாக 6-வது பிரிவின் வசனங்களை ஒருவிதமாக அர்த்தப்படுத்திக் சொல்லப்படுகிறது. அதாவது ஒரு புமான் "தன் பெண்சாதிக்காவது, தன் பெண்சாதி பிள்ளைகளுக்காவது, அல்லது அவர்களில் எவருக்காவது" என்று சொல்லப்பட்டதில் பிள்ளைகளுக்காவது என்று தனியாக முறைபாடு செய்யப்படவில்லையென்றும் ஷை வசனங்களால் "பெண்சாதிக்காவது, பெண்சாதி பிள்ளைகளுக்காகது, பெண்சாதி பிள்ளைகளில் யாருக்காவது" என்ற மூன்றுவிதமான பந்துக்களுக்கு யாதொரு ஏற்பாடு செய்யக்கூடியதாய் 6-வது பிரிவு ஏற்பட்டிருக்கிறதாயும் மக்களுக்கு மட்டும் தனிமையாக மரணபண்டின் பாலிஸியில் யாதொரு ஏற்பாடு செய்ய 6-ம் பிரிவு இடங்கொடுக்கவில்லையென்றும் ஆகவே 6-வது பிரிவின் வசனங்களும் 2வது பிரிவின் வசனங்களும் அதிசயமான அர்த்தபாவங்களை தருகிறதாகவும்எடுத்துக்காட்டப்படுகிறது இங்கிலீஷ் ஆக்ட் 11-வது பிரிவில் "பிள்ளைகளுக்கும்" என்ற வசனம் தனிமையாகவும் பிரயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் 11-வது பிரிவிலிருந்து உண்டான இந்தியன் ஆக்ட் 6வது பிரிவில் "அவர்களில் யாருக்காவது" என்றதை "பெண்சாதி" யோடு சேர்த்து கவனிக்காமல் தனிமையாகவும் மதிக்கலாமென்று சொல்லத்தகும். அப்படிப்பார்த்தால் ஒருபுமான் 6-வது பிரிவின்படிக்கு தன் மகளுக்கும் தனிமையாக யாதொரு நன்மையை ஏற்படுத்தலாமென்று சொல்லவேண்டும். அதற்கு 2-வது பிரிவு பாதகமாகாது. 6-வது பிரிவின் அம்சத்தால்பிள்ளைகளுக்கு யாதொரு நன்மையை டிரஸ்ட்பத்திரத்தால் ஏற்படுத்த அவசியமில்லை. 6-வது பிரிவினாலேயே பிள்ளைகளுக்காக டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக யூகிக்கவேண்டும், கம்பெனியார் டிரஸ்ட் சொத்தைப் பிள்ளைகளுக்குத் தரவேண்டிய கடமை பாலிஸியின் வசனத்தாலும் 6வது பிரிவின் அம்சத்தாலும் ஏற்படுகிறது. ஆகவே ஹிந்துபுமான்கள் 6-வது பிரிவின் சிலக்கியத்தை பிரயோகப்படுத்தலாமென்று 1-ம் பாயிண்டைப் பற்றி அபிப்பிராயங் கொடுக்கவேண்டும்,

6-வது பிரிவினால் ஏற்படுத்தப்படும் நன்மையை மக்கள் அடையும்பொருட்டு தாவா செய்ய மக்களுக்கே அதிகாரமுண்டாவென்று யோசிக்குமிடத்து 6-வது பிரிவின் அம்சமானது காண்டிராக்ட் ஆக்ட் டிரஸ்ட் ஆக்ட் இவைகளின் முறைகளுக்கு விபரீதமாக ஏற்பட்டதல்ல. டிரஸ்ட் ஆக்ட்படிக்கு டிரஸ்ட் பத்திரத்தில் அல்லது ஆதாரமாகக்கொள்ளும் யாதொரு தஸ்தவேஜில் யாதொரு டிரஸ்டியை நியமனம் செய்யாவிடில் அபிஷியல் டிரஸ்டீ அந்த நன்மையைப்பற்றி கம்பெனியார் பேரில் தாவா செய்யவேண்டும் தாவா பாலிஸியில் டிரஸ்டிஎவரும் நியமிக்கப்படவில்லை. ஆகையால் அதனால் வரவேண்டிய தொகையை அடைவதற்கு 1-ம பிரதிவாதி தாவா செய்து வசூலிக்கக்கூடாது.

தவிர தாவா பாலிஸியால்வரவேண்டிய தொகையானது மூலபுருஷனுடைய எஸ்டேட்டைச் சேர்ந்ததுவிடுமா அல்லது அவைகள் 6-வது பிரிவின்படி பெண்சாதி பிள்ளைகளின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டு அவர்கள் அடையப் பாத்திரர்களாகிறார்களாவென்று தீர்மானிக்கவேண்டும். பாலிஸியானது அச்சு பாரமாகயிருக்கிறது. பெண்சாதி பிள்ளைகளின் நன்மைக்காக இந்தப்பாலிஸி ஏற்பட்டிருக்கிறதென்ற வசனம் இங்கியில் இடையில் எழுதப்பட்டிருக்கிறது. அது பாலிஸி பிறந்தபின் வரி பிளந்தெழுதப்பட்டிருக்கிறதாகவும் கம்பெனியாருக்குத் தெரியாமல் குறிக்கப்பட்ட வார்த்தைகளாகவும் மதிக்கப்படவேண்டியதாகிறது. தவிர அச்சு பாரத்தில் கம்பெனியார் மூலபுருஷனுடைய எக்ஸிகியூடர்களுக்கும்; அட்மினிஸ்டிரேட்டர்களுக்கும் அல்லது அவனிடமிருந்து டிரான்ஸ்பர் பெற்றவர்களுக்கும் பாலி

வித்தகையைச் செலுத்துவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்களேயொழிய புல்பெஞ்சுக்கு ரிபர்செய்த ஆர்டரில் சொல்லப்பட்டவிதமாய் கம்பெனியார் தொகையைப்பெண்சாதிபிள்ளைகளுக்குக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட வசனமே பாலிஸியில் கிடையாது தவிர பெண்சாதி பிள்ளைகளுடைய நன்மைக்காக என்ற வசனம் பாலிஸியில் குறிக்கப்பட்டிருக்கிறதைத் தவிரவேறு எவ்விதமான சந்தர்ப்பமும் பாலிஸியில் அதற்கு அனுசரணையாகக் காணப்படவில்லை. எப்படியானாலும் தாவா செய்வதற்கு டிரஸ்டியாரும் நியமிக்கப்படாதபடியால் அபிஷியல்டிரஸ்டிக்குதாவாசெய்ய அதிகாரமுண்டேயொழிய பாலிஸியின் நன்மையை அடையத்தக்கவர்கள்தாவாசெய்யக்கூடாது பாலிஸியானது மகன் பேருக்கே பிறந்திருந்தால் அப்பொழுது மகனே தாவா செய்யலாம். ஏனெனில் பாலிஸியானது அப்பொழுதுநன்கொடை ஏற்பாடுக்குச் சமானமாகும். மூலபுருஷன் பாலிஸியை மகன்பேருக்கே உண்டாக்கின காரணத்தால் அதின் நன்மை லாபத்தை அவனுக்கு நன்கொடையளித்த பாவனையாகும். அதற்காக மகனே நேரில் தாவா செயயலாம். இந்தக் கேஸில் பெண்சாதி பிள்ளைகளின் நன்மைக்காகஎன்ற வசனத்தால் பிள்ளைகளுக்கு நன்கொடையளித்த கருத்துண்டாகாது. ஆகையால் 1-ம் பிரதிவாதி தாவா செய்து கம்பெனியாரிடம் தொகையை வசூலிக்கவாவது அல்லது மூலபுருஷனுடைய பாக்கிதாரின் பாத்தியதையை எதிர்க்கவாவது லாயக்குள்ளவனல்லவென்று அபிப்பிராயம் கொடுக்கவேண்டியதாகும்.

[ஆகவே பாலிஸியால் 1-ம் பிரதிவாதிக்கு யாதொரு நன்மையை அடைய லாயக்குண்டானாலும் அவனே நேரில் தாவா செய்யவாவது அல்லது டிக்கிரீ பாக்கிதாரின் பாத்தியதையை எதிர்க்கவாவது அதிகாரமில்லை. தவிர பாலிஸியில் கம்பெனியார் பெண்சாதிக்கும் பிள்ளைகளுக்கும் தொகையைக் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளவுமில்லை, 1-ம் பிரதிவாதிக்கு இந்தப் பாலிஸியால் யாதொரு பிரயோஜனமும் ஏற்பட்டதாகக் காணப்படவில்லை.] XXV M. L. J 65

———:o:———

ஜஸ்டிஸ் பென்ஸன் & ஜஸ்டிஸ் சுந்தரய்யர்

கோதாவரி ஜில்லா

## C. M. P. 2455 of 1910—10 மார்ச்சு

சின்னய்யா Vs ராமண்ணா

லோகடபதி சின்னய்யா என்ற பிரதிவாதி 1906-ம் வருஷத்திய அசல் நெ. 16-ல் வாதியாகிய ராமண்ணா என்றவர்பேரில் பத்திராசலம் அவிஸ்டெண்டு ஏஜண்டின் கோர்ட்டில் பத்து வரவு கணக்கின்படி தனக்கு வரவேண்டிய பாக்கித் தொகை ரூ 643-9-0 க்காக தாவா செய்ததில் கணக்கில் வாதியின்பேரில் சில அயிட்டங்கள் தப்பாகப் பற்றெழுதப்பட்டிருக்கிறதாகவும் பிரதிவாதி தயாரித்திருக்கிற கணக்கு சரியானதல்லவென்றும் அதை நம்பத்தகாதென்றும் வாதி எதிரான்ஸர் கொடுத்தார். கணக்குகளைப் பரிசீலனை செய்து ரிபோர்ட் கொடுக்கும்பொருட்டு கமிஷனர் ஒருவர் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்டது. தாவா ஈராங்கிகாலத்தில் வாதி அதாவது 16-ம் நெ கேஸில் பிரதிவாதியாகிய ராமண்ணா என்றவர் ஆஜராகவில்லை. கோர்ட்டார் பிரதிவாதியின் சாட்சி வாக்குமூலத்தை ரிகார்டு செய்துகொண்டு பிராதில் கேட்டுக்கொண்டபடிக்குப் பிரதிவாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். பெரிய ஏஜண்ட் கோர்ட்டில்வாதி தன்பேரில் ஏற்பட்ட டிக்கிரீயை ரத்து செய்யவேணுமென்று அப்பீல் செய்ததில் அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டாரும் அப்பீல் தீர்மானத்தின்பேரில் பிரவேசிக்க மறுத்துவிட்டார்கள். வாதி அதன்பேரில்அவிஸ்டெண்ட்ஏஜண்டு கோர்ட்டில் 1907-ம் வருஷத்திய அசல் நெ 10-ல் பிரதிவாதி பெற்ற முந்திய டிக்கிரீ மோச நடவடிக்கையால் ஏற்பட்டதென்று சொல்லி அந்த டிக்கிரீயைப் நிஷ்பிரயோஜனமாக்கவேண்டுமென்றும் அந்த டிக்கிரீயைப் பிரதிவாதிநிறைவேற்ற யோக்கியமில்லையென்றும் தீர்மானமடையும்பொருட்டு பிரதிவாதியின்பேரில் பிராது கொடுத்தார். அதில் பிரதிவாதி செய்த மோச நடவடிக்கையின் விவரமாவது:— வாதி பிரதிவாதிக்கு ரூ 1026 14-0-க்குமரங்களைவிக்கிரயம் செய்ததாகவும்பிரதிவாதி தன் கணக்கில்ரூ 1026-14-0-யும் பூராவாக வாதி கையில் வரவுவைக்காமல் ரூ 610-2-0-மட்டும் வரவுவைத்துக் கணக்கைத் தயாரித்து வாதியின்பேரில் அதிகமான தொகையை பாக்கி கட்டி முந்திய தாவா செய்திருப்பதாயும் அது மோசமான நடவடிக்கையென்றும் அவ்வித மோச நடவடிக்கையால் ஏற்பட்ட டிக்கிரீயானது நிஷ்பிரயோஜனமாகுமென்றும் வாதியால் வழக்காடப்பட்டது. பிரதிவாதி எதிரான்ஸரில் வாதி தனக்கு ஒப்பந்தப்படிக்குள்ள நல்ல மரங்களை சப்ளைசெய்யவில்லையென்றும், மட்டச்சரக்கென்று பிரதிவாதி புகார் செய்ததின்பேரில் அந்தச் சரக்கை விற்றுமுதல்செய்து செலவு போக நிற்கும் கிரயத்தொகையைமட்டும் வாதியின் கணக்கில் வரவுவைக்கிறதென்ற ஏற்பாட்டுக்கு வாதி சம்மதித்தமையால் அந்த மட்டச்சரக்கு என்ன விலைக்கு விற்று முதல் செய்யப்பட்டதோ அதைமட்டும் கணக்கில் காட்டி முந்திய பிராது தாக்கல் செய்யப்பட்டதென்றும், ஆகையால் பிரதிவாதி யாதொரு மோச நடவடிக்கைக்கும் ஆளாகவில்லையென்று எதிரர்வாதம் செய்தார். அசல் கோர்ட்டார் வாதியின் பிராதுக்கு ரிஜுடிகேடா தோஷம் சொல்லிப் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். வாதி அப்பீல் செய்ததில்முந்திய பிராதில்கமிஷனர் முன்னிலையில் சில முக்கியமான கணக்குகளைக் காட்டாமல் மறைத்துக்கொண்டதாக வாதி சொல்லிக்கொள்ளும் விஷயமானது பிரதிவாதியின் மோசநடத்தையாகுமென்றும் அவ்வித நடத்தை வாஸ்தவமென்று ருஜுவானால் பிரதிவாதி முந்திய கேஸில் பெற்ற டிக்கிரீயை நிஷ்பிரயோஜனமாக்குவது நியாயமாகுமென்றும்ஆகவே வாதியின் பிராதில் சொல்லப்படும் அம்சங்களை விஜாரித்துப் பைசலளிக்கும்படி அப்பீல் கோர்ட்டார் கேஸை அசல் கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்துவிட்டார்கள். மறு விஜாரணையில் அசல் கோர்ட்டார் மரக்கிரயத்தைப்பற்றி பிரதிவாதி சொன்ன ஏற்பாடு சரியானபடி ருஜுப்படுத்தப்படவில்லையென்றும் அதாவது மட்டமான சரக்கு என்னவிலைக்குப் போகிறதோ அதைமட்டும் வாதியின்பேருக்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டியதென்று வாதி சம்மதித்ததாக பிரதிவாதியால் ருஜுபாகம் விடப்படவில்லையென்றும் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்காக ஏற்பட்ட கமிஷனர்களிடம் பிரதிவாதி சில கணக்குகளைக்காட்டாமல் மறைத்ததாகச் சொல்லக்கூடாதென்றும் என்றும் வாதி விற்பனை செய்த மரத்தின் கிரயத்தொகை பூராவையும் பிரதிவாதி வஜா செய்துகொள்ளவேண்டியது நியாயமென்றும் ஆகவே பிரதிவாதி தன் கணக்கில் பூராவும் வரவுவைக்காமல் முந்திய பிராதில் டிக்கிரீ வாங்கினது மோச நடவடிக்கையாக பாவிக்கப்படவேண்டுமென்றும் அந்தக் கணக்கின் ஆதாரத்தைக்கொண்டு ஏற்பட்ட டிக்கிரீயை பிரதிவாதி பிரயோஜனப்படுத்திக்கொள்ள லாயக்கில்லையென்றும் தீர்மானித்துவாதிக்கனுகூலமாக முந்திய டிக்கிரீ செல்லாதென்று தீர்மானித்து அதைப் பிரதிவாதி நிறைவேற்றக்கூடாதென்று இஞ்சங்ஷன் ஆர்டரும் பிறப்பித்தார்கள். அதன்மேல் பிரதிவாதி அப்பீல் செய்ததில் முந்திய டிக்கிரீ பூராவும் செல்லாமற் போக நியாயமில்லையென்றும் கணக்கில் என்ன தொகை குறைவாகயிருக்கிறதோ அதாவது ரூபா 416-12-0-ஐப் பற்றினமட்டில் முந்திய டிக்கிரீ தொகை கம்மியாகவேண்டுமென்று தீர்மானித்து முந்திய பிராதில் பிறந்த டிக்கிரீ தொகையை 226-13-0 ஆகக்குறைத்து விட்டார்கள். பிரதிவாதி தனக்கு பூராத்தொகையும் வரவேண்டியது நியாயமென்றும், முந்திய டிக்கிரீயை மாற்றக்கூடாதென்றும் சொல்லி கோதாவரி ஜில்லா ஏஜன்ஸி இலாகாவைப்பற்றிய 8-வது ரூல்படிக்கு அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தைத்திரும்பவும் யோஜித்து மாற்றும்படி (ரிவியூசெய்யும்படி)கட்டளையிடவேண்டுமென்றுஹைகோர்ட்டாருக்குவிண்ணப்பம்செய்துகொண்டதில்ஹைகோர்ட்டார்பிரதிவாதிக்கனுகூலமாக பின்வரும் நியாயங்களையும் சட்டபாயிண்டுகளையும் காரணங்களையும் கவனித்து ரிவியூ செய்து மறு தீர்ப்பளிக்கவேண்டுமென்றுஅப்பீல் கோர்ட்டாருக்குக் கட்டளையிட்டார்கள். [கோதாவரி ஜில்லா ஏஜன்ஸி டிராக்டில் ஜில்லா ஜட்ஜியென்றும் டிஸ்டிரிக்ட் முன்சீப் என்றும் பிரத்தியேகமான வீவில் அதிகாரிகள் கிடையாது. ரெவினியூ அதிகாரத்தையுடைய ஜில்லா கலக்டர் அவிஸ்டெண்டு கலக்டர் உத்தியோகத்திற்கு ஒப்பான ஏஜண்டு, அவிஸ்டெண்டு ஏஜண்டு என்று பெயர்பூண்ட அதிகாரிகள் ஸிவில் வியவகாரங்களை விஜாரணைசெய்து பைசலளிக்க அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்]

ஹைகோர்ட் உத்தரவில் சொல்லப்பட்ட காரணச்சுருக்கமாவது:—

அப்பீல் கோர்ட்டார் பிரதிவாதியின் கணக்கில் தப்பான விவரம் கண்டிருந்த காரணத்தால் தப்பானமட்டில் அதாவது வாதியின்வரவுவகையில் விட்டுப்போனமட்டில் பிரதிவாதி பெற்ற டிக்கிரீமோசத்தால் ஏற்பட்டதாகத் தீர்மானித்து அம்மட்டில் 1906-ம் வருஷத்திய டிக்கிரீயைப் பிரதிவாதி நிறைவேற்றலாயக்கில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள். மோச நடவடிக்கையைப் பின்வருமாறு குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது "தன்னுடைய கணக்கு புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிற அம்சங்கள் முற்றிலும் சரியானதென்று பிரதிவாதி பிரமாணமாய்ச் சொல்லியிருக்க அந்தக் கணக்கு ரூ 416-12-0 பட்டும் பிசகாயிருப்பதாக ருஜுவாகியிருக்கிறது. ஆகவே ரூ 416-12-0-யும் சேர்த்து பிரதிவாதி டிக்கிரீபெற்றது மோச நடத்தையாலென்று சொல்லவேண்டும்". பிரதிவாதிக்காக வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ P. நாராயணமூர்த்தியவர்கள் ஷை மோச நடவடிக்கையை, டிக்கிரீநிஷ்பிரயோஜனமாகும்படியான அவ்வளவு பிரமாதமானதல்லவென்றும் அப்பீல் கோர்ட்டார் கணக்கு தப்பாயிருப்பதாக அபிப்பிராயப்பட்டிருப்பதற்கு இந்தப் பிராதில் வாதிவிட்ட ருஜுபாகம்தான் காரணமேயொழிய முந்திய பிராதில் வாதி அதே ருஜுபாகத்தை விட்டிருக்கவேண்டுமென்றும் அவருடைய அஜாக்கிறதையால் முந்தியே அவ்வித ருஜுபாகம்விடப்படவில்லையென்றும் எடுத்துச்சொன்னார். வாதிக்காக பிரதிவாதி முந்திய பிராதில் கொடுத்த வாக்குமூலமானது சுத்தப் பொய்யானதென்றும் அவ்வித பிரட்டான ருஜுபாகத்தின்பேரில் பிறந்த டிக்கிரீயை மோசத்தினால்ஏற்பட்டதென்றும் அதைசட்டப்படி ரத்தாக்கவேண்டியதென்றும் எதிர்வாதம்செய்யப்பட்டது. மோசத்தால் யாதொருவன் அனுகூல டிக்கிரீபெற்றானென்றால் அதைரத்தாக்கலாமென்பதில் சந்தேகமில்லை. தோல்வியடைந்த பார்ட்டி அப்படிப்பட்ட டிக்கிரீயை ரத்துசெய்வதற்கு மோசம் என்பது எப்படிப்பட்ட நடவடிக்கையாகயிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கவேண்டும். தோல்வியடைந்தவன் ரிஜுடிகேடா தோஷத்தை மதியாமல் வேறு தாவா கொண்டுவருவதற்குக் காரணமாக கோர்ட்டாருடைய தீர்மானம் தப்பானதென்றும் கோர்ட்டார் ருஜுபாகத்தைப்பற்றி பிசகான நோக்கமடைந்தார்களென்றும் ருஜுப்படுத்தத் தயாராயிருப்பதாகச் சொல்லக்கூடாது. ஆகவே கோர்ட்டார் ருஜு அம்சத்தின் அர்த்தபாவத்தையும் அதிலிருந்து அடையவேண்டிய அனுமானத்தையும் சாட்சிகளின் உண்மையையும் பற்றி யாதொரு அபிப்பிராயங்கொண்டு கொடுத்த பைசல் தீர்மானமானது அத்துடன் முடிந்ததாக மதிக்கப்படவேண்டும். அதாவது அதே கோர்ட்டார் அவ்விஷயங்களைப்பற்றி பின்னால் வேறு வித அபிப்பிராயங் கொடுக்கும்படி சந்தர்ப்பம் நேரிடக்கூடாது. கோர்ட்டார் அடைந்த அபிப்பிராயம் பிசகாயிருக்கும் பட்சத்தில் அப்பீல் சிலாக்கியம் ஏற்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தில் அப்பீல் செய்யலாம். அல்லது அதே கோர்ட்டாரை தங்கள் தீர்மானத்தை ரிவியூ செய்யும்படி கேட்டுக்கொள்ளலாமே. அப்பீல் விஜாரணையிலும் ரிவியூவிஜாரணையிலும் புதிய சாட்சியம் அல்லது ருஜுபாகமிருந்தால் அவைகள் முதல் ஈரங்கிகாலத்தில் கூடிய முயற்சியெடுத்தும் கிடைக்காமலிருக்கும் பட்சத்தில் அவ்வித ருஜுபாகங்களையும் அப்பீல் அல்லது ரிவியூ விண்ணப்பம் கொடுக்கிற பார்ட்டியானவன் கோர்ட்டாரிடம் ஆஜர்படுத்த சட்டமிருக்கிறது. இவ்வித சவுகரியங்கள் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் முதல் கோர்ட்டில் தோல்வியடைந்தவன் அதே வழக்கைப்பற்றி மறுவியாஜ்ஜியம் தொடுக்கக்கூடாதென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் மோசம் என்ற காரணத்தைச் சொல்லி ஒரு டிக்கிரீயை ரத்து செய்யும்படி மறுபிராது கொண்டுவரவேண்டுமானால் முந்திய ஈரங்கியில் கோர்ட்டார் தீர்மானத்திற்குவந்த அம்சங்களுக்குப் புறம்பான ஒரு விஷயத்தால் ஏற்பட்ட மோசமாகயிருக்கவேண்டும். யாதொரு நடவடிக்கையைப்பற்றிக் கோர்ட்டார் தீர்மானமடைந்தபின் அதே நடவடிக்கை மோசமானதென்று பிந்திய பிராதில் சொல்லி முன் தீர்மானத்தை மாறற் யத்தனிக்கக்கூடாது. மோச நடவடிக்கையால் பிறந்த டிக்கிரியை மாற்றக்கூடிய சட்ட முறையானது ரிஜுடிகேடா என்றும் சட்ட முறைக்குரிய புறநடையம்சமாகாது. அதாவது ஒரு வியவகாரம் முந்திய தீர்மானத்தால் ரிஜுடிகேடா தோஷமாய்ப் போனாலும் மோச நடவடிக்கையால் முந்திய தீர்மானம் ஏற்பட்டால் அந்த வியவகாரத்தை மறுபடியும்



நடத்துவதில் ரிஜுடிகேடா தோஷம் ஏற்படாதென்று சொல்லத்தக்கவிதமாய் மோசத்தால் பெற்ற டிக்கிரியை மாற்றும் நியாயமுறையை நிதானிக்கக்கூடாது. மோசமாகப்பெற்ற டிக்கிரியை மாற்ற ரிஜுடிகேடா முறையில் சம்பந்தப்படாத புறம்பான சந்தர்ப்பங்கள் உண்டாயிருக்கவேண்டும். ஒரு சாட்சிவாக்குமூலத்தின் உண்மை அல்லது தாகலான தஸ்தவேஜின் யதார்த்தபாவம் இவைகள் புறம்பான விஷயங்களாகமாட்டா. அவைகள்கோர்ட்டார் யாதொருதீர்மான முடிவடைவதற்கவசியமான அம்சங்களாகும். இருதரப்பாரும் கோர்ட்டுக்கு திருப்திகரமாக தங்கள் சாட்சியம் தான் மெய்யென்றும் எதிரியின் சாட்சியம் பொய்யென்றும் சொல்லலாம். ஒரு தரப்பை மெய்யென்று கோர்ட்டார் நம்பி அனுகூலம் செய்தால் தோல்வியடைந்த பார்டி தன் கக்ஷி வாக்குமூலம் மெய்யென்று வேறு தாவா செய்து ருஜுப்படுத்தக்கூடாது. முதல் ஈரங்கியிலேயே இருகக்ஷிக்காரர்களும் தங்களால் கூடியமட்டில் சாட்சியம்சங்களையெல்லாம் விட்டு தங்கள் வியவகாரத்தை ருஜுப்படுத்தப் பிரயத்தனப்படவேண்டும். கோர்ட்டார் ஒரு தரப்பை நம்பி முடிவு செய்தபின் எதிர் தரப்பாருக்கு வேறு சாட்சியம் விட்டுத் தன் கக்ஷியை நிலைக்கும்படி மறுவியாஜ்ஜியம் செய்ய இடம் கொடுப்பது நியாயமில்லை. அப்படிக்கிடம் கொடுத்தால் வழக்குகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக அதிகப்பட்டு வியவகாரத்திற்கு ஓய்வில்லாமல் தலைமுறைத் தலைமுறையாக வியாஜ்ஜியம் முடிவுபெறாமல் தொடர்ந்துவரக்கூடியதாகும். ஜயமடைந்தவன் விட்ட சாட்சியம் பொய்யென்றும் ஆகையால் அவன் பெற்ற டிக்கிரி செல்லாதென்றும் எதிரி வேறு வியாஜ்ஜியம் நடத்தக்கூடாது. கோர்ட்டார் இருதரப்பையும் விஜாரித்து ஒரு தீர்மானமடைந்தபின் திரும்பவும் அதே அம்சங்களைப்பற்றி ஆலோசனைசெய்யும்படியான சந்தர்ப்பம் உண்டாகக்கூடாது. ஆனால் ஒரு பார்டி எதிரியை தந்திரமான காரியங்களாலும் பொய்யான வார்த்தைகளாலும் சரியானபடி எதிர்வழக்காடாதபடி தடுத்துத் தன் காரியத்தை முடித்துக்கொண்டால் அந்த நடவடிக்கை மோசமாகும். சில சந்தர்ப்பங்களில் எதிரிக்கு நோடீஸ் இல்லாமலே ஒரு பார்ட்டி யாதொரு உத்தரவை அடைய சட்டமுண்டு. அவ்விதமான உத்தரவை வாங்கும்பொழுது கோர்ட் [illegible] சில உண்மையான தகவலைத் தெரியப்படுத்தாமல் மறைத்துக்கொண்டால் அதுவும் மோச நடவடிக்கையாகச் சொல்லப்படவேண்டும். ஆனால் இருகக்ஷியும் எதிர்வாதம் செய்து வியவகாரத்தை நடத்தி வழக்காடும்பொழுது ஒருவனுடைய சாட்சியத்தை ஆக்ஷேபிக்கவும் பொய்யென்று ருஜுப்படுத்தவும் மற்ற சகல விதமான ஆதாரங்களையும் காட்டவும் எதுகரமுண்டாதலால் அந்த ஈரங்கியிலேயே யாவற்றையும் நடத்திமுடிக்காமல் கோர்ட்டார் தீர்மானமளித்தபின் அவ்வித தீர்மானம் பிசகென்றும் எதிரிக்காக விடப்பட்ட சாட்சியம் பொய்யென்று ருஜுப்படுத்தமுடியும் என்றும்பின்னால்சொல்லக்கூடாது. அதாவது வேறுவழக்கில் சாட்சியம் விட்டு எதிரியின் கக்ஷியைப் பொய்யென்று ருஜுப்படுத்தவிடக்கூடாது. எதிரி தன்னை எதிர்வழக்காடக்கூடாதபடி சாட்சிகளை அப்புறப்படுத்தினதாக அல்லது தன் கையிலிருந்த தஸ்தவேஜுகளை ருஜுபாகத்தில் விடக்கூடாதபடி திருடிக்கொண்டு போனதாகச் சொன்னால் அது மோச நடவடிக்கையில் சேர்ந்ததாகும். அப்பொழுதுஎதிரிபெற்ற டிக்கிரியை ரத்துசெய்யும்படி வேறு வழக்கெடுக்க நியாயமாகும். (Black) பிளாக்என்றும் ஒரு கிறந்தகர்த்தா மோசநடவடிக்கைகளில் பின்வரும் சந்தர்ப்பங்களுமடங்கியிருப்பதாக எழுதியிருக்கிறார். அதாவது:— எதிரியை விஜாரணைக்கு வராமல் தடுப்பது, கிடைத்திருக்கிற ருஜுபாகத்தை விடக்கூடாமல் தடுப்பது, கேஸை மேல்நடத்தக்கூடாதென்றும் ராஜியாகப் போகவேண்டியதென்றும் இன்னும் இதைப்போலொத்த உடன்படிக்கை செய்துகொண்டு அந்த ஏற்பாட்டுக்கு மாறாக எதிரிக்குத் தெரியாமல் கோர்ட்டில் கேஸை நடத்தி ஒருதலையாய் பைசல் டிக்கிரி பெறுவது, ஆகிய பற்பல மோச அம்சங்கள், டிக்கிரீயை வேறுவியாஜ்ஜியத்தால் ரத்தாக்கத்தக்கவைகளென்று சொல்லத்தகும். ஒரு கக்ஷிக்காரன் எதிரிக்கு நோடீஸ் கொடுத்து சில தஸ்தவேஜுகளை ஆஜர்படுத்தும்படிகேட்டும் எதிரி அவைகளை ஆஜர்படுத்தாவிட்டால் அந்த நடத்தையானது டிக்கிரீயைமாற்றத்தக்க மோசமாகாது. எதிரியைத்தனக்காக சாட்சியாய்க்கோரலாம். எதிரி வராவிட்டால் அதற்காகவும் டிக்கிரீயை மாற்ற நியாயமாகாது. தஸ்தவேஜை ஆஜர்படுத்தாமலும் சாட்சியாக வாக்கு

றவர்களுக்கு சட்டத்தில் தண்டிக்கும் முறைகளிருக்கின்றன. 16 Q B 717-ல் ஒருவன்பேரில் ஆஸ்டிரேலியாதேசத்தில் ஒரு ஒப்பந்த விஷயத்தைப்பற்றி டிக்கிரீபெற்று அந்த டிக்கிரீயின்படி ஏற்பட்ட பாக்கியை இங்கிலாந்தில் வசூலிக்கும்பொருட்டு வாதி தாவாசெய்ததில் ஒப்பந்தம் பொய்யென்றும் ஆஸ்டிரேலியா கோர்ட்டில் மோசத்தால் வாதி டிக்கிரீபெற்றிருப்பதாயும் எதிரி இங்கிலீஷ் கோர்ட்டில் ஆக்ஷேபித்ததில் கோர்ட்டார் அந்த ஆக்ஷேபணையை ஏற்றுக்கொள்ளாமல் ஒப்பந்த விஷயத்தைப்பற்றி எதிரி ஆஸ்டிரேலியா கோர்ட்டில் ஆக்ஷேபித்திருக்கவேண்டுமென்றும் அந்த டிக்கிரீ பிசகென்று ஏற்பட்டால் எதிரிக்கு சட்டப்படி மகாசக்கிரவர்த்தியவர்களிடம் அப்பீல்செய்து கொள்ளலாமென்றும் அப்பீலைபிரிவிகௌன்ஸிலார் விஜாரணைசெய்து பைசலளிப்பாரென்றும் அப்படிச் செய்யாமல் இங்கிலீஷ் கோர்ட்டில் வாதி பெற்ற வெளிதேசத்துடிக்கிரீயைநிறைவேற்றும்பொருட்டு தாவா செய்தால் அந்தடிக்கிரீபிசகென்றுஆக்ஷேபிக்கக்கூடாதென்றும்தீர்மானங்கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஒப்பந்த விஷயமாய் புதுசாட்சியம் விட்டு முந்திய டிக்கிரீயை ரத்துசெய்வதற்கு இந்த வழக்கில் பிரயத்தனப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. 10 சான்ஸரி 327-ல் எதிரிபொய்வாக்குமூலம் கொடுத்து சிலரிகார்டுகளை ஆஜர்படுத்தாமல் மறைத்து அல்லது சில சாமான்களைப் பரிசீலனைக்கனுப்பியதில் முக்கியமான சில கருவிகளை மறைத்து வைத்தமையால் எதிரியின் நடத்தை மோசமென்றும் ஆகவே எதிரிபெற்ற டிக்கிரீ ரத்தாவதற்காக புனர் வியாஜ்ஜியம் தொடுக்கலாமென்றும் தீர்மானிக்காமல் அவ்வித சந்தர்ப்பங்களில் புனர் வியாஜ்ஜியம் தொடுத்தால் வழக்குகள் ஓயாதென்றும் இருதரத்தாரும் நேருக்கு நேராய் வியவகாரமாடும்பொழுது எதிரியின் நடத்தையில்மோசமிருக்கக்கண்டால் அதே வழக்கு பைசலாகுமுன் எடுத்துக்காட்டாமல் தீர்மான முடிவு ஏற்பட்டபின் புனர் வியாஜ்ஜியம் தொடுக்கவிடுவது உசிதமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எதிரி தப்பு சாட்சியம்சொன்னால் அவனை தண்டிக்க முறையிருக்க அதை விட்டு வேறு வழக்கினால் அதை ரூஜுப்படுத்தி முந்திய டிக்கிரீயை ரத்துசெய்ய எத்தனிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1878 4 C. P. D-9-ல் ஒரு விவாகமான ஸ்திரீயானவள் தனக்கு உயில்படி கிடைத்த சில சொத்துக்களைப் பராதீனம் செய்யும்பொருட்டு கோர்ட்டாரிடத்திலிருந்து பெற்ற உத்தரவானது மோசநடவடிக்கையால் ஏற்பட்டதென்று ஆக்ஷேபிக்கப்பட்டதில் கோர்ட்டார் சொன்னதாவது :— "கோர்ட்டார் உத்தரவளிப்பதற்கு அவசியமான யாதொரு தகவலை மனுதார் மறைத்துவிட்டால் அவ்விதமான உத்தரவை ரத்துசெய்ய நியாயமாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொருபார்ட்டியும் ஸ்வதாவில் சகலமான ரிகார்டுகளையும் கோர்ட்டில் ஆஜர்செய்யவேண்டிய கடமையாகாது. தவிர ஒரு கக்ஷிக்காரன் தகவல்களை மறைக்கும் சந்தர்ப்பம்ஒவ்வொன்றும்அவன்பெற்றடிக்கிரீயை புனர் வியாஜ்ஜியத்தால் ரத்துசெய்யத்தக்கதாகாது. இந்தக்கேசில் மனுதாரின் புருஷனுக்கு நோடீஸ் அனுப்பப்பட்டதாகத் தோன்றவில்லை. மனுதாருக்கு எக்ஸ்பார்டி உத்தரவு கிடைக்கக்கூடியதானாலும் சிற்சில தகவல்களை அவள் கோர்ட்டாருக்குத் தெரிவித்து உத்தரவடையவேண்டும். அப்படிச்செய்யாமல் மறைத்தால் உத்தரவு ரத்தாகவேண்டியது நியாயமே. ஆனால் மோசமென்ற காரணமன்னியில் எக்ஸ்பார்டிஆர்டரைமாற்றபோதுமானவேறுகாரணங்களிருந்தாலும் வேறு அதற்கு சட்டமுறைகளுண்டு.

21 கல்கத்தா 612-ல் எதிரியின் பொய்வாக்குமூலத்தால் ஏற்பட்ட டிக்கிரீ மோசமான டிக்கிரீயாக பாவிக்கப்பட்டு ரத்தாகத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவ்வித டிக்கிரீயை மாற்றவேண்டுமானால் அப்பீல் முறையிருக்க புனர் வியாஜ்ஜியம் தொடுத்து அந்த டிக்கிரீயை ரத்தாக்க யத்தனம் செய்யக்கூடாது. ஷை கல்கத்தா தீர்மானம் 14 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 695, 16 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 1002-லும் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 38 கல்கத்தா 986-ல் மாறான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது பொய்வாக்குமூலத்தால் ஏற்பட்ட டிக்கிரீயை புனர்வியாஜ்ஜியத்தால் மாற்றலாமென்று 38 கல்கத்தாவில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 10 Q. B. D. 295-ஐ அனுசரித்து 29 மதராஸ்179-ல் ஜஸ்டிஸ் போட்டாம் &. ஜஸ்டிஸ் மோர்துரையவர்களும்



மனப்பூர்வமான பொய்சொல்லி ஒருவன் டிக்கிரீ பெற்றால் அதை புனர்வியாஜ்ஜியத்தால் ரத்து செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இங்கிலீஷ் தீர்மானங்களும் ஒன்றுக்கொன்றுமாறாக ஏற்பட்டிருக்கின்றன. அதாவது 10 Q. B. D. 295 க்கு மாறாக 25 Q B D 310-ம் 67 L T Q B 301-ம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலும் 21 கல்கத்தா 612-க்கு மாறாக 38-கல்கத்தா 936 ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பார்ட்டி பொய்யான வாக்குமூலம் கொடுத்து (பிரதிவாதி தன்கணக்கு முழுவதும் சரியென்று தப்புப்பிரமாணம் செய்திருக்கிறபடியால்) அதனால் பெற்ற அனுகூலமான டிக்கிரீயை புனர்வியாஜ்ஜியத்தில் மாற்றலாமாவென்றபாயிண்டைப்பற்றி இங்கிலீஷ் தீர்மானங்களும் இந்திய தீர்ப்புகளும் ஒன்றுக்கொன்று மாறாக ஏற்பட்டிருப்பதால் அதைப்பற்றித் தீர்மானமடைவதற்கு அவசியம் ஏற்பட்டால் புல்பெஞ்சுக்கு ரிபர்செய்வது நியாயமாகும். ஆனால் இந்தக்கேசில் அந்த முக்கியமான பாயிண்டைப்பற்றி தீர்மானமடையத் தேவையில்லை. பிரதிவாதியின் கணக்கில், சில அயிடங்கள் தப்பாக வாதியின்பேரில் பத்து வழியாகக் குறிக்கப்பட்டிருக்கிறதென்று மோச நடவடிக்கைக்கு அத்தாட்சியாக வாதி பிராதில் சொல்லியிருக்கிறார். கீழ்கோர்ட்டார் தீர்மானத்தில் பிரதிவாதியோடு மரக்கிறய விஷயமாய் பூராத்துகைக்கும் வாதியின் பத்தெழுதிக்கொள்ள வேண்டியதென்ற ஒப்பந்தத்தை பிரதிவாதி ரூஜுப்படுத்தவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். தவிர பிரதிவாதி முற்றிலும் பொய்யான வாக்குமூலம் கொடுத்து அசத்திய பிரமாணம் செய்து முந்திய பிராதில்டிக்கிரீபெற்றதாக கீழ்கோர்ட்டார் அபிப்பிராயங்கொடுக்கவில்லை. பிரதிவாதி ரூஜு அம்சம்விட்டது போதுமானதல்லவென்றுமட்டும் சொல்லியிருக்கிறார்கள். கோர்ட்டாரை தப்புத் தீர்மானம் கொடுக்கச்செய்யும்பொருட்டு மாச்சரியமும் பிறட்டும் கலந்த ஏற்பாட்டினால் எதிரி யாதொரு பொய்யானதகவலைக் கோர்ட்டாருக்குத் தெரிவித்திருந்தால் மட்டும் அது மோசநடவடிக்கையாகுமென்று 3 சான்ஸரி அப்பீல் 203-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பிந்தியவழக்கில் விடப்பட்ட சாட்சியத்தை நம்பினால் முந்தியவழக்கில் நம்பப்பட்ட சாட்சியம் பொய்யென்று ஏற்படுகிறது, அப்படிப்பட்ட காரணமும் மோசநடவடிக்கையாகச் சொல்லப்பட நியாயமில்லை.

கடைசியாக ஒரு டிக்கிரீயை மாற்றுவது கோர்ட்டாருடைய யுக்தானுசாரத்தைப் பொருத்ததாகும். வாதி முந்திய பிராதுகாலத்தில் ஈரங்கிக்கு ஆஜராகவேயில்லையென்று அசல்கோர்ட் தீர்ப்பினால் ஏற்படுகிறது. சரியானகாலத்தில் ஆஜராகி எதிர்வாதம் செய்து தனக்குறிய சாட்சியங்களைவிட்டு கோர்ட்டாருக்குதவிசெய்யாமல் பிரதிகூலமான டிக்கிரீ ஏற்பட்டபின் வேறு வழக்கெடுத்து மோசமென்ற காரணத்தைச்சொல்லி முந்திய டிக்கிரீயை மாற்றவிடக்கூடாது. வாதி முந்திய ஈரங்கிக்கு ஆஜராகாமலிருந்த விஷயம் அவனுடைய அஜாக்கிரதையையும் கவலைத்தாழ்ச்சியையும் காட்டுகிறது. ஆகையால் யுக்தானுஸாரத்தை வாதிக்கு விரோதமாய்ச் செலுத்திபிரதிவாதியின் மனுவுக்கு அனுகூல உத்தரவளிக்கப்பட்டு அப்பீல் கோர்ட்டாருக்கு தங்கள் தீர்மானத்தை ரிவியூசெய்யும்படி உத்தரவளிக்கப்பட்டது. XXVMLJ-228

———:O:———

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

*பெஸாந்தசிங் Vs மஹாபீர் பர்ஷத்*

Appeals 68 to 70 of 1912—14 மார்ச்சு 1913

அயோத்தியைச் சேர்ந்த பர்தாப்கர் ஜில்லாவில் ஐந்து கிராமங்களடங்கிய ஒரு எஸ்டேட்டுக்கு ஹிந்துக்களாகிய இரண்டு கூட்டுக்குடும்பத்தார் அதிபதிகளாயிருந்தார்கள். பிந்தஸேவக் என்றவர் ஒரு குடும்பத்திற்கும் ராமபர்ஷத் என்றவர் மற்றொரு குடும்பத்திற்கும் தலைவர்களாயிருந்தார்கள். பிந்தஸேவக் என்றவருக்கு ஷியோபால், சந்திரபூகன் என்ற இரண்டு புத்திரர்களும் ராமபர்ஷத் என்வருக்கு பஜ்ராஜஸிங்என்ற ஏகபுத்திரனும் அவனால் பிஜைபகதூர், போபால் & ரகுபார் என்ற மூன்று பவுத்திரர்களும் உண்டானார்கள். எஸ்டேட்டின் ஒரு ரூபாய் வருமானத்தில் பிந்தஸேவக் என்றவருக்கு 7 அணா 2-பையும், ராமபர்ஷத் என்றவருக்கு 8 அணா 10-பையுமாகப் பங்குபாகம் ஏற்பட்டிருந்தது. பிந்தஸேவக் என்றவர் கூட்டுக்குடும்பசொத்தில்தனக்குறிய பாகத்தை பெஸாந்தஸிங் என்ற 1-ம்

பிரதிவாதிக்கு 1900 ஜனவரியிலும் 1901 அக்டோபரிலும் பிறந்த இரண்டு தஸ்தவேஜிகளால் விக்கிரயம் செய்துவிட்டார். ராமபர்ஷத் என்ற கூட்டுப்பங்காளி தன் சகோதரன் பாகத்தை அந்நியனுக்கு விக்கிரயம் செய்யக்கூடாதென்று ஆக்ஷேபித்து அந்த நாட்டில் வழங்கும் சட்டமுறையின்படி தானே அந்த பாகத்தைக்கிரயம் பெறத்தயாராயிருப்பதாகச் சொல்லி மேற்கூறிய இரண்டு விக்கிரயங்களையும் தன்பேருக்கு ஏற்படவேண்டுமென்று கோர்ட்மூலமாய் டிக்கிரீயும் பெற்றார். ஆனால் ராமபர்ஷத் என்றவரே டிக்கிரிக்குப்பின் ஷை டிக்கிரீயால் கிடைத்த பாகத்தையும் தன் பாகத்தில் 6-அணா விகிதமுள்ள பங்கு நீங்கலாக மிகுதியான பாகத்தையும் சேர்த்து 1903 ஜனவரியிலும் ஆகஸ்டிலுமாக 1-ம் பிரதிவாதிக்கே கிரயம் செய்து கொடுத்துவிட்டார். தவிர தன் வசம் வைத்திருந்த 6-அணா விகிதமான பங்கையும் 1-ம் பிரதிவாதிக்கு 1907 பிப்ரவரியில் அடமானம் வைத்து ரூ 12,000 கடனாக வாங்கிக்கொண்டார். அடமானம் 25 வருஷத்திற்கு ஒத்தியாக எழுதப்பட்டிருந்தது. ஆகவே எஸ்டேட் முழுவதும் 1-ம் பிரதிவாதியினுடைய சுவாதினத்தில் சென்றுவிட்டது. பிந்தஸேவக் என்றவருடைய இரண்டு புத்திரர்களும் ராமபர்ஷத் என்ற மூன்று பவுத்திரர்களில் போபாலசிங் என்றவரும் ஒன்றுசேர்ந்து ராமப்பிரஷத் மேற்கண்டவிதமாய் கூட்டுக்குடும்ப சொத்துக்களைப் பராதீனம் செய்துவிட்டது ஹிந்துலா முறைக்கு முற்றிலும் விரோதமென்றும் ஆகையால் ராமப்ரஷத் எழுதிக்கொடுத்த இரண்டு விக்கிரயங்களும் அடமானமும் செல்லாதென்று ஆக்ஷேபித்தும் அதைப்பற்றி வியாஜ்ஜியம் நடத்துவதற்குறிய செலவு செய்ய சக்தி இல்லாத காரணத்தால் மூவரும் சேர்ந்து மகாபீர்பர்ஷத் என்ற ஒருவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு வியாஜ்ஜியத்திற்கு வேண்டிய செலவை ஷை மகாபீர்பர்ஷத் கொடுத்து நடத்துகிறதென்றும் அவரை குடும்பத்துடன் சேர்ந்த ஓர் கூட்டுப்பங்காளியாக பாவிக்கவேண்டியதென்றும் வியாஜ்ஜியத்தில் ஜயமடைந்தால் மகாபீர்பர்ஷத் என்றவர் டிக்கிரீயாகும் சொத்தில் ஒரு பாதிக்கு அதிபதியாக வேண்டியதென்றும் அவருடைய இஷ்டம்போல் அந்த பாகத்தை கூட்டாய் அனுபவிக்கலாமென்றும் அல்லது பாகப்பிரிவினை செய்துகொண்டு தனியாக அனுபவிக்கலாமென்றும் பலவாரான நிபந்தனைகள்கண்டு 1907 எப்பிரல் மாதத்தில் பிந்தஸேவக் என்றவருடைய இரண்டு புத்திரர்கள் ஒரு எக்கிரிமெண்டையும் ராமபர்ஷத் என்றவருடைய பவுத்திரனாகிய போபால்சிங் ஒரு எக்கிரிமெண்டையும் மகாபீர்பாஷத் என்றவருக்கு எழுதிக்கொடுத்தார்கள். இரண்டு உடன்படிக்கைகளும் ஒரே விதமாகத்தான் எழுதப்பட்டிருந்தது. அதன்மேல் முதலாவது எக்கிரிமெண்டை எழுதிக்கொடுத்தவர்கள் மகாபீர்பர்ஷத் என்றவரையும் 3-ம் வாதியாகச்சேர்த்து ஒரு பிராதையும் இரண்டாவது எக்கிரிமெண்டை எழுதிக்கொடுத்த போபால்சிங்க் ஷை மகாபீர்பர்ஷத் என்றவரையே 2-ம் வாதியாகச்சேர்த்து வேறொரு தனிப்பிராதாகவும் கொடுத்து குடும்பசொத்தைச் சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கிற பஸாந்தசிங் என்றவருடன் பிந்தஸேவக், ராமபர்ஷத் என்ற குடும்பத்தலைவர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து பர்டாப்கர் சப்கோர்ட்டில் 1907 ஆகஸ்டில் வழக்காடி குடும்பசொத்தில் வாதிகளுக்குறிய பாகத்தை சுவாதீனமடையும்பொருட்டும் மத்தியகால வரும்படிக்காகவும் தாவா செய்தார்கள். இரண்டாவது பிராதில் போபால் சிங் என்ற 1-ம் வாதியின் இரண்டு சகோதரர்களும் கூட பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இரண்டு தாவாக்களிலும் மகாபீர் பர்ஷத் என்ற வாதிக்கு சொத்தில் சுவாதீன பாத்தியமே கிடையாதென்ற எதிர் ஆன்ஸர் முக்கியமாய் செய்யப்பட்டது. இரண்டு தாவாக்களிலும் மகாபீர்பர்ஷத் என்றவரைத் தவிற மற்ற வாதிகள் பிரதிவாதிகளோடு சமாதானமாகி ராஜிநாமா தஸ்தவேஜு எழுதிக்கொடுத்து தங்களைப்பற்றிய மட்டில் பிராது தள்ளுபடியாவதில் ஆக்ஷேபனையில்லையென்றுசொல்லி வியாஜ்ஜியத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். ஆகவே மகாபீர்பர்ஷத் என்றவர்மட்டும் வியவகாரத்தைத் தனிமையாக நின்று நடத்த வேண்டியதாச்சுது. மற்ற வாதிகளைப் பற்றினமட்டில ராஜிநாமாவின்படி பிராது தள்ளுபடியாச்சுது.

மகாபீர் பர்ஷத் தாவா சொத்துக்களில் யாதொரு பாகத்தைச் சுவாதீனமடைய வேண்டிய பாத்தியதைக்கு மற்றவாதிகளுடன் செய்துகொண்ட எக்ரீமெண்டுதான் ஆதாரமேயொழியவேறு



விதமான பாத்தியதை யாதொன்றும் அவருக்கில்லை. ராமபர்ஷத் என்றவர் செய்த கிரய நடவடிக்கைகளும் அடமானமும் முற்றிலும் செல்லாததாக பாவித்தாலும் மகாபீர் பர்ஷத் என்றவருக்கு சுவாதீன பாத்தியதையானது இரண்டு எக்ரீமெண்டுகளினால் ஏற்பட்டால்மட்டும் இந்த தாவாவில் டிக்கிரீயடையலாம். ஆகவே எக்ரீமெண்டானது முக்கிய ஆதாரமாக ஏற்படுகிறது. சப்கோர்ட்டிலும் அப்பீல்கோர்ட்டிலும் மகாபீர்பர்ஷத் என்றவருக்கு அனுகூலமாக டிக்கிரீயானபடியால் பஸாந்த சிங் என்றவர் பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்து அங்கு அனுகூலமடைந்தார். பிரிவிகௌன்ஸிலார் தீர்மானத்தில் சொன்ன முக்கியகாரணங்களாவன:— எக்கிரீமெண்டுகளினால் வாதிக்கு (வழக்காடும் வாதிக்கு) என்ன பாத்தியதை ஏற்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கும் பொருட்டு எக்ரீமெண்டின் வசனங்களையும் அதன் கருத்தையும் நிதானிக்கவேண்டியது முதன்மையான விஷயமாகும். அந்த பாயிண்டைப் பற்றி யாதொரு தீர்மானமடையுமட்டும் ராமபர்ஷத் செய்திருக்கிற பராதீனங்களின் நியாயத்தைப்பற்றி யோஜிப்பது அனாவசியமாகும். எக்ரீமெண்டைப்பற்றிய தீர்மானம் சப்கோர்ட்டாரால் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாதிக்கு எக்ரீமெண்டினால் தாவாசொத்தின் சமபாதிக்கு பாத்தியம் ஏற்பட்டபடியால் அவருடைய பிராது முற்றிலும் தவறிப்போக நியாயமில்லையென்று சப்கோர்ட்டார் 7-வது இஷ்யூவைப்பற்றி யோஜிக்கும்பொழுது சொல்லியிருக்கிறார். 7-வது இஷ்யூவானது வாதிகளுக்கு என்னபரிகாரம் கிடைக்கத்தகுமென்பது தான். அந்த இஷ்யூவானது மற்ற வாதிகள் விலகிப்போனதால் மாறிப்போய் 3-ம் வாதிக்கு என்னபரிகாரம் கிடைக்கக்கூடியதென்று ஏற்பட்டது. இந்த அப்பீல் ஈரங்கியில் 3-ம் வாதி தாவா சொத்தை சுவாதீனமடையவாவது அல்லது வேறு எவ்வித பரிகாரத்திற்காவது பாத்திரனல்லவென்று எதிரிக்காக ஆக்ஷேபனை மிமோ தாகல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த பாயிண்டானது கீழ்கோர்ட்டில் அடமாகவாதம் செய்யப்படாதபோதிலும் வாதிக்காதாரமான தஸ்தவேஜுகளைப் பார்க்கையில் அந்த பாயிண்டைப்பற்றி தீர்மானிக்கவேண்டியது மிக்க அவசியமானதென்று சொல்லவேண்டும். கீழ்கோர்ட்டில் எடுத்துக்காட்டப்படாததாயும் வாதியின் ஆதாரபூதமான தஸ்தவேஜைப் பார்க்கையில் தென்படுகிற ஒரு முக்கியமான பாயிண்டை (அதாவது வாதிக்கு தாவாசொத்தில் சுவாதீனபாத்தியதை எக்ரீமெண்டினால் ஏற்பட்டிருக்கிறதா என்ற பாயிண்டை)ப்பற்றி கக்ஷியை நடத்துகிறவர்கள் கீழ்கோர்ட்டில் சரியானபடிவிவாதம்செய்யாதகாரணத்தாலேயே அதுவிஷயமான பரிகாரத்தை வாதிக்குக்கொடுக்க நியாயமில்லையென்றுசொல்லத்தகும். தவிற ஒரு இஜெக்ட்மெண்ட் பிராதில் வாதி தன்னுடைய பலத்தினால் பாத்தியதையைக் கொண்டு ஜயமடையக்கோறவேண்டுமேயொழிய எதிரியின் துர்பலத்தை (ஆதாரக்குறைவையிட்டு, வெற்றியடைய எதிர்பார்க்கக்கூடாது. வாதி தேடும் சுவாதீனப் பரிகாரத்திற்கு பாத்தியமில்லாவிடில் எக்ரீமெண்டுகளினால் ஏற்பட்ட மற்றவிதமான பாத்திய பாத்தியதைகளைப்பற்றி இந்தக்கேசில கவனிக்க அவசியமேயில்லை. ஆகவே எக்ரீமெண்டானது ஏற்படும் காலத்தில் வாதிக்கு சுவாதீன பாத்தியதை உண்டாச்சுதா என்று கவனித்துப் பார்க்கவேண்டும். அக்காலத்தில் அந்த பாத்தியதை ஏற்படாவிடினும் பின்னாலாவது சுவாதீனபாத்தியதை உண்டாச்சுதென்று சொல்லப்படவில்லை. எக்ரீமெண்டின் வாசகத்தைப்பார்த்தால்:— "நமக்குள்ள சொத்துபாகத்தில் வாதி சமபாதி பாகஸ்தனாக இருக்கவேண்டுமென்றும் மறுபாதி நம்முடைய சொந்த பாத்தியத்தில் நிற்கவேண்டுமென்றும், வாதி வியாஜ்ஜியத்திற்கும் அப்பீலுக்கும் இஷ்டம்போல் செலவுசெய்ய வேண்டியதென்றும் எதிரி தோல்வியடைந்து அப்பீல் செய்தாலும் அதை வாதியே சொந்த செலவுசெய்து எதிர்க்கவேணுமென்றும், இந்த வழக்கில் ஜயமடைந்தால் மேற்கூறிய சொத்துபாகத்தையாவது அல்லது டிக்கிரீயாகும் சொத்தில் ஒருபாதி பாகத்தையாவது ஸர்வ ஸ்வதந்தரத்துடன் சுவாதீனமடையவேண்டியதென்றும்வாதிகள் இஷ்டம்போல் அந்தபாகத்தைகூட்டனுபோகத்தில்வைத்திருக்கலாமென்றும் அல்லதுபாகித்துக்கொண்டுபிரத்தியேகமாய் அனுபவிக்கலாமென்றும்கூட்டனுபோகமாயிருக்கும்பட்சத்தில் வாதிக்குதீர்வைவசூல் அதிகாரமும் மானேஜ்மெண்டு அதிகாரமும் உண்டென்றும்" நிபந்தனைகள் காணப்பட்டிருக்கிறது தாவா சொத்தில் எக்கிரீமெண்டு காலத்தில்

சுவாதீன பாத்தியதை அளிக்கப்பட்டதாக யாதொன்றும்காணப்படவில்லை. வியாஜ்ஜியம் அனுகூலமாய் முடிந்தால் மட்டும் அவ்வித பாத்தியதை ஏற்படுமென்று சொல்லலாம். அந்தக் காலமட்டும் வாதி மற்றவர்களுடன் கூட்டுபாத்தியஸ்தனுக இருக்கவேண்டும். சுவாதீன பாத்தியமும் பிறிதது அனுபவிக்கும் சிலாக்கியமும் வியாஜ்ஜியம் ஜயமானுல் தான் ஏற்படும். 32 I. A 113 15 மதராஸ் லா ஜர்னல் 197, 27 அலகபாத் 171-ம் இந்தக் கேசுக்கு உதவக்கூடிய தீர்மானமல்ல. அந்தக்கேஸில் கிறயம் பெற்ற ராஜாவால் கிறயத்தகை பூராவும் செலுத்தப்படாவிட்டாலும் சொத்து பாத்தியதையானது விக்கிறய காலத்திலேயே ராஜாவுக்கு ஏற்பட்டதால் அந்த பாத்தியதையைக்கொண்டு சுவாதீனமடைய தாவா செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்கேசின் சந்தர்ப்பத்திற்கும் தாவா எக்ரீமெண்டின் அம்சத்திற்கும் சம்பந்தமேகிடையாது.

ஆகவே வாதிக்கு எக்ரீமெண்டினுல் அக்காலத்தில் யாதொருபாத்தியதையும் ஏற்படவில்லை. வாதியின் தாவாதள்ளுபடியாகவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. XXV M. L. J. 301.

———0———

### சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்

*மதராஸ்*

### O. S. A. No. 102 of 1912-4 ஆகஸ்ட் 1913

### ரத்தின கிராமணி V8 வீரபத்திரய்யர்

மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் ரத்தின கிராமணி வகையராக்கள் வாதிகளாகத் தகப்பன செய்த ஸ்தாவர சொத்தின் பராதீனத்தை ஆக்ஷேபித்துக் கொடுத்த பிராதில் தோல்வியடைந்து அப்பீல் செய்ய உத்தேசித்து அப்பீல் வாய்தா கடந்த 10 தினங்களுக்குப்பின் அப்பீலை தாகல் செய்ததில்கோர்ட்டார் தாமதத்தைப்பற்றி சமாதானம் சொல்லும்படி கேட்டதில் தாமதத்தின் காரணத்தை பிரமாணப் பத்திரிகையால் மன்னிக்கவேண்டிய அதிகாரமுடைய அட்மிஷன் கோர்ட்டில் ஒரு ஜட்ஜியவர்களிடம் உத்தரவுக்காக அப்பீல் மிமோவும் ஷை பிரமாணப்பத்திரிகையும் வைக்கப்பட்டதில் வாதி தரப்பு வக்கிலின் சமாதானத்தை ஈரங்கிகேட்ட அட்மிஷன்கோர்ட் ஜட்ஜியவர்கள் எதிரிக்கு நோடீஸ் அனுப்பும்படி உத்தரவளித்தார்கள். அதாவது தாமதத்தைமன்னிக்கக்கூடாதென்பதற்குக் காரணமிருந்தால் அதைப்பற்றி எதிர்வாதம் செய்யும்பொருட்டு எதிரிக்கு நோடீஸ் அனுப்பவேண்டுமென்று உத்தரவாச்சுது. வாதி வக்கில் கோர்ட்டில் படி கட்டி எதிரிவகையராக்களுக்கு நோடீஸ் அனுப்பச் செய்யாமல் தாமே பிரதிவாதிகளுக்கு அட்மிஷன் கோர்ட்டார் செய்த உத்தரவைப்பற்றி நோடீஸ் கொடுத்து ஸர்வ் செய்துவிட்டார். வாய்தா மன்னிப்பு விஷயமாய் பைசல் ஈரங்கியானது அட்மிஷன் கோர்ட்டிலேயே நடைபெற்றது. ஆனுல் நோடீஸுக்கு உத்தரவளித்த ஜட்ஜியவர்கள் பைசல் ஈரங்கிகாலத்தில் அட்மிஷன் கோர்ட்டில் உட்காரவில்லை. வேறு ஜட்ஜியவர்கள் ஈரங்கி கேட்க நேரிட்டது. வாதி வக்கில் மூலமாய் நோடீஸ் பெற்ற பிரதிவாதிகளில் 5-ம் பிரதிவாதி தவிற மற்றவர்கள் ஈரங்கி காலத்தில் ஆஜராகி தாமதத்தை மன்னிக்கக்கூடாதென்று ஆக்ஷேபித்தும் கோர்ட்டார் தாமதத்தை மன்னித்து அப்பீலை ஏற்றுக்கொண்டார்கள். அப்பீல் ஈரங்கி விஜாரணைக்கு வந்தபொழுது 5-ம் பிரதிவாதிக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ வீ. வீ. ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் அப்பீல் வாய்தாவை மன்னிக்க அட்மிஷன் கோர்ட்டில் ஈரங்கிகேட்ட அப்பீல் தரப்பு ஜட்ஜியவர்களுக்கு அதிகாரவரம்பே கிடையாதென்றும் தவிற வாய்தா மன்னிப்பு விஷயமாய் எதிரிகளுக்கு நோடீஸ் ஸர்வ் செய்யப்பட்ட முறை ஒழுங்கீனமானதென்றும் ஆகையால் அந்த உத்தரவு சட்ட விரோதமானதென்றும் பிரதம ஆக்ஷேபனை செய்தார். அட்மிஷன் கோர்ட்டில் ஆஜராகி இவ்வித ஆக்ஷேபனைகளைச் செய்யாததற்குக் காரணமாக:—

அப்பீல் ஈரங்கிகாலத்தில் எதிரிகளின் ஆக்ஷேபனைக்குட்படுத்தி அட்மிஷன் கோர்ட்டார் வாய்தாகடந்து தாகலான அப்பீலை ஏற்றுக்கொண்டிருக்கிற வழக்கத்தை உத்தேசித்து நோடீஸ் கிடைத்தும் ஆஜராகி அட்மிஷன் கோர்ட்டில் ஆக்ஷேபிக்க வில்லையென்று சமாதானம் சொன்னுர். ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் அப்பீல் தரப்பில் அட்மிஷன் கோர்ட்டில் உட்கார்ந்து உத்தரவுசெய்த ஒரு ஜட்ஜியவர்களுக்கு



வாய்தா கடந்து தாகல் செய்யப்படும் அப்பீல்கள் ஹைகோர்ட் அசல் தரப்பின் தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்டாலும் வெளிஜில்லாக்களிலிருந்து வந்த அப்பீலானுலும் தாமதத்தை மன்னித்து அப்பீலை ஏற்றுக்கொள்ள அதிகாரவரமுண்டென்றும், பிரதிவாதி அட்மிஷன் கோர்ட்டில் ஆஜராகாமல் அப்பீல் ஈரங்கிகாலத்தில் நோடீஸ் அனுப்பப்பட்ட முறை தப்பென்று வாதிக்கக்கூடாதென்றும், ஆகவே அட்மிஷன் ஜட்ஜியவர்கள் செய்த மன்னிப்பு உத்தரவு முடிவான உத்தரவாகப் போய்விட்டபடியால் அந்த உத்தரவின்மேல் அப்பீல் செய்யும் முறையாக பிரதிவாதி இப்பொழுது ஆக்ஷேபிக்கிறதாக பாவிக்க நியாயமில்லையென்றும் அவ்வித உத்தரவுக்கு அப்பீல் உண்டோ இல்லையோ என்கிறவிஷயத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமல் 5 ம் பிரதிவாதிக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ வீ. வீ. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் செய்த பிரதம ஆக்ஷேபனையை நிராகரித்து விட்டார்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட் துரையவர்களோ மாறுன அபிப்பிராயம் கொண்டு வாய்தா கடந்த அப்பீலை ஏற்றுக்கொண்டது பிசகென்று 5-ம் பிரதிவாதி அப்பீல் ஈரங்கிகாலத்தில் ஆக்ஷேபிக்க நியாயமுண்டென்றும், தன்னைப்பற்றின மட்டில் அப்பீல்வாய்தா கடந்துவிட்டதாவென்ற பாயிண்டைப்பற்றி விவாதம்செய்ய லாயக்குண்டென்றும், பிரதம ஆக்ஷேபனை விஷயமாய்த் தீர்மானங்கொடுத்தார்கள். ரூல்ஸ்படிக்கு ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய அபிப்பிராயம் நிலைத்து பிரதம ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்ளப்படாமல் கேசின் தன்மையைப்பற்றி ஈரங்கி நடந்தது.

பிரதம ஆக்ஷேபனையைப்பற்றி ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய தீர்மானத்தில் சொல்லப்பட்ட காரணச்சுருக்கமாவது:- ஹைகோர்ட் அசல்தரப்பின் தீர்மானத்தின்பேரில் செய்யப்படும் அப்பீல்களுக்கு அசல் தரப்பு ரூல்கள் அநுசரிக்கப்படவேண்டுமென்றும் ஹைகோர்ட் அப்பீல் தரப்பு ரூல்கள் அவ்வித அப்பீல்களுக்கு ஏற்காதென்றும் வாதிக்கப்படுகிறது. அசல்தரப்பு ரூல்களால் அசல்தரப்பின் தீர்மானங்களின்பேரில் அப்பீல்செய்யும்காலத்தவணையை அதிகரித்துக்கொள்ளலாம். அது முறையிட்டைச்சேர்ந்தவிஷயமாகும். எதிர் ஆக்ஷேபனையில் அதிகாரவரம்பைப்பற்றிச் சொல்லப்படுகிறது. அப்பீல் தரப்பின் ரூல்களைக் கவனித்தால் காலாவதி ஆக்டில் ஏற்பட்டிருக்கிறவாய்தா கடந்தபின்யாதொரு அப்பீல்தாகலானுல் அந்தத்தாமதத்தைமன்னிக்கும்படி கேட்கிற விண்ணப்பத்தை சாதாரணமாக ஒரு ஜட்ஜியவர்கள் ஈரங்கிகேட்டு உத்தரவளிக்கவேண்டுமென்று அப்பீல் தரப்பின் 1-வது ரூலில் சொல்லியிருக்கிறது. அப்பீல் தரப்பு ரூலகள் ஹைகோர்ட்ஸ் ஆக்ட் 15-14-வது பிரிவுகளின் சட்டவிதிப்படி ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமான வாய்தா மன்னிப்பு விண்ணப்பமானது வேறு ஒரு ஜட்ஜியவர்கள்செய்த தீர்மானத்தின்பேரில்செய்கிற அப்பீல்மனுவாகமாட்டாது. காலாவதி ஆக்ட் 5-வது பிரிவில் கண்டிருக்கிறபடி வாய்தா கடந்தாலும் அப்பீலை ஏற்றுக்கொள்ளலாமென்ற அதிகாரத்தைச் செலுத்தும்படி ஒரு ஜட்ஜியவர்களை விண்ணப்ப மூலமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆகவே இவ்வித விண்ணப்பம் அசல் தரப்பின் தீர்மானத்தின்பேரில் செய்த அப்பீல் விஷயமாக செய்யப்பட்டாலும் சரியே அல்லது வெளி ஜில்லாக்களிலிருந்து வரும் அப்பீல் விஷயமாகச்செய்யப்பட்டாலும் சரியே அதிகாரவரம்பு ஒரே விதமாய்த்தான் ஏற்பட்டிருக்கிறது. அப்பீலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்படுகிறதேயொழிய அப்பீலின் வியவகாரத்தைப்பற்றித் தீர்மானம் செய்யும்படி ஒரு ஜட்ஜியவர்களை கேட்கிற விஷயமல்ல. ஆகவே ஒரு ஜட்ஜியவர்கள் இவ்வித விண்ணப்பத்தின்பேரில் யாதொரு உத்தரவளிக்கும்பொழுது அசல்தரப்பு அதிகாரத்தைச் செலுத்தினுர்களா அல்லது அப்பீல் தரப்பு அதிகாரவரம்பைச் செலுத்தினுர்களா வென்று தீர்மானிக்க வேண்டியதவசியமே யில்லை. சட்டத்தை அனுசரித்துப்பிறந்தரூலின்படி அதிகாரம்பெற்ற ஒரு ஜட்ஜியவர்கள் காலாவதி ஆக்ட் 5-வது பிரிவில் கண்ட அம்சத்தைப்பற்றி உத்தரவளித்தால் அது அதிகார வரம்பில்லாமல் செய்யப்பட்டதாக மதிக்கத்தகாது.

நோடீஸ் அனுப்புகிற விஷயத்தைப்பற்றி அசல்தரப்பு ரூல்களில் யாதொரு முறையும் ஏற்பட்டிருக்கிறதாவென்று கவனிக்குமிடத்து அட்மிஷன் ஜட்ஜியவர்கள்நோடீஸுக்கு உத்தரவளித்தமேல் வாதிவக்கில் அந்த உத்தரவைப்பற்றி எல்லா பிரதிவாதிகளுக்கும் நோடீ

ஸ் மூலமாய்த் தெரிவித்து விட்டார். இவ்விதமான நோடீஸ் ஒழுங்கல்லவென்றும் அது செல்லாதென்றும் வாதிக்கப்படுகிறது; அதாவது அசல்தரப்பு ரூலகளில் 155, 355-வது ரூல்களில் சொல்லியிருக்கிறபடி அப்பீல் விஷயமாய் யாதொரு வாய்தா வேணுமானால் இரண்டு ஜட்ஜிமார்கள் உட்காரும் அப்பீல்பெஞ்சியில் விண்ணப்பம் கொடுத்துக்கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அதைப்பற்றி எதிரிக்கு ஈரங்கி வாய்தாவுக்கு இரண்டுதினங்களுக்கு முன் நோடீஸ் மூலமாய்த் தெரியப்படுத்தி யிருக்கவேண்டுமென்றும் அவ்வித முறைகளை அனுசரிக்காமல் அனுப்பப்பட்ட மன்னிப்பு விண்ணப்பத்தைப்பற்றிய நோடீஸ் பிசகென்று சொல்லப்படுகிறது. 354-ம் ரூலின் அம்சமானது அப்பீல் அட்மிஷன் ஆனபிறகு அனுசரிக்கத்தக்கதென்று ஸ்பஷ்டமான வசனங்களுடன் ஏற்பட்டிருக்கிறது. 355-ம் ரூலில் அவ்விதமான வசனம் கிடையாது. அப்பீலுக்குச் சம்பந்தமான யாதொரு நடவடிக்கையும் இரண்டு ஜட்ஜிமார்கள்முன் உத்தரவாகவேண்டுமென்று சொல்லப்பட்டதில் "அப்பீல் விஷயமாய்" என்ற பதத்திற்கு விசாலமானகருத்துண்டாகுமானாலும், அப்பீல் அட்மிஷன் ஆனபிறகு யாதொரு சில்லறைநடவடிக்கைகளுக்காக அந்தரூல்ஏற்பட்டிருக்கிறதாகச்சொல்லவேண்டும். மன்னிப்பு விண்ணப்பம் கொடுக்கும் காலத்தில் அப்பீலே கிடையாது. தாமதத்தை மன்னித்து அப்பீலை ஏற்றுக்கொண்டால்தான் அப்பீல் என்றபெயர் உண்டாகும். அதன்பின் நடக்கும் நடவடிக்கைகளுக்குத்தான் 355-வது பிரிவு ஏற்கும். ஆகவே நோடீஸ் விஷயமாய் 155, 355-வது ரூல்களின் அம்சங்களைக் கவனிக்கத் தேவையில்லை. அப்பீல் செய்யவேண்டியதற்குக் காலாவதி ஆக்டின் வாய்தா முறை தடையாகிறதென்றும் ஷெ ஆக்டின் 5-வது பிரிவைப் பிரயோகித்து அப்பீலை தாகல் செய்வதற்காக தாமதத்தை மன்னிக்கவேண்டுமென்ற விஞ்ஞாபனத்தைப்பற்றி அசல்தரப்பு ரூல்களில் யாதொரு முறையும் காணப்படவில்லை. அட்மிஷன் ஜட்ஜியவர்கள் நோடீஸுக்கு உத்தரவளித்ததே யாதொரு சட்டமுறையை அனுசரித்ததாகச் சொல்லக்கூடாது. ஒருவனுக்கு விரோதமாக, அதாவது வாய்தாகடந்து அப்பீல் தாகல் செய்யப்பட்டதாக ஆக்ஷேபனை செய்யக்கூடிய எதிரிக்கு விரோதமாக, யாதொரு உத்தரவளிக்க வேண்டுமென்று கோரப்பட்டால் அப்படிப்பட்டவனுக்கு முன்தகவல் தெரியப்படுத்தி ஆக்ஷேபனையைக் கேட்கவேண்டியது நியாயமுறையாகும். அதையிட்டுத்தான் நோடீஸுக்கு உத்தரவாகியிருக்கிறது.

அசல் தரப்பின்பேரில் செய்யப்படும் அப்பீலுக்காக பிரத்தியேகமான ரூல் ஏற்படாத காரணத்தால் வெளி ஜில்லா அப்பீல்களைப்போலவே வாய்தாகடந்து தாகலான அப்பீல் மிமோக்களை ஏற்றுக்கொள்ளுகிறதா அல்லவாவென்று உத்தரவு பிறக்கும் பொருட்டு அந்த மிமோ அட்மிஷன் கோர்ட்டில் ஒரு ஜட்ஜியவர்களிடம் வைக்கப்படுகிறது. பலகையில் அந்த விஷயம் பிரசுரமாயிருப்பதால்பார்டியும்நேரில்ஆஜராகிதாமதத்தின்காரணத்தைத்தெரியப்படுத்திஉத்தரவுபெற்று வருகிறார்கள். இது வழக்கமுறையாகிறது. கோர்ட்டாரே உத்தரவுக்காக கட்டை ஒரு ஜட்ஜியவர்களிடம் அனுப்புவதற்குபதிலாக பார்ட்டியே விண்ணப்பம் கொடுத்து அது ரூல்படிக்கு நோடீஸின்பேரில் ஈரங்கிக்கு வருவது நல்ல வழக்கமாவென்று இப்பொழுது யோசிக்க அவசியமில்லை. அட்மிஷன் ஜட்ஜியவர்கள் செய்த உத்தரவு பிசகாவென்று மட்டும் கவனிக்கவேண்டியதாகும். அப்பீல் தரப்பு ரூல்களின் 76-வது ரூல்படி நோடீஸ்படிகட்டி அனுப்பப்படவில்லையென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஆனால் அந்த ரூல் அப்பீல் அட்மிட்டானபிறகு அனுசரிக்கப்படவேண்டிய முறையாகும்.

தவிர நோடீஸ் அனுப்பின முறை ஒழுங்கீனமாகச் சொன்னாலும் அதைப்பற்றி 5-ம் பிரதிவாதியைத் தவிர்த்த மற்ற எதிரிகள் ஆக்ஷேபிக்காமல்நோடீஸ்வாய்தாவுக்கு ஆஜராகியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அந்த ஒழுங்கீனத்தை ஆக்ஷேபிக்கவில்லை. 5-ம் பிரதிவாதியும் இப்பொழுது அப்பீல் ஈரங்கியாகும் காலத்தில் மன்னிப்பு உத்தரவை ஆக்ஷேபிக்கக்கூடாது. அந்த உத்தரவின்பேரில் அப்பீல்செய்து கொள்ளவந்ததாகச் சொல்லக்கூடாது. முடிவான மன்னிப்பு உத்தரவின்பேரில் அப்பீல் உண்டாவென்றும் தீர்மானிக்கத் தேவையில்லை. ஆகவே இரண்டு பிரதம ஆக்ஷேபனைகளும் பிரயோஜனமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.



ஹானரபில் ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட் துரையவர்கள் மாறான அபிப்பிராயங்கொண்டதற்குச் சொன்ன காரணச் சுருக்கமாவது:—

ஒரு ஜட்ஜியவர்கள் வாய்தாக்கடந்துதாகல் செய்த அப்பீலை ஏற்றுக்கொள்ள அதிகாரமுண்டென்று சொல்லத்தகுமானாலும் அட்மிஷன் ஜட்ஜியவர்கள் மன்னிப்பு உத்தரவளிக்குமுன் பிரதிவாதிகளுக்கு நோடீஸ் கோர்ட் மூலமாய் அனுப்பப்படாமல் வாதியின் வக்கில் கையொப்பம் செய்து பிரதிவாதிகளுக்கு நோடீஸ் கொடுத்தது சரியான முறையல்லவென்று சொல்லவேண்டும். ஆனால் 5-ம் பிரதிவாதியைத் தவிர மற்றவர்கள் அந்த ஒழுங்கீனத்தை ஆக்ஷேபிக்கவில்லை. 5-ம் பிரதிவாதியோ அந்த நோடீஸை மதியாமல் அந்த நடவடிக்கையில் சம்பந்தப்படாமலுமிருந்துவிட்டார். வக்கில் கொடுத்த நோடீஸில் ஈரங்கி வாய்தா இன்னதென்று குறிக்கப்படவுமில்லை. பலகையில் வாய்தாவைக்கண்டுபிடிப்பதற்குறிய விவரம் யாதொன்றும் நோடீஸில் குறிக்கப்படவில்லை. சரியான அதிகாரியின் கையொப்பத்துடன் நோடீஸ் அனுப்பப்படாத காரணத்தால் 5-ம் பிரதிவாதி அதை லட்சியம் செய்யவில்லை. கோர்ட்டாருடைய வீலும் அதிகாரியின்கையொப்பமுமில்லாத நோடீஸை அங்கீகரிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். ஒரு பார்ட்டியைக் கோர்ட்டுக்கு யாதொரு நடவடிக்கையின் ஆரம்பத்தில் ஆஜர்படுத்துவதற்குக் கோர்ட்டாருடைய முத்திரையுடனும் ஒப்பத்துடனும் கூடிய அறிக்கை அவசியமாகுமென்பதற்கு ரூல்களையும் சட்டங்களையும் படித்துப்பார்க்கத் தேவையில்லை. [அப்பீல் நடவடிக்கையானது புதிதாய்த் துவக்கப்படும் நடவடிக்கையாகவே மதிக்கப்படவேண்டும். ஆகவே அது விஷயமாய் எதிரியைக் கோர்ட்டுக்கு ஆஜர்படுத்தக் கோர்ட்டாருடைய நோடீஸ் அவசியமாகும். 5-ம் பிரதிவாதிக்கனுப்பிய நோடீஸில் கோர்ட்டார் முத்திரையுமில்லை. ஒப்பமுமில்லை. ஆகையால் அந்த நோடீஸ் செல்லாது.] ஜட்ஜியவர்களின் உத்தரவுப்படி நோடீஸ் அனுப்பப்பட்டதாக நோடீஸில் கண்டிருந்தாலும் சட்டப்படிக்கு கோர்ட்டாருடைய கட்டளைக்கு அத்தாட்சியான அடையாளங்களில்லாதபோனால் பிரயோஜனமில்லை. வாதி வக்கிலுக்கு முறைதெரியாமல் சந்தேகப்பட்டு, நோடீஸ் கோர்ட்டாரால் கையொப்பம் செய்து அனுப்பப்படுமோ அல்லது முன்வழக்கமில்லாத காரணத்தையிட்டு ரெஜிஸ்டிரார் நோடீஸை கையொப்பம் செய்ய மறுத்துவிடுவாரோ வென்று சந்தேகித்துத் தானே கையொப்பம் செய்தனுப்பி யிருந்ததாகச் சொன்னால், அந்த முறையால் வரும் பயனுக்கு அவர் ஜவாப்தாரியாகிறார். ரேஜிஸ்டிராரை கோர்ட் முத்திரையுடன் நோடீஸ் அனுப்பும்படி கேட்டுக்கொண்டும் அவர் மறுத்துவிட்டால் நோடீஸை எவ்விதமாய் அனுப்புகிறதென்று ஜட்ஜியவர்களையே கேட்கலாம். அப்படிச்செய்யாமல் வாதிவக்கில் தானே ஒப்பமிட்டு நோடீஸை அனுப்பியிருக்கிறார். சரியான அதிகாரியல்லாதவர் கொடுத்த நோடீஸினால் 5-ம் பிரதிவாதி எவ்விதமும் கட்டுப்பட நியாயமில்லை. ஆகையால் 5-ம் பிரதிவாதிக்குத்தகவலன்னியில் அவர் ஆஜரில்லாதபொழுது பிறந்த உத்தரவு அவரைக் கட்டுப்படுத்தாது. ஆகவே 5-ம் பிரதிவாதியை அட்மிஷன் ஜட்ஜியவர்களின் மன்னிப்பு உத்தரவு கட்டுப்படுத்தாது.

5-ம் பிரதிவாதி நோடீஸ் ஒழுங்கீனமென்ற ஆக்ஷேபனையை அப்பீல் ஈரங்கிகாலம் வரையில் செய்யாமல் தாமதித்தது பிசகென்றுவாதிக்காகச் சொல்லப்படுகிறது. அதாவது விரோதமாய் ஏற்பட்ட உத்தரவை மாற்றுவதற்கு யாதொரு நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால் அந்த உத்தரவு சரியென்று அங்கீகரித்ததாகச் சொல்லவேண்டுமென்றும், ஆகவே அந்த உத்தரவு அவரைக் கட்டுப்படுத்துமென்றும் வாதிக்கப்படுகிறது. 5ம்-பிரதிவாதியின் வக்கிலுக்கு நோடீஸ் அனுப்பப்பட்டதேயொழிய 5-ம் பிரதிவாதிக்கு நேரில் நோடீஸ் அனுப்பப்படவுமில்லை. உத்தரவின் தகவல் யாதொன்றும் அந்தப் பார்ட்டிக்குத் தெரிந்ததாகவும் ரூபிக்கப்படவில்லை. அப்பீல் அட்மிட்டாகி அப்பீல் நோடீஸ் ஸர்வானபிறகு தான் 5-ம் பிரதிவாதிக்கு அப்பீல் தாகலான தகவலும் அப்பீல் ஈரங்கி வாய்தாத்தேதியும் தெரியவந்திருக்கிறது.

12 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 35-ல் வாய்தா கடந்த சொற்ப தினங்களுக்குப்பின் தப்பான நோக்கத்தால் தாமதமேற்பட்ட சந்தர்ப்பத்தில் கோர்ட்டார் தாமதத்தை மன்னித்தபின் எதிரி இரண்டு வருஷகாலம்வரையில் ஆக்ஷேபிக்காமல் அதாவது அப்பீல் ஈரங்கிக்கு வருமட்டும் ஒன்றும் சொல்லாமலிருந்த விஷயத்தைக்கவனித்து

எதிரியின் ஆக்ஷேபணையை நிராகரித்து முந்திய மன்னிப்பு உத்தரவைக்காயப்படுத்தினதில், எதிரிமன்னிப்பு உத்தரவு பிறந்தபின் ரிவியூ விண்ணப்பமாவது கொடுத்திருக்கலாமென்றும் அப்படிச்செய்யாமல் அப்பீல் வாய்தா வருமட்டும் அசட்டையாயிருந்ததை எதிரிக்கு விரோதமாய் அனுமானித்துத் தீர்மானங் கொடுத்திருக்கிறார்கள். தாவா கேசில் வாதி அப்பீலை தாமதமாய் தாகல் செய்ததற்குறிய காரணத்தைப்பற்றி யாதொரு வாதமும் செய்யப்படவில்லை. 5-ம் பிரதிவாதி தாமதித்து ஆக்ஷேபணை செய்ததாக யாதொரு பாயிண்டும் எடுத்துப்பேசத்தேவையில்லை. அப்பீல் தாகலான 7-மாதங்களுக்குள் ஈரங்கி வாய்தா வந்துவிட்டது. அதில் இரண்டுமாதம் ரஜா நாட்களாகிவிட்டது. 5-ம் பிரதிவாதி மன்னிப்பு உத்தரவைப்பற்றி ரவியூ செய்திருந்தாலும இதைவிட சீக்கிரமாக ரிவியூ ஈரங்கிக்கு வந்திராது. ஆகவே 5-ம் பிரதிவாதி தாமதமாய் ஆக்ஷேபித்ததாகச் சொல்லத்தேவையில்லை. ஒரு உத்தரவு 5-ம் பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாதென்று சொன்னால் அதைப் பற்றி மாற்றவேண்டிய நடவடிக்கையெடுக்காத விஷயமானது அந்த உத்தரவைக் கட்டுப்படுத்தச் செய்யாது. யாதொரு பிந்திய நடத்தையால் அந்த உத்தரவை அங்கீகரித்திருக்கவேண்டும். 5-ம் பிரதிவாதி அவ்வித நடத்தையால் மன்னிப்புஉத்தரவை அங்கீகரித்ததாகச் சொல்லப்படவில்லை. ஒரு கீழ்கோர்ட் உத்தரவை மாற்றவும் அல்லது காயப்படுத்தவும் ஏற்படுகிறதீர்மானமல்லாதபடி, தாகல் செய்த அப்பீலின் தாமதத்தை மன்னிக்கும் உத்தரவானது ஒரு ஸ்பெஷலான நடவடிக்கையென்றும் அவ்வித ஸ்பெஷலான நடவடிக்கைக்கு மேற்கூறிய நியாயங்கள் ஏற்காதென்றும் சொல்லக்கூடாது. ஸ்பெஷலான நடவடிக்கையாக மதிக்கப்பட்டாலும் 5-ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ் அவசியமில்லையென்றுசொல்லத்தகாது. கொடுத்த நோட்டீஸ் ஒழுங்கீனமென்றும் சொல்வதற்கு ஸ்பெஷலான நடவடிக்கையென்ற பாவம் தடையாகாது. பிறந்த உத்தரவே செல்லத்தகாதென்று ஏற்பட்டால் அதை மாற்றுவதற்கு யாதொரு நடவடிக்கையும் எடுக்கத்தேவையில்லை. ஆகையால் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுக்கு முரணான அபிப்பிராயங்கொண்டு 5-ம் பிரதிவாதி வாய்தா மன்னிப்பைப்பற்றி அப்பீல் ஈரங்கிகாலத்தில் ஆக்ஷேபிக்கவுரயக்குள்ளவனென்று சொல்லப்பட்டது.

ஹானரபல் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய அபிப்பிராயம் காயமாகி, அப்பீல் வியவகாரம் ஈரங்கி நடந்து பைசலளிக்கப்பட்டது.

வியவகாரத்தைப்பற்றிய அப்பீல் தீர்மானத்தின் சுருக்கமாவது:—தகப்பன் குடும்ப சொத்துக்களைக் கிரயம், அடமானம் முதலிய நடவடிக்கைகளால் பராதீனம் செய்தது புத்திரர்களைக் கட்டுப்படுத்தாதென்று இந்த தாவா செய்யப்பட்டிருக்கிறது. புத்திரர்கள் வாதிகளாய்த் தகப்பனுடைய பராதீன நடவடிக்கைகளை ஆக்ஷேபிக்கிறார்கள். அசல் கோர்ட்டார் ருஜுபாரத்தை வாதிகளின்பேரில் வைத்து வாதி தரப்பு சாட்சிகளை விஜாரித்து திருப்திகரமான ருஜுபாகம் ஏற்படவில்லையென்று சொல்லி பிரதிவாதிகளின் வாதத்தையும் ஆக்ஷேபணைகளையும் கேளாமலே பிராதைத தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ருஜுபாரமானது கிரயம்,அடமானம்முதலியநடவடிக்கைகளால்சொத்தையடைந்த பிரதிவாதிகளைச் சேர்ந்ததாகவும் அவர்களை விஜாரியாமல் பிராதைத் தள்ளுபடிசெய்தது பிசகென்றும் வாதிக்காகச் சொல்லப்படுகிறது. ருஜுபாரத்தைப் பற்றிய தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாஸமாக ஏற்பட்டிருக்கிறது. 8 மதராஸ் 75-ல் ருஜுபாரம் கிறயம்பெற்றவர்களைச் சேர்ந்ததென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தகப்பன் செய்த விக்கிறயத்திற்குப் பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்று ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு கிறயம்பெற்றவர்களைச் சேர்ந்ததென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானத்தின் நியாயமானது ஒரு அலகபாத் கேஸின் தீர்மானத்தில் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. 29 மதராஸ் 200-ல் ரிபோர்ட்டாகியிருக்கும் பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் ருஜுபாரம் யாரைச் சேர்ந்ததென்ற பாயிண்டே தீர்மானிக்கப் படவில்லை. விக்கிறயகாலத்தில் யாதொரு கடன் ஏற்பட்டிருந்தால் அந்தக்கடனுக்காக சொத்து விக்கிறயம் செய்யப்பட்டால் முன் கடனுக்காக விக்கிறயம் செய்யவரென்ற சட்ட முறையைக்கொண்டு கிறயம்பெற்றவன் கிறயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாமென்ற விஷயம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது கிறயகாலத்தில் ஏற்பட்ட கடன் பழய கடனாகுமாவென்று யோஜிக்கப்பட்டிருக்கிறது. (1911) மதராஸ் வாரக்குறிப்புகளின் 50-லும், 31 அலகபாத் 176-லும் சொல்லியிருக்கிறபடி நமது ராஜதானியில் தகப்பன் செய்த அடமானத்தை, அவன்பேரில் பிறந்த அடமான டிக்கிரியை, அல்லது ஏலத்தைஆக்ஷேபிக்கிற மகன் தான் அந்தக்கடனைக் கொடுக்கக்கடமைப்பட்டவனல்லவென்று ருஜுப்படுத்தவேண்டும். 25 மதராஸ் லா ஜர்னல் 27-ல் பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் மக்களாகிய அப்பீல் வாதிகள் ருஜுப்படுத்தவில்லையென்று சொல்லி அவர்களுடைய கக்ஷிக்கு விரோதம் செய்திருக்கிறார்கள். மக்கள் பிரதிவாதிகளாக இருந்த நிலைமையில் மேற்கூறிய அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்க மக்கள் வாதிகளாய் வந்த இந்தக்கேசில் ருஜுப்படுத்த வேண்டியது நியாயமாகுமென்று சொல்லவேண்டும். ஷை பிரிவிகௌன்ஸில் அபிப்பிராயத்தையும் முற்றிலும் ஆதாரமாய்க் கொண்டு இந்தக்கேசைத்தீர்மானிக்க அவசியமில்லை அந்தக்கேசின் முழு வரலாறும் கீழ்கோர்ட்டாருடைய அபிப்பிராயங்களும் ரிபோர்ட்டில் பிரசுரிக்கப்படவுமில்லை.

இந்தக்கேசில் வாதிகள் பின் வருமாறு வாதம் செய்கிறார்கள். விக்கிறயம் முன் கடனுக்காக (முன் கடனை தீர்ப்பதற்காக) செய்யப்பட்டதென்று ஏற்பட்டால் முந்திய கடன் துர்விநியோகத்திற்காக ஏற்பட்டதென்று ருஜுப்படுத்தி கிறயத்தை நிராகரிக்கவேண்டிய கடமை மகனைச் சேர்ந்ததென்றும் மற்ற சந்தர்ப்பங்களால் செய்யப்படும் விக்கிறயங்களின் நியாயத்தைப்பற்றி ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு கிறயம் பெற்றவனைச் சேர்ந்ததென்றும், தாவா கேசில்வாதிகளின் ஆக்ஷேபணை மேல்கண்ட துர்விநியோகத்தைப் பற்றியதல்லவென்றும், ஆகவே கிறயம் அவசியமான காரியத்திற்காக மக்களையும் கட்டுப்படுத்தத் தக்கதாய் ஏற்பட்டதென்று கிறயம் பெற்றவர்கள் ருஜுப்படுத்தவேண்டுமென்றும் அப்படிப்பட்ட ருஜுபாகம் யாதொன்றுமில்லாமல் வாதியின்பிராது தள்ளுபடியானது பிசகென்றும் வாதிக்கப்படுகிறது. ஆனால் இந்தக்கேசில் வாதி வக்கீல் [illegible] ஸ்ரீ பார்த்தசாரதி அய்யங்காரவர்கள் அப்பீல் கிரௌண்டிலேயே பின்வருமாறு சொல்லியிருக்கிறார். வாதிகள் தங்கள்பேரில் ஏற்பட்டிருக்கிற ருஜுபாரத்தைத் திருப்திகரமாய்ச் செலுத்திவிட்டதாகக் கீழ்கோர்ட்டார் தீர்மானித்திருக்கவேண்டுமென்று அப்பீல் கிரௌண்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வசனங்களால் வாதியின் பேரில் ருஜுபாரமிருப்பதாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லவேண்டும். தவிற இஷ்யூக்கள் ஏற்பட்ட விதத்தைப் பார்த்தாலும் வாதிகளின்பேரில் ருஜுபாரம் ஏற்பட்டதாகச சொல்லவேண்டும். இஷ்யூவின் வாசகத்தை வாதிகள் ஒப்புக்கொண்டமையால் ருஜுபாரத்தையும் தாங்களே வகித்துக்கொண்டார்களென்று சொல்லவேண்டும். ஆகையால் வாதிகள் அப்பீல் கோர்ட்டில் வந்து ருஜுபாரம் தங்களைச்சேர்ந்ததல்லவென்றும், அது எதிரியைச் சேர்ந்ததென்றும் ஆக்ஷேபிப்பது சரியல்ல. வாதிகளின் அப்பீல்கிரௌண்டினாலும்பவியப்பட்டிருக்கிறார்கள்.

கடைசியாக ருஜுபாரம் வாதிகளைச் சேர்ந்ததாகச் சொன்னாலும் பிரதிவாதியை விஜாரணை செய்யாமல் பைசலளித்தது பிசகென்று வாதிக்கப்பட்டது. வாதிகளின்கேவலமான ருஜுபாகத்தால்பிரதிவாதிகள்ஜவாப்கொடுக்கவேண்டியஅம்சம்யாதொன்றுமில்லையாதென்றுஏற்பட்டால் அவர்களை விஜாரிப்பதவசியமில்லையென்று சொல்லவேண்டும். ஆகவே வியவகார சாரத்தில்அப்பீல் தள்ளுபடியாச்சுது. அப்பீல் வாய்தாகடந்து தாகலாகியும் மன்னிப்புபெற்றும் எதிர் ஆக்ஷேபணை நிராகரிக்கப்பட்டும் வாராம்சவிஷயத்தில்அப்பீல் தள்ளுபடியாச்சுது. XXIV M. L. J. 281

---

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட்

திருச்சிறாப்பள்ளி ஜில்லா

S. A. 2111 to 2114 of 1912

13 ஏப்ரல் 1914

அடைக்கமேஸ்திரி Vs முத்துசாமி அம்பலகாரன்

காலெஞ்சென்ற மூலபுருஷனுடைய பெண்சாதி கணவனுடைய எஸ்டேட்முழுவதையும்அடுத்த அனந்தர வாரிஸ்தாருடையசம்மதத்தின்பேரில்பராதீனப்படுத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 40 கல்கத்தா 721, 18 கல்கத்தாவாரக்குறிப்புகளின் 678இதுகளில்பிரசுரமாயிருக்கிற புல்பெஞ்சு கேசும் பிரிவி கௌன்ஸில் கேசும்

எஸ்டேட்டின் ஒருபாகம் மட்டும் பராதீனம்செய்யப்பட்ட விஷயத்தைப்பற்றிய தீர்மானங்களாகயிருக்கின்றன. அந்தத்தீர்மானங்கள் தாவாகேசுக்கு அனுசரிக்கத்தக்கவைகளல்லவென்றும் ஆகையால் எஸ்டேட் முழுவதையும் அனந்தர வாரிஸ்தாருடைய சம்மதத்தின்பேரில் விக்கிறயம் செய்யப்பட்டது சட்டவிரோதமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 24

———:O:———

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

——[o]——

அலகபாத் ஹைகோர்ட் தீர்மானத்தின் பேரில் செய்யப்பட்ட பிரிவிகௌன்ஸில் அப்பீல்.

*பாபு பாதுக்நாத் Vs முஸ்ஸம்மத் முன்னிதேய்*

ஷீயோ நாராயன் என்றவர் ஆக்ரா சப்கோர்ட்டில் 1898 மார்ச்சு 29-ல் பெற்ற அடமான டிக்கிரீயில், டிக்கிரீ தேதி முதல் 5-மாதங்களுக்குள் ஒரு முன் அடமானத்துகையைச் செலுத்தி வில்லங்கத்தைத் தீர்த்துக்கொள்ளாத பட்சத்தில் இந்த அடமான டிக்கிரீ செல்லத்தகாமற் போவதற்கு அத்தாட்சியாக பிராது டிஸ்மிஸ் ஆனதாக பாவிக்கப்படவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தது. அதாவது ஷீயோ நாராயன் அடமானத்துகை பூராவையும் அடமானதாருக்குச் செலுத்தாமல் ஒரு பாகத்தை முன் அடமானதாருக்குச் செலுத்துவதாய் ஒப்புக்கொண்டதாக ஷை அடமான தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருந்தும் அந்தப்படி முன் அடமானத்தைத் தீர்க்காமல் தஸ்தவேஜின்பேரில் தாவா செய்து பூராத்துகைக்கும் டிக்கிரீ வாங்க அபேக்ஷித்ததில் முந்திய அடமானக்கடனைத் தீர்த்துவிடும்படியான பொருப்பு அவர்பேரில் வைக்கப்பட்டிருந்தது. இல்லாவிடில் அவருடைய பிராது தள்ளுபடியாக வேண்டியதென்று கட்டளையிடப்பட்டிருந்தது. அந்தடிக்கிரீயின்பேரில் அப்பீலாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஆனால் முன் அடமானத்துகையைத்தீர்ப்பதற்கு வாய்தா 1900 ஆகஸ்ட் 9-மட்டும் தள்ளிவைக்கப் பட்டது. அதன்பேரில் பிரிவி கௌன்ஸில் அப்பீலும் செய்யப்பட்டு ஆனால் அப்பீல் மேல் நடத்தப்படாமல் 1904 டிசம்பரில் பிரிவிகௌன்ஸிலார் அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஷீயோ நாராயன் 1898-ல் தான பெற்ற சப்கோர்ட்டிக்கிரீயை 1901 செப்டெம்பர் 26-ல்பாபு பாதுக் நாத் என்றவருக்கு மேடோவர் செய்து விட்டார். 1907-ல் சப்கோர்ட்டில் ஷை டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக மேடோவர்தார்விண்ணப்பங் கொடுத்ததில் சப்கோர்ட்டாரால் குறிக்கப்பட்ட 5-மாத தவணைக்குள்ளாவது அல்லது அதற்குப் பின் கொடுக்கப்பட்ட வாய்தாவுக்குள் ஷியோநாராயணை் முன் அடமானத்துகையைச் செலுத்தாத காரணத்தால் பிராது தள்ளுபடியானதாக டிக்கிரீயின் கருத்தினால் ஏற்படுகிறதென்று சொல்லி அந்த டிக்கிரீயை நிறைவேற்றுவதற்கு நியாயமில்லையென்று விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலிலும் அதே அபிப்பிராயம் கொண்டு அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் மேடோவர்தார் பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்ததில் நிறைவேற்றுமனு தள்ளுபடியானதற்குக் காரணமாக காலாவதி ஆக்ட் 179-வது ஆர்டிகிலின் அம்சத்தைப் பிரயோகித்து தாவா விண்ணப்பத்திற்கு ஹைகோர்ட் அப்பீல் தீர்மானம் ஏற்பட்டமுதல் 3-வருஷ வாய்தா உண்டென்றும், மேல்நடத்தப்படாத காரணத்தால் டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தேதிமுதல் ஷை 3-வருஷ கெடு ஏற்படநியாயமில்லையென்றும் ஏனெனில் பிரிவி கௌன்ஸில் உத்தரவு ஒரு முடிவான பைசலாக பாவிக்கப்பட நியாயமில்லையென்றும் ஆகவே தாவா நிறைவேற்றுமனுவை, 1877-ம் வருஷத்திய காலாவதி ஆக்ட் 179-க்குச் சரியான புது ஆக்ட் 182-வது ஆர்டிகில்படி காலாவதி கடந்து தாகல் செய்யப்பட்ட காரணத்தால் தள்ளுபடி செய்திருக்கவேண்டுமென்று சொல்லி பிரிவி கௌன்ஸில் அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஒரு டிக்கிரீயின் கோர்ட் நகலை ரெஜிஸ்டர் செய்திருந்தால் அதை நிறைவேற்ற 6-வருஷகெடுவுண்டு. தாவா டிக்கிரீ ரெஜிஸ்டராகவுமில்லை. ஆகவே 6-வருஷ காலாவதி தாவா விண்ணப்பத்திற்கு ஏற்படாது. மூன்றுவருஷ காலாவதி, சப்கோர்ட் டிக்கிரீயைக் காயப்படுத்தின ஹைகோர்ட் டிக்கிரீ தேதிமுதல் கணிக்கப்படவேண்டும். இவ்வித காரணங்களால் பிரிவி கௌன்ஸில் அப்பீல் தள்ளுபடியாச்சுது XXVII M. L. J. 1



(சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்)

தஞ்சாவூர் ஜில்லா.

*நடேசபண்டார சந்நிதியவர்கள் Vs ராமலிங்கம் பிள்ளை.*

C. M. A. 128 fo 1911—25 நவம்பர் 1912

ஒரு தர்மகர்த்தாவை நீக்கி தர்மத்தைப் பரிபாலனம் பண்ணும்பொருட்டு நவீனமான முறைவிதிகளை ஏற்படுத்தவேண்டுமென்று கோரிக்கொள்ளும் பிராதை நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் தாகல் செய்ததில் தர்மபரிபாலனத்தைப்பற்றியஆக்டின் Religious Endowments Act 14, 18-வது பிரிவுகளின்படி இத்தகைய தாவாஜில்லாகோர்ட்டில் தாகல் செய்யப்படவேண்டுமென்றும் கோர்ட்டாருடையஅனுமதியைப்பெற்றுபிராதைநடத்தவேண்டியதாகுமென்றும் ஆக்ஷேபனைசெய்யப்பட்டது. ஸி. பீ. ஸி. 92-வது பிரிவின்1-வதுஉட்பிரிவில் a, g என்ற இரண்டு கிளாஸின்படி செய்யப்பட்டிருக்கிற இந்தப்பிராதுக்கு ரிலிஜியஸ் எண்டௌமெண்ட் ஆக்டின் சட்டமுறைகள் ஏற்காதென்றும் 1863-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட ஷை ஆக்டின் அம்சங்களைப்பற்றி ஸி. பி. ஸி-யில் ஸ்பெஷலான முறை விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியால் ஷை ஆக்ட்நமோதிலிருந்தபோதிலும் ஸி. பி. ஸியில் குறிப்பிடப்பட்டிருக்கிற முறைகளே பிரதானமாய் அனுசரிக்கப்படவேண்டுமென்றும் ஆகவே தாவாகேஸைப் பிடிக்க சப்கோர்ட்டாருக்கு அதிகாரவரம்புண்டென்றும், தவிர பிராதை தாகல் செய்த காலத்தில் சப்கோர்ட்டாருக்கு எல்லை அதிகாரம் ஏற்படாதிருந்தபோதிலும் பிராதை யாதொரு காரணத்தினால் வாபிஸ் செய்தபின் அதே பிராதை அந்த சப்கோர்ட்டிலேயே திரும்பவும் பயில்செய்த காலத்தில் சப்கோர்ட்டாருக்கு எல்லை அதிகாரவரம்பு உண்டாய்விட்டதாகவும் ஆகையால் 92-வது பிரிவின்படி சப்கோர்ட்டாருடைய அனுமதிபெற்று பயிலான இந்தப்பிராதுக்கு மேற்கூறிய ஆக்ஷேபனை ஏற்காதென்றும் சப்கோர்ட்டில் பிராதை இரண்டாவது தடவையில் பயில் செய்த பொழுது வேறு ஸ்டாம்பு ஒட்டப்படாத போதிலும் அந்த விஷயமானது சப்கோர்ட்டாருக்கு உண்டான அதிகாரத்தை விலக்க நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிராது [illegible] பிறகு சப்கோர்ட்டார் தர்மத்திற்குறிய வருமானங்களை வசூலித்து தர்மத்தை நடத்திவரும்படி ஒரு ரிஸீவரை நியமித்தார்கள்.

தர்மசொத்தின் சுவாதீனத்திலிருப்பவனை அப்புறப்படுத்துவதற்கு தாவாவில் பார்ட்டியாக இருக்கிறவனுக்கு தற்கால பாத்தியதை ஏற்பட்டிருந்தாலொழிய கோர்ட்டார் தாவாபைசலாகுமட்டும்ரிஸீவர்நியமனம்செய்து ஷை அனுபோகஸ்தனை விலகக்கூடாதென்று ஸி. பி. ஸி. ஆர்டர்41 ரூல் 1 (2)ல்சொல்லப்பட்டிருப்பதால்கோர்ட்டார்ரிஸீவரை நியமனம்செய்தது ஷை ரூலுக்குவிரோதமாயிருப்பதாகச்சொல்லப்படுகிறது. ஷை விதியானது தாவாவில் பார்ட்டிகளல்லாத மூன்றுவது மனிதர்களுடைய அனுபோகத்தைக் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டிருப்பதாயும் தாவாகேசுக்கு அந்த ரூலின் அம்சம் பிரயோகிக்கத் தக்கதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. (பார்ட்டிகளுடைய அனுபோகத்தை நீக்கி ரிஸீவரை நியமித்தது சட்டவிரோதமல்ல. பாத்தியா பாத்தியதையைப்பற்றி இரு கக்ஷிக்காரர்களுக்கும் விவாதம் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தாவாசொத்தின் அனுபோகம் மூன்றுவது மனிதரிடமிருந்தால் அவனுடைய அனுபோகத்தை விலக்கி ரிஸீவர் நியமிக்கப்படுவது உசிதமல்ல. ஏனெனில் பாத்தியதையானது இருகக்ஷிக்காரர்களில் ஒருவருக்காவது தற்பொழுதில் ஏற்பட்டிருந்திருக்கவேண்டும். அப்படிக்கில்லாத சந்தர்ப்பத்தில் மூன்றுவது மனிதனுடைய அனுபோகமானது பாத்தியதை ஸ்திரப்படுமட்டும் ஹிம்ஸிக்கப்படாமவிருக்கவேண்டும்.) 24 M L J 658.

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

கிருஷ்ணா ஜில்லா

S. A. 1051 of 1911—மார்ச்சு 1913

*ராதாகிருஷ்ணய்யா Vs ஜில்லா கலக்டர்*

சர்க்கார் ஜலத்தை நிலப் பாசனத்திற்காக உபயோகப் படுத்திக்கொள்ளும் விஷயத்தில் இனாம்தாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் நடந்த வியவகாரத்தில் ஹைகோர்ட்டார் கொடுத்திருக்கிற அபிப்பிராயங்களாவன:— இனாம்தாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் யாதொரு ஸ்பஷ்டமான உடன்படிக்கை ஏற்பாடிருந்தாலொழிய கவர்ன்மெண்

டார் இனும்தாரின் நிலங்களுடைய மாமூலான தண்ணீர் பாசன விஷயத்தில் தலையிடலாமென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரி. ஆனால் ஜில்லா கலக்டரும் இனும்தாரும் செய்துகொள்ளும் உடன்படிக்கையால் கவர்ன்மெண்டார் கட்டுப்படவேண்டிய அவசியமில்லையென்று கீழ்கோர்ட்டார் சொன்னது சரியே. என்றாலும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும் இனும்தாராலும் வெகு காலமாய் அனுசரித்து வரப்பட்ட யாதொரு நீர்பாசன முறையைக்கொண்டு, உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாக யூகிக்கலாமாகையால் அதிக்ஷயமான ருஜூபாகம் பூராவையும் விடும்படி வாதிக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். 26 மதராஸ் 66-ல் இனும்தார் இனாம் பட்டாவில் மாமூல் நஞ்சையென்று குறிக்கப்பட்டிருக்கிற நிலங்களுக்குரிய தண்ணீர் பாசன சவுகரியத்திற்கு பாதகமுண்டாகும்படி கவர்ன்மெண்டார் தலையிடக் கடமைப்பட்டவர்களல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (அதாவது தண்ணீரை இதராளுக்கு உபயோகப்படுத்தும்படி திருப்பிவிடக் கடமைப்பட்டவர்களென்று இதரான் வாதம் செய்து கவர்ன்மெண்டாருடைய சகாயத்தைத் தேடக்கூடாதென்று ஷை தீர்மானத்தால் யூகிக்கவேண்டும்.) 34 மதராஸ் 295-ன் 302-ல் மாமூல் நஞ்சை நிலங்களில் வழக்கப்பிரகாரம் தண்ணீர் பாசனமாகும் விஷயத்தில் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் எழுத்தாலும் வாக்குமூலங்களாலும் கொடுத்திருக்கிற இனும்தாருக்கு சாதகமான ஆதாரங்களை நல்ல ருஜூபாகமாக உபயோகப்படுத்தி, அதனால் கவர்ன்மெண்டாருக்கும் இனும்தாருக்கும் தண்ணீர் பாசன விஷயமாய் யாதொரு முறையானது ஒப்பந்தமாகி அதன்படி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்று யூகிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் ஒப்பந்தம் செய்துகொண்ட சந்தர்ப்பத்திலும் தங்களுடைய நிராக்ஷேபணையான அதிகாரத்தைச் செலுத்தி வரட்சியான காலத்தில் இனும் நிலங்களுக்குப்பாயும் தண்ணீரை இதர நிலங்களுக்குச் செல்லும்படி திருப்பிவிடலாமாவென்றும் அவ்வித அதிகாரத்தை ரயட்டுகளுக்குள் ஏற்படும் குறைவுகளின் விஷயமாய் மட்டும் செலுத்தலாமா அல்லது ஒரு இனும்தாரும் ஜமீன்தாரும் கவர்ன்மெண்டாருடன் செய்துகொண்ட ஒப்பந்தவிஷயத்திலும் கவர்ன்மெண்டார் ஷை சர்வாதிகாரத்தைச் செலுத்தலாமாமென்ற பாயிண்டைப்பற்றி இப்பொழுது தீர்மானிக்கவேண்டியதில்லை. கவர்ன்மெண்டாருடைய மராமத்து வேலைகளால் தண்ணீர் பாசனம் குந்தகப்பட்டதற்குமுன் தாவா நிலங்களில் சர்க்கார் தண்ணீர்வாலாயமாய்ப்பாசனமாகிவந்த விஷயமானது இனும்தாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அனுசரித்ததாவென்றும் அவ்வித ஒப்பந்தமானது யாதொரு நிரந்தரமானதா அல்லது இடையில் யாதொரு சம்பவங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் உட்பட்டதாவென்றும் இரண்டு புதிய இஷ்யூகள் ஏற்பட்டு அந்த விஷயங்களின் தீர்மானமுடிவின்பேரில் இனும்தாரின் பரிகாரம் ஏற்படவேண்டுமென்று சொல்லி அப்பீல் ரிமாண்டு செய்யப்பட்டது. 24 M. L. J. 678

———:O:———

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் & ஜஸ்டிஸ் சுந்தரய்யர்

மதுரை ஜில்லா

S. A. No. 252 of 1910—8 நவம்பர் 1911

வீரண்ணன் *Vs* வெள்ளப்பயல்

1864-ம் வருஷத்திய II-வது ஆக்ட் 42-வது பிரிவில் ரெவினியூ பாக்கிக்காக ஏலம்போடப்படுகிற நிலங்களை சர்வ வில்லங்க சுத்தியாய் கிரயப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. பாசனத்திற்காக விதிக்கப்படும் தண்ணீர்த்தீர்வையும் ரெவினியூ பாக்கியென்று ஷை ஆக்டின் 1-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே 1865-ம் வருஷத்திய VII வது ஆக்டின்படி விதிக்கப்படுகிற தண்ணீர் தீர்வை பாக்கிக்காக ஒரு நிலத்தை ஏலம்போட்டால் ஏலமெடுத்த கிரயதாருக்கு ஷை நிலத்தில் சர்வ வில்லங்க சுத்தியான பாத்தியதை ஏற்பட்டுவிடுகிறது. தாவா நிலத்தில் கிரயதாரனுகிய வாதியின் பாத்தியதை எதிரியின் அடமான வில்லங்கத்திற்குட் பட்டதல்ல. வருமான பாக்கிக்காகவும் ஆப்காரி ரெவினியூ பாக்கிக்காகவும் ஏலம்போடப்பட்ட நிலங்களுக்குரிய தீர்மான நியாயங்கள் இந்தக் கேசின் சந்தர்ப்பத்திற்கு தவாது. தாவா கேசில் தண்ணீர்தீர்வை பாக்கிக்காக நிலம் ஏலம் போடப்பட்டிருக்கிறது. ஏலம் போடுமுன் இனும்தாருக்கு நோடீஸ் கொடுக்கப்படவில்லையென்றும் ஆகவே தாவா ஏலம் செல்லாதென்றும் எதிரிக்காகச் சொல்லப்பட்டது. அது சரியான ஆக்ஷேபணையானாலும் அதைப்பற்றி கீழ்கோர்ட்டுகளில் பிரஸ்தாபிக்கப்படாத காரணத்தால் முதல் முதல் இந்தக்கோர்ட்டில் எடுத்துச் சொல்லப்பட்ட ஷை பாயிண்டை கவனிக்க நியாயமில்லை. ஆகவே 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது." இவ்விதமாக ரெவினியூ ஏலத்தை உறுதிபடுத்தி பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்வதற்காக தாவா செய்த வாதிக்கு அனுகூலமாக அடமானதாரின் ஆக்ஷேபணைகள் நிராகரிக்கப்பட்டன. XXIV M L J 511

———:O:———

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

கர்னூல் ஜில்லா

C. M. A. 44 of 1911—5 ஏப்ரல் 1912

வேமுல ஜம்புலய்யா *Vs* ராஜாம்மா

டி-மு கோர்ட்டில் தாவா செய்யப்பட்டு எதிரிகளுக்கு சம்மன்ஸ் ஸர்வானபிறகு ஆனால் ஏரங்கு நடக்குமுன் வியவகாரம் இருகக்ஷிக்காரர்களுக்குள் தீர்ந்துபோய்விட்டதற்கு அத்தாட்சியாக ஒரு ரசீது ஏற்பட்டிருந்தது. பிரதிவாதி அந்த ரசீதை டி-மு கோர்ட்டில் காட்டினதின்பேரில் தாவாவுக்குப் பிறகு இருவருக்குமுள்ள கணக்குகள் தீர்ந்துபோய்விட்டதாக ஷை ரசீதினால் அனுமானித்து ஆனால் அந்த ரசீதை ரிகார்ட்டில் ஆதாரவாகக் காட்டாமலும் வேறு சாட்சியம் யாதொன்றும் எடுக்காமலும் பிராதுக்குப்பின் கணக்கு தீர்ந்துபோய்விட்டதென்று ஒரு பிரதம இஷ்யூவில் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார். வாதியோ அந்த ரசீதினால் தன் தாவாவில் ஒரு பாகம் தான் பைசலாச்சுதென்று சொல்லி ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் ஷை ரசீதானது இருகக்ஷிக்காரர்களின் சமாதான ஏற்பாட்டுக்கு அத்தாட்சியாகமாட்டாதென்றும் அந்த ரசீதினால் வழக்கின் ஒருபாகம் மாத்திரம் தீர்ந்ததாக வாதிக்கு ருஜூப்படுத்த இடங் கொடுக்கப்படவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டு மறு ஏரங்கிகேட்டு பைசலளிக்கும்படி டி-மு கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டது. அந்த ரிமாண்டு ஆர்டரின்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

டி-மு கோர்ட்டார் தாவா ஸெட்டில் ஆட்விட்டதா என்ற ஒரே இஷ்யூவைப்பற்றிமட்டும் யாதொரு ருஜூ அம்சத்தையும் ஏற்படுத்தாமல் தீர்மானித்த முறையானது இருகக்ஷிக்காரரின் சம்மதத்தின்பேரில் ஏற்பட்டதாகச் சொல்லப்படவுமில்லை. இந்த ரசீதைமட்டும் ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன் கருத்துப்படி பைசல் அடைய இருகக்ஷிக்காரர்களும் ஒப்புக்கொண்டதாகவும் சொல்லப்படவில்லை. ஒரு தாவாவில் பிரதம இஷ்யூவைப்பற்றி யாதொரு தீர்மானமடைந்து கேஸ் முழுவதையும் பைசல் செய்துவிட்டால்மட்டும் அப்பீல் கோர்ட்டார் அந்த இஷ்யூவைப்பற்றி வித்தியாஸமான அபிப்பிராயம் கொள்ளும்பட்சத்தில் மற்ற இஷ்யூக்களைப்பற்றி விஜாரணை செய்யும்படி ரிமாண்டு உத்தரவளிக்கலாமென்றும், ஆனால் இந்தக்கேசில் டி-மு கோர்ட்டார் கேசின் மொத்தமான அம்சமும் ஸெட்டில் ஆச்சுதாவென்ற விஷயத்தைப்பற்றி தீர்மானமடைந்தமையால் அந்த பாயிண்டானது ஒரு பிரதம இஷ்யூவாகபாவிக்கப்படக்கூடாதென்றும் ஆகவே ஜில்லா கோர்ட்டார் ரிமாண்ட் ஆர்டர் செய்தது பிசகென்றும் பிரதிவாதிக்காக வாதம் செய்யப்பட்டது, ஆனால் 9 மதராஸ் லாடைம்ஸ் 373-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி ரிமாண்டு உத்தரவு செய்வதற்கு பிரதம பாயிண்டின்பேரில்மட்டும் தீர்மானமாகி கேஸ்முழுவதும் கீழ் கோர்ட்டாரால் பைசலாயிருக்கவேண்டிய அவசியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தாவா கேசில் டி-மு கோர்ட்டார் கேஸை விஜாரணை செய்யவுமில்லை. ரசீதை ஆதாரமாக எடுத்துக்கொண்டு அதை ரிகார்டில் வைக்கவுமில்லை. ஆகவே இத்தகைய ஒழுங்கீனங்களுடன் ஏற்பட்டிருக்கிற பைசலை மாற்றி மறு விஜாரணைக்காக கேஸை ரிமாண்டு செய்வது மிகவும் அவசியமாகும். ஜில்லா கோர்ட்டாருடைய ரிமாண்டு உத்தரவு காயமாச்சுது. XXIV M. L. J. 512

———:O:———

ஜஸ்டிஸ் சுந்தரய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

மதுரை ஜில்லா

S. A. 473 of 1910—9 அக்டோபர் 1911

கருதப்பராவுத்தன் *Vs* பாவாமொய்தீன் சாகிப்

தீர்ப்பின் சுருக்கம்:— இந்தக்கேசில் A ஆதரவானது ஒரு ப்ராமிஸரி நோட்டா

அல்லவா என்று தீர்மானிக்கவேண்டியதாயிற்று. தஸ்தவேஜானது பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:— "நான் தங்களிடம் நாளது தேதியில் வாங்கின ஜவுளியின் கிறய ரூபா 600-யும் தங்களுக்கு வேண்டும்போது செலுத்தக்கடவேனாகவும்" என்றும் "நான் தங்களுக்கு எழுதிக்கொடுக்கிற ப்ராமிஸரி நோட் என்னவென்றால்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஆதாவது கடன் பாக்கித்தொகையை வேண்டும்போது கொடுப்பதாக எழுதப்பட்டிருக்கிறதும் தவிர அந்த தஸ்தவேஜை ப்ராமிஸரி நோட்டென்றும் குறித்துச் சொல்லியிருக்கிறது. அப்படியிருக்க தாவா தஸ்தவேஜை பிராமிஸரி நோட்டென்று சொல்லவேண்டியதவசியமாகும். தஸ்தவேஜில் உபயோகப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்தைக் கொண்டு அதை ப்ராமிஸரி நோட்டா அல்லவாவென்று நிர்ணயிக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. தவிர யாதொருநிபந்தனையுமில்லாமல் எழுதிக்கொடுக்கிறவன் பாக்கித்தொகையைக் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளவேண்டியது நோட்டின் முக்கிய அடையாளமாகும். பத்திரத்தின் மொத்த கருத்தினால் எழுதிக்கொடுத்தவன் யாதொரு தொகையைச்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறதாக ஏற்பட்டால் போதாது. இவ்விதமான பரிட்சைசெய்து தாவா தஸ்தவேஜை கவனித்தால் பிரதிவாதி வாதியின் மேடோவர்தாருக்கு ரூ 600-யும் யாதொரு நிபந்தனையன்னியில் கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதை ப்ராமிஸரி நோட்டென்றே சொல்லத்தகும். 21 மத்ராஸ் 46, 22 பம்பாய் 989, 7 L. J; C. P. 214-ஆகிய தீர்மானங்கள் வாதிக்காக எடுத்துக் காட்டப்பட்டு தாவா தஸ்தவேஜு பிராமிஸரிநோட்டல்லவென்று வாதிக்கப்பட்டது. ஆனால் அந்தக்கேசுகளில் கடன் தொகையைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டதாக வசனமே நோட்டில் கிடையாது. யாதொரு தொகையைப் பெற்றுக்கொண்டதாகவும், அந்தத்தொகைக்கு உத்தரவாதம் செய்வதாகவும் ஒரு கேசில் எழுதப்பட்டிருக்கிறது. இன்னொன்றில் யாதொரு தொகைக்கு வட்டியுடன்தான் உத்தரவாதம் செய்வதாய்க்குறிக்கப்பட்டிருக்கிறது. இன்னொன்றில் யாதொரு [illegible] சிற்சில மாதங்களுக்குப்பின் ஜவாப்தாரியென்று கண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவைகளை பிராமிஸரி நோட்டல்லவென்று தீர்மானிக்கப்பட்டது நியாயம்தான். 92 E. R. 409-ல் யாதொருதொகைக்கு ஜவாப்தாரியென்று எழுதிக் கொடுக்கப்பட்ட தஸ்தவேஜானது பிராமிஸரி நோட்டென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த தாவாவில் தஸ்தவேஜானது பிராமிஸரி நோட்டென்று குறிக்கப்பட்டுமிருக்கிறது. தொகையைக் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே தாவா தஸ்தவேஜு ப்ராமிஸரி நோட்டென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் சுந்தரய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

(தஞ்சாவூர் ஜில்லா)

S. A. 286 to 288 of 1910—

20 அக்டோபர் 1911.

வைத்தியனாதய்யர் Vs கிருஷ்ணசாமி அய்யர்.

வைத்தியனாதய்யர் என்ற பிரதிவாதி தன்னை சில நபர்கள் எதிர்த்து அடிக்கவந்ததாகவும் கிருஷ்ணசாமி அய்யர் வைத்தியனாதய்யர், வெங்கட்ராமய்யர் என்ற மூன்று வாதிகளும் எதிர்க்கவந்தவர்களுக்கு உடந்தையாயிருந்ததாகவும் ஷை வாதிகள் உடந்தையாயிருந்ததற்கு அவர்கள் உபயோகப்படுத்தின சிலவார்த்தைகளே அத்தாட்சியாகிறதென்றும் சொல்லி எதிர்க்கவந்த பேர்வழிகளுடன் மூன்று வாதிகளையும் எதிரிகளாய்ச் சேர்த்து கிரிமினல் கோர்ட்டில் அஸ்ஸால்ட் குற்றத்திற்காகவும் உடந்தைக்காகவும் பிராது கொடுத்ததில் மூன்று வாதிகள்பேரில் குற்றம் யாதொன்றும் ஏற்படாமல் அவர்களைப் பற்றினமட்டில் பிராது தள்ளுபடியாச்சுது. மூன்று வாதிகளும் பிரதிவாதியின் பேரில் மன்னார்குடி டி-மு கோர்ட்டில் தனித்தனியாகத் தங்கள்பேரில் மாச்சரியத்துடன் பொய்ப்பிராது கொண்டுவந்ததைப் பற்றி மான நஷ்டப்பிராது தாகல் செய்தனர். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் கும்பகோணம் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் வாதிகளுக்கனுகூலமாய்த் தீர்மானித்து நஷ்டப்பரிகாரம் அளித்தார்கள். பிரதிவாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் ரத்தாகி மூன்று அப்பீல்களையும் மறு விசாரணை கேட்டுப் பைசல் கொடுக்கும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹை



கோர்ட்டார் ரிமாண்டு உத்தரவில் சொன்ன காரணச்சுருக்கமாவது :— சப்கோர்ட்டார் அப்பீல் தீர்மானத்தில் மூன்று வாதிகளும் உடந்தைக் குற்றத்திற்குப் பாத்திரமாகும்படி கிரிமினல் பிராதில் கண்ட வார்த்தைகளைப் பிரயோகித்தது வாஸ்தவமா அல்லவாவென்று தீர்மான அபிப்பிராயம் யாதொன்றையும் தீர்ப்பில் ரிகார்ட் செய்யாமல் அவ்வித வார்த்தைகளை வாதிகளில் ஒவ்வொருவரும் உபயோகித்ததாகவே வைத்துக்கொண்டாலும் அவர்கள்பேரில் உடந்தைக்குற்றம் சாட்டுவதற்கு நியாயமான காரணமும் அனுமானமும் கிடையாதென்று பிரதிவாதிக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார். சரியான காரணமிருந்து அவர்கள்பேரில் உடந்தைக்குற்றம்சாட்டினதாக ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு பிரதிவாதியைச்சேர்ந்ததென்று நினைத்து அப்படிப்பட்ட ருஜுபாகம் இந்த தாவாவில் பிரதிவாதியால் விடப்படவில்லையென்று தீர்மானித்து மேற்கூறியபடி சப்கோர்ட்டார் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்போலும். பிரதிவாதியின் சாட்சியம்சத்தால், வாதிகள் அந்தவார்த்தைகளை உபயோகப்படுத்தினதாக மட்டும் ஏற்படுகிறதென்றும், அதனால் அவர்கள் மற்ற எதிரிகளுடைய குற்ற நடத்தைக்கு உதவியாயிருந்ததாக அனுமானிக்கவேண்டுமென்று பிரதிவாதிக்காகச் சொல்லப்படுகிறதென்றும், சப்கோர்ட்டார் தீர்ப்பில் கண்டெழுதி அவ்விதமாய் அனுமானித்து வாதிகளின்பேரில் உடந்தைக்குற்றம்சாட்டுவது நியாயமாகாதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்போலும். இதனால் ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு பிரதிவாதிகளைச் சேர்ந்ததென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாச்சரியத்[illegible]பொய் பிராது கொடுத்தவன்பேரில் நஷ்டப்பிராது செய்யும் தாவாக்களில் கிரிமினல் பிராது கொடுக்கத்தக்க நியாயமான காரணங்கள் இல்லையென்று வாதி ருஜுப்படுத்தவேண்டுமேயொழிய பிரதிவாதி அவ்வித காரணங்களிலிருந்ததாகவும் அதனால் தான் கிரிமினல் பிராது கொடுத்ததாக ருஜுப்படுத்தவேண்டிய தவசியமில்லை. [illegible] தன்பேரில் கிரிமினல் பிராதைக் கொடுத்ததற்குப் போதுமான காரணங்களில்லையென்றும் மாச்சரியத்தால் தன்பேரில் பிரதிவாதி பொய்ப்பிராது கொடுத்தாரென்றும் ருஜுப்படுத்தி நஷ்டப்பரிகாரம் தேடவேண்டும். கிரிமினல் பிராது கொடுக்கத்தக்க நியாயமான காரணம் [முகாந்தரம்] என்னவென்று யூகிப்பதிலும் சப்கோர்ட்டார் தப்பான அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் சரியான காரணத்தைக் கண்டறிவதற்கு குற்றம் சாட்டப்பட்டவனைக் கோர்ட்டார் தண்டிக்க ஏதுகரமிருக்கிறதா வென்றும் அவனுடைய நடத்தை எம்மட்டில் குற்றமாகுமென்றும் பிராது கொடுக்குமுன் கவனித்துப்பார்க்கவேண்டுமென்றும் சப்கோர்ட்டாருடைய கருத்தாக ஏற்படுகிறது. ஒவ்வொருவனுக்கும் சட்டம் தெரியவேண்டுமென்றும் பிரதிவாதி பிராது கொடுக்குமுன் கவனித்திருக்கவேண்டிய விஷயமானது சாதாரணமான சட்டபாயிண்டாகுமென்றும் ஒருவன் குற்றவாளிகளை நேரில் தூண்டிவிட்டாலொழிய அவனை உடந்தைக்குற்றத்திற்குட் படுத்தக்கூடாதென்று யாவருக்கும் தெரிந்த விஷயமென்றும் சப்கோர்ட்டார் சொல்[illegible] பிரதிவாதி அவ்விதமாய் கவனித்துப் பார்க்காம[illegible] வாதிகளையும் குற்றப்படுத்தி கிரிமினல் பிரா[illegible] கொடுத்தது சரியல்லவென்று தீர்மானித்திருக்கிறார்கள். பிராது கொடுக்குமுன் எதிரிகள் தண்டனையடையக் கூடுமாவென்று கவனித்துப் பார்க்கவேண்டிய தவசியமில்லை. எதிரி குற்றம் செய்ததாக நம்புவதற்குப் போதுமான காரணமிருக்கிறதாவென்று மட்டும் கவனித்துப் பிராது கொடுக்கவேண்டும். இந்தக்கேசில் வாதிகள் உபயோகப்படுத்தின வார்த்தைகள் அவர்களை உடந்தைக்குற்றம் செய்ததாக நம்புவதற்குப் போதுமான அம்சமாகுமா வென்று தீர்மானிக்கவேண்டியது சப்கோர்ட்டாரைச் சேர்ந்த விஷயமாகும். (அது ருஜுபாயிண்டாகும். ௨-வது அப்பீலில் அதைப்பற்றி ஹைகோர்ட்டார் அபிப்பிராயம் கொடுக்க சட்டமில்லை. ஆகவே ரிமாண்டு உத்தரவு செய்ததற்கு இது ஒரு காரணமாச்சுது. தவிர நஷ்டப்பிராதில் வாதி ஜயமடைவதற்கு மாச்சரியத்தையும் நியாயமான காரணக்குறைவையும் ருஜுப்படுத்தவேண்டியதாகும். மாச்சரியத்தைப் பற்றி யோஜிக்கையில் சப்கோர்ட்டார் பின்வருமாறு தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள்:—'ஒவ்வொரு வாதியும் எதிரிகள் குற்றத்திற்குறிய நடத்தையை எம்மட்டில்செய்திருக்கிறார்களென்றும் அதைப்பற்றி தன்னிடம் என்ன ருஜுபாகமிருக்கிறதென்றும் நிதானித்துப் பார்க்காமல் நியாயமான ஆதாரமன்னியில் முற்றிலும் கவலைத்தாழ்

ச்சியாய் ஆலோசனையில்லாமல் கருணையும் வாதிற்றவாளிகளாகச் சேர்த்துப் பிரதிவாதி பிராது கொடுத்திருக்கிறார்" என்றும் ஆகையால் அது மாச்சரியத்தைக் காட்டுகிறதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். சரியான காரணம் இருக்கிறதாவென்று யோஜித்துப் பார்க்காவிட்டால் மாச்சரியக்கருத்து ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது. ஒரு பிராது மெய்யோ பொய்யோவென்று லக்ஷியம் செய்யாமல் பிராது கொடுத்திருந்தால் மாச்சரியம் என்ற கருத்தை யூகிக்கலாம். அதற்குத் தீர்மானங்களிருக்கின்றன. ஆனால் சரியான காரணங்களிருக்கின்றனவா இல்லையாவென்று யோஜிப்பதில் கவலைத்தாழ்ச்சியாயிருந்தால் மாச்சரியம் என்ற கருத்துவேற்படாது. அன்றியும் மாச்சரியம், காரணமின்மை ஆகிய இரண்டு அம்சங்களும் வாதியால் ருஜுவாகியிருக்கவேண்டும். இல்லாவிடில் நஷ்டப்பிராதில் வாதி ஜயமடைய நியாயமில்லை. ஆகவே சப்கோர்ட்டாருக்குர் மேற்கூறிய நியாயங்களைக் கவனித்து அப்பீலை மறு ஈசங்கிகேட்டுப் பைசலளிக்கவேண்டுமென்று ரிமாண்டு உத்தரவளிக்கப்பட்டது. XXIV MLJ 515.

---

ஜஸ்டிஸ் ; வாலிஸ் & ஜஸ்டிஸ் : சதாசிவய்யர்

சித்தூர் ஜில்லா.

C. M. A. 66 & 67 of 1912-15 ஏப்ரல் 1914

குமார வெங்கட பெருமாள் கார்வேட் நகர் மைனர் ராஜா அவர்கள்

*Vs*

வேலாயுத ரெட்டி & சுப்பிரமணிய அய்யர்.

கார்வேட் நகர் ராஜாவின் பேரில் 1890 மேமீ 2உ ல் ஏற்பட்ட அடமான டிக்கிரீயைநிறைவேற்றும்பொருட்டு வாதிகள் 1910-ம் வருஷத்திய மனு நம்பர் 52 & 33-ல் நிறைவேற்றுதலுக்காக விண்ணப்பம் கொடுத்ததில் ஷை மனுக்கள் டிக்கிரீ ஏற்பட்ட 12-வருஷங்களுக்குப்பின் தாகல் செய்யப்பட்ட காரணத்தால் அவைகளுக்கு காலாவதி தோஷம் சொல்லி எதிர்வாதம் செய்யப்பட்டு ஜில்லாகோர்ட்டார் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் டிக்கிரீயை நிறைவேற்றுவதற்கு அனுமதிகொடுத்துவிட்டார்கள். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லாகோர்ட் அபிப்பிராயம் பிசகென்று ஏற்பட்டு டிக்கிரீகளுக்கு 12 வருஷ வாய்தா கடந்துவிட்டதாகவும் ஆகவே அவைகளை நிறைவேற்ற லாயக்கில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. அப்பீல் தீர்ப்பின் சுருக்கமாவது:—டிக்கிரீ 1890 மே 3-ல் பிறந்திருக்கிறது. டிக்கிரியின் ஷரத்தானது டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 89-வது பிரிவின்படி ஏற்படாமல், டிக்கிரீயான தொகையை அடமான சொத்தை ஏலம்போட்டு வசூலிக்கலாமென்று சொல்லப்பட்டதும் தவிர, பூரா டிக்கிரீத்தொகைக்கும் பிரதிவாதியின்பேரில் ஆளைப்பொருத்தும் டிக்கிரீயளிக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படிக்கு அடமானசொத்தை முதலில் ஏலம்போட்டு வசூலிக்கப்படும் தொகை டிக்கிரியின் செல்வழிக்குக் குறைவாயிருந்தால்மட்டுமே பாக்கித்தொகைக்காக ஆளைப்பொருத்து டிக்கிரீயளிக்கிற வழக்கமாகும். அப்படியானால் அடமான சொத்திலிருந்து வசூலானது போக மிகுதிக்காக பிரதிவாதியின் இதரமான சொத்தின்பேரில் தொடரலாம். தாவா கேசில் டிக்கிரீப்படிபிறந்தமுதலிலேயே இதரமான சொத்தின்பேரில் தொடர்ந்து பூராத்தொகையையும் வசூலிக்க நியாயமுண்டு. வாதி அவ்விதமாகவே இதரமான சொத்தின்பேரில் அதாவது சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒருதாலூகாவின் பேரில் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக 1905-ல் ஒரு நிறைவேற்று மனுக் கொடுத்திருக்கிறார். அந்த மனுவுக்கு 12-வருஷ காலாவதி தோஷமில்லை. ஏனெனில் டிக்கிரீ 1890-மே யில் பிறந்தும் அதன்பின் எஸ்டேட்டானது கோர்ட் ஆப் வார்ட்ஸ் வசத்தில் வைக்கப்பட்டிருந்தது. தாவா டிக்கிரீகளும் நிறைவேற்றுதலுக்காக ஜில்லா கலக்டருக்கு மேடோவர் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஜில்லா கலக்டர் நிறைவேற்று நடவடிக்கையை நடத்தவில்லை. ஜில்லா கலக்டரிடம் டிக்கிரீ பைசலாகாமல் நின்ற 6-வரும் 7-மாத காலத்தை கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்ட்படிக்கு 12-வருஷ காலாவதியிலிருந்து விலக்கவேண்டியது நியாயமாகும். அப்படி விலக்கிப்பார்த்தால் 1905-ல் வாதி கொடுத்த மனுவுக்குக் காலாவதி தோஷமில்லை. 1910-ல் வாதி கொடுத்த மனுவுக்கும் காலாவதி தோஷமில்லையென்பதற்கு வாதி இரண்டு கார



OFFICE OF THE ... REGISTRAR 15 AUG 1914 MADRAS

ணம் சொல்லுகிறார். (1) எஸ்டேட்டானது திரும்பவும் 1907 ஆகஸ்ட் 17 முதல் 1911 ஜனவரி 15 வரை கோர்ட் ஆப் வார்ட்ஸ் வசத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் ஆகவே அந்தக்காலத்தையும் விலக்கிக் காலாவதி கணித்தால் தாவா விண்ணப்பத்திற்கு 12-வருஷ காலாவதி தோஷமேற்படாதென்று சொல்லப்படுகிறது. அந்தக் காலத்தில் டிக்கிரீகள் நிறைவேற்றுதலுக்காக ஜில்லா கலக்டரிடம் அனுப்பப்படாமலிருந்தபோதிலும் வாதி கிடைத்தபரிகாரத்தையடையும் பொருட்டு, எதிரிகளின் சொத்துக்களின் பேரில் அடமான டிக்கிரீயடையும்பொருட்டு வேறொரு வழியில் நடவடிக்கையை அதிகாரவரம்பில்லாத ஒரு கோர்ட்டில் நடத்தி அந்தக் கோர்ட்டார் அதை அதிகாரவரம்பின்மையால் பிடிக்காமல் போனதால் தெரியாமையால் ஷை நடவடிக்கையை நடத்தின காரணத்தால் ஏற்பட்ட காலதாமதம் காலாவதி ஆக்ட் 14-வது பிரிவின்படி விலக்கப்படவேண்டுமென்றும், அப்படிக்கு விலக்கிப்பார்த்தால் தாவா மனுவுக்கு 12 வருஷ காலாவதி தோஷம் ஏற்படாதென்றும் வாதிக்கப்படுகிறது. ஜில்லா கலக்டருக்கு டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக அனுப்பாமலும் நிறைவேற்றுதலுக்காக வேறு கோர்ட்டுகளில் யாதொரு நடவடிக்கையும் எடுக்காமலும் வாதி வேறொரு வியவகாரம் நடத்தினது காலாவதி ஆக்ட் 14-வது பிரிவின் அம்சத்திலடங்கிய விஷயமாகாது. (வாதி அதேபரிகாரமடையும்பொருட்டு வேறு நடவடிக்கை நடத்தத்துவக்கும்பொழுது கோர்ட் ஆப் வார்ட்ஸுக்கு அனுப்பப்பட்ட டிக்கிரீயை வாபீஸ் வாங்கிக்கொண்டார்போலும். ஆகையால் 2-வது தடவையில் எஸ்டேட்டானது கோர்ட் ஆப் வார்ட்ஸ் மானேஜ்மெண்டுக்குச் சென்றபொழுது வாதி நிறைவேற்றுதலுக்காக டிக்கிரீயை கலக்டரிடம் அனுப்பியிருந்தால் அந்தக்காலம் கூடிவரும். அப்படிச் செய்யப்படவில்லை.)

இரண்டாவதாக 1905-ம் வருஷத்தில் செய்யப்பட்ட மனுவுக்குக் காலாவதி தோஷமில்லாதபடியாலும் அந்த மனுவில் எதிரியின் இதரமான சொத்தைஏலம்போடும்படி கோரப்பட்டதாலும், தாவா மனுவும் அதேவிதமாக இருக்க இது முந்திய மனுவின் தொடர்ச்சியான நடவடிக்கையென்று பாவிக்கப்பட வேண்டுமென்றும் முந்திய மனு பைசலாகாமலிருப்ப[illegible]வே தாவா மனுவுக்குத் தனியாக காலாவதி தோஷம் ஏற்பட நியாயமில்லையென்றும் வாதிக்கப்படுகிறது. அதற்காதாரமாக 22 மதராஸ் லா ஜர்னல் 139-ம், 26 மதராஸ் லா ஜர்னல் 83-ம் எடுத்துக்காட்டப்பட்டது.

22 மதராஸ் லா ஜர்னல் கேசில் வாதி தன் ஏஜண்டின் வசமிருந்த கணக்கு புஸ்தகங்களை அடைவதற்காக தாவாசெய்து அந்தப்பிராதில் ஏஜண்டினால் செல்லாகவேண்டிய பாக்கியைப் பற்றி பின்னால் வேறு தாவா செய்வதாகச் சொல்லியிருந்தார். தொகையை வசூலிப்பதற்குரிய காலாவதி கடந்துபோன சமயத்தில் முந்திய பிராது பைசலாகாதிருந்தமையால் காலாவதி தோஷம் பாதிக்காமலிருக்கும் வண்ணமாகக் கோர்ட்டார் முந்திய பிராதிலேயே பாக்கி விஷயமான பரிகாரத்தையும் சேர்த்துக் கேட்கும்படி பிராதைத் திருத்திக்கொடுக்க அனுமதி கொடுத்திருக்கிறார். ஸி. பி. ஸி. ஆர்டர் VI ரூல் 17-ன்படி திருத்த அனுமதி கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வியாஜ்ஜியம் பைசலாகுமுன் இடையில் எச்சமயத்திலும் பிராதையும் ஸ்டேட்மெண்டையும் திருத்திக்கொடுக்கும்படி கோர்ட்டார் அனுமதி கொடுக்கலாமென்று ரூல் 17-ல் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காலாவதி தோஷமாகிற பரிகாரத்தை வாதிக்கு உயிர்ப்பிக்கும் வண்ணமாக பிராதைத் திருத்த அனுமதிகொடுப்பது யுக்தமான காரியமல்லவென்று சொல்லவேண்டும். 19 Q! B. D. 394-ஐப் பார்க்கவும். 26 மதராஸ் லா ஜர்னல் கேசிலோ ஏலத்திற்கு அனுமதிகொடுக்கப்பட்ட அடமான சொத்தின்பேரில்தொடராமல்இதரமானசொத்தின்பேரில்வாதிதொடர்ந்தமையால்நிறைவேற்று மனுவுக்குடிக்கிரீதேதிமுதல் காலாவதி கணிக்கப்பட்டு தோஷம் ஏற்படும் என்ற காரணத்தால் அந்த தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு கோர்ட்டார் மனுவைத்திருத்தி அடமான சொத்தின்பேரில் தொடர்வதாய் எழுதும்படி அனுமதிகொடுக்கப்பட்டது. இந்தக்கேசில் வாதி அடமானமில்லாத இதரசொத்தாகிய ஒரு தாலூகாவிலுள்ள நிலங்களின்பேரில் தொடரும்படி 1905-ம் வருஷத்தில் விண்ணப்பம் கொடுத்திருக்க 1910-ல் வேறு இரண்டு தாலூக்காக்களை ஏலம்

போடவேண்டுமென்று கோறப்பட்ட இந்த மனுவை முந்திய மனுவின் தொடர்ச்சியாக பாவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. முந்திய விண்ணப்பம்பெண்டிங்கிலிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. என்றாலும் பிந்திய விண்ணப்பத்தில் காலாவதி ஆக்ஷேபனைக்கிடங்கொடாமல் அதை முந்திய மனுவின் தொடர்ச்சி நடவடிக்கையாக பாவிப்பது நியாயமல்லவென்று சொல்லவேண்டும். விண்ணப்பத்தை திருத்த முன்னதிரிக்குடுருக்கிற டாத்தியதைக்குக்கெடுதிண்டாக்கும் வண்ணம் திருத்திக்கொடுக்கும் சிலாக்கியதைத் தரக்கூடாது. சில அபூர்வமான சமயங்களில் திருத்த அனுமதி கொடுக்கலாமென்றாலும் இந்தக்கேசின் சந்தர்ப்பத்தில் திருத்த விடக்கூடாது. ஆகவே தாவா மனுக்கள் காலாவதிதோஷமென்றே தீர்மானிக்கப்படவேண்டும். வாதிகளின் விண்ணப்பங்கள் தள்ளுபடியாகி அப்பீல் அனுகூலமாக முடிந்தது. ஹானரபில் ஜஸ்டிவாலிஸ் துரையவர்கள் மேல்கண்ட அபிப்பிராயங்களுடன் உத்தரவளித்திருக்க, ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் அதே முடிவான தீர்மானம் கொடுத்ததில் ஸி. பி. ஸி. 153-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி எதிரியாதொரு முறைப்பிசகால் காலாவதி முதலிய ஆக்ஷேபனை செய்ய இடமில்லாமற் போகுமானாலும் நீதிக்குறைவை நிவர்த்திக்கும் பொருட்டு கோர்ட்டார் எச்சமயத்திலும் எதிரியின் சவுகரியக்குறைவை மதியாமல் பிராதைத் திருத்திக்கொடுக்கும்படி உத்தரவுசெய்ய அதிகாரமுடையவர்களாயிருக்கிறார்களென்றும், ஆனால் இந்தக்கேசில் வாதி நிறைவேற்றுவதில் மிகவும் அசட்டையாகயிருந்ததாகவும் அதிக தாமதம்செய்து இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாலும் தாவா மனுவைத் திருத்தி காலாவதி தோஷத்தை நிவர்த்திக்கும்படியான சவுகரியம் அடைய லாயக்குள்ளவனல்லவென்று அபிப்பிராயங்கொடுத்து பிரதிவாதியின் அப்பீலுக்கு அனுகூல உத்தரவளித்தார்கள். XXVII M L J 25.

---

### அலகபாத் ஹைகோர்ட் தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட

## பிரிவி கௌன்ஸில் அப்பீல்.

### 18 மார்ச்சு 1914

### மகாபீர் ப்ரஸாத் Vs முஸ்ஸம்மத்தாஜ் பேகம்

முஸ்ஸம்மத் தாஜ்பேகம் என்ற ஒரு கோஷாஸ்திரீயும் அவளுடைய இளைய சகோதரனாகிய சுல்தான் மகம்மத் கான் என்றவனும் சேர்ந்து 1895-ம் வருஷத்திற்கு முன் அவர்களுடைய பிதாவின் சொத்துக்களில் பாகம் கிடைக்கவேண்டுமென்று குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களின்பேரில் வழக்கெடுத்து பாக டிக்கிரீயும் பெறறார்கள். அந்த வியவகாரத்தை நடத்துவதற்கு பாபு ரகுபீர்ஸரன் என்றவர் வக்கிலாக நியமிக்கப்பட்டிருந்தார். அசல் கோர்ட்டில் பாக டிக்கிரீயானபிறகு ஆனால் அப்பீல் வாய்தா கடக்குமுன் முஸ்ஸம்மத்தாஜ் பேகம், சயித் சுல்தான் மகம்மத் ஆகிய இருவரும் சேர்ந்து முஸ்ஸம்மத்தாஜ் பேகம் வசத்திலிருக்கப்பட்ட சில குடும்ப சொத்துக்களைத் தங்கள் வியவகாரத்தை நடத்திவந்த வக்கில் பாபு அவர்களுக்கு ரூ 8000-க்கு அடமானம் வைத்து அடமான தஸ்தவேஜில் இருவரும் கையொப்பமிட்டு ரெஜிஸ்தர் செய்துகொடுத்தார்கள். தஸ்தவேஜானது வக்கில் பாபு அவர்களின் தகப்பனார் பேருக்குப்பேரிலாவலாக எழுதப்பட்டது. அடமானத்தொகை ரூ8000-ல் ரொக்கமாய் செலுத்தப்பட்ட ரூ 4773 போக பாக்கித் தொகைகள் சயித் சுல்தான் மகம்மத்கான் என்றவரால் ஏற்பட்டிருக்கிற கடன் பாக்கிகளைத் தீர்ப்பதற்காகச் சென்றுவிட்டது. அந்த கடன்களில் அதிகமான தொகையானது ஷெ வக்கில் பாபு அவர்களுக்கே செல்லாகவேண்டியதாயிருந்தது. ஆகவே சுல்தான் மகம்மதுகான் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கு அவனுடைய சகோதரிக்குத் தனிமையான பாத்தியதையுள்ள சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும். அடமான தஸ்தவேஜில் பின்வரும் ஷரத்தும் ஏற்பட்டிருந்தது. அதாவது பாக டிக்கிரிப்படிக்கு குடும்ப சொத்துக்களில் எந்த அயிடங்கள் முஸ்ஸம்மத் தாஜ்பேகம் சாகிபா அவர்களுடைய பாகத்திற்கு விதிக்கப்படுகின்றனவோ அவைகளையே தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருக்கிற சொத்துக்களுக்குப் பதிலாக அடமான



சொத்தென்று பாவிக்கப்பட வேண்டுமென்று காணப்பட்டிருந்தது.

இவ்விதமாய்ஏற்பட்டிருந்த அடமானதஸ்தவேஜின் பேரில் வக்கில் பாபு வகையராக்கள் தஸ்தவேஜில் கண்டவிதமாக வட்டிக்கு வட்டியும் கணக்கிட்டுக்கூடும் அசல் வட்டியுள்பட மொத்த பாக்கியை வசூலிக்கும்பொருட்டு மீரட்டில் அடிஷனல் ஜட்ஜியவர்கள் முன் 1909-ல் வியாஜ்ஜியம் செய்ததில் முஸ்ஸம்மத்தாஜ்பேகம் ஸாகிபாவுக்கு பாகத்தில் கிடைத்த சொத்து பாகத்தை அடமான சொத்தாகபாவித்து அந்த சொத்தைப் பொருத்து டிக்கிரீயளிக்கவேண்டுமென்று கோறப்பட்டது. பிரதிவாதியோ எதிர் ஆன்ஸரில் தஸ்தவேஜின் விவரம் தனக்குப் படித்துக் காட்டப்படவில்லையென்றும் ஆகையால் அந்த தஸ்தவேஜானது செல்லத்தகாதென்றும் வட்டிக்கு வட்டி ஏற்படுத்தினது அநீதியானதென்றும் பாகத்தில் கிடைத்த சொத்தானது அடமானம் வைக்கப்பட்டதாக பாவிக்கப்பட நியாயமில்லையென்றும் அவ்வித அம்சம் தஸ்தவேஜில் காணப்பட்ட தகவல் பிரதிவாதிக்குத் தெரியவராதென்றும் தவிற தனக்கு பாகத்தில் ஏற்பட்டசொத்தானது அடமான தஸ்தவேஜில் கண்டிருக்கிற சொத்துக்கு நான்குமடங்கு அதிக விலைமதிப்புடையதென்றும் அதன்பேரில் வாதிகள் தொடர்வது நியாயமாகாதென்றும் பலவாராக ஆக்ஷேபிக்கப்பட்டது. அசல்கோர்ட்டார்பிராதில்கண்டபடிவட்டிக்காக டிக்கிரீயளிக்காமல் வட்டித் தொகையை மட்டும் குறைத்து தஸ்தவேஜை பிரதிவாதிக்குச்சரியாய் படித்துக் காட்டப்பட்டதாக ருஜு அம்சம் கிடையாதென்று அபிப்பிராயப்பட்டும் ஆனால் அந்த விஷயம் பத்திரத்தை முற்றிலும் நிஷ்பிரயோஜனமாக்கத்தகாதென்றும் ஏனெனில் அடமான சொத்தானது தஸ்தவேஜில்குறிக்கப்பட்டதற்கு பதிலாக வேறு அயிடங்களாக மாற்றப்படவேண்டுமென்ற வசனம் பிரதிவாதிக்குத் தெரியாவிட்டால், அந்த அம்சம்மட்டும் நமோதுக்குவரக்கூடாதேயொழிய மற்றப்படி அடமான தஸ்தவேஜானது வீணாய்ப்போக நியாயமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு வட்டியைக் குறைத்து தஸ்தவேஜில் குறித்திருந்த சொத்தைப்பொருத்து மட்டும் வாதிகளுக்கு டிக்கிரீயளித்தார்கள். வாதிகள் ஹைகோர்ட்டில் வட்டியைக் குறைத்தது பிசகென்று அபீல் செய்தார்கள். பிரதிவாதியும் தஸ்தவேஜானது செல்லாதென்றும் ஆகையால் அதன்மேல் வாதிகளுக்கு டிக்கிரீயளித்தது பிசகென்றும் அப்பீல் செய்தாள். ஹைகோர்ட்டார் வாதிகள் வட்டி விஷயமாய் செய்த அப்பீலைத் தள்ளுபடி செய்ததுமல்லாமல் கீழ்கோர்ட் டிக்கிரீயை முற்றிலும் ரத்து செய்து வாதிகளின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதிகள் பிரிவி கௌன்ஸில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட் தீர்மானம் காயமாகி வாதிகளின் பிராது தள்ளுபடியானது நியாயமென்று ஏற்பட்டு பிரிவி கௌன்ஸில் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:— பிரதிவாதியாகிய ஒரு கோஷா ஸ்திரீக்கு வக்கிலாகயிருந்து பாக வியாஜ்ஜியம் நடத்தினவரே அவளுக்கு கடன் கொடுக்கும் சவுக்கார் நிலமையை தரித்துத் தான் கொடுத்த கடனைத் திரும்பி யடைவதற்கு ஆதாரமாக அவளால் ஒரு அடமான தஸ்தவேஜையும் எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார். பத்திரத்தில் கையொப்பமிடுகிறவர்களுக்கு அதின்கருத்தின்னதென்றும்கையொப்பமிட்டதினால் என்ன பலன் சம்பவிக்கலாகுமென்றும் தெரியுமாவென்று கோர்ட்டார் கவனித்து அறியவேண்டிய சந்தர்ப்பம் இந்தக்கேசில்பரிபூரணமாக இருக்கிறது. அவ்விதபரிட்சைசெய்து தஸ்தவேஜின் உண்மையை அறிவதற்கு இதைவிட மேலான சந்தர்ப்பமில்லை. (ஏனெனில் எழுதிவாங்கினவர்பார்ட்டியின் வக்கிலாக யிருக்கிறார். பார்ட்டியோ கோஷாஸ்திரீயாகவுமிருக்கிறாள்.) இவ்வித சந்தர்ப்பத்தில் கையொப்பம் செய்த பிரதிவாதிக்கு பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கிற அம்சங்கள் யாவற்றும் நன்றாய்த்தெரியுமாவென்றும் இந்த அடமான நடவடிக்கை முழுவதும் நல்லெண்ணத்துடன் உண்மையாக ஏற்பட்டதாவென்று ருஜுப்படுத்தும்படி வாதிகளைக் கட்டாயப்படுத்தி உண்மையை அறியவேண்டியது கோர்ட்டாருடைய கடமையாகும். இந்தக்கேசில் வாதிகள் இரண்டு அம்சங்களிலும் சரியான ருஜுக் கொடுக்கவில்லை. பத்திரத்தை பிரதிவாதிக்குப் படித்துக்காட்டியதாகவும் ருஜுவாகவில்லை. நடவடிக்கை நியாயமாகவும் உண்மையாகவும் ஏற்பட்டதென்ற ருஜுவாகமும் வாதிகளால் விடப்படவில்லை. இரண்டு கீழ்கோர்ட்டாரும் தஸ்தவே

ஜை பிரதிவாதிக்குப்படித்துக் காட்டவேயில்லையென்று நம்புகிறார்கள். தஸ்தவேஜின் நிபந்தனைகள் மிகவும் அபரிமிதமான கடுமையுள்ள ஷரத்துக்களடங்கியதாயிருப்பதாலும் அதில் கண்ட அம்சங்கள் இன்னதென்று பிரதிவாதிக்குத் தெரியாதென்றும், ஏனெனில் அவைகள் தெளிவாய்ப் படித்துக் காட்டப்படவில்லையென்றும், ஆகையால் தஸ்தவேஜானது முற்றிலும் செல்லத்தகாதென்றும் வாதிகளுக்கு விரோதமாகச்சொல்லவேண்டும். அசல் விஜாரணை செய்த முதல் கோர்ட்டார் தீர்மானத்தில், பத்திரத்தில் பிரதிவாதியினுடைய சகோதரன் ஜாமீன்டாகக் கையொப்பம் செய்திருப்பதாலும் அவனுடைய இரண்டு இனத்தார்கள் ரெஜிஸ்டர் சாட்சிகளாய் ஒப்பமிட்டிருப்பதாலும் தஸ்தவேஜின் அம்சங்கள் பிரதிவாதியின் பந்துக்களுக்குத் தெரிந்த விஷயமென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பிரதிவாதியின் சகோதரன் தன்னுடைய கடன்கள் தீர்ந்து போகிறதற்காக இந்தப்பத்திரம் வழிவிட்டபடியால் அவர் ஆக்ஷேபிக்காமல் பிரதிவாதியின் கையொப்பத்தைத் தந்திரமாய் வாங்க அக்கரையுடையவனாயிருந்திருக்க வேண்டுமென்பதை கீழ்கோர்ட்டார் கவனிக்கவில்லை. தவிர ரெஜிஸ்டர் சாட்சியொப்பம் வைத்திருக்கிற பந்துக்கள் பிரதிவாதியின் விவாக ஏற்பாட்டுக்குச் சம்மதம்கொடுக்காமல் தடைப்படுத்திக்கொண்டும் கடைசியில் சொத்துக்கள் யாவற்றையும் தங்களுக்கு மாற்றிவிட்டால் மட்டும் விவாக ஏற்பாட்டுக்குச் சம்மதிப்பதாகச சொல்லியிருக்கிறார்கள். இவ்வித ஆசையுடைய இனத்தார்களுக்கு பத்திரத்தின் அம்சங்கள் இன்னதென்று தெரிந்தபோதிலும் அதில் உள்ள லாப நஷ்டங்களை பிரதிவாதிக்கு எடுத்துக்காட்டும் நல்லதன்மை ஒருநாளுமிருந்திருக்காது. ஆகையால் பிரதிவாதியின் இனத்தாருக்குத் தெரிந்தபோதிலும் பிரயோஜனமில்லை. வாதிகளுக்கு தாவா தஸ்தவேஜின் பேரில் யாதொரு பரிகாரமும் கிடைக்க நியாயமில்லை. மேற்கூறிய காரணங்களால் பிரிவிகௌன்ஸில் அப்பீல் தள்ளுபடியாச்சுது. XXVII M L J. 13

---

ஜஸ்டிஸ் டையாப்ஜீ

மதுரை ஜில்லா

## Crl R. Petition No. 431 of 1913

தொப்புளன் Vs சங்கர நாராயணய்யர்

வாதி சங்கரநாராயணய்யருக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு அனுபவிக்கிற டெனெண்டாகிய 9-வது எதிரி தொப்புளான் என்றவன் பேரிலும் அவனுடைய ஆட்களின்பேரிலும் ஷை நிலங்களிலுள்ள சில மரங்களை எதிரிகள் வாதியின் தகவலும்உத்தரவுமன்னியில் வெட்டி எடுத்துக்கொண்டுபோய் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டதாகச் சொல்லி வாதி சிவகங்கை சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இ.பு. கோ. 379-வது பிரிவின்படி திருட்டுக்குற்றம் சாட்டியதில் 9-வது எதிரியாகிய தொப்புளான் மட்டும் திருட்டுக்குற்றத்திற்காக அபராத தண்டனையடைந்தான். தேவகோட்டை டிப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்களும் அந்த தண்டனையை காயப்படுத்தினார்கள். அதன்பேரில் 9-வது எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாகல்செய்ததில் கீழ்கோர்ட தீர்மானங்கள் ரத்தாகி எதிரி குற்றவாளியல்லவென்று ஏற்பட்டு செலுத்தப்பட்ட அபராதம் வாபீஸ் ஆகவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் உத்தரவில் சொல்லப்பட்ட காரணங்களாவன:— திருட்டுக்குற்றம் நிலைக்காதென்று பரிஷ்காரமாய் ஏற்படுகிறது. கவர்ன்மெண்ட் வக்கீலவர்களும் வாதியும் அது விஷயத்தை ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. மரங்களில் வாதிக்கு ஜாயிண்டான சம்பந்தம் உண்டென்று ஏற்பட்டபோதிலும் அவைகள் 9-வது எதிரியின்வசத்தில் (சுவாதீனத்தில்) இருந்ததாக கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். [அப்படியிருக்க 9-வது எதிரியின்பேரில் திருட்டுக்குற்றம் ஏற்பட நியாயமில்லை.] இவ்விதமான சந்தர்ப்பத்தில்ஆதாவது சொத்துமற்றவனுக்கும்கூட்டு பாத்தியதையாகயிருந்தும் சுவாதீனம் ஒருவனிடத்திலிருக்கும்சந்தர்ப்பத்தில் 26மதராஸ் 481ஐ அனுசரித்து அந்த சொத்தை வைத்திருப்பவனுடைய சுவாதீனமானது தனிமையானதென்று மதிக்கப்படவேண்டியதாகும். ஆகவே 379 ம் பிரிவின்படி எதிரி குற்றவாளியாக நியாயமில்லை." ஆனால் 26 மதராஸ் 481-ல் சொல்லி



யிருக்கிற அம்சங்கள் முழுவதையும் அனுசரித்து எதிரியின்பேரில் ஏற்பட்ட திருட்டுக்குற்றத்தை மாற்றி 403, 424-வது பிரிவுகளின்படி வாதிக்குச் சொந்தமாயுள்ள சொத்தை எதிரி தன்னுடைய சொந்த உபயோகப் படுத்திக்கொண்டதாகக் குற்றஞ் சாட்டி தண்டனையைக் காயப்படுத்தலாமென்று வாதிக்காகச் சொல்லபடுகிறது. அப்படிச்சு மாற்றுவது எதிரிக்கு மிகவும் அநீதியாக ஏற்படும். திருட்டுக்காக நடந்த விஜாரணையில் மேற்கூறிய 403, 424-வது பிரிவுகளில் காணப்படவேண்டிய அம்சங்கள் யாதொன்றும் யோஜிக்கப்படவில்லை. இப்பொழுது கீழ்கோர்ட்டார் [illegible] முறைப்படி [illegible] எதிரிக்கு [illegible] ருதியைச்செலுத்தும் முறையாகாது. ஆகையால் கீழ்கோர்ட்டார் எதிரியை தண்டித்தது பிசகென்று சொல்லி அபராதம் வாபீஸ் ஆகவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் டையாப்ஜி & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

கிருஷ்ண ஜில்லா.

## S. A. 1537 & 1326 of 1912-15 ஏப்பிரல் 1914

நாராயணசாமி நாயுடு Vs வெங்கண்ண

மாடூர், நிதடவோல் என்னும் எஸ்டேட்டுகளுக்கு ரிஸீவராக நியமிக்கப்பட்டிருக்கிற கோபிசெட்டி நாராயணசாமி நாயுடுவென்ற வாதி எஸ்டேட்டைச் சேர்ந்த சில நிலங்களின் பாத்தியஸ்தர்களாகிய 2-3 பிரதிவாதிகளிடமிருந்து சாகுபடிக்குத்தகைக்கு வாங்கி அனுபவிக்கிற 3-ம் பிரதிவாதியின்பேரில் பெஜவாடா டி-மு கோர்ட்டில் கொடுத்த பிராதில் ஒரு ஊற்றோடையிலிருந்து உண்டாகும் ஜலத்தை பரதிவாதி நியாயப்படி ஓடைக்கண்டையிலிருக்கும் நிலங்களுக்கு மட்டும் பாசனம்செய்துகொள்ளவேண்டியதாயிருக்க தான் சாகுபடி செய்கிற எல்லா நிலங்களுக்கும் ஷை ஓடையின் தண்ணீரைக் கால்வழியாய்க் கொண்டுபோகக் கூடாதென்று டிக்லேரேஷன் டிக்கிரீயளிக்க வேண்டுமென்று கோறிக்கொண்டார். டி-மு கோர்ட்டார் வாதிக்கு யாதொரு பரிகாரம் கிடைக்க நியாயமில்லையென்று சொல்லி பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் வாதிக்கு வியாஜ்ஜியமூல மிருப்பதாகத் தீர்மானித்து தாவா கால்வழியாகச் செல்லும் தண்ணீரை 1-ம் பிரதிவாதி எல்லா நிலங்களுக்கும் உபயோகப்படுத்திக்கொள்ளப்போகிறானென்ற பயத்தினால் இந்த கையபரிகாரத்தைத் தேட லாயக்குள்ளவராகிறாரென்று சொல்லி தாவா ஓடைவழியாகச் செல்லும் தண்ணீரை வாதி உபயோகப்படுத்திக் கொள்ள பாத்திய முண்டென்றும் 1-ம் பிரதிவாதி காலுக்கண்டையி லிருக்கும் நிலங்களுக்குமட்டும் ஓடைத்தண்ணீரை வாதி உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்றும் அதற்காக மட்டும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அணைக்கட்டித் தண்ணீரைத் திருப்பி [illegible] கொள்ளலாமென்றும் வாதிக்கு டிக்லேரேஷன் டிக்கிரீயளித்தார்கள். ஷை சப்கோர்ட் தீர்மானத்தின்பேரில் ஹைகோர்ட்டுக்கு வாதியும் 1-ம் பிரதிவாதியும் தனித்தனியாக 2-வது அப்பீல் தாகல் செய்தார்கள். வாதி தனக்குக் கிடைத்த டிக்கிரீயில் 1-ம் பிரதிவாதி 2-3 பிரதிவாதிகளிடம் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கிக்கொண்டதற்குமுன் தன்வசத்திலிருந்தஎந்தநிலங்களுக்கு தாவாஓடைத்தண்ணீரைவழக்கமாய்ப்பாசனம்செய்துகொண்டுவந்தாரோ அதற்குமேலாகவும் அதிகமாகவும் 1-ம் பிரதிவாதிஓடைத்தண்ணீரை உபயோகிக்கக் கூடாதென்றும், அப்படிச்செய்தால் வாதிக்கு நஷ்டம் ஏற்படுமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லாமல்போனாலும் அவ்விதமாய் அதிகத் தண்ணீரை 1-ம பிரதிவாதி எடுத்துக்கொள்வது நஷ்டப்பரிகாரத்திற்குறிய நடத்தையாகுமென்றும்டிக்கிரீயில் குறித்தெழுதப்பட்டிருக்க வேண்டுமென்றுதனிமையாக 2-வதுஅப்பீல்தாகல்செய்தார். 1-ம்பிரதிவாதியும் டி-மு கோர்ட்தீர்மானம் சரியென்றும்வாதிக்குசப்கோர்ட்டார் டிக்கிரீயளித்தது பிசகென்றும் சொல்லி 2-வது அப்பீல் தாகல் செய்தார். ஹைகோர்ட்டார் வாதியின் 2-வது அப்பீலை செலவுடன் டிஸ்மிஸ் செய்துவிட்டு, 1-ம் பிரதிவாதிக்கனுகூலமாய் டி-மு கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தினார்கள்.

ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:—

தாவா நீரோடையானது இயற்கையாய் ஏற்பட்ட ஊற்றுமென்று இரண்டு கோர்ட்டாருடைய அபிப்பிராயமாக இருக்கிறது. அது பிசகான

அபிப்பிராயமல்ல. அது தப்பென்று 2-வது அப்பீலில் அபிப்பிராயப்படுவதற்கு சட்டமில்லை. தவிர 1-ம் பிரதிவாதி கால்வாய்க்கண்டையிருக்கும் நிலங்களுக்கு மட்டும் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறாரென்றும் அதனால் வாதியின் குளத்திற்குத் தண்ணீர் சப்ளை குறைவுபட்டதாகத் தோன்றவில்லையென்றும் வாதிக்கு 1-ம் பிரதிவாதியின் நடத்தையால் யாதொரு நஷ்டமும் ஏற்படவில்லையென்றும் ருஜுவாகி கீழ்கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சப்கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரீயளித்ததற்குக் காரணமாக 1-ம் பிரதிவாதி அண்டை நிலங்களுடன் இதரமான எட்டிய நிலங்களுக்கும் தண்ணீரை உபயோகப் படுத்திக்கொண்டு வந்தால் அதனால் 1-ம் பிரதிவாதிக்கு அவ்விதமான அனுபோக பாத்தியதை ஏற்பட்டுப் போகுமென்றும், அவ்விதமான பாத்தியதை ஏற்பட்டுப் போகாமல் தடுப்பதற்காக வாதி இவ்வித தாவா செய்து பரிகாரம் அடையக் கோறுவது நியாயமென்று சொல்லியிருக்கிறார்கள். இயற்கையாக ஏற்பட்டிருக்கும் ஓடைத்தண்ணீரை உபயோகப் படுத்தும் விஷயத்தில் பார்ட்டிகள் ஈஸ்மெண்ட் ஆக்ட் 7-வது பிரிவின் அம்சத்தை அனுசரிக்க வேண்டியது நியாயமாகும். ஷை 7-வது பிரிவின் கிளாஸ் (a) யில் ஒவ்வொரு நிலக்காரனும் (சொந்தக்காரனும்) நிராக்ஷேபனையாக நிலமிருக்கும் ஸ்தானத்திற்கும் நிலைமைக்கும் தக்கபடியான சிலாக்கியத்தை அனுபவிக்க பாத்தியமுடையவனாகிறானென்று சொல்லப்பட்டிருக்கிறது. கிளாஸ் (J) யில் அதேவிதமான பாத்தியதையுடைய மற்ற நிலக்காரர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாமல் இயற்கையாய் ஏற்பட்டிருக்கிற ஓடைத் தண்ணீரை அண்டை நிலங்களுக்குப் பாசனம்செய்து கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறது.

வாதியின் தாவாவை மூன்று வகையாய்ப் பிறித்து கவனிக்கலாம். (1) 1-ம் பிரதிவாதி அண்டையிலுள்ள நிலங்களல்லாத எட்டிய நிலங்களுக்கும் தாவா ஓடைத்தண்ணீரை உபயோகப்படுத்துகிறாரென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் அது விஷயமாய்க் கீழ்கோர்ட்டாருடைய தீர்மானம் ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருக்கிறது. 1-ம் பிரதிவாதி ஓடைக்கும் கால்வாய்க்கும் அண்டையிலுள்ள நிலங்களைத் தவிர இதரமான நிலங்களுக்குத் தண்ணீரை உபயோகிக்கிறதில்லையென்று ருஜுவாகத்தால் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (2) 1-ம் பிரதிவாதி 2-3 பிரதிவாதிகளிடமிருந்து சாகுபடிக்குத்தகைக்காக நிலங்களை எடுத்துக் கொண்டதற்கு முன் உபயோகப் படுத்திக்கொண்ட அளவுக்கு மேலாக அதிகத்தண்ணீரை உபயோகப்படுத்தாமல் தடை செய்யப்படவேண்டுமென்று கோறப்படுகிறது. வாதியின் நிலங்களுக்கு தண்ணீர் சப்ளை குறைவு ஏற்படவில்லையென்றும் யாதொரு நஷ்டமும் உண்டாகவில்லையென்றும் கீழ்கோர்ட் தீர்மானங்களில் ஏற்பட்டிருக்க 1-ம் பிரதிவாதியின் அனுபோகத்தை வாதி கட்டுப்படுத்த பரதனிக்கும் முறை சரியானதல்ல. அண்டை நிலங்களுக்குமட்டும் ஓடை ஜலம் உபயோகப்படுவதில் அதை எவ்வளவு தண்ணீரென்று கணக்கிட்டுப்பார்க்கவேண்டியதில்லை. நியாயமாய்எவ்வளவு அவசியமோ அதற்குமேல்உபயோகப்படுகிறதாவென்று அறியவேண்டும். மற்ற அண்டை நிலக்காரருக்கு வேண்டிய ஜலம் குறைவுபட்டுப் போச்சுதாவென்று கண்டுபிடித்து 1-ம் பிரதிவாதி அதிகமாய் உபயோகிக்கிற தகவலை அனுமானிக்கவேண்டும். வாதிக்கு தண்ணீர் சப்ளை குறைவில்லை ஆகவே 2-ம் பாயிண்டு வாதிக்கு உதவாது. (3) ஈஸ்மெண்ட் ஆக்ட் 7-வது பிரிவின் அம்சம் நிலத்தின் சொந்தக்காரனுக்கு மட்டும் ஏற்றதென்றும் 1-ம்பிரதிவாதி குத்தகைதாராதலால் அந்தசட்டப்பிரிவின் சிலாக்கியத்தை அடைய அவன் லாயக்கில்லாதவன் என்று சொல்லப்படுகிறது. வாதி தான்கேட்கும் பரிகாரத்தை ருஜுப்படுத்தவேண்டுமேயொழிய அதாவது எதிரி அதிகத்தண்ணீர் எடுத்துக்கொண்டுபோகாதபடிக்கும் தன்னுடைய பாத்தியதை கெடாதபடிக்கும் கோர்ட்டாருடைய கட்டளையையும் தீர்மானத்தையும் பெறலாமேயொழிய எதிரியின் நிலைமையைப்பற்றி ஆக்ஷேபிக்க அவசியமில்லை. வாதிக்கு எதிரியின் நடத்தையால் தீங்கும் நஷ்டமும் ஏற்பட்டிருந்தால் வாதி கோர்ட்டுக்கு வந்து பரிகாரம்தேட நியாயமுண்டு. எதிரியின் நிலத்திற்குப் பக்கத்திலுள்ள ஓடைத்தண்ணீரை எதிரி உபயோகப்படுத்த பாத்தியமில்லையென்று சொன்னால் அது வாதியின்பாத்தியதைக்குக்குறைவென்ற கருத்தை உண்டாக்காது. 1-ம் பிரதிவாதி ஜமீன் நிலத்தை அனுபவிக்கிறார். ஜமீன்தார்தான் நிலக்காரர் என்றும் அனுபவிக்கிறவர் டெனென்ட் என்றும் சொல்லப்படுகிறார்கள். ஆனால் ஈஸ்மெண்ட் ஆக்ட் 7-வது பிரிவின் கருத்தை உபயோகப் படுத்துவதற்காக சொந்தக்காரர் யாரென்று நிதானிக்கவேண்டியதானால் டெனெண்டையும் சொந்தக்காரன் என்று மதிக்கலாகும். ஆகையால் வாதியின் மூன்று வாதங்களும் பிரயோஜனமில்லாதவைகளென்று சொல்லி மேல் சொன்னபடி வாதி செய்த 2-வது அபீல் தள்ளுபடியாகி 1-ம்பிரதிவாதிக்கு அனுகூலமாய் டி-மு கோர்ட்டார் தீர்மானம் காயமாகி பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. 1914 M W N 481

———:O:———

## பிரிவிகௌன்ஸில கேஸ்.

### அலகபாத் ஹைகோர்ட் தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட பிரிவிகௌன்ஸில் அப்பில் தீர்மானம்.

7 எப்பிரல் 1914

*சௌத்ரீ அப்துல் மஜீத் Vs ஜாவாஹிர்லால்*

ஜாவாஹிர்லால் என்ற வாதியின் வகையறாக்கள் 1868-ல் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த அடமான தஸ்தவேஜின்பேரில் தாவா செய்து அலகபாத்சப்கோர்ட்டில் 1889-ல் பிரதம டிக்கிரீ பெற்றார். அதில் 1890 ஆகஸ்ட்டுக்குள் எதிரியால் டிக்கிரீத்தொகை செலுத்தப்படாத பட்சத்தில் அடமான சொத்தை ஏலம்போட்டுத்தொகையை வசூலித்துக்கொள்ள வேண்டியதென்று கட்டளையிட்டிருந்தது. சப்கோர்ட் டிக்கிரீயின் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீலாகி அங்கு 1893 எப்பிரல் 8-ல் அசல் தீர்ப்பு காயமாச்சுது. அதன் பேரில் எதிரி பிரிவி கௌன்ஸில் அப்பீல் செய்ய அனுமதி பெற்றும் அப்பீலை மேல் நடத்தாத காரணத்தால் பிரிவிகௌன்ஸிலார் 1901 மே 13-ல் எதிரியின் அப்பீலை மேல் நடத்தாத காரணத்தைச் சொல்லி டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். ஆகவே அலகபாத் ஹைகோர்ட் அப்பீல் டிக்கிரீ நிலைத்தது. வாதி 1909 ஜூன் 11-ல் தான் பெற்ற அடமானடிக்கிரீயை நிறைவேற்றி சொத்தை ஏலம் போடுவதற்காக அலகபாத் சப்கோர்ட்டுக்கு விண்ணப்பம் கொடுத்ததில் புது ஸி. பி. ஸி-யின் 48 (b)-யில் சொல்லியிருக்கிற முறைப்படிக்கு பிரிவிகௌன்ஸில் அப்பீல்தள்ளுபடியான தேதிமுதல் தாவா விண்ணப்பத்திற்கு 12வருஷ கெடு வாய்தா உண்டென்று சொல்லி ஆகவே 1901 மே 13-லிருந்து 12 வருஷங்களுக்குள்ளாக ஏலவிண்ணப்பம் செய்யப்பட்டபடியால் அதற்குக்காலாவதி தோஷமில்லையென்று வாதிக்காகச்சொல்லிக்கொள்ளப்பட்டது. சப்கோர்ட்டிலும்ஹைகோர்ட்டிலும் தாவ விண்ணப்பத்திற்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்டு ஏலத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதன்பேரில் எதிரி பிரிவி கௌன்ஸில் அப்பீல் செய்ததில் தாவா விண்ணப்பத்திற்கு காலாவதியை 1893-ல் ஹைகோர்ட்டார் சப்கோர்ட் அடமான டிக்கிரீயைக் காயப்படுத்தின தேதிமுதல் கணிக்கவேண்டுமென்றும் பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டபோதிலும் அதை மேல்நடத்தாத காரணத்தால் பிரிவி கௌன்ஸிலார் வியவகாரத்தைப்பற்றி யாதொரு தீர்மானமும் கொடுக்காமல் அப்பீலை டிஸ்மிஸ் செய்து பார்ட்டிகளின் நிலைமை அப்பீல் செய்யுமுன் என்ன ஸ்திதியிலிருந்ததோ அதே ஸ்திதியிலிருக்கும்படி விடப்பட்டதாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகவே அலகபாத் ஹைகோர்ட்டார் சப் கோர்ட் தீர்ப்பைக் காயப்படுத்தி அப்பீல் டிக்கிரீயளித்தமுதல் மூன்று வருஷத்திற்குள் 179-வது ஆர்டிகில்படிக்கு அடமான சொத்தை ஏலத்திற்குக்கொண்டுவந்திருக்கவேண்டுமென்றும் தவிர புது ஸி. பி. ஸி. 1908-ல் நமோதுக்கு வந்திருக்க அதற்கு முந்தியே மேல்கூறிய 3-வருஷ காலாவதிகடந்து வாதியின் டிக்கிரீக்கு காலாவதி தோஷம் ஏற்பட்டபடியால் புது ஸி பி ஸி யில் கொடுக்கப்பட்டிருக்கிற 12-வருஷ வாய்தா ஷை ஆக்ட் நமோதுக்கு வருமுன் தோஷமாய்ப் போன டிக்கிரீகளுக்கு உதவாதென்றும் ஆகையால் புது கோர்ட்டில் சொல்லியிருக்கிறபடி பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் தேதியிலிருந்து 12 வருஷ வாய்தா தாவா டிக்கிரீக்குக் கிடையாதென்றும், பிரிவிகௌன்ஸிலார் நிறைவேற்று மனுவை மறியல் உத்தரவால் நிறுத்தி வைத்ததாகவும்ஏற்படவில்லையென்றும் சொல்லி, தாவா விண்ணப்பத்திற்குக் காலாவதி தோஷமென்று அபிப்பிராயப்பட்டு வாதிக்கு விரோதமாக ஏல உத்தரவை ரத்துசெய்து விட்டார்கள்.

XXVII M L J 17

## பிரிவி கௌன்ஸில் கேஸ்

**அயோத்தியின் ஜுடிஷியல் கமிஷனர் அவர்களுடைய தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட பிரிவிகௌன்ஸில் அப்பீல்**

27 மார்ச்சு 1914

*முஸம்மத் அமீர்பேகம் Vs குவாஜா சயித் பத்ருதீன் ஹூஸைனி*

லக்னோவில் குவாஜா பரீதுடீன் ஹூஸைனியென்ற மூலபுருஷன் 1909 மே 6-ல் ஏராளமான சொத்துக்களையும் ஒரு நேரான சகோதரியையும் இரண்டு ஒத்த சகோதரர்களையும் இரண்டு சகோதரிகளையும் தன் சம்சாரத்தையும் விட்டுவிட்டுக் காலஞ்சென்றுவிட்டார். அந்திய காலத்தில் மரணசாஸனமும் எழுதிவைத்து அதற்கு வாதியை எக்ஸிகியூடராக நியமித்து அவருக்கு மகம்மதிய லாப்படிக்கு ஏற்படக்கூடிய சொத்தில் மூன்றிலொரு பாகத்தையும் அளித்தார். மூலபுருஷன் இறந்தபின் சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளும் விஷயத்தைப்பற்றி பற்பல பாத்தியஸ்தர்களுக்குள் விவாதம் நேரிட்டதின்பேரில் 1909 ஆகஸ்ட் 6-ல் எல்லோருடைய (எல்லா பாகஸ்தர்களுடைய) சம்மதத்தின்பேரில் முன்ஷி ஸகவத் ஆலி என்றவரை மத்தியஸ்தராக நியமித்து அவர் பாகப்பிரிவினை விஷயமாய் ஏற்பட்டிருக்கிற தகரார்களைத் தீர்த்து நியாயப்படி அனைவருக்கும் பங்கு விகிதம் செய்துகொடுக்க வேண்டியதென்றும் அவருடைய அவார்ட்டுக்கு ஆக்ஷேபனைசெய்யாமல் அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டு அந்தப்படிக்கு எழுத்துமூலமாய் முச்சலிக்கை எழுதப்பட்டு அதில் அனைவரும் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். மத்தியஸ்தரும் சொத்துக்களுடைய விலை மதிப்பையும் மற்றவியவகாரங்களையும்விஜாரணைசெய்து 1910 ஜூலை 16-ல்கொடுத்த அவார்ட்டில் வாதியை எக்ஸிகியூடராகக் காயப்படுத்தி அவருக்கு சொத்தில் மூன்றிலொரு பாகமும் கொடுக்கப்பட்டு மற்றபாகஸ்தர்களுக்கு மகம்மதிய லாப்படிக்கு பாகம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 1-ம் பிரதிவாதியாகிய நேரான சகோதரிக்கு மூன்றிலொரு பாகமும், வாதிக்கும் மூலபுருஷனுடைய சம்சாரத்திற்கும் சேர்ந்து சொத்தில் சமபாதியும், அடுத்த சகோதரர்கள் சகோதரிகளாகிய 2, 3, 4, 5-ம் பிரதிவாதிகளுக்கு மொத்தமாய் சொத்தில் 6-ல் ஒன்றுமாக பாகம் பிரித்து சொத்துக்களின் விலைமதிப்புக்குத் தக்கபடியும் ஷை வீதாசாரப்படியும் சொத்துக்களைப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. வாதிக்குரிய மூன்றிலொரு பங்குடன் 6-ம் பிரதிவாதியாகிய மூலபுருஷனுடைய சம்சாரத்திற்குச் சேரவேண்டிய 6-ல் ஒருபங்கானது ஒன்றாய்ச்சேர்க்கப்பட்டு வாதிக்கும் 6-ம் பிரதிவாதிக்குமாக மொத்த சொத்தில் சமபாதி பிரித்துக் கொடுக்கப்பட்டது. மொத்தசொத்தின் மதிப்பு ரூ 91,042 ஆக ஏற்பட்டதும் தவிர மூலபுருஷனிடம் பில் கலெக்டர் வேலைபார்த்து வந்த அமானுத்தான் என்றவனிடத்திலிருந்துவசூல் பாக்கித்தொகை ரூ 4000 போல வசூலாவையாய்ப்போனதாகவும் அந்தத்தொகையை வசூல்ப்பது சந்தேகமானாலும் கிடைத்தால் அதை 1-ம் பிரதிவாதி அடைகிறதென்றும் அவார்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அன்றியும் எஸ்டேட்டில் ஒரு சொத்தானதுசுமார் ரூ 20,000-க்கு மேலான அடமான வில்லங்கத்திலிருப்பதால் சொத்துக்களை மதிப்பின் பிரகாரம் பிரித்துக்கொடுப்பதில் அடமானத்திலிருக்கிற சொத்துக்களை அடைகிறவர்களுக்கு நஷ்டம் வராதபடிக்கு கடன்தொகை பூராவும் வட்டி பாக்கி உள்பட பூரா சொத்துக்களைப்பொறுத்ததாக வேண்டுமென்றும் ஆகையால் ஒவ்வொரு பாகஸ்தரும் தாங்கள் அடையும் சொத்துபாகத்திற்குத்தக்கபடி ஷை கடனையும் பகிர்ந்துகொடுத்துக் கடனைத்தீர்த்து அடமான வில்லங்கத்திலிருக்கும் சொத்தை வில்லங்க சுத்தியாக்கிக் கொடுக்கவேண்டுமென்றும் அவார்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.] [வாதியாகிய எக்ஸிகியூடர் அவார்டை 1910 ஜூன் 10-ல் லக்னோ சப்கோர்ட்டில் தாகல்செய்து அந்தப்படிக்கு டிக்கிரீயாகவேண்டுமென்று கோறிக்கொண்டதில், 1-ம்பிரதிவாதி ஆக்ஷேபனைசெய்து மத்தியஸ்தத்தில் தீர்மானிக்கத்தகாத அம்சத்தைப்பற்றியும் அவார்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறபடியால் சட்டப்படி அவார்ட்டு முழுவதும் செல்லத்தகாதென்றும் தவிர மத்தியஸ்தர் பட்சபாதமன்னியில் தீர்மானிக்காமல் வாதிக்கு அனுகூலமாக சொத்துபாகங்களைப் பிரித்துக்கொடுத்திருக்கிறாரென்றும் பஞ்சாயத்து விஜாரணையே ஒழுங்கீனமென்றும் மத்தியஸ்தர் வஞ்சனையாகவும்



ஒரு தையில் ஸ்வயலாபத்தை அடைந்து பாரபக்ஷமாய்த் தீர்மானமளித்திருப்பதாயும் எதிர்வாதம் செய்தார். சப்கோர்ட்டார் வாதிக்கு விரோதமாக அவார்ட் செல்லாதென்று தீர்மானம் கொடுத்தார்கள். அப்பீல் கோர்ட்டார் மத்தியஸ்தருடைய நடத்தையிலும் முறையிலும் தீர்மான முடிவிலும்யாதொருதப்பிதமும்கிடையாதென்று தீர்மானித்து அவார்டில் காணக்கூடாத அம்சத்தை விலக்கி மற்றப்படி அவார்டை சாயப்படுத்தி டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் 1-ம் பிரதிவாதி பிரிவிகௌன்ஸில் அப்பீல்செய்ததில் அப்பீல் கோர்ட் தீர்மானம் சரியென்று ஏற்பட்டு அவார்ட் உறுதியாச்சுது. பிரிவிகௌன்ஸிலார் தீர்ப்பில் சொல்லப்பட்ட நியாயங்களாவன:— ரஸூலபாத் என்னும் ஜமீனில் மூலபுருஷனுக்கு சில பங்குபாகம் ஏற்பட்டிருந்தது. மத்தியஸ்தர் அந்த அயிடத்தை பாகஸ்தர்களுக்குப் பிரித்துக்கொடுக்கும் பொழுது ஜமீனை பாகப்பிரிவினைசெய்யும் வண்ணமாக ஜமீனில் சில நிலங்களைக் குறிப்பிட்டு அவைகள் பற்பல பாகஸதர்கள் அடையவேண்டியதென்று அவார்ட்டில் தீர்மானம் செய்திருந்தார். ஷை ஜமீனைப் பிரித்துக் கொடுக்க அதிகாரம் கிடையாது. அதிலுள்ள வருமானத்தில் பாகம் ஏற்படுத்தவேண்டியதாயிருக்க மேற்கண்டவிதமாய் குறித்த நிலபாகங்களை பாகஸ்தர்களுக்கு ஏற்படுத்தினது பிசகென்றும் ஒரு அவார்ட்டில் தீர்மானிக்கத்தகாத விஷயம் ஏற்பட்டால் அந்த அம்சத்தைப் பிரித்து விலக்கினால் அவார்ட் நடைபெறக்கூடியதானால் மட்டும் அவார்ட் செல்லுமென்றும் இல்லாவிடில் அப்படிப்பட்ட அவார்ட் முழுவதும் நிஷ்பிரயோஜனமாகுமென்றும் சொல்லப்படவேண்டும். ஆனால் இந்தக்கேஸில் மத்தியஸ்தர் ஷை ஜமீன் நிலங்களின் விஷயமாய்ச் செய்த ஏற்பாடை நீக்கியே அவார்டின் மற்ற அம்சங்களைப் பிரயோகிப்பதில் யாதொரு கஷ்டமும் ஏற்படாதபடியால் அவார்டின் மற்ற அம்சங்கள் நியாயமாயும் சட்டப்படி அங்கீகரிக்கத் தக்கதானால் அவார்ட் செல்லுமென்றும் அந்தப்படி டிகிரீயளிக்கலாமென்று சொல்லவேண்டும். ஆகவே அவார்டில் கண்ட மற்ற அம்சங்கள் அங்கீகரிக்கத்தக்கவைகளாவென்று கவனித்துப் பார்க்கவேண்டும். ஒரு அவார்ட் கோர்ட்டில் தாகலான பிறகு கோர்ட்டார் யுக்தத்தின் பேரில் அதை மத்தியஸ்தருடைய (பஞ்சாயத்தாருடைய) மறு ஆலோசனைக்கு அனுப்பலாம். இல்லாவிடில் அதில் கண்டபடி டிக்கிரீயளிக்கவேண்டும். அதை ரத்துசெய்யவேண்டுமானால் பஞ்சாயத்தாருடைய நடவடிக்கையைப்பற்றி ஏற்பட்டிருக்கும்சட்டமாகிய (Arbitration Act) 15-வது பிரிவின்படி மத்தியஸ்தர் லஞ்சம் வாங்கிக்கொண்டு அநியாய தீர்மானமளித்ததாக ஏற்படவேண்டும். (துர்நடத்தை ருஜுவாகவேண்டும்.) சப்கோர்ட்டார் மத்தியஸ்தரின் நடத்தைப் பிசகைக் காரணமாக நம்பி அவார்டை ரத்துசெய்திருக்கிறார்கள். அவ்வித தீர்மானம் அடைவதற்காக எதிரியின் இரண்டு முக்கியமான ஆக்ஷேபனைகள் கவனிக்கப்பட்டன. அதாவது:— (1) மத்தியஸ்தர் நியாயாதிபதி ஸ்தானத்திலிருந்தும் அக்கிரமமாகவும் மோசக்கருத்துடனும் பைசலளித்திருக்கிறாரென்றும் (2) மத்தியஸ்தருடைய விஜாரணையில் தீர்மானிக்கவேண்டிய வியவகாரங்கள் சரியானபடி விஜாரிக்கப்படவேயில்லையென்றும் சொல்லப்பட்டன. மத்தியஸ்தருடைய உண்மைக்கும் நீதிக்கும் யாதொரு குறைவு சொல்லாமலே அவார்டை ரத்து செய்வதற்கு விஜாரணை ஒழுங்கீனமாய் நடந்து தகரார் விஷயங்கள் சரியாய் சாங்கியாகாமலிருந்தால் போதுமானது. பார்டிகளை ஆஜராகும்படி சம்மன்ஸ் அனுப்பப்படவேயில்லையென்றும் வாதியின் கக்ஷியை (வியவகாரத்தை) எதிர்த்து வாதாடுவதற்குரிய சவுகரியம் 1-ம் பிரதிவாதிக்குக் கொடுக்கப்படவேயில்லையென்றும் சொல்லப்பட்டது. சப்கோர்ட்டார் முன்னிலையில் மேற்கண்ட ஒழுங்கீனத்தைப்பற்றி ருஜுப்படுத்த வேண்டியபாரம் 1-ம்பிரதிவாதியையும் மற்ற எதிர் வாதம் செய்யாத பிரதிவாதிகளையும் சேர்ந்ததாகும். அதற்காக சரியான சாட்சியாக வந்த ஷபான் ஆலி என்றவர் குறுக்கு விஜாரணையில் தன்னை மத்தியஸ்தர்பலதடவைகளில் சம்மன்ஸ் மூலமாய் வரவழைத்து சொத்துக்களின் விலைமதிப்பைப்பற்றி விஜாரணை செய்திருக்கிறதாகஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்விதசாட்சியத்தினால்மத்தியஸ்தருடைய விஜாரணைக்கு ஒழுங்கீனமென்ற குறைகூற நியாயமில்லை. மத்தியஸ்தரே சப்கோர்ட்டார்முன் சாட்சியம் சொல்லியிருக்கிறார். அதில் தான் எல்லா பார்ட்டிகளையும் எழுத்துமூலமான ஸ்டேட்

மென்ட தாகல்செய்யும்படி கேட்டுக்கொண்டதாகவும் ஆனால் அவர்கள் அப்படிச் செய்ய மறுதளித்து விட்டதாகவும் வாய்மொழிசாட்சியும் எடுக்கும்படி தன்னை ஒரு பார்ட்டியும்கேட்டுக்கொள்ளாவில்லை யென்றும் யாதொரு வாய்மொழிசாட்சியமும் பார்ட்டிகளால் விடப்படவில்லை யென்றும் தன்னுடைய விஜாரணையில் பார்ட்டியில் யாரும் யாதொரு சகாயமும் செய்யவில்லையென்றும் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார். இவருடைய சாட்சியத்தை இன்னும் விவரமாய் ஆராய்ந்து காட்டவேண்டியதவசியமில்லையெனெனில் அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி மத்தியஸ்தருடைய விஜாரணையில் யாதொரு ஒழுங்கீனம் நடந்ததாக ருஜுபாகம் ஏற்படவில்லை யென்றுசொல்லவேண்டும். அவருடைய நடத்தையைப்பற்றி சப்கோர்ட்டார் கண்டித்தெழுதினது நியாயமல்ல. விஜாரணையின் அம்சங்களைக் குறித்தெழுதாமலும் குறிப்புகளை பத்திரப்படுத்தி வைக்காமலுமிருந்ததற்காக சப்கோர்ட்டார் மத்தியஸ்தர்பேரில் அதிகக்கடுமையான ரிமார்க்செய்திருக்கிறார்கள். நடவடிக்கைகளின் விவரங்களைக்குறித்து எழுதிக்கொண்டால் அது பின்னால் உபயோகப்படுமாதலால் அப்படிச்செய்வது மிகவும்விரும்பத்தக்கமுறையானாலும்மத்தியஸ்த விஜாரணையின் ஒழுங்குமுறையை அறிந்திருக்கிற ஒரு பார்ட்டி அவார்ட்தனக்கு விரோதமான காரணத்தால்அதை ஆக்ஷேபிக்க வருமட்டும் யாதொருதடையும் செய்யாமல் நோட்குறிக்காத குறையை எடுத்துக்காட்டாமலிருந்தால் அவ்விதமான குறையானது அவார்ட் தீர்மானத்தைரத்து செய்யப்போதுமான காரணமாகாது.

இரண்டாவதாக மத்தியஸ்தர் பட்சபாதமாகப் பைசல் செய்தாரென்று குற்றம் சாட்டப்பட்டு அதனால் அவார்ட்ரத்தாகவேண்டியதுந்யாயமாகுமென்று வாதிக்கப்படுகிறது. சப்கோர்ட்டார் அபிப்பிராயத்தில் மத்தியஸ்தர் அந்தக்குற்றத்திற்குப்பாத்திரராகி நியாயமில்லாதபடி பங்குவிகிதத்தைப்பிறித்துக் கொடுத்ததாக நம்புகிறார். அவ்விதமான நடத்தையை ருஜுப்படுத்தவேறு சாட்சியமில்லை. மத்தியஸ்தர் சாட்சியாகக்கொடுத்த வாக்கு மூலத்தைக்கொண்டே அவ்வித அபிப்பிராயம்உண்டாகியிருக்கிறது. இருதரத்தாருடைய சம்மதத்தின்பேரில் தெரிந்தெடுக்கப்படுகிற ஒருமத்தியஸ்தன் தேவையானால் கோர்ட்டில் தான் விஜாரணை செய்தவிஷயத்தைப்பற்றியும் தீர்மானமடைந்தநியாயத்தைப்பற்றியும்சாட்சியாக வந்து வாக்குமூலம் கொடுக்கக்கடமைப்பட்டவனாகிறான். அவருடைய பாரபட்சத்தையும் உண்மைக்குறைவைப்பற்றியும் குறுக்கு விஜாரணையில் கேள்விகள் கேட்டால் அவருடைய உத்திரம்சரியான ருஜுபாகமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அவர்பட்சபாதியா அல்லவாவென்று கண்டு அறிவதற்காக அவரைக்கேட்கும் கேழ்விகளுக்குஅவர்கொடுக்கும் உத்தரத்தை வேறு விஷயத்திற்காக உபயோகப்படுத்தக்கூடாது. அதாவது அவருடைய தீர்மான அபிப்பிராயம் சரியா அல்லவா வென்று ஆராய்ச்சிசெய்யும் பொருட்டு அவருடைய மேற்கூறிய சந்தர்ப்பத்தில் கொடுக்கிறவாக்குமூலத்தை உபயோகப்படுத்தக்கூடாது. ஏனெனில் அவருடைய தீர்மானம் அப்பீலுக்கிடமில்லாத பைசல்தீர்மானமாகும். அதுசரியா அல்லவாவென்று ஆராய்ந்தறிய அவருடைய நடத்தையைப்பற்றி சந்தேகித்து (Arbitration Act) ஆக்டின் 15-வது பிரிவின்படி நடத்தும் விஜாரணையில் அவரால் ஏற்படும் விடைகளை உபயோகப்படுத்தக்கூடாது. ஆனால் அவார்டைக் கபடப்படுத்தி டிக்ரியடையக்கோரும் நடவடிக்கையில் மத்தியஸ்தர்பேரில் மோசக்குற்றம் சாட்டப்பட்டால் அவர்பட்சபாதியா அல்லவாவென்று அறிவதற்கு உதவக்கூடிய ருஜுபாகம் அவருடைய சாட்சிவாக்குமூலத்தில் ஏற்பட்டால் அந்த ருஜுபாகத்தை கோர்ட்டார் மறுதளிக்கவே கூடாதென்று L. R. 5 H. L. 418-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தகேஸில் சப்கோர்ட்டார் மத்தியஸ்தரின் உண்மையை அறிவதற்காக ஏற்பட்ட ருஜுபாகத்தைக்கொண்டு அவர்சொத்துக்களின் விலைமதிப்பைச்சரியாய்த்தீர்மானித்தாராவென்றவிஷயத்தைக்கண்டறியும் பொருட்டு பிரயோகம் செய்திருக்கிறார். ஆகையால் ருஜுபாகம் ஏற்பட்ட விஷயத்திற்காக அதை உபயோகப்படுத்தவில்லை மத்தியஸ்தர் உண்மையாகவும் பட்சபாதமில்லாமலும் நடந்துகொண்டாராவென்று கண்டுபிடிப்பதற்குத்தக்கபடி அவரைக்குறுக்கு விஜாரணைசெய்தது திருப்திகரமாயில்லை. எந்தப்பார்டியிடமாவது (லஞ்சவாங்கிக்கொண்டாரா) அல்லதுவேறுவிதமான பிரதிப்பிரயோஜனத்தை அடைந்தாராவென்ற கேழ்வியை



நேருக்கு நேராய்க்கேட்டு (வெட்டொன்று துண்டு இரண்டாகக்கண்டறியாமல்) கணக்குகளிலும் மதிப்பின்நியாய விஷயத்திலும் விவரமான குறுக்குக்கேழ்விகளைப் பலவாராய்க் கேட்கப்பட்டிருக்கிறது. துண்டித்துண்டி ஒவ்வொருசிறுவிஷயத்திலும்அதிகநுட்பமானகுறுக்குக்கேழ்விகள் கேட்டால் மிகவும் சாமர்த்தியமுடைய சாட்சியும் குழப்பமடைந்து ஒன்றுக்கொன்று வித்யாசம் ஏற்படும் படியான விடைகளைக் கொடுக்கநேறிடும். என்றாலும் மத்தியஸ்தருடைய சாட்சிவாக்குமூலங்களைக் கொண்டு அவர்நடத்தையைப்பற்றியும் விஜாரணையின் உண்மையைப்பற்றியும் குற்றம் சாட்டுவதற்கிடமில்லை யென்றும் பரிஷ்காரமாய்ச் சொல்லலாம்.

சொத்துக்களின் விலை மதிப்பைப்பற்றி அவார்டில் மிகவும் தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமில்லாமலும் சொல்லப்பட்டிருக்கிறது. வாதிக்கு மத்தியஸ்தர் பிரித்துக்கொடுத்த சொத்துபாகமாகிய ஹாஜிகஞ்சு என்ற கிராமம் ரூ 28, 785 ஆக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தகிராமம்முதல்தரமான சொத்தென்றும் அதை 1-ம் பிரதிவாதிக்குக் கொடுக்காமல் வாதிக்குக் கொடுத்தது மத்தியஸ்தரின் பட்சபாதத்தைக்காட்டுகிறதென்று சொல்லப்படுகிறது. அதற்குச் சமாதானமாக ஷை கிராமத்தைப்பிரித்துஒவ்வொருவருக்கும்ஒருபாகமாகக் கொடுப்பது நல்லதல்லவென்று மத்தியஸ்தர் சொல்லுகிறார். இது சரியான சமாதானமாகத் தோன்றுகிறது. இரண்டாவதாக ஷை கிராமம் அதிக விலையுள்ளதாயிருக்க குறைவான மதிப்பிட்டிருக்கிறதென்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது மத்தியஸ்தர் கிராம கணக்கனுடைய வாக்குமூலத்தைக்கொண்டு ஷை கிராமத்தின் வருமானத்தை அறிந்து அதற்குத்தக்க விலைமதிப்பிட்டிருக்கிறதாயும் மூலபுருஷனுடைய சொந்தக் கணக்குகளில் வருமான விவரம் அதிகமாய்க் காணப்பட்டாலும் அதை சரியான கணக்கல்லவென்று நம்புவதற்குக் காரணமிருப்பதாயும் சமாதானம் சொல்லுகிறார். இது விஷயமாய் மத்தியஸ்தருடைய யுக்தானுசாரத்தைப்பற்றி வாதம் செய்யவேண்டாம். மத்தியஸ்தர் யுக்தானுஸாரத்தைச்செலுத்துவதற்கு இது மிகவும் தகுதியான பாயிண்டாகும். அவர் செலுத்தின யூகத்திற்குக்கெட்டஎண்ணமும் ஸ்வய லாபமும் ஏற்பட்டிருந்ததாக போதுமான ருஜுபாகமில்லை. ஷை கிராமத்தின் மதிப்பை கவனித்ததில் ஜமீன்தாருடைய ஆபீஸ் ரூ 500 பெறுமானமாக இருக்க அதைக் கணக்கில் சேர்க்கப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. அதற்கு சமாதானமாக கிராமத்திற்கு மொத்த விலைமதிப்பைக் கணக்கனுடைய வாக்குமூலத்தால் ஏற்பட்டதற்கு மேல் ரூ 2000 அதிகமாக ஏற்றியிருப்பதாகவும் ஜமீன் ஆபீஸ் அதில் சேர்ந்ததாக பாவிக்கப்படவேண்டுமென்றும் சொல்லுகிறார்.

வாதிக்கு மேற்கூறிய ஜமீன் கிராமத்தைத் தவிற லக்னோவில் சில வீடுகளையும் கொடுக்கப்பட்டிருந்ததில் ஷை வீடுகளின்விலை மதிப்பை மிகவும் குறைவாக ஏற்படுத்தினதாகவும் அவைகளில் ஒரு வீடானது மூல புருஷனுக்குச் சொந்தமில்லையென்றும் அது 1-ம் பிரதிவாதியின் தனிமையான சொத்தென்றும் அதையும் குடும்பசொத்தாக பாகப்பிரிவினையில் சேர்த்தது பிசகென்றும் ஆக்ஷேபிக்கப்படுறது. மத்தியஸ்தர் ஷை வீடுகளின் மதிப்பை அறிவதற்காக எல்லா பார்ட்டிகளையும் டெண்டர் கொடுக்கச் சொன்னதில் எல்லா வீடுகளுக்குமாகட் டெண்டர் கொடுத்தது வாதிமட்டும் தான் அவருடைய டெண்டர் தொகை ரூ 11, 900. 1-ம் பிரதிவாதி மூன்று வீடுகளுக்கு மட்டும் தனிமையாய் டெண்டர் கொடுத்து வாதியின் டெண்டருக்கு சொற்பக் குறைவாக விலை மதிப்பிட்டு அவைகளைத் தான் எடுத்துக்கொள்வதாகச் சொன்னான். ஆனால் வித்தியாஸம்மிக்க கவனிக்கத்தகாதது. மத்தியஸ்தர் இரண்டு வீடுகளின் விலையை ரூ 11,800 மதிப்பிட்டிருக்கிறார். மத்தியஸ்தர் மதிப்பிட்ட முறையானது அவருடைய யுக்தானுசாரத்தைப் பொருத்தது. இரண்டு வீடுகளின் விஷயமாய் சொற்பமாறுதல் செய்தமையால் அவர் பட்சபாதமாக நடந்தாரென்று சொல்லத்தகாது.

1-ம் பிரதிவாதிக்குச் சொந்தமான ஒரு வீடையும் சேர்த்தது பிசகென்று சொல்லப்படுகிறது. அநேக வருஷங்களுக்குமுன் மூல புருஷன் 1-ம் பிரதிவாதியோடு ஒரு வியவகாரத்தில் ராஜீசெய்துகொண்டு ஷை வீடை அவனுக்கு மேடோவர் செய்தது வாஸ்தவமே. ஆனால் மூலபுருஷன் சுவாதீனத்தைத் தம்மிடமேவைத்துக்கொண்டும் அதை தம்முடைய சொந்த வீடாக பாவிக்க வ

தாரென்றும் ஏற்படுகிறது. ஆகவே ஷை வீட்
ட்டில் மூலபுருஷன் அனுபோக பாத்தியதையை
அடைந்த காரணத்தால் ராஜீநாமாப்படிக்கு ஏற்ப
ட்ட 1-ம் பிரதிவாதியின் பாத்தியதையானது
நிலைக்காதென்று யூகித்து மத்தியஸ்தர் ஷை
வீட்டையும் பிரிவினையில் சேர்த்திருக்கிறார். தவிற
மூலபுருஷன் உயிலில் அதைத் தம்முடையதெ
ன்றே செப்பியிருக்கிறார். மத்தியஸ்தருடைய
அபிப்பிராயம் பிசகாயிருந்தாலும் சரியாயிருந்தா
லும் அவ்வித தீர்மானத்தால் அவருக்கும் பட்சப
தமான எண்ணம் ஏற்படுத்த நியாயமில்லை. அந்த
வீடு 1-ம் பிரதிவாதிக்குச் சொந்தமென்று ஏற்
பட்டாலும் மத்தியஸ்தருடைய தப்பான அபிப்பி
ராயத்தால் வாதிக்கு நஷ்டமாகுமேயொழிய 1-ம்
பிரதிவாதியின் பாத்தியதை கெடுவதற்கு நியா
யம் ஏற்படாது. ஏனெனில் மூலபுருஷனுக்குச்
சொந்தமில்லாத ஒரு சொத்துக்கு விலை மதிப்பி
ட்டு அதை வாதிக்கு பாகம் பிரித்துக்கொடுத்தால்
அம்மதிப்புத்தொகைமட்டில் வாதிக்கு நஷ்டமேற்
பட்டு சொத்து சரியான பாத்தியஸ்தனுக்குச் செ
ன்றுவிடும். ஆகையால் மத்தியஸ்தர் வீடுகளை
வாதிக்குக்கொடுத்த விஷயத்தில் வஞ்சனையான
கருத்தைக் கொண்டதாகச் சொல்லக்கூடாது.

தவிற 1-ம் பிரதிவாதிக்கு மத்தியஸ்தர்கொடு
த்த சொத்துக்களிலும் துரோகம் செய்துவிட்
டதாகச் சொல்லப்படுகிறது. 1-ம் பிரதிவாதி
க்கு குண்டிரி என்ற ஒரு கிராமமும் ரஸூலே
பாத் என்னும் கிராமத்தில் மூலபுருஷனுக் கேற்
பட்டஒருபாகமும்ரூ4000மும்கொடுக்கப்பட்டது.
ரஸூலேபாத்என்னும்கிராமம்ரூ20,000க்குஅட
மான வில்லங்கத்திலிருக்கிறது. இவ்வித வில்ல
ங்கத்திலிருக்கும் சொத்தைக் கொடுத்தது மோச
மென்றும் அதற்கு விலை மதிப்பை மிகவும் ஜாஸ்
திப்படுத்தியிருப்பதாகவும் வாராக் கடனாகிய ரூ
4000-யும் 1-ம்பிரதிவதிக்கு அமைக்கப்பட்டிருக்
கிறது மோசமென்றும் சொல்லப்படுகிறது. 2-மு
தல் 5-பிரதிவாதிகளுக்குச் சொந்தமான மஹால்
பாச்சிக் என்ற கிராமத்திலிருக்கின்ற ரஸூல
பாத்தில் ஒருபாகம் தங்களுக்கு வேண்டுமென்று
கேட்டுக்கொண்டதில் அவர்களுடைய விருப்பப்
படிக்கு ஒருபாகத்தை 2-5-பிரதிவாதிகளுக்குக்
கொடுத்துவிட்டு மிகுதியான
பாகத்தை 1-ம் பிரதிவாதிக்குக்கொடுக்க
ப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் மத்தியஸ்தரின்
மோச எண்ணத்தையும் பட்சபாதத்தையும் ரூபிச
கத்தகாதென்று சொல்லவேண்டும். தவிர ரஸூ
லபாத் என்னும் கிராமத்தில் மூலபுருஷனுக்குச
சொந்தமானபாகத்தில் 1-பிரதிவாதிக்குக் கூட்டு
பாத்தியதைமுந்தியேஏற்பட்டிருந்தது. ஆகவே அ
ந்த சந்தர்ப்பத்தினால் ஷை கிராமத்தின்பாகத்தை
1-ம் பிரதிவாதிக்கே அமைத்தது யூகமான காரி
யமாகும். அடமான வில்லங்கத்திலடங்கி
யதானாலும் மேற்கூறிய சந்தர்ப்பம்
மத்தியஸ்தருடைய ஏற்பாடுக்கு
ஒரு நியாயத்தையும் அவசியத்தையும் உண்டு ப
ண்ணினதாகும். அந்த சொத்தையும் யாராவது ஒ
ரு பாகஸ்தர் அடைய வேண்டியதவசியமாதலால்
மற்றவர்களைவிட 1-ம் பிரவாதிக்கு அதைக்கொடு
ப்பது நலமென்று மத்தியஸ்தருக்குத்தோன்றியி
ருக்கிற விஷயம் பட்சபாதத்தைக் குறிக்கத்த
காது. அடமானவில்லங்கத்தால் ஏற்படும் சவுகரி
யக்குறையை மத்தியஸ்தர்மனதில்வைத்துஅந்தக்
கடனுக்காகபூராசொத்துக்களும்ஈடாயிருக்கவே
ண்டுமென்றும் ஒவ்வொருபாகஸ்தரும் குறித்தகா
லத்தில்விகிதாசாரபடிக்கு அசல்வட்டியைச்செலு
த்திஅடமானவில்லங்கத்தைத் தீர்த்துவிடவேண்
டுமென்றுஏற்பாடுசெய்திருக்கிறார். இவ்விதமான
நடவடிக்கையில் பட்சபாதம் துரோகம் என்ற
குற்றத்திற்கு அவகாசமாக்கக்கூடாது.
மத்தியஸ்தர் சொத்துப்பூராவையும் ரூ 95,042-க்
குமதிப்பிட்டிருக்கிறாரென்று சப்கோர்ட்டார் அ
பிப்பிராயப்பட்டிருக்கிறார். அதுவேபிசகு பங்கு
விகிதத்திற்கு 91,042 பெருமான சொத்துமட்டு
ம் குறிக்கப்பபட்டிருக்கிறது அஹமத்கான் என்
னும் பில்கலெக்டரால் சேரவேண்டிய பா
க்கிதொகை ரூ 4000- வசூலாவது சந்தேக
மென்றும் அது வசூலானால் அதை 1-ம் பிரதி
வாதி அடைகிறதென்று தீர்மானித்திருக்கிறார்.
இது 1-ம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடிய லாப
மேயொழிய பங்குவிகிதமல்ல. 1-ம் பிரதிவாதி
க்கு மூன்றிலொரு பாகமாகிய ரூ 30, 879 பெரு
மான சொத்துக்கள் பிரித்துக் காட்டப்பட்டபின்
அஹமத்தாக இந்த ரூ 4000 அதிகமாகக் கொடு
க்கப்பட்டது. அஹமத்கானை வரவழைத்துக் கண
க்குகளைப் பரிசோதிக்க பிரயத்தனப்பட்டதில்
அவன் ஆஜராகாமல் மறைந்துவிட்டான். குடும்பத்
தைச் சேர்ந்த சில பாகஸ்தர்களிடமிருந்து தன்



னால் யாதொரு பாக்கியும் செலுத்தப்படவேண்டி
யதில்லையென்று விடுதலை யெழுதி வாங்கியுமிரு
க்கிறான். அப்படியிருக்க இந்த ரூ 4000-கிடை
க்கக்கூடிய சந்தர்ப்பம் மிக்க சந்தேகமாகவேயிரு
க்கிறது. சப் கோர்ட்டார் எஸ்டேட்டின் மொத்
தமதிப்பை ரூ 91, 042 ஆக மதித்துப் பிரித்த
தை கவனியாமல் ரூபா 95, 042 என்று நினைத்து
மத்தியஸ்தர் பேரில் சந்தேகப்பட்டிருக்கிறார்.
அது பிசகு. 1-ம் பிரதிவாதிக்காக சொல்லப்ப
ட்ட வாதத்தில் மத்தியஸ்தருடைய ஒவ்வொரு
நடவடிக்கையிலும் உண்மைக்குறைவு ஏற்படா
விட்டாலும், எல்லாவிஷயத்திலும் 1-ம் பிரதிவா
திக்குத் தாழ்வாகவும் வாதிக்கு மேன்மையாகவும்
பிரிவினையம்சங்களை ஏற்பாடுசெய்திருக்கிறபடி
யால் அவருடைய நடத்தை சந்தேகத்தை உண்டு
பண்ணுகிறதென்றும் அவ்விஷயம் அவார்டை ர
த்துசெய்வதற்குப் போதுமான ஸ்வயலாபத்தை
க்கருதியவஞ்சகமென்றுசொல்லப்படுகிறது மத்தி
யஸ்தருடைய தீர்மானத்தைச்சந்தேகித்து அவா
ர்டை ரத்துசெய்யும்படியாக அவருடைய நடத்
தையைப்பற்றிக் கடினமான குற்றஞ்சாட்டுவதற்
கு அதிகபலமான ருஜுபாகம் அவசியமாகுமென்
றும்அவ்வித ருஜுபாகம் யாதொன்றும் கிடையா
த காரணத்தால் அவார்டைரத்து செய்ய நியாய
மில்லையென்றும் தீர்மானித்து பிரிவிகௌன்ஸி
ல் அப்பீல்டிஸ்மிஸ் செய்தார்கள்.

## 21914 M. W. N. 47

——— ———:O:——— ———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சுந்தரய்யர்
தென்மலையாளம் ஜில்லா

C. M. A. 88 of 1913 —20 மார்ச்சு 1914

வைத்தியநாதய்யர் Vs ராமஸ்வாமி அய்யர்

Ry. R. M. கம்பெனியார் நடத்திவந்த வர்த்
தகத்தில் கடனாளி மிகுந்துபோனதால் தென்ம
லையாளம் ஜில்லா கோர்ட்டில் இன்சால்வென்ஸி
விண்ணப்பம் தாகல் செய்ததில் ஷை கம்பெனி
யாருடையநிலுவைபாக்கிகளையும் வருமானங்களை
யும்வசூலித்துக்கடனாளிக்குப்பகிர்ந்து கொடுக்கும்
பொருட்டு P. S. ராமஸ்வாமி அய்யரென்றவர் ரிஸீ
வராக நியமிக்கப்பட்டிருந்தார் ஷை கம்பெனியின்
பாக்கிதாராக ஷெடியூலில் குறித்துக் காட்டப்
பட்ட ஒரு க்ரெடிடர் தன்னுடைய சில சொத்து
க்களை முதலில் ஒருவருக்கு அடமானம் வைத்து
அதன்பின் அவைகளை மற்றொருவருக்கு 2-வது
அடமானமாகவும்ஷை இன்சால்வெண்ட்கம்பெனி
க்கே 3-வது அடமானமாகவும் எழுதிவைத்திருந்
தார். 2-வது அடமானதார் ஷை க்ரெடிடர்பே
ரில் தாவா செய்து டிக்கிரீ பெற்று அடமான
சொத்தானது முந்திய அடமானதாருடைய கட
ன்பாக்கிக்குட்பட்டிருப்பதாலும் அதின் விலை
மதிப்பு தன் டிக்கிரீ பாக்கி தீருவதற்குப்போதா
மையாலும் ஷை 3-வது அடமானதாராகிய இன்
சால்வெண்ட் கம்பெனியாரால் டிக்கிரீ பாக்கிதார
ராகிய க்ரெடிடருக்குச் சேரவேண்டிய கடன்
பாக்கியை ஜப்தி செய்து அதை ஏலம் போட்ட
தில் மனுதாராகிய வைத்தியநாதய்யரவர்கள் அந்
தக்கம்பெனிக் கடனை ஏலமெடுத்து ஏலத்தொகை
யைக் கோர்ட்டில் கட்டிவிட்டார். [கம்பெனிப
லமாய் நடந்துவந்தமையால் கம்பனியாரால் ஷை
க்ரெடிடராகிய டிக்கிரீ பாக்கிதாரனுக்குச் சேர
வேண்டிய கடன் பாக்கியை மனுதார் மேடோவர்
வாங்கிக்கொண்டு தான் வசூலித்துக்கொள்ளும்
யோக்கியதைக்குச் சமானமாக அதே கடன் பாக்
கியை வசூலிக்கும் பாத்தியமானது ஏலம் போட
ப்பட்டபடியால் ஏலத்தில் குறைந்த தொகையைக்
கட்டிவிட்டு வசூலாகும் தொகைபூராவையும்தானே
அடைந்து லாபமடையலாமென்ற கருத்து மனு
தாருக்குண்டாகி ஏலங் கோறினதாகச் சொல்
லவேண்டும். கம்பெனி சீக்கிரம் இன்ஸால்வெ
ண்டாகப் போகக்கூடிய அந்தரங்கம் மனுதாருக்
குத் தெரியாது.] ஆகவே கம்பெனியார் ஷெடி
யூல் தாகல் செய்தபொழுது அதில் பாக்கிதார்க
ளுடைய ஜாப்தாவில் ஷை க்ரெடிடரின் பெயர்
குறிக்கப்பட்டிருக்க மனுதார் ஷை கடன் பாத்திய
தையைத் தான் ஏலமெடுத்த காரணத்தால்க்ரெ
டிடருடைய பெயரை நீக்கி அதற்கு பதிலாகத்
தன்னுடைய பெயரை தாகல் செய்யும்படி ரிஸீவ
ருக்கு உத்தரவளிக்கவேண்டுமென்று சொல்லி
ஜில்லா, கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்தார்.
ஜில்லா கோர்ட்டார் மனுவைத் தள்ளுபடி செய்
யவே மனுதார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்த
தில் இன்ஸால்வெண்ட் கம்பெனியாரால் க்ரெ
டிடருக்குச் சேரவேண்டிய கடன் பாத்தியதை
ஷை க்ரெடிடர் பேரில் ஏற்பட்ட யாதொரு டிக்
கிரீ பாக்கிக்காக ஏலம் போடப்பட்டு அந்த பாத்

தியதையைமனுதார்ஏலத்திலெடுத்திருந்தால்மநுதாரின் பெயரை கிரெடிடருக்குபதிலாக ஷெடியூலில் குறிக்கும்படி ரிஸீவருக்குக் கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டியது நியாயமாகும். இந்தக்கேசின் சந்தர்ப்பத்தில் கம்பெனியாருக்கு மூன்றாவது அடமானபாத்தியதையி னிமித்தம் ஷெ கிரெடிடரால் சேரவேண்டிய பாக்கியைரிஸீவர்வஜா செய்யவேண்டியதுநியாயமா அல்லவாவென்ற பாயிண்டு கீழ்கோர்ட்டில் சரியானபடி யோஜிக்கப்படவில்லையென்றும் (அதாவது கம்பெனியார் கிரெடிடருக்குச் செலுத்தவேண்டிய கடனை ஷெடியூலில் காட்டப்பட்டும் ஷெ கிரெடிடர் கம்பெனியாருக்கு அடமானக் கடனைச்செலுத்தவேண்டியதாயிருக்க ரிஸீவர் ஷெ அடமானக்கடன்பாக்கியை கம்பெனியாரால் செலுத்தப்படவேண்டிய கடன்பாக்கிக்காகவஜாசெய்துகொள்ள ரிஸீவருக்கு அதிகாரமுண்டாவென்ற பாயிண்டு சரியானபடி யோஜிக்கப்பட்டு தீர்மானம் கொடுக்கப்படவில்லையென்றும்) தவிர கம்பெனிக் கடனை ஏலம் போட்டது 2-வது அடமானதார் என்றவிஷயமும் ஷெகடன்பாத்தியதையை மற்ற அடமானதார்களுடையஹக்குநீங்கலாக ஏலமெடுத்தாராவென்ற பாயிண்டும் யோஜிக்கப்படவேண்டியதென்றும், ஏனெனில் ஏலம்போட்ட அடமானதாரை தவிர மற்ற அடமானதார்களுக்கு ஏலம்போடப்பட்ட கம்பெனி கடனில் பாத்தியமில்லை யென்று ஏற்பட்டால் ரிஸீவருக்குமேற்கண்டவிதமாய் வஜாசெய்ய நியாயமாகாது. இன்னால் வெஸ்ட்கம்பெனியாரே 3-வது அடமானதார்களாகயிருக்கிறபடியால் மனுதாரின் ஏலபாத்தியதை வில்லங்க சுத்தியாய் ஏற்பட்டிருந்தால் ரிஸீவர் கிரெடிடருக்குக்குக் கம்பெனியாரால் சேரவேண்டிய பூராத் தொகையையும் மனுதாருக்கு வீதாசாரப்படி செலுத்த கடமைபட்டவருகிறார். ஆகவே ஜில்லாகோர்ட்டாருடைய உத்தரவு ரத்தாகி விண்ணப்பம் கீழ்கோர்ட்டுக்கு மறுவிஜாரணைக்கனுப்பப்பட்டு மேற்கூறிய அம்சங்களைக்கவனித்து சட்டப்பட்டி பைசலளிக்க வேண்டுமென்று விண்ணப்பம் ரிமாண்டு செய்யப்பட்டது.



---

## ஜஸ்டிஸ் ஏய்லிங்

### தஞ்சாவூர் ஜில்லா

### Crl R Case 187 of P. No 157 of 1914

### 12 மே 1914

*சுப்பாமய்யர் Vs மரிய பிள்ளை*

அருவடைக்குத்தயாராயிருந்த ஒரு சொத்து பாத்தியதை விஷயமாக காலஞ்சென்ற ஸ்வான்தாருடைய புத்திரர்களிடமிருந்து கிறயம்பெற்ற சுப்பராமய்யர் வகையாரவுக்கும் ஷெ ஸ்வான்தாருடைய சம்சாரத்தினிடமிருந்து பெற்றகுத்தகைச்சீட்டால் அனுபோகபாத்தியதையை அடைந்த மரியபிள்ளை என்றவருக்கும் தகரார் ஏற்பட்டு மரியப்பிள்ளை திருவாரூர் டி மு கோர்ட்டில் சுப்பராமய்யர் வகையாராவின் பேரில்குத்தகைபாத்தியதையை அனுசரித்து மாருல்நஷ்டத்திற்காக தாவாசெய்ததில் தாவாசொத்தின் அனுபோகத்தைக் குத்தகைக்கு ஒப்படைக்க காலஞ்சென்ற ஸ்வான்தாருடைய சம்சாரத்திற்கு பாத்தியமுண்டாவென்ற இஷ்யுபாயிண்டு ஏறபட்டு அவளுக்கு அவ்வித பாத்தியதை கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது ஆகையால் மரியப்பிள்ளையின் மாருல் நஷ்டப்பிராது தள்ளுபடியாச்சுது. ஸிவில் வியவகாரம் இதே நிலைமையில் நிற்கமரியப்பிள்ளை 1914 ஜனிவரி 17-ல் நாகப்பட்டணம் 1-வது கிளாஸ் மாஜிஸ்ரேட்டா ரவர்களிடம் கிரிமினல் புரெஸிஜர்கோட் 144-வது பிரிவின்படி தாவாநிலத்தைத்தான் அனுபோகம்செய்வதாயும் எதிரிகள் அவ்வித அனுபோகத்திற்கு இடையூறுண்டாக்குவதாயும் அதனால் அதிசீக்கிரத்தில் அபாயம் நேரிடுமென்றும் சொல்லி எதிரிகளுக்கு இஞ்சங்கிஷன் கட்டளை பிறப்பித்து தன்னுடையஅனுபோகத்தைத் தடைசெய்யாலிருக்கும்படி உத்தரவளிக்கவேண்டுமென்று விண்ணப்பம்கொடுத்தார் மாஜிஸ்டிரேட்டா ரவர்கள் அந்த விண்ணப்பத்தை போலீசாருக்கு அனுப்பி விஜாரணைசெய்துரிப்போர்ட் செய்யும்படி உத்ரவளித்தார்கள் போலீசாருடையரிபோர்ட்டானது 1914 பிப்ரவரி 2-ல் மாஜிஸ்டிரேட்டாரிடம் வந்து சேர்ந்தது இந்த ரிபோர்ட் வந்துசேருமுன் மரியப்பிள்ளை ஜனவரி 24-ல் மாஜிஸ்ரேட்டாரிடம் வேறொருவிண்ணப்பம் கொடுத்து அதில் போலீஸ் விஜாரணை சரியாய் நடக்கவில்லையென்றும் எதிரிகள் தாவாநிலத்திலு



ள்ள விளைவுகளை அறுவடை செய்து வருகிறார்களென்றும் அவர்கள் தாவாநிலத்தில் பிரவேசிக்கக்கூடாதென்றும் கோர்ட்டார்காலதாமத மன்னியில் விஜாரணைசெய்து உத்தரவளிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். மாஜிஸ்டிரேட்டார் ஷெ விண்ணப்பத்தின்பேரில் "விஜாரணை முடியுமட்டும் "இருதரத்தாரும் தாவாநிலத்தை அறுவடைசெய்யக்கூடாதென்றும் அவர்களுக்கு கிரிமினல் புரொஸிஜர் கோட் 144-வது பிரிவின்படி நோடீஸ் அனுப்பவேண்டுமென்றும் இதுவரையில் அறுவடையாகியிருக்கிற தானியத்தை கிராமமுனிசீப் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இருதரத்தாரும் பிப்ரவரி 5-ல் தங்கள் தங்கள் சாட்சிகளை விஜாரணைக்காக ஆஜர்படுத்தவேண்டுமென்றும்" உத்தரவளித்தார்கள். நோடீஸில் சட்டப்பிரிவு இன்னதென்று குறிக்கப்படவில்லை. ஆனால் அதில் கலகத்திற்கு ஆஸ்பதமான தகரார் இருப்பதால் பைசல் தீர்மானமளிக்குமட்டும் ஒருவரும் அறுவடை செய்யக்கூடாதென்றும் உத்தரவில் கண்ட மற்ற விஷயங்களும் நோடீஸில் குறிக்கப்பட்டிருந்தது. பிப்ரவரி 5-ல் மாஜிஸ்டிரேட்டா ரவர்கள் கிரி ஸி. பி. ஸி. 145 வது பிரிவின்படி நடவடிக்கை நடத்துவதாய்ச் சொல்லி ஸிவில் கோர்ட்டாருடைய டிக்கிரிப்படிக்கு ஸ்வான்தாருடைய பெண்சாதிக்குக் குத்தகைக்கு ஒப்படைக்க அதிகாரமில்லை யென்று ஏற்பட்டதால் அந்தத்தீர்மானத்திற்கு மாறாக மரியப்பிள்ளைக்கு நிலச்சுவாதீன உத்தரவளிக்க நியாயமில்லையென்று அபிப்பிராயப்பட்டு மரியபிள்ளையின் மனுவைத் தள்ளுபடிசெய்து அறுவடையான தானியங்களுடன் மற்றதையும் அறுவடைசெய்து கி. மூ. தானியங்கள் முழுவதையும் தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒருமாத காலத்திற்குள் ஸிவில் கோர்ட்மூலமாய் இருவருடைய பாத்தியதை தீர்மானமாகாத பட்சத்தில் ஷெ தானியத்தை ஏலம்போட்டுவிட வேண்டியதென்று கி-மு அவர்களுக்கு உத்தரவளிக்கப்பட்டது. சுப்பராமய்யர் வகையராக்கள் கி-மு-வுக்கு உத்தரவளித்தமட்டில் மாஜிஸ்டிரேட்டருடைய உத்தரவு சட்டவிரோதமென்றும் ஆகையால் உத்தரவின் அந்தபாகத்தை ரத்துசெய்ய வேண்டுமென்றும் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்தார்கள். ஹைகோர்ட்டார் மாஜிஸ்டிரேட்டா ரவர்களுடைய உத்தரவைப்பற்றி சுப்பராமய்யர் வகையராக்களாகிய மனுதார்கள் செய்கிற ஆக்ஷேபனை நியாயமென்று அங்கீகரித்து மாஜிஸ்டிரேட்டாரின் நடவடிக்கை முழுவதும் சட்டவிரோதமென்று தீர்மானித்து கீழ் கோர்ட் உத்தரவை பூராவும் ரத்துசெய்து விட்டார்கள். அதற்குக்காரணமாக ஹைகோர்ட்டாருடைய உத்தரவில்சொல்லப்பட்ட முக்கிய நியாயங்களாவன:— ஆக்ஷேபிக்கப்படுகிற மாஜிஸ்டிரேட்டா ரவர்களுடைய உத்தரவின் பாகமானது 146-வது பிரிவின்படி செய்யப்பட்டதாகச் சொல்லவேண்டும். அதாவது 145-வது பிரிவின்படி சொத்தின் சுவாதீன அனுபோகவிஷயமாய் கலகம் உண்டாகுமென்று தோன்றினால் மாஜிஸடிரேட்டார் போலீஸ் ரிபோர்டின் பேரிலாவது அல்லது வேறுவிதமான தகவலின்பேரிலாவதுநடவடிக்கை நடத்தி விஜாரணைகாலத்தில் அனுபோகம் யாரிடமிருக்கிறதென்று கண்டறிந்து ஷெ யாருக்கு சுவாதீன உத்தரவளிக்கவேண்டும். ஆனால் சுவாதீனம் இருவரிடமும் இல்லையென்றுதெரிந்தாலும் அல்லது யாரிடமிருக்கிறதென்று கண்டறிய முடியாதபட்சத்திலும் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் ஆக்ஷேபிக்கப்படுகிற வகையான உத்தரவை 146 வது பிரிவின்படி செய்யலாம். 146-வது பிரிவின்படி உத்தரவளிப்பதற்கு முன் 145 வதுபிரிவின்படி முறைதவறாமல் நடவடிக்கைகள் நடந்திருக்கவேண்டும். இந்தக்கேசில் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் 145-வது பிரிவில் குறித்தவிதமாய் மூன்றில் ஒருவிதமான தீர்மான அபிப்பிராயமும் கொடுக்கவில்லை. அதாவது அனுபோகம் இன்னாரிடமிருக்கிறதென்றும் கண்டுபிடித்துச்சொல்லவில்லை. அல்லது சுவாதீனம்இருகக்ஷிக்காரர்களிடத்திலும் இல்லையென்றும்சொல்லவில்லை அல்லது அந்த விஷயத்தைக்கண்டுபிடிக்கக் கூடவில்லையென்றும் சொல்லவில்லை. அப்படியிருக்க 146-வது பிரிவின்படிஉத்தரவளிக்க அவசியமில்லை.

ஸிவில் கோர்ட் தீர்மானத்தால் தான் கட்டுப்பட்டிருப்பதாயும் அதற்கு விரோதமாய் சுவாதீன விஷயத்தைப்பற்றி மரியப்பிள்ளை என்ற மனுதாருக்கு அனுமதி கொடுக்கக் கூடாதென்றும் அனுபோகம் அச்சமயத்தில் யாரிடமிருக்கிறதென்று விஜாரணைசெய்து 145-வது பிரிவின்படி தீர்மானங்கொடுக்க அதிகாரமில்லையென்றும் மா

ஜிஸ்டிரேட்டார் உத்தரவில் சொல்லுயிருக்கிருர். இந்த அபிப்பிராயம் சரியென்று 146-வது பிரிவின்படி செய்த உத்தரவைமட்டும் ஆக்ஷேபிக்கிற மனுதார்கள் வாதாடுகிருர்கள். அந்தவாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. டி-மு கோர்ட்டாருடைய உத்தரவினுல் மாஜிஸ்டிரேட்டார் 145-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்த லாயக்கில்லையென்று சொல்லத்தகாது. மாஜிஸ்டிரேட்டார் அபிப்பிராயம் சரியென்பதற்கு 32கல்கத்தா 296-ம், 26 கல்கத்தா 625-ம் அதாரிடிகளாக எடுத்துச் சொல்லப்பட்டன.

32 கல்கத்தா 296-ல் "145-வது பிரிவின்படி விஜாரணை துவக்க 2-தினங்களுக்குமுன் மனுதாருக்கு ஸிவில் கோர்ட்டாரால் நிறைவேற்று நடவடிக்கையில் தகரார் நிலம் சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் 145 வது பிரிவின்படி விஜாரணை நடத்தி 146-வது பிரிவின்படி உத்தரவளிக்க மாஜிஸ்டிரேட்டாருக்கு அதிகாரமில்லையென்றும் ஸிவில் கோர்ட் டிக்கிரீப்படிக்கு மாஜிஸ்டிரேட்டாரவர்கள் சுவாதீன உத்தரவளித்திருக்க வேண்டுமேயொழிய 145வது பிரிவின்படிதற்காலத்தில் சுவாதீனம்யாரிடமிருக்கிறதென்று கண்டறியப் பிரயத்தனப்பட்டு 146-வது பிரிவின்படி உத்தரவளிக்கமாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு அதிகாரவரம்பில்லையென்றும்" கல்கத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிருர்கள். அது சரியான அபிப்பிராயமல்லவென்று சொல்லவேண்டும். 145-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் நடவடிக்கை நடத்த அதிகாரவரம்பு எனில்லை. சுவாதீனவிஷயமாய் கலகம் ஏற்படுமென்று சந்தேகித்து 145-வது பிரிவின் 1-வது கிளாசின்படி நடந்துகொண்டு அதாவது இருதரத்தாரையும் தன்முன் ஆஜராகும்படி நோடீஸ் அனுப்பி சுவாதீன அனுபோக விஷயமாய் அவர்களை ஸ்டேட்மெண்டு தாகல் செய்யச் சொல்லித் தனக்கு மேல் விஜாரணை நடத்த அதிகாரவரம்பை உற்பத்திசெய்து கொண்டு சட்டப்படி யாதொரு உத்தரவளித்தால் மாஜிஸ்டிரேட்டாருடைய நடவடிக்கை பிசகென்று சொல்லத்தகாது.

26 கல்கத்தா 625-ல் "ஜில்லா கோர்ட்டாருடைய உத்தரவுப்படி ரிஸீவர் ஒரு பார்ட்டிக்கு 1898 ஆகஸ்ட் 29-ல் சுவாதீனமளித்தபின் மாஜிஸ்டிரேட்டார் 1893 நவம்பர் 1-ல் 145-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தி விசாரணை செய்து தாவா சொத்தின் சுவாதீனம் எதிரியின் வசமிருப்பதாகத் தீர்மானித்துவிட்டார்கள். அதன்பேரில் ஹைகோர்ட்டாரவர்கள் 145-வது பிரிவின்படி நடவடிக்கை எடுத்த சொற்பகாலத்திற்கு முன் ஸிவில் கோர்ட்டாரால் ஒரு பார்ட்டிக்குத் தகரார்சொத்தின் சுவாதீனம் அளிக்கப்பட்டிருந்தால் மாஜிஸ்டிரேட்டார் ஸிவில் கோர்ட் உத்தரவை நிலைநாட்டவேண்டுமென்றும் அப்படிக்கில்லாமல் வேறுவிதமாக நடவடிக்கை நடத்தி சுவாதீனம் யாரிடமிருக்கிறதென்று அறியப் பிரயத்தனப்பட்டால் சட்டத்தில் யோஜிக்கப்படாத வண்ணமாய் யாதொரு அதிகாரத்தைச்செலுத்தி ஸிவில்கோர்ட் தீர்மானத்தை மாற்றும்படி நேரிடுமென்றும் சொல்லி 145-வதுபிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் நடவடிக்கை நடத்தி பைசல் அளித்தது அதிகார வரம்பில்லாமல் செய்யப்பட்டதென்றும் ஆகையால் அது ரத்தாகவேண்டுமென்றும்" அபிப்பிராயங் கொடுத்திருக்கிருர்கள். இந்த அபிப்பிராயமும் சரியென்று ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. கல்கத்தா ஹைகோர்ட்டார் மேற்கூறிய இரண்டு கேஸுகளிலும் 145-வது பிரிவின் 4-வது கிளாஸில் முதலாவது புற நடையில் சொல்லப்பட்டிருக்கிற அம்சத்தை கவனித்து இவ்வித அபிப்பிராயங் கொண்டிருக்கிருர்கள். அதாவது ஒரு பார்டி 145-வது பிரிவின்படி உத்தரவு ஏற்படுவதற்குமுன் இரண்டு மாதங்களுக்குள் அக்கிரமமாயும் பலவந்தமாயும் சுவாதீனத்திலிருந்து விலக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டால் அப்படி விலக்கப்பட்டவனே அந்த சொத்தின் சுவாதீனத்திலிருந்தவனுக பாவிக்கப்பட்டு அவனுக்கு சுவாதீன உத்தரவு அளிக்கவேண்டுமென்ற அந்த புறநடையில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கோர்ட் மூலமாய் சுவாதீனமடைந்தவனே இரண்டு மாதங்களுக்குள் விலக்கினவனுக்கு சுவாதீன உத்தரவு கொடுக்கப்படாதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிருர்கள். ஆனுல் நிலச்சுவாதீன விஷயமாய் கிரிமினல்கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தைப்பற்றியும் அது சம்பந்தமான காரியங்களைப்பற்றியும் ஏற்பட்டிருக்கிற சட்டவிதிகளின் மொத்தக்கருத்தில் பாத்தியபாத்தியதை யாருக்கிருந்தாலும் விண்ணப்ப விஜாரணைகாலத்தில் வாஸ்தவமாய் சொத்தானது யாருடைய வசத்திலிருக்கிறதென்று விஜாரித்து உத்தரவளிக்க வேண்டியது மாஜிஸ்டிரேட்டாருடைய கடமையென்று ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படவேண்டும். 26 கல்கத்தா 625-ல் சொற்பகாலத்திற்கு முன் கோர்ட்டாரால் சுவாதீனமடைந்தவருக்கனுகூலமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சொற்பகாலமென்ருல் என்ன? 145-வது பிரிவின்படி நடவடிக்கை யெடுக்கப்பட்டதற்கு சொற்பகாலத்திற்குள் ஸிவில் கோர்ட்டாரால் பாத்தியதையும் சுவாதீனமும் பெற்றவனுக்கு அனுகூலமாய் உத்தரவளிக்க வேணுடுமென்ருல் அந்த அபிப்பிராயத்தின் கருத்தென்ன? இந்தக்கேஸில் டி-மு கோர்ட் டிக்கிரீ பிறந்து 18 மாதங்களுக்குப்பின் 145-வது பிரிவின்படி நடவடிக்கை யெடுக்கப்பட்டிருக்கின்றன. தவிற டி-மு கோர்ட் டிக்கிரீயானது பாத்தியஸ்தாபன விஷயமாக அல்லது சுவாதீனத்திற்காகக் கொடுத்தபிராதைப் பற்றியதல்ல. மாசூல் நஷ்டத்திற்காகக் கொடுத்தபிராதாகும். அதில் நிலபாத்தியதையைப்பற்றிய இஷு ஒன்று ஏற்பட்டிருந்தது. அது வாதிக்கு விரோதமாச்சுது. ஆகையால் இவ்விதமான பிராதில் ஏற்பட்ட டிக்கிரீயை மாறுதும்படியான நடவடிக்கையாக 145-வது பிரிவின் தீர்மானத்தை மதிக்கத்தகாது. டி-மு கோர்ட் டிக்கிரீ மாஜிஸ்டிரேட்டாரால் செய்யப்படும் சுவாதீன உத்தரவால் மாறுமென்று சொல்லத்தகாது. ஆகவே கல்கத்தா ஹைகோர்ட் அபிப்பிராயம் சரியாக மதிக்கப்பட்டாலும் இந்தக் கேசுக்கு அது பிரயோஜனமில்லை. எற்கவும் எற்காது. இது விஷயமாய் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள் யாதொன்றும் எடுத்துக் காட்டப்படவில்லை. டி-மு கோர்ட் டிக்கிரீ மாஜிஸ்டிரேட்டின் அதிகாரவரம்பை பாதிக்காதென்று சொல்லவேண்டும்.

ஆனுல் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவானது மூற்றிலும் சட்டவிரோதமென்றும் அது செல்லத்தகாதென்றும் சொல்வதற்குக் காரணங்களிருக்கின்றன. ஏனெனில் 144 வது பிரிவின்படி உத்தரவளிக்க வேண்டுமென்று அதாவது மனுதார்களாகிய எதிரியின்பேரில் இஞ்சங்ஷன் கட்டளை ஏற்படவேண்டுமென்று கோறப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் நோடீஸுக்கு உத்தரவாச்சுது. MADRAS. சட்டப்பிரிவின்படி விஜாரணை நடக்குமென்றும் குறிக்கப்படவில்லை. விஜாரணைகாலத்தில் மட்டும் மாஜிஸ்டிரேட்டார் 145 வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தப்போகிறதாகச் சொல்லியிருக்கிருர். அவ்வித நடவடிக்கை நடத்துமுன் 145 வது பிரிவின் 1 வது கிளாஸின் முறை ஒழுங்காய் அனுசரிக்கப்பட்டிருக்கவேண்டும். அதாவது முன் சொன்னபடி இருதரத்தாருக்கும் சம்மன்ஸ் அனுப்பித் தன்முன் ஆஜராகும்படியும்ஸ்டேட்மெண்ட் தாகல்செய்யும்படியும் கட்டளையிட்டிருக்கவேண்டும். தவிற கலகம் உண்டாகுமென்று நம்புவதற்குறிய காரணங்களையும் ரிகார்ட் செய்திருக்கவேண்டும். இவவிதமாய் உத்தரவளித்தபின் குறித்ததேதியில் விஜாரணைக்கு ஆரம்பம் செய்யவேண்டும். இவ்விதமான ஆர்டர் முதலில் பிறக்காமல் ஏற்பட்ட விஜாரணையும் பைசலும் சட்டவிரோதமாகும். 32 கல்கத்தா 552 ஐப் பார்க்கவும். 36 மதராஸ் 275 ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி கலகம் உண்டாகுமென்ற நம்பிக்கைக்குக் காரணம் குறித்தெழுதப்பட வேண்டியவசியமில்லையானுலும் உத்தரவு முறைப்படிக்கு எழுதப்பட்டிருக்க வேண்டும். இந்தக்கேஸில் விண்ணப்பத்தின்பேரில் முதல் பிறந்த உத்தரவின் விவரம் முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வித உத்தரவின்பேரில் 145 வது பிரிவின்படி விஜாரணை தொடங்குவது மூற்றிலும் சட்டவிரோதமாகும். அன்றியும் மாஜிஸடிரேட்டார் நோடீஸுக்கு உத்தரவளிக்கும்பொழுது, 145 வது பிரிவின்படி விஜாரணை நடத்தபோகிறதாக உத்தேசித்திருக்க மாட்டாரென்று சொல்லலாம். தானே கேஸை 145 வது பிரிவின்படி விஜாரணைக்கு எடுத்ததாகச் சொல்லியிருக்கிருர். அதுவும் 2-பிப்ரவரியில் போலீஸ் ரிபோர்ட் வந்ததைப்பார்த்துக்கொண்டு அவ்விதமான விஜாரணை நடத்தஉத்தேசித்திருக்கிருர். மாஜிஸ்டிரேட்டார் அளித்த உத்தரவும் 145 வதுபிரிவின்படி அளிக்கப்பட்டதல்ல. அதின் அம்சங்கள் யாதொன்றும் உத்தரவில் கிடையாது. ஆகவே மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவின் முன்பாகமும் சரியல்லவென்றும் மனுதார்கள் ஆக்ஷேபிக்கிற பின்பாகமும் சட்டவிரோதமென்று ஏற்பட்டு அந்த உத்தரவு முழுவதும் தள்ளுபடியாச்சுது.

XVI. M. L. T.

——o——

ஜஸ்டிஸ மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

கடப்பை ஜில்லா.

S. A. 849 of 1912

பட்லிஷர் போயண்ணு VS கொலுஸு அசேது

கிராமநத்தமென்று சொல்லப்பட்ட ஒரு காலி நிலத்தில் பிரதிவாதி அறுவடைகாலத்தில் வைக்கல் போர் அடுக்கிக்கொண்டு அனுபவித்து வரும்பொழுது கவர்ன்மெண்டார் ஷை நிலத்தில் பாத்தியம் கொண்டாடி 1906 ல் ஷை நிலத்தை B ரிமோவில் சேர்த்துக்காட்டி ஷை நிலம் சர்க்காருக்குச் சொந்தமான நத்தம்புறம்போக்கென்று சொல்லி வாதிக்கு ஷை நிலத்தை கிராண்டாகக் கொடுத்து வாதிக்கு அதில் பாத்தியதை யுண்டாக்கி அவருக்குப் பட்டாவும் கொடுத்துவிட்டார்கள். வாதி ஷை நிலத்தை அனுபவித்து வருகிற பிரதிவாதியின்பேரில் கூட்டி டி-முகோர்ட்டில் இஜெக்ட்மெண்ட் பிராது கொடுத்தார். டி-மு கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய் 'டிக்கிரீயளித்தும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2 வது அப்பீல் தாகல் செய்ததில் 2 வது அப்பீலை முதலில் ஈரங்கிகேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர், ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் இருவரும் இருகக்ஷியின் நியாயத்தைப்பற்றி வித்தியாஸமான அபிப்பிராயங் கொடுத்து கடைசியில் இருவரும் ஒற்றுமையாக ஜில்லா ஜட்ஜியவர்கள் ருஜுபாகத்தை சரியானபடிமதிக்கவில்லை யென்றுசொல்லி நிகார்ட்டாகியிருக்கும் ருஜு அம்சத்தைக் கொண்டே இரு கக்ஷியிலும் யாருடைய பாத்தியதை மேலானதென்று தீர்மானித்து அந்த தீர்மான அபிப்பிராயத்தைக் காரணங்களுடன் 6 வாரங்களுக்குள் எழுதியனுப்பும்படி ஜில்லா கோர்ட்டாருக்குக் கட்டளை யிட்டார்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள்கொடுத்த அபிப்பிராயச் சுருக்கமாவது:— தாவா நிலம் கிராமநத்தத்தைச்சேர்ந்தது. அதாவது தீர்வையில்லா நத்தம் புறம்போக்காகச்சொல்லப்படவேண்டும். ஆகையால் அவ்வித நிலமானது கவர்ன்மெண்டாரால் யாதொருவனுக்கு தர்காஸ்தாகக் கொடுக்கப்படாமலும் ஒரு தேவஸ்தானத்திற்காக ஏற்பட்டிராமலும், வீட்டுமனைக் கட்டாகஇல்லாமலும் அல்லது மனைப்புழக்கடையாக ஏற்படாமலும் அதாவது ஒரு வகையிலும் குறித்த பாத்தியதை ஏற்படாமலுமிருந்தால் 1905-ம் வருஷத்திய மதராஸ் ஆக்ட் III-ல் சொல்லியிருக்கிறபடி கவர்ன்மெண்டாருடைய சொத்தாகத் தீர்மானிக்கப்படவேண்டும். கவர்ன்மெண்டாரும் அதில் ஸ்வதந்தர பாத்தியம் கொண்டாடி 1905-ல் அதை அனுமதியன்னியில் உபயோகப்படுத்தினவனுக்கு தண்டத்தீர்வை விதித்து 1906-ல் B-மிமோவில் அந்த நிலத்தை தாகலாக்கி வாதிக்கு அதை தர்காஸ்த்தளித்து பட்டாவும் கொடுத்திருக்கிறார்கள். பிரதிவாதியும் ஒருவாறாக ஸர்க்கார் பாத்தியதையையொப்புக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பிரதிவாதி டிப்டி தாசில்தாரவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்து தாவா நிலத்தைத் தானே வைத்துக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் அதில் பிற்காலத்தில் ஒரு வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் கோறிக்கொண்டிருக்கிறார். அந்த நிலத்தில் பிரதிவாதி அனேக காலமாக வைக்கோல் போர் அடிக்கிக்கொண்டுவந்த காரணத்தால் கவர்ன்மெண்டாருடைய பாத்தியதைக்கு விரோதமாக பிரதிவாதிக்கு அனுபோக பாத்தியதை உண்டாகாது. அவ்வித அனுபோக பாத்தியதை உண்டாவதற்கு பிரதிவாதியின் சுவாதீனம் தொடர்ச்சியாகவும் பகிரங்கமாகவும் போதுமானபடி நீண்ட காலத்தியதாகவுமிருக்கவேண்டும். 31 கல்கத்தா 897-ஐப் பார்க்கவும். சொற்ப காலத்திற்கு காலி மனைக்கட்டாகவும் மனைப் புழக்கடையாகவும் டெம்பொரெரியாக உபயோகப்படுத்தி வருகிறவனுக்கு பாத்தியதை யாதொன்றும் ஏற்படாது. 16 பம்பாய் 369, 21 மதராஸ் 362 இவைகளைப் பார்க்கவும். டி-மு கோர்ட்டார் சொன்ன விதமாக தாவா நிலம் எக்காலத்திலாவது ப்ரைவேட்டான சொத்தாய்ப் போய்விட்டதென்பதற்கு ருஜுபாகமே கிடையாது. வருஷாவருஷம் அறுவடையானவுடன் ஒரு நிலத்தை வைக்கோல போர் அடுக்க உபயோகித்துவந்தால் அது சாசுவதமான அனுபோகமென்று ஏற்படாது. கிராம நத்தமானநிலத்தில் வீடு கட்டிக்கொள்ள அனுமதி பெறலாம். ஆனால் அனுமதி பெற்ற ஒருவருஷ காலத்திற்குள் வீடு கட்டிக்கொள்ளாத பட்சத்தில் அந்த நிலம் கவர்ன்மெண்டாருடையதாக மாறிவிடும். ரெவின்யூ போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்களின் II வால்யூம் 45-பக்கம் XIX



அனுபந்தத்தைப் பார்க்கவும். பிரதிவாதிக்காக 1879-ல் பிறந்த ரெஜிஸ்டராகாத ஒரு கிரய தஸ்தவேஜானது ஒரு ஆதாரமாக தாகல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் தாவா நிலம் பிரதிவாதியின் தகப்பனுக்கு ஒரு மூன்றாவது மனிதனால் விக்கிரயம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தாவா நிலம் ஆதியில் பிரதிவாதியின் முன்னோர்களால் மூன்றாவது மனிதனுக்கு அல்லது அவனுடைய முற்பிதாக்களுக்கு விக்கிரயம் செய்து கொடுக்கப்பட்டிருந்தாகவும் ஷை தஸ்தவேஜினால் துலங்குகிறது. [அதாவது பிரதிவாதிவகையால் ஒருவனுக்கு தாவா நிலம் கிரயமாகி கிரயம் பெற்றவனுடைய சந்ததியார் பிரதிவாதியின் தகப்பனுக்கு மறு விக்கிரயம் செய்து கொடுத்திருப்பதாகச் சொல்லவேண்டும்.] பிரதிவாதியின் முன்னோர் தாவா நிலத்தில் ஒருவிதமான சொந்த பாத்தியதையைக் கொண்டாடிவந்ததாக ஷை தஸ்தவேஜினால் ருஜுவாகிறது. ஆனால் கவர்ன்மெண்டாருக்கு இந்தத் தகவல் தெரிய மார்க்கமில்லை. கவர்ன்மெண்டாரும் தங்கள் பாத்தியதையை பகிரங்கமாய் வெளிப்படுத்தி தாவா நிலத்தை நத்தபுரம்போக்காகரெஜிஸ்டரில் பதிவு செய்திருக்கிறார்கள். 1905-ம் வருஷத்திய மதராஸ் ஆக்ட் III நமோதுக்கு வருமுன்னமேயே தாவா நிலமானது சர்க்காரைச் சேர்ந்ததென்று யாவற்றாலும் அறிந்திருக்கும் பொழுது அந்த நிலத்தை ஒருவன் சொந்த பாத்தியம் கொண்டாடி கிரய விக்கிரய நடவடிக்கை செய்து கொண்டால் பின்வரும் லாபநஷ்டத்தை அடையத்தயாராயிருக்கவேண்டும். ஏனெனில் அவ்வித விக்கிரய நடவடிக்கைகளின் நியாய ரீதியானது பின்னால் ரத்தாகக்கூடுமென்று அவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். விக்கிரய நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் தங்கள் பாத்தியதையைக் கொண்டாடிவந்தாலும் அது பயனற்ற நிலமையாகவே ஏற்படவேண்டும். இப்படியிருக்க கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையானது ருஜுவாகவில்லையென்றும் அவர்களுக்கு 60 வருஷ சுவாதீன பாத்தியமிருந்தாக ருஜுவாகவில்லையென்றும் பிரதிவாதி 30 வருஷமாக தாவா நிலத்தை சுவாதீனத்தில் வைத்திருந்த ருஜு அம்சம் சரியானபடி ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆகவே பிரதிவாதிக்கு தாவா நிலத்தில் பாத்தியம் உறுதிப்படுத்தவேண்டியது நியாயமென்றும் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறதைக் கவனித்தால் ஜில்லா கோர்ட்டார் இந்தக் கேசின் ருஜு அம்சத்தை சரியானபடி கவனித்து மதிப்பிடவில்லையென்று சொல்லத்தகும்.

இவ்விதமான காரணங்களைச்சொல்லி மேற்கண்டபடி ஒரு இஷ்யு ஏற்படுத்தி கவர்ன்மெண்டாரிடம் பட்டா பெற்ற வாதியின் பாத்தியம் மேலானதா அல்லது பிரதிவாதியின் பாத்தியம் மேலானதா என்று நிகார்டாகியிருக்கும் ருஜு அம்சத்தைக்கொண்டு அபிப்பிராயம் கொடுக்கும்படி ஜில்லா கோர்ட்டாருக்குக் கட்டளையிட்டார்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய உத்தரவின் சுருக்கமாவது:—

வாசத்திற்கு யோக்கியமான நத்தம் புறம்போக்கு நிலமானது எவருடைய பாத்தியதையிலும் சுவாதீனத்திலும் இல்லவிடில் அது சர்க்காருக்கு பாத்தியமுள்ளதென்பதில் ஆக்ஷேபனையில்லை. ஆனால் கவர்ன்மெண்டாரிடம் கிராண்டு நிலத்தை சுவாதீனமடையும் பொருட்டு இஜெக்ட்மெண்ட் தாவா கொண்டுவருகிற வாதி கிராண்டளிக்கப்பட்ட காலத்தில் பிரதிவாதி அந்த நிலத்தை சொந்தமாக பாவித்து சுவாதீன மடைந்திருக்கவில்லையென்று ருஜுப்படுத்தவேண்டும். பிரதிவாதி டிப்டி தாசில்தாருக்கு விண்ணப்பம் கொடுத்த காரணத்தால் கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையை ஒப்புக்கொண்டதாகச்சொல்லநியாயமில்லை. அந்த விண்ணப்பத்தில் டிப்டி தாசில் தாரவர்கள் தன்னுடைய சுவாதீனத்திற்கு இடையூறாயிருக்கக்கூடாதென்றும் தானேசுவாதீனத்தைவகித்துவர அனுமதிகொடுக்கவேண்டுமென்றும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கிறதேயொழிய அந்த நிலத்தில் கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையை ஒப்புக்கொண்டதாகவும் தனக்கு பாத்தியதை யாதொன்றும் கிடையாதென்றும் அந்த விண்ணப்பத்தில் காணப்படவில்லை. பிரதிவாதி சுவாதீனவிஷயத்தை மட்டும் ஆதாரமாய்க்காட்டி கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய் சொந்த பாத்தியதையை நிலை நாட்டமுடியாது.] அனுபோக பாத்தியத்தால் ஒருவனுக்கு சொத்து நிலைத்துப்போக வேண்டுமானால் வேறுயாருக்கும் அதில்பாத்தியம்கிடையாதென்று சொல்லிக்கொண்

டு அவ்வித அனுபோகம் செய்து வரவேண்டும்.] ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களும் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் 1912 MWN 445-ல்சொல்லியிருக்கிறபடி அனுபோகத்தால் பாத்தியதையைத்தீர்மானிப்பதற்கு அனுபோகம் எந்த நிலைமையில் உண்டாச்சுதென்று கவனிக்கவேண்டும். அதில் வைக்கோல்போரடிக்கி வரும்விஷயத்தால் ஒரு காலிநிலம் வேறொருவனுக்குச் சொந்தமாயிருக்கும்பக்ஷத்தில்) சாதாரணமாய் சொந்தக்காரனுடைய பாத்தியதை நிராகரித்து தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டுமென்றுஎண்ணி அவ்வித அனுபோகம்செய்துவரப்பட்டதாக ஏற்படாது.

இந்தக்கேசில் பிரதிவாதிக்கு அனுபோகத்தைத்தவிர வேறுவிதமான ருஜுஅம்சங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அநேகவருஷங்களுக்குமுன்பிரதிவாதியின் வம்சத்தில் தாவா நிலமானது கிரயமும் மறுவிக்கிரயமும் தஸ்தவேஜின் மூலமாய் ஏற்பட்டிருக்கின்றன கேவலம் வைக்கோல் போரடிக்கி வந்த அனுபோகத்துடன் கிரயம் மறுவிக்கிரயம் முதலிய நடவடிக்கை செய்துகொண்டமையால் அந்த நிலத்தில் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க எண்ணங் கொண்டிருந்ததாகவும் தன்னைவிட இதாருக்கு அதில் யாதொருபாத்தியமும் இல்லை யென்றும் நிராகரிக்க எண்ணங் கொண்டிருந்ததாகவும்சொல்லத்தகும்கிரயவிக்கிரய நடவடிக்கையால்இதாருடைய பாத்தியதையை நிராகரிக்கும் எண்ணம் அனுமானிக்கப்படலாமென்றால், பிரதிவாதி காலாகாலங்களில் வைக்கோல் போரடிக்கிக்கொண்டு வந்தவிதமான அனுபோகமானது எதிரியின் பாத்தியதையை நிராகரித்த வண்ணமாக சொந்தக்காரர் எவராயிந்தபோதிலும் அவர்களுடைய பாத்தியதையை நிராகரிக்கஎண்ணங்கொண்டதாகவே, கிரயம் மறுவிக்கிரயம் ஆகிய நடவடிக்கைகளால் ஜட்ஜியவர்கள் அனுமானித்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஆனால்ருஜுஅம்சத்தை சரியானபடி ஜில்லாஜட்ஜியவர்கள் கவனிக்கவில்லை யென்று ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அபிப்பிராயப்படுகிறபடியாலும் ஜில்லாகோர்ட்டார் தீர்ப்பில் பிரதிவாதியின் அனுபோகமானது இதாருடைய பாத்தியதையை நிராகரித்த சுவாதீன அனுபோகமென்று தெளிவாய்ச் சொல்லப்படாத காரணத்தாலும்ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் செய்த உத்தரவுக்கு ஒற்றுமைப்படவேண்டும்.

ஜில்லாகோர்ட்டார் பின்வரும் நியாயங்களை காட்டி பிரதிவாதியின் பாத்தியதை மேலானதென்று அபிப்பிராயம் எழுதி அனுப்பினார்கள்:—

வாதி சொற்பகாலத்திற்கு முன் கவர்ன்மெண்டாரிடம் பட்டாபெற்று பாத்தியங்கொண்டாடி பிரதிவாதியை இஜெக்ட்செய்ய பிரயத்தினப்படுகிறார். வாதிக்காக வந்தஒரேசாட்சியாகிய கிராமகர்ணன் வாக்குமூலத்தில் பிரதிவாதி 30-வருஷகாலமாய் தாவா நிலத்தில் வைக்கோல்போர் அடுக்கிக்கொண்டு அனுபவித்து வருவதாய் ஒப்புக்கொள்ளுகிறார். கவர்ன்மெண்டாருடைய அனுபோகத்தில் தாவாநிலமிருந்ததென்றாவது வாதிதரப்பு சாட்சியம்சம்யாதொன்றுமில்லையாது பிரதிவாதியோ தன்னுடைய 4-வது சாட்சியாகிய வீருபாக்ஷய்யாவுக்கு தாவாநிலமானது முன்னோர்களால் கடன்பாக்கிக்காக விக்கிரயம் செய்யப்பட்டதென்றும் தன் தகப்பனார் அதை மறுவிக்கிரயம் பெற்றுக்கொண்டதாகவும் 2,4-சாட்சிகளால்ருஜுப்படுத்தியிருக்கிறார். ஸெட்டில் மெண்டு ஆனபொழுது ரெவினியூரெஜிஸ்டரில்தாவாநிலம் கிராமநத்தமென்று பதிவாயிருப்பது வாஸ்தவம்தான். ஆனால் இவ்விதமானரெஜிஸ்டர்பதிவானது கவர்ன்மெண்டாருடைய பாத்தியத்தை ஏற்படுத்துவதற்கு சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ருஜுபாகமாகாதென்று 3 மதராஸ்173, 33 மதராஸ் 362-இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. 30-வருஷகாலமாய் பிரதிவாதி தாவாநிலத்தில் வைக்கோல்போரடுக்கிவரும்பொழுது அதைடெம்பரெரியான அனுபோகமென்று சொல்வது நியாயமல்ல. ஆகையால்வாதிபிரதிவாதியைவிட மேலானபாத்தியத்தை ரூபிக்கவில்லையென்று தீர்மானிக்கவேண்டும்.

இவ்விதமான ஜில்லாகோர்ட்டாருடைய அபிப்பிராயம் சரியென்று ஒப்புக்கொண்டு பைசல்ஈரங்கிகேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் வாதியின் 2-வது அப்பீலைசெலவுடன்டிஸ்மிஸ் செய்து விட்டார்கள் MLT

———:O:———



ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

கஞ்சம் ஜில்லா

C. R. P. 251 of 1912—30 ஏப்ரல் 1914

நரசிங்க பட்ரோ Vs பகவான்ஸபுடோ

பிரதிவாதியினுடைய நிலத்தைவாதி ஒத்திக்கு வாங்கிஅனுபவித்துவரும்பொழுதுபிரதிவாதிஒத்திக் கடனைத் தீர்த்துசொத்தைத் திருப்பியடையும்பொருட்டு தாவா செய்து டிக்கிரீ பெற்று தொகையைக் கோர்ட்டில் கட்டிவிட்டு டிக்கிரீப்படிக்கு கோர்ட் மூலமாய் தன்னுடைய நிலத்தையும் கைப்பற்றிக்கொண்டான். அக்காலத்தில் நிலம் வாதியால் பயிரிடப்பட்ட விளைச்சலுடன் கூடியதாயிருந்தது. அந்தப் பயிரை பிரதிவாதி அறுவடை செய்து சொந்த உபயோகப்படுத்திக் கொண்டதாகவும் அது வாதியைச் சேரவேண்டியதென்றும், டிக்கிரீயானது விளைச்சல் நீங்கலாக நிலத்தைமட்டும் சுவாதீனப்படுத்திக் கொடுக்கலாமென்றும் சொல்லி எவ்விதத்திலும் பிரதிவாதி அக்கிரமமாய் ஷை பயிரை அறுவடை செய்து சொந்த உபயோகப் படுத்திக்கொண்டமையால் அதன்கிரயத்திற்காகவாதி பிரதிவாயின் பேரில்டி-முகோர்ட்டில்ஸ்மால்காஸ்தரப்பில்பிராதுகொடுத்தார்டி—முகோர்டார்வாதிக்கனுகூலமாக டிக்கிரீயளிக்கவேபிரதிவாதிஹைகோர்ட்டில்ரிவிஷன் மனு தாகல் செய்ததில் டி-முகோர்ட்தீர்ப்புரத்தாகி வாதியின்பிராது தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குக்காரணமாவன:- ஒரு சொத்தைஒத்தி அடமானத்திலிருந்து மீட்பதற்குக்கொண்டுவரப்பட்டவியாஜ்ஜியத்திலேயே டிக்கிரீக்கு முந்தியாகிலும் பிந்தியாகிலும் இருதரத்தாருக்குமுள்ள பாக்கிசாக்கி யாவற்றும்தீர்மானிக்கப்படவேண்டுமென்றும்,அதாவதுகணக்குவிஷயமாகவும்தொகை செலுத்தப்படவேண்டியவிஷயமாகவும் ஏற்படும் தகாரர்கள் யாவற்றும் அந்தவியாஜ்ஜியத்திலேயே பைசலாக வேண்டுமென்று 30-அலகபாத் 36,30 அலகபாத் 225,13 மதராஸ் 15-இவைகளில்தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால்அந்தத்தீர்மானங்களை அனுசரித்து வாதியின் பிராத்தியேகமானஸ்மால்காஸ் நெம்பர்தள்ளுபடியாகவேண்டியதென்று சொல்லப்பட்டது

1914 MWN 500

———:O:———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யர்

மதராஸ்

C. C. C. A 3 of 1914—23 ஏப்ரல் 1914

வரதாச்சாரியார் Vs பார்த்தசாரதி அய்யங்கார்

பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சம்மன்வில் இஷு ஏற்படுத்தும்பொருட்டு வாய்தாதேதி குறிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஷை இஷு வாய்தாத் தேதியில் பிரதிவாதியின் வக்கில் ஆஜராகியிருந்ததில், கோர்ட்டார் இந்தக்கேசின் தீர்மானத்திற்கு இஷு ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லையென்று தீர்மானித்து அப்பொழுதே பைசல் ஈரங்கி விஜாரணை நடத்தப்போவதாய் மதராஸ் ஸிடி ஸிவில் கோர்ட்டாரவர்கள் சொன்னவுடன் பிரதிவாதியின் வக்கில் அப்படி முதல் ஈரங்கியிலேயேகேஸை பைசல் செய்யக்கூடாதென்று ஆக்ஷேபித்தும் அதை நிராகரித்துக் கோர்ட்டார் கேஸை விஜாரித்துப் பைசலளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் டிக்கிரீ ரத்தாச்சுது. ஸி. பி. ஸி. ஆர்டர் XV ரூல் 3 (1)-ல் இஷுவுக்காகமட்டும்சம்மன்ஸ்பிறந்தும்இஷுக்கள் ஏற்பட்டபின் அச்சமயத்தில் பார்ட்டிகளால் ஆஜர்படுத்தக்கூடிய ருஜு அம்சங்களுக்கு அதிகமான ருஜுபாகமும் அச்சமயத்தில்பார்ட்டிகள்சொல்லிக்கொள்ளக்கூடிய வியவாகாரங்களைவிட மேலான நியாயங்களும் இஷுவில் ஏற்பட்ட பாயிண்டுகளைத் தீர்மானிப்பதற்கவசியமில்லையென்று கோர்ட்டாருக்குத் தோன்றினாலும் அப்பொழுதே கேஸை விஜாரித்துப்பைசலளிப்பதினால் நீதிக்குறைவு ஏற்படாதென்றுகோர்ட்டாருக்குத்தோன்றினாலும் கோர்ட்டார்உடனேகேஸை விஜாரித்துப்பைசலளிக்கலாமென்றுவிதிக்கப்பட்டிருக்கிறது.பிரதிவாதிவக்கீல்ஆக்ஷேபித்திருக்கையில் கோர்ட்டார் ஆர்டர் XVரூல் 3(1)ன்படி கேஸைப்பைசல் செய்தது நியாயமல்லவேன்றுசொல்லி மறுவிஜாரணைசெய்து சட்டப்படி பைசலளிக்கவேண்டுமென்று உத்தரவாச்சுது.

1914 MWN 501

———:O:———

ஜஸ்டிஸ் அய்லிங்

**Crl R. Case 79 of 1913–23 எப்பிரல் 1914**

*அப்துல் ரஹிம் ஸாஹிப்—எதிரி, மனுதார்*

ராமஸாமி மூப்பன் என்ற ஒரு டிக்கிரீ பாக்கிதாரன்பேரில் பிடிவாரண்டு பிறந்து அவனை அமீனு அரஸ்ட் செய்தபின் எதிரி அப்துல் ரஹிம்சாகிப் பலாத்காரமாய் அவனை பாராவிலிருந்து விடுவித்துக்கொண்டு போனதாக சொல்லப்பட்டு 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரால் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனையடைந்து அது அப்பீலில் காயமானபின் ஹைகோர்ட்டில் எதிரிக்காக ரிவிஷன் மனு தாகல் செய்யப்பட்டு அதில் முக்கியமாய் இரண்டு சட்டபாயிண்டுகள் எடுத்துச்சொல்லப்பட்டன. அரஸ்ட் சட்ட விரோதமென்றும் தவிர ருஜுபாகத்தில் மனுதார் அமீனை பலவந்தமாய் விலக்கின காரணத்தால் கடனாளி தப்பி ஓடினதாக ஏற்படவில்லையென்றும்வாதிக்கப்பட்டன. ஹைகோர்ட்டார் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் மனுவைத் தள்ளுபடிசெய்ததில் சொன்ன காரணங்களாவன:— வாரண்டில் அரஸ்ட் செய்யவேண்டிய அமீனு இன்னாரென்று பெயரைக் குறிப்பிடாமல் பொதுவாய்கோர்ட் அமீனாவுக்கு வாரண்டுகெட்டலை யென்று குறிக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமென்று பாரிஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ தேவதாஸ் பிள்ளையவர்கள் வாதிக்கிறார்கள். அதற்கு அதாரிடியாதொன்றும் கிடையாது பாக்கிதாரனைத் தொகைகட்டும்படி கேட்டு அவன் கட்டத்தவறினபிறகுதான் அரஸ்ட் என்ற சம்பவம் உண்டாகுமேயொழிய தொகையைக்கட்டும்படியான சவுகரியத்தை அவனுக்குத் தராமல் அவனை அரஸ்ட் செய்தால் அந்த க்ஷணத்திலேயே அரஸ்ட் செய்யப்பட்டவனென்று மதிக்கக்கூடாதென்றுவாதிக்கப்படுகிறது. இந்த வாதத்திற்கும்அதாரிடியாதொன்றும் எடுத்துக்காட்டப்படவில்லை. அமீனு வாரண்டில் கண்டிருக்கிற சங்கதிகளை கடனாளிக்குஅரஸ்ட்செய்யுமுன்படித்துக்காட்டவில்லையென்றும்ஆகையால்அமீனு நடத்தை ஒழுங்கீனமென்று சொல்லப்பட்டது ருஜுபாகத்தை கவனித்தால் அமீனுவாரண்டின் தகவலைக்கடனாளிக்குத் தெரிவித்து அதைப்படித்துப்பார்க்கும் விதமாக அதில் கையொப்பம்செய்யும்படி அமீனுஅதைக் கொடுக்கப்போனதில் பொழுதுபோச்சுதென்று சாக்குச்சொல்லி வாங்கிக்கொள்ளாமல் தப்பி ஓடப்பிரயத்தனப்பட்டதாக ஏற்படுகிறது. ஆகவே அரஸ்ட் சட்டவிரோதமென்றுசொல்வதற்கு நியாயமில்லை. 26 கல்கத்தா 748-ன் நியாயம் இந்தக்கேசின் சந்தர்ப்பத்திற்குஉதவக்கூடியதல்ல.

இரண்டாவதாகஎதிரி அமீனை பலவந்தமாய் விலக்கித் தள்ளினதால் கடனாளி ஓடிப்போகவில்லையென்று சொல்லப்படுகிறது. வாரண்டு கட்டளை வைத்திருந்த அமீனுவுக்கு உதவியாகவந்த வேறொரு பியூனை எதிரி விலக்கித் தள்ளினபடியால் கடனாளி ஓடிப்போனது வாஸ்தவமாகும். அப்படியிருக்கருஜுபாகத்தைகவனித்தால் அதே விதமாகஎதிரி அமீனுவுடன் எதிர்த்தும்போராடி பலவந்தமாய் விலக்கியிருந்தாலும் கடனாளி தப்பியோடியிருக்கவேண்டுமென்று யூகிக்கத்தகும். [அதாவது கடனாளியின் ஒரு கையை அமீனுவும் மற்றொருகையை உதவிக்காகவந்த பியூனும்பிடித்துக்கொண்டிருக்கையில் எதிரி தன்பலத்தால் அமீனுவைவிலக்கிவிட்டாலும் கடனாளி பியூனுடைய பிடியைவிட்டு ஓடிப்போயிருக்கக் கூடுமென்றும், பியூனை விலக்கிவிட்டாலும் கடனாளி அமீனுவின் பிடியைத் தப்பி ஓடக்கூடுமென்றும் சொல்லத்தகும். ஆகவே இருவகையாலும் கடனாளி தப்பியோட ஏற்பட்டதால் எதிரி பியூனை விலக்கின நடத்தை அமீனுவை விலக்கினதற்கொப்பாகச் சொல்லப்படலாம்.] 1914 M W N 498

—:o:—

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் அய்லிங்

*தென்மலையாளம் ஜில்லா*

**C. M. S. A. 17 of 1910-11 பிப்ரவரி 1914**

ஒரு டிக்கிரீயில் குறித்தகாலத்திற்குள் பிரதிவாதி டிக்கிரீத் தொகையைச் செலுத்தவேண்டுமென்றும் அப்படிச் செலுத்தத்தவறினால் அடமானசொத்தை ஏலம்போகும்படி உத்தரவளிக்கப்பட்டிருந்தால் வாதி ஷை டிக்கிரீயை வெண்ணலை டிக்கிரீயாகபாவித்து பிரதிவாதியின் இதரமான சொத்துக்களின்பேரில் முதலில் தொடர்ந்து டிக்கிரீ தொகையை வசூலிக்கலாமென்றும் இவ்வித டிக்கிரீ ஸி. பி. ஸி. ஆர்டர் 34 ரூல் 4-ன்படி சாதாரணமான அடமான டிக்கிரீயாகவும் சொல்லப்படலாமென்றும் அது ஒரு பிரதம டிக்கிரீயாக பாவிக்கப்பட்டு அடமான சொத்தை ஏலம் போடுவதற்குமுன் பைசல் டிக்கிரீவேறொன்று பின்னால் ஏற்படவேண்டியதவசியமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது 1914 M W N 497

—:o:—

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

*திருச்சினாப்பள்ளி ஜில்லா*

**C. R. P. 39 of 1913—11 பிப்ரவரி 1914**

*ஸூரியன் முத்திரியன் Vs நடேசம் பிள்ளை*

பிரதிவாதி தன் வயலில் நிற்கும் தண்ணீரை வாதியின் வயலுக்கு வடித்துக் கொள்ளும்படி ஒப்புக்கொண்டு அதற்காக வாதியிடம் ரூ 3 பிரதிப்பிரயோஜனமடைந்தும் அந்த ஒப்பந்தத்தை மீறி பிரதிவாதி நடந்தமையால் அதாவது ஷை தண்ணீர் வேறு மார்க்கமாய்ச் செல்லும்படி நடத்தின காரணத்தால் வாதிக்கு நஷ்டம் ஏற்பட்டு அதன்மேல் ஸ்ரீரங்கம் டி-மு கோர்ட்டில் ஸ்மால் காஸ் தரப்பில் நஷ்டப்பிராது கொடுத்ததில் பிரதிவாதிஇந்த பிராது ஸ்மால்காஸ் தரப்பில் செய்யத்தக்கதல்லவென்று ஆக்ஷேபித்தும் அதை நிராகரித்து டி-முகோர்ட்டார் வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் டி-மு கோர்ட் தீர்ப்பு காயமாச்சுது. இது நீரோடையைத் திருப்பிவிட்ட விஷயமான பிராதல்லவென்றும் அக்கம் பக்கத்தாருக்குறிய பரஸ்பரமான இயற்கை அனுபோகத்தைப்பற்றிய தகராரல்லவென்றும் சதாரணமான வாய்க்கராரின் பேரில் ஏற்பட்ட வியாஜ்ஜியமாதலாலும் நஷ்டப்பிரமாணமும்ஸ்மால்காஸ் அதிகாரவரம்புக்குமேல் போகாதபடியாலும் இந்த வியாஜ்ஜியம் அசல் தரப்பில் செய்யவேண்டுமென்ற ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 1914 M W N 497

—:o:—

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

*கோதாவரி ஜில்லா*

**S. A. 1496 of 1912—9 எப்பிரல் 1914**

*சக்கிரெட்டி அப்பனசாமி Vs சக்கிரெட்டி வெங்கன்னா*

*காலஞ்சென்ற புருஷனுடைய சொத்தில் ஜீவதசைமட்டும் அனுபவிக்க பாத்தியமுடைய மனைவியானவள் தன் புருஷன்பட்ட கடனைத் தீர்ப்பதற்காக ஷை சொத்தை விக்கிரயம் செய்துவிடவே அந்த விக்கிரயம் அனந்தரவார்சைக் கட்டுப்படுத்துமாவென்ற பாயிண்டானது இந்த 2-வது அப்பீலில் தீர்மானிக்கப்பட வேண்டியதாயிற்று அனந்தர வாரிஸ்தார் வாதியாக வந்து கிரயம் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று வாதம் செய்தும் இரண்டு கீழ்கோர்ட்டுகளிலும் தோல்வியடைந்து ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் ஜயமடையாமல் விக்கிரயம் நிலையாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின்சுருக்கமாவது:- அதில் தொகை ரூ 500-ஐப் பற்றினமட்டில் சொத்தின் விக்கிரயம் வாதியைக் கட்டுப்படுத்துமென்று இந்தக் கோர்ட்டில்வாதியால்ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் புருஷனுடையகடன்தொகையின்பேரில் ஏறிவருகிற வட்டியைத்தீர்க்கும்பொருட்டு மனைவி புருஷன் சொத்தை விற்கக்கூடாதென்றும் சொத்தின் வருமானத்திலிருந்து வட்டியைச் செலுத்திவரவேண்டியதுமுதன்மையான மார்க்கமென்றும் வட்டியைச் செலுத்திவருவதற்குப் போதுமான வருமானம் சொத்திலிருந்து கிடைக்கவில்லையென்று காணப்பட்டால் மட்டும் (தன் போஷணைச் செலவுக்குமட்டும் வருமானம் சரிப்போகும்பட்சத்தில்) வட்டியைத் தீர்த்துவிடுவதற்காக சொத்தில் அவசியமான பாகத்தை விக்கிரயம் செய்துவிடலாமென்றும் வாதிக்கப்பட்டு அதற்காதாரமாக 1913 M W N 275-ம், 18மதராஸ் 113-ம் எடுத்துக் காட்டப்பட்டன. இரண்டு கீழ்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் தாவா விக்கிரயம் பூராவும் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் கிரய நடவடிக்கை யதார்த்தமாய் ஏற்பட்டதென்றும் தீர்மானித்தார்கள். டி-மு கோர்ட்டார் சொத்தின் வருமானத்திலிருந்து வட்டி செலுத்தியிருக்கக் கூடுமென்ற விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்தபோதிலும் டி-மு கோர்ட்டாராகிலும் அல்லது ஜில்லா கோர்ட்டாராகிலும் கிரயத்தொகையின் இரண்டு பாகத்தையும் அதாவது அசல் தொகை வட்டி பாக்கி இவைகளைப்பற்றி தனித்தனியாக கவனித்து அசலைப் பற்றிய மட்டில் கிரயம் வாதியைக் கட்டுப்படுத்துமாவென்றும் வட்டியைப் பற்றின மட்டில் கிரயம் வாதியைக் கட்டுப்படுத்துமாவென்றும் பிரத்தியேகமாய் யோஜனை செய்து தீர்மானம் கோ

டுக்கவில்லை யென்பது வாஸ்தவமே. அந்த விஷயங்களைப் பற்றி தனித்தனி அபிப்பிராயங்கொடுக்கும்படி கீழ்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கவேண்டியது அவசியமாகிறது. இந்த பாயிண்டு இம்மாதிரி கீழ் கோர்ட்டுகளில் சொல்லிக் கொள்ளப்படவில்லை யென்றும் அதனால் புதிதாய் இந்த கோர்ட்டில் ஏற்பட்ட பாயிண்டைப்பற்றித் தீர்மானம் கேட்க நியாயமில்லை யென்றும் எதிரிகள் ஆக்ஷேபிக்கிறார்கள். இவைகளிலாவது ஜில்லா கோர்ட் அப்பீல் க்ரௌண்டிலாவது இந்தக்கோர்ட் அப்பீல் க்ரௌண்டிலாவது இந்த பாயிண்டு தெளிவாய் எடுத்துக் காட்டப்படவில்லையென்பது பரிஷ்காரமாய்த் தெரிகிறது. என்றாலும் இது ஒரு சட்ட சம்பந்தமான பாயிண்டாகயிருக்கிறது. கோர்ட்டார் ருஜுபாகத்தை கவனித்து பார்ட்டிகளுடைய பாத்திய விஷயமாய்த் தீர்மானம் கொடுக்கவேண்டிய விதத்தைப்பற்றிய பாயிண்டாதலால் கீழ்கோர்ட்டில் எடுத்துச் சொல்லப்படாதபோதிலும் அதைப்பற்றிய அபிப்பிராயம் கேட்டறியலாம். ஆனால் சொத்தின் யோக்கியதையைப்பற்றி வாதி தரப்பு சாட்சிகள் மிகவும் செழிப்பானதாகவும் ஆகவே மிகுந்த வருமானமுள்ளதென்றும் சொல்லியிருக்கிற வாக்குமூலத்தை டி-மு கோர்ட்டார் முற்றிலும் நம்பத்தகாதென்று அபிப்பிராயங்கொடுத்திருக்கிறபடியால் வருமானம் மிகவும் சொற்பமென்று கீழ்கோர்ட்டார் மதித்து அதிலிருந்து வட்டி செலுத்திவரக்கூடாதென்று அபிப்பிராயங்கொண்டு பூரா கிரயமும் வாதியைக் கட்டுப்படுத்துமென்று மொத்தமாய்த் தீர்மானங் கொடுத்திருக்கிறார்களென்று சொல்லவேண்டுமதாலால் திரும்பவும்பிரத்தியேகமான அபிப்பிராயத்திற்காக அனுப்ப அவசியமில்லை. தவிர கிரயம் பெற்றவன் யதார்த்தமாய் நடந்துகொண்டிருக்கிறான். அதை கவனித்து ஒவ்வொரு குறியும் கிரயத்தின் உறுதிக்குச் சாதனமாகவேயிருக்கிறது. ஆகையால் கீழ்கோர்ட்டுக்கு வட்டி விஷயமாய் சொத்தின் வருமான விஷயத்தை விஜாரித்துத்தனிமையான தீர்மானம் கொடுக்கும்படி கேட்பதவசியமென்று 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. 1014 M W N 488

———:0:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்

செங்கல்பட்டு ஜில்லா

L. P. A. 238-242 of 1912-12 பிப்ரவரி 1914

ஆதிநாராயணய்யர் Vs ராஜு செட்டி

திருப்பாசு என்னும் ஜமீனில் சிற்சில நிலங்களை அனுபவித்து வருகிற ராஜுசெட்டி வகையராக்களாகிய பிரதிவாதிகள்பேரில் ஜமீன்தார் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 153-வது பிரிவின் அனுபந்தத்தில் கண்ட விதிப்படிக்கு சம்மேரி கோர்ட்டில் இஜெக்ட் மெண்ட் பிராது கொடுத்தார்கள். அதாவது ஆக்ட் நமோதுக்கு வருமுன் ஜமீன்தாரிடமிருந்து குறித்த காலத்திற்கு ஜமீன் நிலத்தை குத்தகைக்கு வாங்கி அனுபவிக்கிறவர்களை வாய்தா கடந்த உடன்காலிபடுத்த லாயக்குண்டென்று ஷை சட்டப்பிரிவின் அனுபந்தத்தில் சொல்லியிருப்பதாலும் பிரதிவாதிகள் 1907-ல் ஒருவருஷத்திற்கு தாவா நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி அனுபவித்ததமையால் அவர்கள் அந்த வாய்தாகடந்தபின் இஜக்ட் செய்யத்தக்கவர்களென்று சொல்லி 1909-ல் ஜமீன்தாரவர்கள் செங்கல்பட்டு டிப்டி கலக்டரவரிடம் பிராது கொடுத்தார்கள். எதிரிகளோ ஆக்ட் நமோதுக்கு வந்த காலத்தில் நிலங்கள் யாருடைய வசத்திலிருக்கிறதோ அவர்களுக்கு அதில் குடிவார பாத்தியதை உற்பத்தியாகிவிட்டதாக ஷை ஆக்டின் 6-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறபடியால் அந்தப் பிரிவின்படி தங்களுக்கு தாவாநிலங்களில் குடிவார பாத்தியமுண்டென்றும் ஆகவே ஜமீன்தாருக்கு இஜக்ட்மெண்ட் தாவா கொண்டுவர சட்டமில்லையென்றும் ஆக்ஷேபித்தார்கள். ஜமீன்தார் இரண்டு கீழ்கோர்ட்களிலும் ஜெயம் பெறாமல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் கீழ்கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தி அப்பீலைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் ஜமீன்தாரவர்கள் லட்டர்ஸ்பேடெண்ட் அப்பீல்செய்தும் பிரயோஜனமில்லாமற்போயிற்று. லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தீர்ப்பின் சுருக்கமாவது:— ஆக்ட் நமோதுக்கு வந்த காலத்தில் பிரதிவாதிகள் தாவா நிலங்களை அனுபவித்து வந்திருக்கிறபடியால் அவர்களுக்கு குடிவார பாத்தியதை உண்டாயிற்றென்று சொல்லவேண்டும். அல்லது பிரதிவாதிகள் குடிவார பாத்தியம்



லாத ரயட்டுகளென்று ஆக்டின் வேறுயாதொரு பிரிவைக்கொண்டு ருஜுப்படுத்தப்படவேண்டும். பிரதிவாதிக்காக வக்கில்ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தராகவய்யரவர்கள் பின் வருமாறு வாதிக்கிறார்:- பிரதிவாதிகள் 1907-ல் ஒருவருஷகாலத்திற்கு மட்டும் குத்தகை பாத்தியதையை அடைந்த டெனெண்டுகளாதலால் அவர்கள் குடிவார பாத்தியமில்லாத டெனெண்டுகளென்றும் ஆக்ட் நமோதுக்குவந்த உடன் அவர்களுக்கு மற்ற ரயட்டுகளைப்போல்குடிவாரபாத்தியதை 6-வது பிரிவின்படி ஏற்படாதிருக்கும்படியாகவும் அவர்களை வாய்தா கடந்த உடன் யாதொரு நிபந்தனையில்லாமலும் வெளிப்படுத்தக்கூடியதாகவே 153 வது பிரிவின் அனுபந்தமானது ஏற்பட்டிருக்கிறதென்றும், குடிவாரபாத்தியமுள்ள ரயட்டுகளை அப்புறப்படுத்துவதற்குள்ள நியாயங்கள் 151, 152-வதுபிரிவுகளிலும், பழய தரிசு நிலங்களை அனுபவிக்கிற ரயட்டுகளை அப்புறப்படுத்துவதற்கு 157-வது பிரிவும் ஏற்பட்டிருப்பதாயும், குடிவார பாத்தியமில்லாதமற்றரயட்டுகளை இஜெக்ட்செய்வதற்காக 153-பிரிவு ஏற்பட்டிருப்பதாயும் பிரதிவாதியைப்போலொத்தவாய்தாமுடிந்த டெனெண்டுகளை இஜெக்ட் செய்வதற்காக153-வது பிரிவின் அனுபந்தம் ஏற்பட்டிருப்பதாயும் வாதம் செய்கிறார்கள். அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. குடிவார பாத்தியதை இன்னாருக்கு ஏற்பட்டிருப்பதாக ஆக்டில் தெளிவாய்க்குறிக்கப்பட்டபின் அதாவது ஆக்ட் நமோதுக்குவந்தகாலத்தில் நிலத்தை சுவாதீனமுடையவர்களுக்கு குடிவார பாத்தியதை உண்டென்று ஏற்பட்டிருக்க இஜெக்ட்மெண்டு செய்யவேண்டிய சந்தர்ப்பங்களையும் முறைகளையும் விதிக்கிறபிந்திய சட்டப் பிரிவுகளைக்கொண்டு குடிவாரபாத்தியத்தைக்குறிப்பிட்ட சட்டப் பிரிவுகளின் நோக்கத்தைக் குறைவு படுத்தக்கூடாது. [அதாவது 6-வது பிரிவினால் பிரதிவாதிக்கு குடிவார பாத்தியதை ஏற்பட்டிருக்க 153வது பிரிவின் அனுபந்தத்தை உபயோகித்து பிரதிவாதி குடிவார பாத்தியதை இல்லாத ரயட்டென்று ஏற்படுத்தக்கூடாது.] ஷை அனுபந்தம் இதரமான குடிவார பாத்தியமில்லாத ரயட்டுகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். பழயதரிசு நிலங்களை அனுபவிக்கிற குடிபாத்தியதையில்லாத ரயட்டுகளைத்தவிர வேறு விதமாகவும் குடிவார பாத்தியதையன்னியில் டெனெண்டுகள் ஜமீன்தார்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். 6-வது பிரிவின் 5, 6-வது கிளாஸ்களைப் பார்க்கவும். அப்படிப்பட்டவர்களுடன் ஜமீன்தார் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால் வாய்தா கடந்த உடன் அவர்களை வெளிப்படுத்த அதிகாரம் உண்டாகும்படி 153-வது பிரிவின் அனுபந்தம் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே 6-வது பிரிவின்படி பிரதிவாதிகளுக்கு தாவா நிலங்களில் குடிவார பாத்தியம் ஏற்பட்டது நியாயமே. ஆகவே 151, 152-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி நிலங்களை சாகுபடிக்கு லாயக்கில்லாதபடி கெடுத்துவிட்டால்மட்டும் அவர்களை ஜமீன்தார் அப்புறப்படுத்த லாயக்குண்டாகும். அப்படியிருக்க 153-வது பிரிவின்படி இஜெக்ட் செய்யக்கூடாதென்று தீர்மானிக்கப் பட்டது. 1914 M W N 496.

———:O:———

ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

மதுரை ஜில்லா

Crl R. P. 621, R. C. 71 of 1914-11மே1914

நாச்சிமுத்து செட்டி Vs முத்துசாமிசெட்டி

நாச்சிமுத்து செட்டி என்றமனுதார் தனக்குச் சொந்தமான ஒரு பஞ்சுப்பொதியை எதிரி முத்துசாமி செட்டி திருடிக்கொண்டு போய்விட்டதாக ஆயக்குடிவில்லேஜ்மாஜிஸ்டிரேட்டினிடம் தகவல் கொடுத்தார். வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கிரிமினல் புரோஸிஜர் கோட் 45 (c)-ல் விதிக்கப்பட்ட பிரகாரம் ஷை திருட்டைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனுபீஸருக்கு ரிபோர்ட் எழுதியனுப்பிவிட்டார். போலீஸார் எதிரியை 379-வது பிரிவின்படி பழனி சப்மாஜிஸ்டிரேட்முன் சார்ஜ் செய்ததில் எதிரியின்மேல் குற்றமில்லையென்றும் பிராது பொய்யென்றும் ஏற்பட்டு எதிரி விடுதலையானதும் தவிர எதிரிக்கு மனுதார் காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. பொய்ப்பிராது கொடுத்து எதிரியைக் கோர்ட்டுக்கு இழுத்து அவமானப்படுத்தினதற்காக விதிக்கப்பட்ட ஷை காம்பென்ஸேஷன் அபராதமானது கிரிமினல் புரோஸிஜர் கோட் 250-வது பிரிவின்படி விதிக்கப்பட்டிருக்க அந்த உத்தரவு சட்ட விரோதமென்றும் அதை ரத்து

செய்யவேண்டுமென்றும் மனுதார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்ததில் 250-வது பிரிவின்படி காம்பென்ஸேஷன் விதிக்கவேண்டுமானால் கிரிமினல் பிராது வாதியால் நேரில் போலீஸாரிடமாவது அல்லது மாஜிஸ்டிரேட்டாரிடமாவது கொடுக்கப்பட்டதாயிருக்க வேண்டுமென்றும், வாதி கிராம முனிசீபிடத்தில் கொடுத்த தகவல் போலீஸாரிடம் கொடுத்த பிராதாகமாட்டாதென்றும் வாதிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த உத்தரவின் சுருக்கமாவது:— வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டிடம் கொடுக்கப்படுகிற பிராது அல்லது அறிக்கையானது கிரிமினல் நடவடிக்கையாகமாட்டாதென்ற மனுதாரின் வாதத்திற்கனுஸரணையாக 26 மதராஸ் 647, 32 மதராஸ் 558 & Crl R Case No 6-7 of 1913 ஆகிய மூன்று தீர்மானங்களிருக்கின்றன. ஆனால் கிராம முனிசீபினிடத்தில் கொடுத்த அறிக்கையானது போலீஸாரிடம் கொடுத்த அறிக்கையாகவே (1912) 32 மதராஸ் லா ஜர்னல் 139-ல் பிரசுரமாயிருக்கும் புல்பெஞ்சு கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த புல்பெஞ்சு கேசில் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களும் & ஜஸ்டிஸ் மன்ரோ துரையவர்களும் கிராம முனிசீபினிடத்தில் குற்றம் நடந்த உடன் தகவலைத் தெரியப்படுத்துவதே நமது இராஜதானியில் சம்பிரதாயமாயிருக்கிறதென்றும் ஏனெனில் கி-மு-க்கள் அந்தத்தகவலை போலீஸாருக்கு உடனே ரிபோர்ட் செய்துவிடுவார்களென்ற நம்பிக்கை கிராமஜனங்களுக்கு ஸகஜமாய் ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆகவே கிராம அதிகாரிகளிடத்தில் அறிக்கையிடுவது போலீஸாருக்கு நேரில் தெரிவித்துக்கொண்டதற்குச் சமானமாகுமென்றும் கி-மு-க்கள் போலீஸாருக்குரிபோர்ட் அனுப்பக்கடமையில்லாதசிலபல அறிக்கைகள் உண்டாயிருந்தாலும் போலீஸாருக்கு ரிபோர்ட் அனுப்பவேண்டியது அவசியமாயிருக்கும் சந்தர்ப்பத்தில் வாதி கி-மு-வினிடம் தகவல்கொடுத்தால் அது போலீஸாரிடம் நேரில் கொடுக்கப்பட்டதற்கு ஒப்பாகுமென்றும் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். இந்த புல்பெஞ்சு கேசில் ஹானரபில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களுடைய அபிப்பிராயமானது மாறாகயிருந்தும் அந்த அபிப்பிராயத்தின் நியாயம் இந்தக்கேசின் தன்மைக்கு ஏற்றதல்ல. ஆகவே மேற்கூறிய புல்பெஞ்சு தீர்மானத்தை அனுசரித்து மனுதார் கி-மு-வினிடம் கொடுத்த அறிக்கை போலீஸாரிடம் கொடுத்ததாக பாவிக்கப்படவேண்டும். 25 மதராஸ் கேசானது புல்பெஞ்சு தீர்மானத்திற்கு முந்தி ஏற்பட்டதாகும். 32 மதராஸ் 258-ல் அபிப்பிராயங்கொடுத்த ஜட்ஜிமார்கள் புல்பெஞ்சு தீர்மானத்திற்குப் போதுமான மதிப்பு கொடுக்கவில்லை. Crl. R. Case 627 of 1913-ல் புல்பெஞ்சு தீர்மானத்தின் தகவல் எடுத்துக் காட்டப்படவே இல்லை. ஆகவே மனுதார் எடுத்துக் காட்டுகிற ஆதாரங்கள் பிரயோஜனமில்லை. தவிர இந்தக்கேஸ்களில் கிராமாதிகாரியிடம் கொடுத்த பிராது 250 வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஒரு மாஜிஸ்டிரேட்டிடம் கொடுத்த பிராதாகுமாவென்று மட்டும் யோஜிக்கப்பட்டதேயொழிய போலீஸாரிடம் கொடுத்த பிராதுக்குச் சமானமாக கிராமாதிகாரியினிடம் கொடுத்த பிராது மதிக்கப்படலாமாவென்ற பாயிண்டு ஷை கேசுகளில் யோஜிக்கப்படவேயில்லை. ஆகையால் 25 மதராஸ் 667 தாவா கேசின் வியவகாரத்திற்கு உபயோகப்படுத்தக்கூடாது. மனுதார் கிராம முனிசீபினிடத்தில் இருட்டைப்பற்றிக் கொடுத்த தகவல் எதிரியின் பேரில் போலீஸாரிடம் கொடுத்த பிராதாக பாவிக்கப்பட்டு அந்தப்பிராது மாஜிஸ்டிரேட்டாரால் பொய்யென்று தீர்மானிக்கப்பட்டு எதிரிக்கு 250-வது பிரிவின்படி காம்பென்ஸேஷன் கொடுக்கும்படி உத்தரவளித்தது சட்ட விரோதமல்லவென்று ஏற்பட்டு மனுதாரின் ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது.

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் கொடுத்தபிரத்தியேகமான உத்தரவில் பின்வரும் நியாயங்களும் எடுத்துக் சொல்லப்பட்டன:—மனுதாருக்காக டாக்டர் சாமிநாதன் எதிரிக்கு 250-வது பிரிவின்படி காம்பென்ஸேஷன் கொடுக்கும்படி உத்தரவளிக்க, முதல் பிராதுவாதியால் (மனுதாரால்) மாஜிஸ்டிரேட்டிடமாவது அல்லது போலீஸாரிடமாவது கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் கிராம முனிசீபிடம் கொடுத்த தகவல் அவ்விதமாய் மதிக்கத்தக்கதென்றும் வாதிக்கிறார். மாஜிஸ்டிரேட் என்ற பதத்தில் வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டும் அடங்கியில்லையென்று சொல்லக் காரணமில்லை. கிரிமினல் புரோஸிஜர்கோட் 1-வது பிரிவின் கிளாஸ் 2(d)-யில் புரோஸிஜர் கோட்டின் விதிகள் சென்னை இராஜதானியிலுள்ள கிராமத்தலைவர்களுக்கு ஏற்காதென்று மட்டும் சொல்லியிருக்கிறது. 6-வது பிரிவில் கிரிமினல் கோர்ட்டுகள் விவரிக்கப்பட்டிருக்க அதில் வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கோர்ட் கிரிமினல் கோர்ட்டாக அங்கீகரிக்கப்படவில்லையென்பது வாஸ்தவம்தான் ஆனால் மாஜிஸ்டிரேட் என்ற பதத்திற்குகருத்து இன்னதென்று விவரிக்கப்படவில்லை. தவிர ஹைகோர்ட்டார் வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் நடக்கும் கேசுகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குடிரான்ஸ்பர் செய்யும் விஷயத்தில் அதிகாரம் செலுத்தி வில்லேஜ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டையும் ஒருகோர்ட்டாக மதித்துவருகிறார்கள். ஆகையால் 250-வது பிரிவில்மாஜிஸ்டிரேட் என்ற பதத்தில் வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டும் அடங்கியிருக்கவில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது. எப்படியிருந்தாலும் வில்லேஜ்மாஜிஸ்டிரேட்டாரிடம் கொடுத்த பிராது போலீஸ் ஆபீஸருக்கு அனுப்பப்பட்டால் அதுபோலீசாருக்குநேரில் கொடுக்கப்பட்ட பிராதாகவேமதிக்கப்படவேண்டும். ஆகையால் மனுதார்செய்கிறஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 87

———:o:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்

C. R. P. 578 of 1913-16 ஜுலை 1914:—

எக்ஸ்பார்ட்டியாக பிறந்தடிக்கிரீயை ரத்துசெய்தஉத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார்ரிவிஷனில்பிரவேசித்துயொதாருஉத்தரவளிக்கலாம். தாவாவில் ஏற்படும் பைசல் டிக்கிரீயினால் பாதகமடைந்தபார்ட்டிக்குஅப்பீல்முறையிருந்தபோதிலும் 30 கல்கத்தா தீர்மானத்திற்கு விரோதமாகவும் 34 அலகபாத் 592-ஐ அனுசரித்தும் மேற்கூறியரிவிஷன் அதிகாரம் ஹைகோர்ட்டாருக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

———:o:———

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் ஜஸ்டிஸ் நேபியர்

C. M. S. A. 77 of 1918 20-ஜுலை 1914

நிறைவேற்று நடவடிக்கையின் பேரில்சொத்து ஏலமாகிறகாலத்தில் ஏலம்கோருகிறவர்கள் அதிசொற்பமாயிருப்பதாகச் சொல்லி ஒருநாளுக்குப்பின்மறுநாளாக நல்லதுகைக்கு ஏலம் போகுமட்டும் ஏலத்தைத் தொடர்ந்துநடத்தவேண்டுமென்று டிக்கிரீதார் கொடுக்கிறவிண்ணப்பம் காலாவதிக்கு உதவக்கூடிய விண்ணப்ப நடவடிக்கையாகுமென்று 26 மதராஸ் 601-ஐ அனுசரித்துத்தீர்மானிக்கப்பட்டது.

———:o:———

ஜஸ்டிஸ்சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

C. M A. 129 of 1914-27 ஜுலை 1914

ஸி. பி. ஸி. ஆர்டர் 41-ரூல் 5-ன்படி அப்பீல் கோர்ட்டார் அப்பீல் பைசலாகுமட்டும் அசல்கோர்ட் டிக்கிரியை நிறைவேற்றாமலிருக்கும்படி மறியல் உத்தரவுசெய்ய மறுத்துவிட்டால் அதற்கு மேல் அப்பீல் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது அப்பீல் கோர்ட்டார் மறியல்உத்தரவு அளிக்காதபட்சத்தில் அதற்கு மேலான கோர்ட்டில் மறியல் உத்தரவுவாங்குவதற்குமார்க்கமில்லாமல் போய்விடுகின்றது.

———;o:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

S. A. 1497 of 1912-27 ஜுலை 1914

கவர்ன்மெண்டாரிடமிருந்து இனாம் கிராண்டு பெற்ற தேவஸ்தான ஊழியம் செய்கிறவர்களிடமிருந்து ஷை யார்கள் சரியானபடி ஊழியம்செய்து வராதகாரணத்தால் ஷை ஊழியஇனாம் நிலங்களின் சுவாதீனத்தைப் பிடுங்கிக்கொள்வதற்கு தேவஸ்தானம் தர்மகர்த்தா பாத்தியமுடையவரல்ல. அவ்வித ஊழிய இனாம் நிலங்களை திரும்பப்பிடுங்கிக்கொள்ளும் அதிகாரம் கவர்ன்மெண்டாரிடம் அமைந்திருக்கிறது. இவ்விதமாகவே S. A. 201 of 1909 & S A 2215 of 1912 இவைகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

———:o:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

S.A 877 of 1912- 27 ஜுலை 1914

அடமான வில்லங்கத்திற்குட்பட்ட நிலத்தை ரெவினியூபாக்கிக்காக ஸ்வான்தாருடையபாத்தியதையைஏலம் போட்டதில் ஏலமெடுத்த கிறயதாரன் ஷை நிலத்திற்குக் கெடுதியுண்டாக்கிவிட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு மற

யதாரன் அடமானதாரனுக்கு உத்தரவாதியாக்கடவனென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ**

S. A. 1700 of 1912-24 ஜூலை 1914

ஸிறைவேக்று நடவடிக்கையில் சொத்தை எலமெடுத்த கிரயதாரன் ஷை சொத்தில் அக்கிரமமாய்ப்பிரவேசித்து அனுபவிக்கிற எதிரியின்பேரில் மத்தியகாலவரும்படிக்காக தாவாசெய்து அந்ததாவாபெண்டிங்கிலிருக்கும் பொழுது கிரயதாரன் தன்னுடைய பாத்தியதையை மற்றொருவனுக்கு மேடோவர் செய்துவிட்டார். மேடோவர்தார் அதே எதிரியின்பேரில் சுவாதீனத்திற்காக தாவா செய்தார். முந்தியபிராதில் வாதியினுடைய பாத்தியதையைப்பற்றி கோர்ட்டார் கொடுத்த தீர்மானம் முந்திய பிராதில் பழயவாதியிடம் கிரயம் பெற்ற மேடோவர்தாரைக் கட்டுப்படுத்துமென்று அதாவது முந்தியபிராதில் கொடுக்கப்பட்ட பாத்தியவிஷயமான தீர்மானம் பிந்தியபிராதுக்கு ரீஜூடிகேடாவாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

**ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்**

C. R. P. 1015 to 1017 of 1912

22,23 ஜூலை 1914

வெளிஜில்லாவில் ஸ்மால்காஸ் தரப்பில் கொடுக்கப்பட்ட பிராதை மாகாணஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 23-வது பிரிவின்படி வாபிஸ் செய்து சரியான கோர்ட்டில் கொடுக்கும்படி உத்தரவளித்தால் அந்த உத்தரவானது ஒரு கேசின் தீர்மானமாக பாவிக்கப்பட்டு அதன் மேல் ஹைகோர்ட்டார் ஷை ஆக்ட் 25-வதுபிரிவின்படி ரிவிஷன் விண்ணப்பம் எற்றுக்கொண்டு பைசலளிக்கலாமென்றுதீர்மானிக்கப்பட்டது. கல்கத்தாவாரக்குறிப்புகளின் 402-ல்கொடுத்த தீர்மானம் எற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்றும்15 கல்கத்தாவாரக்குறிப்புளின் 666ல்கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயம் கவனிக்கத்தகுந்ததென்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

———:O:———

**சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் குமாரசாமிசாஸ்திரிகள்**

A .S. 177 of 1910 — 21 ஜூலை 1914

ஒரு ஹிந்து கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்த மெம்பர் ஒருவன் தன்னுடைய பாகத்தை மட்டும் விக்கிரயம் செய்து விட்டால் கிரயம் பெற்றவன் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களுடன் கூட பொதுவாய் குடும்ப சொத்துக்களை அனுபவிக்கத் தக்கவனல்லவென்றும் அந்த பாகத்திற்குறிய மத்தியகால வரும்படியை மற்ற மெம்பர்களிடமிருந்து அடையப் பாத்திரனல்லவென்றும் எடுத்துக்காட்டப்பட்டது

———:O:———

**ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர்**

S. A. 1874 of 1912-21 ஜூலை 1914

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 63 வது பிரிவில் தீர்வை செலுத்தின உடன் ரயட்டுக்குக் கொடுக்கும் ரசீதில் தொகை செலுத்துகிறவன்பெயரும் தொகை வசூலிக்கிறவன் பெயரும் நிலத்தின் விவரமும் எந்த பசலிக்கென்ற தகவலும் பூராத்தொகையும் செல்லாச்சுதா அல்லது செலுத்தப்பட்ட தொகை தீர்வையின் ஒருபாகமாவென்ற பற்பல விவரங்களும் காணப்பட்டிருக்கவேண்டும். இவ்விதமான விவரங்கள் அறியத்தக்கவிதமாய் ரசீது எழுதப்படாத பட்சத்தில் தீர்வை பாக்கி யாதொன்றும் கிடையாதென்று அனுமானிக்கலாமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க நிலச்சுவான்தார் தீர்வை பாக்கிக்காகசெய்ததாவாவில்பிரதிவாதிநடப்பு பசலிக்காக ஸ்வான்தார் கொடுத்த ரசீதை தாகல் செய்து அதில் பாக்கி விவரம் காணப்படாத காரணத்தால் பழய பாக்கி யாதொன்றும் கிடையாதென்று எதிர்வாதம் செய்தார். அந்த ரசீதில் செலுத்தப்பட்ட தீர்வையானது தீர்வையின்வகைக்கென்று (ஒரு பாகத்திற்கென்று) குறித்துக்காட்டப்படவில்லை. இவ்வித ரசீதினால் பழய பாக்கி முழுவதும் தீர்ந்துவிட்டதாக அனுமானிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (தாவா ரசீது நடப்பு பசலிக்காக கொடுக்கப்பட்டதேயொழிய பழய பாக்கியைப்பற்றி அதில் யாதொன்றும் பிரஸ்தாபிக்கப்படாதபடியால் பாக்கிவிஷயமாய்க் கொண்டுவந்த பிராதுக்கு ஷை ரசீது உதவத்தகாது. அன்றியும் கோர்ட்டார் ஒரு ரசீதின் விவரக்குறைவால் முன் பாக்கியைப்பற்றி அனுமா



ளிக்கிறவிஷயம் யுக்தானுசாரமேயொழிய கட்டாயமானதல்ல.]

———:O:———

## பிரிவிகௌன்ஸில் கேஸ்

### (கல்கத்தா.)

ஹரேந்திரலால்ராய் சவுத்ரீ

*Vs*

ஸ்ரீமதி ஹரிதேவி தாஸி

1895 செப்டெம்பர் 21-ல் மணிமோஹன்ராய் என்ற 1-ம் பிரதிவாதியுடன் செய்துகொண்டு வந்த வியாபார பத்து வரவு கணக்குகளின் விஷயமாய் வாதி 1-ம் பிரதிவாதியினிடம் ஒரு சொத்து ஜாமீன் கேட்டதின்பேரில் 1-ம் பிரதிவாதி தனக்குச் சொந்தமான மஹால் கமக்போடா என்னும் கிராமத்திலுள்ள 8-அணு விகிதமான பங்கையும் இன்னும் இதரமான பற்பல சொத்துக்களையும் ஈடாகக் காட்டி வாதியின்பேருக்கு அடமான தஸ்தவேஜு எழுதிக்கொடுத்து தன்னால் வாதிக்குச்சேரவேண்டிய பாக்கிகள் யாவற்றையும் ஷை அடமானத்திற்கு பிரதிபிரயோஜனமாகக் காட்டியிருந்தார். வாதி ஷை அடமான தஸ்தவேஜில் கண்ட 28 அயிடங்களில் ஒரு அயிடம் கல்கத்தா டவுனிலுள்ள வீடென்னயாதலாலும் அதனால் ஷை அடமான தஸ்தவேஜானது கல்கத்தா டவுன் சப்ரெஜிஸ்டிரார் ஆபீஸில் ரெஜிஸ்டரானபடியாலும் அடமானக்கடனை வசூலிக்கும்பொருட்டு கல்கத்தா ஹைகோர்ட் அசல் தரப்பில் தாவா செய்து டிக்கிரீ பெற்றார். அடமான சொத்துக்களில் 28-வது அயிடமாகிய கல்கத்தாவிலுள்ள வீடு விஷயமாய் தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட விவரம் குருதாஸ் தெருவு 25 நெ. என்றிருப்பது கைப்பிசகென்றும் அது அஷ்டாஷ் தேய் சந்திலிருப்பதாக எழுதப்பட்டிருக்கவேண்டுமென்றும் தாவா காலத்தில் இருதரத்தாலும் தெரிவித்துக் கொள்ளப்பட்டதின்பேரில் கல்கத்தாஹைகோர்ட்டார் அந்தப்பிசகை ஒப்புக்கொண்டு அந்த சொத்து கல்கத்தா டவுனிலிருப்பதாகவே நம்பி டிக்கிரீயளித்ததில் சொத்து விவரத்தைத் திருத்திவிடும்படி அனுமதி கொடுத்தார். டிக்கிரீ 1905 ஜூலை 28-ல் எற்பட்டது. அப்படியிருக்க 2-ம் பிரதிவாதியாகிய ஸ்ரீமதி ஹரிதாஸி தேவி மஹால் குமக் போடாவிலுள்ள 8-அணுவிகிதமான அடமான டிக்கிரீயில் கண்டிருக்கிற



பங்கை 1904 நவம்பரில் கோர்ட்மூலமாய்வேரொருபாபத்தில் எலத்தில் எடுத்து அதை அனுபவித்து வந்தாள். ஆகவே வாதியின் அடமான டிக்கிரீயிலடங்கிய சொத்தில் ஒன்று 2-ம் பிரதிவாதிக்குச் சொந்தமாக ஏற்பட்டதைக்கண்டு வாதி பிட்ஜூர் சப்கோர்ட்டில் ஷை சொத்தானது 2ம் பிரதிவாதிக்கு பாத்தியமாகாதென்றும் அவள் எலமெடுத்ததற்கு முந்தியேதான் அதை அடமானம் பெற்று அந்த அடமானத்தின்பேரில் டிக்கிரீயும் அடைந்திருப்பதாகவும் சொல்லி அடமான பாத்தியத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு 2-ம் பிரதிவாதியின் பாத்தியதையையும் சுவாதீனத்தையும் ரத்து செய்யும்பொருட்டும் அசல் தாவா செய்தார். அடமானதாராகிய மணி மோஹனராய் 1-ம் பிரதிவாதியாகக் சேர்க்கப்பட்டிருந்தார். 2-ம் பிரதிவாதியினிடமிருந்து தாவா சொத்தில் ஹக்கு பாத்தியதையை அடைந்த ஒருவன் 3-ம் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்தான். 1-ம் பிரதிவாதி எக்ஸ்பார்ட்டியாக இருந்துவிட்டார். 2-3 பிரதிவாதிகள் எதிரான்ஸரில் அடமான தஸ்தவேஜும் அதை அனுசரித்து எற்பட்டடிக்கிரீயும்செல்லத்தகாதென்பதற்குகாரணமாக அடமான தஸ்தவேஜில்காணப்பட்டிருந்த குருதாஸ் தெருவில் 25 நெ. வீடானது வாஸ்தவமாய்க் கிடையவே கிடையாதென்றும் மணி மோஹனராய் என்றவருக்குச் சொந்தமான கல்கத்தாவிலுள்ள சொத்து யாதொன்றும் அடமான தஸ்தவேஜில் கிடையாதென்றும் ஆகவே அந்த தஸ்தவேஜைகல்கத்தாசப்ரிஜிஸ்டிராராபீஸில் ரெஜிஸ்டர் செய்தது செல்லத்தகாதென்றும் தவிர கல்கத்தா டவுனில் யாதொரு சொத்தும் இல்லாத பட்சத்தில் கல்கத்தா ஹைகோர்ட்டார் அடமானப்பிராதை எற்றுக்கொண்டு டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்றும்ஆகவேவாதியின் டிக்கிரீ பாத்தியதை முழுவதையும் 2-3 பிரதிவாதிகள் செல்லாதென்று ஆக்ஷேபித்தார்கள். சப்கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தும் கல்கத்தா ஹைகோர்ட்டார் சப்கோர்ட்டிக்கிரீயை ரத்துசெய்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி பிரிவி கௌன்ஸில் அப்பீல்செய்ததில் கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானம் காயமாகி பிரிவிகௌன்ஸில் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது

பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தின் சுருக்கமாவது:— பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கிறபடி அடமான தஸ்தவேஜானது தப்பான இடத்தில்ரெஜிஸ்டராச்சுதென்றும் கல்கத்தா ஹைகோர்ட்டாருக்கு அடமான டிக்கிரீயளிக்க அதிகாரவரம்பில்லையென்றும் ஏற்பட்டால் வாதியின் இந்த தாவா தள்ளுபடியாகவேண்டியது நியாயமாகும். அடமான தஸ்தவேஜில் கண்டிருக்கிற 28 சொத்துக்களில் 28 வது அயிடமாகிய ஒரு வீடு மட்டும் கல்கத்தா டவுனிலிருப்பதாயும் மற்றவைகளெல்லாம் கல்கத்தா டவுனுக்கு வெளியேயிருப்பதாயும் கண்டிருக்கிறது. டவுனிலுள்ள வீட்டுக்கு நான்கு எல்லையும் விவரிக்கப்பட்டு குருதாஸ் தெருவில் 25 நெ. வீடென்றும் சொல்லப்பட்டு விஸ்திரணம் முதலிய அடையாளங்களெல்லாம் தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருக்கிறது. டவுன் சப் ரெஜிஸ்டிராரும் யாதொரு சந்தேகப்படாமல் டவுனிலுள்ள சொத்தும் தஸ்தவேஜில் காணப்பட்டிருந்ததால் பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்து கொடுத்துவிட்டார். அடமான தஸ்தவேஜின் பேரில் தாவா நடக்கும்பொழுது ஷெடியூல் விவரிக்கப்பட்டதில் தெருப்பெயர் தப்பாய் விழுந்ததாகவும் அது அக்ஷரதோஷதேய் சந்திலிருப்பதாய்க் குறிக்கப்பட வேண்டுமென்றும் இருதாரர்களும் சொல்லிக்கொண்டார்கள். அதன்பேரில் கோர்ட்டார் சொத்து விவரத்தைத்திருத்திக்கொடுக்கச் சொல்லி சொத்தானது கல்கத்தா டவுனிலுள்ள வீடுதானென்று தொனித்து டிக்கிரீயளித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்திற்கு 2-3 பிரதிவாதிகள் கட்டுப்பட நியாயமில்லை. அந்த பிராதில் இவர்கள் பார்ட்டிகளல்ல. ஆகையால் அந்த டிக்கிரீயின் நியாயத்தைப்பற்றி இவர்கள் ஆக்ஷேபிக்க லாயக்குண்டு. தவிர அடமான வியாஜ்ஜியத்தில் சொத்து விவரம் திருத்தப்பட்டிருக்க அதற்கு இந்தப் பிரதிவாதிகள் கட்டுப்படாதபடியாலும் திருத்தப்பட்டதற்கு முந்தியே இந்தப்பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியதை ஏற்பட்டுப் போனபடியாலும், பிந்தி சொத்து விவரம் திருத்தியானபிறகு ஏற்பட்ட டிக்கிரீயினால் வாதிக்கு தாவா சொத்தில் பாத்தியதை உண்டாச்சுதென்பதாலும் வாதியின் பாத்தியதையைவிட பிரதிவாதிகளின் பாத்தியதை மேலானதாகும். அன்றியும் அடமான வியாஜ்ஜியத்தில் சொத்து விவரத்தைத் திருத்திக்கொள்ள அனுமதி கொடுப்பதும் நியாயமல்ல. திருத்தலுக்காக வந்த பிராதல்ல. பிராதிலும் திருத்திக் கொடுக்கும்படியான கோறிக்கையும் காணப்படவில்லை.

இப்படியிருக்க இந்த வியாஜ்ஜியம் நடக்கும் காலத்தில் 1-ம் பிரதிவாதி ஆஜராகவில்லை. 2-3-பிரதிவாதிகள் மட்டும் ஆஜராகி 28-வது அயிடமாகிய வீடு கிடையவே கிடையாதென்றும் அடமானம் வைக்கப்பட்ட சொத்து யாதொன்றும் கல்கத்தா ஹைகோர்ட்டின் அதிகாரவரம்புக்குள்ளும் டவுன் சப் ரெஜிஸ்டிரார் எல்லைக்குள்ளும் கிடையாதென்றும் ஆகவே ரெஜிஸ்டர் சட்ட விரோதமென்றும் டிக்கிரீ அதிகாரவரம்பின்றி அளிக்கப்பட்டதென்றும் எதிர்வாதம் செய்தார்கள். கல்கத்தாவில் யாதொரு சொத்தானது அடமானத்தில் அடங்கியிருக்கிறதா வென்ற பாயிண்டும் இஷ்யூவில் ஏற்பட்டிருந்தது. ஈரக்கிகாலத்தில் வாதிக்காக இந்தவீட்டு விஷயமாக யாதொரு சாட்சியும் விஜாரிக்கப்படவில்லை. சொத்து விவரத்தில் பிசகு ஏற்பட்டதாக வாதியாகிலும் 1-ம் பிரதிவாதியாகிலும் சாட்சியம்சம் கொடுக்கவுமில்லை. பிரதிவாதிகளோ தங்கள் சாட்சிகளால் கல்கத்தாவில் குருதாஸ் தெருவில் 25 நெ வீடே கிடையாதென்றும் 28-வது அயிடமாக விவரிக்கப்பட்டிருக்கிற சொத்தானது 1-ம் பிரதிவாதிக்குச் சொந்தமானதல்லவென்றும் 1-ம் பிரதிவாதிக்கு அந்தவிவரப்படி சொத்து யாதொன்றும் ஒரு பொழுதும் இருந்ததில்லையென்றும் ருஜுப்படுத்தியிருக்கிறார்கள். தஸ்தவேஜில் விவரிக்கப்பட்டிருக்கிற சொத்தானது அன்னியர்களுடையதாகவே வெகுகாலமாய் ரெஜிஸடரில் பதிவாயுமிருக்கிறது ஆகவே குருதாஸ் தெருவு 25 நெ வீடு என்பது முற்றிலும் பொய்யான சொத்தாகும். எழுத்துப்பிசகால் ஒரு சொத்துக்கு பதிலாய் வேறொரு சொத்து குறிக்கப்பட்டதாய் ருஜுப்படுத்தலாம். ஆனால் அவ்வித ருஜுபாகமே கிஞ்சித்தும் கிடையாது. தஸ்தவேஜை எழுதிக்கொடுத்தவனும் சாட்சிக்கூடேரவில்லை. எழுதிவாங்கின வாதியும் இது விஷயமாய் ருஜுக் கொடுக்கவில்லை. மணிமோஹனராய் எப்படிசாட்சிசொல்லக்கூடும்? தனக்கு பாத்தியமில்லாத ஒரு சொத்தை அடமானம் வைப்பதாக நினைத்து பிசகாய் வேறொரு சொத்தைக் குறித்து எழுதினதாகச்சொல்லக்கூடுமா? அப்படிச்சொல்லக்கூடாதபடியால் அவன் சாட்சியாகவே வரவில்லை. அன்றியும் டவுனிலுள்ள சொத்தை சாதாரணமாய் தெருப்பெயர் டோர் நம்பர் இவைகளைக்கொண்டே முதல் அடையாளமிடுகிறது வழக்கம். அப்படியிருக்க இந்த முக்கியமான அடையாளத்திலேயே பிசகிருப்பதாகச் சொல்லி திருத்தும்படி அனுமதிபெற நியாயமல்ல. ஆகவே தஸ்தவேஜிலிருக்கிறபடியே சொத்து விவரிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று பிரதிவாதி உத்தேசித்திருந்ததாகவே சொல்லவேண்டும். அப்படியானால் பரஸ்பரம் பிசகில் அகப்பட்டதாகச் சொல்லத்தகாது. வாதியின் நிலமையை கவனித்தால் அவனுக்காக வந்த ஒரே சாட்சியாகிய ஒரு லாயர் குமாஸ்தா தான் தஸ்தவேஜை மசோதா பண்ணினதாகச் சொல்லுகிறான். சாட்சியொப்பமிட்டிருக்கிறான், ரெஜிஸ்டராபீஸிலும் அடையாள சாட்சியொப்பும் செய்திருக்கிறான். குருக்கு விஜாரணையில் தான் 25 நெ வீட்டைப்பற்றி விஜாரிக்கவேயில்லையென்றும் ஒரு தாகரியைக்கொண்டு நான்கு எல்லையைக்கேட்டறிந்து தஸ்தவேஜை எழுதினதாகவும் தஸ்தவேஜில் குறித்துக்காட்டப்பட்டிருக்கிற வீட்டைத்தான் பார்ட்டிகள் அடமானம் வாங்குவதாக எண்ணங்கொண்டதாகவும் தனக்கு குருதாஸ் தெருவில் 25 நெ. வீடு ஒன்று இருப்பதாகவே தெரியாதென்றும் மூலாதார தஸ்தவேஜுகள் யாதொன்றையும் தான்வைத்துக்கொண்டு தஸ்தவேஜை எழுதவில்லையென்றும் தஸ்தா வேஜுகளை முன்னாவது பின்னாவது தான்பார்த்ததேயில்லையென்றும் ஒப்புக்கொள்ளுகிறான். வாதிக்காக இந்த சாட்சி நடந்தும் இந்த வீட்டில் 1-ம் பிரதிவாதிக்கு யாதொரு பாத்தியமுண்டாவென்று விஜாரிக்கவேயில்லை. இதனால் இருதாரத்தாருக்கும் தெரிந்தே பொய்யான ஒரு அயிடம் தஸ்தவேஜில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். பிசகான விவர குறிப்பைப்பற்றி வாதியும் இந்த சாட்சியும் பிரஸ்தாபிக்கவில்லை. அடமான காலத்தில் அவ்வித சொத்தொன்றிருந்ததாகவும் சொல்லப்படவில்லை. அதைப்பற்றி இஷ்யூ ஏற்பட்டிருந்தது. ஆகையால் பிசகாய் சொத்து விவரம் ஏற்பட்டதாக நம்புவதற்கு நியாயமில்லை. ஆகையால் கல்கத்தாவிலேயே ரெஜிஸ்டர் செய்யும்படியாகவும் கல்கத்தா ஹைகோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் நடத்தும்படியாகவும் இல்லாத சொத்தை தஸ்தவேஜில் காட்டியிருக்கிறதாகச் சொல்லவேண்டும்.



சொத்து விவரத்தில் பிசகேற்பட்டிருந்ததாக சப்கோர்ட்டார் நம்பியிருப்பதாயும் அதை ஹைகோர்ட்டாரும் ஒப்புக்கொண்டதாகவும் ஆகையால் அவ்விதமான ருஜுபாயிண்டைப்பற்றி பிரிவிகௌன்சிலார் தலையிடக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. இரண்டுகோர்ட்டாரும் ருஜுபாயிண்டைப்பற்றி ஒரே அபிப்பிராயமாக இருந்தால் அதைப்பற்றி மூன்றாவது கோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாதென்பது நியாயம்தான். ஆனால் ருஜுபாகம் யாதொன்றும் இல்லாதபொழுது ஒரு பாயிண்டைப்பற்றி நம்பவதுகாரமில்லை. ருஜுபாகமே கிடையாதென்று தீர்மானிப்பது ஒருசட்டத்தீர்மானமாகும் சொத்து விவரம்பிசகாய்க்குறிக்கப்பட்டதென்பது இஷ்யூவாச்சுது. அதனால்பார்ட்டிகள் ஒன்றை எண்ணி மற்றொன்றைக் குறித்ததாக ருஜு அம்சம்இருக்கவேண்டும். அவ்வித ருஜு அம்சமேகிடையாது இவ்வித ருஜுவில்லாத பாயிண்டை நம்பத்தகாது.

ஆகவே இல்லாத சொத்து தஸ்தவேஜில்குறிக்கப்பட்டிருப்பதால் ரெஜிஸ்டரும் சொல்லாது. கோர்ட்டார் அடமானப் பிராதைப்பிடித்து டிக்கிரீயளித்ததும் செல்லத்தகாது. இரண்டாவதாக ரெஜிஸ்டராபீசை மோசம் செய்ததாகவும் இருதாரத்தார்பேரில் குற்றஞ்சாட்டி மோசத்தின்பேரில் ஏற்பட்டடிக்கிரீரத்தாக வேண்டுமென்றுசொல்லத்தகும். இவ்விதடிக்கிரீயினால் வாதிக்சேர்ப்பட்ட எவ்வித பாத்தியதையும் நிஷ்பிரயோஜனமாகுமென்று சொல்லிவாதியின் பிராது தள்ளுபடியாச்சுது. XXVII M L J-80

———:O:———

ஜஸ்டிஸ் மீல்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

கோதாவரி ஜில்லா.

S. A. 2215 of 1912—21 ஏப்ரல் 1914.

மட்டை சூரய்யா Vs வேப்பாத்தி வைத்தியனாதம்

தேவஸ்தானத்தில் ஊழியம் செய்துவருவதற்காக கவர்ன்மெண்டார் தாவா நிலத்தை இனாமாண்டாக அளித்ததில் இனாம்பெற்றவன் ஷெ இனாம் நிலத்தை பிரதிவாதிக்கு விக்கிரயம் செய்துவிடவே தர்மகர்த்தா வாதியாக வந்து ஷெ நில

த்தை பிரதிவாதி விக்கிரயம் பெறுவதற்கு நியாயமில்லையென்று சொல்லி பிரதிவாதியின் பேரில் சுவாதீனப் பிராது கொடுத்தார். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் சப்கோர்ட்டாரும் வாதிக்கு டிக்கிரியளித்தார்கள். பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் ரத்தாகி வாதியின் பிராது தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— தாவா இனாம் கிராண்டானது தேவஸ்தானத்தால் அளிக்கப்பட்டதாகச் சொல்ல இடமில்லை. கிராண்டில் கண்ட நிபந்தனைகளுக் குட்பட்டு கவர்ன்மெண்டாரால் தாவா கிராண்டு அளிக்கப்பட்டிருக்கிறது. இனாம் நிலத்தைப் பாரதீனம் செய்யாதபடி தடுப்பதற்கு தேவஸ்தான தர்மகர்த்தாளுக்கு அதிகாரம் யாதொன்றும் கிடையாது. கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து அவர்களுக்கு யுக்தமென்று தோன்றினால் மட்டும் கிராண்டை ரத்துசெய்து நிலத்தை வாபிஸ் அடையலாம். திரும்பவும் அதை கிராண்டாக அளிக்கலாம். தாவா இனாம் நிலத்தைப் பாரதீனப்படுத்தின கோவில் ஸேவகன் உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்டால் அவனுக்கு பதிலாக வேலைபார்க்க நியமிக்கப்படுகிறவன் 14 மதராஸ் லா ஜர்னல் 134-ல் சொல்லப்பட்டிருக்கிற நியாயத்தின்படி தாவா நிலங்களைத் திரும்பியடைய லாயக்குண்டாகும். ஆனால் கோவில் தர்மகர்த்தாக்கள் பாரதீனம் செய்யப்பட்ட இனாம் நிலத்தை சுவாதீனமடையும்படி தாவாசெய்ய நியாயமில்லை. ஆகவே வாதியின் பிராது தள்ளுபடியாகவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டு அவரவர் செலவை அவரவர் வகித்துக்கொள்ள வேண்டியதென்று உத்தரவாச்சுது. XXVII M L J.57

---

ஜஸ்டிஸ் சங்கரன்நாயர் & ஜஸ்டிஸ் ஏய்லிங்

திருநெல்வேலி ஜில்லா

S. A. 1618 of 1912-19 பிப்ரவரி 1914

சுப்பலுச்சாரி Vs வன்னியக்கோனான்

திருநெல்வேலி டவுனில் காமாட்சியம்மன் கோவிலுக்கு வடபுரத்தில் செல்லும்பாதையை ஆசுகட்டத்திற்கும் கோவிலுக்கும் போய்வருவதற்காக வாதிகளாய்வந்தவன்னியக்கோனார்வகையறாக்களுடைய ஜாதியாரும்கணக்கர்ஜாதியாரும் பிள்ளைமார்களும் நெடுநாளாகப் பிரத்தியேகமாய் உபயோகித்து வந்தார்கள். அந்தப்பாதை வழியாய் இதரஜாதியார்கள் யாரும் செல்லக்கூடாதென்று சொல்லி ஸி. பி. ஸி. 30-வது பிரிவின்படி கோர்ட்டாரிடம் அனுமதிபெற்ற வாதிகள் ஷை மார்க்கத்தை உபயோகித்து வருகிற ஜாதியார்களுக்குப்பிரதிநிதிகளாக ஏற்பட்டு திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் தங்கள் பிரத்தியேகமான நடபாதைபாத்தியதையைஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவாசெய்ததில் டி-முகோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும்ஒரேஅபிப்பிராயமாக வாதிகளுக்குக் கோரியபடிடிக்கிரியளித்தார்கள். அதன்பேரில் எதிரிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானம் உறுதியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— ஒரு ஜாதியார் வழக்கத்தை அனுசரித்து யாதொரு பாத்தியதையையும் அடையக்கூடாதென்று முக்கியமாய் 2-வது அப்பீலில் வாதிக்கப்படுகிறது.ஒவ்வொருவழக்கமும் ஒருகிராமம் அல்லது ஒருஜில்லாவில் அனுசரிக்கப்பட்டுவருகிறதாயிருக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது

இங்கிலீஷ் சட்டப்படி இம்மாதிரியான வழக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சில ஜாதியார்கள் ஒருவித பாத்தியதையைக் கொண்டாடி வருகிறார்களென்று காணப்பட்டால் அவ்வித பாத்தியதைக்கு சட்ட சம்பந்தமான மூலாதாரம் அதற்கு ஏற்படலாமாவென்று தீர்மானிக்கவேண்டியதாகும். யாதொரு பாத்தியதையானது நினைவில்லாத கால முதல் அனுபவிக்கப்பட்டு வந்தால் அந்த பாத்தியதைக்கு மூலம் ருபிக்கப்படாத போதிலும் கூடுமானால் சட்ட சம்பந்தமான மூலாதாரம் அனுமானிக்கப்படலாம். ஒரு குறித்த இடத்தைப்பற்றி யாதொரு பாத்தியதை கொண்டாடப்பட்டால் அதை வழக்க முறையான பாத்தியதையென்று சொல்லவேண்டும்.ஆனால் ஒரு பாத்தியதையானது சிலகுறித்த ஆட்கள் ஜாதியார்கள் சங்கத்தார் வகுப்பினர் இவர்களை பற்றியதாக அனுஷ்டிக்கப்பட்டால் அவ்வித பாத்தியதைக்கு அனுபோகபாத்தியதை என்று பெயரிடவேண்டும். ஒருஜாதியார் அனுபவிக்கிற பாத்தியதைக்கும் இதே பெயரிடத்தகும் ஒரு ஜாதியாருக்காக சொத்துக்கள் சம்பாதிக்கப்படுகின்றன. ஒரு ஜாதியார் யாதொரு சொத்தை ஆண்டு நடத்திவர பாத்தியமுண்டென்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.



OFFICE OF THE REGISTR... BOOKS 13 SEP 1914 MADRAS

சொத்தைப் பரிபாலனம் செய்து வரும் விஷயத்தில் ஒரு ஜாதியாருடைய ஓட்டபிப்பிராயத் தீர்மானங்கள் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படுகின்றன. ஜாதியார்களுக்காகவும் ஜாதியார்கள் பேரிலும், பொதுவாய் தாவாக்கள் நடத்திவரப்படுகின்றன. ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தாவாவில் பார்ட்டியாக இருக்க முடியாத அசந்தர்ப்பத்தால் ஸி. பி. ஸி. 30-வது பிரிவின்படி கோர்ட்டார் பிரதிநிதிகளை நியமிக்கிறார்கள். அப்படியெல்லாமிருக்க ஒரு ஜாதியார் நீடியகாலத்து அனுபோகத்தால் ஏன் ஒரு பாத்தியதையை அடையக்கூடாது? அவ்வித பாத்தியதையை ஜாதியில் ஒவ்வொருவரும் அனுபவிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. அனுபவித்துவருகிற மெம்பர்கள் ஜாதியாரனைவருக்காக அனுபவிக்கிறதாகஏற்பட்டால் போதுமானது. ஒரு ஜாதியார் இவ்விதமாய் அடையக்கூடிய பாத்தியதைக்கும் ஒரு கூட்டுக் குடும்பத்தார் அல்லது ஒரு சங்கத்தார் அடைகிற யாதொரு பாத்தியதைக்கும் வித்தியாஸம் கிடையாது. ஆகவே இந்தக் கேசில் ருஜுவாகியிருக்கிற அம்சங்களைக் கவனித்தால் வாதிகள் யாருக்காக பிரதிநிதியாக வந்திருக்கிறார்களோ அந்த வகுப்பினர்கள் கோரும் பாத்தியதையை அடைய லாயக்குள்ளவர்களென்று சொல்லத்தகும். வாதிகள் கேட்கும் பாத்தியதை ஜனப்பொதுவான பாத்தியதையல்ல. ஆகவே தாவா பாத்தியதையை பிராதில் கோறப்பட்ட ஜாதியார் மட்டும் உபயோகப்படுத்தலாமென்றும் அந்நியர்கள் அதை உபயோகப்படுத்தக்கூடாதென்றும் ஏற்பட்டு அந்த பாத்தியதையானது நிலையான பாத்தியதையாகப் போய்விட்டது. XXVII M L J 110

:0:

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்

கஞ்சம் ஜில்லா

A. S. No 7 of 1912-27 ஏப்ரல் 1914

வீரபஸவராஜு Vs பாலஸூர்ய பரஸாதராவ்

மூலபுருஷனுகிய விசுவனுதராவ் என்றவர்காலஞ்சென்ற பிறகு அவருடைய சொத்துக்களை அவருடைய பாரியாள் அடைந்து அனுபவித்து வந்தாள். அவளுக்குப்பிறகு அனந்தரவாரிஸ்களாகிய பிரதிவாதிகளுக்கு அந்த சொத்துக்கள் சேரவேண்டியதாயிருக்க ... பஸவராஜு என்றவர் தான் ஷை மூலபுருஷனுகிய விசுவநாதராவ் என்றவருடைய சித்தப்பனுகிய பெத்த சன்னியாஸி ராஜு என்றவருக்கு ஸ்வீகாரபுத்திரனென்றும் ஆகவே தான் பிரதிவாதிகளை விட சமீபமான அனந்தரவாரிஸ் பாத்தியதையுடையவனென்றும் சொல்லி தன்னுடைய ஸ்வீகாரத்தை நிலைநாட்டும்பொருட்டும் தன்பாத்தியதை மேலானதென்று ஸ்தாபிக்கும் பொருட்டும் கஞ்சம் ஜில்லா கோர்ட்டில் அசல் தாவா செய்தார். ஜில்லா ஜட்ஜியவர்கள் 1-ம் வாதியின் ஸ்வீகாரம் செல்லாதென்பதற்குக் காரணமாக பெத்த சன்னியாஸி ராஜுவினுடைய அனுமதியன்னியிலும் மற்ற ஸபிண்டர்களுடையசம்மதமன்னியிலும் 1-ம் வாதியை பெத்த சன்னியாஸிராஜுவின் பாரியாள் ஸ்வீகாரமெடுத்தது சட்டவிரோதமென்றும் அப்படிக்கு ஸ்வீகாரம் செல்லத்தகுமென்று ஏற்பட்டாலும் மூலபுருஷனுகிய விசுவநாதராவ் இறந்தபின்னும் ஷை யாரின் சொத்துக்கள் அவருடைய பாரியாளிடம் சட்டப்படி அமைந்த பிறகு தாவா ஸ்வீகாரம் ஏற்பட்டதால் அந்த ஸ்வீகார பாத்தியதையானது முந்திய அனந்தர வாரிஸ்களுடைய பாத்தியதைக்கு மேலாகாதென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதன்பேரில் 1-ம் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஸ்வீகாரம் முற்றிலும் செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது. அப்பீல் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—கணவனுடைய அனுமதியில்லாமல் ஸ்வீகாரமெடுக்கப்பட்டதாகவும் அதற்கு மற்ற ஸபிண்டர்கள் போதுமானமட்டில் சம்மதிகொடுக்கவில்லையென்றும் ஜில்லாகோர்ட்டார் கொண்ட அபிப்பிராயம் சரியானதென்று தோன்றுவதால் அதை ஒப்புக்கொண்டு பிந்திய பாயிண்டைப்பற்றி அதாவது ஸ்வீகாரம் செல்லத்தகுமானாலும் அது மூல புருஷனுடைய மரணத்திற்குப் பின் ஏற்பட்டதால் பிரதிவாதிகளின் பாத்தியதைக்குமேலானதாகஸ்வீகார புத்திரனுக்கு அனந்தரவாரிஸ் பாத்தியதை ஏற்படாதென்ற விஷயத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கத்தேவையில்லையென்று சொல்ல வேண்டும். வாதிக்காக விடப்பட்ட ருஜுவு அம்சங்களை நம்பத்தக்கதல்லவென்ப

தற்குக் காரணமாக வாதி தரப்பு சாட்சிகள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களென்றும் வாதிக்கு அனுகூலம் செய்வதில் ஆவலுடையவர்களென்றும் அவர்கள் சொன்ன சாட்சியம்சங்கள் அசம்பாவிதமானவைகளென்றும் ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டு வாதியின் ஸ்வீகார பாத்தியதையைச் சரியானபடி ருஜுப்படுத்தி ஸ்தாபிக்கவில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள். அதற்காக விவரமாய் பற்பல காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவைகளைத் திரும்பவும் எடுத்துரைக்கத்தேவையில்லை. B-ஆதாரவானது ரெஜிஸ்டராகாத ஒரு தஸ்தவேஜாதலால் அதை ருஜுபாகத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற ஆக்ஷேபனையைப்பற்றியும் தீர்மானம் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் வாதிக்காக ஒரு முக்கியமான பாயிண்டு எடுத்து வாதிக்கப்பட்டது. VI (a) ஆதாரவாகிய ஒரு தஸ்தவேஜின கருத்தை ஜில்லா ஜட்ஜியவர்கள் தப்பாக அபிப்பிராயங்கொண்டு அதனாலேயே வாதி பக்கத்து ருஜுபாகத்தை முழுவதையும் நம்பாமல் வாதிக்கு விரோதம் செய்திருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. அந்த தஸ்தவேஜைப் பார்த்த உடன் வாதியின் ஸ்வீகாரத்தகப்பனாகச் சொல்லப்படுகிற பெத்தசன்னியாஸி ராஜு அவர்கள் 1840-ம் வருஷத்திலேயே காலஞ்சென்று விட்டதாக அர்த்தங்கொண்டு பிராதில் சொல்லியிருக்கிறபடி 1853-ல் ஷை யார் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படி தன் பாரியாளுக்கு அனுமதிகொடுக்க சாத்திய மாகாதென்று ஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு இந்தத்தப்பான அபிப்பிராயத்தால் வாதியின் கேசை முற்றிலும் நம்பாமல் விரோதம் செய்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. அந்த அபிப்பிராயம் தப்பென்பதற்கு சமாதானமாக 1840-ல் இறந்துபோனதாக VI a ஐக் கொண்டு அனுமானிக்கப்பட்டவன் பெத்த ஸன்னியாஸி ராஜுவாக இருக்க நியாயமில்லையென்றும், பெத்தஸன்னியாஸியின் தகப்பனுக்கு இரண்டு தாரங்களென்றும் பெத்த சன்னியாஸி இளையதாரத்தின் மகனாயிருக்க வேண்டுமென்றும், VIa ஆதாரவில் ஒரே குமாரனைக்குறிக்கப்பட்ட புத்திரன் மூத்ததாரமாகிய வேயம்மாளுடைய புத்திரனென்றும் வேயம்மாளுக்கு 1841 ல். ஒரே புத்திரன் ஜீவித்திருந்ததாக ஷை தஸ்தவேஜில் கண்டிருப்பதனால் மற்றொருபுத்திரன் முந்தியேகாலஞ் சென்றிருக்க வேண்டுமென்றும் ஆகவே பெத்த சன்னியாஸி 1841-ல் காலஞ்சென்றுவிட்டதாகவே ஷை தஸ்தவேஜின் வசனங்களைக்கொண்டு நிதானிக்கக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறது. தவிரவும் VI (a) தஸ்தவேஜில் வேயம்மாளுடைய சொத்தின் வாரிஸ் பாத்தியதையைக்குறித்து யாதொரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க அதில் ஒரே புத்திரனைப்பற்றி பிரஸ்தாபம் செய்திருக்கிறதேயொழிய, பெத்தசன்னியாஸி ராஜு காலஞ்சென்றிருந்தால் அவனுடைய பாரியாளுக்காக யாதொரு ஏற்பாடு அந்த தஸ்தவேஜில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் அவளைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் செய்யப்படாத காரணத்தால் பெத்த சன்னியாஸி ஜீவனோடிருக்கவேண்டுமென்றும், வேயம்மாளுடைய ஒரே புத்திரனைப்பற்றி அந்த தஸ்தவேஜில் பிரஸ்தாபம் செய்திருப்பதால் வேறு புத்திரன் அவளுக்குப்பிறந்து இறந்து விட்டதாக அவ்வசனத்தால் ஏற்படநியாயமில்லையென்றும் வாதிக்கப்படுகிறது. A A ஆதாரவில் வேயம்மாளுக்கு ஒரே புத்திரனிருப்பதாகச்சொன்னதில் எழுதினவனுடைய நோக்கத்திற்கு அவ்வித வசனம் போதுமானதாகத்தோன்றியிருக்கலாம். இறந்து போன புத்திரனைப்பற்றி பிரஸ்தாபிக்காத போன குறையால் புத்திரன் ஒருவன் முந்தி இறந்து போகவில்லையென்று ஏற்படாது. VI (a) ஆதாரவானது வேயம்மாளுடைய சொந்தமான எஸ்டேட்டைப் பற்றிய தஸ்தவேஜாயிருக்க அதில் காலஞ்சென்றதாக அனுமானிக்கப்பட்ட பெத்த சன்னியாஸியின் பாரியாளுடைய பிரஸ்தாபமும் அவளுடைய ஜிவனும்ச விஷயத்தைப்பற்றிய ஏற்பாடும் குறித்துக்காட்டத் தேவையில்லை. வேயம்மாள் புருஷனுடைய சொத்தைப்பற்றிய ஏற்பாடு யாதொன்றும் ஷை தஸ்தவேஜினால் ஏற்படவில்லை. அன்றியும் பெத்தசன்னியாஸிவேயம்மாளுடைய புத்திரனல்லவென்றும் மறுதாரத்தின் மகனாயிருக்கலாமென்றும் ஈரங்கிகாலத்தில் முதல் முதல் பிரஸ்தாபிக்கப்பட்டதே யொழிய முந்திய சிகார்டுகளில் ஏற்படவில்லை. தவிர அதை ஒப்புக்கொள்ளத்தக்க ருஜுபாகமும் திருப்திகரமாயில்லை. ஆகவே VI (a) ஆதாரவைத்தப்பாய் ஜில்லா கோர்ட்டார் அர்த்தங்கொண்டு 1840-ல் பெத்த சன்னியாஸி ராஜு என்ற வாதியின் ஸ்வீகாரத்தகப்பன் காலஞ்சென்றுவிட்டதாக அனுமானித்தது பிசகென்றும் அந்தப்பிசகான நோக்கத்தாலேயே வாதியின் வியகாரம் முழுவதையும் நம்பவில்லையென்றும் சொல்லப்படுகிற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஜில்லா கோர்ட்டார் வாதியின் ஸ்வீகாரத்தை சட்டவிரோத மென்று தீர்மானித்ததற்கு VI (a) ஆதாரவு மட்டும் காரணமல்ல. வேறு வகையான பலகாரணங்களுமிருக்கின்றன.



பெத்த சன்னியாஸியின் பாரியாள் ஸ்வீகாரம் எடுக்கத்தன் கணவனுடைய ஸபிண்டர்களுடைய சம்மதம் அடையவேண்டுமென்ற சட்டமுறை ஏற்பட்டிருக்க வம்சத்தைச்சேர்ந்த ஸபிண்டர்களில் மிகவும் எட்டிய ஸபிண்டராகிய போரய்யா பூஷணராவ் என்றவர் சம்மதம் கொடுத்திருப்பதாக அவர்கைப்பட எழுதியனுப்பப்பட்ட ஒரு கடிதமானது வாதிக்காக ஆஜர்படுத்தப்பட்டிருக்கிறது. போரய்யா என்றவர் பெத்த சன்னியாஸி ராஜுவின் பூட்டனுடைய (கொள்ளுதாதாவினுடைய) சகோதரனுக்கும் மூலபுருஷனாகிய விசுவநாதராவின் பூட்டனின் தகப்பனுடைய கொள்பேரனாகிறான். ஆகவே பேத்தசன்னியாஸியின் வம்சத்தில் அவர் மிகவும் எட்டினதாயாதியாகிறார். அவர் எழுதிய கடிதத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது மிகவும் விரும்பத்தக்க காரியமென்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய I-வது வாதியை ஸ்வீகாரமாக எடுத்துக்கொள்ளப்போகிறதகவல் தெரியுமென்றாவது அவனை எடுத்துக்கொள்வதில் ஆக்ஷேபனையில்லையென்றாவது அந்த கடிதத்தினால் துலங்கவில்லை. போரய்யாவும் காலஞ்சென்றுவிட்டார். போரய்யா மேற்கண்ட விதமான சம்மதி கொடுத்த 5 மாதங்களுக்குப்பிறகு பெத்த சன்னியாஸியினுடைய பாரியாள் 1-ம்வாதியை ஸ்வீகாரமாகக்கொடுக்கும்படி 1-ம் வாதியின் ஜனகதகப்பனைகேட்டதாகவும் தான் சம்மதித்ததாகவும் 1-ம் வாதியின் ஜனகதகப்பன் வாதி தரப்பு 1-ம் சாட்சியாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். போரய்யா எழுதின கடிதத்திலிருக்கிறமற்ற தகவல்களைக்கொண்டு ஜில்லா ஜட்ஜியவர்கள் அதில் பையனைத் தெரிந்தெடுக்கும் விஷயமும் யோசனையாகக்காட்டப்பட்டிருக்கிறதென்று மற்ற ருஜுபாகத்தைக்கொண்டு அனுமானிக்கிறார். அது தப்பான அனுமானமாகும். போரய்யாவினுடைய கடிதத்தையும் ஏற்பட்டிருக்கிறருஜு அம்சத்தையும் கவனித்தால் எக்காலத்திலாவது யாதொரு பய்யனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்ற அனுமதி கொடுக்கப்பட்டதாக மட்டும் ஏற்படுகிறது. அதற்கு மேலாக கடிதத்தின் கருத்தை நிதானிக்க நியாயமில்லை. இவ்விதமான அதிகாரம் சட்டப்படி உபயோகப்படத்தக்கதல்ல. 26 மதராஸ் 681ஐப் பார்க்கவும். கடிதத்தால் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் விஷயம் அனுகூலமான காரியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அவசியமான முடிவான சம்மதி பின்னால் கொடுக்கத்தக்கதாய் மற்ற விவரங்கள் அதாவது பய்யனுடைய குலம் கோத்திரம் முதலிய விவரங்கள் எதிர்பார்க்கப்பட்டதென்று சொல்லத்தகும். மேற்கூறிய விவரங்களுடன் திரும்பவும் அனுமதி கேட்டு அதற்குப்பின் அனுமதி கொடுக்கும் அதிகாரத்தை போரய்யா நிறுத்திவைத்துக்கொண்டிருந்ததாக அனுமானிக்கவேண்டுமே யொழிய மேற்கூறிய பொதுவனா சம்மதி வசனத்தால் I-ம் வாதியை ஸ்வீகாரம் எடுக்க சம்மதித்ததாகச்சொல்லக்கூடாது.

போரய்யாவைத் தவிர A, A ஆதாரவுகளில் சம்மதி கொடுத்திருக்கிறவர்கள் 1-ம் வாதியின் ஜனகதகப்பனும் அவனுடைய சகோதரனுமேயாம். ஜில்லா கோர்ட்டார் அனந்தர வாரிஸ்வரிசையை பல வகுப்புகளாய்ப்பிரித்திருக்கிறார்கள். இவ்விருவரும் அதில் 3-வது வகுப்பைச் சேர்ந்தவர்களாகும். 2-வது வகுப்பைச்சேர்ந்தவர்களின் சம்மதம் கேட்கப்படவில்லை. மூன்றாவது வகுப்பைச் சேர்ந்த மற்ற மெம்பர்களையும் கேட்கவில்லை. 5-வது வகுப்பைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளப்படவில்லை. அதிக சமீபமான அனந்தர வாரிஸ்தாரனாகிய பிரதிவாதியின் தகப்பன் K. சன்னியாஸி ராஜு ஸ்வீகாரம் எடுக்கக்கூடாதென்று சொல்லி சம்மதியை மறுத்துவிட்டார். இப்படியிருக்க A, A, ஆதாரவில் சம்மதி ஏற்பட்டிருப்பது போதுமானதாகுமாவென்று தீர்மானிக்கவேண்டியதாகும்.

பிரதிவாதியின் தகப்பனாகிய K. சன்னியாஸி ராஜு என்றவர் 1882-ல் தன்னுடைய கனிஷ்ட புத்திரனாகிய 2-வது பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி சம்மதிக்கிறார்...

புத்திமாறி சம்மதியை இப்பொழுது பின் வாங்குகிறார் என்றும் சொல்லப்படுகிறது. இது விஷயமாய் வாதி தரப்பு 7-வது சாட்சி கொடுத்திருக்கிற வாக்குமூலம் முற்றிலும் நம்பத்தகாததாகும். எப்படியிருந்தபோதிலும் 2-ம் பிரதிவாதியைஸ்வீகாரம் கொடுப்பதாய்ச் சொன்ன ஏற்பாடு 1890-லேயே நின்றுபோச்சுது. 1882-ல் K. சன்னியாஸி ராஜு கொடுத்த சம்மதம் தன் மகனைப்பற்றிய தானபடியால் சமயபேதத்தாலும் கால ஹரணத்தாலும் சம்மதத்தின் பலனானது பிரயோஜனமற்றுப்போகிறது. ஆகவே அந்தசம்மதம் கணக்கில் சேர்க்கத்தகுந்ததல்ல. 26 மதராஸ் 681 ஐப் பார்க்கவும். D ஆதரவில் K சன்னியாஸி ராஜு தாவாஸ்வீகாரத்திற்குசம்மதிதரமாட்டேனென்று மறுத்திருக்கிறார். அந்த ஆதாரவானது கேட்கப்பட்ட யாதொரு அபிப்பிராயத்திற்கு விடையாகத் தோன்றவில்லை. 1894-ல் ஸ்வீகார விஷயமாய் சம்மதிகேட்டதாக அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் வாதியாவது அல்லது வேறு எந்தப்பய்யனாவது ஸ்வீகாரத்திற்காகத் தெரிந்து கொள்ளப்படவில்லை. ஆகவே D 2 ஆதரவில் K சன்னியாஸி ராஜு சம்மதிகொடுக்காத காரணத்தால் 1-ம் வாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கும்பொழுது அவரைத் திரும்பவும் கலந்துகொள்ளாதது சரியல்ல. D 2 வில் சம்மதி தராததற்குக் காரணம் பரிபூரணமாய்ச் சொல்லப்படவில்லை. காரணம் கேட்கப்படவுமில்லை. கேவலம் ஜீவனும்சபாத்தியதையை மட்டும் உடைத்தாயிருக்கிறவன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள லாயக்கில்லையென்றும் விசுவனாதராவின் சொத்துக்கள் அவளுடைய பெண்சாதியின் ஆதீனத்திற் சென்றுவிட்டதாகவும் ஆகவே ஸ்வீகாரம் நிஷ்பிரயோஜனமென்றும் D 2 விஞல் K சன்னியாஸி ராஜு எச்சரித்திருக்கிறார் என்று சொல்லவேண்டும். A, A-ல் கொடுக்கப்பட்டிருக்கிற சம்மதி விஷயமாய்ப் பின்வரும் ஆக்ஷேபனையம்சங்கள் முக்கியமானதாகும். நரஸம்மாள் தன் கணவன் இறந்த 30 வருஷகாலம் வரையில் ஸ்வீகாரம் எடுப்பதற்காக யாதொரு பிரயத்தனமும் செய்யவில்லை. விசுவனாதராவின் பாரியாளாகிய மகாலட்சுமம்மாள் கணவன் சொத்தை அடைந்து மேலான நிலமைக்கு வந்தபிறகு தான் அவள் தன்னுடைய ஸ்திதி தாழ்மையாயிருக்கிறதென்று கவனித்து ஜில்லா கலக்டருக்கு S என்னும் ஆதாரவை எழுதியனுப்பியிருக்கிறாள். தனக்கு வருஷாஜல வருமானம் போதுமானபடி கிடைத்தமையால் 1890-ல் ஸ்வீகாரம் எடுக்கிற எண்ணத்தைமுற்றிலும் மறந்துவிட்டாள் போலும். திரும்பவும் 1895-ல் நினைத்திருக்கிறாள். அன்றியும் மகாலட்சுமம்மாள் ஸ்வீகாரம் எடுக்கஉத்தேசித்திருப்பதை அறிந்து தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த பய்யனை அவள் ஸ்வீகாரம் எடுக்கமாட்டாளென்ற சந்தேகத்தினலேயே தான்ஸ்வீகாரம் எடுக்க நினைத்திருக்கிறான். 1-ம் வாதியை ஸ்வீகாரம் எடுத்தும் அவன் தன் கணவனுக்குறிய சடங்காசாரங்களை இன்னும் 12 வருஷகாலம் வரை செய்ய யோக்கியனாகமாட்டான். ஆகவே கணவனுடைய வைதீக கர்மாக்களை நடத்துவதற்கு யோக்கியமில்லாத பய்யனைத் தன் ஸ்வயலாபத்தைக்கருதி ஸ்வீகாரம் எடுத்திருப்பதாகச்சொல்லவேண்டும். 1 மதராஸ் 174 ஐப் பார்க்கவும். சமீபமான அனந்தரவாரிஸாகிய பிரதிவாதியின் தகப்பனைக்கலக்காமலும் மிகவும் தூரமாயுள்ள மூன்று ஸபிண்டர்களுடைய சம்மதத்தை மட்டும் அடைந்து அதில் இருவரும் பய்யனுடைய தகப்பனும் சிறுதகப்பனுமாகப் போனதால் ஸ்வீகார ஏற்பாட்டில் சிரத்தையுடையவர்களாய்ப் போனதாலும் மற்ற ஸபிண்டர்களுடைய சம்மதியைக் கேட்க யாதொரு பிரயத்தனமும் எடுக்காமல் சட்டப்படி அவர்களின் மெஜாரிடியாருடைய சம்மதத்தைப் பெருமல் எடுக்கப்பட்ட ஸ்வீகாரம் செல்லத்தகாதென்று சொல்லவேண்டும். ஆகவே இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடியாகி ஜில்லாகோர்ட்தீர்ப்பு காயமாச்சுது 1914 MWN502

———:O:———

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

கர்னூல் ஜில்லா

A. S. 213, 231, & 264 of 1912

12 மார்ச்சு 1914

மார்வாடி பத்மாஜீ மேய்சந்த

*Vs*

அடோனி டிப்டிகலக்டர்

கர்னூல் ஜில்லா அடோனி டவுனை விஸ்தரிக்கும்பொருட்டு டவுனுக்கருகிலுள்ள நிலங்களை முனிசிபாலிடியார் லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் படிக்குக் கிறயத்திற்கு வாங்கும்பொருட்டு கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டதின் பேரில் டிப்டிகலக்டரவர்களுக்கு ஷை நிலங்களை ஆக்டின் முறைப்படிக்கு நிலங்களின் காலக்கிறயத்திற்குத் தக்கபடி விலை மதிப்பைத் தீர்மானித்து ஷை நிலங்களைக் கிறயத்திற்கு வாங்கும்படி உத்தரவளித்ததின்பேரில் டிப்டி கலக்டரவர்கள் நிலக்காரர்களுக்குறிய காம்பென்ஸேஷன் தீர்மானம் செய்ததில் அவார்டின் துகை மிகவும் குறைவாயிருக்கிறதாகச் சொல்லி அதிகமான துகை வேண்டுமென்று ஜில்லா ஜட்ஜியவர்களிடம் தெரிவித்துக்கொண்டதில் ஜில்லா ஜட்ஜியவர்கள் டிப்டிகலக்டருடைய அவார்டைக் காயப்படுத்திவிட்டார்கள். அதன்பேரில் பார்ட்டிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் சிற்சில நிலங்கள்விஷயமாக விலை மதிப்பு கொஞ்சம் உயர்த்தப்பட்டு மற்றவைகளைப்பற்றி கீழ்கோர்ட் தீர்மானமே காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணச்சுருக்கமாவது:— ஜில்லா ஜட்ஜியவர்கள் இந்தக்கேஸில் ஏற்பட்ட ருஜுபாகத்தைப் பற்றி விவரமாயும் அதிக ஜாக்கிறதையோடும் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனல் அவருடைய தீர்மானத்தில் நிலங்களின் விலை மதிப்பானது எந்த நியாய முறையை அனுசரித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று துலங்கவில்லை. டிப்டி கலக்டருடைய அவார்டில் விலைமதிப்பைக் குறித்ததற்குக் காரணங்கள் யாதொன்றும் சொல்லப்படவில்லை. 11 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 117-ல் சொல்லியிருக்கிற நியாயப்படிக்கு கிறய மதிப்பு குறைவாயிருக்கிறதென்று ஆக்ஷேபித்து அதிகத் துகை வேண்டுமென்று கோர்ட்டுக்குவருகிற வாதிதான் கலக்டர் கொடுத்த மதிப்பு குறைவானதென்று ருஜுப்படுத்தவேண்டும். கலக்டரவர்கள் அவார்ட் தீர்மானம் கொடுப்பதில் ராஜாங்க முறையைச் செலுத்துவதுடன் நீதிபரிபாலன முறையையும் நடத்திவருவதாகச் சொல்லவேண்டும். ஆகவே டிப்டி கலக்டர் ஆக்டின் 11-வது பிரிவின்படி கொடுக்கிற அவார்ட் முடிவான தீர்மானமாகும். அதன்பேரில் ஸ்பெஷலாக அதிகாரம் பெற்ற ஜட்ஜியவர்களிடம் தாவா சொல்லிக்கொண்டால் அதைக்கேட்டுபைசலளிக்கிற ஜட்ஜியவர்கள் அப்பீலதிகாரம் செலுத்துவதாக நிதானிக்கப்படவேண்டும். ஆகவே ஷை அப்பீல் கோர்ட்டாரிடம் பரிதாவா சொல்லிக்கொள்ளும் வாதியின்மேல் ருஜுபாரம் ஏற்படுகிறது. ஆனல் அவ்வித ருஜுபாரமானது டிப்டி கலக்டருடைய விஜாரணையின் தன்மைக்குத்தக்கபடி மாறிவிடத்தகும். கலக்டர் விலை மதிப்பைக் குறித்த விஷயத்தில் யாதொரு விஜாரணையும் செய்யாமல்ருஜு அம்சம் யாதொன்றையும் எடுக்காமல் தான் அடைந்த அபிப்பிராயத்திற்குக் காரணங்கள் யாதொன்றும் சொல்லாத விஷயத்தில் ஜட்ஜியவர்களிடம் தாவா சொல்லிக்கொள்ளும் வாதிக்கு ருஜுபாரம் மிகவும் சொற்பமாக ஏற்படும். கலக்டருடைய சொந்தமான அபிப்பிராயம்சரியென்று மதிக்கத்தக்கதல்ல. அதனல் அவார்டின் நியாயத்தை அனுமானிக்கக்கூடாது. கலக்டரவர்கள்காம்பென்ஸேஷன் துகையை நிர்ணயிப்பதில் சிலசமயங்களில் காரணங்களைக் குறித்தெழுதாமலிருந்துவிடுகிறார்கள். ஆக்டின் 19 (i) d-யில்விதிக்கப்பட்டிருக்கிறபடி காரணங்களைச் சொல்லத்தவறினல் ஜட்ஜியவர்களிடத்தில் கலக்டர் தான்விதித்தமதிப்பின்நியாயத்தை ரூபகாரப்படுத்தவேண்டியபொருப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியதாகும். ஆகவே நிலங்களின் விலைமதிப்பைக்குறிப்பதற்கு ஒருவிதமான ஆதாரமுறைஅனுஷ்டிக்கப்படவேண்டியதவசியமாகும். வாதி தனக்கு அதிகமான துகை வேண்டுமென்று மட்டுக்கு மிஞ்சி ஆசைப்பட்ட காரணத்தால் டிப்டி கலக்டருடைய அவார்டின் மதிப்பை நியாயமானதென்றுஒப்புக்கொள்ளக்கூடாது.

தாவா கேஸின் ருஜு அம்சங்களைப்பற்றி யோஜிக்குமுன் பொதுவான பாயிண்டொன்று எடுத்துப் பேசப்பட்டதை கவனித்துப் பார்க்கவேண்டியதாகும். முனிசிபாலிடியார் அடோனிக்குப் பக்கத்தில் நிலங்கள் வாங்கப்போகிற சம்பவம் ஜனங்களுக்கு கெஜட் பிரசுரத்திக்கு முந்தியே தெரியவருமென்று சொல்லப்படுகிறது. இந்த விஷயம் ஜில்லா ஜட்ஜியவர்களாலும் நம்பப்படுகிறது. அதை வாஸ்தவமென்று ஏட்றுக்கொள்ள வேண்டியது நியாயமாகும். ஷை தகவலையறிந்தவுடன் விருத்தியாகக்கூடிய விஷயத்தைப் பற்றி ஜனங்கள் விலை மதிப்பை உயர்த்திவந்தபோதிலும் விளம்பர காலத்தில் நிலங்களுக்கு காலக்கிறய மென்னவென்று அறியவேண்டியது அவசிய

மாகும். ஆனுல் டவுன் விருத்தியாகக்கூடிய சந்தர்ப்பத்தால் நிலங்களின் விலையும் அதிகமாகுமென்ற விஷயத்தை கவனித்து கவர்ன்மெண்டார் வாங்கும் நிலங்களின் கிரயத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயங்கொள்ளக்கூடாது. அவ்வித விலை மதிப்பானது அதிகரித்து விளம்பர காலத்தில் கிரயத்திற்கு வாங்க உத்தேசிக்கப்படுகிற நிலங்களுக்கு அந்த விலை வாஸ்தவமாய் ஏற்பட்டுவிட்டதாக ருஜுவாக வேண்டும். அதாவது பின்னால் விலையேறுமென்ற அனுமானிக்காமல் தத்தைக்கவந்த அதிகவிலையானது நிலங்களின் விஷயமாய் ஏற்பட்டு விட்டதாவென்று கவனித்து விலை மதிப்பை விதிக்கவேண்டும் 26-பம்பாய் 26-ன் 2?-வது பக்கத்தைப் பார்க்கவும். தவிரவும் கிரயத்திற்கு யோக்கியமாயிருக்கும் நிலங்களை சர்க்காரால் வாங்கிகொள்ளப்படுமென்ற நம்பிக்கையால் ஷை நிலங்களுக்கு அதிகமான கிரயம் ஏற்பட்டிருந்தால் அவ்வித நிலங்களின் கிரயத்தைக்கொண்டு கவர்ன்மெண்டார் வாஸ்தவமாய் வாங்கும் நிலங்களின் விலை மதிப்பைத் தீர்மானிக்கக்கூடாது. ஆனுல் டவுன் விருத்தியாவதற்காக யாதொரு ஏற்பாடானது நடைபெற்று வருகிறதென்று காணப்பட்டு அந்த ஏற்பாட்டினுல் நிலங்களின் விலை மதிப்பானது உயருமென்று நம்பப்பட்டால் அந்த நம்பிக்கையால் நிலங்களின உயர்ந்த விலை மதிப்பைக கவனித்து வாதிக்கப்படும நிலங்களின் மதிப்பை யூகிக்கலாம்.

நிலங்களின் விலை மதிப்பை இருவகையாய்க் குறிக்கலாமென்று சொல்லப்படுகிறது. அதாவது அக்கம்பக்கத்து நிலங்களின் காலக்கிரயத்தை அனுசரிக்கலாமென்றும் வாங்கப்படும் நிலங்கள் மனைக்கட்டுக்காக உபயோகப்படுமா அல்லது சாகுபடிக்கு லாயக்கானதாவென்று கவனித்து அதற்குத் தக்கபடி விலை மதிப்பை நிர்ணயிக்கலாமென்று சொல்லப்படுகிறது. இந்த அப்பீலில் சம்பந்தப்பட்ட நிலங்களை மனைக்கட்டு நிலங்களாகவும் சாகுபடி நிலங்களாகவும் பிறித்து விலையை மதிப்பிடப்போதுமான ஆதாரம் கிடையாதபடியால் முதலில் சொல்லப்பட்ட முறையை அனுசரித்து விலை மதிப்பிட நியாயமாகும். வாதிக்காக பற்பல தஸ்தவேஜுகள் ஆஜர் செய்யப்பட்டன. அந்த தஸ்தவேஜுகளில் கண்ட நிலங்களின் மெய்யானது மோசக்கருத்தாய் ஏற்பட்டிருக்கின்றதாகச் சொல்லாவிட்டாலும் பற்பல விதமான யோஜனைகளாலும் முகாந்தரங்களாலும் விலைகள் உயர்த்தப்பட்டிருக்கிறதாகவும் ஆகவே அவைகளில் குறிப்பிட்டிருக்கிற மதிப்பைக் காலக்கிரயமாக எடுத்துக்கொள்ளத்தகாதென்றும் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்படுவது சரியென்று ஒப்புக்கொள்ளத்தகும். ஷை தஸ்தவேஜுகளுக்கு யாதொரு மதிப்பும் கொடுக்கத்தகாதென்று அவைகளை முற்றிலும் விலக்கித் தள்ளினுலும் 4, 5 அயிடங்களின் விக்கிரயத்தொகையைப் பற்றி கலெக்டரவர்களே ருஜுக்கொடுத்திருக்கிற விஷயத்தை கவனித்து டவுனுக்கு மிகவும் சமீபத்திலுள்ள 4-அயிடங்களின் மதிப்பை வகர் ரூ 450 ஆக மதிக்கலாமென்றும் இன்னும் இரண்டு அயிடங்களுக்கு தஸ்தா சீர்ப்படுத்த வேண்டிய நியாயத்தை கவனித்து வகர் ரூ 300 ஆக மதிப்பிடலாமென்றும் சொல்லத்தகும். ஆக்டின்படி 100-க்கு 15 அதிகம் கொடுக்கவேண்டிய தாகையால் கலக்டரின் மதிப்புக்கு மேலாக ஏற்பட்டிருக்கும் தொகைக்கு 100-க்கு 15 விகிதமான அதிக விலையையும் ஆக்டில் 34-வது பிரிவின்படி வட்டி. விகிதமும் கூட்டி வாதிகளுக்கு டிக்கிரியளிக்கவேண்டியதாகும். ஆனுல் வாதிகள் விண்ணப்பத்தில் மட்டுக்கு மிஞ்சின கிரயத்தை சில அயிடங்களில் அபேக்ஷித்தமையால் செலவு விஷயமாய்க் கீழ்கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தை மாற்றாமல் இந்தக் கோர்ட் அப்பீலைப்பற்றின மட்டில் ஒரு அப்பீல் விஷயமாய் வாதி சர்க்கார் தரப்புக்கு ஏற்பட்ட செலவில் சமபாதியைக் கொடுக்கவேண்டுமென்றும், இன்னும் இரண்டுகேசுகளில்வாதிகள் தாங்கள் கொடுத்திருக்கிற கிரயத்தொகைக்குத் தக்கபடி அபேக்ஷித்திருப்பதால் அப்படிப்பட்ட அப்பீல்களில் அவரவர் செலவை அவரே வகித்துக்கொள்ள வேண்டியதென்றும், முற்றிலும் நியாயமில்லாமல் விலையை உயர்த்திக்கேட்ட வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாகவேண்டியதென்றும், உத்தரவளிக்கப்பட்டது. வாதிகளுக்கு டிக்கிரீத்தொகையை மூனிறுமாத வாய்தாவுக்குள் கவர்ன்மெண்டார் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

XXVII M L J 106.

—:0:—



## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

கல்கத்தா (11 மே 1914)

பிஜராஜ நோபானி Vs ஸ்ரீமதிபுர சுந்தரதாஸீ.

ஒரு பெருத்த விலைமதிப்புள்ள வீடு மனையானது ப்ரேம சந்த பைஸக் என்றவருக்குச் சொந்தமாயிருந்து ஷை யார் அந்த சொத்தை 1884 அக்டோபரில் எழுதிவைத்த உயில்சாஸனத்தால் தன்னுடைய குமாரத்தியாகிய காத்தியானிதாஸீ என்றவளுக்கும் ஷையாளுடைய சந்ததியாருக்கும் ஸர்வஸ்வதந்தரமாக ஆண்டு அனுபவிக்கும்படி கொடுத்து விட்டு, 1886-ல் காலஞ்சென்று விட்டார். உயிலுக்கு காத்யானி தாஸியினுடைய கணவனுகிய ஷம்பு நாத் பைஸக் என்றவரையும் ஷை யாரின், குமாரர்களில் இருவராகிய ரத்னலால் பைஸக், ஹேமேந்தர நாத் பைஸக் ஆக மூவரும் எக்ஸிகியூடர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். தவிர ஷை தேதியில் கண்ட சொத்தின் வருமானத்திலிருந்து மூலபுருஷனுடையவிதந்து வாய்ப்போன இரண்டு மருமகளுக்கும் மாதம் ரூ 20 வீதமாக ஜீவனும்சம் கொடுத்துவர வேண்டுமென்றும் அந்த ஜீவனும்ச பாத்தியதைக்காக உயிலில் கண்ட சொத்தின்பேரில் ஒரு ஹக்கும் ஏற்படுத்தப் பட்டிருந்தது. மூல புருஷன் இறந்துபோன உடன் எக்ஸிகியூடர்கள் உயிலை ருஜுப்படுத்தி ப்ரொபேட் வாங்குவதற்காகக் கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததில் உயில் சிருஷ்டனையென்று மூலபுருஷனுடைய பந்துக்களில் சிலர் ஆக்ஷேபனைசெய்தார்கள். அதன்பேரில் உயிலைப்பற்றி அசல் வியாஜ்ஜியம் ஏற்பட்டு வியவகாரம் நீடிக்காலம் நடந்து கடைசியில் உயில் சிருஷ்டனையல்லவென்று தீர்மானிக்கப்பட்டு ப்ரோபேட்டும் கொடுக்கப்பட்டது. இந்த வியவகாரத்தால் எக்ஸிகியூடர்களுக்கு ஏற்பட்ட செலவுகள் எஸ்டேட்டிலிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது.

முன்பணம் போட்டு வியவகாரத்தை நடத்துவதற்கு எக்ஸிகியூடர்களின் வசம் ஐவேஜில்லாத காரணத்தால் ஷை யார்களுக்கு வியவகாரத்தை நடத்திவந்த அட்டார்ணியாகிய (லாயராகிய) துவாரகநாத் தத்தா என்றவருக்கு தாவா சொத்துக்களை ஈடுகாட்டி அடமான தஸ்தவேஜை எக்ஸிகியூடர்கள் எழுதிக்கொடுத்தார்கள். அதில் காத்யானி தாஸியும் கையொப்பம் செய்து கொடுத்தாள். அடமான தஸ்தவேஜானது ரூ 3950-க்கு எழுதப்பட்டு அதில் ரூ 3400 வியாஜ்ஜியத்தில் ஏற்படும் செலவுக்கு ஆதாரமாகவும் பாக்கி ரூ 550 எக்ஸிகியூடர்களுக்குக் கடனுகத் தேவையென்றும குறித்தெழுதப்பட்டிருந்தது. 10 வருஷகெடுவுக்குள் ஷை அடமானக் கடன் தீரவேண்டியதென்றும் தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருந்தது. காத்யானி தாஸியும் அவள் புருஷனும் எக்ஸிகியூடர்களாக நியமிக்கப்பட்டிருந்த இரண்டு புத்திரர்களில் ரத்னலால் பைஸக் என்ற ஒருவரும் காலஞ்சென்று விட்டார்கள். காத்யானி அம்மாளுடைய 4- புத்திரர்களும் விவாகமாகாத இரண்டு புத்திரிகளும்காத்யானி அம்மாளுக்குப்பின் வாரிஸ்களாயிருக்கின்றார்கள். அடமானம்எழுதிவைத்த எக்ஸிகியூடர்கள் மூவரில் ஜீவனோடிருக்கிற ஒரே எக்ஸிகியூடராகிய ஹேமேந்திரநாத்பைஸக் பேரில் துவாரக நாத என்ற லாயருடைய வாரிஸ்கள் 1900-த்தில் அடமான சொத்தை ஏலம்போட்டு தொகையை வசூலித்துக் கொடுக்கும்படி தாவா செய்தார்கள். தவிர மூல புருஷனுடைய இரண்டுமருமக்கள்மார்களும்உயில்படிக்கு சேரவேண்டிய ஜீவனும்ச பாக்கிக்காக ஷை எக்ஸிகியூடர் பேரில் தாவாசெய்து விட்டார்கள். இந்த மொல்லைகளைத்தீர்க்கும் பொருட்டு தாவா சொத்தானது 1900 டிசம்பரில் பிஜராஜ் நோபானி என்ற பிரதிவாதிக்கும் காலஞ்சென்ற தௌலத்ராம் என்றவருக்கும் விக்கிரயம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த தஸ்தவேஜில காணப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்தைப்பற்றி இந்தக்கேசில் முக்கியமாய் வாதிக்கப்பட்டது. ஷை கிரய தஸ்தவேஜானது காத்யானி தாஸியின் மூன்று குமாரர்களாலும் ஜீவனும்ச பாத்தியதையுடைய இரண்டு மறுமக்களில் சுந்தரி தாஸி என்ற ஒருவளாலும் எழுதிக்கொடுக்கப்பட்டது. காத்யானி தாஸியின் விவாகமாகாத புத்திரிகளில் ஒருவள் வாதியாகவந்து தன்னுடைய தாயாருக்கு தாவா சொத்தானது ஸ்ரீதனமாகக் கொடுக்கபட்டதென்றும் ஆகையால் பங்காளத்தில் வழங்கிவரும் ஹிந்துலா முறைப்படிக்கு தாயாருடைய சொத்து பெண்களுக்குச் சேரவேண்டியதாகுமென்றும் அப்படியிருக்க அந்தசொத்தைத் தன்னுடைய சகோதரர்கள் விக்கிரயம் செய்ய பாத்தியமில்லை

யென்றும் அந்த விக்கிறயம் தன்னுடைய பாத்தியதையைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகவே அந்தசொத்தின் சமபாதிக்குத்தான் பாத்தியமுடையவளென்றும் மறுபாதிக்குத் தன் சகோதரி பாத்தியமுடையவளென்றும் சொல்லி ஷை பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு கிறயம் பெற்ற பிஜராஜ நோபானி என்றவர் பேரிலும் காலஞ்சென்ற தௌலத் ராம் என்றவருடைய எக்ஸிகியூடர்கள் பேரிலும் கல்கத்தா ஹைகோர்ட் அசல் தரப்பில் பிராது கொடுத்து மத்தியகால வரும்படியை நிர்ணயிக்கும்படியும் பிராதில் கோரிக்கொண்டாள். அசல் கோர்ட்டார் தாவா கிறயத்தை உறுதிப்படுத்தி காத்யானி தாஸியின் குமாரனாகிய ஹேமேந்திரநாத்பைஸக் ஒரே எக்ஸிகியூடராயிருந்து அவசியமான காரணத்திற்கு தாவா சொத்தை விக்கிறயம் செய்ய அதிகாரமுடையவரென்றும், கிறய தஸ்தவேஜில் எக்ஸிகியூடர் அந்தஸ்தில் விக்கிறயம் செய்ததாகக் குறிக்கப்படாதபோதிலும் ஷை யாருக்குரிய சகலவிதமான பாத்தியதையும் கிறயப்படுத்திவிட்டதாகக் கண்டிருப்பதால் எக்ஸிகியூடராக ஏற்பட்டிருக்கிற பாத்தியதையும் அதிலடங்கியிருப்பதாக யூகிக்கத்தகுமென்றும் சொல்லி கிறயத்தை உறுதிப்படுத்தி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில் அந்தத் தீர்மானம் ரத்தாகி வாதிக்கனுகூலமாய் டிக்கிரி யளிக்கப்பட்டது. அதன்பேரில் கிறயம் பெற்ற பிரதிவாதிகள் பிரிவி கௌன்ஸிலில் அப்பீல்செய்ததில் கல்கத்தா ஹைகோர்ட் அசல் தரப்பின் அபிப்பிராயம் சரியானதென்று ஏற்பட்டு வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. பிரிவிகௌன்ஸில் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய காரணங்களாவன.— வாதி ஆக்ஷேபிக்கிற கிறய தஸ்தவேஜில் சொத்து பூர்வீகத்தில் ப்ரேம்சந்தபைஸக் என்றவருடையதென்றும் ஷை யாருடைய உயில் படிக்கு அவனுடைய குமாரத்தியாகிய காத்யானி தாஸிக்கும் அவளுடைய வாரிஸ்களுக்கும் சேரவேண்டியதென்றும் இரண்டு மருமக்களுக்கு அதில் ஜீவனாம்ச ஹக்கு பாத்தியதை ஏற்பட்டிருப்பதாயும் மேற்கூறிய மூன்று எக்ஸிகியூடர்கள் நியமிக்கப்பட்ட விவரமும் உயில் புரொபேட்டானதகவலும் காத்யானிதாஸியும் அவளுடைய கணவனும் நான்கு புத்திரர்களையும் இரண்டு விவாகமாகாத புத்திரிகளையும் விட்டுக் காலஞ்சென்றதாகவும் அதற்குப்பின் ஜீவதசையிலிருக்கிற ஒரே எக்ஸிகியூடராகிய ஹேமேந்திர நாத்பைஸக் என்றவர் தாவா சொத்தை விக்கிறயம் செய்வதற்காகக் கோர்ட்டாரிடம் அனுமதி விண்ணப்பம் கொடுத்ததாகவும் விக்கிறயம் செய்வதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறதாவென்று விஜாரிக்கும் பொருட்டு ஹைகோர்ட் ரெஜிஸ்டிரார் நியமிக்கப்பட்டிருந்ததாகவும் மூலபுருஷன் உயிலில் குறித்துக்காட்டிய சகலவிதமான கடன்களையும் பாக்கிகளையும் எக்ஸிகியூடர் செலுத்திவிட்டாரென்றும் ஜீவனாம்ச பாத்தியதையுடைய இரண்டு மருமக்களில் ஒருவர் மொத்தமாய் ரூ 708 பெற்றுக்கொண்டு தன் ஹக்கை விடுதலைசெய்து கொடுத்து விட்டதாயும், மற்றொரு மருமகள் தாவா சொத்தில் தன்னுடைய ஹக்கை ஏற்படுத்தும்பொருட்டு அசல் தாவா செய்ததாகவும் அந்த வழக்கில் ஷை யாளுக்கு சமாதானம் சொல்லி கோர்ட் மூலமாய் ஹக்கைத் தீர்த்துவிடுவதாய் கிறயம் செய்கிற எக்ஸிகியூடரே ஒப்புக்கொண்டதாயும் அப்படிச்செய்து முடிப்பதற்கு ஜாமீனாக கிறயத்தொகை ரூ 30,000-ல் ரூ 10,000 கிறயதார்களாகிய பிரதிவாதிகளிடத்திலேயே நிருத்திவைக்கப்படவேண்டியதென்றும், கிறயம்செய்து கொடுக்கிற நால்வரும் தாவாசொத்தில் தங்களுக்கிருக்கிற சகலவிதமான பாத்தியதையையும் பிரதிவாதிகளுக்கு மாற்றிவிட்டதாகவும் அதற்குறிய சகலவிதமான தஸ்தவேஜுகளையும் பிரதிவாதிகள் வசம் ஒப்புவித்துவிடுவதாயும் தாவா சொத்தைக் கிறயம்செய்து கொடுப்பதற்குறிய பாத்தியதை தங்களுக்குண்டென்றும் ஜீவனாம்சத்திற்காக தாவாசெய்திருக்கிற மருமகளால் யாதொரு நஷ்டம் பிரதிவாதிகளுக்கு நேர்ந்தால் அதைத் தாங்கள் உத்தரவாதம் செய்வதாயும் தவிற சொத்து பாத்தியதை விஷயமாய் எவ்விதமான குறைவு ஏற்பட்டபோதிலும் அதற்குறிய நஷ்டங்களுக்குத் தாங்கள் உத்தரவாதமென்றும் ஆகிய விவரங்களெல்லாம குறித்தெழுதப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளும்விக்கிறயத்தொகையை ஷரத்துப்படிக்குச் செலுத்திவிட்டு தாவா சொத்தை சுவாதீனமடைந்து அனுபவித்து வருகிறார்கள். சட்டப்படிக்கு தாவா சொத்து ஸ்ரீதனமானால் வாதிக்கு அதில் பாத்தியமுண்டென்பது நியாயமே. ஆகையால் தாவா விக்கிறயம் செல்லுமா செல்லாதா என்று கவனிக்கவேண்டியது



முக்கியமான பாயிண்டாகும். கிறயம் செய்யும் காலத்தில் சொத்தானது எக்ஸிகியூடருடைய சுவாதீனத்திலேயே இருந்திருக்கிறது. ஆகவே எக்ஸிகியூடர் ஹோதாவில் அவருக்கு தாவா சொத்தை விக்கிறயம் செய்ய அதிகாரமுண்டு. கிறயம்பெற்றவர்களும் உண்மையாகவே தொகையைச் செலுத்தி வாங்கியிருக்கிறார்கள். ஆனால் தஸ்தவேஜில் எக்ஸிகியூடர் என்ற வசனம் காணப்படாதகாரணத்தால் எழுதிக்கொடுத்தவர்கள் தங்களுடைய சொந்தமான ஹக்கு பாத்தியதையை விக்கிறயம் செய்ய எண்ணி மேற்கண்டவிதமாய் கிறயம் எழுதிக் கொடுத்திருக்கிறார்களென்று வாதிக்கப்படுகிறது. அதாவது ஹேமேந்திர நாத்பைஸக் தாவாசொத்தில் தனக்கும் தன்னுடைய சகோதரர்களுக்கும் பாத்தியதை உண்டென்று நம்பி தன் சகோதரிகளின் பாத்தியதையைப்பற்றி மதியாமல் தங்கள் சொந்த பாத்தியதையை மட்டும் விக்கிறயம் செய்து கொடுத்திருக்கிறார்களென்றும், ஆகவே இவ்வித தப்பான எண்ணத்துடன்செய்த விக்கிறயத்தால் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் யாதொரு பாத்தியதையும் ஏற்படாதென்று வாதிக்கப்படுகிறது. கல்கத்தா ஹைகோர்ட்டார் அப்பீல் தீர்ப்பிலும் அதே காரணத்தைச் சொல்லி வாதிக்கு அனுகூலமாய் கிறயத்தை ரத்துசெய்யத் தீர்மானிக்கிறார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட் அசல் தரப்பு தீர்மானமே சரியானதாகும். அப்பீல் கோர்ட்டார் அதையே காயம் செய்திருக்கவேண்டும். தஸ்தவேஜில் எக்ஸிகியூடர் நியமனம் முதலிய பற்பல விவரங்கள் ஆதி முதல் குறித்தெழுதப்பட்டிருப்பதால் ஹேமேந்திர நாத் பைஸக் எக்ஸிகியூடர் ஹோதாவில் விக்கிறயம் செய்ததாகவே கிறயம் பெற்றவர்களும் மற்ற சம்பந்தப்பட்ட பார்ட்டிகளும் மதித்தார்களென்று சொல்லத்தகும். (அப்படி நினைக்கப்படாவிடில் மேற்கூறிய விவரங்களெல்லாம் குறிக்கப்படத் தேவையில்லை.) எக்ஸிகியூடர் என்ற வசனம் குறிக்கப்படாத போதிலும் எழுதிக்கொடுத்தவர்களுக்கு நிற்கும் சகல விதமான பாத்தியதையும் விக்கிறயம் செய்யப்பட்டதாகக் குறித்ததில் எக்ஸிகியூடர் நிலைமையில் ஏற்பட்ட பாத்தியதையும் அதிலடங்கியிருப்பதாகவே சொல்லவேண்டும். கல்கத்தா ஹைகோர்ட்டார் அப்பீல் தீர்மானத்தில் கொடுக்கிற அபிப்பிராயம் தஸ்தவேஜின் கருத்துக்கு விரோதமாயிருக்கிறது. தஸ்தவேஜில் சகலவிதமான பாத்தியதையும் விக்கிறயம் செய்யப்பட்டதாகக் கண்டிருக்க தங்கள் சொந்தமான ஹக்கு பாத்தியதை மட்டும் குறிக்கப்பட்டதாகவும் பார்ட்டிகள் எண்ணினதாகவும் நிதானிக்கக் கூடாது.

பிரதிவாதிகளின் நடவடிக்கையைக் கவனித்தாலோ கிறய சொத்தானது இரண்டு ஜீவனாம்ச ஹக்குக் குட்பட்டிருக்கிறது. முந்திய வியவகாரங்களின் செலவுக்காக சொத்தானது அடமானக்கடனில் பந்தமாயிருக்கிறது. இந்தக்கடனைத் தீர்ப்பதற்காகவே விக்கிறயம் நடந்திருக்கிறது. தவிற ஷை அடமானக்கடன் தீரவேண்டுமென்று வற்புறுத்தி அடமான தஸ்தவேஜை ரத்து செய்வித்திருக்கிறார்கள். ஜீவனாம்சக்காரர்களின் மோல்லையும் தீரும்படியான பந்தோபஸ்தும் செய்து முடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமாய் அடமானக்கடனும் ஜீவனாம்ச ஹக்கும் நீங்குவதற்கு ஹேமேந்திர நாத் என்ற எக்ஸிகியூடர் அவசியமாய் கிறயத்தில் பார்ட்டியாக இருக்கவேண்டும். ஏனெனில் அடமானத்தில் கையொப்பமிட்ட மூவரில் இவ்வொரு எக்ஸிகியூடர் தான் ஜீவனோடிருக்கிறார்.

ஜீவனாம்ச ஹக்கையும் நிவர்த்திப்பதற்கு இந்த எக்ஸிகியூடர்தான் பிணைப்பட்டவராகிறார். ஆகவே அவரை விக்கிறயத்தில் கையொப்பம் செய்யச்சொன்னதில் எக்ஸிகியூடர் ஹோதாவல்லாமல் வேறு எந்த நிலைமையைக் குறிக்குமென்று சொல்லலாம்? கிறயம் பெறுகிறவர்களுக்கு சொத்து பின்னால் யாருக்குச் சேரத்தக்கதாகுமென்று கவனிக்கத் தேவையில்லை. காத்யானி தாஸியின் மகனுக்குச் சேரத்தகுமானாலும் சரி, மகளுக்குச் சேரத்தகுமானாலும் சரி கிறயத்தில் சொத்து பாத்தியதை யார் யாருக் குண்டென்று புலப்படுகிறதோ அவர்கள் ஒப்பமிடவேண்டுமென்றும் அந்நியர்கள் ஆக்ஷேபித்தால் அதனால் வரும் நஷ்டங்களுக்கு எழுதிக் கொடுக்கிறவர்கள் உத்தரவாதம் செய்யவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்துகொள்வதுதான் கிறயம் பெறுகிறவர்களுடைய முக்கிய நோக்கமாகும். கிறய தஸ்தவேஜில் இவ்விதமான ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது. கிறயம் முடியும் காலத்தில் கிறயம் பெறுகிற

வர்களின்மனதில் எழுதிக் கொடுக்கிறவர்களுக்கு என்னவிதமானசொந்தபாத்தியதையிருக்கிறதோ அதுமட்டும் தங்களுக்கு கிறயத்தால் கிடைக்குமென்ற எண்ணமானது ஏற்பட்டு தஸ்தவேஜில் கண்ட வசனங்களின் தெளிவான கருத்தைக் கெடுக்கும்படி கோர்ட்டார் இடங் கொடுக்கக்கூடாது. ஆகவே கிறயம் செய்தவர்களுக்கு என்னவிதமான பாத்தியதை உண்டோ அவையெல்லாம் பிரதிவாதிகளுக்குச் சென்றுவிடுமென்று சொல்லவேண்டும். ஆகவே எக்ஸிகியூடர் நிலமையில் தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு விக்கிறயம் செய்யப்பட்டதாக மதிக்கப்படவேண்டும். அவ்வித விக்கிறயம் அவசியமான காரணத்திற்காக ஏற்பட்டதால் அது சட்டப்படி செல்லத்தகும். வாதி அதை ஆக்ஷேபிக்க நியாயமில்லை. வாதியின் பிராது தள்ளுபடியாகவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டு அசல் கோர்ட் தீர்ப்பு காயமாச்சுது. XXVII M L J193.

———:O:———

## பிரிவிகௌன்ஸில் கேஸ்.

கல்கத்தா 26 மே 1914

*பைய்யாஜிதாகூர் Vs ஜருலதாஸ்*

பகல்பூர் ஜில்லா கௌரீபுரம் தாலூகாவில் சிங்கேசுவரபுரம் என்னும் ஸ்தலத்திலுள்ள சிங்கேசுவரஸ்வாமி கோவிலுக்குப்பிரதிபாலதாகூர் என்றவர் ஷிபேயித்தாக (பூஜைசெய்யும் குருக்களாக) உத்தியோகம் செய்து வந்தார். தினந்தோறும் ஸ்வாமிக்கு பக்தர்களால் அர்ப்பணம் செய்துவரப்படும் காணிக்கைமுதலிய வருமானங்களில் பூஜைக்காகச் செலவாகவேண்டிய பாகம்போக மிகுதியான வருமானத்தில் ரூபாய்க்கு 3½ அணா விகிதமானது பூஜை செய்யும் குருக்களைச் சேர்ந்ததாகும். இது மாமூலாய் அனுபவிக்கப்பட்டு வருகிறது. பிரதிபாலதாகூர் என்ற குருக்கள் இறந்தபின் அவருடைய பாரியாளாகிய முஸ்ஸம்மத் கிரிஹிமணியம்மாள் ஷை உத்தியோகத்திற்கு வாரிஸ்பாத்தியதையால் வந்து அதற்குறிய வருமான விகிதத்தை அடைந்து அனுபவித்து வந்தாள். தாவா தேவஸ்தானத்தில் ஷிபேயித் உத்தியோகம் பார்த்துவருகிறவர்கள் பிராமண பண்டாக்களாகவேயிருந்து பூஜை செய்வதற்கும் அல்லது பூஜையை நடத்திவைப்பதற்கும் யோக்கியமுள்ளவர்களாகவே யிருந்தார்கள். ஆகவே இதர ஜாதியார் ஷிபேயித் உத்தியோகத்தை வகித்து நடத்தப்பாத்திரர்களாக மாட்டார்கள். முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாள் காலஞ்சென்றபிறகு ஹிந்து லாப்படிக்கு அடுத்த வாரிஸாகிய பைய்யாஜீதாகூர் என்ற வாதி ஷை உத்தியோகத்தை அடைந்து பூஜையை நடத்திவந்தார். இப்படியிருக்க ஜநலதாஸ் என்ற பெல்டா என்னும் அந்நிய ஜாதியைச்சேர்ந்த பிரதிவாதிக்கு முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாள் எழுதிக்கொடுத்திருந்த ஒரு அடமான தஸ்தவேஜின்பேரில் ஏற்பட்ட பாக்கிக்காக ஷையார் தாவாசெய்து டிக்கிரிபெற்று முஸ்ஸம்மத்கிரி கிமணியம்மாள் ஷிபேயித்உத்தியோகம் பார்த்துவந்த காலத்தில் அனுபவித்த 3½ அணா விகிதமான வருமான பாத்தியதையை ஜப்தி செய்து ஏலத்திற்குக் கொண்டுவந்து டிக்கிரிபெற்ற பிரதிவாதியே 1891 நவம்பர் 20-ல் ஷை வருமான பாத்தியதையை ஏலமெடுத்து 1882 பிப்ரவரி 8-ல் ஏல ஸாடிபிகேட்டும்பெற்று அதுமுதல் ஷை வருமான பாத்தியதையைக் கொண்டாடி அனுபவித்து வந்தார். ஏல ஸர்டிபிகேட்டில் "பகல்பூர் ஜில்லா மாதிபுரம் சப்ரெஜிஸ்டிரார் ஆபீஸின் எல்லைக்குள்ளடங்கிய ஸ்ரீசிங்கேசுவரஸ்வாமி மடத்தில் முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாளுக்குச் சொந்தமான 3½ அணா விகித வருமானம்" ஏலத்தில் விக்கிறயமானதாகக் குறிக்கப்பட்டிருந்தது. நவம்பர் 1892-ல் முஸஸம்மத் கிரிகிமணியம்மாளும் அடுத்த வாரிஸாகிய பைய்யாஜிதாகூர் என்ற வாதியும் மேற்கூறிய ஏலத்தை ரத்துசெய்யும் பொருட்டு அசல் தாவா செய்தார்கள். அந்தப் பிராதை உவித்டிரா செய்துகொண்டு பின்னால் வேறு பிராது கொடுக்க அனுமதியும் பெற்றார்கள். அதுபோலவே 1895-ல் முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாள் மட்டும் தனிமையாக ஜருலதாஸ் என்றவர்பேரில் ஷை ஏலத்தை ரத்துசெய்யும்பொருட்டு தாவா செய்தாள். ஸி. பி. ஸி. 244-வது பிரிவின்படி ஏல நடவடிக்கை நடந்த கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து ஏலத்தை ரத்து செய்யவேண்டியதாயிருக்க டிக்கிரியையும் அதன்பேரில் ஏற்பட்ட ஏல விக்கிறயத்தையும் ரத்து செய்வதற்காக அசல் பிராது செய்யக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டு கிரிகிமணியம்மாளுடையபிராது டிஸ்மிஸ் செய்யப்பட்டது. முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாள் 1900-ல் இறந்துபோகவே 1910 ஜனவரியில் ஷிபேயித்து உத்தியோகம் பார்த்துவந்த பைய்யாஜிதாகூர் என்ற வாதி பகல்பூர் சப்கோர்ட்டில் ஜநலதாஸ் பேரில் ஷையார் வசமிருக்கிற சில தேவஸ்தான நிலங்களை அதற்குறிய மத்தியகால வரும்படியுடன் சுவாதீனமடையும்பொருட்டும் தினப்பிரதிவருமானத்தில் 3½ அணா விகிதத்திற்குத்தான் பாத்தியமுடையவரென்று தீர்மானமடையும்பொருட்டும் அந்த வருமானத்திற்குறிய விகித பாக்கியை அடையும்பொருட்டும் அசல் தாவா செய்தார். ஜநலதாஸ் என்ற பிரதிவாதி மூன்றரை அணா விகிதத்தைப்பற்றிக் கொடுத்த எதிர் ஆன்ஸரில் 1895-ல் முஸ்ஸம்மத்கிரிகிமணியம்மாள் அது விஷயமாய்க்கொண்டுவந்த பிராது தள்ளுபடியானபடியால் அந்தத் தீர்மானம் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் ஆகவே இந்தப் பரிகாரத்திற்கு ரிஜூடிகேடா தோஷம் என்று ஆக்ஷேபித்தார். தாவா ஈரங்கியாகும்பொழுது இந்தப் பிராதுக்குக் காலாவதி தோஷம் என்ற ஆக்ஷேபனையும் வாதிக்கப்பட்டது. சப்கோர்ட்டாரும் அப்பீலில் ஹைகோர்ட்டாரும் பிரதிவாதி அக்கிரமமாய் அடைந்து அனுபவித்து வந்த நிலங்கள் விஷயமாக மத்தியகால வரும்படியுடன் வாதிக்குக்கு டிக்கிரியளித்தார்கள். மூன்றரை அணா விகிதமான பாத்தியதையைப்பற்றி சப்கோர்ட்டார் 1895-ம் வருஷத்தில் ஏற்பட்ட தீர்மானம் இந்தப் பிராதுக்கு ரிஜூடிகேடா தோஷமில்லையென்றும் காலாவதியாயிண்டு விஷயமாக, பிரதிவாதி ஷிபேயித் உத்தியோக பாத்தியதையை ஏலத்தில் கிறயம் பெறவில்லையென்றும் ஆனால் வருமான விகிதத்தை பிரதிவாதி கிறய பாத்தியதையை அனுசரித்து அடைந்து அனுபவிக்கிறபடியால் மூந்தி அனுபவித்தவனை வெளிப்படுத்தி அந்த உத்தியோகத்திற்குறிய வருமானத்தை அபகரித்துக்கொண்டதாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் மேற்கூறிய வருமான விகிதத்தைப் பற்றினமட்டில் வாதியின் பிராது, ஷிபேயித் உத்தியோக பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டும் அதற்குறிய வருமானங்களை அடையும்பொருட்டும், செய்யப்பட்டதாக நிதானித்து ஆகவே இந்தவித தாவாவுக்கு காலாவதி ஆக்ட் 124-வது ஆர்டிகில்படி 12-வருஷ கெடுவுண்டென்றும் அந்தக் காலாவதியை முஸ்ஸம்மத் கிரிகிமணியயம்மாள் இறந்த தேதிமுதல் கணிக்கவேண்டுமென்றும் அதாவது வாதிக்கு ஷை உத்தியோகத்தை அடைவதற்கு வியாஜ்ஜியமூலம் ஷையாள் இறந்தபின் ஏற்படவேண்டிய படியால் இந்த தாவாவுக்கு 12 வருஷ காலாவதியை ஷையாள் இறந்த வருஷமாகிய 1900-முதல் கணிக்கவேண்டுமென்றும் ஆகவே 1910-ல் செய்யப்பட்ட இந்தப் பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்றும் தீர்மானித்து வாதி கோரியபடி வருமான விகிதத்தின் சுவாதீனத்திற்காகவும் தாவா செய்யப்பட்ட முதல் இடையிலுள்ளகாலத்திற்குறிய வருமான விகிதத்துகைக்காகவும் சப்கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரியளித்தார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் மேற்கூறிய வருமான விகிதத்தைப்பற்றினமட்டில் பிராதுக்கு 124-வது ஆர்டிகிலின்படி 12 வருஷ காலாவதியுண்டென்றும் ஆனால் அந்தக் காலாவதியை பிரதிவாதி ஏலமெடுத்து வருமானவிகிதத்தை அனுபவிக்கத்துடங்கின வருஷமாகிய 1892 முதல் கணிக்கவேணுமென்றும் அப்படிப் பார்க்குமிடத்து இந்தப்பிராதில் வருமான விகிதத்தைப்பற்றிய பரிகாரத்திற்குக் காலாவதி தோஷம் வந்துவிட்டதென்றும், தவிர 1895-ம்வருஷத்திய டிக்கிரியினால ஷிபேயித் உத்தியோக பாத்தியத்தை அனுசரித்த வருமான விகிதத்திற்குறிய பாத்தியதையான துவிலகிப்போய்விட்டதென்றும், அந்த டிக்ரீ வாதியின் தாவாவுக்கு ரிஜூடிகேடாவாகுமென்றும், தீர்மானித்து வாதியின் பிராதை ஷை வருமான விகிதத்தைப் பற்றினமட்டில் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்பேரில்காலஞ்சென்றவாதி பைய்யாஜிதாகூர்என்றவரின்வாரிஸ்கள் கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானத்தின்பேரில்விரோதமானமட்டில்பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்ததில்வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்றும் 1895-ம் வருஷத்து டிக்கிரி இந்தப்பிராதுக்கு ரிஜூடிகேடாவாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டு வாதிக்கனுகூலமாய் டிக்கிரியளிக்கப்பட்டது. பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—

1895-ம் வருஷத்தில் முஸ்ஸம்மத் கிரிகிமணியம்மாள் கொண்டுவந்த பிராதை டிஸ்மிஸ் செய்த காரணம் சரியானதென்று சொல்லத்தகாது ஒரு டிக்கிரியையும் அதினிமித்தம் ஏற்பட்ட

ஏலத்தையும் ரத்துசெய்வதற்காக ஸி. பி. ஸி 244-வது பிரிவின் அம்சங்களின்படி நிறைவேற்றுடவடிக்கையில் விண்ணப்பம் கொடுக்கலாமென்று சொல்லத்தகாது. அசல் தாவா செய்ததே சரியான முறையாகும். அந்தத் தீர்மானம் தாவா கேஸுக்கு ரிஜுடிகேடா வாகாதென்று சப்கோர்ட்டார் தீர்மானம் செய்தது சரியே. காலாவதி பாயிண்டைப்பற்றி பிரதிவாதிக்காக அதிக பலமாய் வாதிக்கப்பட்டு 124-வது ஆர்டிகில்படி இந்தப்பிராதுக்கு 12-வருஷ வாய்தா கடந்து விட்டதென்று சொல்லப்படுகிறது. [124-வது ஆர்டிகிலின் விவரமாவது:— ஒரு பாரம்பரையான உத்தியோகத்தை சுவாதீனமடைவதற்கு 12-வருஷகாலாவதி யென்றும் வாதியின் பாத்தியதையை நிராகரித்து பிரதிவாதி ஷை உத்தியோகத்தை சுவாதீனப் படுத்திக்கொண்ட கால முதல் 12-வருஷ காலாவதி கணிக்கப்பட வேண்டுமென்றும், அந்த உத்தியோகத்திற்குறிய வருமானத்தை அடைந்து அனுபவிக்கிற விஷயமானது உத்தியோகத்தின் சுவாதீனமாக மதிக்கப்படவேண்டுமென்றும் வருமானம் யாதொன்றும் இல்லாத உத்தியோகமாயிருந்தால் உத்தியோகத்திற்குறிய வேலைகளை நடத்திவருவதே உத்தியோகத்தின் சுவாதீனமாக மதிக்கப்பட வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதி வருமான விகிதத்தை அடைந்து அனுபவிக்கிற காரணத்தால் அவர் உத்தியோகத்தையே சுவாதீனப்படுத்திக்கொண்டதாக மதிக்கப்பட்டு 124-வது ஆர்டிகிலின் அம்சப்படி வாதியின் பிராதுக்கு சப்கோர்ட்டார் காலாவதி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சப்கோர்ட்டார் 12-வருஷ காலாவதியை முந்திய ஷபேயித் காலஞ்சென்ற முதல் கணிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதுக்கு தோஷமில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஹைகோர்ட்டார் 124-வது ஆர்டிகில் வாதியின் பிராதுக்கு ஏற்குமென்று சொல்லி ஆனால் பிரதிவாதி ஏலமெடுத்து வருமான விகிதத்தைக் கைப்பற்றிக்கொண்டு வந்தகால முதல் 12-வருஷ காலாவதி கணிக்கப்படவேண்டுமென்று சொல்லி வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் ஏற்படுத்தி விட்டார்கள்.] இரண்டு கோர்ட்டாருடைய அபிப்பிராயமும் சரியல்லவென்று சொல்லவேண்டும். வாதி ஷபேயித் உத்தியோகத்தை அடையவேண்டுமென்று இந்தப்பிராது செய்யவில்லை. ஆகவே 124-வது ஆர்டிகில்படிக்கு காலாவதி கணிக்க நியாயமில்லை. ஷை உத்தியோகம் பாரம்பரையானது வாஸ்தவம்தான். ஆனால் அதை பிராமண பண்டாக்களைத் தவிர மற்ற ஜாதியார் வகித்து நடத்திவர யோக்கியமில்லை. பிரதிவாதி தாழ்ந்த ஜாதியான். ஆகையால் ஷபேயித் உத்தியோகத்தை நடத்திவரவும் அல்லது அந்த உத்தியோகத்தை நடத்தும் சாதனங்களைத் தரவும் யோக்கியமானவனல்ல. பிரதிவாதி தபாவாரியாய் ஷை உத்தியோகத்திலிருந்து வருகிற வருமான விகிதத்தை அடைந்து வந்தபோதிலும் முஸ்ஸம்மத் கிரிதமணியம்மாளுடைய உத்தியோக பாத்தியதையாகிலும் அவளுக்குப் பின் வாதியின் உத்தியோகபாத்தியதையாகிலும் எவ்விதத்திலும் விலகிப்போகவில்லை. உத்தியோக நிலைமையில் ஷையார்கள் இருவரும் அந்த வருமான விகிதத்தை அடைய லாயக்குண்டானாலும் பிரதிவாதி அதை அடைந்தகாரணத்தால்வாதியின் உத்தியோகபாத்தியதை நீங்கவில்லையென்று சொல்லவேண்டும். வருமான விகிதத்தை அடையும் பாத்தியதையை முன்னிட்டு உத்தியோக பாத்தியதை ஏற்பட்டதல்ல. உத்தியோகம் பார்க்கிறவனுக்கு வருமானத்தின் சுவாதீனம் உண்டு. வருமான விகிதபாத்தியம் உத்தியோகத்தைச் சார்ந்ததாகச் சொல்லத்தகுமே யொழிய உத்தியோகபாத்தியம் வருமான பாத்தியதையைச் சார்ந்ததாக ஏற்படாது. ஆனால் ஷபேயித்தாயிருப்பவர்கள் தினந்தோறும் வருமானங்களிலிருந்து ஒருபாகத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நித்யகால பூஜைகளை எப்படிச்செய்து முடிக்கக்கூடும்? வாதியின் பாத்தியதைக்கு விரோதமாக பிரதிவாதி வருமான விகிதத்தைக் கைப்பற்றி வந்தால் பிரதிவாதிக்கு அந்த வருமானத்தில் யாதொரு பாத்தியதையும் ஹக்கும் ஏற்பட நியாயமில்லை. பிரதிவாதி மேற்கண்ட விதமாக வருமான விகிதத்தை வாதியின் பாத்தியதையை நிராகரித்துப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தடவையிலும் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் புதிதாக ஏற்பட நியாயமுண்டு. அக்கிரமமாகப் பிரதிவாதி வசூலித்த காரணத்தால் வாதிக்கு வியாஜ்ஜிய மூலம் ஏற்படுகிறது. அப்படி அக்கிரமமாக வருமானத்தை வசூலிக்கும் விஷயமானது பிரதிவாதிக்கு ஷபேயித் உத்தியோக பாத்தியதையை உண்டாக்காது. வருமானம் அடைகிற சமயத்தில் ஷபேயித்தென்ற நிலைமை ஏற்படுகிறதென்றும்சொல்லத்தகாது. ஆகையால் வாதி கோறியபடி மூன்றரை அணா விகிதமான தினசரி வருமானத்தின் பாகத்தை அடைய லாயக்குள்ளவனென்று டிக்கிரீயடையத் தக்கவனாகிறான். ஆகவே இந்தப்பரிகாரத்தைப் பற்றினமட்டில் கீழ்கோர்ட் தீர்மானம் ரத்தாகி வாதிக்கு மூன்றரை அணா விகிதமான தினசரி வருமான பாத்தியதை உண்டென்று டிக்கிரீயளிக்கப் படவேண்டுமென்றும் வாதிக்கு ஹைகோர்ட்டிலும் சப்கோர்ட்டிலும் நேர்ந்த செலவுகள் யாவற்றையும் பிரதிவாதி கொடுக்கவேண்டுமென்றும்தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 100·

———:O:———

## பிரிவிகௌன்ஸில் கேஸ்

**அலகபாத் (18 மே 191-)**

*ஷொஹரத்ஸிங் Vs முஸ்ஸம்மத்ஜாபிரி பீ பீ.*

மகம்மதியமதத்தில் ஷீயாஎன்னும் வகுப்பைச் சேர்ந்தமகம்மதுகாஸிம் ஹுஸேயின் சாகிபவர்களுடையசொத்துக்களை அவருக்குப்பின் அவருடைய பாரியாளிடத்திலிருந்து கிரயத்திற்குவாங்கிசுவாதீனமடைந்து அனுபவிக்கிறபிரதிவாதிகள் மீது ஷை மகம்மது காஸிம் என்றவருக்கு ஆச்சிபீபீயவர்களால் பிறந்த மூன்று குமாரத்திகளில் கடைசியான புத்திரியாகிய முஸ்ம்மத்ஜாபிரிபீபீ என்றவள் கோரக்பூர் சப்கோர்ட்டில் கொடுத்த பிராதில் தன்னுடைய தாயரை மகம்மத்காஸிம் சாகிபவர்கள் நிக்காசெய்துகொண்ட ஒன்றரை வருஷகாலத்திற்குப்பின் தான் ஜனித்ததாகவும் தன்னுடைய மற்றஇரண்டு சகோதிரிகளும் தன் தாயாரை நிக்காசெய்து கொண்டதற்குமுன் பிறந்தவர்களென்றும் ஆகவே தன் தகப்பனுக்குத் தான் ஒரே வாரிஸாகிறுளென்றும் ஆகவே தகப்பனுடைய சொத்தில் 8-ல் 7 பங்குக்குத் தான் பாத்தியமுடையவளென்று சொல்லி அந்தசொத்துபாகத்தை வாதிகள் கிரயம் பெற்றது செல்லத்தகாதென்று தீர்மானிக்கப்பட வேண்டுமென்று கோறிக்கொண்டாள். பிரதிவாதிகளோ வாதியின் தகப்பன் ஆச்சிபீபீயை நிக்காசெய்துகொண்டது வாஸ்தவமல்லவென்றும் ஆகவே வாதி அவருடைய வாரிஸ் பாத்தியமுடைய புத்திரியல்லவென்றும் அப்படிக்கில் வாதி சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க மகளென்று ஏற்பட்டால் வாதியினுடைய இரண்டு சகோதிரிகளும்அதேவிதமான பாத்தியமுடையவர்களாக வேண்டுமென்றும் அப்படியானால் வாதிக்கு மேற்கூறிய சொத்து பாகத்தில் மூன்றில் ஒரு பங்குமட்டும் கிடைக்க நியாயமுண்டென்றும் எதிர் ஆன்ஸரில் சொன்னார்கள். வாதி நிக்காவை ருஜுப்படுத்தும் பொருட்டு நிக்கா நடந்த காலத்தில் மகம்மத்காஸிம் வாதியின் தாயாருக்கு எழுதிவைத்த நன்கொடை பத்திரத்தை (மோஹர்சீட்டை) ஆஜர்படுத்தி நிக்கா செய்யப்பட்ட விஷயம் அதில் காணப்பட்டிருப்பதாக எடுத்துக் காட்டினாள். சப்கோர்ட்டார் ஷை தஸ்தவேஜையும் நிக்காவைப் பற்றி ருஜு அம்சம் கொடுத்த சாட்சிகளின்வாக்குமூலத்தையும் நம்பாமல் பத்திரம் சிருஷ்டியெனத் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாதி அதன் மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் நன்கொடைப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது வாஸ்தவமென்றும் நிக்கா நடந்ததாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது மெய்யென்றும் அதைப்பற்றி சொன்ன சாட்சிகளின் வாக்குமூலங்களும் நம்பத்தகுமென்றும் தீர்மானிக்கப்பட்டு வாதி கோறியபடி டிக்கிரீயளிக்கப்பட்டது. அதன்மேல் பிரதிவாதிகள் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் நிக்கா நடந்தது வாஸ்தவமென்றும் ஆனால் வாதியின் சகோதரிகளுக்கும் சொத்தில் சமபாகமுண்டென்றும் தீர்மானித்து ஆனால் இரண்டு சகோதரிகளுக்குறிய பாத்தியதையானது காலாவதி தோஷத்தால் விலகிப்போனபடியால் அவர்களுடைய பாகம் சொத்தை சுவாதீனமடைந்து அனுபவிக்கிற பிரதிவாதிகளுக்குச் சேரவேண்டியது நியாயமாகுமென்றும் ஆகவே வாதிக்கு தாவா சொத்தில் மூன்றில் ஒரு பாகம் தான்சேரவேண்டியதாகுமென்றும் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டு அதற்குத தக்கபடி ஹைகோர்ட்டார் டிக்கிரியை மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. பிரிவிகௌன்ஸில் தீர்பின் முக்கிய அம்சங்களாவன:— நன்கொடைப் பத்திரத்தில் மகம்மது காஸிம் என்றவர் ஷியா மதப்பிரிவைச் சேர்ந்தவரென்றும் ஆச்சிபீபீ என்றவள் அவருடன் அநேகவருஷகாலமாக வசித்து வந்ததாகவும் இருவருக்கும் ஏற்பட்ட நேசத்தாலும் அந்நியோன்னியத்தாலும் அவளை மகம்மது

காவிம்டெம்பொரெரியாக குறித்தகாலத்திற்கு சம்ஸாரமாக வைத்துக்கொள்வதாய் ஒப்பந்தம் செய்துகொண்டு சிலகாலம் கூடி வசித்ததாகவும் அதாவது மியூடாவென்னும் சம்பந்த ஏற்பாடு செய்துகொண்டதாகவும் இருவருக்கும் சிநேகம் முததிப்போனதால் அவளை சரியானபடி நிக்காசெய்து கொள்ள உத்தேசித்திருந்ததாகவும் ஆனால் சில அசந்தர்ப்பங்களாலும் பந்துக்களுடைய சம்மதக்குறைவினாலும் அவ்விதமாய் நிக்கா செய்து முடிக்கப்படவில்லையென்றும், மகம்மதக்காஸிம் ஒருகோர்ட் வழக்கில் சாட்சி வாக்குமூலம் கொடுக்க நேரிட்டபோது ஆச்சிபீயுடன் மியூடா வென்னும் சம்பந்த ஏற்பாடு செய்துகொண்ட விஷயத்தைப் பற்றி கேள்வி ஏற்பட்டதில் அந்த ஏற்பாடு செய்துகொள்ளப்படவில்லையென்றும் அந்த வாக்குமூலத்தில் மறுக்கப்பட்ட தகவலை ஆச்சிபீ கேள்விப்பட்டு அதிக வருத்தப்பட்டு இருவருக்கும் மனஸ்தாபம் உண்டானதாகவும் இதற்கிடையில் அவளை நிக்காசெய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அத்தப்படி நிக்கா முடிந்ததாகவும் அதை ரூபகாரப்படுத்தும் பொருட்டு பற்பல கனவான்கள் முன்னிலையில்ஷெயாளுக்கு ரூ 50,000 பெருமான முள்ள சொத்தை மொஹராகக் கொடுத்துவிட்டதாயும் எழுதியிருக்கிறது. மியூடா என்னும் ஏற்பாட்டினால் சம்பந்தப்பட்ட பாரியாளுக்குக் கணவன் சொத்தில் எவ்வித பாத்தியதையும் கிடையாது. ஒரு குறித்தகாலத்திற்கு அந்த சம்பந்தம் நிலைத்திருக்க வேண்டுமென்ற ஒரு ஒப்பந்த ஏற்பாடாகும். அக்காலத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கு மட்டும் சொத்தில் வாரிஸ் பாத்தியதை உண்டு. நிக்கா என்பது மதாசாரப்படிக்குள்ள சடங்களுடன் செய்யப்படும் விவாக ஏற்பாடாகும். தாவா தஸ்தவேஜானது மெய்யென்று ஏற்பட்டால் நிக்கா ஏற்பட்டது மட்டுமல்ல. மியூடா என்னும் ஏற்பாடும் அதில் கண்டபடி நடந்திருக்க வேண்டுமென்று நம்பத்தகும். மியூடா முதலில் ஏற்பாடானது எவ்வளவு காலத்திற்கு ஏற்பட்டபோதிலும் பின்னால் இருவருடைய சம்மதத்தின்பேரில் காலமானது நீடிக்கப்படலாம். ஆகவே மியூடாவென்னும் ஏற்பாடு நடந்ததாக ருஜுபாகம் ஏற்பட்டால் கால நிர்ணயத்தால் அது தீர்ந்துபோனதாக ருஜு அம்சம் ஏற்படாத பட்சத்தில் அந்த ஏற்பாடு தொடர்ச்சியாய் நிலை பெற்றிருப்பதாகவே அனுமானிக்க வேண்டும்.

நிக்கா நடந்ததை ருஜுப்படுத்த ஷை தஸ்தவேஜைத் தவிர இதரமான ருஜுபாகமும் ஏற்பட்டிருக்கிறது. சடங்காசாரம் நடந்ததைக் கண்ணால் பார்த்த நம்பத்தக்க சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நிக்காவைப்பற்றி ஏற்பட்ட ருஜு அம்சத்தை ஹைகோர்ட்டார் வாஸ்தவமென்று நம்பியிருக்க அதைமாற்ற நியாயமில்லை. தவிர இவ்விதமான விஷயங்களைப் பற்றி ஹைகோர்ட் ஜட்ஜிமார்களுக்கு அதிக அனுபோக முண்டு. அவர்கள் அடைந்த அபிப்பிராயத்தை மாற்ற நியாயமில்லையென்று சொல்ல வேண்டும்.

ஆனால் ஒரு விஷயத்தில் அலகபாத்ஹைகோர்ட்டார் கவனம்வைக்கவில்லை. தாவா தஸ்தவேஜானது மெய்யென்று ஏற்பட்டால் மியூடா ஏற்பாடும் நடந்திருந்ததாக நம்பவேண்டும். அப்படியானால் வாதியின் இரண்டு சகோதரிகளுக்கும் சொத்தில் பாகம் உண்டு. ஆகையால் வாதிக்கு மூன்றில் ஒரு பாகம்தான் கிடைக்கவேண்டும். வாதியின் இரண்டு சகோதரிகளுக்குரிய பாத்தியதை காலாவதி ஆக்டினால் நஷ்டமாய்ப் போய்விட்டதென்று சொல்லப்படுகிறது. அப்படிக்கு நஷ்டமாய்ப்போன பாகமானது யாருடைய வசத்தில் இருக்கிறதோ அவர்களுக்கே சேரவேண்டும். ஆகையால் பிரதிவாதிகளே இரண்டு சகோதரிகளின் பாகத்தை அடையத்தகும். வாதிக்கு ஹைகோர்ட் டிக்கிரியினால் என்னபாகம் ஏற்பட்டதோ அதில் மூன்றில் ஒருபங்குமட்டும் தான் டிக்கிரியாக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கண்ட விதமாய் உத்தரவளிக்கப்பட்டது. வாதிக்கு இந்த அப்பீலில் பாதி ஜயமும் பிரதிவாதிகளுக்குப் பாதி ஜயமும் ஏற்பட்டதால் செலவு தொகையைப்பற்றி யாதொரு உத்தரவும் கொடுக்கப்படவில்லை. XXVII M L J. 89.

---

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ ஓல்ட்பீல்ட்

கோதாவரி ஜில்லா

S A No 1667 of 1912-29 எப்பிரல் 1914

காமேசுவரம்மா *Vs* வெங்கட்சுப்பராவ்

2-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதியின்பேரில் ஜீவனும்ச பாக்கிக்காக தாவா செய்து டிக்கிரிபெற்றபின் டிக்கிரி தொகை ரூ 637-யும் 3-ம் பிரதிவாதிகோர்ட்டில் கட்டிவிட்டார். 2-ம் பிரதிவாதி கோர்ட்டில் கட்டப்பட்டிருந்த தொகையை ஸி. பி. ஸி. 253-வது பிரிவின்படி ஜாமீன் கொடுத்துவிட்டுப் பெற்றுக்கொண்டாள். மேற்கூறிய ஜீவனும்ச டிக்கிரியானது ஹைகோர்ட்டில் ரத்தாய்ப்போய்விட்டது. ஆகவே 3-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட தொகைரூ 637-யும் ஜாமீன்தாரனாகிய 1-ம் பிரதிவாதி கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. இந்த உத்தரவு பிறந்த பிறகு 1-ம் பிரதிவாதியும் அவனுடைய மகனாகிய வாதியும் கூட்டுக்குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். 3-ம் பிரதிவாதி கோர்ட்டார் உத்தரவின் பிரகாரம் ஜாமீன்தார் செலுத்தவேண்டிய தொகையை வசூலிக்கும்பொருட்டு பாகத்தில் வாதிக்கு ஏற்பட்ட சொத்தை ஜப்திசெய்தார். வாதி தன் விகிதத்திற்கு வந்த குடும்ப சொத்தை ஜப்தி செய்யக்கூடாதென்று ஆக்ஷேபித்து பாத்திய மனுக்கொடுத்தும் அந்த ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளப்படாமல் வாதிபெத்தபூர் டி-மு கோர்ட்டில் ஜப்தியான சொத்தில் பாகப்பிரிவினையால் ஏற்பட்ட தன்னுடைய ஸ்வதந்தர பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவா செய்தார். ஷை சொத்தை ஏலமெடுத்த 4-ம் பிரதிவாதி எதிர் ஆன்ஸரில் பாகப்பிரிவினை வாஸ்தவமாய் ஏற்பட்ட நடவக்கையல்லவென்றும் 3ம் பிரதிவாதியை மோசம் செய்யும்பொருட்டு வாதியும் 1-ம் பிரதிவாதியும் உடந்தையாகச் செய்துகொண்ட பலவந்தமான ஏற்பாடென்றும் ஆகவே அந்த பாகப் பிரிவினையானது நமோதுக்கு வரத்தக்கதல்லவென்றும் எதிர்வாகம் செய்தார். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக 4-ம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கனுகூலமாக டிக்கிரியளித்து வாதிக்கு பாகப்பிரிவினையிலேற்பட்ட சொத்து பாகம் 1-ம் பிரதிவாதியின் பாக்கிக்காக ஜப்தி செய்யத்தகாதென்று தீர்மானித்தார்கள். அதன்பேரில் 4-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் காயமாகி 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:-



1-ம் பிரதிவாதி ஜாமீன் தொகையை 3-ம் பிரதிவாதிக்குச் செலுத்திவிடவேண்டுமென்று கோர்ட்டார் ஸி. பி. ஸி. 253-வது பிரிவின்படி உத்தரவளித்திருக்கிறார்கள். 2-ம் பிரதிவாதி கோர்ட்டில் கட்டப்பட்டிருந்த தொகையை வாங்கும்பொழுது ஜீவனும்ச டிக்கிரியின்பேரில் அப்பீல் நடக்க ஏதுகரமிருந்தபடியால் 253-வதுபிரிவின்படி ஜாமீன்கொடுத்துவிட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளும்படி உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது. 253-வது பிரிவில் அசல் கோர்ட் டிக்கிரியாகு முன் ஜாமீன் கொடுத்தவரிடம் டிக்கிரிக்குப்பின் டிக்கிரியான தொகையை பிரதிவாதியிடம் வசூலிப்பது போலவே வசூலித்துக்கொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 583-வது பிரிவிலோ அப்பீல் கோர்ட் டிக்கிரியினால் நன்மையடைந்த ஒரு பார்ட்டியானவன் அப்பீல் டிக்கிரியினால் ஏற்பட்ட தொகையை அசல் கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து அசல் டிக்கிரி தொகையை வசூலிக்கும் பண்ணமாகவே வசூலித்துக் கொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது ஆகவே 253-வது பிரிவையும் 583-வது பிரிவையும் சேர்த்து அர்த்தப்படுத்தி அப்பீல டிக்கிரி வகைக்காக ஜாமீன் கொடுத்தவனிடத்தில் ஜாமீன் தொகையை வசூலிக்கும்பொருட்டு 253-வது பிரிவின்படி கோர்ட்டார் உத்தரவு செய்யலாமென்று 13 மதராஸ் 1-ம் பக்கத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய தீர்மானம் கொடுத்த ஜட்ஜிமார்களே 15 மதராஸ் 203-ல் விபரீதமாகத் தீர்மானங் கொடுத்திருப்பதாகவும் ஆகவே 13 மதராஸ் 1-ஐ அனுசரிக்காமல் 15 மதராஸ் 203-ஐ அனுசரித்து 253-வது பிரிவின்படி கோர்ட்டார் உத்தரவுசெய்யக் கூடாதென்றும் அப்படிச்செய்த உத்தரவு செல்லத்தகாதென்றும் அதை அனுசரித்த ஜப்தியும் ஏல நடவடிக்கையும் ரத்தாகவேண்டிய தென்றும் வாதிக்காக ஆக்ஷேபிக்கப்பட்டது. 15 மதராஸ் 203-ல் பிரிவி கௌன்ஸில் அப்பீல் பெண்டிங்கிலிருக்கும் பொழுது பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தால் ஏற்படும் பாக்கிக்காக ஜாமீன் கொடுத்தவனிடத்திலிருந்து தொகையை வசூலிப்பதற்கு 253-வது பிரிவை உபயோகப்படுத்த மார்க்கமில்லையென்று சொல்லி 610-வது பிரிவின் அம்சத்தைப் பிரயோகித்து ஜாமீன்தார் பேரில் உத்தரவளித்திருக்கிறார்கள். 610 வது பிரிவில் பிரிவி கௌன்ஸிலார் கொடு

த்த தீர்மானத்தால் நன்மையடைந்த ஒரு பார்ட்டி அந்த நன்மையை நிறைவேற்றிக்கொள்வதற்காக எந்த ஹைகோர்ட்டிலிருந்து அப்பீல்செய்யப்பட்டதோ அந்தக்கோர்ட்டுக்கு விண்ணப்பம்செய்து கொள்ளவேண்டுமென்றும் அந்த ஹைகோர்ட்டார் அசல் விஜாரணை நடந்த கோர்ட்டுக்கு ஷை விண்ணப்பத்தை அனுப்பி அசல்கோர்ட்டிக்கிரீயை நிறைவேற்றும் விதமாக விண்ணப்பத்தைப் பைசல்செய்யும்படி உத்தரவளிக்கலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்கேசில் 253-வது பிரிவை உபயோகப்படுத்துவதற்குபதிலாக 610-வது பிரிவை அனுஷ்டித்ததற்கு 1888-ம் வருஷத்திய கோர்ட்டில் ஷை பிரிவுக்கு ஒரு அனுபந்தம் ஏற்பட்டிருக்கிற விஷயத்தைக் காரணமாகக் கொண்டிருக்கலாம். அந்த அனுபந்தத்தில் அப்பீல் கோர்ட்டார் (பிரிவிகௌன்விலார்) அப்பீல் பிரதிவாதிக்கு செலவுதுகைசேரவேண்டுமென்று டிக்கிரீயளித்தால் அந்தசெலவுதுகையையும ஜாமீன்தாரிடத்திலேயே அப்பீல் வாதியிடம் வசூலிக்கும் வண்ணமாக வசூலித்துக் கொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அனுபந்தத்தின் ஷரத்தால் 253-வது பிரிவின்படி உத்தரவளிக்காமல் 610 வது பிரிவின் உதவியைப் போடப்பட்டதாகச் சொல்லலாம். அனுபந்தமானது 610 வது பிரிவு ஏற்பட்ட 11-வருஷங்களுக்குப்பின் சேர்க்கப்பட்டிருக்கிறது. அனுபந்தமானது முக்கியமான சட்டப்பிரிவின் வியாக்கியானமாக பாவிக்கப்படலாம. அந்த வியாக்கியானம் கண்டிப்பாய் அனுசரிக்கத்தக்க அதாரிடியாகாது. சட்டப்பிரிவு ஏற்பட்ட காலத்திலேயே ஷை அனுபந்தம் ஏற்பட்டபோதிலும் சட்டப்பிரிவின் கருத்தானது ஷை அனுபந்தத்தால் மாறிவிட நியாயமில்லை, ஆகவே அனுபந்தத்தைவிட்டு 15 மதராஸ் 203 ல் 253 வது பிரிவு அனுசரிக்கத்தக்க தல்லவென்றும் 610-வது பிரிவின்படி உத்தரவளிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தைவிட 13 மதராஸ் 1-ம் நியாயத்தை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற 28 மதராஸ் 877 ம மேலான தீர்மானங்களாகும். ஆகையால் 253 வது பிரிவின்படி 1 ம் பிரதிவாதிக்கு ஜாமீன் துகையை 3-ம் பிரதிவாதிக்குக் கட்டிவிட வேண்டுமென்று உத்தரவளித்தது சட்ட விரோதமல்ல வென்று சொல்லவேண்டும்.

4-ம் பிரதிவாதிக்காக 2 வது அப்பீலில் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பாகப்பிரிவினையானது வாஸ்தவமென்றும் அது சட்டப்படி செல்லத்தக்கதென்று ஒப்புக்கொள்ளப் பட்டாலும் 1 ம் பிரதிவாதிக்கு 253-வது பிரிவின்படி அளிக்கப்பட்ட உத்தரவானது பாகப்பிரிவினைக்கு முன் பிறந்த ஒரு டிகிரீக்குச் சமானமென்றும் ஆகவே அந்த டிக்கிரீயை 3-ம் பிரதிவாதி வாதியின் வசமிருக்கிற கூட்டுக்குடும்ப சொத்தின்பேரில் நிறைவேற்ற லாயக்குண்டென்றும் வாதிக்கப்படுகிறது. 253-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவானது வாதியின் தகப்பனாகிய 1-ம் பிரதிவாதியின்பேரில் பிறந்த டிக்கிரிக்குக் சமானமாக மதிக்கப்படலாம். மதராஸ் ஹைகோர்ட்டில் தகப்பன ஏற்றுக்கொள்ளும் ஜாமீனை அவிந்த குமாரன் உததாவாதம் செய்து முடிக்கக் கடமைப்பட்டவனென்று தீர்மானங்கள் சித்தாந்தமாக ஏற்பட்டிருக்கிறது. பாகப்பிரிவினையில் மகனுடைய வசத்தில் வந்துசேரும் கூட்டுக்குடும்பசொத்தைப் பொருத்தமட்டில் மகன் தகப்பனால் செலுத்தப்படவேண்டிய ஜாமீன் துகைக்கு உடன்படவேண்டுமென்றும 24 மதராஸ் 555-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இத்தகைய ஜாமீன் துகை விஷயமாய் பாகப்பிரிவினைக்கு முன் ஏற்படும் டிக்கிரீயை பாகப்பிரிவினையான பிறகு மகன்பேரிலும மகனுக்கு பாகப்பிரிவினையில் வந்துசேரும் கூட்டுக்குடும்ப சொத்தின்பேரிலும் நிறைவேற்றலாமா என்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான பாயிண்டாகும்.

தகப்பன் தான்பட்ட கடனைத் தீர்க்கும் பொருட்டு குடும்ப சொத்து முழுவதையும் விக்கிரயம் செய்துவிட லாயக்குண்டாதலால் தகப்பன்பேரில் ஏற்படும வெண்ணலை டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காகக் குடும்ப சொத்தின்பேரில் தொடர்ந்தால் மகன் அதை ஆக்ஷேபிக்கக்கூடாது. அப்படிக்குத் தகப்பன் தான்பட்ட கடனைத் தீர்ப்பதற்காக சொத்துக்களில் போதுமானமட்டில் விக்கிரயம் செய்யாமல் தானும், தன்னுடைய மகனும் குடும்ப சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்துகொண்டபின் தகப்பன்பேரில் ஏற்பட்ட பாக்கிக்காகப் பிரிவினைக்குப்பின் தாவா செய்து டிக்கிரிபெற்று மகனிடத்திலிருக்கும் சொத்து பாகத்தின்பேரில் தொடரக்கூடாதென்று 22 மதராஸ் 519-ல் தீர்மானிக்கப்படிருக்கிறது. ஆகவே



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 SEP 1914 MADRAS.

பனுடைய கடனுக்காக ஜப்தியாகும் காலத்து குடும்ப சொத்தானது பாகப்பிரிவினையாயிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. (1910) 8 மதராஸ் லா டைம்ஸ் 349, (1908) 18 மதராஸ் லா ஜர்னல் 599-இவைகளில் 22 மதராஸ் 519க்கு ஒற்றுமையான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் பாகப்பிரிவினையாகுமுந்தியே கோர்ட்டார் தகப்பனுக்கு (1-ம் பிரதிவாதிக்கு) உத்தரவளித்தபடியால் டிக்கிரீக்கு ஒப்பான அந்த உத்தரவை மகனிடத்திலுள்ள குடும்ப சொத்தின்பேரில் நிறைவேற்றலாமென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படு முன் வாதியிடமிருக்கிற தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்தல்லாத மகனுடையசொந்தசொத்தாக மாறிவிட்டபடியால் அந்த சொத்தின்பேரில் 4-ம் பிரதிவாதி தொடரக்கூடாதென்று சொல்லவேண்டும். 4-ம பிரதிவாதிக்காக எடுத்துக்காட்டப்பட்ட 11 பம்பாய் 67, 4 I A. 247, 6 I A. 88, 13 கல்கத்தா 21, 28 பம்பாய் 383 இவைகளில் நிறைவேற்றுங்காலத்தில்சொத்தானது கூட்டாகவும் தகப்பன் கடனுக்காகப்பராதீனம் செய்யத்தக்க நிலமையிலும் இருந்தன. ஆகவே அந்தக்கேசுகளின் தீர்மானங்கள் 4-ம் பிரதிவாதிக்கு உதவத்தக்கவைகளல்ல. [பாகப்பிரிவினையானபிறகு தகப்பன் மகனிடம் சென்றபாகத்தை விக்கிரயம் செய்ய முடியாதாகையால் நிறைவேற்றுங்காலத்தில் சொத்து பிரிவினை யாகாமலிருக்கவேண்டும்.] வி. பி. வி. 53-வது பிரிவில் சொல்லியிருக்கப்பட்ட நியாயத்தை எதிரி ஆதாரமாக எடுத்துப்பேசினர். அதாவது காலஞ்சென்ற தகப்பனுடைய கடனைச் செலுத்த வேண்டிய மகனுடைய கடமையைப்பற்றிச்சொல்லும்பொழுது மகனிடத்தில் வாரிஸ் பாத்தியதையால் வந்த சொத்தானது காலஞ்சென்ற தகப்பனுடைய சொத்தென்றே மதிக்கப்படவேண்டுமென்றும்; ஆகவே வாதியினிடத்தில் வந்த குடும்ப சொத்தானது தகப்பனுடைய சொத்தென்று மதிக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக்கேசில் வாதியின் தகப்பன் காலஞ்சென்றபின் வாதியினிடம் குடும்பசொத்து வந்து சேரவில்லை. வாதியினுடைய தகப்பன் ஜீவனோடிருக்கிறார். அவர் இதில் பார்ட்டியாகவுமிருக்கிறார். ஆகவே 53-வது பிரிவைப்பற்றிய வாதம் எதிரிக்குதவக்கூடியதல்ல.

தகப்பன் இறந்துபோனபின மகனிடத்தில் வந்துசேரும் குடும்பசொத்தின் பேரில் தொடரலாமென்றால் தகப்பன் உயிரோடிருக்கும்பொழுது மகனுக்கு வந்துசேரும் குடும்ப சொத்தின் பேரில் ஏன் தொடரக்கூடாதென்று கேட்கப்படுகிறது. சட்டகர்த்தாக்கள் 53-வது பிரிவில் இது விஷயமாய் யாதொரு முறையையும் ஏற்படுத்தவில்லை. ஆகவே வாதியின் வசம் பாகப்பிரிவினையில் வந்து சேர்ந்த குடும்ப சொத்தின் பேரில் பாகப்பிரிவினைக்குப்பின் நிறைவேற்றி ஜப்திசெய்யக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டு வாதிக்கனுகூலமாக 2-வது அப்பீல் [illegible] தள்ளுபடியாச்சுது. XXVII M L J [illegible]2.

———:0:———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் [illegible] ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரி [illegible]

165405

S. A. 2457 of 1912—13 ஆகஸ்ட் 1914.

அடமான சொத்தை மீட்டுக்கொள்ளும் பொருட்டு வாதி செய்ததாவாவில் அடமானம் [illegible] னது பிரதிவாதியினிடமிருந்து உள் அடமானம் பெற்றவனுடைய சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் 12-வருஷங்களுக்கு மேலிருப்பதாயிருஜுவானபோதிலும் அவ்வித அனுபோகமானது வாதியின் தாவாவுக்குக் காலாவதிதோஷம் உண்டாக்காதென்று தீர்மானிக்கப்பட்டது. 26 மதராஸ் லா ஜர்னலில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற புல்பெஞ்சு தீர்மானத்தை அனுசரித்து மேற்கூறியஅபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

———

S. A. 2804 of 1912-13 ஆகஸ்ட் 1914.

பிரதிவாதிக்குச் சொந்தமான ஒரு காட்டில் வாதிகள் கட்டைகளை வெட்டிக்கொள்ளவும் கால்நடைகளை மேய்க்கவும் பாத்தியதையுடையவர்களென்று சொல்லி அவ்விதமாய் வாதிகள் அனுபோகம்செய்து வருவதைப் பிரதிவாதி தடைசெய்யக்கூடாதென்று இஞ்சங்ஷன் கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்று தாவா செய்ததில் கீழ் கோர்ட்டார் இஞ்சங்ஷன் தாவாவில் சுவாதீனத்திற்காகவும் பரிகாரம் தேடவேண்டுமென்



Zm211,N13 N13.1

காரணத்தால் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஹைகோர்ட் அப்பீலில் இந்தப்பிராதானது ஒரு இயற்கை நியாயத்தைப்பற்றிய பாத்தியதையை முன்னிட்டு செய்யப்பட்ட தாவாவென்றும் அவ்விதமான பாத்தியதை விஷயமாய் இஞ்சங்கிஷன் பரிகாரம் ஒன்று மட்டில் தேடிக்கொள்ள நியாயமுண்டென்றும் ஆகவே வாதியின் பிராது சரியானதென்று தீர்மானிக்கப்பட்டு மறு விஜாரணைக்கு உத்தரவளிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

C. M. A. 225 of 1910-12 ஆகஸ்ட் 1914.

ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 90-ன்படி ஒரு நிறைவேற்று நடவடிக்கையில் நடந்த சொத்து ஏலத்தை முக்கியமான ஒழுங்கீனம் அல்லது மோசம் என்ற இரண்டு காரணங்களால் ஷை ஏலம் நடந்ததாகச் சொல்லி அதை ரத்துசெய்யும் பொருட்டு டிக்கிரீ பாக்கிதாரனாகிலும், ஏலசொத்தில் பங்கு விகிதம் அடையப் பாத்திரனாகிய இதர பாக்கிதார்கள் யாராகிலும் அல்லது அந்த சொத்தில் பாத்தியதை உடைய வேறுயாராகிலும் ஏலம்போட்ட கோர்ட்டாரிடம் விண்ணப்பம் கொடுக்கலாம். விண்ணப்பக்காரனுக்கு ஷை ஒழுங்கீனத்தாலாவது, மோசத்தாலாவது நஷ்டம் அல்லது தீங்கு விளைந்திருக்கிறதாவென்று கவனித்து அப்படியானால் மட்டும் ஏலத்தை ரத்து செய்யலாம் சட்ட முறை. இப்படியிருக்க ஒரு டிக்கிரீபாக்கிதார் நிறைவேற்று நடவடிக்கையில் பிரதிவாதியின்சொத்தை ஏலத்திற்குக்கொண்டுவந்து அதை மூன்றாவது மனிதன் ஏலத்தில் கிறயம் பெறுகிறான். அதே பிரதிவாதியினுடைய மற்றொரு டிக்கிரீ பாக்கிதாரன் தாவா ஏலம் மோச நடவடிக்கையென்றும் தனக்கும் ஏலத்தொகையில் பங்கு விகிதம் சேரவேண்டுமென்றும் தாவா ஏலத்தால் தன்னுடைய பாத்தியதைக்குத் தீங்குநேரிட்டதாகவும் சொல்லி ஆர்டர் 21 ரூல் 90-ன்படி ஏலத்தை ரத்துசெய்யும்பொருட்டு விண்ணப்பம் கொடுத்தார். மனுதார் தாவா ஏலம் நடக்குமுன் தன் டிக்கிரீ பாக்கிக்காக சொத்தை ஜப்திசெய்யவுமில்லை. ஆகவே மனுதாருக்கு ஷை ரூல் 90-ன்படி ஏலத்தை ரத்துசெய்யும் பாத்தியதை இல்லையென்றும் அந்த சொத்தில் அவருக்கு வாதொரு ஹக்கும்கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டு விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது.

---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்.

S. A. 2198 of 1912—12 ஆகஸ்ட் 1914.

ஹைகோர்ட்டில் தாகலாகும் அப்பீலை பயிலுக்கு எடுக்கலாமாகூடாதாவென்று அப்பீல்க்ரௌண்டுகளைப்பற்றி சாங்கிகேட்டு உத்தரவளிக்கும் அதிகாரமுடைய அட்மிஷன் ஜட்ஜியவர்களுக்கு அப்பீல்க்ரௌண்டுகள் பலவாகக் குறித்தெழுதப்பட்டிருக்கையில் அவைகளில் சிலவற்றைப்பற்றி மட்டும் சாங்கி பேசலாமென்றும் மற்றவைகளைப்பற்றி ஆர்கியுமெண்டு செய்யக்கூடாதென்றும், தடைசெய்ய அதிகாரமில்லையென்று 15 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 921, 41 கல்கத்தா 406 இவைகளில் ஏற்பட்டிருக்கிற தீர்மானங்களை அனுசரித்து அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

ஒரு ஹிந்துத் தகப்பன் ஒரு தர்மபரிபாலனம் செய்து வருவதற்காக டிரஸ்டியாக நியமிக்கப்பட்டதில் தர்மசொத்தின் சில தொகைகளை மோசப்படுத்தித் தன் சொந்த உபயோகப்படுத்திக்கொண்ட நிமித்தம் அந்தத்தொகையை சரிபடுத்திக்கொடுப்பதற்காக வாங்கிய கடனை மகன் தீர்க்கப்படவேண்டியவனாயிருக்கிறானென்றும் தகப்பனுடைய நடத்தை கிரிமினல் குற்றமானபோதிலும் அதனால் ஏற்பட்ட கடனை மகன் தீர்க்கக் கடவனென்று 19 மதராஸ் லா ஜர்னல் 759-ஐ அனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் டையாட்ஜீ

S. A. 2894 of 1912—11 ஆகஸ்ட் 1914

கூட்டுப்பங்காளிகளில் ஒருவரிடத்தில் சொத்தை கிறயம் பெற்றவன் ஷை சொத்தை ஒத்திபந்தகத்திலிருந்து மீட்டுக்கொண்டு அனுபவித்து வருகையில் மற்ற பாகஸ்தர்களுடைய பாத்தியதைக்கு விரோதமாக ஷை சொத்தில் ஷை கிறயதார் அனுபோக பாத்யதையை அடைய லாயக்காகமாட்டான். ஏனெனில் ஷையாருக்குறிய பாத்தியமூலமானது கிறய தஸ்தவேஜினாலும் ஒத்தியை மீட்டதினாலும் ஏற்பட்டிருக்கிறதே யொழிய கேவலம் சுவாதீன அனுபோகத்தைப்பற்றியது மட்டுமல்ல. 26 மதராஸ் லா ஜர்னல் 140-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற புல்பெஞ்சு தீர்மானத்தைப் பார்க்கவும். கூட்டுப்பங்காளியில் ஒருவனிடத்திலிருந்து கிறயம் பெறுகிறவனுக்குக் கிறயம் செய்துகொடுத்த பங்காளியின் பாத்தியதைக்கு மேலான பாத்தியதை யாதொன்றும் ஏற்பட நியாயமில்லை. சொத்தைக் கூட்டாய் அனுபவிக்கலாமேயொழியதனி அனுபோகத்தைக்கொண்டு மற்ற பாகஸ்தர்களுக்குவிரோதமாய் அதில் சுவாதீன பாத்தியதை அடையவேண்டுமானால் கிறயம் செய்தபாகஸ்தனுக்குத்தெரிந்த விதமாக தான்காலாவதியில் குறிப்பிட்ட காலமட்டும் தனிமையான அனுபோகம் செய்துவந்ததாக ருஜுப்படுத்தவேண்டும்.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

S. A. 1512 & 2229 of 1912-10 ஆகஸ்ட் 1914

ஒரு கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்த ஹிந்து தகப்பன் தன் அவிபக்த புத்திரனுக்கு எழுதிக்கொடுக்கிற விடுதலைப்பத்திரத்திற்குப் பிரதிப்பிரயோஜனம் யாதொன்றும் இல்லாதபோதிலும் அந்த விடுதலை செல்லக்கூடியதாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 319 of 1913—10 ஆகஸ்ட் 1914

ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனாம்சத்தொகையை நிர்ணயம் செய்வதற்கு ஜீவனாம்ச தாவா செய்யுங்காலத்தில் அவள் புருஷனுடைய சொத்து பாகமதிப்பை ஆதாரமாகக்கொள்ள வேண்டுமேயொழிய புருஷன் இறந்த காலத்தில் அவனுடைய விகிதத்திற்குறிய சொத்து பாகத்தின் மதிப்பைக் கவனித்து ஜீவனாம்சத் தொகையை நிதானிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

---

சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஹான்றே

A. S. 280 of 1912—7 ஆகஸ்ட் 1914

அவிபக்த புத்திரன் ஜனித்த 276 தினங்களுக்குமுன் தகப்பனால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு அடமான தஸ்தவேஜின்பேரில் வாதி தாவா செய்து தகப்பன் மகன் ஆகிய இருவர்பேரிலும் டிக்கிரீயடையக் கோரியதில் 2-ம் பிரதிவாதியாகிய மகன் அடமானம் பிறந்த தேதியில் தாயினுடைய கர்பத்தில் உற்பத்தியாகியிருந்ததாக அனுமானிக்கப்பட வேண்டுமென்று எவிடென்ஸ் ஆக்ட் 112-வது பிரிவை ஆதாரமாகக்கொண்டு 2-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரியளிக்க நியாயமில்லையென்று கீழ்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் பத்திரம் பிறந்த காலத்தில்மகன் பிறக்கவில்லையென்றும் கர்ப்பத்திலிருந்ததாகவும் ருஜுப்படுத்தவேண்டிய கடமை 2-ம் பிரதிவாதியாகிய மகனைச் சேர்ந்ததாகுமென்றும் கர்ப்பம் தரித்த காலம் குறிப்பாய்ச் சொல்லக்கூடாத சந்தர்ப்பத்தில் 112-வது பிரிவின் அம்சத்தைப் பிரயோகிக்கக்கூடாதென்றும் ஒருவன் கர்ப்பத்தில் உற்பத்தியானமுதல் 280 தினங்களுக்குள் ஜனித்திருக்கவேண்டுமென்று கட்டாயமாய் அனுமானிக்கநியாயமில்லையென்றும் அதாவது பிறந்ததற்கு முன் 280 தினங்களுக்குள்ளாகவேகர்ப்பத்தில் உற்பத்தியாகியிருக்கவேண்டுமென்று அனுமானிக்கக்கூடாதென்றும், ஆகவேமகன்பிறந்தபின் பத்திரம் ஏற்பட்டதாகருஜுவாகமில்லாதபடியால் 2-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்று கீழ்கோர்ட் அபிப்பிராயத்திற்கனுஸரணையாகத்தீர்மானிக்கப்பட்டது. 112-வது பிரிவின் அம்சமாவது:— ஒரு ஸ்திரீக்கும் ஒரு புமானுக்கும் சரியான விவாகசம்பந்தம் தொடர்ந்துவரும் காலத்திலாவது அல்லது அவ்வித சம்பந்தம் ரத்தான முதல் 280-தினங்களுக்குள் ஷை ஸ்திரீயானவள் அந்நிய புருஷனை விவாகம் செய்துகொள்ளாமலிருக்கும் பட்சத்தில் ஷையாளுடைய உதரத்திலிருந்து ஜனிக்கிற புத்திரன் அப்புமானுடைய நேர்மையான புத்திரனென்று ருபகாரமாய்த் தீர்மானிக்கலாமென்றும் அப்படிக்கில்லையென்று சொல்வதற்கு ஷை புத்திரன் கர்ப்பத்தில் உற்பத்தியாகியிருக்கக்கூடியகாலத்தில் ஷை ஸ்திரீயும் அப்புமானும் ஒருவக்கொருவர் நெருங்கிச் சேர்ந்திருக்க சந்தர்ப்பமே கிடையாதென்று ருஜுவாகியிருக்கவேண்டுமென்றும் 112-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

C. M. A. 350 of 1913-6 ஆகஸ்ட் 1914

சமமான அந்தஸ்தையும் அதிகார வரம்பையும் உடைத்தாயிருக்கிற இரண்டு கோர்ட்டுகளில் ஒருவன் சாட்சி வாக்குமூலம் கொடுத்ததில் ஒரு கோர்ட்டில் சொன்ன ஸ்டேட்மெண்டுக்கு முற்றிலும் விரோதமாக மற்றொரு கோர்ட்டில் ஸ்டேட்மெண்டு கொடுத்தால் ஷையானை ப்ராஸிக்யூஷன் செய்வதற்காக இரண்டு கோர்ட்டாருடைய அனுமதிகளும் அவசியமாகும், அல்லது இரண்டு கோர்ட்டுகளுக்கும் மேலான அந்தஸ்தையும் அதிகாரத்தையுமுடைய வேறொரு கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டும்.

——:o:——

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 132 of 1910-28 ஜுலை 1914.

தர்ம சொத்துக்களைப் பரிபாலனம் பண்ணும் முறைகளைப்பற்றி ஏற்பட்டிருக்கும் (Religious Endowments Act) ஆக்டின் 18-வது பிரிவின்படி யாதொரு நடவடிக்கை நடத்தும் பொருட்டு இருவருக்குச் சேர்த்து அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால அவ்வித ஒட்டனுமதியைத் திருத்திவாங்காமல் இருவரில் ஒருவர்மட்டும் அந்த நடவடிக்கையை நடத்தக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

——o:——

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

S. A. 1476 of 1910-28 ஜுலை 1914

ஒரு தேவஸ்தானத்திற்குச் சொந்தமான டிரஸ்ட் சொத்தை சுவாதீனமடையும்பொருட்டு அத்தேவாலயத்தில் தொழுதுவரும் ஜனங்கள் தனித்தனியாகவும் அல்லது ஒட்டாகவும் தாவா செய்ய பாத்தியமுடையவர்களல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

——:o:——

ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட்

C. R. P. 1000 of 1912-30 ஜுலை 1914

ஒரு மைனருக்காக அடுத்த சிநேகிதனாக யாதொருவன் நடத்திவந்த பிராது மேல்நடத்தப்படாமல் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருந்தால் அடுத்த சிநேகிதனுடைய கவலைத்தாழ்ச்சியாலும்கவனக்குறைவாலும் மேற்கூறிய விதமாய்ப் பிராது டிஸ்மிஸ் செய்யப்பட்டதாக ஏற்பட்டால் அந்த முகாந்தரத்தைச் சொல்லி பிராதைத் திரும்பவும் ஃபைலுக்கெடுத்து விசாரணை செய்யும்படி கோறிக்கொள்ளலாம்.

——:o:——

ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட் & ஜஸ்டிஸ் நேபியர்

C. R. P 599 of 1913-30 ஜுலை 1914

அசல்கோர்ட் தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட அப்பீல் பைசலாகாமல் பெண்டிங்கிலிருக்கும்பொழுது அப்பீல் கோர்ட்டார் ஸி. பி. ஸி. ஆர்டர் 21 ரூல்ஸ் 1, 2-ன்படி பிராதை உவித்டிரா செய்துகொள்ளும்படியாகவும் பின்னால் வேறு தாவா செய்துகொள்ளும்படியாகவும் அனுமதி கொடுக்கக்கூடாது. ஸி. பி. ஸி. ஆர்டர் 21 ரூல் 1, 2-ன் முறைப்படி தாவா அசல் கோர்ட்டில் பெண்டிங்காயிருக்கும்பொழுதுமட்டும் மேற்கண்டவிதமாய்உவித்டிரா அனுமதிகொடுக்கலாம்.

———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் &

ஜஸ்டிஸ் குமாரஸ்வாமி சாஸ்திரிகள்

S. A. 2057 to 2066 of 1912-3 ஆகஸ்ட் 1914

ரெண்ட் ரிகவரி ஆக்ட்படிக்கு நிலச்சுவான்தார் டெனெண்டுகளிடமிருந்து:-- "கங்காணம் குளவெட்டு, அமஞ்சிப்பொர ஸ்வதந்தரம், வாமடை வைக்கல் கட்டு, திருமுட்டி, பச்சைன்னை" என்ற விதமான தீர்வைகளை விதித்து வசூலிக்க நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

———

S. A. 1688 of 1913-3 ஆகஸ்ட் 1914

1908-ம் வருஷத்திய காலாவதி ஆக்ட் 31வது பிரிவின்படி ஸ்பெஷலாக இரண்டுவருஷ காலாவதி கூடிவரும் சந்தர்ப்பத்தில் செய்யப்பட்ட ஒரு அடமானப்பிராதானது 1910 ஆகஸ்ட் 7உயில் தாகல் செய்யப்படவேண்டியது. 7உ ஞாயிற்றுக்கிழமையாய்ப் போனபடியால் 8உயாகிய அடுத்த திக்கட்கிழமையன்று தாகல் செய்யப்படவே 26 மதராஸ் லா ஜர்னல் 28-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி இந்தப் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

———



ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ்நேபியர்

C. R. P. 1074 of 1912-10 ஆகஸ்ட் 1914

ஒரு விதந்துவினால் செய்யப்படும் சில விக்கிறய நடவடிக்கை சட்ட விரோதமென்றும் செல்லத்தகாதென்றும் தீர்மானமடையும் பொருட்டு ஒரு அனந்தர வாரிஸ்தாரன் கொண்டுவரும் டிக்லேரேஷன் தாவாவில் கோர்ட்டாருடைய அதிகார வரம்பை நிர்ணயிக்கும்பொருட்டு பிராதில் காட்டும் மவுண்டு தொகையை, அந்த நிலங்களை சுவாதீனமடைவதற்காக தாவா செய்தால் எவ்விதமாய் மதிப்பிடவேண்டுமோ அதற்கு மேலாகக் குறிக்கக்கூடாது. அதாவது நிலத்தின் காலக்கிறயத்தைக் காட்டக்கூடாது. மதராஸ் ஸிவில் கோர்ட்ஸ் ஆக்ட் 14வது பிரிவின்படியும் கோர்ட் பீஸ் ஆக்ட் 7-வது பிரிவின் 5-வது கிளாஸின்படிக்கும் நிலத்தீர்வையின் 5 மடங்கு தொகையைப் பிராதின் மவுண்டுத்தொகையாகக் காட்டி அதற்குத்தக்க அதிகாரமுடைய கோர்ட்டில் பிராதை தாகல் செய்யவேண்டும்.

———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி.

கடப்பை ஜில்லா.

S. A. 1489 of 1912-17 ஜுலை 1914.

மல்லிரெட்டி Vs பெத்தக்கா.

அசல்கோர்ட் தீர்மானத்தின்பேரில் வாதி ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அப்பீல், வாய்தாகடந்து தாகல் செய்யப்பட்ட தகவல், கோர்ட்டாருக்குத் தெரிந்து அப்பீல்வாதியினுடைய சமாதானத்தைக்கேட்டறிந்த பின் தாமதத்தைப் பற்றி அப்பீல்கோர்ட்டார் பிரதிவாதிகளுக்குநோடீஸ் கொடுக்காமலே தாமதத்தைமன்னித்து அப்பீலை ஏற்றுக்கொண்டார்கள். அப்பீல்முடிவானசாரங்கிக்கு வந்தபொழுது நோடீஸின் பேரில்ஆஜரான பிரதிவாதிகள் அப்பீல் வாய்தா மன்னிப்பைப்பற்றி ஆக்ஷேபித்தார்கள். மன்னிப்பு செய்த ஜட்ஜியவர்கள் வேறு, பைசல் சாரங்கி கேட்டஜட்ஜிவேறாக ஏற்பட்டார்கள். அது மாற்றுதல் எத்பாட்டை அனுசரித்த சம்பவமாகும். ஜில்லா ஜட்ஜியவர்கள் எதிரிகளின் ஆக்ஷேபணையைக் கேட்டு அப்பீல் வாதியின் சமாதானம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவெனத் தீர்மானித்து அப்பீலைக் காலாவதி தோஷத்தால் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே ஜில்லா கோர்ட் தீர்மானம் சரியென்று ஏற்பட்டு 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— 9 மதராஸ் 450, 21 மதராஸ் 228, 34 கல்கத்தா 216, இரண்டு தினங்களுக்கு முன் ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர் ஆகிய இரண்டு நியாயாதிபதிகளும் C. M. A. 71 of 1911-ல் கொடுத்த அபிப்பிராயம், தவிர மதராஸ் ஹைகோர்ட்டார் வாய்தா கடந்து தாகல்செய்யும் அப்பீல்களை எதிரிக்கு நோடீஸன்னியில் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் வழக்கமான சம்பிரதாயம், இவைகளையெல்லாம் அனுசரித்துப் பார்க்குமிடத்து, ஜில்லா கோர்ட்டார் பைசல் சாரங்கிகாலத்தில் தனக்கு முந்தின ஜட்ஜியவர்கள் செய்த எக்ஸ்பார்ட்டியான மன்னிப்பு உத்தரவைப்பற்றி ஆக்ஷேபிக்கிற எதிரிகளைக்கேட்டு தாமதத்தைப்பற்றி வாதிகொடுத்த சமாதானம் போதுமானபடி ஒப்புக்கொள்ளத்தக்கதாவென்று யோஜித்துப்பார்த்து யாதொரு உத்தரவளிக்க அதிகாரவரம்புடையவர்களென்றே சொல்லவேண்டும். இந்த 2-வது அப்பீலில் இந்த ஒரு பாயிண்டுமட்டும் வாதிக்கப்பட்டது. அது அப்பீல் வாதிக்கு விரோதமாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாக வேண்டியதென்று ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானம். ஹானரபில் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்கள் அதே முடிவு சொன்னதில் இந்தக்கேசின் தன்மைக்கு இசைவாக ஏற்பட்டிருக்கிற 5 கல்கத்தா 1-ஐ எடுத்துக்காட்டி, அதில் காலாவதி ஆக்ட் 5-வது பிரிவின்படி வாய்தா கடந்த அப்பீலைமன்னித்து ஏற்றுக்கொண்டகோர்ட்டாரே மன்னிக்க நியாயமில்லையென்பதற்குச் சரியான காரணங்கள் சொல்லப்பட்டால் மன்னிப்பு உத்தரவை ரத்துசெய்து விடலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லி, மேற்கூறிய பற்பல தீர்மானங்களேற்பட்டிருக்க அந்த பாயிண்டைப்பற்றி யாதொரு அபிப்பிராயம் கொடுக்கத்தேவையில்லையென்றும், தவிர S.A. 128, & 210 of 1911-ல் தாங்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் மேற்கூறிய தீர்மானங்களுக்கு ஒத்த அபிப்பிராயங்கொடுத்திருப்பதா

யும், S. A. 1045 of 1907-ல் ஹானரபில் ஜஸ்டிஸ் ஏய்லிங் துரையவர்களும் தாங்களும் ஈரங்கி கேட்டபோது மேற்கூறிய பற்பல தீர்மானங்கள் எடுத்துக்காட்டப்படவில்லையென்றும், இந்த 2-வது அப்பீலில் ஷை S A 1045 of 1907-ல் கொடுத்த தீர்மானம் பிரஸ்தாபிக்கப் படவுமில்லையென்றும், ஆகவே மேற்கூறிய S. A. 1045 of 1907-ல் தீர்மானிக்கப்படவேண்டிய பாயிண்டானது முந்திய தீர்மானங்களை அனுசரிக்கத்தக்கதா அல்லது அந்தக்கேசின் தன்மையைப் பொருத்ததாகுமாவென்று தீர்மானிக்கத் தேவையில்லையென்றும், சொல்லி இந்த 2-வது அப்பீல் தள்ளுபடியாக வேண்டியதென்று உத்தரவளித்தார்கள். XXVII M L J 147.

---

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி

கிருஷ்ணா ஜில்லா.

S. A. 1429 of 1912-21 அக்டோபர் 1913.

தானகார ராமன்னா வகையராக்கள்

VS

கானகார கங்கய்யா வகையராக்கள்.

மூலபுருஷன் இறந்தபின் அவனுடைய பாரியாள் மைனர் குமாரனுடைய பாத்தியதைக்கு விரோதமாக எஸ்டேட் சொத்துக்களில் இரண்டு அயிட்டங்களை III-IV வது ஆதரவுகளால் பிரதிவாதிகளுக்கு செய்த விக்கிரயம் செல்லாதென்று சொல்லி III வது ஆதரவால் கிரயம் பெற்ற 15, 16-வது பிரதிவாதிகள் பேரிலும், IV-வது ஆதரவால் கிரயம் பெற்ற மற்ற பிரதிவாதிகள் பேரிலும் சுவாதீனத்திற்காக அனந்தர வாரிஸ்தார் சப்கோர்ட்டில் பிராதுசெய்தார். சப்கோர்ட் தீர்மானத்தின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலானதில் வாதிகிரயம்பெற்ற பிரதிவாதிகளுக்குக் கிரயத்தொகை ரூ 1300-ல் குடும்ப கடனைத் தீர்ப்பதற்காகச் செல்லான தொகை ரூ 1022 யும் செலுத்திவிட்டு சொத்துக்களைச் சுவாதீனமடையவேண்டுமென்று டிக்கிரீயளிக்கப்பட்டது. அதாவது கிரயத்தொகையில் ரூ 278 மட்டில் அனுவசியமாய் மூலபுருஷனுடைய பாரியாளுக்குச் சென்று அவள் அதை செலவிட்டது அனந்தர வாரிஸ்களைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கூறிய விதமாய் டிக்கிரீயளிக்கப்பட்டது. பிரதிவாதிகள் அதேன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் IV-வது ஆதரவால் ஏற்பட்ட விக்கிரயம் பூராவும் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் ஆகவே அந்த அயிட்டத்தைப்பற்றிய மட்டில் வாதியின் பிராது டிஸ்மிஸ் ஆகவேண்டியதென்றும், III-வது ஆதரவைப்பற்றினமட்டில் கிரயதாரனாகிய 15-16-ம் பிரதிவாதிகள் வாதிக்கு மூன்றுமாதத் தவணைக்குள் வாதி கட்டுப்பட நியாயமில்லாதவிக்கிரயத்தொகை ரூ278-யும், மூலபுருஷனுடைய பாரியாள் இறந்த தேதி முதல் அரை வட்டியுடன் சேர்த்து வாதிக்குச் செலுத்திவிடவேண்டுமென்றும், தவறினால் வாதி அந்த அயிட்டம் சொத்தைத் தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு விக்கிரயம் செய்யலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய காரணங்களாவன:—

IV-வது ஆதரவில் கண்ட சொத்தானது ரூ 700-க்கு விக்கிரமாகியிருக்கிறது. அந்தத் தொகை பூராவும் பழய கடனுக்காகவே செல்லாகியிருக்கிறது. ஆகையால் அனந்தர வாரிஸ்களுக்கு அந்த சொத்தை சுவாதீனமடைய பாத்தியம் கிடையாது. அந்த சொத்தானது ஈனக்கிரயத்திற்கு விற்கப்பட்டதென்றும் ஆகவே அந்த க்கிரயத் தொகையை வாதி செலுத்திவிட்டு சுவாதீனமடைய நியாயமுண்டென்று ஜில்லாகோர்ட் தீர்மானத்திற்கு சாதகமாய்ச்சொல்லப்படுகிறது. ஆனால் ஜில்லா ஜட்ஜியவர்களே கிரயத்தொகை ரூ 700 அநீதியான விலையல்லவென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். III-வது ஆதரவில் கண்ட அயிட்டமானது ரூ 600-க்கு விக்கிரயமாகியிருக்கிறது. அதில் ரூ 322 வாதியைக் கட்டுப்படுத்தும்வகைக்குச் செல்லாகியிருக்கிறது. ரூ 278-க்கு மட்டும் வாதி கட்டுப்பட நியாயமில்லை. ஆனால் கிரய நடவடிக்கை யதார்த்தமானதென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அந்தப்பிரதிவாதிகள் கிரயசொத்தை இழந்துவிடுவது நியாயமல்ல. 14 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 895-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற விதமாய் இந்த விக்கிரய விஷயத்தில் கிரயம் பெற்றவர் கிரயசொத்தை வைத்துக் கொள்ளத்தக்கபடி டிக்கிரீயளிப்பது நியாயமாகும். அனந்தர வாரிஸ்கள் ஷை ரூ 278-யும் கேட்டு வசூலிக்கபாத்தியமுண்டா



வென்ற பாயிண்டைப்பற்றித் தீர்மானிக்க அவசியமில்லை. ஏனெனில் அந்தப் பாயிண்டு இந்த 2-வது அப்பீலில் வாதம் செய்யப்படவுமில்லை. தவிர கிரயதார்களின் வக்கிலவர்கள் ஷை தொகையைக் கொடுத்து நிலத்தை வைத்துக்கொள்வதில் தங்கள் கக்ஷிக்காரர்களுக்கு சம்மதமென்றும் தெரிவிக்கிறார்கள். அந்த பாயிண்டைப்பற்றி யோஜிக்கும்படி பின்னால் அவசியம் ஏற்பட்டால் பார்த்துக்கொள்ளலாம்.

ஆகவே 15-16 பிரதிவாதிகள் மூன்று மாதத்திற்குள் தொகைசெலுத்தாவிட்டால் வாதி III-வது ஆதரவில் கண்ட சொத்தை விக்கிரயம் செய்து அத்தொகையை வசூலிக்கலாமென்றும் மற்றபடிக்கு வாதியின் தாவா தள்ளுபடியாகவேண்டியதென்றும் மேற்கண்டவிதமாய் டிக்கிரீயளிக்கப்பட்டது. XXVII M L J 132

—:O:—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

திருச்சினாப்பள்ளி

S. A. 1270 of 1911-20 பிப்ரவரி 1914

வெங்கடசுப்பய்யர் Vs சுப்பரத்னமய்யர்

சுப்பரத்னமய்யர் என்ற 1-ம் பிரதிவாதியிடமிருந்து வாதி வெங்கடசுப்பய்யர் பெற்றுக்கொண்ட அடமான பாத்தியத்தை வாதி துரைசாமி அய்யங்கார் என்ற மூன்றாவது மனிதனுக்குமேடோவர் செய்துவிடவே 1-ம் பிரதிவாதி 1897 அக்டோபரில் மேடோவர்தாரனாகிய துரைசாமி அய்யங்காருக்கு அடமானத் தொகையில் ஒரு பாகமாகிய ரூ 230 சில்லறையைச் செலுத்தி ரசீதுபெற்றுக்கொண்டார். 1-ம் பிரதிவாதி அதே சொத்தை வேறொருவனுக்கு ஒத்தியாக எழுதி வைத்து ஒத்தித்தொகையில் மேடோவர்தாரனுக்குச் சேரவேண்டிய முதல் அடமானத்தொகையின் அசல் பாக்கி ரூ 1800-யும் அதற்குறிய வட்டி பாக்கியையும் செலுத்திவிடும்படி 1-ம் பிரதிவாதியைக் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஒத்திதார் முன் அடமான பாக்கித்தொகையை அசல் வட்டியுள்பட மேடோவர்தாரனாகிய துரைசாமி அய்யங்காரவர்களுக்கு 1898 மார்ச்சில் செலுத்தி முன் அடமான வில்லங்கத்தைத் தீர்த்துக்கொண்டார். 1-ம் பிரதிவாதிக்கு வாதி 1897 நவம்பரில் நோடீஸ் எழுதியனுப்பி தான் துரைசாமி அய்யங்காருக்கு எழுதிக்கொடுத்த மேடோவர் நடவடிக்கை மோசத்தின்பேரிலும் தூண்டுதலின்பேரிலும் ஏற்பட்டதென்றும் ஆகவே மேடோவர் பத்திரம் செல்லத்தகாதென்றும் துரைசாமி அய்யங்காருக்கு யாதொரு தொகையும் அடமான பாக்கியின் வகையில் செலுத்தக்கூடாதென்றும் எச்சரிக்கை பண்ணியும் அந்த நோடீஸை மதியாமல் 1-ம் பிரதிவாதிமேடோவர்தாரனுக்கு அடமான பாக்கித்தொகையை மேற்கண்டவிதமாய்ச் செலுத்திவிட்டார். வாதி குளித்தலை டி-மு கோர்ட்டில் 1900-த்தில் துரைசாமி அய்யங்கார்பேரில்வழக்கெடுத்து மேடோவர் பத்திரம் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று டிக்கிரீ பெற்றபின், 1909-ல் திருச்சி சப்கோர்ட்டில் 1ம் பிரதிவாதியின்பேரில் முதல் அடமான தஸ்தவேஜினால் ஏற்பட்ட பாக்கியை வசூலிக்கும் பொருட்டு அசல் தாவா செய்தார். சப்கோர்ட்டிலும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டிலும் வாதிக்கு விரோதமாகி ஹைகோர்ட்டுக்கு 2வது அப்பீல் செய்ததில் முதலில் ஈரங்கிகேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஹானரபில். ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும், பின் வரும் பாயிண்டுகளைப்பற்றி தீர்மான அபிப்பிராயம் தெரிவிக்கும்படி ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள்:—

(1) 1-ம் பிரதிவாதிக்கு வாதியால்நோடீஸ் அனுப்பப்பட்டதற்கு முன் துரைசாமி அய்யங்கார் ஒத்திதாரனிடமிருந்து அடமான பாக்கியைப் பெற்றுக்கொள்வதாயும் 1-ம் பிரதிவாதி அந்தத்தொகைக்கு இனி பாத்தியப்படவேண்டியதில்லையென்றும் ஒப்புக்கொண்டு அந்தப்படிக்கு ஒத்திதாரனிடத்திலிருந்தாவது, அல்லது 1ம் பிரதிவாதியினிடமிருந்தாவது யாதொரு தொகையைப்பெற்றுக்கொண்டாரா? (2) ஷை நோடீஸ 1ம் பிரதிவாதிக்கு வந்து சேருமுன் 1ம் பிரதிவாதிக்கும் மேடோவர்தாரனுக்கும் என்னவிதமான ஒப்பந்தம் ஷை அடமானக்கடன் பாக்கி விஷயமாய்ஏற்பட்டிருந்தது? (3) 1900ம் வருஷத்திய அசல் நெ. 235ல் துரைசாமி அய்யங்காருக்கு எழுதிவைத்த மேடோவர் பத்திரம் வாதியைக் கட்டுப்படுத்தாதென்று டிக்கிரீ பிறக்குமுன் துரைசாமி அய்யங்காருக்கு என்ன தொகை செலுத்தப்பட்டிருக்கின்றன?

மேற்கூறிய பாயிண்டுகளைப்பற்றித் தீர்மான அபிப்பிராயம் வந்து சேர்ந்தபின் 2வது அப்பீ

லேப் பைசல் ஈரங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்களும் கொடுத்த தீர்மானச் சுருக்கமாவது:——

வாதி வக்கில், துரைசாமி அய்யங்காருக்கு 1-ம் பிரதிவாதியால் நோடீஸ் தேதிக்குமுன் செலுத்தப்பட்ட துகை ரூ. 230-ம் சில்லரைக்குவாதி செலுவைத்துக்கொள்ளவேண்டியது நியாயமாகுமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். நோடீஸ் 1897 நவம்பரில் கிடைத்திருக்க 1898 மார்ச்சில் மேடோவர் தாரனுக்கு ரூ 1800-ம் வட்டிபாக்கியும் செலுத்தினதால் வாதிக்கு நேரும் நஷ்டத்திற்கு 1-ம் பிரதிவாதி ஜவாப்தாரியாக வேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. நோடீஸில் ரெஜிஸ்டரான தஸ்தவேஜாகிய மேடோவர் பத்திரம் முற்றிலும் பிரயோஜனமில்லாத பயனற்ற ஏற்பாடென்றும் சொல்லியிருக்கிறார். அந்த தஸ்தவேஜானது ரத்தாகத்தக்கதென்று மட்டுமல்ல. அந்த மேடோவர் நடவடிக்கையே முற்றிலும் செல்லாததென்றும் பயனற்றதென்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதில் துரைசாமி அய்யங்கார் பேரில் தாவா செய்து மேடோவர் பத்திரத்தை ரத்து செய்ய உத்தேசித்திருப்பதாக யாதொரு தகவலும் பிரஸ்தாபமும் காணப்படவில்லை. ஷை தஸ்தவேஜானது சட்டப்படி யாதொரு பிரயோஜனத்தையும் தரக்கூடியதல்லவென்றுமட்டும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வாதி துரைசாமி அய்யங்கார் மீது தாவா செய்ததற்கு முந்தியே துரைசாமி அய்யங்கார் 1-ம் பிரதிவாதியின்பேரில் மேடோவர் தஸ்தவேஜைக்கொண்டு அடமானக்கடன் பாக்கியை வசூலிக்கும் பொருட்டு தாவா செய்திருந்தால், 1-ம் பிரதிவாதிக்கு எதிர்வாதம் செய்ய என்ன நியாயமிருக்கிறது? (மேடோவரை அங்கீகரித்து சொற்ப துகையும் செலுத்தியிருக்க மேற்கூறிய விதமான நோடீஸைக்கொண்டு துரைசாமி அய்யங்காரின் பிராதை ஆக்ஷேபிக்கமுடியாது)- 36 பம்பாய்37, 24 மதராஸ் லாஜர்னல் 592 இவைகளில் ஏற்பட்டிருக்கும் தீர்மானங்களைப்பார்க்கவும். ஆகையால் வாதிபிரியப்பட்டு கோர்ட்டுக்குப்போய் மேடோவர் பத்திரத்தை ரத்துசெய்யுமட்டும் 1-ம் பிரதிவாதி துரைசாமி அய்யங்காருக்கு அடமான பாத்தியமுண்டென்று மதிக்கக்கடமைப்பட்டவராகிறார். வாதி தாவா செய்தாலும் செய்யலாம். செய்யாமல் நின்றுவிட்டாலும் அவருடைய சித்தம். அப்படியிருக்க அவருக்குச் சித்தமிருந்து அவருடைய சவுகரியம்போல் கோர்ட்டில் தாவாசெய்துடிக்கிரீபெறுமட்டும் 1-ம் பிரதிவாதி தன்னுடைய அடமானக்கடனைத்தீர்த்துசொத்தைக்கைவசப்படுத்திக்கொள்ளாமல்காத்திருக்கக் கடமைப்பட்டவரல்ல. வாதி மேடோவர் தாரன்பேரில்டிக்கிரீபெற்றால் டிக்கிரீத்தேதிமுதல் மேடோவர் தஸ்தவேஜானது அவ்விருவரைப் பற்றினமட்டில் பிரயோஜனமற்றதாய்ப்போகுமேயொழிய மேடோவர் தஸ்தவேஜானது ரத்தாய்ப்போகுமட்டும் அதை சரியான தஸ்தவேஜென்று மதிக்கக்கடமைப்பட்டவராகி தன்னுடைய சொத்து பாத்தியதையையும் லாபத்தையும் உத்தேசித்து துகைசெலுத்திவரும் 1-ம்பிரதிவாதிக்கு அந்த டிக்கிரியினால் யாதொரு பாதகமும் ஏற்பட நியாயமில்லை. வாதிக்காக 24 மதராஸ் லா ஜானல் 469-ல் பிரசுரமாயிருக்கிற தீர்மானம் எடுத்துக்காட்டப்பட்டது. அதாவது:- ஒருநிலத்தின் பாத்தியதையைப்பற்றி A-B இருவருக்கும் வழக்கேற்பட்டு A. என்பவருக்கு சொத்து பாத்தியம் ஏற்பட்ட டிக்கிரியானது Bஎன்பவன் Cயின்பேரில் அதேசொத்தைப்பற்றிக்கொண்டுவரும் வியவகாரத்தில் B-யைக்கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (அதாவது A என்பவனுடைய பாத்தியதை C பார்ட்டியல்லாத தாவாவில் ஏற்பட்டிருந்தும் B-C யின்பேரில் அதே சொத்து பாத்தியதை விஷயமாய் செய்யும் தாவாவில் C முந்திய டிக்கிரியால் B என்பவனுக்கு பாத்தியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டதாக எடுத்துச்சொல்லி B யின் பிராதை பிரதிகூலப்படுத்தலாமென்று 24 மதராஸ் 469-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கேஸின் தன்மைக்கும் தாவாகேஸில் தீர்மானிக்க வேண்டிய பாயின்டுகளுக்கும் ஒற்றுமையில்லை. கோர்ட்மூலமாய் ரத்தானதாக தீர்மானிக்கப்படுமுன் ஒரு மேடோவர்தாரின் பாத்தியதையை நியாயமானதென்று அங்கீகரித்து அடமானக்கடனைத்தீர்த்திருக்க, அத்துகையை அடையபாத்தியமில்லாதவனுக்குச்செலுத்தினதாகவாதி ஆக்ஷேபிக்கக்கூடுமோ என்று தீர்மானிக்கவேண்டியதுதான் இந்தக்கேஸின் தன்மையாகும். அதாவது வாதி தன்னிடம் இரண்டாவது தடவையாகத் துகை செலுத்தும்படி 1-ம் பிரதிவாதியைக்



கட்டாயப்படுத்தலாமாவென்பதுதான். அவ்விதமாய்க் கட்டாயப்படுத்தக்கூடாதென்றே சொல்லவேண்டும். 1ம்பிரதிவாதி நோடீஸ் கிடைத்தபிறகு (Interpleader Suit) துகையை இருவரில் எவருக்குநியாயமாய்ச் செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கும்படி கோர்ட்டில் பிராதுகொடுத்திருக்கலாம். ஆனால் இந்தக்கேஸின் சந்தர்ப்பத்தில் 1-ம் பிரதிவாதி அவ்வித தாவாசெய்யக்கடமைப்பட்டவனென்று சொல்லத்தகாது. வாதியே தன் வியவகாரத்தில் மேடோவர் பத்திரம் ரத்து செய்யத்தக்கதென்று வாதித்திருக்கிறாரேயொழிய அது செல்லாத பத்திரமென்ற கக்ஷியல்ல. [பத்திரத்தை ரத்து செய்யத்தகுமென்று சொல்லி அந்தப்படிக்கு வழக்கெடுத்து ரத்து செய்வித்திருக்கிறார். செல்லாத பத்திரமென்று சொல்லி அதைப்பற்றி அலட்சியமாயிருந்து தன்னுடைய இதரமான பரிகாரங்களைத்தேட யத்தனிக்கவில்லை.] ஆகவே வாதி தஸ்தவேஜை ரத்துசெய்ய நடவடிக்கையெடுத்து அது ரத்தாகுமட்டும் 1-ம் பிரதிவாதி துரைசாமி அய்யங்காரின் மேடோவர் பாத்தியதையைப்பற்றிச் சந்தேகப்பட்டு மேற்கண்ட விதமான (Interpleader Suit) தாவா செய்ய அவசியமில்லை. 33 மதராஸ் 123ன் 130-வது பக்கத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது "ஒரு மேடோவர் நடவடிக்கையின் உண்மையும் யோக்கியதையும் தகராரிலிருக்கும்பொழுது மேற்கூறிய விதமான (Interpleader Suit) தாவா செய்வதே மிகவும் பத்திரமான முறையாகுமென்றும் அப்படிச்செய்யாமல் இருவரில் ஒருவருக்குத் துகையைச் செலுத்திவிட்டால் அதனால் வரும் கஷ்ட நஷ்டங்களுக்கு துகை செலுத்தும் பாக்கிதாரன் உரிமையாகவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது." இந்த அபிப்பிராயமானது மேடோவர் தஸ்தவேஜ் பிறந்ததை ஆக்ஷேபிக்காமல் அது ரத்தாகத்தக்கதென்று மட்டும் சொல்லிக்கொண்டிருக்கையில் மூன்றாவது மனிதன் அதாவது மேடோவர் தஸ்தவேஜில் சம்பந்தப்படாத ஒரு பார்ட்டி யுக்தியோடும் ஸ்வய லாபத்தை உத்தேசித்தும் நடந்தால் அவனுடைய நடத்தைக்கு பாதகமுண்டாக்க நியாயமில்லை. அன்றியும் 1ம் பிரதிவாதி தனக்கு நோடீஸ் கிடைத்தபின் மேடோவர்தாரனால் தனக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்திற்காக ஜாமீன்கொடுத்தால் வாதி நோடீஸில் அறிவிக்கிறபடி நடந்துகொள்வதாய்த்தெரிவித்ததற்கு வாதி அவ்வித ஜாமீன்தர முடியாதென்று மறுத்துமிருக்கிறார். வாதி மேடோவர் தார்பேரில் மோசம் ஏற்பட கையோடு தாமதிக்காமல் பிராதுகொடுத்து 1-ம் பிரதிவாதிபேரிலும் துரைசாமி அய்யங்கார்பேரிலும் பிராது பைசலாகுமட்டும் இஞ்சங்கிஷன் உத்தரவு வாங்கி துகையை ஒருவர் மற்றவருக்குக் கொடுக்காமல் தடுத்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் தன் சவுகரியம்போல் துரைசாமி அய்யங்கார்பேரில் பிராதுசெய்து டிக்கிரீபெறுமுன் 1ம் பிரதிவாதி துகைசெலுத்தினது பிசகென்று ஆக்ஷேபித்து அவரிடம் திரும்பவும் அடமானத்துகையைக் கேட்கவருவது சரியல்ல. ஆகவே வாதி 1900-ல் தாவாசெய்யுமுன் 1-ம் பிரதிவாதியால் மேடோவர்தாரனுக்குச் செலுத்தின துகைக்கும் வாதி கட்டுப்பட்டவனாகிறானென்று தீர்மானிக்கப்பட்டு வாதியின் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M. L. J. 134

——:o:——

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

தஞ்சாவூர் ஜில்லா

S. A. 2494 & 2495 of 1912-3 எப்பிரல் 1914

கிருஷ்ணராவ் Vs அய்யாஸாமிபடையாச்சி

வாதி கிருஷ்ணராவ் என்கிற எ. ஸ்ரீனிவாசராவ் மைனராயிருக்கையில் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளப்பட்டு ஸ்வீகார தகப்பன், வாதி மைனர் தசையிலிருக்கும்பொழுதே தன் சொத்துக்களைப் பற்றி உயில் சாஸனம் எழுதிவைத்துவிட்டு மைனருக்கு ஜனக தகப்பனையே கார்டியனாக நியமித்துவிட்டுக் காலஞ்சென்றார். வாதியின் ஜனக தகப்பனாகிய கார்டியன் மைனருடைய சொத்துக்களைப் பலவாராய் அடமானம் வைத்துக் கடன்வாங்கிக் கண்டபடி அனாவசியமாய்ச் செலவு செய்துவிட்டதாகச் சொல்லி முக்கியமாய் இந்தப் பிராதில் I-VI ஆதாரவுகளாக தாகலான தஸ்தவேஜுகளால் தன் கார்டியன் எழுதிக்கொடுத்த அடமானங்கள் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று ஷை இரண்டு தஸ்தவேஜுகளையும் ரத்து செய்யும்பொருட்டு வாதி மேஜரானபிறகு கும்பகோணம் டி-மு கோர்ட்டில் அசல் தாவா செய்தார். மேற்கூறிய இரண்டு தஸ்தவேஜுகள் ஒவ்வொன்றும் மொத்த ரூ 1575-க்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடமானங்கள [illegible]

1-வது ஆதாரவு ரூ 1000-க்குமட்டும் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் VI-வது ஆதாரவு ரூ 500-க்குமட்டும் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானித்தார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் இரண்டு தஸ்தவேஜுகள் பூராவும் வாதியைக் கட்டுப்படுத்தத்தக்க அமிடங்கள் அடங்கியதாயிருக்கின்றனவென்று சொல்லி வாதிக்கு முற்றிலும் விரோதம் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அப்பில் சில நியாயங்களைப்பற்றி ரிமாண்டாச்சுது. சப்கோர்ட்டார் மறு ஈரங்கிகேட்டு 1-வது ஆதாரவு ரூ 1286-மட்டும் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் VI-வது ஆதாரவு ரூ 1000மட்டில் வாதியைக் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானம் கொடுத்தார்கள். இந்தத் தீர்மானத்தின்பேரில் ஹைகோர்ட்டுக்கு வாதிமறுபடியும் ஆக்ஷேபனைசெய்ததில்மத்தியகாலவரும்படி விஷயமாயும் வட்டி விஷயமாயும் சப்கோர்ட்டார் செய்த உத்தரவை மாற்றி மற்றப்படிக்கு சப்கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தி 2-வது அப்பீலைசெலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்பட்ட காரணச் சுருக்கமாவது:— சப் கோர்ட்டார் கொடுத்திருக்கிற தீர்மானம் ருஜுபாயின்டேயொழிய சட்டபாயின்டல்ல. அதாவது இரண்டு தஸ்தவேஜுகளும் எம்மட்டில வாதியைக் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுருஜுபாயின்டாகும். அந்தத் தீர்மானம் சட்டவிரோதமென்று ஏற்பட்டாலொழிய ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் அதை மாற்ற நியாயமில்லை. வாதிக்காக மேற்கூறிய தீர்மானம் யாதொருருஜுபாகத்தின் ஆதாரமும் இல்லாமல் ஏற்பட்டதென்றும் ஆகவே அதை ரத்து செய்யவேண்டியது நியாயமென்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது. இரண்டு தஸ்தவேஜுகளிலும் சொல்லப்பட்டிருக்கிற வசனங்களைத் தவிர வேறு யாதொரு ஆதாரமும் இல்லாதபடி சப்கோர்ட்டார் தீர்மானம் கொடுத்திருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. மைனர் கட்டுப்பட்ட கடன் மொல்லைகளைத் தீர்ப்பதற்காக தாவா அடமான தஸ்தவேஜுகள் எழுதிக் கொடுக்கப்பட்டனவென்ற வாசகம் அந்தப்பத்திரங்களில் கண்டிருக்க அதைமட்டும்ஆதாரமாகக்கொண்டு சப்கோர்ட்டார், தாவா தஸ்தவேஜுகள் மைனரைக் கட்டுப்படுத்துமென்றுஅபிப்பிராயப்படுகிறார்களென்றும்அவ்வித வாசகங்கள் மட்டும் தனிமையாக அதன் உண்மையைரூபகாரப்படுத்தப் போதுமான ஆதாரமாகாதென்றும் சொல்லப்படுகிறது. அந்தவசனங்களின்உண்மையைத் துலக்கும்படியான வேறு ருஜு அம்சமும் இருக்கவேண்டுமென்றும் அப்படிப்பட்ட ருஜு அம்சம் யாதொன்றும் கிடையாதென்று வாதிக்கப்படுகிறது. அதற்காதாரமாக 6 அலகபாத் 417-ல் சொல்லப்பட்ட நியாயம் எடுத்துக்காட்டப்பட்டது. ஒரு சொத்தை அடமானம் அல்லது விக்கிரயம் செய்ய அவசியமேற்பட்டிருக்கிற விஷயத்தை ருஜுப்படுத்த ஷை தஸ்தவேஜுகளில் குறித்தெழுதப்பட்ட வசனங்கள் மட்டும் போதாதென்று 5 பங்காள லா ரிபோர்ட்டுகளின் 60ல் பிரிவிகௌன்ஸிலார் தீர்மானித்திருக்கிறார்களென்று 6 அலகபாத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் பின்வரும் வியவகார நியாயங்கள் காணப்படுகின்றன:- "என்ன ஆதாரத்தைக்கொண்டு இந்த தஸ்தவேஜின் நடவடிக்கையை சரியானதென்று ஏற்றுக்கொள்ளுகிறது? புருஷன்பட்ட கடனைத் தீர்ப்பதற்காக தாவா சொத்து விக்கிரயமாச்சுதென்று தஸ்வேஜில் எழுதப்பட்டிருக்கிறது. தவிர ஒரு கந்து வட்டிக்கடனைத் தீர்ப்பதற்காகவும், கோர்ட் வியவகாரமொன்றில் ஜமீன்தாரியை ஏலம் போடாமல் தடுக்கும்பொருட்டு ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடனைத் தீர்க்கும் பொருட்டும்,புருஷனுக்காக சுயாசிரார்த்தம் செய்வேண்டிய செலவுக்காகவும், தாவா சொத்தை விக்கிரயம் செய்யப்பட்டதாகத் தெளிவான காரணங்கள் காணப்பட்டிருக்கிறது. இவ்வித காரணங்களெல்லாம் மெய்யானவைகளாயிருந்தால் அவைகளை வேறு ருஜுபாகங்களால் ரூபிக்கிறதில் கஷ்டம் யாதொன்றுமிருக்காது. நிறைவேற்று நடவடிக்கையின் பயமும் கோர்ட்டில் பிறந்த உடன்படிக்கையும் கந்து வட்டிக்கு ஏற்பட்ட கடன் பாபத்தும் எளிதில்ருஜுவாகத்தக்க விஷயமாகும். அப்படியிருக்க இந்தக்கேஸில் திருப்திகரமான ருஜுபாகம் விடப்படவில்லை. அவ்வித ருஜுக்கொடுக்கும் பாரம் யாரைச் சேர்ந்ததாகும்? கிறயத்தை உறுதிப்படுத்தும் அக்கரையுடைய அப்பீல் பிரதிவாதியைச் சேர்ந்ததாகும்; ஆனால் அவர் அசல் கோர்ட்டில் கிறய் தஸ்தவேஜை ஆஜர்படுத்தினாரேயொழிய அதை ஒத்துச்சொல்



லத்தக்க ருஜு அம்சம் யாதொன்றும் கொடுக்கவில்லை. அப்படியிருக்க ஹைகோர்ட்டார் கிறயதாரனுக்கு விரோதமாய் அசல்கோர்ட்தீர்மானத்தைக் காயப்படுத்தியிருக்கவேண்டும், அல்லது மறு ஆலோசனைக்காக ரிமாண்டு செய்திருக்கவேண்டும்." அசல்தீர்ப்பை மாற்றினது சரியல்லவென்று அபிப்பிராயப்பட்டு கிறயத்தை உறுதிப்படுத்திவிட்டார்கள்.

9 W R 283ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தை கவனிப்போம். புருஷனுடைய சிரார்த்தக் கிரியைகளை நடத்துவதற்காக வாங்கிய கடனைத் தீர்க்கும்பொருட்டு தஸ்தவேஜெழுதிக் கொடுக்கவில்லையென்ற டிக்லேரேஷன் தாவாவில் தீர்மானம்கொடுக்க அவசியமில்லையென்பதற்குக் காரணமாக ஷை தஸ்தவேஜை ஆக்ஷேபித்த வாதி வக்கிலே தஸ்தவேஜில் அவ்வசனம் காணப்படாவிடில் தாவா தஸ்தவேஜானது புருஷனுடைய கடனைத் தீர்ப்பதற்கல்லாமல் குடும்பசொத்துக்களையும் வாரிஸ்களையும் கட்டுப்படுத்த நியாயமில்லாமல் புருஷன் இறந்தபின் அவனுடைய பாரியாள் தன் சொந்தச் செலவுக்காக தஸ்தவேஜை எழுதிக் கொடுத்ததாக டிக்லேரேஷன் டிக்கிரி வாங்க தாவா கொண்டுவந்திருக்கப்பட மாட்டாதென்று ஒப்புக்கொள்ளுகிறார். புருஷனுடைய சிரார்த்தச் செலவுக்காகவென்று தஸ்தவேஜில் எழுதினபடியால் இந்த தாவா கொண்டுவந்ததென்று வாதி வக்கில் சொல்வதால் இந்ததாவாவில் கேட்ட டிக்லேரேஷன் டிக்கிரியளிக்கத் தேவையில்லையென்று அதாவது தஸ்தவேஜில்எழுதின காரணத்திற்காக கடன் வாங்கப்படவில்லையென்ற தீர்மானம் கொடுக்க அவசியமில்லையென்றும்; தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருக்கிறவசனங்கள் மட்டும் அதன் உண்மையை ரூபிக்கப்போதுமான ருஜுபாகமாகாதென்றும் ஷை தீர்மானத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே புருஷன் சொத்தைப்பொருத்து தாவா செய்தாலும் வாரிஸ்கள்பேரில் தாவா செய்தாலும் கடன் கொடுக்கப்பட்ட காரணத்தை ருஜுப்படுத்தவேறு சாட்சியம் அவசியமாகுமென்றும் சட்ட ரீதியாகச் சொல்லவேண்டும்.

5 கல்கத்தா 374, 385-ல் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயமாவது;— தஸ்தவேஜில் சொல்லப்பட்டிருக்கிற வசனங்களினாலேயே அதில் காணப்பட்டிருக்கிற அம்சங்களுக்கு மைனர் அல்லது கூட்டுக்குடும்ப பாகஸ்தன் கட்டுப்படுகிறானென்று அட்வொகேட் ஜெனரல் வாதிக்கிறார். தஸ்தவேஜில்கண்ட வசனங்களால் இருதரத்தாருக்கும் அச்சமயத்தில் அவ்வசனங்களின் கருத்து மனதில்பதிவாயிருந்ததற்கு ஒருவிதமான ருஜுபாக மேற்படுமேயொழிய அதன் உண்மையைரூபிக்க அவ்வசனமே போதுமான ருஜுபாகமென்று சொல்லத்தகாது. அவ்வசனங்கள் காணப்படாதபட்சத்தில் மற்ற விதமாகருஜுப்படுத்தக் கஷ்டமேற்படுமென்பது வாஸ்தவமே.

ஆகவே மேற்கூறிய தீர்மானங்களில் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களை உத்தேசித்து தாவா தஸ்தவேஜுகளில் ஏற்பட்டிருக்கிற வசனங்கள் அதன் உண்மையைரூபிக்கப்போதுமான ஆதாரமல்லவென்றும் அவ்விஷயம் அக்காலத்தில் தஸ்தவேஜின்பார்ட்டிகளுடைய மனதில்அமைக்கப்பட்டிருந்ததென்று மட்டும் தீர்மானிக்கவேண்டும்

மேற்கூறிய தீர்மானத்தால் I-VI ஆதாரவுகள் பிறந்த காலத்தில் தீர்க்கப்படவேண்டிய கடன் மொல்லைகளிருந்தனவென்றும் அவைகளைத் தீர்ப்பதற்கு அடமான தஸ்தவேஜுகள் எழுதிக்கொடுத்துக் கடன் வாங்க அவசியம் ஏற்பட்டதென்றும் ருஜுபாகமிருக்கவேண்டும். தாவா தஸ்தவேஜுகளில் செப்பியிருக்கிற கடன்களைப்பற்றி சப்கோர்ட்டார் தீர்ப்பில் சொல்லப்பட்ட சில அபிப்பிராயங்கள் சரியென்று சொல்லத்தகாது. ஆனால் அவர்களுடைய ஜட்ஜ்மெண்டு முழுவதையும் படித்துப் பார்த்ததில் அதில்கண்ட கடன் பாபத்துக்களைப் பற்றி மைனர் கட்டுப்படும்படியான வாஸ்தவமாய் ஏற்பட்டவைகளென்று முதல்பார்வையில்பிரதிவாதிகள்ருஜுப்படுத்தியிருப்பதாக நம்புவதற்குப் போதுமான சில தகவல்களின் ஆதாரத்தைக்கொண்டு அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் வாதியால் அதிக உறுதியான ருஜுபாகம் யாதொன்றும் இல்லாத காரணத்தால் தாவா கடன்களுக்கு வாதி கட்டுப்பட்டவரல்லவென்று சப்கோர்ட்டார் தீர்மானிக்கத் தயாராயில்லை. அப்படி சப்கோர்ட்டார் நினைத்ததற்கு சந்தர்ப்பங்கள் அநேகமிருக்கின்றன. மைனர் வாதிக்கு ஜனகதகப்பனே கார்டியனாகயிருந்து தாவா தஸ்தவேஜுகளை எழுதிமுடித்திருக்கிறார். அவர் மைனர் வாதியின்பேரில் அதிக பட்சமாயும் அன்போடுமிருந்த

தாக ருஜு அம்சமிருக்கிறது. வாதியே VIவது ஆதரவில் செப்பிய ஒரு ஒத்தி அடமான நடவடிக்கை தன்னைக் கட்டுப்படுத்தக்கூடியதென்று நம்பி அந்த ஒத்திக்கடன் தொகையில் ஒரு பாகத்தைத்தான் மேஜரானபிறகு ரூ 1000 கடனாக வாங்கி செல்லுவைத்துமிருக்கிறார். அவ்விதமாய் வாதி நடந்ததைப்பற்றி வாதி சிற்சில சமாதானம் சொல்லுகிறார். ஆனால் சப்கோர்ட்டார் அந்த சமாதானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. தவிர வாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி வியவகாரம் ஏற்பட்டு அதற்காக ஏற்படும் செலவுகளுக்குஜவேஜில்லாமல் மைனர் வாதியின் கார்டியன் வாங்கியிருக்கிற கடனுக்கு வாதி கட்டுப்படவேண்டியது நியாயமாகும். இந்த வியவகாரத்தில் எவ்விதமான அக்கரையும் சிரத்தையுமில்லாத பற்பல அந்நியர்களிடம் வாங்கப்பட்டிருக்கிற கடன்களைத் தீர்ப்பதற்காக தாவா தஸ்தவேஜிகள் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அந்நியர்களில் வியாஸாச்சாரி என்ற ஒருவர் பிரதிவாதியால் சாட்சியாகக் கேட்கப்பட்டு வாதிக்கனுகூலமாய் சாட்சியம் சொல்வதாய்த் தெரிந்த உடன் அவரை பிரதிவாதியின் விரோதசாட்சியாக பாவித்து வாக்குமூலம் கேட்டிருக்கிறார்கள். தாவா தஸ்தவேஜுகளை எழுதி வாங்குமுன் கடன் கொடுத்த பிரதிவாதிகள் அதில் செப்பியிருக்கும் கடன் விவரங்களைப்பற்றி யாதொரு விஜாரணையும் செய்யவில்லையென்று வியாஸாச்சாரி வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். வியாஸாச்சாரி முதல் பாக்கிதாரனாக இருந்தபடியாலும் தஸ்தவேஜின் வசனங்கள் பார்ட்டிகளுடைய மனதில் பதிந்த விஷயமானதாலும் கடன் கொடுத்தவர்கள் ஆதாரமில்லாத காரணத்திற்காக தொகையைச் செலுத்தியிருக்க மாட்டார்களென்று சப்கோர்ட்டார் யோஜிக்க நியாயமுண்டு.

ஆகவே மேற்கூறிய சந்தர்ப்பங்களைக் கவனித்தால் சப்கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி ருஜுபாரம் வாதியின்பேரில் சுமத்தப்படவேண்டியது நியாயமாகும். அப்படிப்பட்ட ருஜுபாரம் வாதியால் ஏற்படவில்லை. இவ்விதமான சந்தர்ப்பங்களில் பிரதிவாதியின் பேரில் எப்போதும் ருஜுபாரம் அதிக பலமாய் ஏற்படவேண்டிய அவசியமில்லை. 5 கல்கத்தா 368-ன் 879ல் சொல்லியிருக்கிறபடி கிரயம் பெற்ற பிரதிவாதியின்பேரில் ருஜுபாரம் ஏற்படுவதற்குக் காரணமாக கிரயம் ஏற்படும் சந்தர்ப்பமும் கிரயத்தின் அவசரமும் மைனரைவிட கிரயம் பெற்றவனுக்குத்தான் தெரியவரும். மைனர் சிறு குழந்தையாக இருக்கும் சமயத்தில் கிரயங்கள் நடப்பதுமுண்டு. 6 மூர் இந்தியன் அப்பீல் 423லும், 23 W R 424லும் அதே காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. 23 W R 424ல் கிரயம் வாதி மைனராயிருக்கும்பொழுது ஏற்பட்டதால் கிரயத்தின் தன்மை வாதிக்கு யாதொன்றும் தெரிய நியாயமில்லையென்றும் ஆகவே குழந்தைகளின் நன்மையைக் கருதி தாயார் கிரயம் செய்ததாக ருஜுப்படுத்தவேண்டிய கடமை பிரதிவாதிகளைச் சேர்ந்ததென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்பொதுவான முறை எப்போதும் உபயோகிக்கத்தகாது. பிரிவிகௌன்ஸிலார் 6 மூர் இந்தியன் அப்பீல் 428ல் சொல்லியிருக்கிற அபிப்பிராயத்தில்:— "ஒருசிறுபையன் (குழந்தை) அனுகூலமாய் சொத்தைக்கிரயம் அல்லது அடமானம் செய்த விஷயத்தைப்பற்றி தாவா செய்தால் ருஜுபாரம் யாரைப்பொருத்ததாகுமென்ற வினாவுக்குப் பொதுவான மாறத்தகாத உத்தரம் சொல்ல முடியாது. ஒவ்வொரு கேஸின் தன்மையையும்சந்தர்ப்பத்தையும் கவனித்து ருஜுபாரம் யார்பேரில் ஏற்படுமென்று தீர்மானிக்கவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அனுமானிக்கவேண்டிய விஷயத்தையும் எவிடென்ஸ் ஆக்ட் 114 வது பிரிவின் அம்சத்தையும் மேற்கூறிய சந்தர்ப்பங்களையும் கவனித்துப் பார்த்தால் 2-வது அப்பீலில் உட்கார்ந்து ஈரங்கி கேட்கும் ஹைகோர்ட்டாருக்கு சப்கோர்ட்டார் மைனரை தாவா தஸ்தவேஜுகள் கட்டுப்படுத்துமென்று கொண்ட அபிப்பிராயத்தைப் பிசகென்றுசொல்வது மிகவும் துணிகரமான தீர்மானமாகும். (1913) மதராஸ் வாரக்குறிப்புகளின் 58-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் தகப்பன் துர்நடத்தையால் சொத்தை அழித்ததாக ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு வாதியாக வரும் மகனைச் சேர்ந்ததென்று பல தீர்மானங்களிருக்கிறதாகவும் ஆனால் அந்த கேஸில் தகப்பன் மிகவும் கன்றலை தெரியாத



செலவாளியென்று பொதுவாய்ருஜுப்படுத்தப்பட்ட விஷயத்தை எடுத்துச் சொல்லி மேற்கண்ட விதமாய் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். ருஜுபாரம் மாறிப்போனதாய் ஒரு குறித்த கேஸில் தீர்மானிக்கப்படும் விஷயம் ருஜுபாயிண்டேயொழிய சட்ட பாயிண்டல்ல. இந்தக்கேஸில் சப்கோர்ட்டார் வாதியை ருஜுப்படுத்துமபடி பொருப்புக்கட்டத்தக்க சந்தர்ப்பங்கள் போதுமானபடியிருக்கிறபடியால் அப்படிப்பட்ட ருஜு வாதியால் ஏற்படாத காரணத்தால் வாதிக்கு விரோதமாய் மேற்கூறிய சந்தர்ப்பங்களையிட்டு அடைந்த தீர்மானம் சரியானதாகுமென்று சொல்லவேண்டும். மொத்தமாய்த் தீர்மானிக்கவேண்டிய பாயிண்டைப்பற்றி சப்கோர்ட்டார்சொன்னபடி வாதி தாவா தஸ்தவேஜிகளுக்குக் கட்டுப்படவேண்டுமென்று சொல்லத்தகும்.

1-வது ஆதரவில் செப்பியிருக்கிற பற்பல கடன்களில் ரூ 175-க்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு பிராமிஸரி நோட் காலாவதி தோஷமாய்ப் போனதாகவும் அதைச் செலுத்த அவசியமில்லாதபொழுது அதை செப்பியிருக்கும் காரணத்தால் 1-வது ஆதரவின் உண்மையை வாதி ஆக்ஷேபிக்கிறார். 1-வது ஆதரவில் மற்ற அயிடங்களைப்பற்றி எவ்வித ஆக்ஷேபனையும் கிடையாதென்று தீர்மானித்திருக்கும்பொழுது அதில் கண்ட ஒவ்வொரு அயிடத்தின் தகவலையும் மிகவும் ஊக்கத்துடன் கவனித்தறியவேண்டியதவசியமில்லையென்று சொல்லத்தகும். 1-வது ஆதரவு உண்மையான தஸ்தவேஜல்லவென்று தெளிவாய் ருஜுப்படுத்தப்பட்டாலொழிய மற்ற அயிடங்களைக்கொண்டு அதைப்பற்றி சப்கோர்ட்டார் அபிப்பிராயங்கொடுத்தது நியாயமாகும். ஆனால் சப்கோர்ட்டார் வாதியின்பேரில் பூராக்கடன் தொகைக்கும் 100-க்கு 12 விகிதம் வட்டிசெலுத்தவேண்டுமென்று டிக்கிரீயளித்திருக்கிறார்கள். 1-வது ஆதரவின் தொகை ரூ 1286-க்கும் VI-வது ஆதரவின் தொகை ரூ 1000க்கும் வாதி கட்டுப்பட்டிருக்க அத்தொகைபூராவுக்கும் 100க்கு 12 விகிதம் வட்டி செலுத்தவேண்டுமென்றும் சொத்துக்களை சுவாதீனமடைந்து அனுபவித்துவந்த பிரதிவாதிகள் வாதிக்கு மத்தியகால வரும்படியைக் கொடுக்கவேண்டுமென்றும் டிக்கிரீயில் காணப்பட்டிருக்கிறது. அது நியாயமல்ல. ரூ 1575-க்கு எழுதப்பட்ட தஸ்தவேஜில் ரூ1000 ஒன்றிலும் ரூ 1286 மற்றொன்றிலும் வாதியின் பேரில் கட்டுப்படுத்தினதில் அடமானம் சுவாதீன அடமானமானபடியால் அதாவது சொத்தைப் பிரதிவாதிகள் அனுபவித்துவந்தமையால் வட்டிக்கும் வருமானத்திற்கும் ஒருவிதசம்பந்தம் ஏற்படுத்தி வருமானம் வட்டிக்குச் சமானம் என்ற ஏற்பாடு தஸ்தவேஜினால் உண்டானதில் எம்மட்டில் தஸ்தவேஜின் தொகை குறைக்கப்பட்டதோ அதற்குத் தக்கபடி வருமானத்தின் விகிதம் வாதிக்கு டிக்கிரீயாகவேண்டியது நியாயமாகும். [விவரமாய்ச் சொன்னால் ஒரு நிலத்தை ரூ 1000-த்திற்கு ஒத்தியாக வைத்து அனுபோகத்தில் வரும் மாசூல் கிரயம் வட்டிக்குச் சமானமாக தஸ்தாவேஜில் குறிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஒத்தித் தொகையைப்பற்றி வழக்கேற்பட்டு வாதி ரூ 750 தான் ஒத்தித்தொகையில் கட்டுப்படலாமென்று தீர்மானித்து அத்தொகையைச் செலுத்தி நிலத்தை அடையும்படி வாதிக்கு டிக்கிரீயளித்தால் மத்தியகால வரும்படியில் $\frac{1}{4}$ பக்கு வாதிக்குப் பிரதிவாதி கொடுக்கவேண்டியது நியாயமாகும். வருமானத்தின் $\frac{3}{4}$ பாகம் தீர்ப்பான 750 க்குறிய வட்டிக்காக செல்லாகி $\frac{1}{4}$ பங்கு வருமான விகிதம் வாதிக்குச் செல்லாகவேண்டும்.] பொதுவாய் வட்டி விகிதம் மத்தியகால வருமானம் இவைகளை நிர்ணயிப்பது கோர்ட்டாருடைய யுக்தமாகும், ஆனால் இந்தக்கேஸில் சொத்தானது அடமானதாரின் சுவாதீனத்தில் ஒப்பிவிக்கப்பட்டிருந்தபடியால் வட்டிக்கும் மாசூலுக்கும் சம்பந்தம் ஏற்பட்டிருப்பதாயும் ஆகவே சப்கோர்ட்டாருடைய டிக்கிரியை மாற்றவேண்டியது நியாயமென்று பிரதிவாதிகளின் வக்கீல் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே மத்தியகால வரும்படியில் வாதிக்கு 1-வது ஆதரவில் கண்ட சொத்துக்களைப் பற்றினமட்டில் 1286/1575 பாகமும் VI-வது ஆதரவில் கண்ட சொத்துக்களைப் பற்றினமட்டில் 1000/1575 பாகமும் மட்டுப்பட்ட ஒத்தித்தொகையில் பிரதிவாதிகள் வஜாசெய்யவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. 1914 M W N 490.

ஜஸ்டிஸ்பென்ஸன் & ஜஸ்டிஸ் சுந்தரய்யர்

குண்டூர் ஜில்லா

A S 201 of 1909—17 ஏப்பிரல் 1913

தங்கிராள சிரஞ்சீவி Vs ராஜாமணிக்யராவ்

ஒரு தேவாலயத்தில் வேதபாராயணம் செய்யும் பொருட்டு ஜமீன்தாரவர்கள் சில வைதிகாளுக்கு கிராண்டும் செய்துகொடுத்தார்கள். அந்த இனும் கிராண்டானது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாராலும் உறுதிப்படுத்தப்பட்டது. அப்படியிருக்க வேதபாராயணம் சரியானபடி நடத்திவரப்படாத காரணத்தாலும் இனும் நிலங்களை கிராண்டுபெற்று அனுபவிக்கிறவர்களில் சிலர் வாரிஸ் பாத்தியதையை அனுசரித்துவந்த ஸ்திரீகளாய்ப்போனபடியாலும் அவர்கள் வேதபாராயணம்செய்யலாயக்கில்லாத காரணத்தாலும் தேவஸ்தானத்து தர்மகர்த்தாக்கள் மேற்படி இனும்நிலங்களை சுவாதீனப் படுத்திக்கொள்ளப் பிரயத்தனப்பட்டதில் இனும்நிலத்தை அனுபவிக்கிறவைதிகர்களும் அவர்களுடைய வாரிஸ்தார்களும் வாதிகளாக குண்டூர் ஜில்லா கோர்ட்டில் தர்மகர்த்தாக்கள் பேரில் டிக்லேரேஷன் தாவாசெய்து அவர்கள் இனும் நிலங்களை சுவாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியமுடையவர்களல்லவென்று தீர்மானமளிக்கும்படி கோறிக்கொண்டதில் ஜில்லா கோர்ட்டார் வாதிகளின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் ரத்தாகி மறு விஜாரணை செய்து சட்டப்படி பைசலளிக்க வேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் ரிமாண்ட் ஆர்டரின் முக்கிய அம்சங்களாவன:—

ஜில்லா ஜட்ஜியவர்கள் இந்தக்கேஸில் தீர்மானிக்கவேண்டிய பாயிண்டுகளைப் பற்றி சரியானபடி மதிக்கப் பார்க்கவில்லையென்று தோன்றுகிறது. இனும் கிராண்டானது வேதபாராயணம் செய்யும் வைதிகர்களுக்குக் கொடுக்கப்பட்டதனால் தேவஸ்தானத்திற்கு அந்த நிலங்களில் யாதொரு பாத்தியதையும் இருப்பதாகத் தோன்றவில்லை. வேதபாராயணம் செய்யும் நிபந்தனையின்பேரில் கிராண்டு ஜமீன்தாரால் கொடுக்கப்பட்டு அது கவர்ன்மெண்டாரால் உறுதியானபடியால் அந்த நிலங்களை திரும்பியடையும் பாத்தியதை கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாகும். தர்மகர்த்தாக்களாகிலும் தாவா நிலங்களைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள எப்படி பாத்தியம் ஏற்பட்டதென்றும் சொல்லவில்லை. தர்மகர்த்தாக்களுக்கு வேதபாபாராயணம்செய்யும்வைதிகர்களை உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ்செய்யும் அதிகாரமுண்டென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் அனுமானித்திருப்பதாய்த் தோன்றுகிறது. இவ்வித கண்டிஷனின்பேரில் கிராண்டு ஏற்பட்டிருக்க அந்த வைதிகர்களை தர்மகர்த்தாக்கள் டிஸ்மிஸ் செய்யலாமாவென்ற பாயிண்டைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் இப்பொழுது கொடுக்கவில்லை. ஆனால் அந்த அதிகார பாத்தியதையைப்பற்றி விஜாரணை செய்து தீர்மானம் சொல்லவேண்டுமே யொழிய அனுமானிக்கக்கூடாது. தவிறவும் வாதிகளில் ஒரு பார்ட்டி மைனர் தசையிலுள்ள ஸ்திரீயானதாலும் வேதவித்பத்தியில்லாதபடியாலும் தேவஸ்தானத்தில் அவள் உத்தியோகம் செய்யும் பாத்தியதையை இழந்துவிட்டதாகவும்ஜில்லா ஜட்ஜியவர்கள் அனுமானிக்கிறார்கள். இவ்வித அனுமானத்திற்கு ஆதாரமே கிடையாது. மைனராகவும் ஸ்திரீயாகவுமிருக்கப்பட்ட குறை உத்தியோகத்திற்கு அபாத்திரமான தோஷமென்று ருஜுப்படுத்தவேண்டியது தர்மகர்த்தாக்களைச் சேர்ந்த கடமையாகும். அடிக்கடி கோவில் கைங்கரியங்கள் பர்த்தியாட்களைக்கொண்டு நடத்திவரப்படுகின்றன.

தவிற வாதிகள் வேதபாராயணம செய்யாமல் உத்தியோகத்தை அலட்சியம் செய்துவிட்டார்களென்ற விஷயமாவது அல்லது அவர்கள் அந்த வேலையை சரிவர நடப்பித்துவைக்க மறந்துவிட்டார்களென்ற விஷயமாவது ஜில்லா கோர்ட்டாரால் விஜாரணை செய்யப்படவேயில்லை. தர்மகர்த்தாக்கள் தாவா நிலங்களை சுவாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியமுண்டென்பதை ருஜுப்படுத்தினாலொழிய வாதிகள் இந்த தாவாவில் ஜெயமடையவேண்டியதாகும். வாதிகள் உத்தியோக பாத்தியதையை இழந்தாலும் உத்தியோகத்தை சரிவர நடத்தத்தவறினாலும் தாவாநிலங்களை திரும்பிக் கைவசப்படுத்திக்கொள்ள கவர்ன்மெண்டாருக்குத்தான் பாத்தியமுண்டு. இந்த கேஸானது சரியானபடி விஜாரணையாகாதபடியால் ஜில்லா கோர்ட் டிக்கிரி ரத்தாகி மறு விஜாரணை நடந்து சட்டப்படி தீர்மானம் கொடுக்கப்படவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது

XXVII M L J 179

—:O:—



ஜஸ்டிஸ் சதாசிவயயர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.

திருநெல்வேலி ஜில்லா

S. A. No 874 of 1911—16 ஜூலை 1914

பங்காரஸாமி அய்யங்கார் Vs ஸோமசுந்தரம் செட்டியார்.

1-ம பிரதிவாதியாகிய பங்காரஸாமி அய்யங்காரும் தேசிகாச்சாரி என்ற மற்றொருவரும்சேர்ந்து எழுதிக்கொடுப்பதாக வாசக மேற்பட்ட கடன்பத்திரத்தில் 1-ம் பிரதிவாதிமட்டும் கையொப்பம் செய்திருக்கிறார். ஆகவே வாதி கடன் பாக்கியை வசூலிக்கும பொருட்டு செய்ததாவாவில் 1-ம் பிரதிவாதி எதிராளன்ஸாரில் தேசிகாசாரியாரும் கையொப்பம் செய்தால்மட்டும் தான் கடன் தொகைக்கு பாத்தியப்படுவதாய் ஒப்புக்கொண்டிருந்ததாகவும் அப்படிக்கு அவர் கையொப்பமில்லாத பாண்டின் தொகைக்குத் தான் உத்தரவாதியல்லவென்றும் ஆக்ஷேபித்தார். திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் ஏற்பட்ட தீர்மானத்தின்பேரில் அப்பீலாகி அப்பீலில் சப்கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின்பேரில் வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். 1-ம் பிரதிவாதி அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—A, B, C-ஆகிய மூவரும் சேர்ந்து எழுதிக் கொடுக்கிறதாக பத்திரத்தில் வாசகம் ஏற்பட்டு A, B, என்ற இருவர் மட்டும் கையொப்பமிட்டிருந்த சந்தர்ப்பத்தில் A, B என்றவர்கள் Cயும் அதில் கையொப்பமிட்டால்மட்டும் பத்திரத்தின் தொகைக்கு பாத்தியப்படுவதாய் ஒப்புக்கொண்டதாகச் சொல்லும் விஷயமானது ஒவ்வொரு கேஸின் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி தீர்மானிக்கவேண்டிய ஒரு ருஜுவாயிண்டாகுமென்று 25 மதராஸ் 389, 31 மதராஸ் 114, இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கேஸின் சந்தர்ப்பங்களையும் சம்பாவிதங்களையும் யோஜித்துப் பார்த்து தேசிகாசாரியார் கையொப்பம் செய்யாதபோதிலும் 1-ம் பிரதிவாதி தொகைக்கு உத்தரவாதியாவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறதாக சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். சப்கோர்ட் தீர்ப்பு திருப்திகரமாயில்லாத போதிலும் சப்கோர்ட்டார் அடைந்த தீர்மானத்திற்காதாரமான ருஜுவாகமில்லையென்று சொல்ல முடியாது. வாதியின் 1-ம் சாக்ஷிகொடுத்த வாக்குமூலத்தில் தான் 1-ம் பிரதிவாதியைத் தொகை கேட்டதாகவும அதற்கு அவர் கொடுத்துவிடுகிறேனென்று வாக்களித்ததாகவும் சொல்லியிருக்கிறார். அவ்வித வாக்குத்தத்தம செய்த விஷயமானது தேசிகாச்சாரி கையொப்பம் செய்யும் விஷயத்தைப் பற்றிய நிபந்தனையன்னியில் 1-ம் பிரதிவாதி பாண்டின் தொகைக்குத்தான் உத்தரவாதியெனறு ஏற்றுக்கொண்டதாக யூகிக்கவேண்டியதாகும். ஆகையால் சப்கோர்ட்டார் தாவா பத்திரத்தின் ஊரத்துக்களைப் பற்றி அர்த்தப்படுத்தினதில் பிசகிப்போய் விட்டாரென்று சொல்லக்கூடாது. சப்கோர்ட் தீர்மானத்தை மாற்றுவது நியாயமல்லவென்று 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது

XXVII M L J 176

—:O:—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி

கிருஷ்ணா ஜில்லா

S A No 511 of 1912-21 ஜூலை 1914

ஜெய்யகிரி வீரேஸலிங்கம் Vs கோவூர் பவிவிரெட்டி

வாதி பவிவிரெட்டி எல்லூர் சப்கோர்ட்டில் கொடுத்த 1909 ம் வருஷத்திய அசல் நெம்பர் 52 று உவித்டிரா செய்துகொண்டால்1ம்பிரதிவாதி வாதிக்குஒரு விக்கிறய தஸ்தவேஜுஎழுதிக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட ராஜி நாமாவை சப்கோர்ட்டார் ஸி பி ஸி ஆர்டர் 23 ரூல் 3 ன் படி ரிகார்ட் செய்துகொண்டு அந்தப்படி டிக்கிரீயளிக்கும் சமயத்தில் பிரதிவாதி ஆக்ஷேபித்தும் கோர்ட்டார் அந்த ஆக்ஷேபனையை நிராகரித்து ரிகார்டான ராஜிநாமாப்படிக்கு டிக்கிரீசெய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்தும் ஜயமடையாமல் ஹைகோர்ட்டில் 2 வது அப்பீல் செய்ததில்வாதி அந்த 2 வது அப்பீல் விஷயமாய் இரண்டு பிரதம ஆக்ஷேபனைகள் செய்தார். ஹைகோர்ட்டார் அந்த ஆக்ஷேபனைகளை ஏற்றுக்கொள்ளாத போதிலும் சப்கோர்ட் டிக்கிரி சரியானதென்று காயப்படுத்தி 2 வது அப்பீலை டிஸ்மிஸ்செய்துவிட்

டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:- ஸி பி ஸி ஆர்டர் 23 ரூல் 3-ன் படி ராஜிநாமாவை சப்கோர்ட்டார் ரிகார்டு செய்த உத்தரவின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டதால் அவ்வித அப்பீலுக்கு மட்டும் ஆர்டர் 43 ரூல் 1(m)ன் படி சட்ட முறையிருக்கிறதென்றும் ஜில்லாகோர்ட்டில் ஏற்பட்ட அப்பீல் உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு 2 வது அப்பீல் இடையாதென்று 104 வது பிரிவின் 2-வது கிளாஸில் விதிக்கப்பட்டிருக்கிறதாயும் எடுத்துச் சொல்லப்பட்டு ஆகவே தாவா 2வது அப்பீல் பிடிக்கத்தக்கதல்லவென்று முதலாவது பிரதம ஆக்ஷேபனை வாதுக்காகச் செய்யப்படுகிறது. அதற்கு சமாதானமாக 1-ம் பிரதிவாதி ஜில்லாகோர்ட்டுக்குச் செய்த அப்பீலானது சப்கோர்ட்டார் ராஜிநாமாவை ரிகார்டுசெய்துகொண்ட உத்தரவின்பேரில் செய்யப்பட்டதல்லவென்றும் இந்த 2-வது அப்பீலும் அவ்விதமான ஜில்லாகோர்ட் அப்பீல் உத்தரவின்பேரில் செய்யப்பட்டதல்லவென்றும் சொல்லவேண்டும். ஜில்லாகோர்ட்டில் செய்த அப்பீலும ஹைகோர்ட்டில் செய்த 2-வது அப்பீலும் சப்கோர்ட்டார் ராஜிநாமாவை அனுசரித்துக்கொடுத்த டிக்கிரீயின்பேரில் ஏற்பட்டதாகும். ஆகவே இந்த 2 வது அப்பீல் பிடிக்கத்தகாதென்று ஆக்ஷேபிக்கக்கூடாது,

2வது பிரதம ஆக்ஷேபனையாக ஸி. பி. ஸி 96 வது பிரிவின் 3-வது கிளாஸின்படி இருகக்ஷிக்காரருடைய சம்மதத்தின்பேரில் ஏற்பட்ட டிக்கிரீயின்பேரில் அப்பீலே இடையாதென்றும் சொல்லப்படுகிறது. சப்கோர்ட்டார் கொடுத்த டிக்கிரீயானது இருகக்ஷிக்காரர்களுடைய சம்மதத்தின்பேரில் ஏற்பட்டதல்ல. ஆனால் இருகக்ஷிக்காரர்களும் ராஜிநாமாவில் கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதிட்டிருக்கிறார்களென்று அபிப்பிராயப்பட்டு அந்த ராஜிநாமாவை அனுசரித்து சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்திருக்கிறார்கள். அவ்வித டிக்கிரீயளித்தபொழுது ஒருபார்ட்டி ஆக்ஷேபித்தும் அதை சப்கோர்ட்டார் மதிக்கவில்லை. சம்மதியின்பேரில் ஏற்பட்ட ராஜிநாமாவை அனுசரித்த டிக்கிரீயேயொழிய சம்மதப்படிக்கு பிறந்த டிக்கிரீயல்ல. ஆகவே 96 (3)-ன் அம்சத்தைப்பற்றிய ஆக்ஷேபனையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

கேஸின் தன்மையைப்பற்றி கவனிக்குமிடத்து வாதி முதலில் பிராதை உவித்டிரா செய்யவேண்டுமென்றும் அதற்குப்பின் 1-ம் பிரதிவாதி வாதியின்பேருக்கு கோர்ட்டாரின் தகவலன்னியில் கிரய பத்திரமொன்று எழுதிக்கொடுப்பதாக ராஜிநாமா உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறதேயொழிய தன்னை விக்கிரயப் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி கட்டாயப் படுத்தத்தக்கவிதமாய் டிக்கிரீயில் யாதொரு வசனமும் ஏற்படவேண்டுமென்று ராஜிநாமாவில் ஒப்புக்கொள்ளவில்லையென்று 1-ம் பிரதிவாதிக்காக வாதிக்கப்பட்டு விக்கிரயத்தைக் கண்டு சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்தது பிசகென்று சொல்லப்படுகிறது. கோர்ட்டாரால் விக்கிரயப் பத்திர விஷயமாய்த் தன்னைக் கட்டுப்படுத்தி டிக்கிரீயளிக்க ஒப்புக்கொண்டதும் ஒப்புக்கொள்ளாததும் தாவா கேஸின் தீர்மானத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயமல்ல. 1-ம் பிரதிவாதி ஒரு விக்கிரயம் எழுதிக் கொடுக்கவேண்டியதென்ற நிபந்தனையுடன் கூடிய ராஜிநாமாவின் உடன்படிக்கையினால் பார்ட்டிகளுடைய வியவகாரம் பரஸ்பரமாய் சமாதானப்பட்டதாவென்றும் அவ்வித நிபந்தனையின்படி கோர்ட்டார் டிக்கிரீயளிக்கலாமாவென்றும் இந்தக்கேஸில் தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும். கோர்ட்டார் அவ்வித நிபந்தனையைக் காட்டி டிக்கிரீயளிக்கலாமென்றே சொல்லவேண்டும். கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டிய அம்சமானது இந்த தாவாவில் சம்பந்தப்பட்ட விஷயமல்லவென்றும் ஆகவே ஆர்டர் 23 ரூல் 3-ன் படி அந்த அம்சத்தைக்காட்டி டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்று வாதிக்கப்பட்டது. பழய பல தீர்மானங்களில் தாவாவுக்குச் சம்பந்தப்படாத விஷயங்களைப்பற்றி டிக்கிரீயில் காணப்படக்கூடாதென்று ஏற்பட்டிருந்தபோதிலும் 33 மதராஸ் 102, 35 கல்கத்தா 837 இவைகளில் ஏற்பட்டிருக்கிற பிந்திய தீர்மானங்களை அனுசரித்து பார்ட்டிகளுடைய வியவகாரம் தீருவதற்காக ஏற்படும் ராஜிநாமாவில் பிரதிபிரயோஜனமாக யாதொரு நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால் அவைகள் தாவாவில் சம்பந்தப்படாத அம்சங்களானபோதிலும் அவைகளையும் கண்டு டிக்கிரீயளிக்கலாமென்று சொல்லவேண்டும். ஆகவே இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளு



OFFICE OF THE ... RAR OF BOOKS
13 SEP 1914
MADRAS.

படியாகி சப்கோர்ட்டார் அளித்த டிக்கிரீயானது காயமாச்சுது. (ராஜிநாமாவில் ஒரு கண்டிஷனை ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தபிறகு 1-ம் பிரதிவாதி பின்வாங்கி, உவித்டிரா செய்தபிறகு விக்கிரய தஸ்தவேஜை எழுதிக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டதாக செய்கிற வாதம் சரியானதல்ல. வாதி உவித்டிரா செய்துகொண்டபிறகு 1-ம் பிரதிவாதி விக்கிரயம் எழுதிக் கொடுக்காவிடில் ராஜிநாமா உடன்படிக்கையின் ஆதாரத்தைக்கொண்டு வாதி வேறு தாவா செய்வது உசிதமானமுறையல்ல. இந்தக் கேஸின் டிக்கிரீயிலேயே அந்த நிபந்தனையைச் சேர்த்துவிட்டால் பிந்தி 1-ம் பிரதிவாதி ஆக்ஷேபிக்கமுடியாது. ஆகவே இந்த நியாய முறையைக் கவனித்தாலும் வியவகாரத்தைக் கம்மிப்படுத்தும் கருத்துடன் சப்கோர்ட்டார் டிக்கிரீயில் ஷை நிபந்தனையைச் சேர்த்தது யுக்தியான காரியமாகும்). XXVII M L J 173

———:O:———

ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட் & ஜஸ்டிஸ் நேபியர்

வடமலையாளம்

C. R. P 631 of 1912-24 ஜூலை 1914

விலகாதல ராமன் Vs வயலில் பாச்சு

கள்ளிக்கோட்டை டி-மு கோர்ட் டிக்கிரீயை நிறைவேற்றும்பொருட்டு சௌகாட் டி-மு கோர்ட்டில் டிக்கிரீதார் மனு நடவடிக்கை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது 1-ம் பிரதிவாதி டிக்கிரீதுகை பூராவும் செல்லாய்விட்டதாக கோர்ட்டில் தெரிவித்து ஷை செல்லு ரிகார்டாகும்படியான முறைகளையும் நடத்தி முடித்துவிட்டார். இவ்விதமாய் டிக்கிரீயின் செல்லுரிகார்டான தகவல் வாதிக்குத் தெரிந்த 1-ம் பிரதிவாதியின் நடவடிக்கை முழுவதும் மோசமென்றும் பொய்யென்றும் அவர் கோர்ட்டாரையும் ஏமாற்றி மேற்கூறிய செல்லுறியம்சத்தை ரிகார்ட் செய்வித்ததாகவும் வாதி டி-மு கோர்ட்டாரிடம் முறையிட்டுக்கொண்டதில் 1912 பிப்ரவரி 27-ல் டி-மு கோர்ட்டார் முன் ரிகார்ட்செய்த செல்வழி உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். அன்றியும் வாதியின் கோரிக்கைப்படி 1-ம் பிரதிவாதியை பிராஸிக்யூஷன் செய்வதற்காகவும் 29 பிப்ரவரியில் அனுமதி கொடுத்தார்.

அதன்பேரில் 1-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்து டி-மு கோர்ட்டார் 27 பிப்ரவரியில் முன் செய்த உத்தரவை ரத்து செய்தது பிசகென்று வாதித்தார். இந்த ரிவிஷன் விண்ணப்பம் 1912 பிப்ரவரி 27-ல் பிறந்த உத்தரவின்பேரில் செய்யப்பட்டபோதிலும் அதில் பிராஸிக்யூஷனுக்காக பிப்ரவரி 29-ல் கொடுத்த அனுமதியையும் ரத்து செய்யவேண்டுமென்று கோரிக்கொள்ளப்பட்டது. பிப்ரவரி 27-ல் பிறந்த உத்தரவின்பேரில் செய்யப்பட்ட இந்த ரிவிஷன் விண்ணப்பத்தில் பிப்ரவரி 29-ல் அளிக்கப்பட்ட சாங்க்ஷன் உத்தரவைப்பற்றி யோஜிக்க நியாயமில்லை.

27உ-யில் டி-மு கோர்ட்டாருக்கு முந்திய ஆர்டரை ரத்துசெய்ய அதிகாரம் இடையாதென்று வாதிக்கப்படுகிறது. ஸி. பி. ஸி. 47-வது பிரிவின்படி நிறைவேற்று நடவடிக்கையின் விஷயமாய் ஏற்படும் விவாதங்களையெல்லாம் நிறைவேற்றுங்கோர்ட்டாரே விசாரித்துப்பைசலளிக்கலாம் ஆகவே துகை செல்லாய்விட்டதென்று எதிரி கோர்ட்டுக்குதெரிவித்துநிறைவேற்றுநடவடிக்கைநடக்கும்பொழுதுடிக்கிரீயில்செல்லுஎழுதும்படிஉத்தரவு பிறப்பித்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி வாதி தகரார் செய்தால் அதைப்பற்றி நிறைவேற்றுங் கோர்ட்டார் விஜாரித்து யாதொரு உத்தரவளிக்கலாம். அல்லது ஸி. பி. ஸி. ஆர்டர் 47-ன் படி டி-மு கோர்ட்டார் வாதியின் ஆக்ஷேபனையை ரிவியூ விண்ணப்பமாக பாவித்து முந்திய உத்தரவை ரத்து செய்ததாகச் சொல்லாம். அதுவுமல்லாமல் ஸி. பி. ஸி. 151-வது பிரிவின்படி கோர்ட்டாருடைய அதிகாரத்தை அனுவசியமாயப் பிரயோகிக்கும்படி பிரயத்தனப்படும் சமயங்களிலும், கோர்ட்டாரை மோசம் செய்து யாதொரு உத்தரவடையும் சந்தர்ப்பங்களிலும், அல்லது நீதிதவராமலிருக்கும் வண்ணமாகவும், கோர்ட்டார் ஸ்வயமாகவே வேறு சட்டமுறையில்லாதபோதிலும் யாதொரு உத்தரவளிக்க அதிகாரமுடைத்தாயிருக்கிறார்கள். அவ்விதமான ஸ்வயஅதிகாரத்தைச் செலுத்தி டி-மு கோர்ட்டார் தாவா உத்தரவளித்திருக்கிறார்களென்றும் சொல்லத்தகும். 6பம்பாய் 148, 2மதராஸ் 264 இவைகளைப் பார்க்கவும். ஆகவே டி-மு கோர்ட்டார் செய்த உத்தரவு சட்ட விரோதமென்று

சொல்லத்தகாது. ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M L J 172

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் பென்ஸன்

தென்மலையாளம்

C. M. A. 129 of 1914-27 ஜூலை 1914

மாலமாள் வீட்டில் கிருஷ்ணன் நாயர்

*Vs*

கவலப்பர மூப்பில் நாயர்

ஸி. பி. ஸி. ஆர்டர் 41 ரூல் 5-ன்படி சப்கோர்ட் தீர்மானத்தின்பேரில் அப்பீல்ஜில்லா கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கும்பொழுது சப்கோர்ட் டிகிரீயை அப்பீல் பைசலாகுமட்டும் நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கும்படி வாதிக்கு மறியல் உத்தரவளிக்கவேண்டுமென்று கோறிக்கொண்ட விண்ணப்பத்தை ஜில்லா கோர்ட்டார் தள்ளுபடிசெய்து மறியல் உத்தரவளிக்க மறுத்துவிட்டபின் அந்த உத்தரவின்பேரில் அப்பீல் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஸி. பி. ஸி. 47-வது பிரிவின்படி ஜில்லா கோர்ட்டார் உத்தரவளித்ததாக பாவித்து அவ்வித உத்தரவுக்குமேல் அப்பீல்முறையுண்டென்றும-ா-ா-ஸ்ரீ ம. ஆர். ராமசந்திரய்யரவர்கள் வாதிக்கிறார்கள். ஆனால் 47-வது பிரிவானது நிறைவேற்றும் கோர்ட்டாரால் ஏற்படுகிற உத்தரவைப்பற்றிய அம்சமாகும். ஜில்லா கோர்ட்டார் நிறைவேற்றுங் கோர்ட்டாரல்ல. நிறைவேற்றும் சப்கோர்ட்டாருக்குத்தடைஉத்தரவுசெய்யமறுதளித்த ஜில்லா கோர்ட்டாரின் உத்தரவானது 47-வது பிரிவின்படி செய்யப்பட்டதாக சொல்லத்தகாது. ஆகவே இந்த மனு அப்பீல் பிடிக்கத்தக்கதல்லவென்று வாதியின் பிரதம ஆக்ஷேபனையின்பேரில் தள்ளுபடியாச்சுது. XXVII M L J 171

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

மதுரை ஜில்லா

L. P. A. 103 of 1913—28 ஜூலை 1914.

மகம்மத் கூழையப்பராவுத்தன் *Vs* ஷேக் அப்துல்காதர் ராவுத்தன்.

கூழையப்ப ராவுத்தர் என்ற மனுதார் திண்டுக்கல் டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரிடம் தன்னுடைய பிரத்தியேகமான சுவாதீனத்திலிருக்கும் சொத்துக்களின்பேரில் எதிரிபலாத்காரமாய்ப் பிரவேசிக்கப் பிரயத்தனப்படுவதாயும் அதனால் சமாதானக்குறைவேற்படுமென்றும் தெரிவித்து அதைத் தடுக்கும்படியாக யாதொரு உத்தரவளிக்க வேண்டுமென்று கோறிக்கொண்டதின்பேரில் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் விஜாரணைசெய்து, மனுதார் குறித்துக்காட்டிய சொத்துக்களில் 3-வது அயிட்டமானது இருதரத்தாருடைய கூட்டான அனுபோகத்திலிருப்பதாய்க்கண்டும், சொத்துக்கள் கூட்டனுபோகமாகஇருக்கிறதென்று தீர்மான உத்தரவளிக்க முடியாதென்று சொல்லி மேற்கூறிய 3-வது அயிட்டத்தை மட்டும் ஜப்திசெய்து சர்க்கார் வசத்தில் வைத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கிரிமினல் புரொஸிஜர் கோட் 146-வது பிரிவின்படி உத்தரவளித்தார்கள். இந்த உத்தரவின்பேரில் மனுதார் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில், ஷை சொத்தானது இருவருடைய ஜாயிண்டான சுவாதீனத்திலிருப்பதாக ஏற்பட்டால், 146-வது பிரிவின்படி ஜப்திசெய்ய மாஜிஸ்டிரேட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், ஆனால் மாஜிஸ்டிரேட்டார் இந்தக்கேசில் இருதரத்தாரும் கூட்டான சுவாதீனத்தையுடையவர்களென்று தீர்மானிக்க எண்ணம் கொள்ளவில்லையென்றும், ஆகவே மாஜிஸ்டிரேட்டார் 146-வது பிரிவின்படி ஜப்திசெய்தது சட்டவிரோதமல்லவென்று ஹானரபில் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் துரையவர்கள் தீர்மானித்து மனுதாரின் ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதார் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்ததில் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவு சட்டவிரோதமென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்குக் காரணமாகப் பின்வரும் நியாயங்கள் சொல்லப்பட்டன:— எதிர்மனுதார் தான் 3-வது அயிட்டத்தில் கூட்டான சுவாதீனமுடையவரென்று வாதிக்கிறார். மாஜிஸ்டிரேட்டார் தீர்மானத்தில் 1320, 1321-ம் பசலிகளில் அதாவது 1912 ஜூன் மட்டும் ஷை நிலம் சாகுபடியன்னியில் தரிசாய்க் கிடந்ததாயும் அதற்குப்பின்னும், மாஜிஸ்டிரேட்டாரிடம்மனுக்கொடுத்ததற்கு முன்னும், அதைச் சாகுபடிசெய்தது என்று தயார்தீர்மானிக்க யோஜித்ததில் அந்நிலங்களை மனுதாரும் பிரத்தியேகமாய் சுவாதீனப்படுத்திக்கொள்ளவில்லையென்றும் எதிர்மனுதாரும் பிரத்தியேகமாய் சுவாதீனப் படுத்திக்கொள்ளவில்லையென்றும், ஆனால் நஜா அம்சங்களை கவனித்து இருவரும் கூட்டாக அதை அனுபவித்துவந்ததாகத் தீர்மான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். கூட்டனுபோகம் என்று சொன்னபோது கூட்டான சுவாதீனம் என்ற கருத்தை மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கொண்டிருக்கவேண்டுமென்று சந்தேகமன்னியில் சொல்லலாம் மாஜிஸ்டிரேட்டாருடைய கருத்தில் சொந்த பாத்தியதை இருவராலும் கூட்டாகக்கொண்டாடப்படுகிறதாயும் ஆனால் அது யாருடைய சுவாதீனத்திலிருப்பதாகச் சொல்ல முடியாதென்று தோன்றியிருப்பதாக சர்க்கார் தரப்பு வக்கில் அவர்கள் கீழ்கோர்ட் தீர்மானத்திற்கனுகூலமாக வாதிக்கிறார்கள். அந்தவாதம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. அதாவது 3-வது அயிட்டம இருவருடைய கூட்டான சுவாதீனத்திலிருப்பதாகவே மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அபிப்பிராயப்பட்டதாய்ச் சொல்லவேண்டும். அப்படியிருக்க 146-வது பிரிவின்படி ஜப்தி உத்தரவளிக்கலாமாவென்று கவனித்துப்பார்க்கவேண்டும். 146-வது பிரிவின்படி ஜப்திசெய்ய வேண்டுமானால் சுவாதீனம் இருதரத்தாரிடமும் இல்லையென்று காணப்படவேண்டும், அல்லது சுவாதீனம் யாரிடமிருக்கிறதென்று அறியக்கூடாமலிருக்கவேண்டும். சுவாதீனம் என்ற வசனத்திற்கு ஒருவனுடையதனிமையான சுவாதீனமென்றும், கூட்டான சுவாதீனம் அந்தப்பதத்திலடங்கியதல்லவென்றும், 10 C W N 1038, 17 C. W. N. 205, 11 C W N 512, C W N 887 இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறதென்று மனுதாருக்காகஎடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் அவ்விதமாக குறுகிய அர்த்தம் கொடுத்ததற்குக் காரணம் மேற்கூறிய தீர்மானங்களில்யாதொன்றும் சொல்லப்படவில்லை. கிரிமினல் புரொஸிஜர் கோட் 145-வது பிரிவில் சுவாதீனமுடையவன் யாரென்று கண்டறிந்து அவனிடமே சுவாதீனம் நிலைத்திருக்கவேண்டுமென்றும் அதற்குவிரோதமாய் ஸிவில் கோர்ட் டிக்கிரீ ஏற்படுமட்டும் எதிரி அவ்வனைத் தடுக்கக்கூடாதென்றும் விதிக்கப்பட்டிருக்க, இந்தப்பிரிவில்சுவாதீனம் என்றபதத்திற்குக் கூட்டான சுவாதீனமும் அடங்கியிருப்பதாக 1 கலகத்தா லா ஜர்னல் 632-ல் சொல்லியிருக்கிறது. அதற்கும் காரணம் யாதொன்றும் சொல்லப்படவில்லை. கூட்டான சுவாதீனத்திலிருக்கிற நிலங்களைப் பற்றிய இந்தக்கேசுக்கு 145-வது பிரிவும் ஏற்காதென்றும் 146-வது பிரிவும் ஏற்காதென்றும் சொல்லவேண்டும். கலகத்தைத் தடுப்பதற்காக சட்டகர்த்தாக்கள் முறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருவருக்கும் சுவாதீனத்தைப்பற்றித் தகரார் ஏற்பட்டால் மாஜிஸ்டிரேட்டார் ஒருவரை சொத்தண்டை வரவிடாமல் விலக்கவேண்டியது நியாயமாகும். அதனால் கலகம் தடுக்கப்படும். ஆனால் இருவரும் கூட்டான சுவாதீனத்திலிருக்கும்பொழுதும் கலகத்திற்கு ஆஸ்பதமுண்டானால் அதாவது ஒருவர் மற்றவரை வெளிப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்தால் இருவரையும் சுவாதீனத்தில் விட்டு வைப்பது கலகத்தைத்தடுக்கும் நோக்கத்திற்கு அனுகூலமாயிராது. அதனால் தான் கோர்ட்டார் கூட்டான சுவாதீனத்தை அங்கீகரிக்கிறதில்லை. 147-வது பிரிவின்படி ஒரு பார்ட்டி எதிரியைத் தொந்தரவு செய்யாமல் தடுக்கப்படலாமாவென்ற பாயிண்டைப்பற்றித் தீர்மானிக்க அவசியமில்லை. ஆகவே மாஜிஸ்டிரேட்டாரவர்கள் தகரார் சொத்தை இருதரத்தாரும் கூட்டான சுவாதீன மடைந்திருக்கும் பொழுது 146-வது பிரிவின்படி ஜப்திசெய்தது சட்டவிரோதமென்று ஏற்பட்டு ஜப்தி உத்தரவு ரத்தாச்சுது. XXVII M L J 169.

---

## பிரிவிகௌன்ஸில் கேஸ்

அலகபாத் (24 ஏப்ரல் 1914)

முஸ்ஸம்மத் ஹிரான் பீ. பீ.

*Vs*

முஸ்ஸம்மத் ஸோஹன் பீ. பீ.

மூலபுருஷன் ஆண் சந்ததியில்லாத நிமித்தம் தன் பாரியாளுக்கு ஸ்வீகார அதிகாரம் கொடுத்துவிட்டு ஆனால் ஷை யாள் ஜீவதசைமட்டும் தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் அவளே சர்வ ஸ்வதந்தரத்துடன் அனுபவிக்கவேண்டியதென்றும் நிபந்தனை ஏற்படுத்திவிட்டுக் காலஞ்

சென்றார். அதே பிரகாரம் மூலபுருஷனுடைய பாரியாள் புருஷோத்தமதாஸ என்ற பய்யனை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். ஆனால் அந்த ஸ்வீகாரப்பய்யன் ஸ்வீகாரத்தாயாருக்குமுந்தியே இறந்துபோனபடியால் தாயாருடைய மரணத்திற்குப்பின் சொத்துக்களை ஸ்வீகார புத்திரனுடைய பாரியாளாகிய பிந்தேசுவரிபாஹா என்றவள் கைப்பற்றிக் கொண்டு அனுபவித்துவந்தாள். மூலபுருஷனுடைய குமாரத்திகளில் பியூனோ பீபீ என்றவள் ஸ்வீகாரத்தை ஆக்ஷேபித்து தன்தகப்பன் சொத்தில் தனக்குறிய பாகம் கிடைக்கவேண்டுமென்று சொத்தை அடைந்து அனுபவிக்கிற பிந்தேசுவரிபாஹா என்றவள்பேரில் இதர பாகஸ்தர்களையும் பார்ட்டிகளாய்ச்சேர்த்து தாவா செய்தாள். இந்த வியாஜ்ஜியத்தில் பார்ட்டிகளனைவரும் செய்துகொண்ட ராஜிநாமாப்படிக்கு ஒவ்வொரு பாகஸ்தருக்கும் அவரவர்களுடைய பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அதன்மேல் ஸ்வீகார புத்திரனுடைய ஒரே புத்திரியாகிய ஸோஹன் பீ. பீ. அவர்கள் தன் தாயார் செய்த ராஜிநாமா ஏற்பாடு சட்ட விரோதமென்றும், அதாவது ராஜிநாமாவினால்ஜீவதசைமட்டும் அனுபவிக்கும் பாத்தியதையுடைய தன் தாயார் குடும்ப சொத்துக்களைப் பராதீனம் செய்த பாவனையாகிறதென்றும், அவ்வித பராதீனம் செய்ய அவளுக்கு அதிகாரமில்லாதபடியால் ராஜிநாமா செல்லாதென்றும் எவ்விதத்திலும் அந்த ராஜிநாமா ஏற்பாடானது அனந்தர வாரிஸ்களின் பாத்தியதையைக் கட்டுப்படுத்தாதென்றும் சொல்லித் தன் தாயார்பேரில் வழக்கெடுத்தாள். ஜில்லா கோர்ட்டார் ராஜிநாமாவை உறுதிப்படுத்திக்கொடுத்த தீர்மானத்தை ஹைகோர்ட்டார் மாற்றி வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள் அதன்பேரில் எதிரிகள் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் "ராஜிநாமா ஏற்பாட்டினால் குடும்ப சொத்தில் அனுபோக பாத்தியதைமட்டும் உடைத்தாயிருக்கிறவள் ஷை சொத்துக்களைப் பராதீனம் செய்துவிட்டதாகச் சொல்ல நியாயமில்லை. 83 I. A. 87, 102-ல் பிரசுரமாயிருக்கும் தீர்மானத்தைப்பார்க்கவும். ராஜிநாமாவினால் குடும்ப சொத்தில் பாகமுடையவர்கள் தங்கள் தங்கள் பாகத்தை இவ்வளவென்று ஒப்புக்கொண்டு அந்த பாகத்தை அடைந்தமையால் அது ஒரு குடும்ப சொத்து விஷயமாய் செய்து கொள்ளப்பட்ட ஸெட்டில்மெண்டாக பாவிக்கப்படவேண்டும். ஆகையால் இவ்வித ராஜிநாமா சட்ட விரோதமல்லவென்று" தீர்மானிக்கப்பட்டு வாதியின் பிராது தள்ளுபடியாகி ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. XXVII M L J149

—:0:—

## பிரிவிகௌன்ஸில் கேஸ்

கல்கத்தா (18 மே 1914)

ரகுநாததாஸ் Vs சுந்தரதாஸ்

பர்ட்வான் ஜில்லாவில் கலக்கரிச் சுரங்கம் ஒன்றை சுந்தரதாஸ போலநாத என்ற சொந்தக்காரர்களிடத்திலிருந்து குத்தகைக்கு வாங்கி வேலை செய்து வந்த அதுல்நாத் சாட்டர்ஜி வகையராக்கள் ஷை சுரங்க வேலையை நடத்தும் கருவிகளை வாங்கும்பொருட்டு சுந்தரதாஸ் என்றவரிடத்தில் ரூ 13, 000 கடன் வாங்கி குத்தகை பாத்தியதையை அதற்கு அடமானமாக எழுதிவைத்தார்கள். ஷை அடமானத்தொகை குறித்த காலத்தில் செலுத்தப்படாத காரணத்தால் கோர்ட் மூலமாய் டிக்கிரீயும் ஏற்பட்டது. குத்தகை பாக்கிவகைகளுக்காகவும் டிக்கிரீ பிறந்தது. ஆகவே இருவகையான டிக்கிரீத் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு சுந்தரதாஸ் வகையராக்கள் ஷை குத்தகைபாத்தியதையையும்சுரங்கத்திலுள்ளசாமான்களையும் கருவிகள் யாவற்றையும் ஏலம்போடும் கருத்துடன் 1904 ஜுலை 18-ல் ஜப்தி செய்துவிட்டார்கள். டிக்கிரீ பாக்கிதார்களுக்கு இன்னும் பற்பல கடன் தொல்லைகள் ஏற்பட்டிருந்தமையால் இவைகளையெல்லாம் தீர்க்கமுடியாமல் 1904 செப்டெம்பர் 8-ல் கல்கத்தா ஹைகோர்ட்டில் இன்ஸால்வென்ஸி விண்ணப்பம் தாகல் செய்துவிட்டார்கள். இன்ஸால்வென்ஸி கோர்ட்டாரும் சட்டப்படிக்கு மனுதாரின் சொத்துக்கள் யாவற்றையும் அபிஷியல் அஸைனியவர்கள் பேருக்கு ஆதீனப்படுத்திவிட்டார்கள். ஆகையால் மனுதாருடைய சொத்துக்கள் யாவற்றையும் கைவசப்படுத்திக்கொண்டு அவைகளை விற்பனை செய்து வசூலாகும் தொகையை மனுதாரால் செல்லாகவேண்டிய கடன்காரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டியகடமை அஸைனியவர்களுக்கு ஏற்பட்டது. தாவாசுரங்கத்தால் மனுதாருக்குள்ள



சகலவிதமானபாத்தியதையும்கருவிகளும் சாமான்களும் அபிஷியல் அஸைனியவர்களின் பாத்தியமாகிவிட்டது. அப்படியிருக்கடிக்கிரீ பாக்கிதார்களுக்குபர்ட்வான் சப்கோர்ட்டிலிருந்து ஜப்திக்கட்டளையின் அறிக்கைகிடைத்தவுடன்இன்ஸால்வென்ஸிகோர்ட்டார் 1904செப்டெம்பர் 8-ல்செய்த உத்தரவின் காபியை சப்கோர்ட்டில் தாகல் செய்யவே சப்கோர்ட்டார் மறு உத்தரவு பிறக்குமட்டும் ஜப்தியான சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரக்கூடாதென்று உத்தரவளித்தார்கள். 1904 செப்டெம்பர் 30-ல் ஜெப்தி செய்த வாதிகள் சப்கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து டிக்கிரீ பாக்கிதாருடைய பெயருக்கு பதிலாக அபிஷியல் அஸைனி பெயரை ரிகார்டு செய்து அவர்களை நிறைவேற்று நடவடிக்கையில் பார்ட்டியாக சேர்க்கப்படவேண்டுமென்று கோரிக்கொண்டார்கள். அபிஷியல் அஸைனியவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு ஏன் அவருடைய பெயரை டிக்கிரீ பாக்கிதாரனுக்கு பதிலாக இந்த நடவடிக்கையில் ரிகார்ட். செய்யக்கூடாதென்று கோர்ட்டில் ஆஜராகித் தெரிவிக்கும்படி உத்தரவளிக்கப்பட்டு அந்தநோட்டீஸ் ஸர்வாச்சுது. ஆனால் அவர் நோட்டீஸ் வாய்தாவுக்கு ஆஜராகவில்லை. அதன்பின் ஜப்தியான சொத்தை ஏலம்போட உத்தரவளிக்கப்பட்டது. ஜப்திசெய்த வாதிகளே கோர்ட்டாருடைய அனுமதிபெற்று1905 மார்ச்சு 6-ல் தாவா சுரங்கத்தை ஏலமெடுத்தார்கள். அதன்பின் அபிஷியல் அஸைனியவர்கள்சப்கோர்ட் ஏலத்தின் தகவல் தெரியாமல் ஹைகோர்ட் இன்ஸால்வென்ஸி நடவடிக்கையில் பிறந்த உத்தரவின்படி மனுதாரின் சொத்துக்களை விக்கிரயப்படுத்த ஆரம்பித்து 1905 மே 23-ல் தாவா சுரங்கத்தையும் ஏலம் போட்டதில் அதை இந்ததாவாவில் வாதிகளாய் வந்த ரகுநாததாஸ் வகையராக்கள் ஏலமெடுத்தார்கள். ஏலமெடுத்த வாதிகளை முந்திய ஏலதார்கள் தடைசெய்தமையால் வாதிகள் தங்களுடைய ஏல விக்கிரயம் மேலானதென்றும் சப்கோர்ட்டாருடைய ஏலநடவடிக்கை முழுவதும் சட்ட விரோதமென்றும் ஆகவே அந்த ஏலம் செல்லத்தகாதென்றும் தீர்மானமடையும் பொருட்டு சப்கோர்ட்டில் தாவா செய்தார்கள். சப்கோர்ட்டார் வாதிகளுக்கனுகூலமாய் டிக்கிரீயளித்து அபிஷியல் அஸைனியால் ஏற்பட்ட விக்கிரயம் தான் செல்லத்தகுமென்றும் சப்கோர்ட்டாருடைய ஏலம் செல்லாதென்றும் தீர்மானித்தார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் சப்கோர்ட் தீர்ப்பை மாற்றி பிரதிவாதிகள் முதலில் ஏலமெடுத்தவர்களாதலால் வாதிகளைவிட மேலானபாத்தியதை யுடையவர்களென்று தீர்மானித்து சப்கோர்ட் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். அதன்பேரில் வாதிகள் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் சரியென்று ஏற்பட்டு வாதிக்கனுகூலமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. பிரிவிகௌன்ஸிலார் தீர்ப்பில் சொன்னகாரணங்களாவன:—

ஒரு வெண்ணலை டிக்கிரீக்காக யாதொரு சொத்தை ஜப்தி செய்த காரணத்தால் அந்த சொத்தின்பேரில் டிக்கிரீ பாக்கிக்காக யாதொரு ஹக்கு ஏற்படாதென்று பிரதிவாதிகளுக்காக ஒப்புக்கொள்ளப்படுகிறது. (1869) 1 அலகபாத் ஹைகோர்ட் ரிபோர்ட்டுகளின் 172-ஐப் பார்க்கவும். ஜப்தி செய்துவிட்டால் சொத்துக்குடையவன் அதை ப்ரைவேட்டாக யாருக்கும் பராதீனப்படுத்தக்கூடாதேயொழிய இன்ஸால்வென்ஸி ஆக்ட்படிக்கு அந்த சொத்து அபிஷியல் அஸைனிக்கு பாத்தியமாகி மேற்படியார் அதை சட்டமுறைப்படி ஏலம் போட்டு அல்லது வேறுவிதமாய் பராதீனம் செய்யும் விஷயத்தில் முந்திய ஜப்தி உத்தரவானது ஷை ஏல நடவடிக்கையை பாதிக்காதென்று சொல்லவேண்டும். ஜப்தியை அனுசரித்து ஏலத்திற்கு உத்தரவானபோதிலும் அந்த உத்தரவு பார்ட்டிகளை கட்டுப்படுத்துமேயொழிய ஏலமெடுத்த பார்ட்டிக்கு அதனால் யாதொரு பாத்தியதையும் ஏற்பட நியாயமில்லை. ஏனெனில் ஏல சொத்தானது ஏலத்திற்கு முந்தியே அபிஷியல் அஸைனிக்கு பாத்தியப்பட்டதாக மாறிவிட்டதாகும். டிக்கிரீ பாக்கிதாரனுக்கு பாத்தியமில்லாத சொத்தை ஏலம் போட்டு என்னபிரயோஜனம்? இன்ஸால்வென்ஸி நடவடிக்கையின் தகவல் சப்கோர்ட்டாருக்குத் தெரிந்த உடன் மறு உத்தரவு மட்டும் ஏலம் போடக்கூடாதென்று மறியல் உத்தரவளித்துவிட்டார்கள். இது நியாயமான முறையாகும். ஏனெனில் ஏல நடவடிக்கையெடுக்கும் டிக்கிரீதாரனுடையகடன் பாக்கியும் இன்ஸால்வென்ஸி ஷெடியூலில் தாகலாகியிருக்கவேண்டும். ஆகவே வசூலாகும் தொகையில் ஷை டிக்கிரீதாரனுக்கும் பங்குவிகிதம்

கிடைக்கும். ஆகையால் ஆக்டின் 49-வது பிரிவின்படி சப்கோர்ட்டார் ஏலத்தை நிறுத்தினது நியாயமே. அப்படிக்கு ஜப்தியான சொத்து ஏலமாகவேண்டுமானால் அபிஷியல் அஸைனியும் கோர்ட்டில் ஆஜராகி அவரையும் கட்டுப்படுத்தத்தக்கதாய் ஏலம் நடக்கவேண்டும். அதற்காக ஸி பி ஸி 248-வது பிரிவின்படி அவருக்கு நோடீஸ் ஸர்வ் செய்யவேண்டும். ஸி பி ஸி 32-வது பிரிவின்படி ஒரு கேசானது ஈரங்கியாகுமுன் அல்லது பைசல் டிக்கிரியளிக்கப்படுமுன் கோர்ட்டார் கக்ஷிக்காரர்களுடைய கோறிக்கையின்பேரிலாவது அல்லது கோர்ட்டார் சுயந்தானுஸாரப்படியும் யாதொருவனை பிரதிவாதியாகச் சேர்க்கலாம். 372-வது பிரிவின்படி தும் தாவா சொத்தில் பாத்தியதையானது பார்ட்டியாய்ச் சேர்க்கப்பட்டவனிடமிருந்து அந்நியனுக்கு மாறிப்போனால் அவ்வந்நியனைப் பார்ட்டியாகச் சேர்க்கலாம். இவ்விரண்டு பிரிவுகளும் டிக்கிரியாகுமுன் செய்யக்கூடிய முறைகளாகும். அவைகளை டிக்கிரியானபிறகு அனுசரிக்கத் தகுமென்றாலும் அந்தப்படி அபிஷியல் அஸைனியைப் பார்ட்டியாகச் சேர்த்து யாதொரு நடவடிக்கை நடத்தினதாகத் துலங்கவில்லை. டிக்கிரி பாக்கிதாருடைய பெயருக்கு பதிலாக அபிஷியல் அஸைனியின் பெயரை ரிகார்டில் கொண்டுவரக் கூடாதென்று நோடீஸ் பிறந்து அது சர்வாகியும் அவர் ஆஜராகவில்லை. இந்தநோடீஸ் சரியான நோடீஸல்ல. டிக்கிரியை "உங்கள் பேரில் ஏன் நிறைவேற்றக் கூடாதென்று" காரணம் சொல்லும் பொருட்டு நோடீஸ் பிறந்திருக்கவேண்டும். இவ்விதமான நோடீஸ் சர்வாகியிருந்தால் அபிஷியல் அஸைனி அவர்கள் ஆஜராகி ஏன் தாவா சொத்தை ஏலம்போடக்கூடாதென்பதற்குக் காரணம் சரியானபடி சொல்லியிருக்கக்கூடும். அதாவது தாவா சொத்தானது எல்லா பாக்கிதார்களுடைய நன்மைக்காக இன்ஸால்வென்ஸி கோர்ட்டாரால் தன் பேருக்கு மாற்றப்பட்டிருக்கிறதாகவும் அதை சப்கோர்ட்டார் ஒரு பாக்கிதாருடைய கோறிக்கையின் பேரில் ஒருவனுடைய டிக்கிரீத்தொகைக்கு மட்டும் செல்லாகும் பொருட்டு ஏலம் போடக்கூடாதென்றும் எடுத்துச் சொல்லியிருப்பார். பெயரைக் குறிப்பதாய் நோடீஸ் வந்ததினிமித்தம் அவர் ஆஜராகவில்லை போலும். பின்னால் வேறு அறிக்கை ஏதாகிலும் வருமென்று எதிர்பார்த்திருந்திருப்பார். அப்படி யாதொன்றும் காணப்படாதபடியால் ரூல்படிக்கு அபிஷியல் அஸைனியவர்கள் நடந்திருக்கிறார்கள். அதாவது தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டார்கள். இந்தக்கேஸில் மேல்கண்ட விதமான நோடீஸ் சர்வான பிறகு வேறு யாதொரு தகவலும் கொடுக்கப்படாமல் ஜப்தியான சொத்து ஏலம் போடப்பட்டிருக்கிறது. அவ்வித ஏலம் அபிஷியல் அஸைனியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் நோடீஸ் சரியானதாக பாவிக்கப்பட்டபோதிலும், அது சர்வான பிறகு அவருடைய பெயரை ரிகார்ட்டில் பதிந்து அதன் பின் வேறு சமமன்ஸ் அனுப்பி ஏலம் போடுவதில் ஆக்ஷேபனையிருந்தால் தெரிவிக்கும்படி கட்டளையிட்டிருக்க வேண்டும். இதுதான் 32-வது பிரிவில் சொல்லப்பட்ட முறை அவ்விதமான சம்மன்ஸ சர்வ் செய்யப்படவுமில்லை. 372-வது பிரிவின்படி மேல் நடத்த உத்தரவு பெற்றதாகவும் காணப்படவில்லை. ஆகையால ஏலம் நடந்த தகவல் அபிஷியல் அஸைனிக்குத் தெரியாதென்றே சொல்லலாம். 291-வது பிரிவின்படி இடையில் ஒருவனைப் பார்ட்டியாகச் சேர்த்தால் புதிதாய் ஏல இஸ்தியார் விளம்பரம் செய்யவேண்டும். அதுவும் நடந்ததாகக் காணப்படவில்லை. ஏலமாகி அது உறுதி செய்யப்பட்டு ஏல ஸர்டிபிகேட்டும் பிறந்துவிட்டது. இவ்வித ஏலம் செல்லாதென்றும் ஒழுங்கீனமானதென்றும் சொல்லவேண்டும். சொத்து அபிஷியல் அஸைனிக்குச் சென்றபிறகு ஏலம்போடவே கூடாது. ஜப்திசெய்த டிக்கிரிபாக்கிதாருக்கு அந்த சொத்தில் யாதொருஹக்கும் ஏற்படாதபடியால் ஏலம்போட்டு மற்ற பாக்கிதார்களுக்கு விரோதமாக ஒரு பாக்கிதாருக்கு மட்டும் அதில் ஹக்கு பாத்தியதை உண்டாக்கக் கூடாது. அபிஷியல் அஸைனியைக் கட்டுப்படுத்தத் தக்கதாய் ஏலநடவடிக்கை ஏற்படவுமில்லை. ஏலம் நடக்கும்பொழுது டிக்கிரீ பாக்கிதாரனுக்கு ஏல சொத்தில் யாதொரு பாத்தியதையுமில்லை. ஆகவே இவ்வித ஏலம் நிஷ்பிரயோஜனமாகும்.

பிரதிவாதிகளுககாக 25 பம்பாய் 389 எடுத்துக்காட்டப்பட்டது, அந்தக்கேஸின் விஷயங்கள் தாவாகேசுக்கு ஏற்றவைகளல்ல. அந்தக்



கேஸில், காலஞ்சென்ற டிக்கிரிபாக்கிதாரரின் வாரிஸ்பேரில் ஏலநோடீஸ் ஸர்வாச்சுது. கோர்ட்டாரும் ஷை யான்தான் சரியான வாரிஸ் என்று தீர்மானித்தார்கள். ஆகவே வாரிஸ்தார் அவனல்லவென்று பின்னால் ஏற்பட்டபோதிலும் ஏலம் பிசகல்லவென்றும் ஏலம்போட கோர்ட்டாருக்கு அதிகார வரம்பிருந்ததாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏலமெடுத்தவர்களுக்கும் மேற்கூறிய ஒழுங்கீனம் அதாவது தப்பான வாரிஸ் பேரில் நோடீஸ் ஸர்வான விஷயம் தெரியவராது. ஆகவே சட்ட முறையின்படி ரத்தானொழிய அந்த ஏலம் பிசகல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசானது முற்றிலும் வேறு விஷயமாகும். சரியான நோடீஸும் இல்லை. ஏலமெடுத்த பிரதிவாதிகளுக்கு ஏல நடவடிக்கையின் ஒழுங்கீன முறைகள் நன்றாய்த் தெரியும். ஆகையால் அதனால் வரும் பலனுக்கு அவர்கள் பிணைப்படவேண்டும்.

பிரதிவாதிக்காக, தாவா சொத்தின் ஒரு அம்சத்தைப்பற்றி வாதியின் தாவா காலாவதிதோஷமென்று வாதிக்கப்பட்டது. ஆனால் இந்தப்பாயிண்டு கீழ்கோர்ட்டுகளில் பிரஸ்தாபிக்கப்படவில்லை. அதைப்பற்றி இஷ்யூவுமில்லை. ஹைகோர்ட் அப்பீல் கிரௌண்டிலும் அது பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஒரு கருவியின் தன்மையைப் பற்றி விஜாரித்து இந்த பாயிண்டைப்பற்றித் தீர்மானம் கொடுக்கவேண்டியதாகும். அவ்விஜாரணைசெய்ய இது காலமல்ல. ஆகையால் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்க தல்லவென்று தீர்மானிக்கபபட்டு வாதிக்கனுகூலமாய் டிக்கிரியளிக்கப்பட்டது. இன்ஸால்வென்ஸி கோர்ட்டாருடைய உத்தரவுப்படி அபிஷியல் அஸைனியவர்கள் போட்ட ஏலம் மேலானதென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 159

:O:

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்

:O:

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் & ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யர்

C R P 35 of 1913–17 ஆகஸ்ட் 1914

மகாண இன்ஸால்வென்ஸி ஆக்ட் 22-வது பிரிவின்படி அபிஷியல் ரிஸீவர் செய்யும் யாதொரு உத்தரவின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு ஆக்ஷேபனை விண்ணப்பம் செய்துகொள்ள 21 நாட்கள் வாய்தா ஏற்பட்டிருக்கின்றன. ரிஸீவர் செய்த உத்தரவுக்கு நகல் வாங்க ஏற்படும் காலமானது 21-நாள் வாய்தாக் கணக்கில்கூடிவராதென்று தீர்மானிக்கப்பட்டது. 34 மதராஸ் 505-ஐப் பார்க்கவும். இவ்வித விண்ணப்பம் அப்பீல் அல்லது ரிவிஷன் முறையாக பாவிக்கப்படக்கூடாதென்று சொல்லப்பட்டது.

:O:

C M S A 44 of 1913–17 ஆகஸ்ட் 1914

ஸிவில் புரோஸிஜர் கோட் ஆர்டர் 21-ரூல் 89-ன்படிக்கு ஒரு ஏலத்தை ரத்து செய்யும்பொருட்டு ஏலமான தேதிமுதல் 30 தினங்களுக்குள் கிறயதாரனுக்குறிய 100-க்கு 5 விகிதத்தொகையையும் வாதிக்குச் சேரவேண்டிய டிக்கிரீத்தொகை பூராவையும் கோர்ட்டில் டிபாஸிட் செய்துவிட்டால் மட்டும் பிரயோஜனமில்லை. அந்த 30நாள் வாய்தாவுக்குள் தொகையையும் கட்டி வாய்மொழியாக அல்லது எழுத்துமூலமாய் ஏலத்தை ரத்து செய்யும்படி விண்ணப்பம் கொடுக்கப்படவேண்டுமென்றும், இந்த சட்டப் பிரிவை அனுசரித்து கோர்ட்டார் செய்யும் உத்தரவின்பேரில் 2-வது மனு அப்பீல் கிடையாதென்றும், தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ நேபியர்.

S A 632 of 1913-13 ஆகஸ்ட் 1914

ஒரு நிலத்திற்குச்செலுத்தவேண்டிய தண்ணீர் தீர்வைபாக்கிக்காகவே நிலத்தை ரெவினியூ அதிகாரிகள் ஏலம் போட்டால் அவ்விதஏலத்தால்முந்திய வில்லங்கம் யாவற்றும் சுத்தியாகிவிடும், 1874ம் வருஷத்திய IIவது ஆக்டில் மேற்கூறிய சட்ட விதியானது அதாவது முந்திய வில்லங்கத்தை சுத்தி செய்யும் முறையானது ரெவனியூ பாக்கி விஷயமாய் ஏற்பட்டிருக்க, தண்ணீர் தீர்வையும் ரெவினியூ பாகியென்று மதிக்கப்படவேண்டும். ஆகையால் ஒரு நிலத்தை ஒத்திக்கு அனுபவிக்கிறவன் தண்ணீர் தீர்வை பாக்கி ஏற்பட்டால் நிலம் ரெவினியூ அதிகாரிகளால் ஏலம் போடப்படாமல் தன்னுடைய ஒத்திபாத்தியதை

கெடாமலிருக்கும்பொருட்டு அந்த தீர்வையைச் செலுத்த லாயக்குள்ளவனாகிறான். அப்படிச் செலுத்தின தொகையை ஒத்தித் தொகையுடன் சேர்த்து அடமானம் வைத்தவனிடமிருந்து வசூலிக்க நியாயமுண்டு. அவ்விதமாய் ஏற்படும் மொத்த பாக்கி செல்லாகுமட்டும் ஒத்திதார் நிலத்தைசுவாதீனமடைந்திருக்கலாம். ப்ராபர்டி ஆக்ட் 72வது பிரிவின் கிளாஸ் B, அல்லது 76-வதுபிரிவின்கிளாஸ்C இவைகளில் சொன்னகாரணங்களுக்காக ஒத்திதார் சர்க்கார் தீர்வைபாக்கியைசொந்தக்காரனுக்கு பதிலாய்ச் செலுத்தி நிலம் கெட்டு போகமலும் தன்னுடைய ஒத்தி பாத்தியத்திற்குக் குறைவுண்டாகாமலும் நிலத்தைப் பாதுகார்க்க வேண்டியதாகும்.

பத்திரத்தில் கண்ட ஷரத்துப்படிக்கு நிலமானது ஒத்திதாரனுடைய சுவாதீனத்தில் விடப்பட்டு அதில் வரும் மாசூலிலிருந்து ஒத்திக்கடன் தொகை பூராவும் தீரவேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டால் அவ்விதமாய் ஒத்திக்கடன் தீருமுன் சொந்தக்காரன் ஒத்திதொகையை மொத்தமாய்ச் செலுத்திவிட்டு நிலத்தைச் சுவாதீனமடையக்கூடாது. அதாவது மாசூல் வருமானத்திலிருந்து கடன் தீருமட்டும் நிலம் ஒத்திதாரனுடைய சுவாதீனத்திலேயே இருக்கவேண்டும்.

—:O:—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

S A 1554 of 1912—18 ஆகஸ்ட் 1914.

பனகுடியிலுள்ள வல்லவாஞ்சர்களென்ற ஒரு ஜாதியார் அவ்வூரிலுள்ள சிவன்கோவிலுக்குள் மற்ற ஜாதியார் பிரவேசிப்பது போலவே தாங்களும் செல்ல பாத்தியமுண்டென்று தீர்மானமடையும்பொருட்டு தாவா செய்ததில் மற்ற ஜாதியார்களைப்போல வாதிகள் ஷை சிவன்கோவிலுக்குள் போகக்கூடாமல் விலக்கப்பட்டவர்களென்று ருஜூப்படுத்த வேண்டிய பொருப்பு பிரதிவாதிகளைச் சேர்ந்ததாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———

S A 79 to 82, 278, 279, & 281 to 281 of 1913 18 ஆகஸ்ட் 1914.

எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின்படிக்கு நிலச்சுவான்தாரின் கீழுள்ள டெனெண்டானவன் நிலத்தீர்வையை அதாவது விதிக்கப்படும் வருமான விகிதத்தைச் செலுத்தக்கடமைப் பட்டவனேயொழிய அந்த நிலத்திற்குறிய சர்க்கார் தீர்வையை (லாண்ட் செஸ், வில்லேஜ் செஸ் முதலிய சர்க்கார் தீர்வையைச்) செலுத்தக் கடமைப்பட்டவனல்ல. அப்படிக்குள்ள தீர்வையை டெனெண்டுகள் வெகு காலமாய்ச் செலுத்திவந்த விஷயம் திரும்பவும் அப்படி வசூலிக்க ஆதாரமோகாது. செஸ் என்பது வருமானவிகிதத்தை (ரெண்டை)ச் சேர்ந்ததாகாது. டெனெண்டுகள் செலுத்தியிருந்தால் அதை நிலச்சுவான்தாரிடமிருந்து வசூலிக்க நியாயமுண்டு. டெனண்டு யாருடைய நிர்பந்தமும் கட்டாயமும் அன்னியில் ஸ்வய இச்சையாகச் செலுத்தியிருந்தால் அத்தொகையைநிலச்சுவான்தாரிடமிருந்துவாபிஸ்அடைய லாயக்கில்லை,

—:O:—

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

S. A. 2188 of 1912. 18 ஆகஸ்ட் 1913

பிரதிவாதியின்பேரில் ஏற்பட்ட ஒரு வழக்கில் வாதி செய்த வேலைகளுக்குப் பிரதிப்பிரயோஜனமாகப் பிரதிவாதி ஒரு நிலத்தை வாதிக்கு விக்கிரயம் செய்துகொடுப்பதாய் ஒப்புக்கொண்டும் அந்த ஒப்பந்தப்படி சாஸனம் செய்து கொடுக்காததினால் வாதி பிரதிவாதியின்பேரில் ஒப்பந்தத்தை நிறைவேற்றும்பொருட்டு தாவா செய்ததில் டி-மு கோர்ட்டாரும் அப்பீல் கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் வாதி செய்த வேலையின் மதிப்புக்கும் சாஸனம் செய்வதாய் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலத்தின் மதிப்புக்கும் அளவுக்கு மிஞ்சின தாரதம்மியமிருப்பதால் வாதிக்குப் பரிகாரம் அளிக்கநியாயமில்லையென்று தீர்மானிக்கவே, வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 28 (A)-வது பிரிவின்படி கீழ் கோர்ட்டார் வாதிக்குப் பரிகாரம் அளிக்க மறுத்தது சரியான தீர்மானமென்று 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. 28 (A)-ன் அம்சமாவது:— ஒப்பந்த காலத்திலிருக்கும் சந்தர்ப்பங்களை உத்தேசித்து பிரதிப் பிரயோஜனமானது மிகவும் தகுதியற்றதாகவும் மோசத்தாலும் அல்லது சலுகையாலும் ஒப்பந்தம் செய்து முடிக்கப் பட்டதாகவும் ஏற்பட்டால் கோர்ட்டார் அந்த



ஒப்பந்தத்தைநிறைவேற்றும்படி டிக்கிரியளிக்கக் கூடாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

C. M. A. 251 of 1912—19 ஆகஸ்ட் 1914.

ஒரு டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக ஸி. பி. ஸி. 48 (A) வது பிரிவில் ஏற்பட்டிருக்கும் 12-வருஷ காலாவதியானது டிக்கிரியானதேதி முதல் கணிக்கப்படவேண்டும். 36 பம்பாய் 368-ல் டிக்கிரியை நிறைவேற்றும் அதிகாரம் உண்டான தேதி முதல் 12 - வருஷ காலாவதி கணிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு டிக்கிரியில் யாதொரு தொகையை அல்லது ஒரு சொத்தைக் கொடுத்துவிடும்படி அல்லது யாதொரு காரியத்தைசெய்து முடிக்கும்படி கட்டளையிட்டு அதற்கு ஒரு கால த்தவணை ஏற்படுத்தியிருந்தால் அந்தத்தவணை கழியுமட்டும் டிக்கிரியை நிறைவேற்ற நியாய மேற்படாதபடியால் இவ்வித சந்தர்ப்பங்களை உத்தேசித்து பம்பாய் ஹைகோர்ட்டார் 36 பம்பாயில் 12-வருஷ காலாவதியை டிக்கிரியை நிறைவேற்ற லாயக்குண்டான தேதி முதல் கணிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். 48 (A) யின் வசனங்களுக்கு பம்பாய் ஹைகோர்ட்டார் கொடுக்கிற அர்த்தமானது மிகவும் நீதபக்ஷமாய் பிரயோகிக்கப்பட்டதாகச் சொல்லப்படவேண்டும். அந்தக்கருத்தின் நியாயமானது இந்தக்கேசைத் தீர்மானித்த ஹானரபில் ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களால் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் அபிப்பிராயத்தில் பம்பாய் ஹைகோர்ட்டாருடைய தீர்மான அபிப்பிராயமானது நீதி முறையை அநுசரித்ததாயிருக்கிறதென்று சொல்லப்பட்டு இந்தக்கேசின் அம்சங்களைப்பற்றிக் கொடுத்த தீர்ப்பில் பின்வரும் நியாங்கள் தீர்மானிக்கப்பட்டன:— கோர்ட்டாரால் யாதொரு தஸ்தவேஜானதுபோக்கடிக்கப்பட்டாலும் அல்லது அழிக்கப்பட்டாலும் அதைக் கோர்ட்டார் திரும்பவும் உற்பத்தி செய்யலாமென்றும், தவிர ஒரு பிரதிவாதி டிக்கிரியில் கட்டளையிடப்பட்ட பிரகாரம் வாதிக்கு ஒரு டிரான்ஸ்பர் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டியதாயிருக்க அவ்விதமாய்ப் பிரதிவாதி நடக்காத காரணத்தால் வாதி டிக்கிரியளித்த கோர்ட்டில் டிக்கிரியின் அந்த பாகத்தை நிறைவேற்றும்படி விண்ணப்பம் கொடுத்து உத்தரவுபெற்றும் அந்த தஸ்தவேஜானது எழுதி முடிக்கப்படாத காரணத்தால் வாதி திரும்பவும் அதைப்பற்றிக் கொடுத்த விண்ணப்பம் 48-வது பிரிவில் கண்ட 12-வருஷ காலாவதி கடந்த பின், கொடுக்கப்பட்டதில் இந்த விண்ணப்பமானது முன் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் தொடர்ச்சியான நடவடிக்கையென்றும் ஆகவே முந்திய விண்ணப்பத்திற்குக் காலாவதி தோஷமில்லாதபடியால் இந்த விண்ணப்பத்தை காலாவதி தோஷத்தால் தள்ளுபடிசெய்யக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்&ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யர்

C. R. P. 569 to 571 of 1911-20 ஆகஸ்ட் 1914

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டு 1908-ம் வருஷம் ஜூலை 1-ல் அமோதுக்கு வந்திருக்க அதற்கு முந்திய தினமாகிய 1908 ஜூன் 30-ல் ஒரு பிராது ஸிவில் கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டது. ஸிவில் கோர்ட்டார் 21-9-08-ல் அந்தப்பிராதை சரியான கோர்ட்டில் தாகல் செய்யும்படி உத்தரவளித்து வாபிஸ் செய்து விட்டார்கள். வாபிஸ் ஆனகாலத்தில் எஸ்டேட்ஸ் ஆக்டு அமோதுக்கு வந்து விட்டதும் தவிர பிராதின் தன்மையும் ஷை ஆக்டின் அம்சத்திலடங்கியதாயிருந்தது. பிராதை வாபிஸ் செய்த உத்தரவின்பேரில் ஆர்டர் 43-ரூல் 1-(a)-ன்படி அப்பீல் செய்யப்பட்டதில் இந்தப்பிராதை ஸிவில் கோர்ட்டார் விசாரிக்க வேண்டியதென்றும் ரெவினியூ கோர்ட்டார் விசாரிக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் வாதி ஷை பிராதை டி-மு கோர்ட்டில் தாகல் செய்ததில் டி-மு கோர்ட்டார் பிராதை விசாரிக்கும்பொருட்டு ஏற்படுத்தின இஷ்யூக்களில் ஸிவில் கோர்ட்டாருடைய அதிகார வரம்பைப்பற்றியும் ஒரு இஷ்யூ ஏற்பட்டது. அந்த இஷ்யூ ஏற்படுத்தக் கூடாதென்று வாதி ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில், அப்பீல் கோர்ட்டார் இந்த தாவாவை ஸிவில் கோர்ட்டார் விசாரிக்கத் தகுந்ததென்று தீர்மானம் செய்திருக்க அந்த உத்தரவின் நியாய

த்தை டி-மு கோர்ட்டார் சந்தேகித்து பைசலான ஒரு பாயிண்டைப்பற்றித் திரும்பவும் விவாதம் உண்டாக்குவது சரியல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அதிகாரவரம்பைப்பற்றிய இஷ்யூவானது எடுபட்டு மற்ற இஷ்யூக்கள் மட்டும் விஜாரணையாக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

### ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ்குமாரஸாமி சாஸ்திரிகள்

### S. A. 218 of 1912—20 ஆகஸ்ட் 1914.

பப்ளிக் ரஸ்தாக்களும் சாலை மார்க்கங்களும் கவர்ன்மெண்டாருடைய ஆதீனத்திலுள்ளதென்று அனுமானிக்கவேண்டிய கடமை பரிஷ்காரமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு பார்ட்டியானவன் 40 வருஷங்களுக்கு மேலாக கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையை திரஸ்கரித்து சுவாதீனமடைந்து அனுபவித்து வந்தால் அந்தப்பார்ட்டியினுடைய அனுபோகமும் சுவாதீனமும் இன்னும் அதிகமான காலமாகத் தொடர்ந்து வருவதாய் அனுமானிக்கப்படவேண்டும். அப்படிக்கல்லவென்று ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பு கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாகும்.

---

### ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ்பென்ஸன்

திருச்சினப்பள்ளி ஜில்லா

### S. A. No. 268 of 1911-30 மார்ச்சு 1914

பிரஸன்ன வெங்கடாசல செட்டியார்

*Vs*

திருச்சிஜில்லா கலெக்டர்.

ஒரு தரும சொத்தைப் பரிபாலனம் செய்து வந்த டிரஸ்டியை ஸி. பி. ஸி. 92, 93-வது பிரிவின்படி நீக்கிவிட்டு வேறு டிரஸ்டியை நியமிக்க வேண்டுமென்றும் அந்த டிரஸ்டியால் எழுதிக்கொடுக்கப்பட்ட சில தர்ம சொத்துக்களின் விக்கிறய நடவடிக்கைகள் சட்ட விரோதமென்றும் அந்த விக்கிறயங்கள் பயனற்றதென்றும் தீர்மானமடையும் பொருட்டும் திருச்சினப்பள்ளி ஜில்லா கலெக்டரவர்கள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அசல் வழக்கெடுத்து 1-ம் பிரதிவாதியாகிய டிரஸ்டியின்பேரிலும் 2-ம் பிரதிவாதியாகிய கிறயம் பெற்றவர்பேரிலும் டிக்கிரிபெற்றார்கள். அதன்பேரில் இரண்டு பிரதிவாதிகளும் ஹைகோர்ட்டுக்குத் தனித்தனியாய் அப்பீல் செய்தார்கள். 1ம் பிரதிவாதி அப்பீல் பெண்டிங்கிலிருக்கும் பொழுதே இறந்து போனார். அவருடைய வாரிஸ்கள் யாரும் ரிகார்டில் சேர்க்கப்படாத காரணத்தால் 1-ம் பிரதிவாதியின் அப்பீல் காலக்கிரமத்தால் அடங்கிப் போச்சுது. ஹைகோர்ட்டார் அந்த அப்பீலை முறைப்படிக்கு டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். 2-ம் பிரதிவாதியின் அப்பீல் மட்டும் நடைபெற்றுவந்தது.

இந்த அப்பீலிலும் 1-ம் பிரதிவாதி பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டிருந்தமையாலும் 1ம் பிரதிவாதி இறந்தபின் அவருடைய வாரிஸ்களை ரிகார்டில் கொண்டுவரப்படாததினாலும் ஸி. பி. ஸி. ஆர்டர் 22-ன்படிக்கு இந்த அப்பீலும் அடங்கிப்போகவேண்டுமென்று வாதிக்காக ஆக்ஷேபிக்கப்பட்டது.

ஹைகோர்ட்டார் அந்த ஆக்ஷேபனை சரியானதல்லவெனத் தீர்மானித்து, 2-ம் பிரதிவாதியின் பேரில் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் உண்டென்பதாக பாவித்துக்கொண்டாலும் அதற்குக் காலாவதி தோஷம் வந்துவிட்டதென்று சொல்லி 2ம் பிரதிவாதிக்கனுகூலமாய் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்மானத்தில் ஹானரபில் ஜஸ்டிஸ் டையாப்ஜியவர்கள் சொன்ன காரணங்களின் சுருக்கமாவது:-

2ம் பிரதிவாதியின் அப்பீலை மேல்நடத்த நியாயமில்லையென்ற வாதியின் ஆக்ஷேபனையைக் கவனிக்குமிடத்து அப்பீல்பிரதிவாதிகளில் ஒருவர் இறந்தபின் அவருடைய வாரிஸ்கள் ரிகார்டில் கொண்டுவரப்படாதபோதிலும் 1-ம் பிரதிவாதிக்குரிய தாவா பாத்தியமானது 2ம்பிரதிவாதியாகிய அப்பீல் வாதிக்குச் சென்றுவிட்டால் அப்பீல் மேல் நடத்தப்படலாமென்று சொல்லவேண்டும். ஆர்டர் 22-ல் ஒரு தாவாவை நடத்தும் பாத்தியதையானது வாதி இறந்தபின் வேறு யாருக்கும் மாறிவிடும் பட்சத்தில் அந்த பாத்தியதையை அடைகிற பார்டி தாவாவை மேல்நடத்தலாமென்றும் இல்லாவிடில் தாவா நிலையற்றுப்போகிறதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்டரின் அம்சங்களை அப்பீல்களுக்கும் பிரயோகித்துப்பார்த்தால் "தாவா செய்யும் பாத்தியதை" என்ற வசனங்களை "கோர்ட்டில் வியவகாரத்தை



நடத்திப் பரிகாரமடையும் பாத்தியதை" என்று அர்த்தப்படுத்தவேண்டியதாகும். அப்பீல் செய்து பைசல் தீர்மானம் அடையும் பாத்தியதையும் அக்கருத்திலடங்கிப்போகிறது. ஆர்டர் 22ரூல் 11-ல் இவ்விதமான கருத்து ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படவில்லை. ஆர்டர் 22-ல் உள்ள விதிகளில் வாதி என்ற வசனத்திற்கு அப்பீல் வாதியும், பிரதிவாதி என்றால் அப்பீல் பிரதிவாதியும் தாவா என்ற பதத்திற்கு அப்பீலும் அடங்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 11-வது ரூலின் அம்சத்தை மற்ற ரூல்களுக்கு உபயோகப்படுத்துவதில் "தாவா செய்யும் பாத்தியதை" என்ற வசனங்களுக்கு "ஒருவியவகாரம் நடத்திப் பைசல் பரிகாரம் அடையும் பாத்தியதை" (அதாவது அப்பீல் செய்யும் பாத்தியதையும்) அடங்கியதாகச் சொல்லப்படவேண்டும். இல்லாவிடில் அப்பீல்களின் விஷயமாய் ஆர்டர் 22-ல் உள்ள ரூல்கள் பயனற்றதாகும். அப்பொழுது 11-வது ரூல் ஏற்பட்டதும் உபயோகமில்லாமற் போகும். ஆகவே 11-வது ரூலில் தாவா செய்யும் பாத்தியதை என்ற வசனத்திற்கு மேற்கூறிய அப்பீல் நடத்தும் பாத்தியதையும் அடங்கத்தக்க விதமான அர்த்தம் கொடுக்கப்படவேண்டும்." அப்படியானால் 1-ம் பிரதிவாதி இறந்தபின் அவருக்கிருந்த வியவகார பாத்தியதையானது 2-ம் பிரதிவாதிக்குச் சென்றுவிட்டதாக ஏற்பட்டால் 2-ம் பிரதிவாதி செய்த இந்த அப்பீல் மேல்நடத்தப்படலாம். 26 பம்பாய் 597-ன் 602, 603, 607-ஐயும், 26 பம்பாய் 499-யும் பார்க்கவும்.

இந்த அப்பீலில் 2-ம் பிரதிவாதி, தான் இந்த தாவாவில் பார்ட்டியாகச் சேர்க்கப்படவேண்டிய அவசியமில்லையென்றும், ரிகார்டிலிருந்து தன்னுடைய பெயரை விலக்கப்படவேண்டுமென்றும் அப்படி வாதிக்குத் தன்மேல் யாதொரு வியாஜ்ஜியமூலம் உண்டானால் அதற்குக் காலாவதிதோஷம் வந்துவிட்டதென்றும் வாதம் செய்கிறார். அவர் அப்பீலில்தேடும் பரிகாரம்அவ்வளவுதான். 2-ம் பிரதிவாதி தேடும் மேற்கூறிய பரிகாரமானது ஸ்வயமாய் ஏற்பட்டதேயொழிய 1-ம்பிரதிவாதியின் பரிகாரத்திற்குச் சம்பந்தப்பட்டதல்ல. 2-ம் பிரதிவாதி இந்தப் பரிகாரத்தை வாதியின் பேரில் மட்டும் தான் தேட நியாயமுண்டு. 1-ம் பிரதிவாதியின்பேரில் தேடத்தக்க பரிகாரம் யாதொன்றுமில்லை. ஆகையால் 1-ம் பிரதிவாதி காலஞ்சென்றமையால் 2-ம் பிரதிவாதியின் பரிகார முறைக்கு யாதொரு பாதகமும் ஏற்படவில்லை. 1-ம் பிரதிவாதியின் வாரிஸை ரிகார்டில் கொண்டுவராமலே 2-ம் பிரதிவாதிக்கு அனுகூலமாகடிக்கிரீயளித்து கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்றமுடியும். 2-ம் பிரதிவாதி அப்பீலில்தேடும்பரிகாரத்தை அளிப்பதினால் 1-ம் பிரதிவாதியின் வாரிஸ்களுக்கு யாதொரு பாதகமும் ஏற்பட நியாயமில்லை. 30 மதராஸ் 67, 68, 69-ஐப் பார்க்கவும்.

ஜில்லா கோர்ட் தீர்மானத்தில் 2-ம் பிரதிவாதியின் விக்கிறயம் செல்லாதென்று ஏற்பட்டபின் 2-ம் பிரதிவாதிக்கு நேரும் நஷ்டத்திற்காக 1-ம் பிரதிவாதியின்பேரில் தொடர நியாயமுண்டென்று சொல்லப்பட்டிருப்பதால் 1-ம் பிரதிவாதிக்கு இந்த அப்பீல் ஜயமாகவேண்டியதைப்பற்றி, அக்கரையுண்டாக வேண்டுமென்று சொல்லப்பட்டு ஆகையால் அவனுடைய வாரிஸ்களைப் பார்ட்டியாக ரிகார்டில் கொண்டுவரப்படாதது பிசகென்று வாதிக்கப்படுகிறது. இந்த வாதம் முற்றிலும் பிரயோஜனமற்றதாகும். [2-ம் பிரதிவாதியின்பேரில் வாதி கேட்கும் பரிகாரத்தால் 2-ம் பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்பட நியாயமில்லை. சுவாதீனம் 2-ம் பிரதிவாதியிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்படுமட்டும் அவருக்கு நஷ்டப்பரிகாரம் ஏற்பட நியாயமில்லை. வாதி 2-ம் பிரதிவாதியின் பேரில் டிக்லேரேஷன் பரிகாரம் கேட்கிறாரேயொழிய சுவாதீனத்திற்காக பிராதில் பரிகாரம் கேட்கப்படவில்லை. ஆகவே 2-ம் பிரதிவாதிக்கு 1-ம் பிரதிவாதியின் பேரில் நஷ்டபரிகாரம் தேட ஜில்லா கோர்ட் தீர்மானத்தால் அவசியம் ஏற்படாதென்று சொல்லவேண்டும்.]

ஆகையால் வாதியின் ஆக்ஷேபனை பிரயோஜனமில்லை. 2-ம் பிரதிவாதிக்காக பற்பல லா பாயிண்டுகள் எடுத்துப் பேசப்பட்டன. அவைகளில் காலாவதி பாயிண்டு ஒன்றைப்பற்றி யோஜித்தால் போதுமானது. ஏனெனில் வாதியின் பிராது 2-ம் பிரதிவாதியைப் பற்றின மட்டில் காலாவதி தோஷமென்று ஏற்பட்டால் மற்ற பாயிண்டுகளைப்பற்றி யோஜிப்ப தனவசியமாகும்.

வாதிக்கு 2-ம் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியமூல முண்டாவென்று யாதொரு அபிப்பிரா

யமும் சொல்லாமல் இந்தக்கேசின் சந்தர்ப்பத்தை உத்தேசித்து வியாஜ்ஜிய மூல முண்டென்றே வைத்துக்கொண்டு காலாவதி பாயின்டை கவனித்துப் பார்ப்போம். வாதி இந்தப்பிராதை ஸி. பி. ஸி. 92, 93-வது பிரிவுகளின்படி கொடுத்தபோதிலும் டிரஸ்டியினிடமிருந்து நில பாத்தியதையை அடைந்த 2-ம் பிரதிவாதியின்பேரில் வாதி பிராதில் கண்டவிதமான பரிகாரம் தேடலாமென்று வைத்துக்கொள்வோம். 2-ம் பிரதிவாதியின் வசமிருக்கும் தர்ம சொத்தைப்பற்றி ஜில்லா கலக்டர் தேடும் பரிகாரத்திற்கு காலாவதி ஆக்ட் 10 வது பிரிவின்படி வரம்தாவே கிடையாது. அதாவது எக்காலத்திலும் இவ்வித பரிகாரம் தேடலாமென்று சொல்லப்படுகிறது. 2ம் பிரதிவாதி தர்ம சொத்துக்களைப் பிரதிப்பிரயோஜனம் செலுத்தி வாங்கியிருக்கிறார். அந்தத் தீர்மானம் பிசகென்று சொல்லப்படவில்லை. கிரயம் ஈனக்கிரயமென்று சொல்லப்படவுமில்லை. ஆனல் 2-ம் பிரதிவாதி தர்ம சொத்தென்றும் 1-ம் பிரதிவாதிக்கு அதை விக்கிரயம்செய்யபாத்தியமில்லையென்றும் தெரிந்து அதைகிரயத்திற்குவாங்கினரென்றும் ஆகவே 2ம் பிரதிவாதியினுடைய விக்கிரயத்தை ரத்துசெய்வதற்குக் காலாவதி தோஷம் சொல்லக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. இந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. டிரஸ்ட் ஆக்ட் 64-வது பிரிவின்படி ஒருவன் தர்மசொத்தை சரியானவிலைகொடுத்து தர்ம சொத்தென்று தெரியாமல் நல்லெண்ணத்துடன் நம்பி விக்கிரயம் பெற்றால் அந்த சொத்தைத் திரும்பியடைய நியாயமில்லையென்று சொல்லவேண்டும். பிரதி பிரயோஜனம் யாதொன்றும் செலுத்தாமல் தர்ம சொத்தை யாதொருவன் அடைந்தால் அதைத் தொடர்ந்து வாபிஸ் அடைய காலாவதி ஆக்ட் 10 வது பிரிவின்படி காலாவதிதோஷமே கிடையாது. பிரதி பிரயோஜனம் [கிரயம்] செலுத்தியும் தர்மசொத்தென்று தெரிந்து கெட்ட எண்ணத்துடன் தர்மசொத்தைக் கிரயத்திற்கு வாங்கினல் காலாவதி ஆக்டில் ஏற்பட்டிருக்கிற காலத்தவணை கடந்தபிறகு தான் அவருக்கு அந்த சொத்தில் ஆக்ஷேபணையான பாத்தியமுண்டாகும். காலாவதி ஆக்ட் 28 வது பிரிவைப்பார்க்கவும். சொத்துக்கு பதிலாக கிரயத்தொகையானது டிரஸ்டியின் கையிலேறிவிடுகிறது. ஆகையால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட சொத்தைக் காலாவதி கெடுவுக்குப் பின்னும் வாதி அடையக்கோருவது நியாயமில்லை.

2-ம் பிரதிவாதி தாவா சொத்தை தர்ம சொத்தென்று தெரிந்து கெட்ட எண்ணத்துடன்வாங்கியதாக வைத்துக்கொண்டாலும் 120வது ஆர்டிகில்படிக்கு வாதி 6-வருஷங்களுக்குள் கிரயத்தை ரத்துசெய்யப் பரிகாரம் தேடவேண்டும். 6 வருஷ காலாவதி கிரயத்தேதிமுதல் கவனிக்கப்படவேண்டும். ஜில்லா கலக்டரவர்களுக்கு தர்ம சொத்துக்கள் விக்கிரயமாகும் தகவல் தெரிந்தமுதல் காலாவதி கணிக்கப்படவேண்டுமென்றும் சர்க்கார் அதிகாரிகளுக்கு இவ்வித நடவடிக்கைகளின் தகவலை ஜாக்கிறதையாய் விஜாரித்து அறியும் சவுகரியம் அதிகமாய் கிடையாதென்றும் சொல்லப்படுகிறது. சட்டத்தில் விதிக்கப்பட்டபிரகாரம் காலாவதியை கணிக்கவேண்டும். ஆர்டிகில் 184-ன்படி வாதி தர்மசொத்தை தூராகிருதமாய் அடைந்து அனுபவிக்கிறவன்பேரில் சுவாதீனத்திற்காக தாவா செய்திருந்தால் 12 வருஷ காலாவதியுண்டு. வாதி 92-வது பிரிவின்படி செய்த பிராதில் டிரஸ்டியிடமிருந்து கிரயம் பெற்ற 2-ம் பிரதிவாதியின்பேரில் டிக்லேரேஷன் பரிகாரம் தேடினல் அதற்கு 120-வது ஆர்டிகில்படி 6-வருஷ காலாவதி கெடுவென்று சொல்லவேண்டும். பிரதிவாதி 1889 ஜனவரி 26-ல் கிரயம் பெற்றிருக்கிறார். இந்தப்பிராது 1910ல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப் பிராது காலாவதி தோஷமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. இருதரத்தாருடைய செலவுதொகையும் தர்ம சொத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென்றும் 2-ம் பிரதிவாதியின் செலவுதொகை வசூலானபிறகு வாதியின் செலவு தொகை வசூலாகவேண்டுமென்றும் 2-ம் பிரதிவாதியால் வாதிக்குச் செலுத்தப்பட்டிருந்த கீழ்கோர்ட் செலவு தொகையை வாதி 2-ம் பிரதிவாதிக்கு வாபிஸ் செய்ய வேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் கொடுத்த தீர்மானத்தில் சொன்ன காரணச்சுருக்கமாவது:—

27 கல்கத்தா 498ன் 497-ம் பக்கத்தில் ஒரு பிரதிவாதி தாவாவில் அவசியமான பார்ட்டியாக



சேர்க்கப்பட வேண்டுமோவென்று தீர்மானிப்பதற்கு இரண்டுவித பரிட்சைசெய்து பார்க்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது (1) வாதிக்கு அந்தப் பிரதிவாதியின்பேரில் யாதொரு பரிகாரம் தேடவேண்டிய பாத்தியதை தாவாவில் ஏற்பட்டிருக்கிறதா வென்றும் (2) தாவாவில் ஏற்படும் வியவகாரங்களைத் தீர்மானிக்க அந்தப் பிரதிவாதி ஆஜராகவேண்டியது அவசியமாவென்றும் கவனித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. தாவாவில் ஏற்படும் வியவகாரங்களெல்லாம் அப்பீலில் தீர்மானிக்கப்படவேண்டிய அவசியமில்லை. ஆகவே தாவாவில் ஒரு பிரதிவாதி அவசியமான பார்ட்டியாக ஏற்பட்டாலும் அப்பீலில் அவர் பார்ட்டியாகசேர்க்கப்படவேண்டிய கட்டாயமில்லை. இந்த அப்பீலில் 2-ம் பிரதிவாதி கேட்கும் பரிகாரங்கள் 1ம் பிரதிவாதியின் வாரிஸ்கள் பார்ட்டியாக சேர்க்கப்படாமலே தேடிக்கொள்ளப்படலாம். வாதியின் ஆக்ஷேபனை பிரயோஜனமில்லை.

ஸி பி ஸி 92-வது பிரிவின்படி ஒரு டிரஸ்டியை நீக்கும் அதிகாரம் கோர்ட்டாருக்கு ஏற்பட்டிருக்கிறது. புது கோட் நமோதுக்கு வருமுன் அது விஷயமாய்த் தீர்மானங்கள் வித்தியாஸமாக ஏற்பட்டிருந்தன. அதாவது 14 மதராஸ் 186, 20 அலகபாத் 46, 21 அலகபாத் 200, 24 கல்கத்தா 418 இவைகளில் கோர்ட்டாருக்கு டிரஸ்டியை நீக்க அதிகார முண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 12 மதராஸ் 157, 17 மதராஸ் 462, 33 கல்கத்தா 789, 2கல்கத்தா லா ஜர்னல் 431 இவைகளில் கோர்ட்டாருக்கு அவ்வித அதிகாரம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் புதுகோட் 92-வது பிரிவின் (1) வது கிளாஸில் டிரஸ்டியை நீக்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் தர்மசொத்தை கிரயம் பெற்றவர்களையும் தூராகிருதமாய் அதைக் கைவசப்படுத்தி அனுபவிக்கிறவர்களையும் 92-வது பிரிவின்படி செய்யும் தாவாவில் பார்ட்டியாக சேர்க்கவேண்டிய அவசியமாவென்ற பாயின்டானது சரியானபடி தீர்மானிக்கப்படவில்லை. அது விவாதத்திற்கு ஏற்பட்ட பாயின்டாக இருக்கிறது.

28 அலகபாத் 112-ல் தர்ம சொத்துக்களை எவையென்று தீர்மானிக்கும்பொருட்டு தர்ம சொத்துக்களில் யாதொன்றை கிரயம் பெற்றவனையும் பார்ட்டியாக சேர்க்கலாமென்றும், 24 கல்கத்தா 488-ல் அக்கிரமமாக தர்ம சொத்தைக்கிரயத்திற்கு வாங்கினவனிடமிருந்து அதைத் திரும்பி அடையும்பொருட்டு கிரயதாரனையும் பார்ட்டியாகசேர்க்கலாமென்றும்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் 15 மதராஸ் 241, 16 மதராஸ் 31, 20 கல்கத்தா 46, 24 பம்பாய் 170, 23 மதராஸ் லா ஜர்னல் 347, 33 கல்கத்தா 789, 2 கல்கத்தா லா ஜர்னல் 431-இவைகளில் தர்ம ஏற்பாட்டில் சம்பந்தப்படாத அந்நியர்கள் பேரில் செய்யும் தாவாவுக்கு 92-வது பிரிவின் அம்சம் பிரயோகிக்கத்தகாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதனல் தர்ம சொத்துக்களைப்பற்றிய தாவாக்கள் பற்பல தினுசுகளாய் அதிகரிக்க மார்க்கமேற்படுகிறதென்றும் அவ்விதவீண் வியவகாரங்களைத் தடுக்கும்பொருட்டே 92 வதுபிரிவின் 2வது கிளாஸில் (h) என்றஉட்பிரிவு ஏற்பட்டிருக்கிறதாயும் அதனல்கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோன்றும் பரிகாரங்களையெல்லாம் 92-வது பிரிவின்படி செய்யப்பட்ட பிராதில் அளிக்கலாமென்றும், வாதிக்கு 2-ம் பிரதிவாதியின்பேரிலும் 92-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட இந்தப்பிராதிலேயே பரிகாரமளிக்கலாமென்றும் கவர்ன்மெண்டு வக்கிலவர்கள் வாதிக்கச் சொல்லுகிறார்கள். அந்த வாதத்தை சரியென்று ஏற்றுக்கொண்டாலும் வாதியின் தாவா காலாவதி தோஷமாகிறதென்று சொல்லவேண்டும். ஆகையால் வாதி 2-ம் பிரதிவாதியின்பேரில் கொண்டுவந்த இந்தப்பிராது தள்ளுபடியாக வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் 2-ம் பிரதிவாதிக்கு அனுகூலமாச்சுது. 1914 M W N 581.

———:o:———

## சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஹானே

A. S. 169 of 1918—10 ஆகஸ்ட் 1914

1911-ம் வருஷத்திய அப்பீல் நெ. 141ல் மதராஸ் ஹைகோர்ட்டார் சொன்ன அபிப்பிராயத்

தை அனுசரித்து இந்தக்கேஸிலும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுடைய குடும்பத்திற்கு ஒரு கம்பெனி வியாபாரம் சொந்தமானதென்று ஏற்பட்டால் மேஜர்கள் மைனர்கள் உள்பட ஷை குடும்பத்தைச் சேர்ந்த கூட்டுச் சொத்துக்கள் யாவற்றும் ஷை கம்பெனியில் சொந்த கொள்முதலாக பாவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

-:O:-

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் &

ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்

S A 529 to 536, 538 & 539 of 1913

11 ஆகஸ்ட் 1914.

ஒரு டெனெண்டு செலுத்தவேண்டிய தண்ணீர் தீர்வையானது நிலச்சுவான்தாரைச் சேர்ந்ததாகுமா அல்லது கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாகுமாவென்று தீர்மானிக்கும்பொருட்டு (Inter-pleader Suit) தாவா செய்ததில் மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 8-வது பிரிவில் கண்டிருக்கிற விதமாய் ஷை தாவா தீர்வையின் நிர்ணயத்திற்காகச் செய்யப்பட்டதல்லவென்றும், நிலச்சுவான்தார் தனக்குச் சேரவேண்டிய தீர்வை பாக்கிக்காக டெனெண்டின்பேரில் தாவா செய்தால், தீர்வைபாக்கி ஏற்பட்டமுதல் மூன்று வருஷ வாய்தாவில், மேற்கூறிய (Inter-pleader Suit) டெனெண்டின் தாவா பெண்டிங்காயிருந்த காலம் நிலச்சுவான்தாருக்குக் கூடிவராதென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது ரெண்டுக்கும் தண்ணீர் தீர்வைக்கும் சம்பந்தமில்லையென்று ஏற்பட்டது.

தவிர டி-மு கோர்ட்டார் ஒரு தாவாவில் வாதி கோரியபடி அளித்த சாசுவதமான இஞ்சங்ஷன் கட்டளையை ஜில்லாகோர்ட்டார் அப்பீலில் ரத்து செய்து வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டமையால், வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் ரத்தாகி அப்பீல் மறு விஜாரணைக்காக ரிமாண்டு செய்யப்பட்டது. இதுவிஷயமாய் அசல் வியாஜ்ஜியம் செய்வதற்காக வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்டமுதல் காலாவதியை கணிப்பதில் காலாவதி ஆக்ட் 15-வது பிரிவின்படி இஞ்சங்ஷன் கட்டளை அமுலிலிருந்த காலத்தை விலக்கிவிடலாமென்றிருக்க, ஜில்லாகோர்ட் டிக்கிரி தேதிமுதல் ஹைகோர்ட் அப்பீல் தீர்மானத் தேதிவரையில் இஞ்சங்ஷன் கட்டளை அமுலில் இல்லாதபடியால் அந்தத்தேதிகளுக்கிடையிலுள்ள காலம் கூடிவராதென்று தீர்மானிக்கப்பட்டது.

-:O:-

S. A. 71 of 1913-18 ஆகஸ்ட் 194|

ஒரு நிலச்சுவான்தார் மைனர்கள் உள்பட ஒரு மகம்மதிய டெனெண்டினுடைய ஆண் மக்கள் பெண்மக்கள் அனைவர் பேரிலும் சுவாதீனத்திற்காக டிக்கிரி பெற்றபின், அதே நிலங்களை ஷை குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மெம்பரிடமிருந்து புதிய குத்தகைச் சீட்டு வாங்கிக்கொண்டு அனுபோகத்தை முன்போலவே தொடரவிட்டார். முந்தின டிக்கிரியை நிறைவேற்றும் காலாவதி கடந்தபின் நிலச்சுவான்தார் புதிய குத்தகைச்சீட்டின் ஆதாரத்தைக்கொண்டு திரும்பவும் சுவாதீனத்திற்காக குடும்பத்தோர் அனைவரையும் சேர்த்து தாவா செய்ததில் இரண்டு கீழ்கோர்ட்டுகளிலும் வாதிக்கு டிக்கிரியாச்சுது. மைனர் பிரதிவாதிகள் மட்டும் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் (1) மகம்மதியகுடும்பத்திலுள்ள மைனர்களுக்கு மூத்த சகோதரன் சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க சரியான கார்டியனல்லவென்றும் மூத்த சகோதரன் எழுதிக்கொடுத்த குத்தகைச்சீட்டு மைனரைக் கட்டுப்படுத்தாதென்றும் (2) மைனர்பேரில் ஏற்பட்டமுந்திய டிக்கிரியை நிறைவேற்றும் வாய்தா கடந்தமையால் தாவா சொத்தில் மைனருக்குரிய பாகமானது வாதிக்கு சுவாதீனமாக நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் & ஜஸ்டிஸ்சேஷகிரிஅய்யர்

S A 427 of 1918-26 ஆகஸ்ட் 1914

ஒரு சூத்திரஸ்திரீயானவள் விவாகம் செய்துகொண்ட கணவனால் ஒரு புத்திரனை அடைந்தபின் கணவன் காலஞ்சென்றான். அதன்பின் அவள் அந்நியனுக்கு வைப்பாட்டியாகஜீவனம் செய்துவந்து அக்காலத்தில் ஒரு பெண்ணைப்பெற்று அவளும் (ஷை சூத்திரஸ்திரீயும்) காலஞ்சென்றான். அவளுடையசொத்துக்களில்மகளுக்குமகனைவிட மேலான பாத்தியதை உண்டென்று சொல்லி மகள் வழக்காடினதில் மதராஸ் ஹைகோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தில் (1) வேசித்தொழிலை அனுசரித்து வந்த ஸ்திரீயின் சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களென்று மதிக்கப்படவேண்டுமென்றும், வாரிசு பாத்தியதையானது ஸ்திரீதன சொத்துக்களின் விஷயமாய் ஏற்பட்டிருக்கிற சட்டமுறையை அனுசரித்ததாகுமென்றும், (2) ஒரு ஸ்திரீ வேசியாகப்போனபின் பெற்ற பிள்ளைகளின் பாத்தியதையானது அவள் குலஸ்திரீயாக இருந்தகாலத்தில்பெற்றமக்களின் பாத்தியதையைவிட மேலானதென்று அதாவது வேசிக்குப் பிறந்த மக்கள் அவள் குலஸ்திரீயாக இருந்தபொழுது பிறந்த மக்களைவிட மேலான வாரிஸ் பாத்தியதை யுடையவர்களென்று 8 இந்திய தீர்மானங்களின் (O. S) 247, 23 மதராஸ் 171-இவைகளில் ஏற்பட்டிருக்கிற தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்றும், (3) குலஸ்திரீயாக இருந்தபொழுது பிறந்த புத்திரனுடைய வாரிஸ் பாத்தியதையானது வேசித்தனமடைந்தபின் பிறந்த பெண்ணின் பாத்தியதையைவிட மேலானதென்றும் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

ஹானரபில் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் துரையவர்களின அபிப்பிராயத்தில் தாயின் ஸ்திரீதன சொத்துக்கு வேசித்தனத்தில் உண்டான புத்திரி வாரிஸாகமாட்டாளென்று தீர்மானிக்கப்பட்டது.

---

C M A 208 of 1912-18 ஆகஸ்ட் 1914

குடும்ப சொத்தை ஆண்டு அனுபவிக்கிற ஒருவனை மைனராகிய அடுத்த சகோதரனுக்கும் (அதாவது சித்தப்பன், பெரியப்பன் மகனுக்கும்) அவனுடைய தாயாருக்கும் ஒரு குறித்த தொகையை சவரக்ஷணைச் செலவுக்காகக் கொடுத்துவரும்படி கோர்ட்டார் உத்தரவளிக்க வேண்டுமானால் ஷையான் கார்டியன் & உவார்ட்ஸ் ஆக்ட்படிக்கு கோர்ட்டாரால மைனருக்கு கார்டியனாக நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படி நியமிக்கப்படாத பட்சத்தில் மேற்கூறிய உத்தரவளிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

-:O:-



ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் &

ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்

S A 2044 of 1913-10 ஆகஸ்ட் 1914

ஒரு மைனரின் கார்டியன் மைனரைக்கட்டுப்படுத்தும் விதமாய்யாதொருவிஷயத்தையும் ஒப்புக்கொள்ளக்கூடாதென்றும், ஒருவன் சாட்சியாகவந்து கொடுக்கிறவாக்குமூலத்தின் உண்மையைப்பொய்யென்று ஏற்படுத்தும் பொருட்டு அவன்முன் கொடுத்த ஒரு ஸ்டேட்மெண்டை உபயோகப்படுத்தலாமேயொழிய அவன்முன் கொடுத்த வாக்குமூலத்தை இந்தக்கேஸில் சாட்சியம்சமாகருஜுபாகத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், ஒருவன்முன் கொடுத்த ஸ்டேட்மெண்டை இந்தக்கேஸில் உபயோகப்படுத்த வேண்டுமானால் ஸ்டேட்மெண்ட் கொடுத்தவனே ஆஜராகி அதைருஜுப்படுத்தவேண்டும், அல்லது அவர் இறந்துவிட்டதாக ருஜுவாகியிருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

-:O:-

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி

வட ஆற்காடு ஜில்லா

S. A. 2607 of 1912-13 ஜூலை 1914

திருப்பதி முனிஸிபல் கௌன்ஸில்

Vs

ஸ்ரீமஹந்து ப்ரயாக்தாஸ் ஜீவாரு

டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடி ஆக்ட் 58வது பிரிவின்படியும் அதில் சேர்ந்த ஏ-ஷெடியூலின் 3-வது கிளாஸின்படியும் திருப்பதி முனிஸிபாலிடியார் திருப்பதி தேவஸ்தான தர்மகர்த்தாவாயும் திருப்பதி மடாதிபதியாகவுமிருக்கிற ஸ்ரீமஹந்து ப்ரயாக்தாஸ் ஜீவாருககு ரொக்கலேவாதேவி செய்யும் தொழிலுக்காக தொழில் வரிவிதித்தார்கள். அதையும தவிர தேவஸ்தானத்தைச்சேர்ந்த வண்டிகளையும் குதிரைகளையும் தங்கவைக்கப்படுகிற காடிகானுவுக்கும் வரி ஏற்படுத்தி ஸ்ரீமஹந்து அவர்களிடமிருந்து வசூலித்துவிட்டார்கள். மேற்கூறிய இருவகையான வரியைச் செலுத்தவியாயமில்லையென்று தீர்மானம் அடையும்பொருட்டும் செலுத்தின வரியை வாபிஸ் அடையும்பொருட்டும் ஸ்ரீமஹந்து அவர்கள் திருப்பதி டி-மு கோர்ட்டில் முனிஸிபல் கௌன்ஸி

லுக்காக சேர்மென் அவர்கள்பேரில் தாவா செய்ததில் டி-மு கோர்டிலும் ஜில்லா கோர்ட்டிலும் வாதிக்கனுகூலமாக டிக்கிரீயளிக்கப்பட்டு வாதி கேட்டபடி டிக்லேரேஷனும் அதாவது அவ்வித வரியை விதிக்கத்தகாதென்றும்செலுத்தப்பட்ட வரியை வாபிஸ் செய்யவேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

அதன்பேரில் முனிஸிபாலிடியார் ஹைகோர்டில் 2-வது அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் காயமானதில் பிற்காலத்தில் அவ்வித வரியை விதிக்கக்கூடாதென்று ஜில்லா கோர்ட்டார் கொடுத்த டிக்லேரேஷன் டிக்கிரியைமட்டும் ரத்தாக்கி செலுத்தப்பட்ட வரியை வாபிஸ் செய்யவேண்டியது நியாயமாகுமென்றும் பிற்காலத்தில் இருதரத்தாருடைய பாத்தியா பாத்தியதையைப்பற்றி இந்த தாவாவில் டிக்லேரேஷன் டிக்கிரீயளிக்கத் தகாதென்றும் தீர்மானித்து 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்டமுக்கிய நியாயங்களாவன— முனிஸிபாலிடியாருக்காக வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ வெங்கடராகவய்யர் அவர்கள 11 மதராஸ் 253-ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தின் ஆதாரத்தைக்காட்டி ஒருவர் சிற்சில சந்தர்ப்பங்களில் ரொக்க லேவாதேவி செய்துவந்தாலும் அது ஒரு தொழிலாகுமென்றும் அந்தத் தொழிலை கடன்கொடுக்கும் தொழிலென்றும் வாதிக்கிறார்கள். 11 மதராஸ் கேஸானது 1884ம் வருஷத்திய சென்னை நகர் முனிஸிபால் ஆக்ட் 103-வது பிரிவின் அம்சங்களையும் அந்த ஆக்டின் ஏ-ஷெடியூலில் ஏற்பட்டிருக்கும் அம்சங்களையும் அனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. முனிஸிபல் வரியை செலுத்தக் கடமைப்பட்ட ஜனங்களின் வகுப்பை டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடி ஆக்டில்ஒழுங்குபடுத்தியிருக்கும்முறைக்கும் சென்னை நகர் முனிஸிபல் ஆக்டில் அது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் முறைக்கும் வித்தியாஸமுண்டு. சென்னை நகர் முனிஸிபல் ஆக்டின் ஏ-ஷெடியூலில் (Money Lender) கடன் கொடுக்கிறவன் ரொக்க லேவாதேவி செய்கிறவன் என்ற வசனமே கிடையாது. ஆனால் டிஸ்டிரிக்ட் முனிஸிபல் ஆக்டில் அவ்வசனம் ஏற்பட்டிருக்கிறது. 11 மதராஸ் கேஸில் ஒரு (Benefit Socicity) ஜனனுகூல சங்கமானது ஒரு தொழிலாளியென்றும் அதாவது ஜனனுகூல சங்கமென்ற தொழிலை நடத்திவரும் ஆஸாமியாக பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கேஸில் பெனிபிட் ஸொஸைடியை (ஜனனுகூல சங்கத்தை) Money-lender ரொக்க கடன் கொடுக்கிற தொழிலை அனுசரிக்கிறவர் என்று தீர்மானிக்கவில்லை. டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடி ஆக்டிலும் Money-lender ரொக்க லேவாதேவி செய்கிறவன் என்ற பதத்திற்கு வியாக்கியானம் யாதொன்றும் தெளிவாய் ஏற்படவில்லை. என்றாலும் ஒருவன் தன்கையில் மிகுதியாய் நிற்கும் தொகைகளை எப்பொழுதாகிலும் அல்லது இடைக்கிடையில் அடமானத்தின்பேரிலாவது நபர்ஜாமீன் பேரிலாவது கடன் கொடுத்துவந்தால் அவனை லேவாதேவி செய்யும் தொழிலாளியென்று சொல்லத்தகாது. (1911) I M W N 111-ன் 118ல் எடுத்துக்காட்டியிருக்கிறபடி லேவாதேவி நடவடிக்கைகள் அநேகமாயும் தொடர்ச்சியாகவும் ஒரு ஒழுங்கான ஏற்பாடாகவும் நடந்தேறி வந்தால்மட்டும் Money lender லேவாதேவி செய்யும் தொழிலாகச் சொல்லப்படலாம். இந்தக்கேஸில் வாதியின் முன்னோர்கள் கொடுத்து வந்திருக்கிற கடன்கள் அவ்விதமான லேவாதேவி நடவடிக்கையென்று ருஜுப்படுத்தப்படவில்லை. ஆகையால் வாதிக்கு இத்தொழில் வரியை விதித்தது பிசகென்ற ஜில்லாகோர்ட் தீர்மானம் சரியானதாகும்.

இரண்டாவதாக தேவஸ்தானத்தைச் சேர்ந்த வண்டிகளும் குதிரைகளும் நிற்கிற காடிகானுக்கள் பொதுவான விஷயத்திற்காக உபயோகப்படுவதால் அதற்காகக் கட்டடவரி விதிப்பது சரியல்லவென்று வாதிக்கப்படுகிறது. அதாவது ஸ்ரீமஹந்து அவர்களின் சொந்த உபயோகத்திற்காக ஷை காடிகானு உபயோகப்படுகிறதில்லை. யென்றும் தேவஸ்தானத்தைச் சேர்ந்த தண்டோரா முதலிய மேளசாமான்கள் ஊர்கோல சமயங்களில் ஷை வண்டி குதிரைகளின்பேரில் ஏற்றிக்கொண்டு போகப்படுகிறதென்றும் தவிர மிகவும் அந்தஸ்துள்ள யாத்திரிகர்கள் திருப்பதிஸ்தலத்திற்கு வந்தால் அவர்களுக்காக ஷை வண்டி குதிரைகள் உபயோகப்படுத்தப் படுகின்றனவென்றும் இவ்வித மரியாதைகளை மஹந்து அவர்கள் செய்துவருகுறதால் மேற்கூறிய விஷயங்



கள் பொதுவான காரியங்களென்றும் ஆகவே அந்த வண்டிகுதிரைகள் நிற்கும் காடிகானுவுக்கு வரி விதிக்கக்கூடாதென்றும் ஆக்ஷேபிக்கப்பட்டது. மேற்கூறிய உபயோகமானது எல்லா ஜாதியாருக்கும் மதஸ்தர்களுக்கும் பொதுவாய் ஏற்படாதபோதிலும் தேவஸ்தானத்தின் விஜாரணைகர்த்தாவின் யுக்தப்படி அவைகளை உபயோகப்படுத்திவரலாமாதலால் அதைப் பொது ஜனங்களின் உபயோகத்திற்காக ஏற்பட்டவைகளென்றே சொல்லத்தகும்.

மடாதிபதியாகிய வாதி ஷை காடிகானுவுக்குச் சொந்தக்காரர் என்றும் ஆகவே அதுவிஷயமாய் விதிக்கப்பட்ட வரியை ஆக்ஷேபித்து வாதி தேவஸ்தான தர்மகர்த்தா அந்தஸ்தில் இந்த பிராது செய்யக்கூடாதென்றும்வாதிக்கப்பட்டது. வாதி ஷை வரியை சொந்தக்காரராகச்செலுத்தினதாய் ருஜுவில்லை. அந்தக் கட்டடங்களை அனுபவித்துவந்தவர்களாக வரி விதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவஸ்தானத்தின் வண்டிகளையும் குதிரைகளையும் அதில் வைத்துக்கொண்டு அனுபவித்து வந்ததினும் வரியை தேவஸ்தானத்துப் பண்டிலிருந்து செலுத்தினதாலும் வாதி தேவஸ்தான தர்மகர்த்தாவாக இந்தப்பிராது செய்தது பிசகல்லவென்று சொல்லவேண்டும்.

ஜில்லா கோர்ட்டார் வரியின் நியாயத்தைப்பற்றிப் பொதுவாய் தீர்மானமளித்திருக்கிறார்கள். பிற்காலத்தில்கட்டடத்தின் அனுபோகமும் வண்டிகுதிரைகளின் உபயோகமும் லேவாதேவித் தொழிலின் தன்மையும் எவ்விதமாய் மாறுமோ தெரியவாராதாகையால் பிற்காலத்திற்குறிய நியாயத்தை இந்தப்பிராதில் தீர்மான டிக்கிரீயளித்தது பிசகென்று இந்த ஒரு அம்சத்தைமட்டும் ரத்து செய்து மற்றப்படிக்கு ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. XXVII M L J 231

## பிரிவிகௌன்ஸில் கேஸ்.

### திலகபாத் [12 மே 1914]

### ஷியோஷங்கர் ராம் Vs முஸம்மத் ஜட்டோ கன்வார்

ஜட்டோகன்வார் அம்மாள் 1887-ல் சில சொத்துக்களையும், 1891-ல் சில சொத்துக்களையும் ஒத்திக்கு வாங்கி அனுபவித்து வந்து 1895-ல் ஒத்தித்துகையைத் திரும்பியடையும்பொருட்டு தாவா செய்தாள். இந்தக் கேஸ்கள் விஜாரணைபாக்கியிலிருக்கும்பொழுது அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஹிராராம், தண்டராம் என்ற இருவரும் மேற்கூறிய அடமானசொத்துக்களில் சிலவற்றை கிறயமாகவும் சில்வற்றை ஒத்தியாகவும் அடைந்தார்கள். ப்ராபர்டி ஆக்ட் 85-வது பிரிவின்படி அவ்விருவரையும் ஜட்டோகன்வார் அம்மாள் பிராதில் பிரதிவாதிகளாகச் சேர்த்து அவர்களைப் பொருத்தும் டிக்கிரீபெற்றார்கள். டிக்கிரீயில் குறிக்கப்பட்ட காலத்தவணைக்குள் அடமானதார்களாவது அந்த அல்லது சொத்தில் பாத்தியதையடைந்த மற்ற இரண்டு பிரதிவாதிகளாவது டிக்கிரீயில் கண்ட துகையைச் செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ளாதபடியால், கோர்ட்டார் அந்த சொத்துக்களை வாதியே சொந்தமாக அடையவேண்டியதென்றுசட்ட முறைப்படி உத்தரவளித்தார்கள். அதாவது டிக்கிரீயில் ஏற்பட்ட பின்பாகத்தை உறுதிப்படுத்திவிட்டார்கள். ஹிராராம் தண்டாராம் என்றவர்களைத் தவிர அக்குடும்பத்தைச்சேர்ந்த மற்ற மெம்பர்கள் தாவா சொத்துக்களில் தங்களுக்கும் பாத்தியமுண்டென்றும் கிறயம் ஒத்தி ஆகிய நடவடிக்கைகள் ஹிராராம் தண்டராம் என்றஇருவர்பேரில் ஏற்பட்டபோதிலும் அவைகள் குடும்பப்பொதுவான ஏற்பாடென்றும் ஆகையால் முந்திய வியாஜ்ஜியத்தில் தங்களையும் பார்ட்டியாகச் சேர்த்திருக்கவேண்டுமென்றும் அப்படிச் சேர்க்காதபடியால் அந்த டிக்கிரீ தங்களைக்கட்டுப்படுத்தாதென்றும், தாங்கள் ஒத்தி பாக்கித்துகையை ஜட்டோகன்வார் அம்மாளுக்குச் செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ளத் தயாராவிருப்பதாயும் சொல்லி சப்கோர்ட்டில் பிராது கொடுத்தார்கள். சப்கோர்ட்டார் இந்த வாதிகளையும் முந்திய பிராதில் பார்ட்டிகளாய்ச் சேர்த்திருக்கவேண்டியது நியாயமென்றும் அவர்கள் தாவா அடமானத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியமுடையவர்களென்றும் அபிப்பிராயப்பட்டபோதிலும் அவர்கள் தங்களுக்கு சொந்தமாக ஏற்படும் சொத்துபாகத்தை மட்டும் மீட்டுக்கொள்ளலாமேயொழிய அடமான டிக்கிரீயில் குறிக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதையும் மீட்டுக்கொள்ள நியாயமில்லையென்று

தீர்மானித்தார்கள். அப்பீலில் ஹைகோர்ட்டாரவர்கள் வாதிகளின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதிகள் பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட் தீர்ப்பு காயமாகி பிரிவிகௌன்ஸிலில் அப்பீல் தள்ளுபடியாச்சுது.

தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணங்களாவன:— [illegible]மனர்கள் தாவா சொத்துக்களை அடைந்தகாலத்தில் ஹிராம், தண்டராம் என்ற இருவரும் ஷை குடும்பத்தலைவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அவ்விருவரும் ஷை சொத்துக்களை சம்பாதித்த வகையிலும் அவர்கள்பேரிலும் டிக்ரியானதில் அடமானக்கடனை செலுத்தாமல் நின்றுவிட்ட விஷயத்திலும் வாதிகளின் குடும்பத்தலைவர்களான அந்தஸ்தை வகித்தவர்களாயிருந்திருக்கிறார்கள். ஒரு நிறைவேற்று நடவடிக்கையில் குடும்பத்தைச்சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும்பார்ட்டியாகச் சேர்க்கப்படாதபோதிலும் மொத்தத்தில் நியாயக்குறைவாக யாதொரு நடவடிக்கையும் நடக்காதபட்சத்தில் அந்த நிறைவேற்று நடவடிக்கையை கோர்ட்டார் ரத்துசெய்யக்கூடாதல்லவென்று அலகபாத் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். தவிர இந்த வாதிகளும் முந்திய நடவடிக்கைகளில் தங்கள் குடும்ப மானேஜர்களால் ஆஜராகியிருக்கிறார்களென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஒரு அடமானத் தொகையை வசூலிக்கும்பொருட்டும் ஒத்தியைத் தீர்க்கும்பொருட்டும்செய்யப்படும் தாவாக்கள் உள்பட்டபிராதுகளில் கூட்டுக்குடும்பத்தலைவர்கள் பார்ட்டிகளாய்ச்சேர்க்கப்பட்டால்மற்றமெம்பர்கள் எல்லோருக்கும் அவர்கள்சரியான பிரதிநிதிகளாகிறார்களென்று பற்பல இந்திய தீர்மானங்களிருக்கின்றன. அவைகளுக்குமாறாக அபிப்பிராயபட நியாயமில்லை. பார்ட்டிகளாய்ச்சேர்க்கப்படாதமற்றமெம்பர்களும் அந்த தாவாவின் பைசலுக்குக்கட்டுப்பட்டவர்களென்று சொல்லத்தகும். இந்தக் கேஸில் மேற்கூறிய நியாயத்தைப் பிரயோகித்தனைச்கு விரோதமாக தீர்மானிக்கவேண்டியது உசிதமாகும். குடும்பத்தலைவர்களைக் - பாவிக்கப்படும் [illegible]

லை. இந்த வாதிகளுக்கு தாவா சொத்துக்களிலிருந்த பாத்தியதையின் தகவல் முந்திய தாவாவின் வாதிகளுக்கு தெரியவராது. கிறயமும ஒத்தியும் யார்பேரில ஏற்பட்டனவோ அவர்களே மட்டும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ப்ராபர்டி ஆக்ட் 85-வது பிரிவின் அம்சங்களைப்பற்றி முந்திய பிராதின் முறையை ஆக்ஷேபிக்க நியாயமில்லை. ஆகவே ஹைகோர்ட்டார் தீர்மானத்தை மாற்றுவதற்கு நியாயமில்லை, வாதியின் பிரிவிகௌன்ஸிலில் அப்பீல் தள்ளுபடியாச்சுது. 1914 M W N 598

---

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

திருச்சினாப்பள்ளி ஜில்லா

S. A. 2298 of 1912-21 எப்ரல் 1914.

வெங்கட்ராமய்யர் Vs சுப்பநாடான்

1908-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 7உயில் அமுலுக்கு வந்த இந்தியன் லிமிடேஷன் ஆக்டின் 31-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஒரு அடமானக்கடனை வசூல் செய்யும்படியாகவும் அல்லது அடமான சொத்தை வலம்போடும்படியாகவும் அடமானம் பெற்ற வாதி செய்யும் தாவாக்களுக்கு 60-வருஷ காலாவதி ஏற்பட்டிருக்கிறது. அந்த 60-வருஷ கெடு வாய்தாவானது இந்த ஆக்ட் அமுலுக்கு வருமுன் 12-வருஷ கெடுவாக விதிக்கப்பட்டிருந்தது. 60-வருஷ வாய்தாவானது அடமான பத்திரத்தின்படி தொகை செலுத்தப்படவேண்டிய கெடுவாய்தா தேதியிலிருந்து கணிக்கப்படவேண்டுமென்றும் 31-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1908 ஆகஸ்ட் 7உயில் ஒரு அடமான தஸ்தவேஜுக்கு 60 வருஷவாய்தா முடியும் [illegible] தினமாக சம்பவித்தால் அன்றைய தினமே வியாஜ்ஜியம் செய்ய முடியாத அசந்தர்ப்பத்தை உத்தேசித்தும் அதற்குமுன்னுள்ள 12வருஷ வாய்தாவை அனுசரித்து வாய்தா கடந்துபோனதாக பற்பல அடமானதார்கள் அஸ்வாஸ்யமாய் இருந்திருக்கவேண்டுமென்பதை உத்தேசித்தும் சட்ட கர்த்தாக்கள் 1908 ஆகஸ்ட் 7-ல் 60-வருஷ வாய்தாமுடியும் தஸ்தவேஜுகளின் பேரில் அந்த தேதியில் [illegible] செய்யப்படலாமென்று [illegible] சவுகரியத்தை உண்டாக்கி, மேற்கூறியவிதமான அடமான வியாஜ்ஜியம் செய்வதற்கு கெடுத்தேதியிலிருந்து 60-வருஷத்திற்குள்ளாகவும் செய்யப்படலாமென்றும், அல்லது 1908 ஆகஸ்ட்7-லிருந்து 2-வருஷங்களுக்குள்ளும் செய்யப்படலாமென்றும் அவ்விரண்டுவித வாய்தாக்களில் முந்திமுடியும் தேதி எதுவோ அதை அனுசரித்து ஷை வியாஜ்ஜியம் செய்யப்பட வேண்டுமென்று சட்ட முறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதே 31-வது பிரிவின்படி ஷை ஆக்ட் அமுலுக்கு வந்த தேதிக்கு முன் தாகலான வியாஜ்ஜியங்களை 12 வருஷ காலாவதி தோஷமென்று தள்ளுபடி செய்யக்கூடாதென்றும் விதித்திருக்கிறார்கள்.

அப்படியிருக்க வாதி வெங்கட்ராமய்யர் ஸ்ரீரங்கம் டி-மு கோர்ட்டில் டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் அமுலுக்கு வந்த முன் அதாவது 1882-ம் வருஷத்திற்குமுன் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு தஸ்தவேஜின்பேரில் 1910-ல் வியாஜ்ஜியம் செய்ததில் அந்த தஸ்தவேஜானது காலாவதி ஆக்ட் 31-வது பிரிவின் கருத்துக்குச் சரியான ஒரு அடமான தஸ்தவேஜல்லவென்றும் பிராபர்டி ஆக்டில் அடமான தஸ்தவேஜானது எவ்வித அம்சங்களுடனிருக்கவேண்டுமோ அப்படி அந்த தஸ்தவேஜானது ஏற்படவில்லையென்றும் ஆகவே தாவா தஸ்தவேஜுக்கு 31-வது பிரிவின்படி 60வருஷ காலாவதி ஏற்படாதென்றும் சொல்லி டி-மு கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஜில்லா கோர்ட்டார் அப்பீலிலும் அதே அபிப்பிராயங்கொண்டார்கள். அதன்மேல்வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் ரத்தாகி கேஸ் சட்டப்படி விசாரணையாகி பைசலாக்கப்படவேண்டுமென்று டி-மு கோர்ட்டுக்கு ரிமாண்டாச்சுது.

பிராபர்டி ஆக்ட் 58-வது பிரிவில் அடமான தஸ்தவேஜுகளின் பற்பல பிரிவுகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

(a) அடமான சொத்தை அடமானதாரனுக்கு சுவாதீனம் செய்துகொடுக்காமல் கடன் தொகைக்கு கடனாளி நேரில் உத்தரவாதியென்று ஒப்புக்கொண்டு ஒப்பந்தப்படி ஷை கடன் தொகையை வசூல் செய்யத் தவறினால் அடமான சொத்தை



வலம் போடும்படியாகவும் வலத்தில் வசூலாகும் தொகையிலிருந்து அவசியமானமட்டில் அடமானகடனுக்காகச் செல்லுவைத்துக்கொள்ளும்படி ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுக்கும் தஸ்தவேஜுக்கு வெற்று அடமானம் என்று சொல்லப்படுகிறது.

(b) அடமான சொத்தை அடமானதாரனுக்கு விக்கிரயம் செய்துகொடுத்துவிட்டு அதில் பின்வரும் நிபந்தனைகளை ஏற்படுத்துகிறது; அதாவது குறித்த காலத்திற்குள் அடமானக்கடன் தொகையைச் செலுத்தாதபட்சத்தில் சொத்து விக்கிரயம் அந்த ரீதியாக நிலைத்துப்போக வேண்டியதென்றும், வாய்தாவுக்குள் தொகை செலுத்தப்பட்டால் கிறயம் ரத்தென்றும் செல்லத்தகாதென்றும், அல்லது தொகையை வாய்தாவுக்குள் செலுத்திவிட்டால் அடமானதார் திரும்பவும் சொத்தை மறு விக்கிரயம் செய்துகொடுத்துவிடுகிறதென்றும் நிபந்தனைகளை ஏற்படுத்தி எழுதிக்கொடுக்கிற அடமான தஸ்தவேஜுகளுக்கு விக்கிரய உடன்படிக்கையுடன் கூடிய அடமானம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

(c) சொத்தை அடமானதாருக்கு சுவாதீனம் செய்து கொடுத்து கடன் தொகை செலுத்துமட்டும் அவரே அதை அனுபவிக்கிறதென்று அதில் வரும் மாசூல் வரும்படியிலிருந்து வட்டிக்காகவோ அசலுக்காகவோ அல்லது அவ்வட்டி இரண்டுக்காகவுமோ வருமானத்தின் மதிப்புக்குத் தக்கபடி செல்லுவைத்துக் கொள்ள வேண்டியதென்று செய்யும் அடமான ஏற்பாட்டுக்கு சுவாதீன அடமானம் அல்லது ஒத்தியென்று சொல்லப்படுகிறது.

(d) அடமானக்கடனை குறித்த தேதியில் கொடுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்டு அடமான சொத்தையும் அத்தாட்சியாக அடமானதாருக்கு மாற்றிக்கொடுத்துவிட்ட பிறகு கடன் தொகையை செலுத்தினால் அடமானதார் அந்த சொத்தைத் திரும்பவும் மறு டிரான்ஸ்பர் செய்துகொடுத்துவிடுகிறது. இதுதான் இங்லிஷ் அடமானமென்று சொல்லப்படும். இவ்விதமாய் குறித்ததேதியில் தொகை கொடுத்துவிட்டால் திரும்பவும் சொத்தை டிரான்ஸ்பர் செய்துகொடுக்கவேண்டியதென்ற நிபந்தனை அந்த

தஸ்தவேஜிலேயே கண்டெழுதப்பட வேண்டும்.

மேற்கூறிய விதமாக தாவா அடமான தஸ்தவேஜானது எழுதப்பட்டிருந்தால் மட்டும் ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவின்படி அதை அடமான தஸ்தவேஜென்று சொல்லத்தகுமென்றும் 31-வது பிரிவின்படி 60 வருஷ காலாவதி அப்படிப்பட்ட தஸ்தவேஜுக்குமட்டும்செல்லுமென்றும்தாவா தஸ்தவேஜானது அப்படிஎழுதப்படாத காரணத்தால் அதற்கு 60-வருஷ காலாவதியில்லையென்றும் வாதியின் பிராதுக்கு எதிர்வாதம் செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் தாவா தஸ்தவேஜை ஒரு வெற்று அடமானமென்று பாவித்து அதற்கும் 60-வருஷ காலாவதி உண்டென்று தீர்மானித்ததில் சொன்ன காரணங்களாவன:— ப்ராபர்டி ஆக்ட் ஏற்பட்ட பின் அடமான ஏற்பாடு செய்து கொள்ளும் பார்ட்டிகளின் பாத்தியா பாத்தியதைகள் புதிதாய் உண்டாயிருப்பதாயும் ஆகையால் ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவின்படி அடமான தஸ்தவேஜாக மதிக்கக்கூடிய தஸ்தவேஜானது ப்ராபர்டி ஆக்ட்அமோதுக்குவருமுன் ஏற்பட்டிருந்தால் அதை அடமான தஸ்தவேஜல்லவென்றும் சொல்லலாமென்று ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்கள் 9 மதராஸ் 218-ல் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின் ஏற்பட்ட 10 மதராஸ் 509-ல் புல்பெஞ்சார் அவ்விதமான தீர்மானம் கொள்ளவில்லை. புல் பெஞ்சில் ஒரு நியாயாதிபதியாகிய ஜஸ்டிஸ் ஷெப்பார்ட் துரையவர்கள் மட்டும் அந்தக்கேசில் ஜஸ்டிஸ் முத்துஸாமி அய்யரவர்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாக இருந்து அந்தக்கேசில் தாகலான தஸ்தவேஜானது அடமானதஸ்தவேஜாகாதென்பதற்குக் காரணமாக அதில் ப்ராபர்டி ஆக்டின் கருத்துப்படிக்கு சொத்தை டிரான்ஸ்பர் செய்த ஷரத்தும் அல்லது அடமானதாரனுக்கு சொத்தை விக்கிறயம் செய்யும் அதிகாரமும் ஏற்படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். தவிர ஜஸ்டிஸ் ஷெப்பார்ட் துரையவர்களே 21 மதராஸ் 326-ன் 386-ல் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்களுடைய அபிப்பிராயநியாயத்தைப்பற்றி சந்தேகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

என்றாலும் பின்னால் ஏற்பட்டிருக்கும் பற்பல தீர்மானங்களில் 58-வது பிரிவின்படி ஒரு தஸ்தவேஜானது அடமான தஸ்தவேஜென்று சொல்லப்படுவதற்கும் அதை எழுதி வாங்கினவன் அடமானதார் என்று காலாவதி ஆக்ட் 31-வது பிரிவின் அம்சத்தைப் பிரயோகிப்பதற்கும் ஷை தஸ்தவேஜில் சொத்தை டிரான்ஸ்பர் செய்வதாகவும் அதை விக்கிறயம் செய்யும் அதிகாரம்கொடுக்கப்பட்டதாகவும் ஸ்பஷ்டமான வசனங்களிருக்கத் தேவையில்லையென்று ஏற்பட்டிருக்கின்றன. 23 மதராஸ் லா ஜர்னல் 131-ல் மேற்கூறிய பற்பல தீர்மானங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் அடமான தஸ்தவேஜின்கருத்தையும் முறைகளையும் 10 மதராஸ் கேசின் தீர்மானத்தைக்கொண்டு நிதானிக்கத் தேவையில்லை. அந்த புல்பெஞ்சு கேஸிலும் ஒரு தஸ்தவேஜானது ப்ராபர்டி ஆக்டுக்குப் பின் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த காரணத்தால் அது வெற்று அடமானமாக செல்லத்தகாதென்று தீர்மானிக்கப்படவில்லை. தாவா தஸ்தவேஜானது ப்ராபர்டி ஆக்டுக்கு முன் எழுதப்பட்டிருந்தபோதிலும் அதை ப்ராபர்டி ஆக்ட் 58 வது பிரிவின்படி வெற்று அடமானமென்று சொல்லத்தகும். அந்த தஸ்தவேஜை எழுதி வாங்கினவர் காலாவதி ஆக்ட் 31-வது பிரிவின்படி 60 வருஷ காலாவதியை அனுசரித்து தாவா செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கூறியபடி கேஸானது டி-மு கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டது. XXVII M L J 58.

---

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

---

கல்கத்தா—28 ஏப்ரல் 1914.

நளினீகாந்தலாகிரி vs ஸர்ணமாயி தேவியா

உதயகிருஷ்ணபுரத்திலுள்ள ஒரு தாலுகாவானது பற்பல கூட்டுப்பங்காளிக்குச் சொந்தமாக இருந்து ஒவ்வொரு பாகஸ்தனும் தனக்குரியபாகத்தைப் பிரித்துக்கொள்ள ஆசையுடையவர்களாகக் கொண்டு ஒவ்வொருவரும் தனித்தனியாய் பாகப்பிரிவினைக்காக வியாஜ்ஜியம் செய்தார்கள். அந்தப்பிராது ஒவ்வொன்றிலும் இந்தக்கேசின் வாதி பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தவாதியைத் தவிர மற்ற பாகஸ்தர்கள் யாவரும் தாவாக்கள் செய்து தங்கள் பாகத்தை அடைந்தார்கள். ஆகவே எல்லோரும் பிரித்துக்கொண்டது போக மிகுதியான பாகம் வாதிக்குச் சேரவேண்டியதாயிற்று. வாதி தன்னுடைய வீதசாரப்படிக்கு அடையவேண்டிய பாகமானது மிகுதியாய்க் கிடைத்ததை விட அதிகமாகுமென்றும் இரண்டு பாகஸ்தர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட சொத்து பாகமானது அவர்களுக்குரியதை விட மிகவும் அதிகமாய்ப் போய்விட்டதென்று வாதிக்கு மனஸாரத் தெரிகிறதென்றும் சொல்லி தனக்கு நியாயமான பாகம் கிடைக்கவேண்டுமென்று தனிமையாக பாட்னா சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தார். சப்கோர்ட்டாரும் அப்பீலில் ஹைகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக வாதியின் இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷமும் ரிஜுடிகேடா தோஷமும் உண்டாய் விட்டதாகத் தீர்மானித்துப் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் காயமாச்சுது. பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் சுருக்கமாவது:—

இந்த தாவாவில் சொத்துக்களின் பாகம்யாருக்கு அதிகமாய்ச் சென்றிருக்கிறதோ அதைப்பிரித்து வாதிக்குக் கொடுத்து வாதியின் பங்குச் சரியானபடி சொத்தை கொடுக்க வேண்டுமென்று கோரப்படுகிறது. கீழ்கோர்ட்டார் வாதியின் பிராதுக்கு இரண்டுவித தோஷங்கள் உண்டென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். காலாவதி பாயிண்டைப்பற்றிய அபிப்பிராயம் கொடுக்கத் தேவையில்லை. ரிஜுடிகேடா தோஷத்தாலேயே வாதியின் பிராது தள்ளுபடியாக வேண்டியது நியாயமாகும்.

ஒரு கூட்டுபாகஸ்தன் பாக வியாஜ்ஜியம் செய்தால் அதில் மற்ற பாகஸ்தர்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கவேண்டியது அவசியமாகும். அதில் வாதிக்கு ஏற்படும் பாக டிக்கிரியானது மற்ற பாகஸ்தர்கள் பேரில் ஏற்பட்ட டிக்கிரியாக பாவிக்கப்படவேண்டும். ஷை டிக்கிரியினால் வாதிக்கு வரும் சொத்து பாகத்தில் மற்ற பாகஸ்தர்களுடைய பாத்தியதை நீங்கி அதில் டிக்கிரிபெற்றவருக்கு மட்டும் தனிமையான பாத்தியதை உண்டாய் விடுகிறது. ஆகையால் பிரதிவாதிகளுடைய பாகம் விலகிப்போவதால் அந்த டிக்கிரி அவர்கள் பேரில் ஏற்படும் டிக்கிரியென்று மதிக்கத்தகும். வாதி இந்தப்பிராதில் மற்ற பாகஸ்தர்கள் கொடுத்த மூன்று பிராதுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அம்மூன்றிலும் ஒரே காலத்தில் டிக்கிரியளிக்கப்பட்டது. மூவருக்கு முள்ள பாகமிவ்வளவென்று தீர்மானிக்கப்பட்ட பின் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கமிஷனர் மூலமாக அவர்களுடைய பாகமும் அளந்து கொடுக்கப்பட்டன. அவைகள் ஷை யார்களுக்கு சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்பட்டன. இவ்விதமாய் ஏற்பட்ட பாக டிக்கிரியில் இந்த வாதி பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்திருக்கிறார். ஆகையால் அவைகளில் ஏற்பட்ட டிக்கிரியும் இந்த வாதியின்பேரில் ஏற்பட்டதாகவே பாவிக்கப்படவேண்டும். ஆகையால் இந்த வாதியைப்பற்றின மட்டில் முந்திய டிக்கிரியானது ரிஜுடிகேடா தோஷத்தை உண்டாக்கிவிட்டதென்று சந்தேகமில்லாமல் சொல்லவேண்டும். முந்திய டிக்கிரிகளின்படி சொத்துக்களைப்பிரித்துக் கொடுப்பதில் யாதொரு ஒழுங்கீனமிருந்தால் அதைப்பற்றி பரிகாரம் தேடுவதற்கு சட்ட முறைகளிருக்கின்றன. ஸிவில் புரொஸீஜர் கோடில் அவ்வித பிசகுகளைத் திருத்துவதற்காக முறைகள் போதுமானபடி ஏற்பட்டிருக்கின்றன. அவ்வித மார்க்கங்களைத் தேடாமல் வாதி கோர்ட்டாரால் அளிக்கப்பட்ட டிக்கிரியை மாற்றும்படி வேறு பிராது கொடுத்தது ரிஜுடிகேடாவாகுமென்பதில் சந்தேகமே கிடையாது.

இன்னுமொரு பங்காளிகொடுத்த பிராதில் ஒரு பிரதிவாதி இறந்தபின் அவளுடைய பெண்சாதி தன் கணவன் வசமிருந்த சொத்தானது தன் வசமிருப்பதாகச் சொல்லி தன்னைத் தன் புருஷனுக்கு பதிலாகப் பார்ட்டியாகச் சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டதில் அவள் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு வழக்கமுறைப்படி பாகவியாஜ்ஜியத்தில் பிரதிவாதியும் தனக்குரிய பாகத்தைப் பிரித்துக்கொடுக்கும்படி கேட்கலாமாகையால் அந்தப்படிக்கு அவளும் அந்தப் பிராதிலேயே தன்பாகத்தைப் பிரித்துக்கொண்டாள். இதில் யாதொரு ஒழுங்கீனமும் காணப்படவில்லை. வாதிக்கு ஷை யாள் பார்ட்டியாகச் சேர்ந்த விஷயமும் அவள் பாகத்தைப் பிரித்துக்

கொண்ட விஷயமும் தெரியாதென்று பிராதில் கண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக்கேஸில் பாக டிககிரீயான விஷயமான விஷயம் வாதிக்குத் தெரியுமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் கவனிக்கத் தேவையில்லை. முந்திய பிராதிலும் ஒழுங்கீனம் யாதொன்றும் நடந்ததாகச் சொல்லப்படவில்லை. ஆகவே வாதியின் இந்ததாவா ரிஜுடிகேடா தோஷத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது நியாயமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 76.

-o:-

## பிரிவிகௌன்ஸில கேஸ்.

மத்திய மாகாணம்—

பெர்வெக்ட் பாட்டரி கம்பெனி

Vs

ஜெ. எல். ரோஸ் அம்மாள்

ரோஸ் என்ற ஒரு துரையவர்கள் ஒரு கிரேஷ்டமான ஓடு செய்யும் விதத்தைக்கண்டுபிடித்தவராய் அவ்வண்ணம் வேறு யாரும் செய்யாமலிருக்கும் பொருட்டு கவர்ன்மெண்டில் பேடெண்டு அதிகாரம் பெற்றிருந்தார். அவர் தன்னுடைய பேடெண்டையும் தன் சரீரப் பிரயாசையையும் (ஊழியத்தையும்) பெர்வெக்ட் பட்டரி கம்பெனி லிமிடெட்டுக்கு அளித்துவிடுவதாய்ச் சொன்னார். ஷை கம்பெனியானது இந்தியன் கம்பெனி ஆக்ட்படிக்கு லிமிடெட்டாக ரெஜிஸ்டரான பின் அதிலுள்ள நிர்வாக சபையார் அனைவரும் சேர்ந்து ஷை துரையவர்களுடைய விருப்பத்தைப்பற்றி ஆலோசனை செய்து அவருடைய பேடெண்டை ரூ 30, 000-க்குக் கம்பெனியார் கிரயம் பெறுகிறதென்றும் அதில் ரூ 10, 000 முதலில் ரொக்கமாய்க் கொடுத்துவிடுகிறதென்றும்மிகுதி ரூ 20, 000 க்குள் பங்கை ஷை கம்பெனியில் ஷை துரைபேரில் ஏற்படுத்திவிடுவதாயும் 1905 அக்டோபர் 15-ல் நடந்த கம்பெனியின் மீட்டிங்கில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ரூ20000 பெருமான முள்ள கம்பெனியின் பங்கில் ஷை துரைக்கு 5-வருஷங்கள் கழிந்தபின் தான் பாத்தியதை உண்டாகவேண்டுமென்று ஒரு நிபந்தனையும் ஏற்பட்டிருந்தது.

அந்த துரையவர்கள் அதேபிரகாரம் பேடெண்டைக் கம்பெனிக்கு மாற்றிவிட்டு கம்பெனியிலேயே உத்தியோகம் செய்துவந்து (உழைத்து) 4-வது வருஷக் கடைசிலலேயே காலஞ்சென்றுவிட்டார். அதன்பின் அவருடைய பாரியாள் கம்பெனியில் கணவனுக்கிருந்த பங்கில் பாத்தியமுண்டென்று சொன்னதற்குக் கம்பெனியார் அவளுக்கு ஷை பங்கில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் அந்த துரையானவர் கம்பெனியின் டைரக்டர்களுக்கு எழுதின ஒரு கடிதத்தில் சிற்சில சந்தர்ப்பங்கள் நேர்ந்தால் ஷை ரூ 20, 000 பெருமான பங்கைக் கம்பெனியார் ரத்து செய்து அதைக் கம்பெனியாரே அடைய வேண்டியதென்றும் தான் 5-வருஷங்கள் முடியுமுன் காலஞ்சென்றாலும் அவ்விதமாய் பங்கு பாத்தியம் மாறிப்போகவேண்டியதென்றும் ஒப்புக்கொண்டதாகவும் ஆகவே 4-வருஷம் முடியுமுன் ஷை துரையவர்கள் இறந்துபோனதால் அவளுடைய பாரியாள் அந்தப் பங்கில் பாத்தியங் கொண்டாட லாயக்கில்லையென்று நிராகரித்தார்கள். அதன்மேல் ஷை துரையவர்களின் பாரியாள் ஜபல்பூர் ஜில்லா கோர்ட்டில் கம்பெனியின்பேரில் தாவா செய்து டிக்கிரீபெற்றாள். கம்பெனியார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லாகோர்ட் தீர்மானம் காயமாச்சுது. ஆனால் வாதி தன்னுடைய இரண்டு கோர்ட் செலவையும் தானே வகிக்கவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது. கம்பெனியார் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் காயமாகி வாதிக்குரிய மூன்று கோர்ட் செலவுகளையும் கம்பெனியார் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் சுருக்கமாவது:- ரோஸ் துரையவர்களுக்கும் கம்பெனிக்குமுள்ள ஒப்பந்தமானது கம்பெனியாரின் மீட்டிங்கில் பிறந்த தீர்மான முடிவு ஒன்றிலடங்கியிருக்கிறது. ஆகையால் அந்த மீட்டிங்கில் ஏற்பட்ட அம்சங்களில் துரையவர்கள் எழுதியனுப்பிய கடிதத்தின் அம்சங்கள் எம்மட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான விஷயமாகும். மீட்டிங்கின் தீர்மானமுடிவில் ஸ்பஷ்டமாய்க் குறிக்கப்பட்டிருக்கிற அம்சங்களுக்கும் துரையவர்களின் கடிதத்தின் அம்சங்களுக்கும் வித்தியாசமிருக்கின்றன. ஆகையால் கடிதத்தின் அம்சங்கள் எம்மட்டில் விபரீதமாயில்லை. அவைகள்மட்டும் மீட்டிங்கின் தீர்மானமுடிவில் அடங்கியிருப்பதாகச் சொல்லவேண்டும். ரூ 30, 000க்கு பேடெண்டை துரையவர்கள் விக்கிரயம் செய்கிறவிஷயமும் அதற்காக ஒருபாகம் ரொக்கமாயும் மிகுதி கம்பெனியில் பங்காகவும் கொடுக்கப்படுவதான ஏற்பாடும் இரண்டு நிகார்களிலும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. பங்கை இழந்துவிடுகிற ஷரத்தானது கிரயமாகியிருக்கிற விஷயத்திற்கு விபரீதமாயிருக்கிறது. கிரயமாகியிருக்கிறதைக் காட்டும் மீட்டிங்கு நடவடிக்கையில் கிரயத்தொகையில் ஒரு பாகத்தை இழந்துவிடுவதாகச் சொல்வது விபரீதமாகும். ஆகையால் இருதரத்தாருக்கும் பொதுவாய் ஏற்பட்ட ஒப்பந்தமாகிய மீட்டிங்கின் தீர்மான முடிவினால் கிரயம் பூர்த்தியானதாக பாவிக்கடவேண்டும். ஆகவே கிரயத்தொகையில் ஒரு பாகமாகிய ரூ 20000க்குறிய கம்பெனியின் பங்கு வாதிக்கு பாத்தியமுண்டென்று சொல்லப்படவேண்டும். தவிர வாதிக்கு எதிரி செலவுதொகை கொடுக்கவேண்டியதும் நியாயமாகுமென்று மேற்கண்டவிதமாய்த் தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J 74

-:o:-

## ஜஸ்டிஸ் ஓல்ட் பீல்ட் & ஜஸ்டிஸ் நேபியர்.

கிருஷ்ணா ஜில்லா.

C. M. A. No. 294 of 1913-29 ஜுலை 1914

ஜகன்னாதா சார்யுலு VS குடும்பராயுடு

ஜகன்னாதா சார்யுலு வென்ற ஒரு அக்கிரகாரம் தார் தன்னுடைய இனும் நிலங்களில் சிலவற்றை அனுபவித்துவந்த குடியானவனாகிய குடும்பராயுடு வென்ற பிரதிவாதியை அந்த நிலத்தின் அனுபோகத்திலிருந்து விலக்கும் பொருட்டு பெஜவாடா டி மு கோர்ட்டில் 1910-ம் வருஷத்திய அசல் நெ. 479-ல் இஜெக்ட் மெண்டு பிராது கொடுத்தார்கள். டி-மு கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரீயளித்த பின் எதிரி சப் கோர்ட்டில் அப்பீல் செய்யவே வாதி இந்தப் பிராதை ரெவினியூகோர்ட்டில் தாகல் செய்திருக்கவேண்டுமென்றும் ஸிவில் கோர்ட்டில் தாகல் செய்தது பிசகென்றும் அபிப்பிராயப்பட்டு கேஸை சரியான கோர்ட்டில் தாகல் செய்யவேண்டுமென்று பிராதை வாதிக்கு வாபீஸ் செய்யும்படி டி மு கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். சப்கோர்ட்டார் செய்த ஷை உத்தரவின் பேரில் வாதியாகிய அக்கிரகாரம் தாரவர்கள் ஹைகோர்ட்டில் ஸில்லரைமனு அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டார் அதிகார வரம்பைப்பற்றிய ருஜுபாரம் வாதியைச் சேர்ந்ததாக நினைத்து மேற்கூறிய விதமாய் உத்தரவளித்தது பிசகென்றும் இந்த தாவாவில் ஸிவில் கோர்ட்டாருடைய அதிகார வரம்பை ஆக்ஷேபித்து அது ரெவினியூ கோர்ட்டில் விஜாரணை யாக வேண்டிய விஷயமென்று சொல்லுகிற பிரதிவாதிக்கு அவ்வித ஆக்ஷேபனை செய்யும் பாத்தியதை உண்டென்று ருஜுப்படுத்தவேண்டிய பாரம் பிரதிவாதியைச் சேர்ந்ததென்றும் தீர்மானித்து சப் கோர்ட் உத்தரவை மாற்றி அப்பீலைத் திரும்பவும் பைலுக்கெடுத்து சட்டப்படி ஈராங்கி கேட்டுப்பைசலளிக்க வேண்டுமென்று சப்கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணச் சுருக்கமாவது:—

சப்கோர்ட்டார் தாவா கிராமத்தை ஒரு எஸ்டேட்டாக பாவித்து இந்த இஜெக்ட்மெண்ட் பிராது ரெவினியூகோர்ட்டில் தாகல் செய்யப்படவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். இந்த மனு அப்பீலில் வாதியின் கிரௌண்டுகள் இருவகையானது (1) கோர்ட்டாரின் அதிகாரவரம்பைப்பற்றிய ருஜுபாரம் வாதியின்பேரில் தப்பாய் சாட்டப்பட்டதென்றும், (2) வது எவ்விதத்தில் வாதியால் விடப்பட்ட ருஜுபாகம் சரியானபடி கவனிக்கப்படாமல் சப்கோர்ட்டாரால் மேற்கண்ட விதமான உத்தரவளிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆக இரண்டு கிரௌண்டுகளெடுத்துப் பேசப்பட்டன.

வாதிக்கு தாவா கிராமத்தில் மேல்வார பாத்தியதை இருக்கிறதாயும் அதற்குப்பின் அந்த நிலங்களில் குடிவார பாத்தியதையையும் தாம் அடைந்துவிட்டதாகவும் ஆகவே அவ்வித சந்தர்ப்பத்தால் மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 8-வது பிரிவின் புறநடையம்சத்தில் ஏற்பட்ட விதமாக தாவாகிராமம் எஸ்டேட் என்ற நிலைமையற்றுப் போகிறதென்றும் அதனால் இந்த தாவாவை ரெவினியூ கோர்ட்டில் செய்ய அவசியமில்லையென்று வாதிக்கவில்லை. அதாவது வாதி

ஸ்டேடஸ் ஆக்டின் 8-வது பிரிவை ஆதாரமாகக் கொள்ளவில்லை. ஆகையால் இந்த அப்பீலில் தீர்மானிக்கவேண்டிய விஷயமாவது வாதிக்கு ஏற்பட்ட தாவா இனும் கிராண்டினால் நிலத்தின் வருமான பாத்தியம் மட்டில் ஏற்பட்டிருக்கிறதாவென்றும், வாதிக்கு தாவா கிராண்டு ஏற்படுமுன் தாவா கிராமத்தில் குடிவார பாத்தியம் இருந்ததாவென்றும் ஆக இருவகையான பாயிண்டுகளாகும். வாதி பிரதிவாதியை இஜெக்ட் செய்ய பாத்தியமுடையவரா வென்ற பாயிண்டைமட்டும் கவனித்து வாதியின் பாத்தியதையைப்பற்றி நிர்ணயம் செய்யவேண்டுமானால் அது விஷயமாய் சப்கோர்ட்டார் எடுத்துக் காட்டியிருக்கிற தீர்மானங்களும் கீழ்கோர்ட்டார் அடைந்த தீர்மான முடிவும் ஒப்புக்கொள்ளத் தக்கவைகளென்று சொல்லத்தகும். ஆனால் இந்தக்கேசில் இப்பொழுது கோர்ட்டாருடைய அதிகார வரம்பைப்பற்றி விவாதம் ஏற்பட்டிருக்கிறதேயொழிய வாதிக்கு இஜெக்ட் செய்யும் அதிகாரம் உண்டாவென்றபாயிண்ட் ஏற்படவில்லை. ஸிவில் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பை ஆக்ஷேபிக்கிறவர்கள் அவ்வித ஆக்ஷேபனை செய்ய பாத்தியமுடையவர்களென்று ஸ்தாபிக்கவேண்டியது முதலில் அனுசரிக்கப்படவேண்டிய விதியாகும். (1910) M W N 639-லும், (1918) 24 M L J 669 லும் மேற்கூறிய முதல் முறை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறை மிகவும் நியாயமான காரணங்களைப்பற்றியதாயு மிருக்கிறது. (ஸிவில்கோர்ட்டில் ஒருவன் தாவா செய்தால் ஸிவில் கோர்ட்டுக்கு அதிகார வரம்பில்லை யென்று சொல்லும்பிரதிவாதி அவ்வித ஆக்ஷேபனை செய்ய பாத்தியமுண்டென்று ஸ்தாபிக்கவேண்டிய முதல் கடமையானது மிகவும் தெளிவான நியாயத்தைப்பற்றிய முறையாகும்.) ஆனால் ஒரே பிராதில் இரண்டு பாயிண்டுகள் தீர்மானிக்கப்படவேண்டியதாயிருந்தால் அதாவது அதிகாரவரம்பைப்பற்றிய பாயிண்டும்வாதிக்கு இஜெக்ட் செய்யும் பாத்தியதையும் ஒரே பிராதில் தீர்மானிக்கப்படவேண்டியதயிருந்தால் ஒருபாயிண்டைப்பற்றிருஜுபாரம் ஒரு பார்ட்டியின்பேரிலும் மற்றதைப்பற்றிய ருஜுபாரம் எதிரியின்பேரிலும் சட்டப்பட்டப்படவேண்டிய அசந்தர்ப்பம் உண்டாகிறதென்று 24 மதராஸ் லா ஜர்னல் 659-லும் சொல்லப்பட்டிருக்கிறது. 26 மதராஸ் லா ஜர்னல் 99-ல் ஒரு ஜட்ஜியவர்கள் அதிகார வரம்பு விஷயமாய்ச் சொல்லப்படும் முதல் முறையின் நியாயம் முதலில் ஒப்புக்கொண்ட போதிலும் அதாவது அதிகார வரம்பைப் பற்றி ஆக்ஷேபிக்கும் பிரதிவாதியின்பேரில் ருஜுபாரம் ஏற்படுமென்று ஒப்புக்கொண்டபோதிலும் பின்னால் கவர்ன்மெண்டாரிடம் கிராண்டு பெற்றவர்களுக்கு வருமான பாத்தியம் மட்டில்தான் ஏற்படுமென்று கோர்ட்டார் அனுமானிக்கவேண்டியதாகவும் அப்படியல்லவென்று அதாவது கிராண்டு பெற்றவர்களுக்குக் குடிவார பாத்தியதையுமுண்டென்று ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பு வாதியின்பேரில் மாறிப்போகுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கிராமம் இனமாக அளிக்கப்பட்டதில் வருமான பாத்தியம் மட்டும் ஏற்பட்டதாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும் அல்லது ருஜுவானாலும் கிராண்டுபெற்றவருக்குக் குடிவார பாத்தியமுமுண்டென்று ருஜுப்படுத்தவேண்டியது இனும்தாரைச்சேர்ந்ததாகுமென்ற மேற்கூறிய நியாயத்தை சரியென்று ஏற்றுக்கொள்ளலாம். மேற்கூறிய 24 M L J 99-ல் வாதி தனக்கு மேல்வாரம் குடிவாரம் இரண்டு பாத்தியதையுமிருப்பதாய் ஒப்புக்கொண்டமையாலும் அல்லது மேல்வார பாத்தியம் உண்டானபின் குடிவார பாத்தியதையையும் சம்பாதித்ததாய்ச் சொன்னபடியாலும் அந்தக் கேசைத் தீர்மானித்த ஒரு ஜட்ஜியவர்கள் ருஜுபாரத்தை வாதியின்பேரில் மாற்றத்தக்க சந்தர்ப்பத்தைக் கோர்ட்டார் அனுமானிக்கவேண்டியதென்று எடுத்துச் சொல்லியிருப்பது நியாயமாகும்.

மேற்கூறிய கேஸ்களுக்கும் தாவா கேஸுக்கும் ஒற்றுமையம்சமில்லை. அவைகளில் கிராண்டின் அளவு எம்மட்டென்றும் கிராண்டுக்குப்பின் குடிவார பாத்தியம் சம்பாதிக்கப்பட்ட சந்தர்ப்பமும் யோஜிக்கப்பட்டன. இந்தக்கேசில் வாதிக்கு கிராண்டுக்குமுன் அல்லது கிராண்டு காலத்தில் தாவா கிராமத்தில் நேர்ந்த பாத்தியம் யாதொன்றும் இருந்ததா என்ற விஷயம் யோஜிக்கவேண்டியதாயிற்று. அப்படிப்பட்ட பாத்தியதை இருந்ததாக வாதி ஒப்புக்கொள்ளவுமில்லை. ஆனால் அவ்வித பாத்தியதை இல்லையென்று ருஜுபடுத்தவேண்டியது பிரதிவாதியைச்



OFFICE ... 26 OCT 1914

சேர்ந்ததென்று வாதி சொல்லுகிறார். வாதியின் மேற்கூறிய விவாதத்திற்கு எதிராக பிரதிவாதி பின்வரும் சமாதானம் சொல்லுகிறார். அதாவது கிராண்டளிக்கப்படும் காலத்தில் கிராண்டு பெற்றவர்களுக்கு அந்த நிலங்களில் குடிவார பாத்தியதை கிடையாதென்று அனுமானிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இவ்விதமாய் அனுமானிக்க சட்ட முறையுமில்லை, அதாரிடியுமில்லை. கேசின் தன்மையாலும் அவ்விதமாய் அனுமானிக்கத்தகாது. ஒருவனுக்கு கிராண்டளிக்கும் காரணத்திற்கும் அதற்கு முன் அவருக்கு அந்த நிலத்தில் யாதொரு பாத்தியதை உண்டா என்ற விஷயத்திற்கும் சம்பந்தமே ஏற்பட நியாயமில்லை. நிலத்தை அனுபவிக்கிறவனுக்குத்தான் கிராண்டளிக்கவேண்டுமென்றுவதும் அல்லது கிராண்டளிக்கப்படுகிறவர் அனுபோகத்திலிருக்கக்கூடாதென்றுவது முறை யாதொன்றும் கிடையாது. ஒரு கிராமத்தில் வாஸம் செய்யாத பிராமணர்களுக்கு அந்த கிராமத்திய குடிவார பாத்தியதை கிராண்டாக அளிக்கக்கூடாதென்ற காரணத்திற்காகவே கிராண்ட் பெற்ற பிராமணர்கள் கிராண்டு காலத்தில் குடிவார பாத்தியமில்லாதிருந்தார்களென்று அனுமானிக்கத்தகுமென்று வாதிக்கும் பட்சத்தில், இந்தக்கேசில் வாதி தாவா கிராமத்தில் வாஸம் செய்துவரவில்லையென்றுவது அல்லது அவருடைய முன்னோர்கள் வாஸம் செய்துவரவில்லையென்றுவது யாதொரு ருஜு அம்சமும் இந்தக்கேசில் கிடையாது. ஆகையால் வாதியைப்பற்றி அவ்வித அனுமானமடையவும் நியாயமில்லை. பிரதிவாதி கோறியபடி அனுமானிக்கக் கூடாதென்பதற்கு 24 M L J 659-ம், [1910] M W N 639-ம் ஆக்ஷேபிக்க நியாயமில்லாத அதாரிடிகளாயிருக்கின்றன. ஆகையால் இந்த தாவாவில் வாதியின்பேரில் ருஜுபாரம் ஏற்படுத்துவது பிசகென்று அதாவது கிராண்டுகாலத்தில் வாதிக்கு குடிவார பாத்தியமும் இருந்ததாக ருஜுப்படுத்த வேண்டியது வாதியைச் சேர்ந்ததாக சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது பிசகென்று தீர்மானிக்கப்பட்டு மேல்கண்டவிதமாய் சப் கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. சப்கோர்ட்டார் ருஜு அம்சத்தை சரியாய் கவனிக்கவில்லை யென்ற 2-வது கிரௌண்டைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கத் தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M L J. 233.

———:O:———

## சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ்குமாரஸாமி சாஸ்திரிகள்

S. . 76 of 1913—14 ஆகஸ்ட் 1914.

நோட்டின்பேரில் தாவா செய்யவேண்டிய வாதிகள் யார்?

1-ம் வாதியின் பேருக்குக் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டில் கண்ட தொகையை வசூலிக்கும் பொருட்டு 1-ம் வாதியும் 2-ம் வாதியும் சேர்ந்து கொடுத்த பிராதில் நோட் தொகையானது 2-ம் வாதிக்குச் சேரவேண்டியதென்றும் ஆகவே கோர்ட்டார் 2-ம் வாதிக்கு டிக்கிரீயளிக்கவேண்டுமென்றும் 'அல்லது கோர்ட்டாருக்கு யுக்தமென்று தோன்றினால் 1-ம் பிரதிவாதியின்பேருக்கு டிக்கிரீயளிக்கலாமென்று கண்டு எழுதப்பட்டிருந்தது. அசல் கோர்ட்டார் தாவா நோட்டுக்குப் பிரதிப் பிரயோஜனமே கிடையாதென்ற எதிர் வாதத்தை நம்பி பிராதை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதன் பேரில் நோட் தொகையை இழந்த 2-ம் வாதி மட்டும் தனிமையாக அப்பீல் செய்து ஆனால் அதில் 1-ம் வாதியின் பெயரையும் அப்பீல் பிரதிவாதியாகச் சேர்த்திருந்தார். அப்பீல் கோர்ட்டார் கேசின் தன்மையைப்பற்றி யாதொரு அபிப்பிராயங் கொடுக்காமல் நோட் 1-ம் வாதியின் பேருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்க இந்த அப்பீலை 1 ம் வாதி செய்திருக்கவேண்டுமென்றும் அவர் அப்பீல் வாதியாக இல்லாத காரணத்தால் 2-ம் வாதி மட்டும் தனிமையாய் செய்த அப்பீலை ஏற்றுக்கொள்ள நியாயமில்லையென்று சொல்லி அப்பீலை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதன் பின் இரண்டு வாதிகளும் சேர்ந்து ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அப்பீல் கோர்ட்டாரின் அபிப்பிராயம் பிசகென்று தீர்மானித்து 1-ம் வாதியின் பெயரை அப்பீல் பிரதிவாதியாகிய ஸ்தானத்திலிருந்து அப்பீல் வாதியாக மாற்றி அப்பீலை 2-

வாதிகளும் சேர்ந்து தாகல் செய்ததாக பாவித்துப் பைசலளிக்கவேண்டியது நியாயமாகுமென்று சொல்லி அந்தப்படி மாற்றிப் பைசலளிக்கும்படி கீழ் கோர்ட்டுக்கு ரிமாண்டு உத்தரவு செய்யப்பட்டது.

இந்தப் பிராமிஸரி நோட்டை 1-ம் வாதி 2-ம் வாதிக்கு மேடோவர் செய்திருந்தால் இரண்டு வாதிகள் சேர்ந்து நம்பரையும் அப்பீலையும் நடத்தாமல் அவ்வித அனாவசியமான தாமதத்தை நிவர்த்தி செய்திருக்கலாம். பிராதை முதலில் தயாரித்தவர்களின் கருத்தில் இந்த யுக்தி தோன்றவில்லை போலும். உத்தரவு பெற்றவர்களுக்கு நோட்டின் தொகையை செலுத்த நியாயமுண்டாதலால் பின்னால் 1-ம் வாதி ஒப்பம் வைத்தாலே போதுமானதாகும்.

---

ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட்

C. R. P. 595 & 596 of 1913-

18 ஆகஸ்ட் 1914

மத்தியஸ்தரின் அவார்டை அனுசரித்த டிக்கிரீயின் பேரில் அப்பீல் கிடையாது. ரிவிஷனும் இல்லை.

ஒரு வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்கள் தங்கள் வியவகாரத்தை மத்தியஸ்தரிடம் தீர்த்துக் கொள்ள உத்தேசித்து, மத்தியஸ்தர் அவார்ட் கொடுக்குமட்டும் கேஸை மேல் நடத்தாமல் நிறுத்தி வைக்கும்படி கோர்ட்டாரிடம் விண்ணப்பம் கொடுத்தார்கள். ஆனால் அந்த விண்ணப்பத்தில் மத்தியஸ்தரை நியமனம் செய்யும்படி கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளாத போதிலும், கோர்ட்டார் ஒரு மத்தியஸ்தரை நியமித்து அவர் கொடுத்த அவார்டின் பிரகாரம் டிக்கிரீயளித்தார்கள். கோர்ட்டார் மேற்கண்ட விதமாய் மத்தியஸ்தரை நியமனம் செய்தது சட்டவிரோதமானாலும் அந்த மத்தியஸ்தரின் அவார்டை அனுசரித்துகோர்ட்டார் அளித்த டிக்கிரீயானது முடிவான தீர்மானமாகுமென்றும் சட்டப்படிக்கு அவ்வித டிக்கிரீயின்பேரில் அப்பீல் கிடையாதென்றும், அப்பீலே கிடையாதபோது ரிவிஷன் விண்ணப்பம் செய்து கொள்ளவும் சட்டமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஹான்னே

A. S. 152 of 1911-19 ஆகஸ்ட் 1914.

மறு விக்கிரய உடன்படிக்கையுடன் கூடிய விக்கிரயப் பத்திரம் அடமான நடவடிக்கையாகும்.

கிறய தஸ்தவேஜை எழுதிக்கொடுத்த தினத்திலேயே கிறயத்தொகையை 10 - வருஷங்களுக்குள் வாபீஸ் செய்து விட்டால் அதே சொத்தை மறு விக்கிரயம் செய்து கொடுத்துவிடுவதாக எதிரிடையுடன் படிக்கைப்பத்திரம்பிறந்தால் இவ்வித ஏற்பாடானது அடமானக்கடன் பாபத்தாக மதிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

——:O:——

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 57 of 1911—19 ஆகஸ்ட் 1914

கார்டியனுடைய அஜாக்கிறதை அல்லது மோசத்தால் மைனருக்கு விரோதமாய் ஏற்பட்ட டிக்கிரீ பிந்திய வியவகாரத்திற்கு ரிஜுடிகேடா தோஷமுண்டாக்காது.

ஒரு ஹிந்து விதவையானவள் மைனரின் பேரில் செய்த வியாஜ்ஜியத்தில் மைனருடைய கார்டியன் வாஸ்தவமாய் ஏற்பட்டிருக்கிற உயிலின் ஆதாரத்தைக்கொண்டு மைனருக்காக எதிர்வாதம் செய்யாமல் ஷை மைனர் மூலவுருஷனுடைய ஸ்வீகார புத்திரனென்ற பொய்க்கக்ஷியை எடுத்து வழக்காடினதில் ஸ்வீகாரம் பொய்யென்று ஏற்பட்டு கார்டியன் தெரிந்து மனப்பூர்வமாய் கெட்ட எண்ணத்துடன் நடந்தமையால் மைனருக்கு விரோதமாய் வாதியாகிய ஹிந்து விதவை டிக்கிரீ பெற்றாள். பின்னால் மைனர் வேறு கார்டியனைக்கொண்டு உயில்படி பாத்தியங்கொண்டாடி வழக்கெடுத்தாலும் மேஜரானபின் வியவகாரம் நடத்தினாலும் எதிர்வழக்காடும் அனந்தரவாரிஸ்கள் முந்தி ஏற்பட்டிருக்கும் டிக்கிரீயை ரிஜுடிகேடாவென்று ஆதாரங்கொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. கார்டியன் உண்மையான எதிர் வழக்கை விட்டுப் பொய்யான வாதம் செய்த நடத்தையானது ரிஜுடிகேடாவென்னும் தோஷத்தை விலக்கிவிட்டதாகச்சொல்லப்பட்டது. ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் கொடுத்த தீர்ப்பில் "ஒரு ஹிந்து விதவை பெற்ற டிக்கிரீயாகிலும் அவள் மேல் ஏற்படும் டிக்கிரீயாகிலும் ஷையாள் ஜீவிய காலத்தில் அனந்தர வாரிஸ்கள் கொண்டுவரும் வியவகாரத்திற்கு ரிஜுடிகேடாவாகாதென்றும் அல்லது அனந்தர வாரிஸ்களுக்குள் ஒருவருக்கொருவர் பேரில்நடத்தும் வியவகாரங்களுக்கும் ஷை டிக்கிரீ ஷை தோஷத்தை உண்டாக்காதென்றும்" அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

---



26 OCT 1914
OFFICE OF ... MAD...

ஜஸ்டிஸ் ஏப்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜி

Crl. R. Case 106 of 1914-25 ஆகஸ்ட் 1914

குற்றப்பத்திரிகை-மாஜிஸ்டிரேட்டின்மாற்றல்---மறுவிஜாரணை---டிஸ்சார்ஜ் உத்தரவு ஜில்லா கலக்டரிடம் ரிவிஷனில்லை.

டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் எதிரியின் பேரில் குற்றப்பத்திரிகை வாசித்து டிபென்ஸு விஜாரணைக்குத் துவக்கம்செய்யுமுன் மாற்றலாகிப் போக அவருக்குப்பின் வந்த மாஜிஸ்டிரேட்டாரவர்கள் மருபடியும் விஜாரணையைத் துவக்கி குற்றப்பத்திரிகை படிக்காமலே எதிரியின்பேரில் குற்றம் ருஜுவாகவில்லையென்று வாதியை விஜாரணை செய்தபின் அபிப்பிராயப்பட்டு எதிரியை டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரிடம் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் மறு விஜாரணைக்குஉத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் ஷை உத்தரவளித்தது பிசகென்றும் எதிரியை 2-வது மாஜிஸ்டிரேட்டாரவர்கள் குற்றப்பத்திரிகைபடிக்காமலேடிஸ்சார்ஜ் செய்தபோதிலும் முக்கிய அதிகாரி குற்றப்பத்திரிகை எடுத்தின காரணத்தால் எதிரி பூரண விஜாரணையின் பேரில் விடுதலையடைந்ததாக பாவிக்கப்படவேண்டுமென்றும் அப்படிப்பட்ட விடுதலைத் தீர்மானத்தின்பேரில், கவர்ன்மெண்டார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ய முறையுண்டேயொழிய வேறுவித நடவடிக்கை யாதொன்றும் எடுக்கசட்டமில்லையென்றும் உத்தரவளித்து டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் செய்த உத்தரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

——:O:——

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

Crl. R. Case 77 of 1914 25 ஆகஸ்ட் 1914

கிரிமினல் புரோஸிஜர் கோட் 145-வது பிரிவின்படி பொஸெஷன் கேஸில் மனுதாரின் செலவு தொகையை, உத்தரவான மூன்று வருஷத்திற்குள் மகன் வாரிஸாக ரிகார்டில் வந்து அடையலாம்.

கிரிமினல் புரோஸிஜர் கோட் 145-வது பிரிவின்படி மனுதார் சுவாதீனத்திற்காகவும் செலவு தொகைக்காகவும் உத்தரவுபெற்றகைபோடு, மனுதாரின் வக்கில் செலவுத்தொகை மிமோவும் தாகல் செய்தார். மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அந்தமிமோவில் கண்ட தொகையை உத்தரவில் சேர்க்கும்படி அனுமதி கொடுத்தபின் மனுதார் இறந்துபோய் விட்டார். அவருடைய மகன் ஷை உத்தரவு பிறந்த 3-வருஷங்களுக்குள் ஷை தொகையை அடையும்பொருட்டு விண்ணப்பம் கொடுத்தார். மனுதாரின் மகனை வாரிஸாக ரிகார்டில்கொண்டுவந்துசெலவுதொகையை அடைய உத்தரவு பெறலாமென்றும் கிரிமினல் ப்ரோஸிஜர் கோடில் இவ்வித முறை ஸ்பஷ்டமாய் ஏற்படாதபோதிலும் அவ்வித உத்தரவளிக்க மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு இயற்கையான அதிகாரமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

——:O:——

ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

S. A 2600 of 1912-25 ஆகஸ்ட் 1914

பட்டா ஒழுங்கீனம் என்றாலும் ஜப்தி நியாயத்தீர்வையின்மட்டில் சட்ட விரோதமல்ல.

மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்டின்படி நியாயமாய் விதிக்கவேண்டிய தீர்வைக்கு மேலாக நிலச்சுவான்தார் பட்டாவில் தொகையைக் குறித்து அதில் கண்டபடி தீர்வை தொகையை வசூலிக்கும்பொருட்டு ஜப்தி செய்ததில் நியாயமாய் எவ்வளவு தீர்வை செலுத்தப்படவேண்டுமோ அம்மட்டில் இதே ஜப்தியில் வசூலித்துக்கொள்ளலாமென்றும் பட்டாவில் அக்கிரமமாக சில பாகம் கூட்டப்பட்டதினால் பட்டா முற்றிலும் செல்லாதென்று வாதிக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

——O——

ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் & ஜஸ்டிஸ் நேபியர்

C M A 113 of 1914-25 ஆகஸ்ட் 1914

*டிக்ரீ பாக்கிதாரனுக்காக ஜாமீன்கொடுத்தவன்பேரில் தொடருமுன், டிக்ரீ பாக்கிதாரன் தவறிப்போன விஷயத்தை வாதி ஸ்தாபிக்கவேண்டியதவசியமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. பிரதிவாதி டிக்கிரீயின்படி நடக்கத்தவறினதாக ருஜூப்படுத்தின பிறகுதான் ஜாமீன்தார் பேரில் செல்லவேண்டும்.*

———:O:———

ஜஸ்டிஸ் ஏய்லிங்

Crl R Case 115 of 1914-21 ஆகஸ்ட் 1914

*தண்டனையடையக்கூடிய எதிரி விடுதலையானால் திரும்பவும் அதே குற்றத்திற்காக அவனை விஜாரணைக்குள்ளாக்க ஹைகோர்ட்டார் யுக்தமேயொழிய ஜில்லா கலக்டருக்கு அதிகாரமில்லை.*

10 எதிரிகள் மதுபானம் செய்துவிட்டு ஒழுங்குத்தப்பாய் நடந்துகொண்டார்களென்ற குற்றத்திற்காக சார்ஜ் செய்யப்பட்டு பெஞ்சு மாஜிஸ்டிரேட்டார் முன் விஜாரணைக்கு அனுப்பப்பட்டார்கள். எதிரிகளில் இருவர் மற்ற எதிரிகளின் பேரில் துன்பதிற்காகவும் ஆராகிருதமாய் (உத்தரவன்னியில்) வீட்டிற்குள் புகுந்ததற்காகவும் கொடுத்த பிராது விஜாரணையாகாமல் ராஜி செய்து கொள்ளப்பட்டதாக ரிபோர்ட் செய்யப்பட்டதின்பேரில் விடுதலையானார்கள். பெஞ்சு மாஜிஸ்டிரேட்டார் முன் நடந்த முதல் கேஸில் எதிரிகள் டிபன்ஸில் தாங்கள் அதே காலத்தில் நடந்த குற்றத்திற்காகச் சார்ஜ் செய்யப்பட்டு விடுதலையானதால் திரும்பவும் அக்காலத்தில் நடந்த குற்றத்திற்காக சார்ஜ்செய்யப்படக் கூடாதென்னும் நியாயத்தைச் சொன்னதின்பேரில் பெஞ்சு மாஜிஸ்டிரேட்டாரவர்கள் எதிரிகளின் வாதத்தை ஒப்புக்கொண்டு அவர்களை டிஸ்சார்ஜ் செய்து விட்டார்கள். அதன்பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் எதிரிகளை பெஞ்சு மாஜிஸ்டிரேட்டார் விடுதலைசெய்தது பிசகென்று சொல்லி மறு விஜாரணைக்கு உத்தரவளித்தார்கள். எதிரிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்ததில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருக்கு மேற்கூறிய உத்தரவளிக்க அதிகாரமில்லையென்றும் ஹைகோர்ட்டாருடைய உத்தரவுக்காக டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் ரிபர் செய்திருக்கவேண்டுமென்றும் தீர்மானித்து, டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவை ரத்துசெய்து விட்டார்கள்.

———

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

S. A. 2415 of 1912-25 ஆகஸ்ட் 1914,

*அனந்தர வாரிஸ்தார் விதவையின் பராதீனத்தைப்பற்றி செய்யும் தாவாவுக்கு காலாவது 6-வருஷமா அல்லது 12-வருஷமா?*

ஒரு ஹிந்து விதவை ஜீவதசைமட்டும் அனுபவிக்க யோக்கியமான ஒரு சொத்தைப் பராதீனம் செய்தால் அந்தப்பராதீனம் ஷை யாளுடைய ஜீவதசைக்குப் பின் அனந்தர வாரிஸைக் கட்டுப்படுத்தாதென்று தாவா செய்வதில் தாவா செய்யும் காலத்தில் ஷை யாள் காலஞ்சென்றாலும், அல்லது புனர் விவாகம் செய்துகொண்ட காரணத்தினால் ஷை சொத்தை அனுபவிக்க லாயக்கில்லாமல் போனாலும், அந்த சொத்தை உடனே சுவாதீனமடைய பாத்தியமுள்ள (அதாவது அடுத்த) அனந்தரவாரிஸ்தார் செய்யும் தாவாவுக்கு 125-வது ஆர்டிகிலின்படி பராதீனமான தேதி முதல் 12-வருஷ கெடு ஏற்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாத எட்டிய அனந்தரவாரிஸ்தார் ஷை பராதீனம் தன்னை ஷை யாளுடைய ஜீவதசைக்குப் பின் கட்டுப்படுத்தாதென்று செய்யும் தாவாவுக்கு 120-வது ஆர்டிகிலின்படி 6-வருஷ கெடுவென்று தீர்மானிக்கப்பட்டது. காலாவதி கெடுவு ஏற்படாத தாவாக்களுக்கு 6-வருஷ கெடுவென்று 120-வது ஆர்டிகிலின் அம்சமாகும்.

———

ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் நேபியர்

C. M. A. 2 of 1913-26 ஆகஸ்ட் 1914.

*தகப்பன் மகன் இருவரில் மகனை நீக்கித் தகப்பன்பேரில் மட்டும் டிக்கிரீயளித்தாலும் குடும்ப சொத்தில் மகனுக்குரிய பாகத்தின் பேரிலும் தொடர்ந்து டிக்கிரீயை நிறைவேற்றலாம்; ஏனெனில் ஹிந்து லாப்படிக்கு தகப்பன் பேரில் ஏற்படும் டிக்கிரீ தொகையை மகன் செலுத்தக் கடவனாகிறான்.*

———



ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர்

C. M. S. A. 65 of 1913-27 ஆகஸ்ட் 1914.

*பார்ட்டிகளின் சம்மதத்தின்பேரில் அடமான வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்கிரீயளிக்கவேண்டியதற்கு பதிலாக முடிவான டிக்கிரீயாகப் பிறந்தபோதிலும் அந்தடிக்கிரீயை நிறைவேற்றுவதற்குமுன் ப்ராபர்டி ஆக்ட் 89-வது பிரிவின்படி குறித்த காலத்தில் டிக்கிரீத்தொகை செலுத்தப்படாத காரணத்தால் சொத்தை ஏலம்போடும்படி பைசல் டிக்கிரீயளிக்கப்படாமல் அந்த டிக்கிரீயை நிறைவேற்றக்கூடாதென்றும் 12-வருஷ வாய்தாவானது நிறைவேற்ற லாயக்குள்ள தேதியாகிய பைசல் டிக்கிரீ பிறந்த தேதிமுதல் கணிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது*

———:O:———

ஜஸ்டிஸ்ஏய்லிங் & ஜஸ்டிஸ்சேஷகிரிஅய்யர்

Crl R. C. Nos. 69 & 70 of 1914

28 ஜூலை 1914

எம். விஜயராகவ பிள்ளை Vs P. தியாகராஜ செட்டி

1904-ம் வருஷத்திய மதராஸ் ஸிடி முனிஸிபல் அக்ட் 413-வது பிரிவில் கவர்ன்மெண்டாருக்கு ஏற்பட்டிருக்கிற அதிகாரத்தை அனுசரித்து விதித்திருக்கிற ரூல்களில் 5-வது ரூலைப் பிரயோகித்து மதராஸ் முனிஸிபல் பிரெஸிடெண்டாரவர்கள் மனுதாராகிய விஜயராகவ பிள்ளை என்றவர்களின் பெயரை கமிஷனராக நியமிக்கப்படுவதற்கு லாயக்குள்ளவர்களின் ஜாபிதாவில் சேர்த்தது சட்ட விரோதமென்று தீர்மானிக்கும் பொருட்டு P. தியாகராஜ செட்டி, P. M. அப்பாஸாமி பிள்ளை என்ற இரண்டு கனவான்கள் மதராஸ் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் விண்ணப்பம் கொடுத்ததின்பேரில் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அவ்விரு விண்ணப்பதாரர்கள் கோரியபடி மனுதாரின் பெயரை ஷை ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவளித்தார்கள். அதன்மேல் மனுதாரவர்கள் ஹைகோர்ட்டில் கிரிமினல் புரோஸிஜர் கோடு 439-வது பிரிவின்படியும், சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படியும் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்தார்கள். அந்த இரண்டு விண்ணப்பங்களையும் அட்மிட் செய்துகொண்ட ஜட்ஜியவர்களுக்கு இவ்வித உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கலாமாவென்று சந்தேகமேற்பட்டதினிமித்தம் ஷை விண்ணப்பங்களைப் பைசல் செய்ய கேட்ட மேற்கண்ட இரண்டு நியாயாதிபதிகளும் அட்மிஷன் ஜட்ஜியவர்கள் சந்தேகித்த பாயிண்டைப்பற்றி அதாவது ஹைகோர்ட்டுக்கு இவ்விதமான மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய உத்தரவை மாற்ற அதிகாரமுண்டாவென்ற பாயிண்டை முதலில் ஆர்கியுமெண்டு செய்யும்படி உத்தரவளித்த பிரகாரம் வக்கில் ம-ா-ா-ஸ்ரீ டி. எத்திராஜ முதலியாரவர்கள் ஹைகோர்ட்டாருக்கு அதிகாவரம்புண்டென்று வாதம் செய்தும் ஹைகோர்ட்டார் அந்த வாதத்தின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளாமல் மதராஸ் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் இவ்விதமான உத்தரவளித்தால் ஹைகோர்ட்டாருக்கு அதன்மேல் பிரவேசிக்க அதிகாரமே கிடையாதென்று தீர்மானித்து இரண்டு ரிவிஷன் விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆகவே எம். விஜயராகவ பிள்ளையவர்களின் பெயர் ஷை ஜாபிதாவிலிருந்து நீக்கப்படவேண்டியதாயிற்று. ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்பட்ட காரணச் சுருக்கமாவது:—

கிரிமினல் புரோஸிஜர் கோடு 439-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமில்லையென்று வக்கில் மிஸ்டர் எத்திராஜ முதலியாரவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி ஹைகோர்ட் அப்பீல் தரப்பினுடைய அதிகாரவரம்புக்குட்பட்ட எல்லா கோர்ட்டுகளின்பேரிலும் ஹைகோர்ட்டார் மேலதிகாரம் செலுத்தலாயக்குண்டென்று வாதிக்கிறார்கள். கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ரூல்ஸ்படி தீர்மானங் கொடுக்கிற பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களை ஹைகோர்ட் அப்பீல் அதிகாரவரம்பிலடங்கிய கோர்ட்டாராக்கலாமா? மாஜிஸ்டிரேட்டார் இவ்வித உத்தரவளிக்குமுன் நடக்கவேண்டிய முறைகள் யாதொன்றும் ரூல்களில் கிடையாது. மாஜி

ஸ்டிரேட்டார் சாட்சி விஜாரணை செய்ய அதிகாரமுடையவரானாலும் யாதொரு சட்ட நியாயத்தை யனுசரித்து அவ்விஜாரணை செய்யக் கடமைப்பட்டவர்களென்று சொல்லப்படவில்லை. மனுதார் வக்கிலுடைய வாதத்தில்மாஜிஸ்டிரேட்டார் சாதாரணமாக ஹைகோர்ட் அதிகாரத்திற்குட்பட்டவராதலால் அவர்களுக்கு கவர்ன்மெண்டார் யாதொரு அதிகாரத்தைக் கொடுத்தாலும் அவ்வதிகாரத்தை ஹைகோர்ட்டாரின்மேல் பார்வைக்குட்பட்டு செலுத்தக்கடவர்களென்று சொல்லப்படுகிறது. இந்தவாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. கவர்ன்மெண்டார் மதராஸ் டவுனில் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கும் வெளிஜில்லாக்களில் கலக்டரவர்களுக்கும்இவ்விதமான அதிகாரம்செலுத்தும்படி ரூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஜில்லா கலக்டரவர்கள் இவ்விதமாகச் செய்யும் உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் தலையிடக்கூடாதென்றவிதமாகவே மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவின் பேரிலும் ஹைகோர்ட்டார் தலையிடுவது நியாயமில்லையென்று சொல்லத்தகும். பிரிவிகௌன்ஸிலார் 11 மதராஸ் 26-ல் தீர்மானித்திருக்கிறபடி தர்ம பரிபாலன விஷயமாகவும் தேவஸ்தான மானேஜ்மெண்ட் விஷயமாகவும் ஏற்படுத்தியிருக்கிற 1863-ம் வருஷத்திய XX-வது ஆக்டின் 10-வது பிரிவின்படி சில உத்தரவுகளை ஜில்லாவிலுள்ள மேலான ஸிவில் கோர்ட்டார் அளிக்கலமென்றிருக்க, சட்டமுறையைபபற்றிக்கொடுத்த தீர்மானத்தில் ஷை தேவஸ்தான ஆக்ட் விஷயமாய் ஏற்படும் வியவகாரங்களைப்பற்றி உத்தரவுகளைக் கொடுக்க ஸ்தலத்திலுள்ள மேலான ஸிவில் அதிகாரியே யோக்கியமானவர்களென் ? ளுடையதன்மையும் மற்ற ஸ்தலத்தின் அனுபோகமும் அவர்களுக்குத்தான் மிகவும் நன்றாய்த் தெரியவருமென்றும் எண்ணி சட்ட கர்த்தாக்கள் ஷை ஆக்டின் 10வதுபிரிவில் ஸிவில கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அதுபோலவேதான் கவர்ன்மெண்டார் முனிஸிபல் ஆக்ட் விஷயமாய் ஏற்படுத்தினரூல்களில் மாஜிஸ்டிரேட்டாருக்கும் ஜில்லா கலக்டருக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். தேவஸ்தான ஆக்டின்படி ஜில்லா கோர்ட்டார் செய்தஉத்தரவின்பேரில்ஹைகோர்ட்டார்ரிவிஷனில்பிரவேசிக்கலாமென்பதற்கு 25 M L J 536-ல்பிரசுரமாகியிருக்கும்நாகப்பட்டணம்கேஸானது எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் அந்தக்கேசானது இப்பொழுது பிரிவிகௌன்ஸிலில் ஈரக்கிபாக்கியிலிருப்பதாய்த் தெரியவருகிறது. ஆகையால் அந்த நடவடிக்கையின் நியாயத்தை அதாரிடியாக காட்ட நியாயமில்லை. தவிர அந்தக்கேசின் சந்தர்ப்பத்திற்கும் தாவாகேசுக்கும் யாதொருஒற்றுமையுமில்லை.

மிஸ்டர் எதிராஜமுதலியாரவர்கள் 23 மதராஸ லாஜர்னல்591-ஐஎடுத்துக்காட்டி மதராஸ ஸிடி முனிஸிபல் ஆக்ட் 172-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் செய்த உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தக்கேசின் தீர்மானத்தை கவனித்தால் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் 172-வது பிரிவின்படி செய்யவேண்டிய உத்தரவைப்பற்றிஹைகோர்ட்டுக்கு ரிபர் செய்திருக்கவேண்டுமென்றும் மாஜிஸ்டிரேட்டார் தாங்களே உத்தரவு செய்தது சட்ட விரோதமென்றும் ஹைகோர்ட்டாரின் அதிகாரத்தை மாஜிஸ்டிரேட்டார் தப்பாக செலுத்தினமையால் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்தது நியாயமாகும். ஸிடி முனிஸிபல் ஆக்டின் 172, 176வது பிரிவுகளால், ஹைகோர்ட்டாருக்கு மாஜிஸ்டிரேட்டாரின் நடத்தையை உட்படுத்தியிருக்கிற சில சந்தர்ப்பங்களைக்கொண்டு, 413வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் செய்திருக்கிற ரூல்களை அனுசரித்து மாஜிஸ்டிரேட்டாருக்கு ஏற்பட்டிருக்கிற அதிகாரமானது ஹைகோர்ட்டுக்கு அடங்கியதென்று சொல்ல நியாயமாகாது. (1893) 1 Q. B. 431-ன் 447, 448 இவைகளில் சொல்லியிருக்கிறபடி ரூல்களை அனுசரித்து நடக்கிற உத்தியோகஸ்தர் கோர்ட்டாராக பாவிக்கத்தகாது. Volq Halsbury 9-ம்பக்கத்தில்சொல்லியபடிபற்பலவிஷயங்களைத் தீர்மானிக்கிறவர்கள் எல்லோரும்கோர்ட்டாராகமாட்டார்கள். நியாயமாகவும்பட்சபாதமில்லாமலும் அவர்கள் நடக்கபோதிலும் கோர்ட்டாராகிற நிலைமையை வகித்தவர்களாக பாவிக்கப்படவேண்டிய அவசியமில்லை. 30 மதராஸ் 326-ல் ஆனரபில் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரவர்கள் அதே நியாயத்தைக் கருதி டிஸ்டிரிக்ட்ரெஜிஸ்டிராடாரவர்கள்செய்யும் உத்தரவுகளின் பேரில் ஹைகோர்ட்டார் ஸிபிஸி 622-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்கிற விஷயத்தைப்பற்றி தீர்மானித்திருக்கிறார்கள்.



ஆகவே இந்தக்கேசின் விஷயமாய் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் செய்த உத்தரவானது ஹைகோர்ட்டாருடைய அதிகாரவரம்பிலடங்கியதல்லவென்று சொல்லவேண்டும். மாஜிஸ்டிரேட்டார் முனிஸிபல் பிரஸிடெண்டுக்கும் எலக்ஷன் நிலமையைத் தேடும் பார்ட்டிகளுக்கும் பொதுவான ஒரு மத்தியஸ்தராக பாவிக்கப்படவேண்டும். வெளி ஜில்லாக்களின் முனிஸிபல் ஆக்டில் கலக்டருடைய தீர்மானம்முடிவான பைசல் என்றவிதமாக பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரின் உத்தரவும் முடிவானதாகும். 21 பம்பாய் 279-யும், 38 கல்கத்தா 547-யும் பார்க்கவும். சிற்சில நியாயத் தீர்மானங்கள் கொடுக்கும்படியாக சில உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய உத்தரவுகள் பொதுவாய் ஹைகோர்ட்டாருடைய அதிகாரத்திற் குட்பட்டதானாலும் விவாதமான தாவா அதிகாரத்தை செலுத்தும் பொழுதும் ஹைகோர்ட்டாருடைய அதிகாரத்திற்குட்பட்டிருக்கவேண்டியதவசியமில்லை.

மேற்கூறிய பற்பல தீர்மான நியாயங்களை அனுசரித்துபிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் செய்த உத்தரவின்பேரில் ரிவிஷனில் பிரவேசிக்க அதிகாரமில்லையென்று இந்த மனுக்கள் தள்ளுபடியாச்சுது. XXVII M L J 227.

———:O:———

ஜஸ்டிஸ் மில்லர்

C. R. P. 487 of 197—26 ஜூலை 1909

சேலம் டவுன் பாங்கி Vs ராமஸாமி அய்யர்

ஹிந்து லா கேஸ்.

கூட்டுக்குடும்ப சொத்துக்கு பாத்தியஸ்தர்களான மூன்று புத்திரர்கள் பேரில் தகப்பன் பட்ட கடனுக்காக செய்த வாதியின் தாவாவில் மூன்று புத்திரர்களாகிய 3, 4, 5, பிரதிவாதிகள் பேரில் பிராதுக்குக் காலாவதி தோஷமேற்பட்டமையால், 2ம் பிரதிவாதியின் வசமிருப்பதாய்ச் சொல்லப்பட்ட ஷை யார்களுடைய சொத்தின் பேரில் டிக்கிரீயளிக்கக் கூடாதென்றும், வாதிக்குச் சேரவேண்டிய கடன் பாக்கி முழுவதுக்கும் 2-ம் பிரதிவாதியின்பேரில் ஷை யாருடைய பாகத்திற்கு வந்த குடும்ப சொத்தைப் பொருத்தும் ஷை யாரிடம் தகப்பனுடைய தனிமையான சொத்து எதாகிலுமிருந்தால் அதைப்பொருத்தும் டிக்கிரீயளிக்க வேண்டியது நியாயமென்றும் 2-ம் பிரதிவாதியின் வசம் மற்ற பாகஸ்தர்களுடையசொத்து இருப்பதாகச் சொல்லப்பட்டதில், அவர்கள் ஆஜரில்லாத காலத்தில் வாதிஷை சொத்து பாகத்தை ஜப்திசெய்து வசூலிக்கத்தக்கவிதமாக 2-ம் பிரதிவாதியின் பேரில் டிக்கிரீயாகக் கூடிய நிலமையில் 2-ம் பிரதிவாதி மற்றவர்களுடைய சொத்து பாகத்தை வைத்துக்கொண்டிருப்பதாகக் காணப்படவில்லையென்றும், தீர்மானம் கொடுக்கப்பட்டு, குடும்ப சொத்தின் பாகத்திற்குத் தக்க விகிதப்படி ஏற்படும் கடன் பாகத்திற்குமட்டும் ஒவ்வொரு புத்திரனும் பாத்தியப்படக்கடவனென்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்றும், வாதி புத்திரர்கள் அனைவர்பேரிலும் மொத்த பாக்கிக்காக தாவா செய்யவேண்டிய கட்டாயமில்லையென்றும், ஒருவன் பேரில் மட்டும் தாவா செய்தாலும் அவனுடைய பாகத்திற்கு வரும் கடனுக்காகமட்டும் வாதி தாவா செய்யவேண்டிய கட்டாயமில்லையென்றும், ஆகவே 2-ம் பிரதிவாதியின் பேரில் வாதி பூராத்தொகைக்காக டிக்கிரீபெற்று அவனுடைய சொத்து பாகத்தின்பேரில் மட்டும் தொடர நியாயமுண்டென்றும் தகப்பனுடைய சொத்து அவனிடமிருந்ததாக ருஜுவில்லையென்றும் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது. XXVII M L J 286.

———

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.

வட ஆர்காட் ஜில்லா.

S. A. 1559 of 1912-5 நவம்பர் 1913

கார்வட் நகர் ராஜா Vs கோவிந்த முதலி

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் கேஸ்.

எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டானது1817-ம்பசலிக்குப்பின் நமோதுக்கு வந்திருக்க, கார்வட்நகர் ராஜா அவர்கள் 1317, 1318, 1319 ஆகிய மூன்று பசலிகளுக்குறிய தீர்வை பாக்கியை வசூலிகரும் பொருட்டு ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்தார்கள். பிரதிவாதியாகிய கோவிந்த முதலி

இரண்டுவித ஆக்ஷேபனை சொல்லி எதிர் ஆன்ஸர் கொடுத்தார், (1) பிராதில் கண்ட தொகையானது நியாயமாய்ச்செலுத்தப்படவேண்டிய தொகையைவிட அதிகமாயிருக்கிறது (2) வாதி பட்டாக்கொடுக்காமல் தீர்வை பாக்கிக்காக தாவா செய்தது பிசகு, இவ்விரண்டு ஆக்ஷேபனைகளையும் ரிகார்டு செய்யாமல்ரெவினியூ கோர்ட்டார் வாதிக்குப் பிராதில் கோறியபடி டிக்கிரீயளித்து விட்டார்கள். அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரவர்கள் 1317-ம் பசலிக்குறிய தீர்வை பாக்கிக்காக டிக்கிரீயளித்தது பிசகென்றும் மற்ற இறண்டு பசலிக்குறிய தீர்வை பாக்கியைப்பற்றி எதிரியின் ஆக்ஷேபனையைக் கேட்டு யாதொரு தீர்மான முடிவு சொல்லவேண்டுமென்று அதாவது எதிரி ஆக்ஷேபிக்கும்பாயிண்டுகளைப்பற்றி ஈரங்கிகேட்டுப்பைசல் டிக்கிரீயளிக்கவேண்டுமென்று ரெவினியூகோர்ட்டாருக்குரிமாண்டு உத்தரவளித்தார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் சுருக்கமாவது:—

எஸ்டேட்ஸ் ஆக்ட் 195-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிராதில் கண்ட தொகை உள்ளதைவிட அதிகமாயிருக்கிறதென்று எதிரி ஆக்ஷேபனை செய்வதாயிருந்தால் ஒப்புக்கொள்ளுகிற மட்டில் பாக்கித்தொகையைக் கோர்ட்டில் கட்டி எதிர்வாதம் செய்யவேண்டும். அன்றியும் ஆக்ட் நமோதுக்கு வந்த பிறகு செய்யப்படும் தாவாவில் பட்டா கொடுக்கப்படவில்லையென்ற ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று (1912) M W N 441, (1913) M W N 618 இவைகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க எதிரி ஒப்புக்கொண்ட தொகையை 195-வது பிரிவின்படி கோர்ட்டில் கட்டாதகாரணத்தைவிட்டு எதிரியின் வாதத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கு டிக்கிரீயளித்திருக்கிறார்கள். எதிரியின் 2-வது ஆக்ஷேபனையைப் பற்றி அதாவது பட்டா கொடுக்கப்படவில்லையென்ற ஆக்ஷேபனையைப்பற்றி ரெவினியூகோர்ட்டார் ஈரங்கிகேட்டுத் தீர்மானம் கொடுக்கவேண்டிய தவசியமாகும். ஆகையால் ஜில்லாகோர்ட்டார் 1318, 1819-வது பசலிகளுக்குறிய தீர்வை பாக்கியைப்பற்றி ஆக்ஷேபனை ஈரங்கிகேட்டுப் பைசலளிக்க வேண்டுமென்று ரிமாண்டு உத்தரவளித்தது நியாயமே. அதுபோலவே 1317-ம் பசலி பாக்கியைப்பற்றியும் ரிமாண்டு செய்திருக்கவேண்டிய தவசியமாகும். ஏனெனில் ஜில்லா கோர்ட்டார் (1911) M W N .139-ல் ஏற்பட்டிருக்கும் தீர்மானத்தை அனுசரித்து ஆக்ட்டுக்கு முந்திய பசலி பாக்கி விஷயமாய் பட்டா கொடுத்திருக்கவேண்டிய அவசியமென்று அபிப்பிராயப்பட்டு அந்தப்பசலிக்காக டிக்கிரீயளிக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக் கேஸில் பிராது ஆக்டுக்கு முந்தி தாகல் செய்யப்பட்டதாகும். ஆகையால் அந்தத் தீர்மானத்தை அனுசரிப்பது சரியல்ல. ஆக்டுக்கு முந்திய பசலிபாக்கியானாலும் பிராது ஆக்டுக்குப் பின் தாகலானால் பட்டாகொடுக்கப்படாததைப்பற்றி ஆக்ஷேபனை செய்யக் கூடாதென்று மேற்கூறிய இரண்டு தீர்மானங்களில் சொல்லப்பட்டிருப்பதால் அதை கவனித்து 1317-ம் பசலிபாக்கியைப்பற்றியும் சட்டப்படி தீர்மானங்கொடுக்க வேண்டுமென்று ரெவினியூ கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். XXVII M L J 238.

—:o:—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

கர்நூல் ஜில்லா

S. A. 639 of 1918-7 ஜனவரி 1913

(ஸி. பி. ஸி. ஆர்டர் 34-ரூல்-1)

ஓபலம் பள்ளி ராம லட்சுமண்ணு-பிரதிவாதி

ப்ராபர்டி ஆக்ட் 85-வது பிரிவின் அம்சங்களுக்குச் சரியான ஸி-பி-ஸி ஆர்டர் 34 ரூல் 1-இன்படி அடமான வியாஜ்ஜியம் செய்யும் பொழுது தஸ்தவேஜில் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர அடமான சொத்தில் ஹக்கு பாத்தியதை யுடையவர்கள் அனைவரையும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கவேண்டும். அப்படியிருக்க இந்தக்கேஸில் 1-ம் பிரதிவாதி தஸ்தவேஜை எழுதிக்கொடுத்த பிரதிவாதிக்கு சொத்து பாத்தியதையே கிடையாதென்றும் தனக்கு மட்டும் அதில் மேலான பாத்தியதை யுண்டென்றும் சொன்ன காரணத்தால் பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டதில் மேற்கூறிய சட்ட முறைப்படி 1-ம் பிரதிவாதி அவசியமான பார்ட்டியல்லவென்று 38 கல்கத்தா 425 ஐ அனுசரித்துச் சொன்னாலும், 1-ம் பிரதிவாதியைப்போலொத்தவரைப் பார்ட்டியாக சேர்க்கக்கூடாதென்று ஸி. பி. ஸி. யில் யாதொருவிதியும் ஏற்படவில்லையென்றும் அப்படிச் சேர்க்கப்பட்டவனுடைய வாதத்தைக்கோர்ட்டார் கேட்டு தீர்மானம் கொடுக்கலாமென்றும் அபிப்பிராயங் கொடுக்கப்பட்டு 1-ம் பிரதிவாதியின் சொத்து பாத்தியதையைப் பற்றி கீழ்கோர்ட்டார் விஜாரணைசெய்து பைசலளித்தது சட்டவிரோதமல்லவென்றும் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பில் அடங்கின நடவடிக்கைதானென்றும் அபிப்பிராயங்கொடுக்கப்பட்டு 1-ம் பிரதிவாதியைப் பார்ட்டியாகச் சேர்க்கக்கூடாதென்று ஆக்ஷேபித்த பிரதிவாதியின் 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. (1914) M. W. N. 623.

—:o:—

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்

நெல்லூர் ஜில்லா

C. M. A. 148 of 1913—3 பிப்ரவரி 1914

எபூர் ராமஸாமி ரெட்டி vs ரங்கமன்னார் அய்யங்கார்

(C. P. C. ஆர்டர் 341-ரூல் 5)

அடமான வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்கிரீயையும்-நிறைவேற்றலாம்.

நெல்லூர் ஜில்லா கோர்ட்டில் அடமானக்கடனை வசூலிக்கும் பொருட்டு வாதி செய்த தாவாவில் சட்டப்படி தொகையை செலுத்தும்படி 6-மாத வாய்தா கொடுக்கப்பட்டு பிரதம டிக்கிரீயளிக்கப்பட்டது. குறித்த வாய்தாவுக்குள் பிரதிவாதி தொகை கட்டாதபடியால் வாதி கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து அடமான சொத்தை டிக்கிரீ பாக்கிக்காக ஏலம் போடலாமென்ற பைசல் டிக்கிரீயைப் பிறப்பித்துக் கொள்ளாமல் நிறைவேற்று விண்ணப்பம் கொடுத்து அடமான சொத்தை ஏலம் போட உத்தரவுகேட்டதில் கோர்ட்டார் எதிரிக்குநோடீஸ் அனுப்பி,யாதொரு ஆக்ஷேபனையும் செய்யப்படாத காரணத்தால் ஏலத்திற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். எதிரிக்கு ஏல நோடீஸ் போகவே எதிரி ஜில்லா கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து ஏல உத்தரவளித்தது நியாயமல்லவென்பதற்குக் காரணமாக, வாதி தன்னுடைய கிராமத்திற்கு வந்து அடமான சொத்துக்களைப் பார்வையிட்டு அவைகளைத் தானே கிரயத்திற்கு வாங்கிக் கொள்வதாய் ஒப்புக்கொண்டதாகவும் தான் அவைகளை வாங்கின பிறகு வேறு சிலருக்கு லாபத்தின் பேரில் விக்கிரயம் செய்ய உத்தேசமென்றும் தெரிவித்து விட்டுத்தான் கிரயம் பெறுவதாய் ஒப்புக்கொண்டபடி நடக்காமல் கோர்ட்டில் நிறைவேற்று மனுக்கொடுத்தது மோச நடவடிக்கையாகுமென்றும், இரண்டாவதாக வாதி C. P. C. ஆர்டர் 34 ரூல் 5-ன்படி கோர்ட் மூலமாய்ப் பைசல் டிக்கிரீ பெறாமல் பிரதம டிக்கிரீயை நிறைவேற்றக் கூடாதென்றும் பிரதம டிக்கிரீயில் சொத்தை ஏலம்போடவேண்டிய பரிகாரம் குறிக்கப்படவில்லையென்றும் டிக்கிரீயில் அளிக்கப்படாத பரிகாரத்தை நிறைவேற்று மனுவில் அடையக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார். ஜில்லாகோர்ட்டார் பிரதிவாதியின் ஆக்ஷேபனைகளை ஏற்றுக்கொள்ளாமல் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் கொடுத்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாகிமனு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் உத்தரவின் முக்கிய அம்சங்களாவன:—

எதிரியுடன் வாதி செய்துகொண்ட விக்கிரய உடன்படிக்கையை எதிரி ருஜுபடுத்தவில்லையென்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியே. A-ஆதரவாகிய ஒரு கடிதத்தை ஆஜர்படுத்தி அதில் வாதி தான் கிரயத்திற்கு வாங்கி மற்றொருவருக்கு விற்பனை செய்துவிடும் உத்தேசத்தைப்பற்றி நடந்த சம்பாஷனை குறித்தெழுதப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்பட்டது. அக்கடிதத்தைப் படித்துப்பார்த்தால் வாதிக்கு தாவா நிலங்களை வாங்கப் பிரியமில்லையென்ற தகவல் புலப்படுகிறதேயொழிய அது எதிரிக்கனுகூலமாய் பாவிக்க நியாயமில்லை. வாதிக்கு அந்த நிலங்களை வாங்கப் பிரியமிருந்தால் டிக்கிரீத்தொகை செலுத்தும் கெடு வாய்தா கழிந்த உடனே தாமதம் செய்யாமல் டிக்கிரீயை நிறைவேற்றும் நடவடிக்கை யெடுத்திருப்பார். எதிரி தாகல்செய்த மற்றஆதரவுகளும் பிரயோஜனமில்லை. எதிரியின் சாட்சிகளுடைய வாக்குமூலத்தை ஜில்லாகோர்ட்டார் நம்பவில்லை. அதை நம்பத்தகாதென்றே சொல்லவேண்டும்.

இரண்டாவதாக 33 அலகபாத் 264-ன் பிரிவி கௌன்ஸிலார் தீர்மானத்தை அனுசரித்து மத

ராஸ்ஹைகோர்ட்டார் C. M. S. A. 86 of 1910, C. M. A. 269 of 1911 இவைகளில் பிரதம டிக்கிரியைக் கொண்டு நிறைவேற்றக்கூடாதென்று அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்களென்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் இந்தக்கேசில் எதிரி அந்தக் கட்சியை எடுத்துப்பேச நியாயமில்லை. ஏனெனில் ஈஜி நிறைவேற்றுவதற்காக விண்ணப்பம் கொடுத்தபின் எதிரிக்கு நோடீஸ் ஸர்வ் செய்யப்பட்டது. அதற்கு அவர் ஆஜராகி இவ்வித ஆக்ஷேபனை செய்யவில்லை. ஒரு டிக்கிரியில் அளிக்கப்படாத பரிகாரத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் கோர்ட்டார் டிக்கிரியின்படி ஏற்பட்டிருப்பதாகத் தீர்மானித்தால் அந்தத்தீர்மானம் காயமானதாகும், டிக்கிரியில் அந்தப்பரிகாரம் கொடுக்கப்படவில்லையென்று பின்னால் ஆக்ஷேபிக்கக்கூடாது. அப்படி ஆக்ஷேபித்தால் ரிஜுடிகேடா தோஷமேற்படும். பற்பல தீர்மானங்கள் மேற்கூறிய அபிப்பிராயப்படி ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் டிக்கிரியில் சொத்தை ஏலம்போடும் பரிகாரம் அளிக்கப்படாதிருந்தபோதிலும் கோர்ட்டார் அந்தப் பரிகாரமிருப்பதாய் பாவித்து ஏல உத்தரவளித்தமையால் எதிரியின் ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று மேற்கூறிய விதமாய் இந்த மனு அப்பீல் தள்ளுபடியாச்சுது. (1914) M. W. N. 632.

---

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

கஞ்சம் ஜில்லா

A. S. No. 243 of 1911-3 ஏப்ரல் 1914

நகரம்பள்ளி காமேசம் Vs பச்சம்மாள்

(ஹிந்து லா)

ஸ்வீகார வியாஜ்ஜியம்-ஸபிண்டர்கள் அனுமதி

காலஞ்சென்ற மூல புருஷனுடைய சமீபமான அடுத்த அனந்தர வாரிஸ்தார் வாதியாக ஷெயாருடைய பாரியாளாகிய 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது ஹிந்து லா முறைக்கு விரோதமென்றும் அந்த ஸ்வீகாரம் செல்லத்தகாதென்றும் தீர்மானமடையும்பொருட்டு சப்கோர்ட்டில் அசல் தாவா செய்தார். சப்கோர்ட்டார் ஸ்வீகாரத்தைக காயப்படுத்தி பிராதை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அப்பீல் பெண்டிங்கிருக்கும்பொழுதே ஸ்வீகார புத்திரனாகிய 2-ம் பிரதிவாதி இறந்துவிட்டான். என்றாலும் 1-ம் பிரதிவாதியின் செலவுதுகையை வாதி கொடுக்க வேண்டுமென்று சப்கோர்ட் டிக்கிரி ஏற்பட்டிருப்பதால் ஸ்வீகாரம் செல்லுமா என்ற விஷயத்தைப்பற்றி அப்பீலில் தீர்மானம் கொடுக்க வேண்டிய நியாயமேற்பட்டது.

அதாவது ஸ்வீகாரம் செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டால் வாதி 1-ம் பிரதிவாதிக்குக் கீழ்கோர்ட் செலவைக் கொடுக்கவேண்டிய கடமை நீங்கிப்போகும். ஆகவே ஹைகோர்ட்டார் அப்பீலை மேற்கூறிய கருத்துடன் ஈரங்கிகேட்டு சப்கோர்ட் அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாக ஸ்வீகாரம் சட்டவிரோதமல்லவெனத் தீர்மானித்து அப்பீலை செலவுடன் தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஆகவே 1-ம் பிரதிவாதிக்குரிய இரண்டு கோர்ட் செலவுகளையும் வாதி கொடுக்க நேரிட்டது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணங்களாவன:—

வாதியைத் தவிர்த்த மற்ற ஸபிண்டர்களுடைய அனுமதியைப்பெற்று 1-ம் பிரதிவாதிஸ்வீகாரமெடுத்திருக்கிறாள். அவர்களுடைய அனுமதி எழுத்துமூலமாய்க் கொடுக்கப்பட்டு அந்த ரிகார்டு இந்தக்கேசில் 1-வது ஆதரவாக தாகல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆதரவில் அனுமதி வசனமானது பொதுவான அதிகாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதாவது 1ம் பிரதிவாதிதனக்கு இஷ்டமான பையனை எக்காலத்திலும் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்றிருக்கிறதாகவும் காலத்தையும் பையனையும் குறிக்காத இவ்விதமான அதிகாரம் ஹிந்து லா முறைப்படிக்கு செல்லத்தகாதென்றும், வாதிக்கப்பட்டு அதற்காதாரமாக 26 மதராஸ் 581-ல் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு அபிப்பிராயமும் எடுத்துக் காட்டப்படுகிறது. 26 மதராஸ் கேஸில் சொல்லப்பட்ட அபிப்பிராயத்தின் கருத்தையும் அந்தக் கேசின் தன்மையையும் கவனித்தால் இவ்வித பொதுவான வசனங்களால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு ஒரு ஸ்திரீயானவள் அனுமதிபெற்ற அநேக வருஷங்களுக்குப் பிறகும் அனுமதி கொடுத்த ஸபிண்டர்களில் அநேகர்மரித்தபின்னும், இடையில் மூலபுருஷனுடைய எஸ்டேட்டிலும் ஸ்திரீயினுடைய யோகக்ஷேமங்களிலும் அக்கரையுடைய புதிய ஸபிண்டர்கள் ஏற்பட்ட பின்னும், இன்னம் பற்பல சந்தர்ப்பங்கள் இடையில் ஏற்பட்ட பின்னும் ஸ்வீகாரமெடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரத்திற்கு மேற்கூறிய அனுமதியை ஆதாரங்கொள்ளக்கூடாதென்று 26 மதராஸ் கேஸைத் தீர்மானித்த நியாயாதிபதிகளின் கருத்தாகுமென்று நிதானிக்கவேண்டும். 36 மதராஸ் 145-யும் பார்க்கவும்.

ஸ்திரீயானவள் காலத்தையும் பையனையும் குறித்து ஸ்வீகாரமெடுத்துக்கொள்வதில் நல்லயோஜனையுடனும் நோக்கத்துடனும் நடந்துகொள்வாளென்ற நம்பிக்கையால் ஸபிண்டர்கள் அவ்விதமான அனுமதியைக் கொடுக்கிறபடியால் காரணத்தால், அவ்வித அனுமதியை ஷெயாள் உடனே பிரயோகித்து அனுமதி கொடுத்த ஸபிண்டர்களுடைய ஜீவியகாலத்தில் அவர்கள் அனுமதியைப் பின்வாங்காமலிருக்கையில்யாதொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பொழுதும் அந்தப் பொதுவான அதிகாரம் செல்லத்தக்கதல்லவென்று 26 மதராஸ் கேஸின் அபிப்பிராயமாகச் சொல்லக்கூடாது. (இந்தக்கேசில் 1-ம் பிரதிவாதி காலதாமதம் செய்யாமல் அனுமதி கொடுத்தவர்களுடைய ஜீவிய காலத்திலேயே அவர்கள் அனுமதியைப் பின்வாங்காதிருக்கும் சமயத்தில் ஸ்வீகாரமெடுத்திருக்கிறாளென்று சொல்லவேண்டும்.) ஆகையால் 1-ம் பிரதிவாதிக்குக் கிடைத்த அதிகாரத்தின் பொதுவான வசனம் ஆக்ஷேபிக்கத்தக்கதல்ல.

இரண்டாவதாக ஸபிண்டர்கள் கொடுத்த அதிகாரப் பத்திரத்தில் ஸ்வீகாரத்தை ஒருவனுக்குப் பின் ஒருவனாக எடுத்துக்கொள்ளலாமென்று கண்டிருப்பதால் அதாவது ஒரு பையனை ஸ்வீகாரமெடுத்தபின் அவன் மரித்தால் மற்றொரு பையனை எடுத்துக்கொள்ளலாமென்று கண்டிருப்பதால் அவ்வித அதிகாரம் சட்டவிரோதமென்று சொல்லப்படுகிறது. 1-வது ஆதரவைப் பார்த்தால் மேற்கூறிய பாகமானது முந்திய பாகத்தை விட்டுப் பிரத்தியேகமான பாராவாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு அதிகார வசனங்களையும் பிரித்து கவனிக்கத்தகும். முதல்பாகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ஸ்வீகார அதிகாரம் சரியானதென்று ஏற்பட்டால் 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்தது சட்ட விரோதமல்ல. அப்படியிருக்க பிந்திய அதிகாரத்தின் நியாயத்தைப்பற்றி அதாவது ஒரு பையனுக்குப்பின் மற்றொருவனை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ள அதிகாரம் கொடுக்கலாமாவென்ற பாயிண்டைப்பற்றி இந்தக்கேசில் தீர்மானம் கொடுக்கத்தேவையில்லை.

கடைசியாக சமீபதாயாதியாகிய வாதியை அனுமதிகேட்காதது பிசகென்றும் அப்படிக்கேட்டு அவர் மறுக்கவுமில்லையென்றும் சமீப தாயாதியைக் கேளாமல் எட்டிய தாயாதிகளின் அனுமதியைக் கொண்டு ஸ்வீகாரமெடுத்தது பயனற்றதாகுமென்றும் வாதிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பு சாட்சியங்களைக் கவனித்தால் வாதி அகாரணமாக, 1-ம் பிரதிவாதி 2-ம்பிரதிவாதியை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளவேண்டுமென்று பலதடவைகளில் நேரிலும் அந்நியர்கள் மூலமாயும் அனுமதி கேட்டும் அகாரணமாக மறுத்துவிட்டாரென்று ஏற்படுகிறது.

ஆகவே வாதியின் மூன்றுவித ஆக்ஷேபனையும் ஏற்றுக்கொள்ளப்படாமல் மேற்சொன்ன விதமாய் அப்பீல் தள்ளுபடியாச்சுது. (1914) M. W. N. 620.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர்

நெல்லூர் ஜில்லா

C. M. S. A. 78 of 1913-24 ஜூலை 1914.

ஜன்மேந்திர பாபய்யா VS லங்கா சுப்பா சர்மா.

ஹிந்து லா கேஸ்.

தகப்பனுடைய கடனுக்கு மகன் புணைப்படும் கடமை.

சிற்சில ஸ்தாவர சொத்துக்களில் வாதி தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டும் அவைகளை சுவாதீனமடையும் பொருட்டும் மத்தியகால வரும்படிக்காகவும் ஷை சொத்துக்களை அனுபவிக்கிற தகப்பன், மகன் இருவர் பேரிலும் காணிகிரி டி-மு கோர்ட்டில் தாவா செய்ததில் வாதியின் பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு சுவாதீனத்திற்கும் டிக்கிரியளிக்கப்பட்டது. ஆனால் மத்தியகால வரும்படிக்காக 1-ம் பிரதிவாதியாகிய தகப்பன் பேரில் மட்டும் டிக்கிரியாச்சுது. வாதி மத்தியகால வரும்படிக்காக டிக்கிரியான துகை

ரூ. 370-யும் அதற்குரிய செலவு தொகையையும் வசூலிக்கும் பொருட்டு இரண்டு பிரதிவாதிகளுக்கும் பொதுவாயுள்ள ஒரு வீட்டை ஜப்தி செய்தார். 2-ம் பிரதிவாதி ஷை வீட்டில் தனக்குள்ள சமபாதி பாகத்தை ஜப்தி செய்யக் கூடாதென்று ஆக்ஷேபித்து பாத்திய மனுக்கொடுத்தார். டி-மு கோர்ட்டார் பாத்திய மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆனால் சப்கோர்ட்டார் அப்பீலில் மாறான அபிப்பிராயங்கொண்டு 2-ம் பிரதிவாதியின் பாகத்தை ஜப்தியிலிருந்து விடுதலை செய்து விட்டார்கள். வாதி அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல் தாகல் செய்ததில் டி-மு கோர்ட்டார் தீர்மானம் சரியானதென்று அதாவது 2-ம் பிரதிவாதியின் பாகமும் தகப்பன் பேரில் ஏற்பட்ட டிக்கிரீ பாக்கிக்காக ஜப்தியாகலாமென்று சொல்லி சப்கோர்ட்டாரின் உத்தரவை ரத்து செய்தார்கள். ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்பட்ட முக்கிய காரணங்களாவன:—(2-ம் பிரதிவாதி மனுதாரென்று சொல்லப்பட்டு வருகிறார்.) தகப்பனால் செலுத்தப்படவேண்டிய கடன் பாக்கியானது சட்டவிரோதமான அல்லது துர்விஷயமான, செலவுகளுக்காக ஏற்படாத காரணத்தால் மனுதாரின் பாகமும் தகப்பனுடைய டிக்கிரீபாக்கிக்காக ஜப்தியாகலாமென்று டி-மு கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு பாத்திய மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். சப்கோர்ட்டார் அபிப்பிராயத்தில் மனுதாரும் ஒரு பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட தாவாவில் தகப்பன் பேரில் மட்டும் டிக்கிரீயளிக்கப்பட்ட படியாலும், மனுதார் டிக்கிரீத்தொகைக்கு பாத்தியப்பட்டவனல்லவென்று தீர்மானிக்கப்பட்ட படியாலும் மனுதாருடைய சொத்து பாகத்தின் பேரில் அந்த டிக்கிரீ பாக்கிக்காகத்தொடரக் கூடாதென்று சொல்லப்படுகிறது. அதாவது மனுதார் பார்ட்டியாக இருந்த கேஸில் மனுதார் பேரில் டிக்கிரீ ஏற்படாத காரணத்தால் அந்தக்கேஸின் டிக்கிரீ பாக்கிக்காக மனுதார் பேரில் (மனுதாரின் சொத்து பாகத்தின்பேரில்) வாதி தொடரக்கூடாதென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஸி. பி. ஸி. 11-வது பிரிவின் V-வது வியாக்கியானத்தைக் காட்டி சப்கோர்ட்டார் அபிப்பிராயம் தான் சரியென்று மனுதாருக்காக வாதிக்கப்படுகிறது. அதாவது மனுதாரின் பேரில் ஒரு பரிகாரம் தேடப்பட்டும் அது அளிக்கப்படாத காரணத்தால், மறுக்கப்பட்டதாக பாவிக்கவேண்டுமென்றும் மனுதார் கட்டுப்பட்டவனல்லவென்று தீர்மானிக்கப்பட்டதாக பாவிக்க வேண்டுமென்றும் வாதிக்கப்படுகிறது. இந்த வாதம் சரியல்லவென்று தோன்றுகிறது. அசல் தாவாவில்வாதி கேட்ட பரிகாரத்திற்கு மனுதாரும் நேரில் பாத்தியப்பட்டவன் என்ற கருத்துடன் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்தான். அவ்விதமாய் பாத்தியப்பட்டவனல்லவென்று கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். நிறைவேற்று நடவடிக்கையில் வாதி தகப்பனுடைய கடனுக்காக மகன் புணைப்பட்டவனென்ற கருத்துடன் மகனுடைய பாகத்தையும் சேர்த்து ஜப்தி செய்திருக்கிறார். மகனிடம் குடும்ப சொத்து எம்மட்டிலிருக்கிறதோ அதைக்கொண்டு தகப்பனுடைய கடனை மகன் தீர்க்கவேண்டுமென்ற ஹிந்து லா முறையானது மிகவும் பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கிறது. அது தர்ம நியாயத்தையும் ஸன்மார்க்க முறையையும் ஸதாசாரத்தையும் பொருத்த சட்டவிதியாகிறது. இந்த நியாயத்தைக் கோர்ட்டார்களும் அங்கீகரித்து வருகிறார்கள். டிக்கிரீ பாக்கிதாருக்கு மகன்பேரில், டிக்கிரீயையனுசரித்து பாத்தியதை ஏற்படவில்லை. ஷை யான் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கடமையினின்று ஷை டிக்கிரீ பாக்கிதாருக்கு மகன்பேரில் தொடரும் பாத்தியம் ஏற்படுகிறது. இந்த நியாயம் (1876) 1-இந்தியன் அப்பீல் 333 ஐ அனுசரித்து 5 கல்கத்தா 184-ல் பிரசுரிக்கப்பட்ட பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் மிகவும் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சொல்லப்பட்ட ஒரே வாக்கியம் இந்த நியாயத்தை நன்கு விளக்கும். அதாவது:— "பிதார்ஜித சொத்தானது கூட்டுக்குடும்பத்தை விட்டு தகப்பனுடைய கடனுக்காக ஏற்பட்ட டிக்கிரீயின் நிறைவேற்றும் நடவடிக்கையில் லேலமாகிப்போய்விட்டால் அவனுடைய புத்திரர்கள் தகப்பன் கடனை கொடுக்கவேண்டிய கடமையின் நியாயத்தைப்பற்றி தகப்பன் பட்டகடன் துர்விநியோகத்திற்காக உபயோகப்பட்டதென்று ருஜுப்படுத்தினுலொழிய, லேலம்போன சொத்தைத் திரும்பியடையக் கூடாதென்று" சொல்லப்பட்டிருக்கிறது. புத்திரர்கள் ஷை கடனுக்கு பாத்தியப்பட்டவர்களல்லவென்று ஒரு தாவாவில் தீர்மானிக்கப்பட்ட விஷயமானது மேற்கூறிய நியாயத்திற்கு இடையூறாகுமென்று சொல்லப்படவில்லை. மகன் பாக்கிதாருக்கு நேரில் புணைப்பட்டிருக்க வேண்டுமென்று சப்கோர்ட்டார் தப்பாக யோஜித்திருக்கிறார்கள் போலும். மகன் நேரில் கடமைப்பட்டிருக்கலாம். அதை நிறைவேற்ற தாவா செய்யலாம். அந்த தாவாவில் மகனுடைய கடமை இல்லையென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும் தகப்பனுக்கு மகன் செய்யவேண்டிய கடமை நீங்காது. 22 அலகபாத் 283-ஐப் பார்க்கவும். தகப்பன் எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டின் பாக்கிக்காக தாவா செய்ததில் மகன் அதில் கையொப்பம் செய்யாத காரணத்தால் தகப்பன்பேரில் மட்டும் டிக்கிரீயாகியும் பின்னால் அந்த டிக்கிரீக்காக மகன் தன்னுடைய சொத்து பாகம் புணைப்படத்தக்கதல்லவென்று தீர்மானமடையும் பொருட்டு டிக்லேரேஷன் தாவா செய்து தோல்வியடைந்தானென்றும் கோர்ட்டார் அபிப்பிராயத்தில் மகன் பிராமிஸரி நோட் கேஸில் சேர்க்கப்படாத முன் என்ன நிலமையிலிருந்தானோ அதே நிலமையில் ஷை கேஸ் பைசலான பிறகும் நிற்கிறானென்று ஏற்பட்டதாகவும் அதாவது மகனைப் பார்ட்டியாக சேர்க்காமலிருந்தால் வாதி தகப்பன் பேரில் பெற்ற டிக்கிரீயை மகன்பேரில் நிறைவேற்றக்கூடியது போலவே மகனைப் பார்ட்டியாகச் சேர்த்து அவனை நீக்கி டிக்கிரீபெற்றாலும் அவன் பேரிலும் நிறைவேற்றலாமென்றும் மேற்கூறிய 22 அலகபாத் 283-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயம் ஒப்புக்கொள்ள வேண்டிய தவசியமாகும்.

இவ்வித காரணங்களைச் சொல்லி ஹைகோர்ட்டார் மனுதாரின் பாத்திய மனுவைத்தள்ளுபடி செய்யவேண்டுமென்று டி-மு கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு மாற்றமையாக சப்கோர்ட் உத்தரவை ரத்துசெய்து விட்டார்கள். (1914) M.W.N.616.

———:o:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

செங்கல்பட்டு ஜில்லா.

S. A. 659 of 1911-28 ஜனவரி 1914.

ராஜம்மாள் Vs லட்சுமம்மாள்.





டிபாஸிட் தொகை டிரஸ்ட் பண்டாகுமா?

காலாவதி ஆக்ட் 10-வது பிரிவு.

ராஜம்மாளென்ற வாதியினுடைய தகப்பனாகிய ஸ்ரீனிவாஸய்யங்கார் 1877-ம் வருஷத்தில் ராஜம்மாளை சேஷாத்திரி அய்யங்கார் என்றவருக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் உத்தேசித்திருக்கும் சமயத்தில் சேஷாத்திரி அய்யங்காரிடத்தில் ரூ 400-ஐ ரொக்கமாகக் கொடுத்து அதை தனக்காகவும் தன் புத்திரியாகிய இராஜம்மாளுக்காகவும் ஒரு டிரஸ்ட் பண்டாகவைத்துக் காப்பாற்ற வேண்டுமென்று கோரிக்கொண்டதாகவும் 1882-ல் ஸ்ரீனிவாஸய்யங்கார் காலஞ்சென்றதாகவும் அதற்குப்பின் சேஷாத்திரி அய்யங்கார் ஷை தொகையை தன் பாரியாளாகிய ராஜம்மாளுக்காக விருத்திசெய்து வந்து அவருக்குப் பின் அவருடைய புத்திரனாகிய ஸ்ரீனிவாஸய்யங்கார் ஷை தொகையை அடைந்தவராகி புத்திரனும் 1906-ல் இறந்துபோனதாகவும் அதன் பின் சேஷாத்திரி அய்யங்காரவர்களுடைய சொத்துக்கள் யாவற்றும் ஷை யாருடைய மருமகளாகிய லட்சுமம்மாளிடம் வந்து சேர்ந்ததாகும். ஆகவே ஷை டிரஸ்ட் பண்டுத் தொகை ரூ 400-ம் அதற்குறிய வட்டி வசூல் தொகையும் ராஜம்மாளுக்குசேஷாத்திரி அய்யங்காருடைய சொத்தை அனுபவிக்கிற லட்சுமம்மாள் கொடுத்துவிடுவது நியாயமாகுமென்றும் சொல்லி வாதி ராஜம்மாள் லட்சுமம்மாள் பேரில் ஷை தொகையை வசூலிக்கும்பொருட்டு திருவள்ளூர் டி மு கோர்ட்டில் 1907-ல் பிராதுகொடுத்தாள். டி மு கோர்ட்டார் தாவா தொகை டிரஸ்ட் பண்டாக சேஷாத்திரி அய்யங்காரிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தீர்மானித்து அவ்விதமான தொகையைப்பற்றி தாவா செய்ய காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின்படி காலத்தவணையே கிடையாதென்று அதாவது வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்று தீர்மானித்து வாதி தாகல் செய்த கணக்கு புஸ்தகத்தில் குறித்திருந்த விஷயங்களை உண்மையாக நம்பி வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்யவே வாதி ஆஜர்படுத்தின கணக்குகள் உண்மையாக ஏற்றுக்கொள்ளப் பட்டாலும் அந்த புஸ்தகத்தில் ராஜம்மாளுடைய பெயராவது பிரஸ்தாபமாவது யாதொன்றும்குறி

க்கப்படாத காரணத்தால் வாதி பிராதில் சொன்னபடி சேஷாத்திரி அய்யங்கார் வாதிக்காகவும் ஷெ துகையை டிரஸ்ட் பண்டாக வைத்திருந்ததாகச் சொல்லத்தகாதென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்ததில் கணக்குகளில் வாதியின் பெயர் குறிக்கப்படாதபோதிலும் சேஷாத்திரி அய்யங்கார் தாவா துகையை டிரஸ்ட் பண்டாக வைத்திருந்ததாக ஏற்பட்டால்வாதிக்கு அந்தத்துகையை அடைய பாத்திய முண்டென்றும் வாதியின் தகப்பன் இறந்தபிறகும் அதை டிரஸ்ட் பண்டாக பாவித்து வந்திருந்தால் வாதிக்காக அதை வைத்திருந்ததாக அனுமானிக்கலாமென்றும் தவிர சப்கோர்ட்டார் கணக்குகளின் உண்மையைப்பற்றி சரியான தீர்மான முடிவடையவில்லையென்றும் சப்கோர்ட் தீர்ப்பின் அம்சங்கள் திருப்திகரமாயில்லையென்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு பின்வரும் பாயிண்டுகளைப்பற்றி மறுபடியும் தெளிவான தீர்மானம் கொடுக்கும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். அதாவது:—

(1) தாவா துகையை சேஷாத்திரி அய்யங்காரவர்கள் ஸ்ரீனிவாசய்யங்கார் இராஜம்மாள் என்ற இருவருக்கும் டிரஸ்ட் பண்டாக வைத்துக்கொண்டிருந்தாரா; அல்லது ஸ்ரீனிவாஸய்யங்காருக்காக மட்டும், அல்லது ராஜம்மாளுக்காகமட்டும், டிரஸ்ட் பண்டாக ஷெ துகையை வைத்திருந்தாரா?

டிரஸ்ட்பண்டாக வைத்துக்கொண்டிருந்தாரென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்படும் பட்சத்தில்

(2) இந்த தாவா காலாவதி தோஷமாகுமா?

(3) பிரதிவாதியின் புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து யாதொரு துகை வாதிக்குச் சேரவேண்டுமோ? அப்படியானால் எவ்வளவு துகை சேரவேண்டும்?

(4) வாதிக்கு பிரதிவாதியின் வசமிருக்கிற சொத்தின்பேரில் ஹக்கு ஏற்படுத்தவேண்டியது நியாயமாகுமா?

மேற்கூறிய 4-இஷ்யூக்களைப்பற்றி மாற்றலின் பேரில் வந்த வேறு சப் ஜட்ஜியவர்கள் பின்வருமாறு தீர்மானம் கொடுத்தனுப்பினார்கள். (1) சேஷாத்திரி அய்யங்காரவர்கள் வாதியின் தகப்பனுக்காக தாவா துகையை டிரஸ்ட் பண்டாய் வைத்திருந்தாரென்றும் அவர் இறந்தபின் வாதிக்கு டிரஸ்டியாக ஷெ துகையை வைத்திருந்தாரென்றும் (2) காலாவதிபாயிண்டைப்பற்றி டி-முகோர்ட்டார் அபிப்பிராயப்படி காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின் பிரகாரம் வாதியின் தாவாவுக்குக் காலாவதியே கிடையாதென்றும் பிரதிவாதி வக்கில் 6 மதராஸ் 402, 9 மதராஸ் 325, 9 பம்பாய் 115, 4 அலகபாத் 197, 7 பம்பாய் 229- இவைகளை எடுத்துக்காட்டி காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின் அம்சமானது ஒரு குறித்த காரியத்திற்காக ஏற்படும் டிரஸ்ட் சொத்து விஷயமாய்ப் பிரயோகிக்கத்தகுந்ததென்றும், தாவா கேஸைப்போல் கோர்ட் வியவகாரத்தால் டிரஸ்ட் என்று ஏற்படத்தக்க சொத்து விஷயமாயும் டிரஸ்ட் சொத்தென்று அனுமானிக்கவேண்டிய சந்தர்ப்பங்களிலும் 10-வது பிரிவின் அம்சம் பிரயோகிக்கத்தகுந்ததல்லவென்று வாதம் செய்ததில் மேற்கூறிய அதாரிடிகளின் சந்தர்ப்பங்களுக்கும் தாவா கேஸின் சந்தர்ப்பங்களுக்கும் ஒற்றுமையில்லாதபடியால் பிரதிவாதியின் வாதம் ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் ஆகவே இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்றும் (3) சேஷாத்திரி அய்யங்காருடைய எஸ்டேட்டானது பிரதிவாதியின் பர்த்தாவுக்குச் சென்றமையால் அந்த எஸ்டேட்டிலிருந்து வாதிக்கு தாவா துகை சேரவேண்டியது நியாயமென்றும் ஆனால் 1884-க்குப்பின் 400-க்கு வட்டித்துகை கூட்டப்பட்டதாக ருஜு அம்சமில்லாதபடியாலும் தவிர வாதி சேஷாத்திரி அய்யங்காருடைய சம்சாரமானபடியாலும் வட்டித்துகையானது அவர்களுடைய குடும்பச் செலவுகளுக்காக உபயோகப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஆகையால் வாதிக்கு அசல் ரூ 400 மட்டும் கிடைக்க வேண்டியது நியாயமென்றும் (4) டிரஸ்டியாகிய சேஷாத்திரி அய்யங்காரவர்கள் டிரஸ்ட் பண்டு பணத்தைத் தன் சொந்த ஐவேஜுடன் கலந்துவிட்டமையால் அந்தத்துகை எவ்விதமாயிருக்கிறதென்று ரூபகாரபடுத்தவேண்டியது பிரதிவாதியின் கடமையாகுமென்றும் பிராதில் கண்டிருக்கிற ஒரு சொத்தை சேஷாத்திரி அய்யங்கார் வா



தியின் டிரஸ்ட் பண்டுடன் கலந்த தனத்தைக்கொண்டு வாங்கியிருப்பதால் அந்த சொத்தின் பேரில் வாதிக்கு ஹக்கு ஏற்படுத்துவது நியாயமென்றும் ஆக நான்கு பாயிண்டுகளுக்கும் தீர்மான அபிப்பிராயம் எழுதியனுப்பினார்கள். ஹைகோர்ட்டார் மறு ஈரங்கியில் தாவாத் துகையானது டிரஸ்ட் பண்டாகமாட்டாதென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள், பிரதிவாதி வாதியின் கணக்கை முற்றிலும் பொய்யென்று மறுத்தபடியால் அவளுக்கு 2-வது அப்பீல் செலவு துகையைப்பற்றி யாதொரு உத்தரவும் செய்ய நியாயமில்லையென்று தீர்மானித்தார்கள். ஹைகோர்ட்டார் தீர்மானச் சுருக்கமாவது:—

மாமனாருடைய பொருளானது மருமகனிடத்தில் டிபாஸிட் செய்யப்பட்டிருந்ததாகக் கணக்குகளினால் ஏற்படுகிறதென்ற காரணத்தால் சேஷாத்திரி அய்யங்கார் வாதியின் தகப்பனால் ஏற்படுத்தப்பட்ட டிரஸ்டியாகிறாரென்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜங்கம சொத்துக்களையாகிலும் பணத்தையாகிலும் டிபாஸிட் செய்துவிட்ட காரணத்தினால் காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின் கருத்துப்படி டிரஸ்டி என்ற பாவம் ஏற்படாது. சில இங்கிலீஷ் தீர்மானங்களில் சொல்லியிருக்கிறபடி ஒரு லாயரிடத்திலாவது அல்லது தனக்கு யாதொரு விஷயத்தில் கடமைப்பட்டவரிடத்திலாவது டிபாஸிட் செய்தால் அவர்கள் டிரஸ்டீக்களென்று சொல்லப்படலாம். 31 பம்பாய் 418-ஐப் பார்க்கவும். மாமனாருக்கும் மருமகனுக்குமுள்ள சம்பந்தம் அப்படிப்பட்டதல்ல. மாமனாருக்கு விவாக சம்பந்தத்தால் மருமகன் எவ்விதத்திலும் பவியப்பட்டவனல்ல. ஆகையால் வயது சென்ற மாமனாருக்கு வாலிபனான மருமகன் டிரஸ்டியாக ஏற்படுத்தப்பட்டு தாவா துகை டிபாஸிட் செய்யப்பட்டதாகச் சொல்லத் தகாது. டிரஸ்டின் ஷரத்துக்களும் காலமும் ஏற்படுத்தப்பட்டதாக ருஜுவாகவில்லை. ஸ்ரீனிவாசய்யங்கார் என்ன காரணத்திற்காக டிரஸ்ட் ஏற்படுத்தினாரென்றும் இந்த டிபாஸிட்டை டிரஸ்ட் பண்டாக பாவிக்கவேண்டுமென்று உத்தேசித்தாரென்றும் நிச்சயமாய்த் தெரியக்கூடவில்லை. ஸ்ரீனிவாஸய்யங்கார் தனக்கு அவசியமான போதெல்லாம் சேஷாத்திரி அய்யங்காரிடமிருந்து அந்த பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிச் செலவுசெய்திருக்கிறதாயும் துலங்குகிறது. ஆகையால் தாவா துகையானது யாதொரு குறித்த காரியத்திற்காக டிரஸ்ட் பண்டாய் ஏற்படுத்தப் பட்டிருந்ததென்று சொல்லத்தகாது. பத்து வரவு செய்யும் ஸௌகார் அல்லது ஷராப் என்ற நிலைமையில் சேஷாத்திரி அய்யங்கார் நின்றதாகச் சொல்லவேண்டும். (1910) M.W. N. 180, (1910) M. W. N. 421, (1909) 32 மதராஸ் 68, 13 மதராஸ் 338 இவைகளைப் பார்க்கவும். 1884-க்குப் பின் சேஷாத்திரி அய்யங்கார் தாவாத்துகையைத் தன் சொந்தப்பணத்துடன் கலந்து கொண்டமையால் தான் பாங்கர் நிலைமையில் தாவா துகையை வைத்துக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. டிபாஸிட்டாகத் துகையை வைத்துக் கொள்ளுகிறவன், ஒரு பாங்கர், ஒரு ஏஜெண்டு, அல்லது கடனாகத் துகைப்பெற்றுக் கொள்ளுகிறபாக்கிதாரன் இவர்கள் காலாவதி ஆக்ட் 10-வது பிரிவில் கண்ட விதமான டிரஸ்டீகளாக மதிக்கப்பட நியாயமில்லை. வாதிக்கும் வாதியின் புருஷனுக்கும் அல்லது வாதியின் தகப்பனுக்கும் வாதியின் புருஷனுக்குமுள்ள பந்துத்துவத்தைப்பற்றி டிரஸ்ட் என்னும் நிலைமையை உண்டாக்கி தாவா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவ்வித பந்துத்வமிருந்ததாக சாட்சியம் ருஜுவாகவில்லை. (வாதியின் விவாகத்திற்கு முன் தாவா துகை டிபாஸிட் செய்யப்பட்டதால் விவாகத்தால் ஏற்பட்ட பந்துத்துவம் வாதியின் கேஸுக்கு உதவக்கூடியதல்ல.) ஜில்லா கோர்ட்டார் அது விஷயமாய் ஏற்பட்ட சாட்சி வாக்குமூலங்களை நம்பவில்லை. ஆகையால் வாதியின் 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது நியாயமாகும். வாதி டிரஸ்ட் பண்டென்னும் சிலாக்கியத்தை அனுசரிக்காமல் சேஷாத்திரி அய்யங்காரிடம் தாவா துகை டிபாஸிட்டாக வைக்கப்பட்டிருந்ததென்று சொல்லி தகப்பனுடைய வாரிஸாக அதைத் திரும்பியடையக் கோரியிருந்தால் அவள் ஜெயமடையலாமா வென்ற பாயிண்டானது காலாவதிக்குதவக்கூடிய பற்பல கடிதங்களில் பாக்கியை ஒப்புக்கொண்ட விஷயங்களும், டிமாண்டு செய்த விஷயங்களும் கவனிக்கப்பட்டு அவைகளின் தேதியை ஆதாரமாகக் காட்டவேண்டியதாகும்.

மேற்கூறிய காரணங்களால் டி-மு கோர்ட் அபிப்பிராயமும் தப்பென்றும் ரிமாண்டின் பேரில் ஈரங்கிகேட்ட ஜில்லா கோர்ட்டாருடைய அபிப்பிராயமும் தப்பென்றும் ஏற்பட்டு முதலில் அப்பீலை ஈரங்கிகேட்ட ஜில்லா கோர்ட்டாருடைய அபிப்பிராயமே காயமாச்சுது. [1914] M. W. N. 606.

———:o:———

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி**

திருநெல்வேலி ஜில்லா

S A. 1075 of 1911—14 ஜூலை 1914

*ராமஸுப்பய்யர் Vs ஆவுடையம்மாள்*

பெயரிரவலாய் விக்கிரயம் பெற்ற தகப்பன் கடன்காரர்களை மோசம் செய்த காரணத்தால் சொத்தை இழக்கலாச்சுது. தஸ்தவேஜின் அர்த்தபாவம் லா பாயிண்டு விஷயமாகும்.

1-ம் பிரதிவாதியாகிய தகப்பன் கடன்காரர்களை மோசம் செய்யும் கருத்துடன் தாவா சொத்துக்களை பத்மநாபய்யர் என்ற மூன்றாவது மனிதனிடத்திலிருந்து கிரயம் பெற்று கிரய தஸ்தவேஜை 2-ம் பிரதிவாதியாகிய தன்னுடைய லாயர் பேருக்கு எழுதி வாங்கி சொத்தை 2-ம் பிரதிவாதியினுடைய சுவாதீனத்திலேயே விட்டிருந்தான். கடன்காரர்களுடைய தொல்லை நீங்கினபிறகு 1-ம் பிரதிவாதியினுடைய அவிபக்த புத்திரனாகிய ராமஸுப்பய்யர் வாதியாக திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் B-C-ஆதாரவால் 2-ம் பிரதிவாதி பெற்ற ஷை விக்கிரயம் இரண்டும் தன் தகப்பனுக்காக ஏற்பட்ட பினாமீ நடவடிக்கைகளென்றும் அதாவது 2-ம் பிரதிவாதி பெயரிரவல்காரரென்று தீர்மானமடையும் பொருட்டும் அந்த சொத்துக்களை சுவாதீனமடையும் பொருட்டும் அவிபக்த குடும்பத்தின் நன்மைக்காக தாவா செய்து அப்படிக்கு பூரா சொத்தும் வாதிக்குக்கிடைக்க நியாயமில்லையென்றும், தகப்பனுடைய பாகத்தை 2-ம் பிரதிவாதியே அனுபவிக்க வேண்டியதென்ற சட்ட முறையைக் கோர்ட்டார் அனுசரிக்கப் பிரியப்பட்டால் அந்த சொத்துக்களை இரண்டுபாகமாய்ப் பிரித்து ஒரு பாகத்தையாவது தனக்கு ஒப்புவிக்குப்படிக்கும் கோரிக்கொண்டார்.

டி-மு கோர்ட்டார் தாவா விக்கிரயங்களை பெயரிரவல் நடவடிக்கையென்பதாகவே நம்பி, கடன்காரர்களை மோசம் செய்வதற்காக ஏற்பட்ட நடவடிக்கையென்று 2-ம் பிரதிவாதி வாதித்தபோதிலும் கடன்காரர்கள் யாரும் மோசம்போனதாக ருஜுவாகவில்லையென்றும் அப்படிக்கு இது மோசமான நடவடிக்கையென்றே வைத்துக்கொண்டாலும் 1-ம் பிரதிவாதி அந்த சொத்துக்களை 2-ம் பிரதிவாதியிடமிருந்து திரும்பியடைய லாயக்குண்டென்றும் கடன்காரர்களை மோசம் செய்யும் பொருட்டு ஒருவன் தன்னுடைய சொத்தை பலவந்தமாக அந்நியனுக்குப் பராதீனம் செய்துவிட்டால் மட்டும் அவ்வந்நியன் அந்த ஏற்பாட்டுக்கு உடந்தையாயிருந்ததாகச் சொல்லி மோசத்தால் கிடைத்த சொத்தைத் திருப்பிக்கொடுக்க நியாயமாதாதென்றும், 85 கல்கத்தா 551, 31 மதராஸ் 97 இதில் ஏற்பட்டிருக்கிற அந்த நியாயவிதியானது இந்தக்கேஸில் ஏற்காதென்றும் இது ஏனெனில் சொத்தை அந்நியன்பேருக்குக் கிரயத்திற்கு வாங்கின விஷயமென்றும் அபிப்பிராயங்கொண்டு வாதிக்கனுகூலமாய் டிக்கிரியளித்து 2-ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் முழுவதையும் வாதியின் வசம் கொடுத்துவிடவேண்டுமென்று டிக்கிரியளித்தார்கள்.

அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் இரண்டு விக்கிரயங்களைப் பெயரிரவல் நடவடிக்கையென்று ருஜுப்படுத்தவேண்டிய கடமை முற்றிலும் வாதியைச் சேர்ந்ததென்றும் அதுவிஷயமாய் இரண்டு தரப்பிலும் விடப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலம் பிரயோஜனமற்றதென்றும் அதற்காக தாகலான தஸ்தவேஜுகள் வாதியின் கக்ஷியை ரூபிக்கத்தக்கவைகளல்லவென்றும் அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதை முற்றிலும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் விக்கிரயங்கள் பினாமீ என்ற விஷயத்தை ருஜுப்படுத்தவேண்டிய கடமை வாதியைச் சேர்ந்ததென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் முக்கியமாகக் கருதி தீர்ப்பின் பல இடங்களில் பிரஸ்தாபித்திருப்பது அனுசிதமான நோக்கமென்றும் ஒரு கேஸில் இருகக்ஷியாரும் தங்களுக்குள்ள சாட்சியம்சம் பூராவையும் விசார்டு செய்துவிட்டால் கோர்ட்டார் ருஜுபாரம் யார்மேலிருக்கிறதென்று கவனியாமல் இரண்டு கக்ஷியின் சாட்சியத்தையும் நிதானித்துப் பார்த்து எது மேலானதென்று தீர்மானிக்கவேண்டியது நியாயமாகுமென்றும், 13 மதராஸ் 399-ல் சொல்லியிருக்கிறபடி ருஜுபாரம் ஒரு பார்ட்டியின்பேரில் ஏற்பட்டிருந்தாலும் அந்த பாரமானது அவருடைய தோளின்பேல் எப்போதும் நிற்கவேண்டுமென்ற சட்ட முறையில்லையென்றும் (அதாவது அந்த பாரம் ஒருவராய் நிறைவேற்றப்பட்டால் மற்ற ருஜு அம்சங்கள் எதிரியால் ஏற்படவேண்டியதாகுமென்றும், ஆகவே ஜில்லா ஜட்ஜியவர்கள் இந்த நியாயத்தை கவனியாமல் வாதியின்பேரில் பாரத்தை வைத்து அவருடைய சாட்சியம் திருப்திகரமாயில்லையென்று அபிப்பிராயப்பட்டு பிரதிவாதியின் விவாதம் நம்பதக்கதல்லவென்ற விஷயத்தை ஷையாருடைய சாட்சியத்தைக்கொண்டே தீர்மானமடைய மனமில்லாமலிருந்தது பிசகென்றும்), வாதிக்காக தாகல் செய்யப்பட்ட சில ஆதாரவுகளை ஜில்லா கோர்ட்டார் தப்பான அர்த்தம் கொண்டிருப்பதாயும் (1912) M W N 1065-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி தஸ்தவேஜுகளை அர்த்தப்படுத்துகிற விஷயமானது ஒரு லா பாயிண்டாதலால் E 14, E 16-ஆகிய இரண்டு கடிதங்களைப் படித்துப்பார்த்தால் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்குப் பெயரிரவல்காரர் என்று நன்றாகத் துலங்குவதாயும் ஆகையால் ஜில்லா கோர்ட்டார் இந்த பாயிண்டைப்பற்றி அடைந்த தீர்மானம் பிசகென்று தீர்மானித்து,

இந்தக்கேஸில் 7-வது இஷுவைப்பற்றி ஜில்லா ஜட்ஜியவர்கள் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காதபடியால் அதைப்பற்றித் தீர்மானம் கொடுக்கும்படி உத்தரவளித்தார்கள். அதாவது பெயரிரவலாய் ஏற்பட்ட விக்கிரய சொத்தை முழுவதையும் வாதி 2-ம் பிரதிவாதியிடமிருந்து அடைய லாயக்குண்டா அல்லது வாதியினுடைய பாகத்தைமட்டும் அடையக்கூடுமாவென்றும், 1-ம் பிரதிவாதி கடன்காரர்களை மோசம் செய்வதற்காக இவ்விதமான பெயரிரவல் தஸ்தவேஜுண்டாக்கினபடியால் வாதி அந்த தஸ்தவேஜினால் ஏற்பட்ட சொத்தை அடையும்பொருட்டு தாவா செய்யவேகூடாதென்று 2-ம் பிரதிவாதி செய்யும் எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாவென்றும் தீர்மான அபிப்பிராயம் கொடுக்கும்படி ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட்டாருக்குக் கட்டளையிட்டார்கள். அதன்பேரில் ஜில்லா கோர்ட்டார் மறு ஈரங்கிகேட்டுக் கொடுத்த அபிப்பிராயத்தில் இரண்டு பிரதிவாதிகளும் சேர்ந்து செய்த மோச நடவடிக்கையினால் 2-ம் பிரதிவாதியிடம் சென்ற சொத்தைத் திரும்பியடைய நியாயமில்லையென்ற சட்ட விதியானது இந்தக்கேஸின் தன்மைக்கு ஏற்றதல்லவென்றும், ஏனெனில் 2-ம் பிரதிவாதி தன்னுடைய ஆன்ஸரில் தானும் உடந்தையாக இருந்து கடன்காரர்களை மோசம் செய்யும் பொருட்டு தன் பேருக்குக் கிரயம் செய்துகொண்டதாக ஒப்புக்கொள்ளவில்லையென்றும், மேற்கூறிய சட்ட விதியை இந்தக்கேஸின் அம்சங்களுக்கு ஏற்குமென்று சொன்னால், பினாமி ஏற்பாட்டினால் கடன்காரர்கள் மோசம் போனது வாஸ்தவமென்றும், எவ்விதத்திலும் வாதி தன்னுடைய பாகத்தை மட்டும் அடையும்பொருட்டு தாவா செய்ய நியாயமுண்டென்றும் ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டார்கள்.

அதன்பேரில் ஹைகோர்ட்டார் அளித்த பைசல் தீர்மானத்தில் வாதிக்கு தாவா சொத்தில் தன்னுடைய பாகத்தைமட்டும் அடைய லாயக்குண்டென்று கொடுத்த தீர்மானத்தில் சொல்லப்பட்ட காரணச் சுருக்கமாவது:—

வாதி B-C-என்ற இரண்டு ஆதாரவுகளால் ஏற்பட்ட விக்கிரயத் துகைகள் முழுவதையும் 2-ம் பிரதிவாதியிடமிருந்து சுவாதீனமடையக் கோரிய இந்தப்பிராதில் கோர்ட்டாருக்கு அப்படிக் கொடுக்க யுக்தமல்லவென்றும் தகப்பனுடைய பாகத்தை 2-ம் பிரதிவாதியே வைத்துக்கொள்ள நியாயமுண்டென்றும் தோன்றினால் மறு பாதிபாகத்தையாவது வாதிக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பின்வரும் விஷயங்கள் விசாரணைகளினாலும் கீழ் கோர்ட்டாருடைய தீர்ப்பினாலும் ரிமாண்டின்பேரில் அனுப்பப்பட்ட தீர்மானத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:— தாவா சொத்துக்களை 1-ம் பிரதிவாதி அவிபக்த ஹிந்து குடும்பத்தலைவனாக வைத்துக்கொண்டிருந்த பண்டியிருந்து கிரயத்திற்கு வாங்கினதாகவும் 1-ம் பிரதிவாதியினுடைய பற்பல கடன்காரர்களை—பாக்

கிரயதார்களை மோசம் செய்யும்பொருட்டு கிரயதஸ்தவேஜுகளைத் தன்னுடைய லாயர்பேருக்கு எழுதி வாங்கியிருப்பதாயும் பல பாக்கிதார்களில் 2-பேர்களாகிலும் 1-ம் பிரதிவாதியின் சொத்தானது மறைவடமாக 2-ம் பிரதிவாதியினிடத்திலிருக்கிறதென்ற தகவல்தெரியாமல், தன் பாக்கிகளை வசூலித்துக்கொள்ளக் கூடாமல் மோசம் போய்விட்டதாயும் பரிஷ்காரமாய் ஏற்படுகிறது. வாதியோ தான் குடும்பத்தாரின்நிமித்தம் தாவா சொத்துக்கள் முழுவதையும் சுவாதீன மடையலாயக்குண்டென்று வாதிக்கிறார். 2-ம் பிரதிவாதி இறந்தபின் அவருடைய ஸம்ஸாரம்வாரிஸாகச் சேர்க்கப்பட்டு அந்த அம்மாளுக்காக செய்யப்படும் ஆக்ஷேபனையாவது:— 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 2-ம் பிரதிவாதியின் பேருக்கு வாங்கி அதனால் தன்னுடைய பாக்கிதார்களை மோசம் செய்துவிட்டமையால் கோர்ட்டார் 1-ம் பிரதிவாதி தன்மகனைக்கொண்டு ஷை தாவா சொத்துக்களைத் திரும்பியடையும்படி 1-ம் பிரதிவாதிக்கு உதவிசெய்யக் கூடாதென்றும் ஆகவே மோச நடவடிக்கையினால் யாதொரு சொத்தானது எங்குபோய்ச் சேர்ந்ததோ அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், முழுவதும் 2-ம் பிரதிவாதி வைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டாலும், 1ம் பிரதிவாதியினுடைய பாகமானது 2-ம் பிரதிவாதியிடமே நிலைத்திருக்க நியாயமாகுமென்றும் எதிர்வாதம் செய்யப்படுகிறது.

வாதி மேற்கூறிய ஆக்ஷேபனைக்குச்சொல்லும் சமாதானங்களாவன:—

(a) பாக்கிதார்களை மோசம் செய்தவன் பிரதிவாதிக்குத் தன்னுடைய சொத்தை பவந்தமாய்ப் பராதீனப் படுத்தியிருந்தால்மட்டும் அவன் அதைத்திரும்பி யடைய நியாயமில்லையென்றும், பாக்கிதார்களை மோசம் செய்யும்பொருட்டு ஒருவன் யாதொரு சொத்தை வேறொருவன் பெயருக்கு வாங்கியிருந்தால் இவ்வித ஏற்பாட்டினால் மோசம் செய்தவன் சொத்தைத் திரும்பியடையலாமென்றும், அதாவது அந்நியன் பேருக்கு சொத்தை விற்பனைசெய்து பாக்கிதார்களை மோசம் செய்வதற்கும், அந்நியன் பேருக்கு சொத்தை வாங்குவதினால் பாக்கிதாரரை மோசம் செய்வதற்கும் வித்தியாசமுண்டென்றும் முதல் சொன்ன மோசத்தால் மட்டும் பராதீனம் செய்தசொத்தை இழந்துபோக வேண்டுமென்றும்,

(b) வாதி 1-ம் பிரதிவாதியின் பாகத்தை மட்டும் அடையக்கோறி இந்ததாவா செய்யவில்லையென்றும் அதாவது 1-ம் பிரதிவாதிக்காக வாதி இந்த தாவா கொண்டு வரவில்லையென்றும் அவிபக்த குடும்பத்திற்காக தாவா சொத்து முழுவதையும் சுவாதீனமடையக் கோரும் வாதிக்குக் கோர்ட்டார் டிக்கிரியளிக்க வேண்டியது நியாயமென்றும்,

(c) மோசம் செய்யும் பொருட்டு சொத்தைப் பராதீனம் செய்து அல்லது விக்கிரயம் பெறுகிறவன் அவிபக்தமான குடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் மோச நடவடிக்கையினால் சொத்தை இழந்துவிடவேண்டிய நியாயம் பிரயோகிக்கத் தகாதென்றும், அதாவது சொத்துக்கு நியாயமான பாத்தியமில்லாதவனும் அதை வைத்துக் கொள்ளலாமென்ற நியாய சந்தர்ப்பத்தை வேறு சட்ட முறையால் மாற்றிவிடலாமென்றும், 1-ம் பிரதிவாதி அவிபக்தமான குடும்பத்தைச் சேர்ந்தவனாதலால் 2-ம் பிரதிவாதிக்கு வாங்கிவைத்த சொத்தை இழக்க நியாயமில்லையென்றும்,

(d) மேற்கூறிய நியாய முறையின்படி பாத்தியமில்லாதவன் சொத்தை வைத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் தானும் உடந்தையாக இருந்து மோசம் செய்ததாக ஒப்புக்கொண்டிருக்கவேண்டுமாதலால் அவ்விதமாய் 2-ம் பிரதிவாதிக்காக ஏற்பட்ட ஆன்ஸரில் தெளிவாய் ஒப்புக்கொள்ளப்பட வில்லையென்றும்,

(e) தகப்பன் ஒரு குடும்ப சொத்தை தானமாகக் கொடுத்துவிட்டாலும் அவிபக்தமான புத்திரன் அந்த தான சாஸனத்தை முற்றிலும் ரத்துசெய்ய நியாயமுண்டாகையால் அந்த நியாயத்திற்கு மேலாக மேற்கூறிய நியாய முறையை மதிக்கக்கூடாதென்றும்,

(f) தகப்பன் துகைபெற்று யாதொரு குடும்ப சொத்தின் தன் பாகத்தை விக்கிரயம் செய்தாலும் கிரயம்பெற்றவன் தகப்பனுடைய பாகத்தைமட்டும் சுவாதீனமடைய வேண்டுமானால் பாக வியாஜ்ஜியமெடுத்துப் பரிகாரமடைய வேண்டுமாகையால் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் பாகத்தையாகிலும் வைத்துக்கொள்ள வேண்டுமானால் இந்த வியாஜ்ஜியத்தில் பிரித்துக் கொடுக்கும்படி கோரிக்கொள்ளக்கூடாதென்றும் அதாவது சொத்து முழுவதையும் வாதி அடைந்தபின் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் பாகத்தை அடைய பாக வியாஜ்ஜியம் செய்யவேண்டுமென்றும்.

ஆக 6-வித சமாதானங்கள் சொல்லப்படுகின்றன.

(a) வாதி மோசத்தின் பலனைப்பற்றி வித்தியாஸப்படுத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்க வாதமல்ல. பாக்கிதாரரை மோசம் செய்யும்பொருட்டு தன்னுடைய சொத்தை அந்நியனுக்குமாற்றி சுவாதீனப்படுத்திக் கொடுக்கிறதினால் உண்டாகும் நஷ்டமானது தன் பணத்தைக் கொண்டு வாங்கும் சொத்தை மற்றவன்பேரில் செய்து அவனிடம் அதை சுவாதீனப்படுத்தினதினாலும் ஏன் உண்டாகக்கூடாது? இரண்டுபேரும் மோச நடவடிக்கையில் உடந்தையாயிருக்கின்றதினால் ஒருவன் சொத்து மற்றவன் கையில் சென்றால் அதைத்திரும்பியடையக் கூடாதென்ற நியாயத்திற்கு மோச நடவடிக்கை எவ்வாறு ஏற்பட்டாலென்ன?

(b) அதுபோலவே மோச நடவடிக்கையால் ஒருவன் சொத்தை இழந்துபோக நியாயம் ஏற்பட்டால் அவன் விபக்தனாயிருந்தாலென்ன, அவிபக்தனாயிருந்தாலென்ன. மிதாக்ஷர சம்பிரதாயத்தின்படி புத்திரனும் தாயாதியும் சொத்து பாத்தியதையை அடைகிறானென்ற நியாயமானது மோச நடவடிக்கையால் பாக்கிதார்களை துரோகம் செய்கிறவர்களுக்குஉதவும்படியாக பிரயோகிக்கத்தகாது. அதாவது அவிபக்தன் செய்த மோசத்தால் சொத்தை இழக்கும் மேற்கூறிய நியாய முறை தவறக்கூடாதென்று சொல்லவேண்டும்.

(e-f) அவிபக்தன் செய்யும் தானம், விக்கிரயம் இவைகளுக்கு ஏற்பட்டிருக்கிற வித்தியாஸமும் தானத்தை ரத்தாக்கும் முறையும் விக்கிரயத்திற்கு சுவாதீனப் பரிகார முறையும் ஆகிய இவ்விஷயங்கள் மோசத்தால் ஏற்படவேண்டிய தண்டனைக்கு அதாவது சொத்தை இழக்கவேண்டிய அம்சத்திற்கு இடையூறாகின்றன. அவைகளை கவனித்தால் மோசத்தை குறித்து ஏற்பட்டிருக்கும் நேர்த்தியான நியாய முறையை அநுஷ்டிக்கலாமா கூடாதா வென்பதைப்பற்றி மிகவும் மனக்குழப்ப முண்டாக்குகிறது.

(d) 2-ம் பிரதிவாதி கொடுத்த ஆன்ஸரின் 5-6-வது பாராக்களில் சொல்லப்பட்டிருக்கிற பாயிண்டுகளால் 2-ம் பிரதிவாதியின் பேருக்கு சொத்தை வாங்கினதால் பாக்கிதார்கள் மோசம் போனார்களா வென்ற இஷ்யூ ஏற்படுகிறதென்று இருதரப்பு வக்கில்மார்களும் அங்கீகரித்திருக்கிறபடியால், 2-ம் பிரதிவாதிதானும் மோச நடவடிக்கையில் உடந்தையாக இருந்ததாக ஒப்புக்கொள்ளப்படவில்லையென்று சொல்லத் தகாது. டி-மு கோர்ட்டார் ஷை இஷ்யூ பாயிண்டைப்பற்றி மிகவும் விசாலமாய்த் தீர்ப்பில் பற்பல அதாரிடிகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

(ஆகவே வாதியினுடைய சமாதானங்களை யெல்லாம் கவனித்து ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்தில் 1-ம் பிரதிவாதியின் மோசத்தால் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் பாகத்தை வைத்துக்கொள்ளவேண்டியது நியாயமென்று தீர்மானித்தார்கள்.)

வாதியின் தாவா முற்றிலும் தள்ளுபடியாக வேண்டுமென்று 2-ம் பிரதிவாதி வாதிக்கிறான். வாதி 1-ம் பிரதிவாதியின் கீழ் பாத்தியங்கொண்டாடவில்லை. அதாவது 1-ம் பிரதிவாதியின் வாரிஸாக வாதி இந்த தாவா கொண்டுவந்தால் 1-ம் பிரதிவாதிக்கு ஏற்படும் நியாயம் வாதிக்கும் சம்பவிக்கும். ஆகவே 20 மதறாஸ் 326 ல் ஏற்பட்ட தீர்மானத்தை வாதிக்கு விரோதமாக உபயோகப்படுத்தக் கூடாது. ஆகையால் பிராதில் கண்டசொத்தின் சமபாதியை வாதிக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் அதற்காக டி-மு கோர்ட்டார் கமிஷனரை நியமித்து கமிஷனர் ரிபோர்ட்டின்படியும் சட்டத்தை அனுசரித்தும் டிக்கிரியளிக்க வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. 1914 M W N 595.

—:O:—

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்**

**தென் ஆர்காடு ஜில்லா**

**S. A. 1512 & 2229 of 1912**

**10 ஆகஸ்ட் 1914**

**தங்கவேலு பிள்ளை Vs துரைசாமி பிள்ளை**

**தகப்பன் மகனுக்கு நன்கொடையளித்தல்.**

**ஹிந்து லா.**

1892-ம் வருஷத்தில் 1-ம் பிரதிவாதியாகிய தகப்பன் குடும்பப் பொதுவான சொத்துக்களை துர்விநியோகம் செய்துவருகிறார் என்ற காரணத்தால் சில மத்தியஸ்தர்களுடைய ஏற்பாட்டின்படி 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களைத் தன் மகனுக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டு தான் பட்ட கடன்களைத் தீர்க்கும்பொருட்டு இதரமான சொத்துக்களை ஒரு சிநேகிதனுக்கு விக்கிரயம் செய்து கொடுத்துவிட்டார். அப்படியிருக்க 1-ம் பிரதிவாதியும் அவருடைய மகனும் சேர்ந்து நன்கொடை யளிக்கப்பட்டிருந்த சொத்தை 1905-ல் வாதிக்கு அடமானம்வைத்து வாங்கின கடனைத் தீர்க்கமுடியாமல் வாதி, தகப்பன் மகன் இருவர்பேரிலும் விழுப்புரம் டி-மு கோர்ட்டில் அசல் தாவா செய்தார். டி-மு கோர்ட் தீர்மானத்தின்பேரில் ஜில்லா கோர்ட்டில் அப்பீலானதில் தாவா சொத்தானது 2-ம் பிரதிவாதியாகிய மகனுக்குச் சொந்தமானதென்றும் அடமான தஸ்தவேஜை எழுதிக்கொடுக்கும் காலத்தில் 2-ம் பிரதிவாதி மைனரென்றும் 1-ம் பிரதிவாதி அடமானத்தின்பேரில் வாங்கிய கடன் 2-ம் பிரதிவாதிக்காக உபயோகப்படுத்தவில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டு வாதிக்கு 1-ம் பிரதிவாதியின்பேரில் மட்டும் ஆளைப்பொருத்து டிக்கிரியளிக்கப்பட்டு 2-ம் பிரதிவாதிக்குச் சொந்தமான தாவா சொத்தை ஏலம் போடவேண்டுமென்று வாதி கோரியது பிசகென்ற காரணத்தால் 2-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—

தாவா நன்கொடை செல்லத்தக்கதென்றும் ஆகவே 1-ம் பிரதிவாதியின் சமபாகத்தின்பேரிலாவது, வாதிக்கு டிக்கிரியளிக்கவேண்டியது நியாயமென்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஏனெனில் நன்கொடையை 2-ம் பிரதிவாதிக்காக யாரும் ஏற்றுக்கொண்டதாக ருஜுவில்லையென்றும் தானம் கொடுத்தால் அதை வாங்கிக்கொள்ளவேண்டியது சட்ட முறையாதலால் அவ்விதமான அம்சம் தாவா நன்கொடையில் கிடையாதென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. பிரதிவாதியின் 3-வது சாட்சி வாக்குமூலத்தில் தான் 2-ம் பிரதிவாதியின் தாயாருக்கு ஏஜண்டாக நின்று 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு அளித்த நன்கொடைப்பத்திரத்தை 2-ம் பிரதிவாதியின் தாயாருக்காக வாங்கி அதை ஷையாளிடம் கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிறார். அந்த வாக்குமூலத்தை ஜில்லா கோர்ட்டார் நம்பியிருக்கிறார். ஆகையால் நன்கொடையைப்பற்றிய மேற்கூறிய ஆக்ஷேபனை சரியானதல்ல.

இரண்டாவதாக ஹிந்து லாப்படிக்கு அவிபக்தனான பாகஸ்தன் தன்னைக் கட்டுப்படுத்தும்படியாகவும் தன்னுடைய சொத்து பாகத்தை நன்கொடையளிக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. அதற்கு 6 மதராஸ் 71 அதாரிடியாகக் காட்டப்படுகிறது. அந்தக் கேஸில் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் தன்னுடைய பாகத்தை மற்ற பாகஸ்தர்கள் அடையும்படியாக விடுதலைப் பத்திரம் எழுதிக்கொடுத்ததில் தன்னுடைய பாகத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுத்த ஏற்பாட்டினால் அவன் யாதொரு பிரதிப்பிரயோஜனமும் பெற்றுக்கொள்ளாத காரணத்தால் அந்த விடுதலை உடன்படிக்கையை நிராகரித்துத் தன்னுடைய பாகத்தை அடையும்பொருட்டு தாவா செய்ய லாயக்குள்ளவனென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஷை கேஸில் பிரதிப்பிரயோஜனம் முக்கியமான ஆதாரமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த கேஸில் ஒருவன் தன்னுடைய பாகத்தை மற்றவன் பெயருக்கு விடுதலை செய்து கொடுப்பதற்கு இருவருடைய பந்துத்துவமும் இருவருக்குமுள்ள பட்சமும் இயற்கையான அன்பும் காரணமாக ஏற்பட்டால் காண்டிராக்ட் ஆக்ட் 25-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அவ்வித முகாந்தரத்தால் செய்த விடுதலைப் பத்திரத்திற்கு வேறு பிரதிப்பிரயோஜனமில்லாவிட்டாலும் அது செல்லத்தகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வித அபிப்பிராயப்பட்டும் அந்தக்கேஸில் சொத்தை விடுதலை செய்து கொடுத்ததற்கு பட்சமும் அன்பும் காரணபூதமல்லவென்று தெரிந்தமையால் விடுதலை உடன்படிக்கை செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது.



இந்தக்கேஸிலோ தகப்பன் தன் மகனுக்கு நன்கொடையளித்ததற்கு மகன்பேரில் ஏற்பட்ட பிரியமும் பட்சமும் காரணமாகச் சொல்லப்படலாம். அப்படியானால் அந்தப்பத்திரம் செல்லத்தகுமென்றும் சொல்லவேண்டும். 6 மதராஸ் கேஸில் ஒருவன் தன் பாகத்தை மற்றவர்களுக்குக்கொடுத்துவிட்டால் அதிற்குப்பதிலாக சொற்பானபிரதி பிரயோஜனமாவதுபெற்றுக்கொள்ள வேண்டியதவசியமென்ற காரணத்தைக்கொண்டு தீர்மானங்கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவ்வித அபிப்பிராயங்கொண்டதாகத் தோன்றவில்லை. இருதரப்பு வாதங்களை எடுத்துச் சொன்னதில் மேற்கூறிய நியாயம் எடுத்துரைக்கப்பட்டதே யொழிய கோர்ட்டார் அந்த நியாயத்தை சரியென்று ஒப்புக்கொண்டதாகச் சொல்ல நியாயமில்லை. 11 மதராஸ் 406-ல் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை மற்ற பாகஸ்தர்கள் அனைவருக்கும் பொதுவாய் விடுதலை செய்து கொடுக்கக்கூடாதென்றும், ஆனால் ஒருவன் மற்றவர்களில் ஒருவன்பேருக்கும் தனிமையாக விடுதலைசெய்து கொடுத்துவிடலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மனு தர்மசாஸ்திரத்திலும் யாக்ஞவல்கருடைய கிரந்தத்திலும் அவ்விதமாய்த் தன் பாகத்தை விடுதலை செய்து கொடுக்கிறவன் கிஞ்சித்தாகிலும் பிரதி பிரயோஜனமடைய வேண்டிய விஷயத்தைப்பற்றி எழுதும் பொழுது அவ்விதமான விடுதலைக்குப் பிரதிப்பிரயோஜனம் அவசியமாயிருக்கவேண்டுமென்றாகிலும் அப்படியில்லாத பட்சத்தில் விடுதலை செல்லாதென்றாவது கருதப்படவில்லை. 11 மதராஸ் கேஸில் நான்கு பாகஸ்தர்களில் இருவர் தங்கள் பாகத்தை மற்ற இருவருக்கும் விடுதலைசெய்து கொடுத்ததற்குக் காரணமாக அவர்களுடைய தகப்பனுருடைய விருப்பம் அவ்விதமாயிருந்ததென்றும் அதை அனுஸரித்து நடந்ததாகவும்சொல்லப்பட்டதில், ஜஸ்டிஸ் முத்துஸாமி அய்யரவர்களும் ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் துரையவர்களும் அவ்வித சந்தர்ப்பத்தில் எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரம் செல்லத்தகுமென்று 1884-ம் வருஷத்திய அப்பீல் கே. 84-ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுஸரித்து அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்கள். சாஸ்திரப்படிக்கு சொற்பமான பிரதி பிரயோஜனமாகிலும் அடைய வேண்டுமென்றுசொன்னாலும் விடுதலை ஏற்பாடு பூர்த்தியானதற்கு பிரதி பிரயோஜன விஷயம் ஒரு [illegible] அம்சமாகுமே யொழிய பிரதி பிரயோஜனம் பெறுவது விடுதலைப்பத்திரம் பூர்த்தியாவதற்கு அவசியமான அம்சமென்று சொல்லத்தகாது.

ஒரு அந்நியனுக்கு யாதொருவன் இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் பாத்தியதையைப் பராதீனம் செய்தால் பிரதி பிரயோஜனம் கொடுக்க வேண்டியது அவ்வந்நியனுடைய கடமையாகும். ஆனால் ஒவ்வொருவனும் சொத்தில் தனக்குள்ள பாத்தியதையை விடுதலைசெய்து கொடுக்க லாயக்குள்ளவன் என்பதில் சந்தேகமில்லை. இவ்விதமான அதிகாரம் கிடையாதென்று அனுமானிக்கத்தக்க வசனங்கள் 6 மதராஸ் கேஸில் யாதொன்றும் காணப்படவில்லை. அப்படிக் கேதேனுமிருந்தாலும் அந்த தீர்மானத்தில் சொல்லப்பட்ட நியாயங்கள் 11 மதராஸ் கேஸில் அனுஸரிக்கப்படவில்லை.

தவிர இந்தக் கேஸில் 1-ம் பிரதிவாதி தன் மகனுக்கு அளித்த நன்கொடையானது மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்தின்படி நடந்த ஏற்பாடாகிறது. 1-ம் பிரதிவாதி சொத்தில் ஒருபாகத்தைத் தன் மகனுக்குக் கொடுத்துவிட்டுத் தான் மற்றதை எடுத்துக்கொண்டு அதையும் தன் கடன்தீருவதற்காக விக்கிறயம் செய்த நடவடிக்கையெல்லாம் பாகப்பிரிவினை ஏற்பாடுக்குச் சமானமாகும். ஆகவே இவ்வித ஏற்பாட்டினால் செய்யப்பட்ட நன்கொடை தஸ்தவேஜினால் 1-ம் பிரதிவாதி கட்டுப்பட்டவனாகிறான். 2-ம் பிரதிவாதி மைனராயிருந்தமையால் அவனும் அடமானத்தில் கையொப்பம் செய்தது பிரயோஜனமில்லை. ஆகவே அடமானக்கடன் பாக்கியைப்பற்றி தாவா சொத்தின் பேரில் வாதிடிக்கிரிபெற நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டு ஜில்லா கோர்ட்டார் அளித்த டிக்கிரி சரியானதென்று சொல்லி இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M. L. J. 272.

---

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.**

குண்டூர் ஜில்லா

S. A. 1481 of 1912—29 ஜுலை 1914

புச்சிரெட்டி Vs பிரஸிடெண்டு, குண்டூர் தாலூகா போர்ட்

லோகல் பண்டாருக்கு தர்மத்தை மானேஜ்மெண்டு செய்ய அதிகாரமுண்டு.

தர்ம சொத்தை அனுபவிக்கிற பிரதிவாதிகளிடமிருந்து வாபீஸ் அடையும்பொருட்டு குண்டூர் தாலூகா போர்ட்டார் செய்த தாவாவில் தாலூகாபோர்ட்டாருக்கு தாவா செய்யும் அதிகாரம் கிடையாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டதில் அந்த ஆக்ஷேபம் டி-மூ கோர்ட்டிலும் சப்கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் ஹைகோர்ட்டில் பிரதிவாதிகள் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டு தாலூகாபோர்ட்டார் தாவா செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொன்ன காரணச்சுருக்கமாவது:—

1817-ம் வருஷத்திய VI-வது ரெகுலேஷன்படிக்கு ரெவினியூ போர்ட்டாருக்கு ஆதியில் தர்ம காரியங்களையும் தர்ம பரிபாலனத்தையும் மேல் பார்க்கும் அதிகாரம் மட்டும் ஏற்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரம் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 51-வது பிரிவின்படி லோகல் பண்டாருக்கு மாறிப்போனபடியால் லோகல் பண்டாருக்கு மேல் பார்க்கும் அதிகாரம் தான் உண்டேயொழிய வேறெவித அதிகாரமுமாதொன்றும், கிடையாதென்றும் ஆகையால் லோகல் பண்டார் டிரஸ்டிக்களின் ஸ்தானத்திலிருந்து இந்த தாவா செய்ய பாத்யமில்லையென்றும், பிரதிவாதிகளுக்காக ஆக்ஷேபிக்கப்படுகிறது. 1884-ம் வருஷத்திய லோகல் போர்டஸ் ஆக்ட் 51-வது பிரிவின் அம்சமும் 1884-ம் வருஷத்திய டிஸ்டிரிக்ட் முனிஸிபாலடி ஆக்ட் 26-வது பிரிவின் அம்சமும் ஒரே விதமான முறையாகும். ஆகையால் 31 மதராஸ் 111-ல் தீர்மானித்திருக்கிறபடி ரெவினியூ போர்ட்டாருடைய அதிகாரத்தைப் பெற்ற லோகல் பண்டாருக்கு மேல் பார்க்கும் அதிகாரத்துடன் மானேஜ்மெண்டு அதிகாரமும் உண்டென்று சொல்லத்தகும். மானேஜ்மெண்டு அதிகாரத்தில் டிரஸ்ட் சொத்தைத் திரும்பி அடையும்பொருட்டு இந்த தாவா செய்யலாம். ஆனால் தர்மகர்த்தாக்கள் இருக்கையில் லோகல் பண்டார் தாவா செய்யக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. தாவா தர்மத்தைப் பரிபாலனம் செய்துவந்த தர்மகர்த்தாக்கள் C-ஆதாரவால் தங்கள் உத்தியோகத்தை ராஜினாமா கொடுத்துவிட்டதாக ருஜுவாகிறது. ஆகவே தாவாகாலத்தில் தர்மகர்த்தாக்கள் யாவரும் உத்தியோகத்தில் இல்லை. ராஜீனாமா தேதிமுதல் தாவா தேதிவரையில் ஒருவரும் டிரஸ்டிகளாய் வேலை பார்த்துவந்ததாகக் காணப்படவில்லை. ஆகையால் லோகல் பண்டார் இந்த தாவா செய்தது நியாயமே. பிரதிவாதிகள் ஆதியில் தர்மகர்த்தாக்களாயிருந்த சென்ன ரெட்டி என்றவருடைய வாரிஸுகளாகச் சொல்லப்பட்டு அந்தநிலைமையில் அவர்கள் பேரில் இந்த தாவா செய்யப்பட்டிருக்கிறபடியால் டிரஸ்டிக இருந்தவர் பேரிலாவது அவருடைய வாரிஸ்கள் பேரிலாவது சொத்தைப்பற்றி தாவா செய்தால் அதற்குக் காலாவதி தோஷமே கிடையாது. ஆகையால் காலாவதியைப்பற்றிய பிரதிவாதிகளின் ஆக்ஷேபணை பிரயோஜனமில்லை. காலாவதி ஆக்ட் 10-வது பிரிவைப் பார்க்கவும். 2 முதல் 5 பிரதிவாதிகள்பேரில் வாதிக்குப் பரிகாரம் தேட நியாயமில்லையென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் அந்த வாதம் சப்கோர்ட்டில் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. அதைப்பற்றித் திரும்பவும் இங்கு பிரஸ்தாபிக்கவிடக்கூடாது. ஆகவே, 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாக்குது. XXVII M. L. J. 284.

—————:O:—————

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்**

தென் ஆர்காடு ஜில்லா

S. A. 1476 of 1910-28 ஜுலை 1914

மகம்மது சாஹிப் Vs கரீம்பீபீ அம்மாள்

பள்ளிவாசலில் தொழுகிற மகம்மதியர்கள் தாவா செய்ய லாயக்கில்லை.

தென் ஆர்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகாவில் ஒரு கிராமத்திலுள்ள மகம்மதியர்களுக்குப் பிரதிநிதிகளாக இரண்டு மகம்மதியர்கள் தாவா சொத்தானது ஷை பள்ளிவாசலைச்சேர்ந்ததென்றும் ஆகவே அடமான பாத்தியதையின்பேரில் ஷை சொத்தை அனுபவிக்கிற பிரதிவாதிகளிடமிருந்து அதை மீட்கும் பாத்தியதையானது ஷை பள்ளிவாசலில் தொழுகிற மகம்மதியர்களுக்குண்டென்று சொல்லி சிதம்பரம் டி-மு கோர்ட்டில் ஷை சொத்தை சுவாதீனமடையும் பொருட்டு தாவா செய்தார்கள்.



பிரதிவாதிகள் எதிரான்ஸரில்:- பள்ளிவாசலில் வந்து தொழுகிற வாதிகளுக்கு பள்ளிவாசலுக்குரிய சொத்தை சுவாதீனமடையும் பொருட்டு தாவா செய்ய பாத்தியமில்லையென்றும், தாவா சொத்துக்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு அனுபவிக்கிற 2-ம் பிரதிவாதிக்கும் ஷை பள்ளிவாசலின் மாஜி மானேஜராயிருந்தவருக்கும் விவாதம் நடந்து இருவருடைய சம்மதத்தின்பேரில் டிக்கிரீ ஏற்பட்டு அதன்படி தாவா சொத்து பிரதிவாதிகளின் வசமிருக்கவேண்டியதென்று ஏற்பட்டமையால் அந்தடிக்கிரீயினால் பள்ளிவாசல் கட்டுப்பட்டதாகுமென்றும், தவிற வாதிகளின் இந்த ப்பிராதுக்குக் காலாவதி தோஷமென்றும் ஆக மூன்றுவித ஆக்ஷேபணை செய்தார்கள். டி-மு கோர்ட்டார் எதிரிகளின் ஆக்ஷேபணைகள் எல்லாம் நியாயமானவைகளென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் ஆலயத்தில் தொழுகிற ஜனங்களுக்கு கோவில் சொத்தில் யாதொரு ஹக்கும் கிடையாதென்றும் ப்ராபர்டி ஆக்டின் 91-வது பிரிவில் அடமான சொத்தை மீட்கும் பாத்தியதையுடையவர்களின் எந்த வகுப்பிலும் வாதிகள் சேர்ந்தவர்களாயில்லையென்றும் சொல்லி டி-மு கோர்ட்டார் தீர்மானத்தைக் காயப்படுத்தினார்கள்.

ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலிலும் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தது சரியென்று அபிப்பிராயப்பட்டதற்குக் காரணமாக 16 மதராஸ் 81, 23 மதராஸ் 99, 23 அலகபாத் 660 இவைகளில் ஏற்பட்டிருக்கிற சட்ட முறையை அனுசரித்து ஆலயத்தில் தொழுகிறவர்களுக்குத் தனிமையாகவும், ஒட்டுமொத்தமாகவும் ஆலயத்தின் சொத்து விஷயமாய் சுவாதீன தாவா செய்வதற்கு பாத்தியமுடையவர்களல்லவென்றும், மகம்மதிய லாப்படிக்கு வாதிகள் கூட்டான முத்தவல்லிகளென்ற நிலமையை அடையலாமென்றுவது ஸ்தாபிக்கப்படவில்லையென்றும், தவிற வாதிகள் டிரஸ்டிக்களாக இந்த தாவாவைக் கொண்டுவந்ததாக ஏற்படவில்லையென்றும், தொழுகிற ஜாதியாருக்கு பிரதிநிதிகளாய் தாவா செய்ய நியாயமில்லையென்றும் சொன்னார்கள். XXVII M. L. J. 270.

—————:O:—————

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி**

கோயமுத்தூர் ஜில்லா

S. A. 2497 of 1912-17 ஜுலை 1914

தாயம்மாள் Vs குப்பண்ண கவுண்டன்

மைனருக்குத் தகப்பனுடன் பிறந்த அத்தை கார்டியனல்ல.

வாதியின் மைனர் தசையில் 1895-ல் தாயார் கார்டியனாக சில சொத்துக்களை விக்கிரயம் செய்துவிட்டாள். அவளுக்குப்பின் ஷை மைனரை சவரக்ஷணை செய்துவந்த தகப்பனுடன் பிறந்த அத்தை 1899-ல் வேறு சில சொத்துக்களை ஷை மைனருக்கு கார்டியனாக விக்கிரயம் செய்துவிட்டாள். மைனர் நீங்கினபின் வாதி மேற்கூறிய இரண்டு விக்கிரயங்களையும் ரத்து செய்யும்பொருட்டு உடுமலைப்பேட்டை டி-மு கோர்ட்டில் தாவா செய்து அந்த சொத்துக்களை கிரயதார்களிடமிருந்து சுவாதீனமடையக் கோரினார். இரண்டாவது விக்கிரயம் செய்யப்படும் காலத்தில் வாதிக்குத் தகப்பன் கூடப்பிறந்தவருடைய பாரியாள்தான் சமீப பந்துவாகயிருந்தாள். டி-மு கோர்ட்டார் இரண்டு விக்கிரயங்களுக்கும் அவசியம் ஏற்படவில்லையென்றும் விக்கிரயத் தொகையினால் மைனருக்கு யாதொரு நன்மையும் கிடையாதென்றும் தீர்மானித்தும், வாதியின் தாவாவுக்கு 44-வது ஆர்டிகிலின்படி 3-வருஷ காலாவதி ஏற்பட்டிருப்பதால் கிரயமான மூன்று வருஷங்களுக்குப்பின் செய்யப்பட்ட இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷம் வந்துவிட்டதாகச் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் தாயார் கார்டியனாக செய்த விக்கிரயம் மைனருடைய நன்மைக்காகவும் அவசியமான காரணத்திற்காகவும் ஏற்பட்டதல்லவென்றும் ஆனால் வாதிக்கு தாவா செய்ய காலாவதி தோஷம் வந்துவிட்டதாகவும், அத்தை கார்டியனாக செய்த விக்கிரயம் செல்லத்தகாதென்பதற்குக் காரண

மாக மைனருக்கு அத்தை சரியான கார்டியனல்லவென்றும் அப்படிப்பட்ட கார்டியனால் ஏற்பட்ட விக்கிரயம் மைனர் வாதியைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகவே 2-வது கிரயம் இல்லை. செல்லாதபடியால் அதை ரத்துசெய்ய அவசியமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு வாதிக்கு 2-வது விக்கிரய சொத்தைப்பற்றி சுவாதீனமளித்த டிக்கிரீயில் தவருதலாக எல்லா சொத்துக்களும் வாதியின் வசம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்று குறித்தெழுதிவிட்டார். அதாவது டிக்கிரீயில் கைப்பிசகாய் 1-வது விக்கிரய சொத்தும் வாதிக்குச் சுவாதீனமாகும்படி கண்டிருந்தது.

அதன்மேல் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் மேற்கூறிய பிசகை மட்டும் திருத்தி மற்றப்படி சப்கோர்ட் தீர்மானமே காயம் செய்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது;—

2-கல்கத்தா லா ரிபோர்ட்டுகளின் 583, 2 C. W. N. 191-இவைகளில் தீர்மானித்திருக்கிறபடி ஹிந்து லாவில் ஒரு மைனருக்குத் தாய் தகப்பன் (சில சமயங்களில் தமையன் அல்லது நேரான முன்வரிசையிலுள்ள ஆண் பெண்ணினங்கள்) இவர்களைத் தவிர வேறு யாரும் இயற்கையான கார்டியன் பாத்தியதையை அனுஷ்டித்து மைனருடைய தேகத்தையும் சொத்தையும்பற்றி யாதொரு நடவடிக்கையும் நடத்தக்கூடாதென்று ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சரியான கார்டியன்கள் இல்லாதபட்சத்தில் பெற்றோருடைய பாத்தியதைக்குமேலான பாத்தியதையை உடைத்தாயிருக்கிற நமது சக்கிரவர்த்தியாரை அதாவது கோர்ட்டாரை கார்டியனாக நியமிக்கச்செய்து யாதொரு நடவடிக்கை நடத்தப்படவேண்டும். ஆகவே தகப்பன் கூடப்பிறந்த அத்தை வேறு வர்க்கத்தையடைந்தவளாதலால் அவள் நேரான வரிசையிலுள்ளவளல்ல. அவள் மைனருக்கு இயற்கையான கார்டியனாகமாட்டாள். அவள் வாஸ்தவமாய் மைனரை வளர்த்து சம்ரக்ஷணை செய்து வந்தாலும் அவளால் ஏற்படும் விக்கிரயம் செல்லத்தகாது. அதை ரத்து செய்யும்பொருட்டு தாவா செய்யவே அவசியமில்லை. 34 கல்கத்தா 213ல் தீர்மானித்திருக்கிறபடி அதிகாரமில்லாத கார்டியன்கள் செய்யும் பராதீனத்தைப்பற்றித் தேடும் யாதொரு பரிகாரத்திற்கு 44-வது ஆர்டிகிலின் மூன்று வருஷ காலாவதி ஏற்பட்டதல்ல. ஆகையால் 2-வது விக்கிரயத்தைப்பற்றி சப்கோர்ட்டார் கொடுத்த தீர்மானம் சரியென்று, ஆனால் டிக்கிரீயில் 1-வது கிரய சொத்தும் சேர்த்திருப்பதால் அதை நீக்கி டிக்கிரீயைத் திருத்தும்படி உத்தரவளிக்கப்பட்டு மற்றப்படி சப்கோர்ட் தீர்மானமே காயமாச்சுது. (பிசகாய் ஏற்பட்ட டிக்கிரீயைப்பற்றி வாதி யாதொரு நடவடிக்கை எடுக்காத காரணத்தால்) 2-வது அப்பீலில் வாதியின் செலவில் ஒரு பாதியைமட்டும் பிரதிவாதிகள் கொடுக்கவேண்டுமென்றும் பிரதிவாதிகள் தங்கள் செலவைத் தாங்களே வகித்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மேற்சொல்லிய காரணங்களைச் சொல்லவே ஹானரபில் ஜஸ்டிஸ் டையாட்ஜியவர்கள் கொடுத்த தீர்மானத்தில் சொன்ன காரணச் சுருக்கமாவது:—
ஒரு மைனருக்கு இயற்கையான கார்டியன் வேறு கோர்ட்டாரால் நியமிக்கப்படும் கார்டியன் வேறு, ஒரு உயில் சாஸனத்தில் சாஸன கர்த்தா மைனருக்காக ஏற்படுத்தும் கார்டியன் வேறு. அப்படியிருக்க அத்தை மைனருக்கு இயற்கையான கார்டியன் என்பதற்கு ஹிந்து லா முறையும் அதாரிடியும் இருப்பதாகச் சொல்லப்படவில்லை. 26 கல்கத்தா 320-ன் 325ல் மைனரின் சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்துவந்த தகப்பனைப்பெற்ற பாட்டியார் இயற்கையான கார்டியனுக்குரிய யோக்கியதையுடையவள் என்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. தகப்பனைப்பெற்ற பாட்டியார் இயற்கையான கார்டியனுமிறபொழுது தகப்பனுடன் பிறந்த அத்தையும் கோர்ட்டாரால் நியமிக்கப்படாதபோதிலும் கார்டியனாக பாவிக்கப்படவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. பாட்டியார் நேரான வர்க்கத்தில் சேர்ந்தவளாகும் அத்தை வேறு வரிசையில் சென்றவளாகிறாள். ஆகவே அத்தைக்கும் பாட்டிக்கும் கார்டியன் ஸ்தானத்தைப் பற்றினமட்டில் சமமான நிலைமை ஏற்பட நியாயமில்லை. தகப்பன் வழியில் நேரான வரிசையிலுள்ளவர்களைத் தவிர மற்றவர்களில் ஆண் வர்க்கம் கார்டியனாகயிருக்கலாமென்று மேயின் என்னும் கிரந்த கர்த்தா விளம்பியிருக்கிறார்கள். 2 கல்கத்தா லா ரிபோர்ட்டிலும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அத்தை கார்டியனாக நடந்துகொண்டு மைனரின் சொத்தை விக்கிரயம் செய்தது செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது. XXVII M. L. J. 285.

---



28 ... 1914 MAD...

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

—:O:—

### ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

### S. A. 936 of 1912-9 செப்டெம்பர் 1914

ரெஜிஸ்டரான தஸ்தவேஜினால் ஒரு ஸ்தாவர சொத்தைக் கிரயம் பெற்றவன் கிரயம் செய்தவனுக்கு அந்த சொத்தில் யாதொரு பாத்தியதையுமில்லையென்று கண்டு தான் கொடுத்த விக்கிரயத் தொகையை அவனிடமிருந்து வாபிஸ் அடைவதற்காக தாவா செய்தால் அந்த தாவாவுக்கு ஆர்டிகில் 116-ன்படி 6-வருஷ காலாவதியுண்டு. எழுத்துமூலமாய் ஏற்பட்டிருக்கிற ரெஜிஸ்டரான உடன்படிக்கையை நிறைவேற்றத் தவறினவன் பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்தால் அதற்கு 6 வருஷ காலாவதி உண்டென்று 116-வது ஆர்டிகிலின் அம்சமாகும். 35 மதராஸ் 39-ல் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மான அபிப்பிராயம் அனுசரிக்கத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

—:O:—

### ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே

### S. A. 423 of 1914-11 செப்டெம்பர் 1914

ஒரு நிலச்சுவான்தார் டெனெண்டின்மீது குத்தகை வாய்தா கடந்தபின் அவனை இஜெக்ட் செய்து நிலத்தை சுவாதீனமடையும்பொருட்டு தாவா செய்ததில் அந்த நிலங்கள் தன்னுடைய சுவாதீனத்திலில்லையென்றும் சில மூன்றாவது மனுஷ்யர்கள் தன்னைவெளிப்படுத்தி அந்த நிலங்களைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு விட்டார்களென்றும் ஆகவே இந்தப்பிராதில் அவர்களைப்பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட வேண்டுமென்றும் டெனெண்டானவன் ஆன்ஸரில் சொன்னபிரகாரம் அந்த மூன்றாவது மனுஷியர்களும் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட்டார்கள். கோர்ட்டார் சொத்து பாத்தியதை விஷயமாயும் சுவாதீனத்தைப்பற்றியும் பார்ட்டிகள் அனைவரும் விட்ட சாட்சியங்களைப்பற்றி விசாரணை செய்து கடைசியில் வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள். அப்பீல் கோர்ட்டாரும் அதைக் காயப்படுத்தினார்கள். பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்து அங்கு பின்வரும் வாதம் செய்தார்கள். அதாவது மற்றவர்களைப் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட்டபோதிலும் அவர்கள் பேரில் பரிகாரம் இன்னவிதமென்று பிராதில் குறித்துக் காட்டும்படி பிராதைத் திருத்தாதபடியால் அந்தப் பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜிய மூலம் இன்னதென்று குறிக்கப்படாத பிராதின் மேல் வாதிக்கு அந்தப் பிரதிவாதிகளைப் பற்றின மட்டில் யாதொரு பரிகாரமளித்தது பிசகென்று ஆக்ஷேபித்தார்கள். ஹைகோர்ட்டார் மேற்படி ஆக்ஷேபணையை எதிரிகள் கீழ்கோர்ட்டுகளில் எடுத்துச் சொல்லாமல் முதல் முதல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலில் வாதிக்கவிடக்கூடாதென்றும் பிராதை திருத்திக் கொடுக்காவிட்டாலும் பிந்திய நடவடிக்கைகளைக் கவனித்தால் எல்லா பார்ட்டிகளுக்கும், தீர்மானிக்கப்படவேண்டிய இஷ்யூ பாயிண்டு இன்னதென்று பரிஷ்காரமாய்த் தெரியுமென்றும் தவிர அவ்விதமாய் பிராதை திருத்தப்படாத காரணத்தால் பிரதிவாதிகளுக்கு அநீதி ஏற்பட்டதென் றாகாணப்படவில்லையென்றும், அதாவது திருத்தப்பட்டிருந்தால் அந்தப் பிரதிவாதிகளைப் பற்றினமட்டில் கோர்ட்டார் வேறு விதமான தீர்ப்பளித்திருப்பார்களென்று சொல்லப்படவில்லையென்றும், ஆகவே மேற்கூறிய முறைப்பிசகினால் கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்ற நியாயமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

---

### ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

### S. A. 712 of 1913-27 ஆகஸ்ட் 1914

ஒரு சொத்தைப்பற்றி சுவாதீன டிக்கிரீ பெற்றவனாகிலும் அடமான டிக்கிரீயின்படி ஏலம் போடப்பட்ட சொத்தை கிரயம் பெற்றவனாகிலும் சொத்தை சுவாதீனமடையப் பிரயத்தனப்பட்டால் அவர்களைத் தடுக்கும் பிரதிவாதியை நிராகரித்துக் கோர்ட்டார் சுவாதீனப்படுத்திக் கொடுக்கலாம். பிரதிவாதியின்னும் கடுமையாய் எதிர்த்தால் அவனை ஸிவில் ஜெயிலுக்குமனுப்பலாம். தவிர மேற்படி சுவாதீனமளிக்கக்கூடாதென்று நியாயமானபடி மேற்படி சொத்தை அனுபவிக்கிறவன் பாத்திய மனுக்கொடுத்து ஆக்ஷேபித்தால் டிக்கிரீ பெற்றவனுக்கும் கிரயதாரனுக்கும் சுவாதீனப்படுத்திக்கொடுக்காமல் அவர்களுடையமனு

வைத் தள்ளுபடி செய்துவிடலாம். சொத்து பாத்தியத்துடன் அனுபவித்து வந்தவர்களை நிராகரித்து டிக்கிரி பெற்றவர்களும் கிரயதார்களும் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டபின்னும் முன் அனுபவித்துவந்த பாத்தியஸ்தர்கள் கொடுக்கிற விண்ணப்பத்தின்பேரில் கோர்ட்டார் விசாரணை செய்து மனுதார்களிடம் நியாயமானபடி சொத்தின் சுவாதீனமிருந்ததாகக் காணப்பட்டால் அவர்களுக்கே திரும்பவும் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கலாம். இவ்விதமான உத்தரவுகள் செய்வதற்கு சட்டமுறையானது சி. பி. சி. ஆர்டர் 21 ரூல் 98, 99, 101-ல் ஏற்பட்டிருக்கிறது. அவ்வித உத்தரவுகளினால் விரோதமடைந்த பார்ட்டி அசல் தாவா செய்யலாமேயொழிய மற்றப்படி அவ்வித உத்தரவுகள் மாற்றத்தகாத முடிவானவை என்று ரூல் 103-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க 103-வது ரூல்படி அசல் தாவா செய்த வாதிக்கு தாவா சொத்தை மீட்டுக் கொள்ளும்படி கோர்ட்டார் டிக்கிரியளிப்பதற்கு, முந்திய பிராதில் ஷையார் சொத்தை மீட்டுக் கொள்வதாய் ஒப்புக்கொள்ளாத விஷயம் இடையூறாகாதென்று தீர்மானிக்கப்பட்டது. [அதாவது அடமானதார் பிராது கொடுத்த பொழுது பாத்தியமனு செய்து தோல்வியடைந்த பார்ட்டி சொத்தை மீட்டுக்கொள்வதாய் ஒப்புக்கொள்ளாதபோதிலும் பின்னால் அவன் செய்யும் அசல் தாவாவில் அதை மீட்டுக்கொள்ளப் பிரியப்பட்டால் அவனுக்கு டிக்கிரியளிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.]

ஒரு நிறைவேற்று நடவடிக்கையின்பேரில் யாதொரு சொத்து ஜப்தியான பிறகு மேல் நடவடிக்கையாதொன்றும் நடத்தப்படாமல் நிறைவேற்று மனு தள்ளுபடியானாலும் ஜப்தி உத்தரவு ரத்தாய்ப் போய்விட்டதாக பாவிக்கப்படாது. ஜப்தி அமுலிலிருக்கிறதா இல்லையாவென்ற விஷயம் ஒவ்வொரு கேசின் சந்தர்ப்பத்தைப் பொருத்துத் தீர்மானிக்கப்படவேண்டிய ஒரு ருஜுவாயிண்டாகுமேயொழிய அது பொதுவான லா பாயிண்டல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர்.**

**S. A. 369 of 1913—1 செப்டெம்பர் 1914.**

பரம்பரையாக புரோகிதம் முதலிய வைதிகத் தொழிலையும் ஒரு தேவஸ்தானத்தில் அர்ச்சக உத்தியோகம் முதலிய பற்பல ஸேவக பாத்தியதையையும் அடைந்து ஷை உத்தியோகத்தை நடத்திவருகிறவன் தனக்குப்பின் அந்த வேலையை ஒப்புக்கொள்ளத்தக்க அடுத்த வாரிஸ்தாருக்கு மட்டும் அதை மாற்றிவிடலாமேயொழிய மற்றவர்கள் யாருக்கும் அவ்வித உத்தியோக பாத்தியதையைப் பராதீனம் செய்யக்கூடாதென்றும் அப்படிக்கு ஏற்படும் பராதீனத்தால் அடுத்த வாரிஸ்தார் கட்டுப்பட்டவனல்லவென்றும், உத்தியோகத்தைப் பார்த்து வருகிறவனிடம் பராதீனம் பெற்ற அந்நியன் உத்தியோகத்திற்குரிய வருமானங்களை மட்டும் எவ்வளவுகாலம் அனுபவித்து வந்தபோதிலும் பராதீனம் செய்த பாத்தியஸ்தனே அந்த வேலையைப்பார்த்து வந்த வருமானத்தை அனுபவிக்கிறவன் அடுத்த வாரிஸ்தாருக்கு விரோதமாகத் தன்னுடைய அநுபோக பாத்தியதையைப் பாராட்டி ஷை உத்தியோகத்தை அடைய லாயக்கில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

**சீப் ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஹானே.**

**A. S. No 69 of 1913—3 செப்டெம்பர் 1914.**

ஒரு இனாம் கிராண்டானது தேவாலயத்தின் பேருக்கு அளிக்கப்பட்டு அதைச்சேர்ந்த நிலங்களில் அநேகர் வீடுகட்டிக்கொண்டு தேவாலயத்திற்கு வருஷந்தோறும் சொற்பத்தொகையைத் தீர்வையாகச் செலுத்திவந்தால் அவ்விதமாய் ஷை நிலங்களை நீடியகாலம் அனுபவிக்கிறவர்களிடம் வருஷந்தோறும் மேற்கூறியபடி தீர்வையை வசூலிக்கலாமேயொழிய தேவஸ்தானத்திற்கு அவர்கள் பேரில் வேறுவிதமான அதிகாரமும் செலுத்தவாவது அவர்களை அப்புறப்படுத்தவாவது பாத்தியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

:O:



**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.**

**S. A 424 of 1913-7 செப்டெம்பர் 1914.**

12-ம் பிரதிவாதியினிடம் தாவா சொத்தை 2-வது அடமானம்பெற்ற வாதி முதலாவது அடமானதாரனாகிய 1-ம் பிரதிவாதிக்குரிய பாக்கியைக்கொடுத்து அந்த அடமானத்தை மீட்டுக் கொள்ளும் பொருட்டு செய்த பிராதில் தாவா சொத்தானது 12-ம் பிரதிவாதியின் தர்வாடைச் சேர்ந்ததென்று கண்டிருந்ததுமல்லாமல் 1-ம் பிரதிவாதியும் தன்னுடைய எதிரான்ஸரில் ஷை சொத்தானது தர்வாடைச் சேர்ந்ததென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்க ஜில்லாகோர்ட்டார் இந்தக்கேஸில் தாகல் செய்யப்பட்டிருக்கிற தஸ்தவேஜுகளைப் பார்வையிட்டதில் தாவா சொத்தானது ஒரு தேவஸ்தானத்தைச் சேர்ந்ததென்றும் அதற்கு 12-ம் பிரதிவாதி தர்மகர்த்தாவென்றும் வாதிக்கு ஏற்பட்ட அடமானம் தர்மகர்த்தாவினால் எழுதிக் கொடுக்கப்படாத காரணத்தால் வாதி இந்த வியாஜ்ஜியம் செய்ய லாயக்கில்லையென்றும் தீர்மானித்து வாதியின்பிராதை செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்றி இரு கக்ஷிக்காரரும் பிராதிலும் ஆன்ஸரிலும் கண்டிருக்கிற பாயிண்டுகளுக்கு விபரீதமான புதிய வியவகாரத்தைக் கோர்ட்டார் எடுத்துக்கொண்டு தீர்மானமடைவது சட்டவிரோதமென்றும் பிரதிவாதிகள் ஆன்ஸரில் ஒப்புக்கொண்ட விஷயத்திற்கு மாறாகப்பின்னால் வாதம் செய்யக்கூடாதென்றும் தீர்மானித்தார்கள்

:O:

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே**

**S. A. 1010 of 1913-19 செப்டெம்பர் 1914**

ஒரு கூட்டு வியாபாரம் கலைந்துபோனபின் பங்காளியாக இருந்து விலகிப்போனவன் மற்றவர்களுடைய குறித்த அதிகாரமில்லாமல் கம்பெனியாரால் செலுத்தப்படவேண்டிய பாக்கி விஷயமாய் மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் வண்ணமாக ஷை பாக்கிக்கு உடன்படத்தக்க ஆதாரம் எழுதிக் கொடுக்கத்தகாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது விலகிப்போன ஒரு பங்காளி யாதொரு பாக்கியை ஏற்றுக்கொண்டால் அது மற்ற பங்காளிகளைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானிக்கப்பட்டது. பாக்கிகளையெல்லாம் கொடுத்துத் தீர்க்கும்படி கொடுக்கப்படும் பவரில் (அதிகாரத்தில்) கடனை ஒப்புக்கொள்ளும் அதிகாரமும் அடங்கியிருப்பதாய்ச் சொல்லப்பட்டது. அதாவது கம்பெனியால் செல்லாகவேண்டிய பாக்கிகளைக் கொடுக்கும்படி அதிகாரம் பெற்ற பாகஸ்தன் யாதொரு கம்பெனிக்கடனை ஏற்றுக்கொண்டால் அந்த நடவடிக்கை மற்றவர்களையும் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது.

:O:

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே**

**S. A. 70 of 1913-17 செப்டெம்பர் 1914**

சொத்து பாத்தியஸ்தனுக்கு விரோதமாக ஷை சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டு அனுபவிக்கிற அந்நியனை அப்புறப்படுத்தும்பொருட்டு சொந்தக்காரனிடத்திலிருந்து குத்தகைச் சீட்டை எழுதி வாங்கிக்கொண்ட டெனெண்டு இஜெக்ட்மெண்டு பிராது கொடுத்ததில் குத்தகைச் சீட்டை எழுதிக்கொடுத்தது மெய்யென்று சொந்தக்காரன் ஒப்புக்கொண்டிருக்க, அவ்வந்நியன் குத்தகைச்சீட்டு மெய்யான ஏற்பாடல்லவென்றும் அந்தபாத்தியதையை அனுசரித்துவாதி சொத்தை சுவாதீனமடையாத காரணத்தால் குத்தகை ஏற்பாடு செல்லத்தகாதென்றும் ஆக்ஷேபிக்க லாயக்கில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் குத்தகை பாத்தியதையை அடைந்தவன் அந்நியனிடமிருந்து சொத்தை சுவாதீனம் பெற்றுக்கொள்ள யோக்கியமுள்ளவனென்று ஏற்பட்டது.

:O:

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே**

**S. A. 435 of 1913-17 செப்டெம்பர் 1914**

ஒரு டிக்கிரி பாக்கிதார் பிரதிவாதிக்குச் சொந்தமான சொத்தை ஜப்தி செய்தபின் பிரதிவாதி ஷை சொத்துக்களை கோர்ட்டாருடைய தகவலன்னியில் வேறு யாருக்கும் பராதீனம் செய்துவிட்டால் ஜப்தியை அனுசரித்து ஷை சொத்தின் பேரில் தொடர பாத்தியதை உள்ளவர்களுக்கு அந்தப்பராதீனம் பாதிக்காதென்று அதாவது அந்தப் பராதீனத்தை நிராகரித்து சொத்தை ஏலம் போட்டு பாக்கித்தொகையை வசூலித்

தாக்கொள்ளலாமென்று வி. பி. வி. 64-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஜப்தியை அனுசரித்து சொத்தின்பேரில் தொடர லாயக்குள்ளவர்களில் ஜப்தி செய்த டிக்கிரீ பாக்கிதார்களுடன், வசூலாகும் தொகையில் பங்கு விகிதத்தை அபேக்ஷிக்கிற டிக்கிரீ பாக்கிதார்களும் அவ்வித சிலாக்கியத்தைப் பெற நியாயமுண்டென்று 64-வது பிரிவின் வியாக்கியானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பங்கு விகிதம் வேண்டுமென்று கேட்கிற டிக்கிரீபாக்கிதாரன் ஜப்திக்குப்பின்னும் பிரதிவாதியால் ஏற்பட்ட பராதீனத்திற்குப்பின்னும் விண்ணப்பம் கொடுத்தால் அந்த டிக்கிரீ பாக்கிதார் பராதீனத்தை நிராகரிக்கமுடியாதென்று இந்தக் கேசில் தீர்மானிக்கப்பட்டது. அதாவது பங்கு விகிதத்திற்காக விண்ணப்பம் கொடுத்தபின் பிரதிவாதி பராதீனம் செய்திருந்தால் மட்டும் அதை நிராகரிக்கும் சிலாக்கியமுண்டு. [டிக்கிரீ பெற்றவன் ஜப்தியும் செய்யாமல் வேறு டிக்கிரீ பாக்கிதார் ஜப்தி செய்தபின் பிரதிவாதியால் பராதீனம் ஏற்பட்டு அதற்குப்பின் ஷை டிக்கிரீ பாக்கிதார் தனக்கும் பங்கு விகிதம் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் பிரதிவாதியின் பராதீனத்தை ஷையார் நிராகரிக்க நியாயமில்லையென்று இதனால் ஏற்படுகிறது.]

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S A 1264 of 1913-16 செப்டெம்பர் 1914.

ஒருவனுக்குச் சேரவேண்டிய தொகையை டெண்டர் செய்யவேண்டிய கடமை சில சமயங்களில் ஏற்படுமாதலால் தபால் மூலமாய் அனுப்பும் கடிதத்தில் தொகையை டெண்டர் செய்வதாய்ச் சொன்னால் அது சரியான டெண்டரல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

S A 1045 of 1912-10 செப்டெம்பர் 1914.

மகம்மதியலாப்படிக்கு பாட்டன் தன்னுடைய ஸ்தாவர சொத்தை மைனராகிய பேரப்பிள்ளைக்கு ஷை மைனரின் தகப்பனுடைய ஜீவியகாலத்தில் நன்கொடை யளித்தால் சொத்தை எவ்விதமாய் சுவாதீனம் செய்து கொடுக்க சாத்தியமாகுமோ அவ்வண்ணமாக சொத்தை சுவாதீனம்செய்து கொடுக்காத பட்சத்தில் நன்கொடை செல்லத்தகாதென்றும், சுவாதீனத்தைத் தான் ஒப்புக்கொடுக்க எண்ணங் கொண்டிருப்பதாய்ச் சொல்லி அதை மைனருக்கு அற்பிதம் செய்தால் போதாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தவிர ஒரு மகம்மதியன் தாவா சொத்துக்களுக்குத் தான் சொந்தக்காரனென்று சொல்லி அதை வாதிக்கு அடமானம் வைத்து வாங்கிய கடனை அடைக்காத காரணத்தால் வாதி ஷையான்பேரில் பிராது செய்ததில் அந்த மகம்மதியனுடைய தகப்பன் அடமானத்தை ஆக்ஷேபித்து ஷை சொத்தானது தன்னுடையதென்றும் தன்மகன் அதை அடமானம்வைக்க லாயக்கில்லையென்றும் தானா அடமானம் தன்னைக்கட்டுப்படுத்தாதென்றும் எதிரான்ஸர் கொடுத்து வியாஜ்ஜியம் முடிவாகு முன் காலஞ்சென்றார் அதற்குப்பின் ஷையாருக்கு வாரிஸ் ஸ்தானத்தையடைந்த மகன் அடமானம் எழுதிக் கொடுத்தவனாயிருக்க பிராபர்டி ஆக்ட் 43-வது பிரிவின்படி மகன் தகப்பனுடைய கக்ஷியைத் தொடர்ந்து நடத்தி அடமானத்தை நிராகரிக்க நியாயமில்லையென்றும் வாதிக்கு அடமானத்தை மீட்டுக்கொள்ளும்படி டிக்கிரீயளிக்க நியாயமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———

ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே

S. A. 467 of 1913-9 செப்டெம்பர் 1914.

ஒரு ஹிந்து விதவை செய்யும் சொத்து விக்கிரயத்தை பிரதிப்பிரயோஜனமில்லாதசந்தர்ப்பத்திலும் கூட அனந்தர வாரிஸ்களல்லாத வேறு யாரும் ஆக்ஷேபிக்க லாயக்கில்லையென்றும், சொத்து பாத்தியஸ்தனிடமிருந்து கிரயம்பெற்றவன் சுவாதீனத்திலிருக்கும் அந்நியன்பேரில் இஜெக்ட்மெண்டு பிராது கொடுத்தால் விக்கிரயம் பலந்தமானதென்றும் அதனால் வாதிக்கு (கிரயதாரனுக்கு) யாதொரு பாத்தியதையும் ஏற்படவில்லையென்றும் அவ்வந்நியன் ஆக்ஷேபனை செய்யத்தகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———



ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

S. A. 2203 of 1912-26 ஆகஸ்ட் 1914

ஒரு தேவஸ்தானத்துக்குரிய நிலங்களை பிரதிவாதிக்குக் குத்தகைக்கு ஒப்படைத்திருந்து, அந்த வாய்தா கடந்தபின் 6-தர்மகர்த்தாக்களில் ஒருவருடைய ஆலோசனையையும் அபிப்பிராயத்தையும் கலக்காமல் மற்ற தர்மகர்த்தாக்கள் அதே பிரதிவாதிக்குக்குத்தகையைப்புதுப்பித்து விட்டமையால் இந்த ஏற்பாட்டை அங்கீகரிக்காத ஒரு தர்மகர்த்தா மட்டும் வாதியாக பிரதிவாதியை முதல் குத்தகை வாய்தா கடந்துபோன காரணத்தால் ஷை நிலங்களின் அனுபோகத்திலிருந்து இஜெக்ட் செய்யும்பொருட்டு செய்த தாவாவில் மற்ற தர்மகர்த்தாக்கள் வாதிகளாய்ச்சேர மனமில்லாதபடியால் அவர்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட்டிருந்தது. வாதி மற்ற தர்மகர்த்தாக்களிடம் கலந்துகொள்ளாமல் இந்த தாவா செய்தது பிசகென்று அபிப்பிராயப்பட்டு ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தது பிசகென்றும் வாதியைக் கலக்காமல் மற்ற தர்மகர்த்தாக்கள் குத்தகைச்சீட்டைப் புதுப்பித்தமையால் வாதி மற்ற தர்மகர்த்தாக்களைப் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து இந்த தாவாசெய்தது நியாயமென்று 30 மதராஸ் 406ஐ அனுசரித்துத் தீர்மானித்து ஜில்லாகோர்ட் தீர்மானத்தை ரத்து செய்துவிட்டார்கள்.

———

ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் ஹான்னே

Crl. R C. 131 of 1914-7 செப்டெம்பர் 1914

அபின் வியாபார விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சட்டத்தின் 9வது பிரிவின்படி லைஸென்ஸ் இல்லாமல் 24-மணி நேரம் வரையில் அபின் மருந்தை வைத்துக்கொண்டிருப்பது குற்றமாகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

சீவ்ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யர்

A S. 52 of 1911-7 செப்டெம்பர் 1914

வாய்மொழியான உயிலை ஆதாரமாகக்கொண்டு வழக்காடுகிறவன் உயிலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் மிகவும் தெளிவாகவும் விவரமாகவும் கண்டிப்பாகவும் நேர்மையோடும் ருஜூப்படுத்த வேண்டும். [அதாவது உயிலின் வசனங்கள் சொல்லப்பட்ட சமயம் இடம் சந்தர்ப்பம் இன்னும் பற்பல சம்பாவிதங்களையும் நிராக்ஷேபனையாக நம்பத்தக்க விதமாக ஒவ்வொரு அம்சத்தைப்பற்றியும் ருஜூப்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.]

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவயயர்

Crl R. Case 201 of 1914-10 செப்டம்பர்1914

ஒரு மேஸ்திரியின் கீழ் ஷையானுடைய உத்தரவுக்குள்பட்டு வேலை செய்கிற ஒரு கூலிக்காரன் மேஸ்திரியின் எதிரில் தரையில் குழிதோண்டும்பொழுது புதையல் அகப்பட்டால் அந்தக் கூலியானவன் அந்தப்புதையலைக் கண்டு பிடித்தவனென்று பாவிக்கப்பட வேண்டுமென்றும் கண்டெடுக்கப்பட்ட சொத்தை அப்புறப்படுத்தவும் அல்லது அதன்பேரில் எவ்வித அதிகாரமும் செலுத்தவும் யோக்கியமில்லாத போனாலும் பொக்குஷத்தைக் கண்டெடுத்தவனுக்குரிய சட்டவிகிதமான லாபம் அந்தக்கூலிக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

———

சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ் & சேஷகிரி அய்யர்-J

(நெல்லூர் ஜில்லா)

A. S. No. 121 of 1911—7 ஆகஸ்ட் 1914.

ராகவலு செட்டி vs பெல்லாடி சீதம்மா

மானேஜ்மெண்டு குறைவால் வி. பி. வி. 92-வது பிரிவின்படி தர்மகர்த்தாக்களை விலக்கக் கோரும் தாவாவில் ஷையார்களிடம் நிலத்தை குத்தகைக்கு வாங்கி அனுபவிக்கிறவர்களைப் பார்ட்டியாக சேர்க்கலாமா?

ஒரு தேவாலயத்தில் ஸ்வாமி தரிசனம் செய்து வருகிற பக்தர்களில் இருவர் வி. பி. வி. 92-

வது பிரிவின்படி 1-2 பிரதிவாதிகளாகிய தர்மகர்த்தாக்கள்பேரில் புகார் சொல்லி அவர்கள் கோவிலின் நிலங்களை 3-4 பிரதிவாதிகளுக்கு குறைந்ததீர்வைக்கு நீடியகாலத்திற்குக் குத்தகைக்கு ஒப்படைத்தது பிசகென்றும், அவர்கள் தங்கள் உத்தியோகத்தை உண்மையாக நடத்தி வருகிறதில்லையென்றும் ஆகவே அவர்களை தர்மகர்த்தா உத்தியோகத்திலிருந்து நீக்கி வேறு தர்மகர்த்தாக்களை நியமனம் செய்ய வேண்டுமென்றும், கோவிலில் மானேஜ்மெண்டு விஷயமாய் புதியரூல்ஸ் ஏற்படுத்தவேண்டுமென்றும், 3-4-ம் பிரதிவாதிகளுக்கு ஒப்படைத்த குத்தகைச் சீட்டு தேவஸ்தானத்தைக் கட்டுப்படுத்தாதென்று டிக்லேரேஷன் டிக்கிரீயளித்து அந்த சொத்துக்களைத் தங்களுக்கு சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும், ஜில்லா கோர்ட்டில் பிராது கொடுத்தார்கள்.

ஜில்லாகோர்ட்டார் 1-2-பிரதிவாதிகளின் நடத்தையானது நம்பிக்கைமோசமானதென்றும், அநேக சந்தர்ப்பங்களில் மிகவும் பிசகான காரியங்களைச் செய்திருக்கிறார்களென்றும் தீர்மானித்து அவர்களை உத்தியோகத்திலிருந்து விலக்கி வேறு தர்மகர்த்தாக்களை நியமிக்கும்படி டிக்கிரீயளித்து, 3-4-பிரதிவாதிகளை இந்தப்பிராதில் பார்டிகளாய்ச் சேர்த்தது பிசகென்று சொல்லி, அவர்களைப்பற்றினமட்டில்வாதிக்குயாதொரு பரிகாரமும் அளிக்காமல் பிராதை செலவுடன் டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில்,

சீப் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் அளித்த தீர்ப்பின் சுருக்கமாவது:—

3-4 பிரதிவாதிகளை இந்தப்பிராதில் பார்ட்டிகளாய்ச் சேர்த்தது சரியாவென்றும் அவர்களைப் பொருத்தமட்டில் வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்தது நியாயமாவென்றும் இந்த அப்பீலில் தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும். ஸி. பி. ஸி. 92-வது பிரிவின்படி செய்யும் தாவாவில் 3, 4 பிரதிவாதிகளைப் போலொத்த நிலைமையுள்ளவர்கள் பேரில் வாதிக்கு சுவாதீன டிக்கிரீயளிக்கக் கூடாதென்று பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த தாவாவில் அவர்கள் பேரில் யாதொரு பரிகாரமும் வாதிக்கு அளிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். அவர்கள்பெற்ற குத்தகைச்சீட்டு தேவஸ்தானத்தைக் கட்டுப்படுத்தாதென்ற டிக்லேரேஷன் பரிகாரம் ஒன்றுமட்டில் அளிக்கவேண்டுமென்று வாதிக்காகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. டிக்லேரேஷன் டிக்கிரீயளிக்கலாமென்றால் அவர்கள்பேரில் சுவாதீனடிக்கிரீயும் அளிக்க நியாயமாகும். ஆகவே இருவித பரிகாரமும் அவர்கள்பேரில் வாதிக்குக் கிடையாதென்றே சொல்லவேண்டும்.

அப்படியானால் வாதி அவர்களைப் பார்டியாகச் சேர்த்தது பிசகா இல்லையாவென்று தீர்மானிக்கவேண்டியதாகும். யாதொரு பரிகாரமும் கிடைக்கத்தகாத பட்சத்தில் அவர்களை வாதி பார்ட்டிகளாய்ச் சேர்த்தது சரியா அல்லது தப்பாவென்று தீர்மானிக்கவேண்டும். வாதிக்காக 28 அலகபாத் 112ம், 35 பம்பாய் 470-ம் எடுத்துக்காட்டப்பட்டது, எதிர் தரப்புக்கு 2 கல்கத்தா லா ஜர்னல் 431-ஐ எடுத்துக்காட்டப்பட்டது. 2 கல்கத்தா லா ஜர்னலில் தீர்மானித்திருக்கிறபடி 3-4-பிரதிவாதிகளைப் பார்ட்டிகளாய்ச் சேர்த்தது பிசகென்று சொல்லவேண்டும். அவர்கள் தங்களைப் பார்ட்டியாகச் சேர்க்கவேண்டுமென்று கோரிக்கொண்டிருந்தால் அவ்விதமாய் சேர்க்க உத்தரவளிக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்குப் பிரியமில்லாதபடி அவர்களைப் பார்ட்டியாய் சேர்த்ததினால் அநேகவிதமான விவாதங்கள் புதிதாய் ஏற்படும். அவைகளைப் பற்றி முடிவான தீர்மானம் கொடுக்க இந்த தாவாவில் சாத்தியப்படாது. அவர்களுக்குரிய பாத்தியாபாத்தியங்களைப்பற்றி 92-வது பிரிவின்படி செய்யப்படும் இந்தப்பிராதில் சரியானபடி தீர்மானிக்க முடியாது. ஒரு பாக வியாஜ்ஜியத்தில் குடும்ப சொத்தைப் பராதீன மடைந்தவர்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்த்து அவர்களுடைய பாத்தியா பாத்தியதையைப்பற்றி சுலபமாய்த் தீர்மான மடையக் கூடும். இத்தவிதமான தாவாவில் குத்தகைதாரர்களும் மற்றப்படி சொத்தை அடைந்து அனுபவிக்கிறவர்களும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்பட்டால் அவர்களின் பாத்தியதையைப்பற்றி விசாரணை செய்யவே சந்தர்ப்பம் கிடைக்காது. ஆகையால் 3-4 பிரதிவாதிகளைப் பார்ட்டியாய்ச் சேர்த்தது பிசகென்ற ஜில்லா கோர்ட் தீர்மானம் சரியென்று இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.



ஆனால் ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் அவர்கள் மாறுன அபிப்பிராயங்கொண்டு 3, 4, பிரதிவாதிகள் அவசியமான பார்ட்டிகளல்லாதபோதிலும் அவர்களைப் பார்ட்டியாகச் சேர்த்தது பிசகல்லவென்று சொல்லி அவர்களைப் பற்றினமட்டில் பிராதை செலவுடன் தள்ளுபடிசெய்தது பிசகென்று அபிப்பிராயப்பட்டார்கள். அதற்குக் காரணமாகச் சொன்னதாவது:—

குத்தகைச் சீட்டுகள் தேவஸ்தானத்தைக் கட்டுப்படுத்தாதென்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்க வாதிகளுக்கு தாவா சொத்துக்களைப்பற்றி சுவாதீன டிக்கிரீயளிக்கவேண்டியது அவசியமாகுமென்று வாதிக்கப்படுகிறது. எல்லா ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் சட்டப்படி தர்மகர்த்தா உத்தியோகத்தை வகித்துவருகிறவர்களுக்கு மட்டும் சுவாதீன டிக்கிரீயளிக்கலாமேயொழிய மற்றவர்களுக்கு அவ்வித டிக்கிரீ யளிக்கக்கூடாதென்றும், 92-வது பிரிவின்படி டிரஸ்டியை நீக்கவேண்டுமென்று செய்யப்படும் தாவாவில் சொத்தை சுவாதீனமடைந்து அனுபவிக்கிறவர்கள்பேரில் இஜக்ட்மெண்ட் டிக்கிரீயளிக்கக் கூடாதென்றும் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வாதிக்கு சுவாதீன டிக்கிரீயளிக்காதபோதிலும், பின்னால் 1, 2 பிரதிவாதிகள் வியவகாரமாடாதபடிக்கு இந்த டிக்கிரீயிலேயே 3, 4 பிரதிவாதிகளுடைய குத்தகைச்சீட்டு தர்ம சொத்தைக் கட்டுப்படுத்தாதென்று காணப்படலாமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்விதமாய் டிக்கிரீயில் காணலாமென்று முதல் நோக்கத்தில் தோன்றிற்று. அதாவது 92வது பிரிவின் கிளாஸ் (h)-ல் கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோன்றும் வேறு எந்த பரிகாரமும் அளிக்கலாமென்று சட்டமிருப்பதால் அந்த அதிகாரத்தைச்செலுத்தி மேற்கண்ட விஷயத்தையும் டிக்கிரீயில் காணலாமென்று தோன்றிற்று. அன்றியும் 31 மதராஸ் 212-ன் 214-ம் பக்கத்தில் ஏற்பட்டிருக்கிற தீர்மான அபிப்பிராயம் ஞாபகத்தில் வைக்கப்பட்டு அவ்வித தோற்றமுண்டாச்சுது. ஆனால் 31 மதராஸ் கேஸின் தன்மையை நன்றாய் கவனித்துப் பார்த்ததில் டிரஸ்டி உத்தியோகம் பார்க்கிற ஒருவர் வாதியாக மற்ற டிரஸ்டிக்களின்பேரில் தாவா செய்ததில் தர்ம சொத்தை வாதியின்வசம் ஒப்புவிக்கலாமென்று டிக்கிரீயளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சுவாதீன டிக்கிரீயானது டிரஸ்டியாகிற ஸ்தானத்திலிருக்கிற வாதிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமே. இந்தக்கேஸில் வாதிகள் டிரஸ்டிகள் அல்ல. ஆகையால் 31 மதராஸ் தீர்மானத்தை உத்தேசித்து வாதிக்கு சுவாதீன டிக்கிரீயளிக்கலாமென்று சொல்லத்தகாது. அந்தக்கேஸில் டிக்லேரேஷன் பரிகாரத்திற்குச் சம்பந்தப்பட்ட நியாயமாக சுவாதீன டிக்கிரீ மதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு டிரஸ்டியை விலக்கவேண்டுமென்ற தீர்மானத்தால் சொத்து சுவாதீனம் வாதிக்கு அளிக்க நியாயமேற்பட்டது. அதில் வாதியும் ஒரு டிரஸ்டியாக இருந்தார். ஆகவே அந்தக்கேஸை ஆதாரமாகக்கொள்ளவே நியாயமில்லை. 3-4 பிரதிவாதிகள்பேரில் குத்தகைச்சீட்டு விஷயமாய் டிக்கிரீயில் யாதொரு டிக்லேரேஷன் பரிகாரம் அளிக்கக்கூடாதென்று சொல்லவேண்டும்.

அவர்கள்பேரில் யாதொரு பரிகாரமும் வாதிக்கு ஏற்பட நியாயமில்லாவிட்டாலும் அவர்களை அனாவசியமாய் இந்தப் பிராதில் பார்ட்டியாகச் சேர்த்த காரணத்தால் வாதியின் பிராதை அவர்களைப் பொருத்த மட்டில் செலவுடன் தள்ளுபடிசெய்தது நியாயமாவென்று கவனிக்கவேண்டும். அதாவது 3, 4 பிரதிவாதிகள் சேர்க்கத்தகாத பார்ட்டிகளா அல்லவாவென்று கவனித்துப் பார்க்கவேண்டும். இந்தப் பாயின்டைப்பற்றித் தீர்மானங்கள் ஒரேவிதமாய் இல்லை. ஒரு பிராதில் யாரைப் பார்ட்டியாகச் சேர்க்கவேண்டுமென்ற முறை விதியானது ஸி. பி. ஸி. ஆர்டர் 1, II இவைகளில் ஏற்பட்டிருக்கின்றது. 92-வது பிரிவின்படிசெய்யப்படும் பிராதுக்கும் அதேவிதிகள் அனுஷ்டிக்கத்தகுமேயொழிய அதற்காகப் பிரத்தியேகமான சட்ட விதி ஏற்படவில்லை. பார்ட்டிகளை வாதியாகவும் பிரதிவாதியாகவும் சேர்க்கவேண்டிய விஷயத்தில் ஸி. பி. ஸி. ஆர்டர் 1-ரூல் 10-ல் கோர்ட்டாருக்கும் பார்ட்டிக்கும் போதுமானமட்டில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "யாரைப் பார்ட்டியாகச் சேர்க்கவேண்டியதவசியமோ அவரையும், தாவாவில் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட வியவகாரங்களைப் பரிபூரணமாய் விசாரணைசெய்து பைசலளிப்பதற்கு யாருடைய சமூகமானது கோர்ட்டில் அவசியமாகுமோ அவர்களையும் வாதியாகவும் அல்லது பிரதிவாதியாகவும் சேர்க்கலாமென்று 10-வது ரூல் 2-வது உட்பிரி

வில் சொல்லியிருக்கிறது. 3, 4 பிரதிவாதிகளைப் பார்ட்டியாகசேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி வாதி கோர்ட்டாரிடம் விண்ணப்பம் கொடுக்கலாமென்றால், ஆதியிலேயே அதாவது பிராது எழுதும்பொழுதே அவர்களைப் பார்ட்டியாகச் சேர்ப்பதில் முறைத்தப்பு ஒன்றுமில்லையென்று சொல்லவேண்டும். தப்பான நடத்தையுள்ள டிரஸ்டீ தர்ம சொத்தைஒருவனுக்குப் பராதீனம் செய்துவிட்டால் மேற்கூறிய சட்ட விதிப்படி பாராதீனமடைந்தவனைப் பிரதிவாதியாகச்சேர்ப்பது மிகவும் உசிதமான காரியமாகும்.

அவனைப் பார்டியாக சேர்க்காமல் சாட்சியாக விஜாரிக்கலாமே யென்று சொல்லப்படுகிறது. சாட்சியாக விஜாரித்தால் கோர்ட்டார் சரியான தீர்மானமடைய முடியாதென்று சொல்லவேண்டும். அவனைப்பார்ட்டியாகச் சேர்த்து அவனுடைய சாட்சிகளையும் விஜாரித்து அவனுடைய வக்கிலின் ஆர்கியுமெண்டையும் கேட்டுத்தான் கோர்ட்டார் சரியான தீர்மானமடையக் கூடுமென்று சொல்லவேண்டும். (டிரஸ்டீயின் நடத்தை சரியா அல்லவாவென்று தீர்மானிப்பதற்கு ஷை நடத்தையில் சம்பந்தப்பட்டவனைப் பார்ட்டியாகச் சேர்த்து அவனுடைய ஆக்ஷேபனை சமாதான நியாயங்களைக் கேட்டறிவது மிக்க அவசியமாகும்.) குற்றம் சாட்டப்படும் டிரஸ்டியாகிய பிரதிவாதிக்குத்தான் செய்த பராதீனத்தைக் காயப்படுத்தும் அக்கரை அவ்வளவாயிராது. அவர் சாட்சியம்சமும் விடாமல் அஸ்வாரஸ்யமாய் இருக்கக்கூடும். அப்படியிருக்க அந்த டிரஸ்டீயின் நடத்தை சரியானதென்று ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு பராதீனம் பெற்றவன் பேரில் ஏற்படும். அப்படிப்பட்டவனைப் பார்ட்டியாகச் சேர்க்காவிட்டால் இந்த வழக்கில் ஒருவிதமான தீர்மானமும், பராதீன விஷயமாய்ப் பின்னால் ஏற்படும் வழக்கில் ஒருவித தீர்மானமும் ஒன்றுக்கொன்று வித்தியாஸமாய் ஏற்பட நேரிடும். 92-வது பிரிவின்படி செய்யும் தாவாவில் டிரஸ்டியின் நடத்தை பிசகென்று ஏற்பட்டு அவரை விலக்கும்படி டிக்கிரியாகலாம். பின்னால் பராதீனம் பெற்றவனிடமிருந்து சுவாதீனமடையும்பொருட்டு தாவா செய்தால் பராதீனம் சரியானதென்று ஏற்படக்கூடும், ஆகவே ஒரே விஷயமாய் வித்தியாஸமான தீர்மானங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்ப முண்டாகும். இவ்வித அசந்தர்ப்பத்தை விலக்கும்பொருட்டு பராதீனம் பெற்றவனையும் முதல் பிராதில் பார்ட்டியாகச் சேர்த்து அவர் முன்னிலையில் டிரஸ்டியின் நடத்தையைப்பற்றி நியாயம் தீர்க்கப்பட்டால் அது உத்தமமான முறையாகும். இப்படிச் செய்யப்படும் தீர்மானம்பிந்திய வழக்குக்குரிஜுடிகேடாயாகுமாவென்று தீர்மானிக்கவேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமலே முதல் பிராதில் பராதீனக்காரனைப் பார்டியாகச் சேர்த்துக் கொடுக்கப்பட்ட தீர்மானம் பிந்திய வழக்குக்கு முக்கியமானருஜு அம்சமாக உதவக்கூடுமென்று சொல்லத்தகும். பராதீனம் பெற்றவனைப் பார்டியாகச் சேர்க்கவேண்டியது கட்டாய மில்லாவிட்டாலும் அவனைப் பார்ட்டியாகச் சேர்த்தது சரியல்லவென்று சொல்லத்தகாது. அவன் சரியான பார்ட்டியென்று சொல்லவேண்டும். இந்த அபிப்பிராயப்படியே 28 அலகபாத் 112, 35 பம்பாய் 470, 24 கல்கத்தா 418 இவைகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 2 கல்கத்தா லா ஜர்னல் 431-ல் ஜஸ்டிஸ் மூகர்ஜியவர்கள் 24 கல்கத்தா 418-ஐ அனுசரிக்கமனயில்லாமல் தர்மத்திற்கு விரோதமாக பாத்தியங்கொண்டாடுகிற பராதீனக்காரர் சரியான பார்டிகளல்லவென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் ஜஸ்டிஸ் மூகர்ஜீயவர்கள் ஸி. பி. ஸி. ஆர்டர் 1-ரூல் 10-ன் அம்சத்தைக் கவனிக்கவில்லையென்று சொல்லவேண்டும். அவர்களுடன் கூட ஷை கேஸை ஈரங்கிகேட்ட ஜஸ்டிஸ் ஹாரிங்டன் துரையவர்கள் பராதீனம்பெற்றவர்களை சரியான பார்ட்டிகளல்லவென்று சொல்லவில்லை. நீதி முறையையும் சவுகரியத்தையும் உத்தேசித்து பராதீனம் பெற்றவர்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்ப்பதே உசிதமென்று சொல்லவேண்டும். ஜில்லா ஜட்ஜீயவர்கள் 3-4 பிரதிவாதிகள் விஷயமாய் அளித்த டிக்கிரியின் பாகமானது தள்ளுபடியாகவேண்டியதென்று அபிப்பிராயங்கொடுத்தார்கள்.

இது விஷயமாய் இரண்டு நியாயாதிபதிகளும் வித்தியாஸமான அபிப்பிராயங்கொடுத்தமையால் ஜில்லாகோர்ட்டாருடைய தீர்மானமே காயமாச்சுது.

(இது விஷயமாய் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல்செய்யப்படலாம்.) XXVII M L J 266

---



ஜஸ்டிஸ் பேக்வெல்.

C. S. 132 of 1913-8 செப்டெம்பர் 1914.

பிராது சம்மன்ஸ் பிரதிவாதிக்குஸர்வாகி எதிர் ஆன்ஸர் தாகலானபிறகு இஷுவுக்காக ஈரங்கி நடந்த காலத்தில் வாதிக்கு தாவா செய்ய வியாஜ்ஜிய மூலமே கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டு வாதியின் பிராது செலவுடன் டிஸ்மிஸ் செய்யப்பட்டதில் ஹைகோர்ட் அசல் தரப்பின் வழக்கப்படி செலவு தொகையை கணிக்க அதிகாரம்பெற்ற ரெஜிஸ்டிராரவர்கள் பிரதிவாதிக்கு சேர்ந்த வக்கில் பீஸ் தொகையை மாமூல்படி 100-க்கு 5 விழுக்காடு டிக்கிரியில் அளிப்பதற்கு பதிலாக 100-க்கு 2½ விழுக்காடு வக்கீல் பீஸ் தொகையை வாதி பிரதிவாதிக்குச் செலுத்த வேண்டுமென்று தீர்மானித்தார். அந்தவிதமாய் குறைத்தது சரியல்லவென்று பிரதிவாதி ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்களிடம் ரிவியூ விண்ணப்பம் கொடுத்துக் கேட்டுக்கொண்டதில் தாவாவில் சாட்சி விஜாரணை நடக்காமலும் ஆதாரமான தஸ்தவேஜுகள் யாதொன்றும் தாகல் செய்யப்படாமலும் இஷு ஏற்படுத்தப்படுமுன் பிராது டிஸ்மிஸ் செய்யப்பட்டபடியால் விவாதத்தின் பேரில் கேஸ் பைசலாச்சுதென்று பாவிக்கத்தகாதாகையால் பிரதிவாதி வக்கில் பீஸ் பூராவுக்கும் வாதியின்பேரில் டிக்கிரிபெற நியாயமில்லையென்று சொல்லி ரிவியூ விண்ணப்பத்தை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள்.

:O:

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 164 of 1911-10 செப்டெம்பர் 1914

ஒரு ஸ்வீகாரபுத்திரன்ஸ்வீகாரத்தாயாருக்குத் தன்னைஸ்வீகாரம்எடுத்துக்கொள்ளவேண்டுமென்றவிருப்பத்தை உண்டாக்கும்பொருட்டுஷையாளுடைய தகப்பன் பேருக்கு ஒரு பிராமிஸரி நோட் எழுதிக்கொடுத்தால் அந்த நோட்டின் தொகையைச்செலுத்தும்படி ஸ்வீகாரப் புத்திரன்பேரில் கோர்ட்டார் டிக்கிரியளிக்க நியாயமில்லையென்றும் அப்படிச் செய்தால் ஜனப்பொது நலத்திற்கு விரோதமான காரிமாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டு பிராமிஸ்ரிநோட்டின்பேரில் செய்யப்பட்ட தாவா தள்ளுபடியாச்சுது.



ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

Crl R. Case 49 of 1914-21 செப்டெம்பர்1914

ஒரு குற்றத்தைப்பற்றி பிரதம விஜாரணையில் சம்பந்தப்படாத போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு கேஸை நடத்திவரும்பொழுது சோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் கேஸை உவுதடிரா செய்து கொள்ளலாமென்றும் கவர்ன்மெண்டாருடைய விளம்பரத்தால் பிராஸிக்யூடிங் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் இதரமான போலீஸ் உத்தியோகஸ்தர்களிடமிருந்து நீக்கப்படவில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

:O:

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

S. A. 884 of 1913-8 செப்டெம்பர் 1914

ஒரு ஹிந்து விதவையானவள் தன் கணவனுடையசொத்தை தன்கணவன் கூடப்பிறந்தமைத்துனனுடையகுமாரத்திகளுக்குவிவாகமாகி வெகு காலத்திற்குப்பின் நன்கொடையளிக்க லாயக்குள்ளவளல்ல. அவ்வித நன்கொடை செல்லத்தகுமென்று எண்ணி ஷை சொத்தின்பேரில் சொந்தம் பாராட்டி யாதொருவன் அதை விருத்தி செய்திருந்தால்விருத்தியம்சத்தால் சேர்ந்த செலவைத் திரும்பியடையப் பாத்திரனாகிறானென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்.

தஞ்சாவூர் ஜில்லா

A. S. No. 189 of 1909—10 ஆகஸ்ட் 1914

அடைக்கலம் செட்டி vs சுப்பன் செட்டி.

அவிபக்தன் தன்பேருக்கு எழுதிவாங்கின அடமான தஸ்தவேஜின் பேரில் செய்யும் தாவாவில் மற்ற பாகஸ்தர்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை பிரதி பிரயோஜனம் செலுத்தாமல் மேடோவர் வாங்கினவர் செய்யும் தாவாவில் அடமான பாக்கிதார் மேடோவர் செல்லாதென்று ஆக்ஷேபிக்கத்தகாது.

வாதி அடைக்கலஞ் செட்டி 1-ம் பிரதிவாதியால் 1895-ல் தன் பேருக்கு 'எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான தஸ்தவேஜில், கண்டபாகு

ரூ13,000-யும் அதற்குப்பின் 1898-ல் அதே சொத்தை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கும் ரங்கஞ்செட்டி, வேலாயுதஞ் செட்டி என்ற மூவருக்கும் எழுதிக்கொடுத்திருந்த அடமான பாத்தியதையில் ரங்கஞ் செட்டி, வேலாயுதஞ் செட்டி என்ற இருவர்களுடைய பாகத்தைவாதி மேடோவர் வாங்கிக்கொண்டபடியால் அந்த அடமானத்துக்கு ரூ 4000 தனக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் சேரவேண்டியதாகுமென்றும் ஆனல் தானும் 2-ம் பிரதிவாதியும் அவிபக்தர்களாய்ப் போனதாலும் அந்தத் தொகை தன்னுடைய சொந்தமானதென்றும் சொல்லி அந்த ரூ 4000-யும் சேர்த்து அடமான சொத்தை லெம்போட்டு வசூலிக்கும் பொருட்டு தஞ்சாவூர் சப்கோர்ட்டில் அசல் தாவா செய்தார்.

பிரதிவாதிகள் தங்கள் ஜவாப்பில் (1) வாதி அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும் தாவாக்கடன் தொகை குடும்பத்தைச் சேர்ந்த மெம்பர்களெல்லாருக்கும் சேரவேண்டியதாகுமென்றும் ஆகவே மற்ற மெம்பர்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்க்காமல் வாதி மட்டும் இந்தப்பிராது செய்ய நியாயமில்லையென்றும், (2) தாவா தஸ்தவேஜுகள் போக்கிய பத்திரங்களானதால் சொத்து வருமானத்திலிருந்து கடன் தொகை திருப்பட்டு சொத்தானது வாதியின்வசமே இருக்கவேண்டுமாகையால் அந்த சொத்துக்களை லெம்போட்டு கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு தாவா செய்யக் கூடாதென்றும், (3) வாதியின் தாவா வசூலுக்கு காலவதி தோஷமென்றும் ஆக்ஷேபித்தார்.

முதல் அடமானத்தொகையை வாதி குடும்ப பண்டிலிருந்து கொடுத்திருந்ததாகவும், வாதி தன் பேருக்கே எழுதி வாங்கினபோதிலும் அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்ததாக பாவித்துக்கொண்டதாகவும் ரங்கஞ் செட்டி என்ற மேடோவர்தார் யாதொரு பிரதிப்பிரயோஜனம் பெறாத காரணத்தால் அந்த மேடோவரே செல்லாதென்றும், தாவா தஸ்தவேஜுகளில் தொகையை கொடுத்துவிட்டதாய் வரவுகள் ஏற்பட்டிருப்பதால் அவைகள் போக்கிய தஸ்தவேஜுகள் அல்லவென்றும் பிராதுக்கு காலாவதி தோஷம் கிடையாதென்றும் அபிப்பிராயப்பட்டு ஆனல் மற்ற பாகஸ்தர்களையும் வாதிகளாய்ச் சேர்த்துக்கொண்டு வாதி இந்தப் பிராது தாகல் செய்திருக்கவேண்டியதவசியமென்ற சட்ட பாயிண்டைக் கவனித்து சப்கோர்ட்டார் வாதியின் பிராதை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதி மற்றவர்களைப் பார்ட்டிகளாய்ச் சேர்க்கவேண்டியதவசியமில்லையென்றும் மேடோவருக்குப் பிரதிப் பிரயோஜனமில்லாத போனாலும் அடமான பாக்கிதார் அதைப்பற்றி ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டு சப்கோர்ட் தீர்மானம் ரத்தாகி வாதி கோரியபடி பூராத்தொகைக்கும் டிக்கிரியளிக்கப்பட்டது. 6-மாத காலத்திற்குள் தொகை செலுத்தப்படாத பட்சத்தில் சொத்துக்கள் லெம்போடப்படுமென்று உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:— அடமானத்தின் பேரில் கொடுக்கப்பட்ட கடன் தொகைகள் வாதியின் ஸ்வயார்ஜிதமென்று ரூபிக்கப்படவில்லை. வாதியும் அவனுடைய சகோதரர்களும் ஏராளமான சொத்தையுடைய கூட்டுக்குடும்பமாக இருந்தார்களென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. முதலாவது அடமானம் பிறந்த காலத்தில் வாதிக்கும் மற்ற சகோதரர்களுக்கும் பாகப் பிரிவினையாகிவிட்டதென்றும் ருஜுவாகவில்லை. வாதிக்கு ரூ 13,000 எப்படி கிடைத்ததென்றும் ரூபிக்கப்படவில்லை. முதல் அடமானம் ஏற்பட்ட காலத்தில் வாதி தனியாக வசித்து வந்தாரென்று 2-ம் பிரதிவாதி ஒப்புக்கொள்ளுகிறார். ஆனல் வாதி தனியாய் வசிக்கிற காரணத்தால் பாகமாகாத குடும்ப சொத்தை உபயோகித்து அதில் தன்னுடைய ஸ்வதந்தரமான பிரத்தியேக பாத்தியதையைக் கொண்டாட பாத்தியமுண்டாகாது. குடும்பபண்டிலிருந்து கொடுத்த கடன் தொகையின்பேரில் வாதி பிரத்தியேகமாய் வசிக்கிற காரணத்தால் தனிமையான பாத்தியதையைக் கோர நியாயமில்லை.

ஆனல் மற்ற பாகஸ்தர்களுக்கும் அடமானக் கடன் தொகையில் பங்கு பாகமுண்டென்ற விஷயத்தால் மட்டும் அவர்கள் தாவாவில் அவசியமான பார்ட்டிகளாயிருக்கவேண்டுமாவென்று கவனித்துப் பார்க்கவேண்டும். தஸ்தவேஜில் வாதியின் பெயர்மட்டும் தான் கண்டிருக்கிறது. மற்ற மெம்பர்களுடைய பிரஸ்தாபமே கிடை



யாது. அதையிட்டு வாதிக்காக இரண்டுவிதமான வியவகார நியாயம் எடுத்துச்சொல்லப்பட்டது. (1) வாதி தான் வேறு யாருக்காகவும் நடந்துகொள்வதாயும் மற்றவர்களுடைய பண்டின் தொகையை எடுத்துக்கொடுப்பதாயும் 1-ம் பிரதிவாதிக்கு வெளியிடாமல் தான் மட்டும் நேராக 1-ம் பிரதிவாதியுடன் அடமான உடன்படிக்கை செய்துகொண்டமையால் வெளியிடப்படாத எஜமான்களுக்கு ஏஜண்டு நிலைமையில் வாதி கடன் கொடுத்தாரென்று பாவிக்கப்படவேண்டுமென்றும் (அவ்விதமான ஏஜண்டு தனிமையாக தாவா செய்து வசூலிக்கலாமென்றும்) (2) வாதி சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி குடும்பத்தின் மானேஜரான ஸ்தானத்தில் தாவாக்கடனை கொடுத்து தஸ்தவேஜைத் தன்பேரில் மட்டும் செய்துகொண்டாலும் வாதி (மானேஜர்) மற்றவர்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்க்காமலே தனிமையாக தாவா செய்யலாமென்றும் சொல்லப்படுகிறது.

ருஜு அம்சத்தை கவனித்துப் பார்த்தால் முதலாவது அடமானத்தேதியில் பாகப் பிரிவினை ஏற்படவில்லையென்றும், ஆனல் வாதி தனிமையாய் வசித்து வந்ததாகவும் மற்ற சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்ட பண்டிலிருந்து தாவாக் கடனை கொடுத்து தன்பேருக்குத் தனிமையாய் தஸ்தவேஜு எழுதிவாங்கிக் கொண்டதாகவும், வாதி குடும்பமானேஜராக நடந்துகொள்ளவில்லையென்றும், தாவா அடமான ஏற்பாட்டில்தான் சொந்த பாத்தியதையைப் பாராட்டினரே யொழிய வேறுயாருக்காகவும் பிரதிநிதியாக நடந்துகொள்ளவில்லையென்று சாட்சிபாத்தியங்களினல் விளங்குகிறது. ஒருவன் தன் சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்ட யாதொரு பொருளைத் தன் சொந்தம் போல் பாவித்துத்தன் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்தினல் சகோதரர்களுக்கு அவன் ஜவாப்தாரியாகிறான் என்ற விஷயத்தால் அவர்களைப் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்படாத குறை பிராதைத் தள்ளுபடி செய்வதற்குக் காரணமாகாது. அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனல் யாதொரு குடும்பத்தாருக்கு ஏற்பட்ட அடமானக்கடன் பாபத்தாயிருந்தால் அப்பொழுது மற்ற மெம்பர்களும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்படவேண்டியது நியாயமாகும். வாதி குடும்பத்தொகையைத் தன் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்தி அதனல் ஏற்படும் சொந்த பாத்தியதையை ஒப்பந்தப்படி நிறைவேற்றக் கோரும்பொழுது அவ்வித சொந்த பாத்தியதையைப் பற்றி எதிரி ஆக்ஷேபிக்க நியாயமில்லை. ஒருவன் நேரடியாகத் தன்பேருக்கு தஸ்தவேஜை எழுதிவாங்கிக் கொண்ட சந்தர்ப்பத்தில் அந்த பிறவிதாரும் தனிமையாக தஸ்தவேஜின் பேரில் தாவாசெய்யலாமென்று 24 கல்கத்தா 644-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வாதியின் நிலைமை பிரதிநிதியின் நிலைமையையொத்ததல்ல. 22 மதராஸ் 326-ல் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவன் தன்பேருக்குத் தனிமையாய் எழுதிவாங்கின தஸ்தவேஜின்பேரில் மற்ற பாகஸ்தர்களைப் பார்ட்டிகளாய்ச் சேர்க்கலாமென்பதற்குக் காரணமாக வாதி வேறுயாருக்காகவும் நடந்ததாகக் காணப்படாதபடியால் தான் தன்பேருக்கு நேரில் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தனிமையாய் நிறைவேற்றலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே வித அபிப்பிராயம் (1911) 2 மதராஸ் வாரக்குறிப்புகளின் 395-ல் பிரசுரமான [illegible] கேஸில் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வாதி தனிமையாய் வசித்தபோதிலும் குடும்பப் பணத்தை உபயோகப்படுத்தினபடியால் குடும்பத்தாருக்கு பாதகமாக வாதி நடந்தாரென்றும் ஆகவே 1-ம் பிரதிவாதி குடும்பத்தார் அனைவரோடும் ஒப்பந்தம் செய்துகொண்டதாக பாவிக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. வாதி பாதகமாக பாவிக்கப்படலாமென்றாலும் வாதி தான் மற்ற குடும்பஸ்தர்களுக்காக நடந்ததாய் வெளியிடாத காரணத்தால் வாதிதானே தனிமையாக தாவா செய்யலாமென்று சொல்லவேண்டும். 6 கல்கத்தா 739-ல் வாதி தான்மட்டும் ஒப்பந்தம் செய்துகொண்டமையால் தனிமையாய் தாவா செய்ய லாயக்கென்று சொல்லாமல், மற்ற மெம்பர்களுக்காகத் தான் நடக்கிறதாகத் தெரிவிக்காமல் மறைவடமான முதலாளிகளுக்காகத் தான் நடந்தமையால் தான் தனிமையாய்ப் பிராது செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 22 மதராஸ் கேஸிலும் 7 கல்கத்தா கேஸானது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது 27 அலகபாத் 361-ஐப் பார்க்கவும். தவிர வாதி குடும்பப்பணத்தைக் கொடுத்துத் தன்பேருக்குத் தனிமையாய் தஸ்தவேஜை எழுதிவாங்கும்பொழுதுதான் மற்றவர்களுக்காகப் பகிரங்கமாய் வெளியிட்

டிருக்கமாட்டாரென்று அனுமானிக்கவேண்டும். அடமான காலத்தில் வாதி மற்றவர்களுக்கும் அடமானத்தொகையில் பாத்தியமிருப்பதாக 1-ம் பிரதிவாதியிடம் சொன்னதாகக் காணப்படவில்லை. மற்றவர்களுக்காக வாதி அடமான நடவடிக்கை செய்தாரென்ற ருஜுபாகம் வேறு யாதொன்றும் காணோம். அதைப்பற்றி ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு பிரதிவாதியைசசேர்ந்ததாகுமென்று 7 கல்கத்தா 739-லும் 27 அலகபாத் 361-லும் சொல்லியிருக்கிறது. பிரதிவாதியால் அவ்வித ருஜுபாகம் ஏற்படவில்லை. வாதி குடும்ப மானேஜராக நடந்தபோதிலும் 1912 M W N 895ல் பிரிவிகௌன்வில் கேஸை அனுசரித்துத் தனிமையாய்ப் பிராது செய்யலாம். குடும்ப மானேஜர் தன்பேருக்குச் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் தானே விடுதலை செய்துகொடுக்கும் நியாயத்தை வற்புறுத்தவும் அதிகாரமுண்டு. ஸ்பஷ்டமாய்க் குறித்த ஒப்பந்தக்காரர்களெவரும் பார்ட்டியாகவேண்டுமென்று பிரதிவாதி கட்டாயப்படுத்தலாமென்பதுபோல் ஒரு நடவடிக்கையில் ஏற்படும் லாபத்தில் பங்கு பாத்தியமுடையவரையும் பார்ட்டியாக சேர்க்கவேண்டுமென்று பிரதிவாதி எதிர்பார்க்க நியாயமில்லை.

கடைசியாக மானேஜர் தன்பேருக்குச் செய்துகொண்ட அடமானத்தின்பேரில் தாவா செய்யலாமென்றாலும் குடும்பத்தில் விவாதம் ஏற்பட்டபின் மானேஜருக்குத் தனிமையாய் தாவா செய்யும் பாத்தியதை நீங்கிப்போகிறதென்று வாதிக்கப்படுகிறது. அதற்கு அதாரிடியாதொன்றும் காட்டப்படவில்லை. கலகம் ஏற்பட்டபின் மற்றமெம்பர்கள் மானேஜருக்கு ஏற்பட்ட அதிகாரத்தை நிராகரித்து விட்டதாக பாவித்து மேற்கூறிய வாதம் செய்யப்படுகிறது. 1 M W N 442-ல் மானேஜர் மற்ற மெம்பர்களைப் பார்ட்டிகளாய்ச் சேர்க்காமல் தாவா செய்வதற்கு மற்றவர்களுடைய பிரதிநிதியாகிற ஸ்தானத்தைமானேஜர் வகிக்கவேண்டியது நியாயமென்று சொல்லப்படுகிறது. ஆனால் பிரிவிகௌன்ஸிலார் மேற்கூறிய தீர்மானத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டவன் யாரோ அவன் நேரில் தாவா செய்யலாமென்றும் மற்ற ஊறக்கு பாத்தியதையுடையவர்களைப் பார்ட்டியாகச் சேர்க்கத் தேவையில்லையென்றும் பொதுவான சட்ட நியாயமிருக்க, குடும்பத்தில் கலகம் ஏற்பட்டதால் மானேஜர் அவ்வித தாவா செய்யும் பாத்தியதையை இழக்க நியாயமாகாது. அடமானத்தொகையில் பாத்தியமுடையவர்கள் தங்களையும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்படவேண்டுமென்று கோறலாம். அவர்கள் கோறிக்கொள்ளா விட்டாலும் கோர்ட்டார் அவர்களுடைய பாத்தியதையை பந்தோபஸ்து செய்யலாம். கடன் கொடுக்கக் கடமைப்பட்டவன் குடும்பத்தில் விவாதம் ஏற்பட்டிருக்கிறதை யிட்டுத்தான் செலுத்தவேண்டிய தொகையை நிறுத்திவைக்க நியாயமில்லை. யாரிடம் செலுத்துவதாய் ஒப்பந்தம் செய்துகொண்டானோ அவனிடம் செலுத்தக்கடவனாகும். ஆகவே மேற்கூறிய நியாயங்களை கவனித்து வாதி மற்றவர்களைப் பார்ட்டியாகச் சேர்க்காத காரணத்தால் பிராதை டிஸமிஸ் செய்தது பிசகென்று சொல்லவேண்டும்.

ரூ 4, 000-த்தைப் பற்றினமட்டில் மேடோவர் பத்திரம் ரெஜிஸ்டராகியிருக்கிறது. பிரதிப்பிரயோஜனம் செலுத்தப்படாத விஷயத்தைப்பற்றிய ருஜு அம்சம் மிக்கதிராபையாக இருக்கிறது. பிரதிப்ரயோஜனம் கொடுக்கப்படாவிட்டாலும் அதைப்பற்றி மேடோவர் தஸ்தவேஜில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் வியவகாரமாடவேண்டுமேயொழிய அடமானக்கடன் பாக்கிதார், மேடோவர்தார் தொகையைக்கேட்கும்போது, கொடுக்கக் கடமைப்பட்டவனாகிறான்." வாதி தான் தனிமையாய் தாவா செய்த விஷயத்தாலும் பிரதிப்பிரயோஜன விஷயத்தைப்பற்றியும் பிரதிவாதிக்கு நஷ்டம் வந்தால் அதற்காக ஜாமீன் கொடுக்கத் தயாராயிருக்கிறதாகத் தெரிவிக்கிறார். ஆகையால் வாதி நிறைவேற்றும் கோர்ட்டில் சப்கோர்ட்டாருக்குத் திருப்தியாகும்படி ஜாமீன் கொடுத்து டிக்கிரீத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுடன் வாதிக்கு மேற்கண்டவிதமாய்டிக்கிரீயளிக்கப்பட்டது. (1914) M W N 684.

---



சீவ்ஜஸ்டிஸ், & ஏயிலிங்-J. சேஷகிரிஅய்யர்-J.

L. P. A. 124 of 1911-22 செப்டெம்பர் 1914

ஒரு விக்கிரய உடன்படிக்கைப்பத்திரத்தில் கிரயத் தொகையைக் குறித்தகாலத்தில் செலுத்தத்தவறினால் அட்வான்ஸாகக் கட்டிய ரூ 100யும் இழந்துவிட வேண்டியதென்றும் கிரயதாரன் ஒப்பந்தப்படி சொத்தை விக்கிரயம் செய்துகொடுக்கத்தவறினால் அட்வான்ஸ் தொகைரூ 100உடன் கூட இன்னும் ரூ100 சேர்த்து கிரயதாரன் கொடுத்துவிடவேண்டியதென்று ஷரத்துக்கள் ஏற்பட்டிருக்க கிரயதார் ரூ 200-யும் செலுத்திவிட்டு சொத்தை விக்கிரயம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார். ரூ 100 உடன் அதிகத்தொகை சேர்த்துக்கொடுக்கவேண்டிய ஷரத்து அபராத நிபந்தனையென்றும் விக்கிரய ஏற்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக அந்த தொகை பிரதிபிரயோஜனமாகாதென்றும் ஆகவே சொத்தை விக்கிரயம் செய்துகொடுக்கும்படி கோர்ட்டில் ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட் 20-வது பிரிவின்படி தாவா செய்து விக்கிரய டிக்கிரீயடையலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

S. A. 1804 of 1911-24 செப்டெம்பர் 1914

சுவாதீனத்திற்காக செய்யப்படும் தாவாவில் மத்தியகால வரும்படியைப்பற்றி பரிகாரம்தேடப்படாதபோனால் பின்னால் மத்தியகால வரும்படிக்காக வேறு பிராது செய்யலாம். முந்திய பிராது பிந்திய பிராதுக்கு இடையூராகாது.

---

சீவ்ஜஸ்டிஸ்வாலிஸ்&ஜஸ்டிஸ்சேஷகிரிஅய்யர்

A. S. 129 of 1913-22 செப்டெம்பர் 1914

ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அனுமதி பெற்ற ஒரு விதவை தன் மாமியாருடைய ஜீவனம்சத்திற்காக ஒரு சொத்தை அனுபவிக்கும்படி கொடுத்தாள். மாமியார் சிலகாலம் அனுபவித்து 1876-ல் இறந்துபோனாள். மருமகள் அதன்பின் வாதியை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். வாதியின் ஸ்வீகாரத்தாயார் 1906-ல் இறந்துபோனாள். ஜீவனம்சத்திற்காக விடப்பட்டிருந்த சொத்தை ஷையாளுடைய மாமியார் இறந்தபின் பிரதிவாதிகள் அனுபவித்துவந்தார்கள். ஸ்வீகார புத்திரனாகிய வாதி பிரதிவாதிகளிடமிருந்து ஷை சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளும் பொருட்டு 1909-ல் தாவா செய்தார். இந்த தாவாவுக்குப் பிரதிவாதிகள் காலாவதி தோஷம் சொன்னதில்ஸ்வீகாரத்தாய் இறந்தவருஷமாகிய 1906-முதல் 12-வருஷத்திற்குள் வாதி தாவா செய்யலாமென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். வாதிக்கு வியாஜ்ஜியமூலம் தன் ஸ்வீகாரத்தாய் இறந்துபோகுமட்டும் ஏற்படவில்லை. [ஸ்வீகாரத்தாய் வாதியை ஸ்வீகாரமெடுக்குமுன் தாவா சொத்தை ஜீவனாம்சத்திற்காக அளித்தமையால் மாமியாருக்குபின் அதில் ஸ்வீகாரதாயாருக்கு பாத்தியம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே ஸ்வீகாரத்தாயின் ஜீவனகாலமட்டும் வாதிக்கு தாவா செய்ய எதுகரமில்லை. ஆகையால் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் 1906-ல் தொடங்கி 144-வது ஆர்டிகிலின்படி 12-வருஷ காலாவதி அதுமுதல் கணிக்கப்படவேண்டுமென்றும் [illegible] 1909-ல் செய்யப்பட்ட வாதியின் பிராது [illegible] காலாவதி தோஷம் இல்லையாதென்று [illegible]னிக்கப்பட்டது போலும்.]

---

ஜஸ்டிஸ் ஏயிலிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 575 of 1913-22 செப்டெம்பர் 1913

ஒரு கிராமத்தில் சிற்சில [illegible] பிரத்தியேகமான உபயோகத்திற்காக கவர்ன்மெண்டார்ஒருகால்வாய்கட்டியிருந்தபோதிலும் அது வழியாய்ச் செல்லும் தண்ணீர் முழுவதையும் அவர்களே உபயோகப்படுத்துகிறார்களென்றுவது அல்லது அதுவழியாய்ச் செல்லும் தண்ணீர் முழுவதும் அவர்களுடைய நிலச் சாகுபடிக்குப் போதுமான தல்லவென்றுவது ருஜுப்படுத்தப்பட்டாலொழிய அதுவழியாய்ச் செல்லும் தண்ணீர் முழுவதையும் மற்ற கிராமத்தார்களுக்கு விடாமல் அவர்களே உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. கவர்ன்மெண்டார் மற்ற கிராமத்தாருக்கு ஷை கால்வாய்த் தண்ணீரைப் பிரித்துக் கொடுக்கக்கூடாதென்று டிக்லேரேஷன் டிக்கிரீ கீழ்கோர்ட்டில் ஏற்பட்டும் அதன்மேல் கவர்ன்மெண்டார் அப்பீல் செய்யவில்லை. மற்ற கிராமத்தார் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டு அவர்கள் தங்களுக்கு ஷை கால்வாய்த் தண்ணீர் உபயோகப்பட



165405

வேண்டுமென்று கோரிக்கொண்டு கீழ்கோர்ட் தீர்மானத்தின்பேரில் அப்பீல் செய்தார்கள். கீழ்கோர்ட் டிக்கிரீ கவர்ன்மெண்டாரின் பேரில் ஏற்பட்டிருந்த போதிலும் அவர்கள் அப்பீல் செய்யாமல் அக்கரையுள்ள இதர கிராமஸ்தர்கள் அப்பீல் செய்தது சரியென்றும் தீர்மானிக்கப்பட்டது. பாசனத் தண்ணீரைப் பிரித்துவிட கவர்ன்மெண்டாருக்கு ஸர்வாதிகாரமுண்டென்ற காரணத்தைக்கொண்டு மற்ற கிராமஸ்தர்கள் அப்பீல் செய்தது நியாயமென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

தென் ஆற்காடு ஜில்லா

A. S. 319 of 1913 10 ஆகஸ்ட் 1914

மாணிக்க முதலியார் VS ஸௌபாக்கியம்மாள்

விதவைக்கு ஜீவனாம்சம் கணவன் இறந்த சமயத்தில் ஏற்பட்ட சொத்துக்குத் தக்கபடியல்லாமல், தாவா செய்யும் காலத்தில் குடும்ப ஐவேஜில் கணவன் விகிதத்திற்கு என்ன ஏற்படுமோ அதற்குத் தக்கபடி ஜீவனாம்சத் தொகை நிர்ணயிக்கப்படவேண்டும்.

கூட்டுக் குடும்பத்தைச்சேர்ந்த மூன்று சகோதரர்களில் ஒருவர் 1897-ல் காலஞ்சென்று விடவே அவனுடைய மனைவியானவள் அநேகவருஷ காலம் அதே குடும்பத்தில் வசித்து வந்து 1910 செப்டெம்பரில் தனியாய் பிரிந்துகொண்டு தனக்கு குடும்ப சொத்திலிருந்து ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டில் தாவா செய்ததில் ஜில்லா கோர்ட்டார் வாதியினுடைய கணவன் இறந்த காலத்தில் குடும்பத்திற்குறிய வருஷ வருமானம் ரூ 500 ஆகச் சொல்லப்பட்டிருக்க அந்த வருமானத்தை ஆதாரமாகக் கொள்ளாமல் வாதி தாவா செய்த காலத்தில் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கிற வருஷாந்தர வரும்படியாகிய ரூ 17,500-ன் பேரில் நிதானித்து வாதிக்கு மாதம் 1-க்கு ரூ 50 ஆக ஜீவனாம்சமளித்தார்கள். அவன் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோன முதல் தாவா தேதிமட்டிலும் கூட அதே விகிதப்படி டிக்கிரீயளித்தார்கள். பிரதிவாதிகள் அதன்மேல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானமே காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

வாதி இறந்துபோகும் பொழுது குடும்பத்திற்கு ஒரு ஏகர் நஞ்சை நிலமும், 1½ ஏகர் புஞ்சை நிலமும், ரூ 5000 முதல் போட்டு நடத்தப்படும் ஜவுளி வியாபாரமும் ஆஸ்தியாக இருந்தது. ஜவுளிவியாபாரம் மற்ற மெம்பர்களுடைய பிரயாசத்தால்மிகவும் அபிவிருத்தியாகி அதிலிருந்து கிடைத்த லாபத்தைக் கொண்டும் மற்றும் குடும்பவருமானங்களைக்கொண்டும் ஏராளமான சொத்துக்கள் வாங்கப்பட்டன. ஆகவே வாதி தாவாசெய்யும் காலத்தில் குடும்பத்திற்கு 22 ஏகர் நஞ்சையும் 8 ஏகர் புஞ்சை நிலங்களும் முன்னிருந்ததை விட அதிகமாக உண்டாய் விட்டது. ஆகவே ஜில்லா கோர்ட்டார் மொத்தமாய்க் குடும்பத்திற்கு தாவா காலத்தில் ரூ 17,500 வரையில் வருஷ வருமானமுண்டென்று மதிப்பிட்டு அதன்மேல் வாதிக்கு மாதம் ரூ 50 ஆக ஜீவனாம்ச டிக்கிரீயளித்திருக்கிறார்கள்.

வாதிக்கு தற்கால வருமானத்தின் பேரில் ஜீவனாம்ச விகிதம் ஏற்படுத்தினது பிசகென்று வாதிக்கப்படுகிறது. குடும்ப வியாபாரத்தினால் உண்டாகிற வருமானம் தான் அதிகமானதாகும். அந்தக்குடும்ப வியாபாரத்தில் வாதியின் கணவனும் இறந்துபோகுமட்டும் கூட்டாய் நடத்திவந்திருக்கிறார். அவருக்குப்பின் அந்த வியாபாரம் பலத்துப்போய் விருத்தியாச்சுது. வாதியின் கணவன் இறந்தபின் அவனுடைய பாகம் மற்ற மெம்பர்களிடம் சேர்ந்து விட்டது. ஆகவே வியாபார விருத்திக்கு வாதியின் கணவனுடைய மூலதனமும் காரணபூதமாச்சுதென்று சொல்லவேண்டும். வாதி குடும்ப சொத்திலிருந்து தான் தனக்கு ஜீவனாம்சம் வேண்டுமென்று கேட்கிறாளேயொழிய பிரதிவாதிகளுடைய ஸ்வயார்ஜிதத்தைப்பொருத்து ஜீவனாம்சம் கேட்கவில்லை. குடும்ப வருமானம் விருத்தியாவதற்கு பதிலாகக் குறைந்துபோயிருந்தால் வாதிக்கு குறைந்த விகிதப்படி தான் ஜீவனாம்சமளிக்கத்தகுமேயொழிய கணவன் இறந்தகாலத்தில் கிடைத்த வருமானத்திற்குத் தக்கபடி ஜீவனாம்சம் கொடுக்கும்படி கேட்க



நியாயமில்லை. ஒரு மருமகள் தன் கணவன் இறந்தபின் மாமனாரிடமுள்ள ஸ்வயார்ஜிதத்தின் பேரில் ஜீவனாம்சத்திற்காகத் தொடர நியாயமில்லை. ஆனால் மாமனார் இறந்தபின் அதே சொத்துக்கள் மைத்துனன்மார்களுக்குச் சென்றுவிடுமாதலால் அவர்களுக்கு அது பித்ரார்ஜித சொத்தாகும். அதன்மேல் ஷையாள் ஜீவனாம்சத்திற்காகத் தொடர நியாயமுண்டு. ஆகவே கணவன் இறந்தகாலத்தில் அவளுக்குக் கிடைக்கத்தகாத ஜீவனாம்சம் மாமனார் இறந்தபின் கிடைக்கத்தக்கதாச்சுது. ஆகவே அவளுக்குக் கணவன் இறந்த சமயத்தில் ஏற்பட்ட சொத்து நிலைமையைப்பொருத்து ஜீவனாம்ச பாத்தியதை நிர்ணயிக்கப்பட நியாயமில்லை. 11 பம்பாய் 199, 2 பம்பாய் 639 இவைகளில் சொல்லியிருக்கிறபடி தாவா காலத்தில் கணவன் ஜீவனோடிருந்தால் அவனுக்கு குடும்பசொத்தில் என்ன விகிதம் கிடைக்குமோ அதைப்பொருத்து ஜீவனாம்சத்தொகை நிர்ணயிக்கப்படவேண்டும். (1911) 13 இந்தியன் கேஸ்களின் 136-லும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 22 மதராஸ் 175-ல் குடும்ப அந்தஸ்தானது மாறிப்போகும் சமயங்களில் ஜீவனாம்ச விகிதமும் மாறவேண்டிய நியாயமாகுமென்று மேற்கூறிய தீர்மானங்களின் கருத்தைக்கொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளுக்காக எடுத்துக் காட்டப்பட்ட தீர்மானங்களில் குடும்ப ஐவேஜின் மாறுதல்கள் ஏற்படவில்லை. ஆகையால் அவைகளை இந்தக்கேசுக்கு ஆதாரிடிகளாய் கவனிக்க நியாயமில்லை.

இரண்டாவதாக குடும்பத்திற்கு வருஷவருமானம் ரூ 17,500 என்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டதற்குக் காரணமில்லையென்றும் அம்மட்டில் வருமானம் கிடையாதென்றும் ரூ-50 மிகவும் ஜாஸ்தியான தொகையென்றும் ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஆனால் பிரதிவாதிகள் வரும்படியைப்பற்றி யாதொரு ருஜுவாகமும் விடவில்லை. கணக்குகளை ஆஜர்படுத்தவில்லை. ஜில்லாகோர்ட்டார் சுமாராக வருமானத்தை மதிப்பிட்டிருக்க அது பிசகென்று சொல்லக் காரணமில்லை.

வாதி குடும்பத்தைவிட்டுப் பிரிந்த முதல் தன் தகப்பன் வீட்டில் வசித்துவந்தமையால் அந்தக் காலத்திற்குறிய ஜீவனாம்சத்தையும் வாதிக்குக் கொடுக்க நியாயமில்லையென்று வாதிக்கப்படுகிறது. வாதி குடும்பத்தைவிட்டுப் பிரிந்த உடன் தனக்கு யாதொரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பிரதிவாதிகள் ஜீவனாம்சத்திற்காக ஏற்பாடு செய்வதாய் வாக்களித்தும் யாதொன்றும் செய்யாத காரணத்தால் வாதி தன் தகப்பனிடம் செல்லவேண்டியதாயிற்று. அதனால் அவள் தன் ஜீவனாம்ச பாத்தியதையை வேண்டாமென்று விட்டுப்போனதாகச் சொல்லக்கூடாது.

வாதிக்கு குடும்பச் சொத்துக்கள் எல்லாவற்றின்பேரிலும் ஹக்கு ஏற்படுத்த அவசியமில்லையென்று சொல்லி சில அயிட்டங்களின் பேரில் மட்டும் ஜீவனாம்சத்திற்காக ஹக்கு ஏற்படுத்தப்பட்டு பிரதிவாதிகளின்பேரில் ஆளைப்பொருத்து டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டு ஆகவே மேற்கூறிய இரண்டு விதமாறுதலுடன் ஜில்லா கோர்ட் டிக்கிரீ காயமாகி இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M L J 291.

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

விசாகப்பட்டணம் ஜில்லா

S. A. 632 of 1913-18 ஆகஸ்ட் 1914.

குண்ணம் சீதாரய்யா Vs வேதவல்லி அய்யமா

ப்ராபர்டி ஆக்ட் 72-வது பிரிவின்படி போக்கியத்திற்கு நிலத்தை அனுபவிக்கிற அடமானதார் நிலத்தீர்வையைச் செலுத்திவருவதுபோல் லாண்ட்ஸெஸ், வில்லேஜ்ஸெஸ், நீர்க்கூலி, முதலிய ஸ்பெஷலான தீர்வைகளையும் செலுத்தி அப்படிச் செலுத்தின தொகையை அசல் கடனாக பாவித்து அதையும் சேர்த்து மொத்தக்கடன் தீருமட்டும் நிலத்தை அனுபவிக்க லாயக்குண்டு.

தாவா சொத்தை போக்கியத்திற்கு வாங்கி அனுபவித்துவந்த பிரதிவாதிக்கு போக்கியத்தில் கண்ட தொகை முழுவதும் சொத்து வருமானத்திலிருந்து அசல் வட்டியுள்பட தீர்ந்துபோன காரணத்தைச் சொல்லி அதே நிலத்தின் 2-வது அடமானதாராகிய வாதி அந்த நிலத்தை போக்கியதாரனிடமிருந்து சுவாதீனமடையும் பொருட்டு

தாவா செய்து, சுவாதீன டிக்கிரி கிடைக்கத்தகாதென்று ஏற்பட்டால் தன்னுடைய அடமானத்தை மீட்டுக்கொள்ள உத்தரவளிக்கவேண்டுமென்று கோரிக்கொண்டார். பிரதிவாதியாகிய போக்கியதார் எதிரான்ஸரில் தன்னுடைய போக்கியத்தில் கண்ட அசல் தொகை பூராவும் செல்லாகவில்லையென்றும் தனக்கு இன்னும் ரூ 60 பாக்கியிருப்பதாயும் அதையும் ஷை சொத்து வருமானத்திலிருந்து வசூலிக்குமட்டும் தான் தாவா சொத்தில் அனுபோகத்தைக்கைவிட நியாயமில்லையென்றும் ஆக்ஷேபித்தார்.

டி-மு கோர்ட்டார் வாதிக்கு சுவாதீன டிக்கிரியளித்ததில் தாவா நிலங்களுக்கும் இதரமான சில நிலங்களுக்கும் ஒரே பட்டா ஏற்பட்டு அதில் கண்டபடி மற்ற நிலங்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய நீர்கூலி வில்லேஜ்ஸெஸ் முதலிய சில தீர்வைகளை போக்கியதார் செலுத்தி அதையும் தனக்கு தாவா நிலத்தின் வருமானத்திலிருந்து அசல் கடன்போல வசூலித்துக்கொள்ள ஆக்ஷேபிக்கிறதினால் ரூ 60 பாக்கி என்று பிரதிவாதி சொல்லுகிற கக்ஷி ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்றும், மற்ற நிலங்களுக்காக ஏற்பட்ட தீர்வையை போக்கியதார் செலுத்தவேண்டியதவசியமில்லையென்றும் அந்தத் தொகையை நீக்கிப்பார்த்தால் போக்கியதாருடைய கடன் தொகை பூராவும் செல்லாகிவிட்டதென்று ஏற்படுகிறதாகவும் ஆகையால் வாதிக்கு போக்கியதார் தாவா சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டியது நியாயமென்றும் தீர்ப்பின் காரணமாகச்சொன்னார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் மாறான அபிப்பிராயங்கொண்டு ப்ராபர்டி ஆக்ட் 72 (b)-வது பிரிவின்படி போக்கியதார் மேற்கூறிய தீர்வைகளைச் செலுத்த லாயக்குள்ளவரென்றும் அதைச் செலுத்தத்தவறினால் தாவா நிலங்களும் ரெண்ட் ரிகவரி ஆக்ட் 42-வது பிரிவின்படி வில்லங்க சுத்தியாய் ஏலம் போடப்படுமென்றும் அதை நிவர்த்தி செய்து தன்னுடைய போக்கிய பாத்தியதையைக் காப்பாற்றிக்கொண்டது நியாயமாகுமென்றும் பிரதிவாதி சொல்லுகிறபடி அசல் பாக்கி ஏற்பட்ட ரூ 60-ம் செல்லாகிறவரையில் வாதி தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து சுவாதீனம்பெறுவதற்கு லாயக்காகமாட்டாரென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பில்சொல்லப்பட்ட காரணச்சுருக்கமாவது:—

வாதி இந்த 2-வது அப்பீலில் மூன்று முக்கிய வாதங்கள் செய்கிறார். (1) போக்கிய சொத்தாகிய நெ. 183 நிலத்திற்காக ஏற்படாத தீர்வையை போக்கியதார் செலுத்தி அதை அடமானத்தொகையுடன் சேர்ப்பது நியாயமில்லையென்றும் (2) அப்படிச்செலுத்திய தீர்வை நெ. 183 நிலத்திற்காக ஏற்பட்டதென்று வைத்துக்கொண்டாலும் ரெண்ட் ரிகவரி ஆக்டின்படி ரெவினியூ அதிகாரிகள் 42-வது பிரிவின்படி வில்லங்க சுத்தியாய் ஏலம்போட அதிகாரம் இவ்விதமான நீர் கூலி முதலிய ஸ்பெஷலான தீர்வை பாக்கி விஷயமாய் ஏற்படவில்லையென்றும், 42வது பிரிவின்படி நிலச்சாகுபடி விஷயமாய் ஏற்படும் தீர்வை பாக்கிக்காக மட்டும் வில்லங்க சுத்தியாய் ஏலம்போடலாமே யொழிய இத்தகைய ஸ்பெஷலான தீர்வைகளுக்கு ஷை ஆக்டின் 42-வது பிரிவு ஏற்றதல்ல வென்றும் ஆகவே ப்ராபர்டி ஆக்ட் 72 (b)-வது பிரிவின்படி அடமான சொத்து ஏலம போகாமல் தடுக்கும் பொருட்டு போக்கியதார் மேற்கூறிய தீர்வைகளைச் செலுத்தினது அனுவசியமென்றும் (3) அப்படிச் செலுத்தினது நியாயமேயென்று தீர்மானிக்கப்பட்டாலும் அப்படிச் செலுத்தப்பட்ட தீர்வைத் தொகையாகிய ரூ 60-ம் சில்லரையையும் போக்கியதார் இடம் பெற்றுக்கொண்டு நிலத்தை வாதிக்குச் சுவாதீனப்படுத்திக் கொடுக்கக் கடவரென்றும் ஆக மூன்றுவிதமான வாதம் செய்கிறார்.

(1) 34 மதராஸ் 498-ல் தீர்மானித்திருக்கிறபடி சவுகரியத்திற்காக பட்டாவில் ஒவ்வொரு நம்பரும் பிரத்தியேகமாய் குறித்துக் காட்டப்பட்டாலும் பட்டாவில் கண்ட மொத்தத் தொகையையும் பட்டாதார் செலுத்தக் கடமைப்பட்டவரென்றும், அதற்காகப் பட்டாவில் கண்ட ஒவ்வொரு நிலமும் ஸர்காருக்கு ஜாமீனாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் பட்டாவில் கண்ட தொகை பாக்கியானால் ரெவினியூ அதிகாரிகள் பட்டாவில் கண்ட எந்த நிலத்தையும் ஏலத்திற்குக்



கொண்டு வரலாமென்றும் ஆகவே தாவா நிலம் கூட மேற்கூறிய இதர நம்பர்களைப்பற்றிய தீர்வை பாக்கிக்காக ஏலம் போடப்படலாமாகையால் அதை நிவர்த்திக்கும் பொருட்டு போக்கியதார் (பிரதிவாதி) அந்தத் தீர்வை பாக்கியை செலுத்தினது நியாயமென்று சொல்லத்தகும். ஆகையால் ஒரே பட்டாவில் அடமான நிலங்களைத் தவிர்த்த இதரமான நிலங்களுக்கும் தீர்வை விதிக்கப்பட்டிருந்தால் அந்த நிலங்களுக்குரிய தீர்வை பாக்கியானது அடமான நிலத்திற்குரிய தீர்வை பாக்கியென்று மதிக்கப்படவேண்டும்.

(2) ப்ராபர்டி ஆக்ட் 76 (c) யில் விதித்திருக்கிறபடி அடமானதார் தஸ்தவேஜில் வேறு வித ஒப்பந்தம் அல்லது ஏற்பாடுசெய்து கொள்ளப்படாத பட்சத்தில் அடமான சொத்திற்குரிய கவர்ன்மெண்ட் ரெவினியூ தீர்வையையும் மற்ற விதமான ஜனப்பொது நலத்திற்காக ஏற்படும் தீர்வை விகிதங்களையும் செலுத்தவேண்டும். ஆகையால் யாதொரு தீர்வை பாக்கிக்காக வில்லங்க சுத்தியாய் ஏலம்போட சட்டமிருந்தாலும் சரி, அவ்வித ஏலத்திற்கு அதிகாரமில்லையானாலும் சரி அடமானதார் அந்தத் தீர்வையை செலுத்தலாம். செலுத்தக்கூடாதென்ற ஷரத்து பத்திரத்தில் கண்டிருந்தாலொழிய அடமானதார் அதைச்செலுத்திமாகூல்வருமானத்திலிருந்து அதையும் கழித்துக்கொண்டு மிகுதியைமட்டும் அசல் வட்டிக்காக வரவு வைத்துக்கொள்ளலாம். தாவா போக்கிய தஸ்தவேஜில் போக்கியதார் சர்க்கார் ரெவினியூவைத் தவிர மற்ற வரியைச் செலுத்தக்கூடாதென்ற ஷரத்தில்லை. அதற்கு பதிலாக பட்டாதார் யாதொரு ஸர்க்கார் தீர்வையைச் செலுத்தத் தவறினால் போக்கியதார் அதை மாகூல் வரும்படியிலிருந்து செலுத்தலாமென்ற ஷரத்து போக்கிய தஸ்தவேஜில் கண்டிருக்கிறது. இந்த நியாயத்தைவிட்டு வாதியின் 2-வது வாதத்தை அடித்துவிடலாம்.

தவிர ரெண்ட் ரிகவரி ஆக்ட் 42-வது பிரிவின் அம்சங்கள் அதாவது வில்லங்க சுத்தியாய் ஏலம்போடும் அதிகாரம் நீர் கூலி முதலிய தீர்வை பாக்கி விஷயமாயும் உபயோகப்படுத்தப்படலாமென்று சொல்லவேண்டும். நீர்க்கூலி பாக்கி விஷயமாய் 42-வது பிரிவின் அம்சங்கள் ஏற்காதென்பதற்கு ஆதாரிடியாதொன்றும் காட்டப்படவில்லை. அப்காரி ரெவினியூ, வருமான வரி முதலிய சர்க்கார் கிஸ்திகள் பாக்கி விழுந்தால் பாக்கிதாரனுடைய சொத்துக்களை ஜப்திசெய்து ஏலம்போடுவதற்கு நிலத்தீர்வையை வசூலிக்கும் முறையை அனுசரிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும், நீர்கூலிவரி பாக்கி விழுந்தால் அதையும் நிலத்தீர்வையை வசூலிக்கும் வண்ணமாக வசூலிக்க வேண்டுமென்றும் சொல்லியிருப்பதாலும் நீர்கூலி பாக்கியையும் அப்காரி, இன்கம்டாக்ஸ் வரி இவைகளையும் ஒரே பாங்காக மதிக்கவேண்டுமென்றும் 7 மதராஸ் 434-ல் தீர்மானித்திருக்கிறபடி அப்காரி, இன்கம்டாக்ஸ் இந்தபாக்கிக்காக ஏலம் வில்லங்க சுத்தியாய் போடப்பட நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால், நீர்கூலி பாக்கி விஷயமாய்ப் போடப்படும் ஏலமும் வில்லங்க சுத்தியாய் போடக்கூடாதென்றும் ஆகையால் போக்கியதார் தன்னுடைய அடமான பாத்தியதைக்குக் கெடுதிவருமென்று பயந்து மேற்கூறிய நீர்கூலியைக் கட்டினது அனாவசியமென்றும் வாதிக்காக மிகவும் சாதுர்யமாய் வாதிக்கப்படுகிறது. ஆனால் நீர்ப்பாசனத் தீர்வையும் அப்காரி இன்கம்டாக்ஸும் ஒரே பாங்கானவரிகளல்லவென்று சொல்த்தகும். நீர்பாசனவரி சாகுபடி செய்யப்படும் நிலத்தைச்சேர்ந்த வரியாகும். அது விஷயமாய் ரெண்ட் ரிகவரி ஆக்ட் 42-வது பிரிவு அனுசரிக்கத்தகும். நீர்ப்பாசனத்தீர்வை வசூலுக்காக ஏற்பட்டிருக்கிற 1865-ம் வருஷத்திய VII-வது ஆக்டில் ஜப்தி ஏலத்திற்காக சட்டவிதி ஏற்பட்டிருக்கிறது. அதில் வில்லங்க சுத்தியாய் ஏலம்போட வேண்டுமென்ற அம்சம் காணப்படாமல் 1864-ம் வருஷத்திய ரெண்ட் ரிகவரி ஆக்ட்படிக்கு ரெவினியூ பாக்கியை வசூலிக்கும் விதமாய் வசூலிக்கவேண்டுமென்றிருக்கிறது. ஆகையால் ஷை ஆக்ட் 42-வது பிரிவின் அம்சம் பிரயோகிக்கத்தகும். அப்படியானால் 1865-ம் வருஷத்திய ஆக்டில் ஜப்தி ஏல விஷயமான முறை அனுவசியமென்று சொல்லலாமே யொழிய 1864-வது வருஷத்திய ஆக்டின் 42-வது பிரிவில் சொல்லப்பட்ட முறையைக் குறைக்கும் பொருட்டு அதாவது வில்லங்க சுத்தியாய் என்ற வசனத்தை எடுத்துவிடும் பொருட்டு ஏற்பட்டதல்லவென்று சொல்லவேண்டும்.

24 மதராஸ் லா ஜர்னல் 511-ல் ஜஸ்டிஸ் பென்ஸன் & ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் தீர்மானித்திருக்கிறபடி 1864-ம் வருஷத்திய ரெண்ட் ரிகவரி ஆக்டின் 42-வது பிரிவு சிர்கூலித் தீர்வை பாக்கி விஷயமாயும் பிரயோகிக்கப்படலாமென்று சொல்லவேண்டும்.

(3) பிரதிவாதி வாதியிடம் ரூ 60-யும் பெற்றுக்கொண்டு தாவாநிலத்தை சுவாதீனப்படுத்திக்கொடுக்கக் கடமைப்பட்டவனென்று வாதிக்கப்படுகிறது. 26 மதராஸ் லா ஜர்னல் 474-ல் பிரிவிகௌன்ஸிலார் தீர்மானித்திருக்கிறபடி குறித்த வாய்தாவாவுக்குள் அடமானத்தொகையைக் கொடுத்து மீட்டுக் கொள்ளலாமென்ற நிபந்தனை ஏற்பட்டிருந்தாலொழிய வாய்தாவுக்கு முன் அடமானதார் சொத்தை ஒப்புவிக்கக் கடவரல்லவென்று சொல்லவேண்டும். போக்கிய தஸ்தவேஜைக் கவனித்துப் பார்த்தால் அடமானக்கடன் பூராவும் தீருமட்டும் பிரதிவாதி தாவாநிலத்தை அனுபவிக்க நியாயமுண்டென்று சொல்லவேண்டும். பாக்கியை சொத்தின் வருமானத்திலிருந்தே வஜா செய்து கொள்ளவேண்டுமென்ற நிபந்தனை சட்டவிரோதமான ஷரத்தல்ல. அப்படியிருக்க பாக்கித்தொகையை ரொக்கமாய்க் கொடுத்து சொத்தை சுவாதீனமடையும்படி கோறுவதற்கிடம்கொடுக்க நியாயமில்லை.

மேற்கண்ட விதமாய் வாதியின் ஆக்ஷேபனைகளுக்குச் சமாதானம் சொல்லி ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்ததில் 2-வது அப்பீல்செலவை அவரவர்களே வகித்துக்கொள்ளவேண்டுமென்றுஉத்தரவளித்தார்கள். XXVII M L J 295

———:O:———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்.

தஞ்சாவூர் ஜில்லா

S. A. 183 of 1912—20 ஆகஸ்ட் 1914.

சாம்பசிவ முதலியார் VS இந்திய காரிய தரிசியாரவர்கள்

வீட்டுக்கு முன் நடை பாதையில் கட்டின கொறடைப்பற்றிய அனுபோக பாத்தியதையின் விவரம்—லிமிடேஷன் ஆக்ட் ஆர்டிகல் 139-கெவர்ன்மெண்டாருக்கு 60 வருஷ காலாவதியின் தன்மை.

சாம்பசிவ முதலியார் தன் வீட்டுக்கு முன்னுள்ள தெருவைச் சேர்ந்த பாகத்தில் கொறடு கட்டிக்கொண்டு சுமார் 40 வருஷ காலமாய் அந்தபாகத்தைச் சொந்தம் பாராட்டி சுவாதீனமடைந்து அனுபவித்து வந்ததாகவும் அதை கவர்ன்மெண்டார் அக்கிரமமாக இடித்துவிட்டு அந்த நிலத்தைத் திரும்பவும் தெருவுடன் சேர்த்துக் கொண்டதாகவும் சொல்லி அந்த பாகத்தைத் திரும்பவும் சுவாதீனப்படுத்திக் கொள்ளும்பொருட்டும் கவர்ன்மெண்டாருடைய நடத்தையால் தனக்கு நேர்ந்த நஷ்டத்திற்காகவும் தஞ்சாவூர் டி-மு கோர்ட்டில் கவர்ன்மெண்டாரின் பேரில் அசல் தாவாசெய்தார். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக தாவா நிலமானது 1868-ம் வருஷம் சர்வே யாகுமட்டும் தெருவுடன் சேர்ந்த ஸர்க்காருக்கு பாத்தியப்பட்ட நடபாதையாக இருந்ததாகவும் அதற்குப்பின் வாதி அந்த பாகத்தை சுவாதீனப்படுத்திக்கொண்ட போதிலும், கவர்ன்மெண்டாருக்கு தாவா வருஷமாகிய 1909-க்கு முன் 60-வருஷங்களுக்குள் எப்பொழுதாகிலும் சுவாதீன பாத்தியமிருந்ததாக ஏற்பட்டால் வாதியின் அனுபோக பாத்தியம் பயனற்றதாகுமென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைச் செலவுடன் டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2வது அப்பீல் செய்ததில் கீழ் கோர்ட் தீர்மானங்கள் காடமாகி 2-வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது. தீர்ப்பின் சுருக்கமாவது:—

ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்:—1868-க்கு முன் தாவா நிலம் தெருவுடன் சேர்ந்த நடபாதையாக இருந்ததென்று இரண்டு கீழ்கோர்ட்டாரும் அடைந்த தீர்மானத்திற்கு போதுமான ருஜுவாகமில்லையென்று வாதிக்கப்படுகிறது. ரிகார்டில் ஏற்பட்டிருக்கும் ருஜுவாகம் போதுமானதல்லவென்றாவது அவைகளைக் கீழ் கோர்ட்டார் நம்பி நடந்தது பிசகென்றாவது சொல்ல நியாயமில்லை. அந்நியன் தெருவைச் சேர்ந்த தாவா நிலத்தை சொந்தமாக உபயோகப்படுத்திக் கொண்டது மெய்யென்றும் அப்படி நடந்தது 1868-ம் வருஷத்திற்கு முந்தியதல்லவென்றும் ஏற்படு



கிறது. அப்படியானால் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தது நியாயமே. 1905-ம் வருஷத்து III வது ஆக்டின்படி ஜனப்பொதுவான சாலைகளும் தெருவுகளும் கவர்ன்மெண்டாருடைய சொத்தாகும். அதைப்பற்றி வாதி ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் பிராதுக்கு முன் 1868-முதல் 1908 வரையில் அதாவது 40-வருஷங்களாக வாதி தாவா நிலத்தைச் சுவாதீனமடைந்து வந்ததாக கீழ்கோர்ட்டார் நம்புகிறபடியால் 1868-க்கு முன்னும் வாதியே அதை அனுபவித்து வந்தாரென்று அனுமானிக்க வேண்டுமென்றும் அப்படியல்லவென்றும் அதாவது பிராதுக்கு முன் 60-வருஷங்களுக்குள் கவர்ன்மெண்டார் எப்பொழுதாவது தாவா நிலத்தை சுவாதீனமடைந்து சொந்த பாத்தியம் கொண்டாடினார்களென்று ருஜுப்படுத்த வேண்டிய கடமை கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாகுமென்றும் 33 மதராஸ் 173, 33 மதராஸ் 362, 23 M L J 162 இவைகளின் தீர்மானத்தை அனுசரித்து வாதிக்கப்பட்டு கவர்ன்மெண்டார் அவ்வித ருஜுவாகம் விடவில்லையென்று சொல்லப்படுகிறது.

மேற்கூறிய தீர்மானங்களினால் கவர்ன்மெண்டாரின் பேரில் சுவாதீனத்திற்காகவும் நஷ்டத்திற்காகவும் தாவாசெய்கிறபார்ட்டியானவன் தான் 12வருஷங்களுக்குமேல் சுவாதீனமடைந்து வந்ததாக ரூபித்தால் மட்டும் ஜயமடையக் கடவனென்று ஒரு மாறாத நியாயமுறை ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது.

ஒருவனுக்கு சுவாதீனம் எப்படிக் கிடைத்ததென்றும் எப்பொழுது கிடைத்ததென்றும் நிச்சயமாய் ரூபிக்கக்கூடாத சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக 12-வருஷங்களுக்குமேல் அந்தப்பார்ட்டியே அனுபவித்துவந்ததாக ருஜுப்படுத்தப்பட்டால் 60-வருஷங்களுக்கு முன்னமேயே அந்தபார்ட்டி அனுபோகமடைந்திருப்பதாய் அனுமானிக்கவேண்டுமென்றும் அப்படியல்லவென்றும் அதாவது 60-வருஷங்களுக்குள் கவர்ன்மெண்டார் அதில் தங்கள் அனுபோகமிருந்ததாக ருஜுப்படுத்தவேண்டிய கடமை கவர்ன்மெண்டாரைப் பொறுத்ததாகுமென்றும் மேற்கூறிய தீர்மானங்களால் ஊகிக்கப்படவேண்டும். இந்த கேஸில் வாதி சுவாதீனப்படுத்திக்கொண்ட வருஷமாகிய 1868-க்குமுன் தாவா நிலம் தெருவுடன் சேர்ந்த ஜனப்பொதுவான நடைபாதையாக இருந்ததென்று பரிஷ்காரமாய்த் தெரிகிறது. அப்படியானால் கவர்ன்மெண்டாருடைய சொத்தாய் 1868-க்குமுன் இருந்ததாகும். 1868-க்குமுன் கவர்ன்மெண்டாரைத் தவிர வேறு யாரும் அதை அனுபவித்தார்களென்று அனுமானிக்க யாதொரு சந்தர்ப்பமும் காணப்படவில்லை. வாதியும் அவருடைய முன்னோர்களும் 1868-க்குமுன் தாவா நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டிருந்ததாகவும் சொல்ல நியாயமேற்படவில்லை. ஆகையால் 60-வருஷ காலாவதியை உடைத்தாயிருக்கிற கவர்ன்மெண்டாருடைய பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு வாதியின் பிராது தள்ளுபடியானது சரியென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களும் அதே அபிப்பிராயங்கொண்டதற்குக் காரணமாக தாவா நிலம் நடைபாதையாக இருந்தாலும் 1868-க்கு முன் பொது ஜனங்கள் அதை உபயோகப்படுத்தி வந்திருக்கவேண்டுமேயொழிய வேறுயாரும் 1868-க்குமுன் அதை சுவாதீனப்படுத்திக்கொண்டிருந்ததாக அனுமானிக்க நியாயமில்லையென்றும் (அதாவது வாதியின் வீட்டுக்குமுன்னுள்ள தாவா நிலத்தை வேறு யாரும் தனிமையாய் உபயோகித்திருக்க மாட்டாரென்றும் ஆகவே ஜனப்பொது உபயோகத்திலிருந்த தாவா நிலம் 1868-க்குமுன் கவர்மெண்டாருடைய சொத்தாகுமென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். XXVII M L J 299.

———:O:———

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

வட ஆர்காடு ஜில்லா

A. S. 128 of 1910-17 பிப்ரவரி 1914

கணபதி முதலியார் Vs கிருஷ்ணமாச்சாரியார்

அடமானதார் பிந்திய அடமானத்தை மேலோவர் பெற்று அதன்மேல் மட்டும் தாவா செய்து டிக்கிபெற்று சொத்தை ஏலம்போட்டு, இஸ்தியாரில் முன் அடமானத்தைக் கட்டுப்படுத்தித் தானே அனுமதியின்பேரில் ஏலமெடுத்தது பிசகென்று

ஆக்ஷேபிக்கப்பட்டும் அந்த ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மைனருக்குத் தகப்பன் கார்டியனாக ஒரு டிக்கிரீயும், தாய்மாமன் கார்டியனாக அதே கேஸில் வேறு டிக்கிரீயும் மைனர் பேரில் ஏற்பட்டு வாதி ரத்தாகிப்போன முதலாவது டிக்கிரீயை நிறைவேற்றி ஏலமெடுத்தது மைனரைக் கட்டுப்படுத்தாதென்று வாதிக்கப்பட்டும் அந்த வாதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தாய்மாமன் ஐப்தியையும் ஏலத்தையும் நிறுத்தப் பிரயத்தனமெடுத்து தோல்வியடைந்தமையால் கார்டியன் பெயரைத் தப்பாக குறித்த பிசகு ஏலத்தை ரத்து செய்யத் தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

கணபதி முதலியார் என்ற வாதியின் தகப்பன் தாவா சொத்துக்களை 1876-ல் வரதப்ப செட்டியாருக்கு முதல் அடமானம் வைத்து 1879-ல் 1-ம் பிரதிவாதியின் தகப்பன் பேருக்கு 2-வது அடமானம் வைத்துத் திரும்பவும் 1881-ல் அதே சொத்துக்களை நரசிங்கராவ் என்றவருக்கு 3-வது அடமானம் வைத்து ஆகவே மூன்று தடவைகளில் கடன் வாங்கியிருந்தார். 1886-ல் 1ம் பிரதிவாதியாகிய கிருஷ்ணமாச்சாரியாரின் தகப்பனார் நரசிங்கராவ் என்றவரிடத்திலிருந்து 3வது அடமான பாத்தியதையை மேடோவர் பெற்று 3-வது அடமானக்கடனைமட்டும் வசூலிக்கும்பொருட்டு 1886-ம் வருஷத்திய அசல் நெ. -ல் வாதியின் தகப்பன்பேரிலும் வாதியுள்பட ஷை யார்களுடைய மைனர் குமாரர்கள் பேரிலும் தாவா செய்து அதில் தன்னுடைய 2-வது அடமானத்தையாகிலும் முதல் அடமானத்தையாகிலும் குறித்துக்காட்டாமல் மைனர்களுக்குத் தகப்பனை கார்டியனாக ஏற்படுத்தியிருந்தார். வாதியின் தகப்பன் கோர்ட்டில் ஆஜராகித் தான் தன் மைனர் குமாரர்களுக்கு கார்டியனாக இருக்க மனமில்லையென்று சொல்லி மற்றப்படிக்கு பிராதில் கண்டபடி ஏற்படும் பாக்கியை சரியென்று ஒப்புக்கொண்டார்.

ஜில்லா கோர்ட்டார் மைனர் குமாரர்களுக்குத் தகப்பன்தான் சரியான கார்டியன் என்பதில் சந்தேகமில்லையென்று சொல்லி தகப்பன் மக்கள் அனைவர் பேரிலும் டிக்கிரீயளித்தார்கள். வாதியின் தகப்பன்பேரில் ஆளைப்பொருத்தும் மைனர்களைக் கட்டுப்படுத்தும் வண்ணமாய் அடமான சொத்தை ஏலம்போட்டு தொகையை வசூல் செய்யவேண்டுமென்றும் டிக்கிரீயளிக்கப்பட்டது. டிக்கிரீ பெற்ற 1-ம் பிரதிவாதியின் தகப்பன் டிக்கிரீயை நிறைவேற்றி தாவா சொத்தை ஏலம்போடுவதற்காக விண்ணப்பம் கொடுத்துவிட்டார். இதற்குள்ளாக மைனர்களின் தாய்மாமன் ஜில்லா கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்து ஷை யார்களின் தகப்பனுடைய இஷ்டத்திற்கு விரோதமாக அவரை கார்டியனாய் ஏற்படுத்தி மைனர்கள்பேரில் டிக்கிரீளித்தது சட்டவிரோதமென்றும் ஷை யார்களுக்குத் தான் கார்டியனாக நியமிக்கப்பட வேண்டுமென்றும் முன் பிறந்த டிக்கிரீ ரத்தாகி மறு விஜாரணை நடத்தப்படவேண்டுமென்றும் கோரிக்கொண்டபிரகாரம் கோர்ட்டார் முந்திய டிக்கிரீயை ரத்துசெய்து தாய்மாமனை கார்டியனாக நியமித்து பிராதை 1886 செப்டெம்பர் 15 தேதி-க்கு விஜாரணைவாய்தா குறிப்பிட்டிருந்தார். அன்று கார்டியன் ஆஜராகவில்லை. மைனர்களுக்காக எதிரான்வரும் தாகல்செய்யப்படவில்லை. ஆகவே கோர்ட்டார் முன்போலவே வாதி தகப்பன்பேரில் ஆளைப்பொருத்தும் அடமான சொத்தை மைனர்கள் கட்டுப்படும் வண்ணமாக ஏலம்போட்டு டிக்கிரீத்தொகையை வசூலிக்கலாமென்றும் தீர்மானம் கொடுத்தார்கள். ஆகவே ஏப்ரல் 15-ல் ஏற்பட்ட முந்திய டிக்கிரீக்கும் இந்த டிக்கிரீக்கும் மைனருக்கு கார்டியன் பெயர் வித்தியாசமேயொழிய மற்றப்படி ஒரேபிரகாரமாகத்தான் ஏற்பட்டிருந்தது. 1-ம்பிரதிவாதியின் தகப்பன் (டிக்கிரீபெற்றவாதி) 2-வது டிக்கிரீயளிக்கப்படு முன்னமேயே நிறைவேற்று நடவடிக்கை யெடுத்துவிட்டமையால் விண்ணப்பமானது ஏப்ரல் 15-ல் பிறந்த டிக்கிரீயை அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் மைனர்களுக்குத் தகப்பன் கார்டியனாக விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருந்தது. ஏல இஸ்தியார் பிறக்குமுன் 1-ம் பிரதிவாதியின் தகப்பன் 1-வது அடமானத்தையும்மேடோவர்வாங்கிக்கொண்டு ஏல இஸ்தியாரில்தாவா சொத்தானது தன்னிடமிருக்கும் இரண்டுமுன் அடமான வில்லங்கத்திற்குட்படுத்தி ஏலம் போடப்படு



மென்று குறிக்கப்பட்டு கோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் 1-ம் பிரதிவாதியின் தகப்பனே சொத்தை ஏலமெடுத்து தன் பெயருக்கு ஏல ஸர்ட்டிபிகேட்டும் பிறப்பித்துக்கொண்டு சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டு அனுபவித்து வந்தார்.

வாதி மைனர் தசை நீங்கி மூன்று வருஷங்கள் கடந்தபின் 1-ம் பிரதிவாதியின் தகப்பன் தாவா சொத்தை ஏலமெடுத்தது சட்டவிரோதமென்றும் ஏல நடவடிக்கைகளுக் காதாரமான டிக்கிரீ தன்னைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகவே அடமான சொத்தை மீட்டுக்கொள்ளத் தனக்கு பாத்தியமுண்டென்று சொல்லி ஏலமெடுத்த டிக்கிரீதாரன் இறந்துபோகவே ஷையாரின் குமாரனாகிய 1-ம் பிரதிவாதியின்பேரிலும் அவனுடைய புத்திரர்கள்பேரிலும் தாவா சொத்துக்களில் சிலவற்றை விக்கிரயம்பெற்று அனுபவிக்கிறவர்களையும் பிரதிவாதிகளாய் சேர்த்துப் பிராது கொடுத்தார். வாதியின் மைனர் சகோதரனும் காலஞ்சென்றமையால் வாதி தனிமையாய் இந்த வழக்கெடுக்க நேரிட்டது. ஜில்லாகோர்ட்டார் வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் அப்பீலும் வாதிக்குப் பிரதிகூலமாகி முந்திய டிக்கிரீயின்பேரில் நடத்தப்பட்ட ஏலம் சரியானதென்று தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

1886-ம் வருஷத்திய அசல் நெ. 5-ல் பிறந்த டிக்கிரீயின்படி தாவா சொத்து ஏலமாகி 1-ம் பிரதிவாதியின் தகப்பன் 1889-ல் ஏலமெடுத்து சுவாதீனப் படுத்திக்கொண்டிருக்கிறார். வாதி மேஜராகி மூன்றுவருஷம் கடந்தபின் அதாவது 1907-ம் வருஷத்தில் இந்த வியாஜ்ஜியம் தொடுத்திருக்கிறார். முந்திய டிக்கிரீ தன்னைக் கட்டுப்படுத்தாதென்று வாதி செய்கிற ஆக்ஷேபனையைப்பற்றி ஜில்லா கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளத்தகும். கைவசத்திலிருக்கும் நிறைவேற்று நடவடிக்கையின் ரிகார்டுகளைப் பார்வையிட்டதில் வாதியைக் கட்டுப்படுத்தும் படியான பிந்திய டிக்கிரீயானது அதாவது தாய் மாமனை கார்டியனாக ஏற்படுத்தினபிறகு பிறந்த டிக்கிரீயானது நிறைவேற்றப்படவேயில்லை என்று சொல்லவேண்டும். ஏனெனில் நிறைவேற்று விண்ணப்பத்தில் டிக்கிரீ தேதியானது 1886 ஏப்ரல் என்று குறிப்பிட்டிருக்கிறது. மைனர்களுக்கு கார்டியனாக நிறைவேற்று நடவடிக்கையில் தாய் மாமன் பெயர் குறிக்கப்படாமல் தகப்பன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான தப்பிதங்களால் வாதி முந்திய நிறைவேற்று நடவடிக்கையும் அதையனுசரித்த ஏல விக்கிரயமும் ரத்தாகத் தக்கதென்றும் அவைகள் தன்னைக் கட்டுப்படுத்தாதென்றும் வாதி இந்த தாவாவில் வாதம் செய்கிறார். கோர்ட்டிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ரிகார்டுகளைச் சரியாய் பரிசீலனை செய்திருந்தால் மேற்கூறிய பிசகுகள் காலா காலங்களில் திருத்தப்பட்டிருக்கக்கூடும். தவிர இரண்டு டிக்கிரீகளும் ஒரேவிதமாய்த் தான் எழுதப்பட்டிருக்கின்றன. வசனங்கள் ஒரே விதமாய்க் கண்டிருக்கிறது. தாய் மாமன் ஆன்ஸர் யாதொன்றும் தாகல் செய்யாதபடியால் முந்தி ஏற்பட்ட டிக்கிரீயின் அம்சத்தை மாற்றுவதற்கு அவசியமே நேரிடவில்லை. மேற்கூறிய பிசகுகள் அந்த நடவடிக்கைகளுக்கு பாதகமானாலும் தாய் மாமன் ஏலத்தை நிறுத்தும்பொருட்டு சில நடவடிக்கைகள் நடத்தி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து அங்குதோல்வியடைந்திருக்கிறார். தாய் மாமனுக்கு கார்டியன் நிலைமையைத் தவிர வேறு நிலைமை கிடையாதென்று சொல்லவேண்டும். ஆகையால் வாதியின் சரியான கார்டியனே நிறைவேற்று நடவடிக்கையைப்பற்றி ஆக்ஷேபித்துத் தோல்வியடைந்தமையால் வாதி அந்த நடவடிக்கையைப்பற்றி இப்பொழுது ஆக்ஷேபிக்க நியாயமில்லை. தாய் மாமன் இந்தக் கேஸில் சாட்சியாகக் கொடுத்த வாக்குமூலத்தில் தான் ஷை அப்பீல் நடவடிக்கைகளை வாதியின் தகப்பனாருடைய உத்தரவுப்படிக்கு நடத்தினதாக ஒப்புக்கொள்ளுகிறார். அது உண்மையாகவே இருக்கலாம். ஏனெனில் வாதியின் தகப்பன் கார்டியனாக இருக்கப் பிரியமில்லையென்று சொல்லியிருக்கிறார். வாதி டிக்கிரீ பாக்கிதாருடன் உடந்தையாக இருந்தவருமல்ல. அப்படியானால் அவரே கார்டியனாக இருந்து டிக்கிரீதாரனுக்கு நிராக்ஷேபனையான சகாயம் செய்திருக்கலாம். தன்னுடையகடனுக்காகத் தன் மக்கள் கட்டுப்படக் கூடாதென்று ஸ்தாபிக்கும் பொருட்டு தாய் மாமனை ஏவிவிட்டு இவ்

வித நடவடிக்கை யெடுத்திருக்கவேண்டும். ஈராங்கிகாலத்தில் தாய் மாமன் ஆஜராகத் தவறினபடியால் தாய் மாமனும் டிக்கிரீ பாக்கிதாரனுக்கும் உடந்தையாக நடந்தானென்று வாதிக்காகச் சொல்லப்படுகிறது. அதை நம்பக் காரணமில்லை. வாதிக்கு ஷை அடமான வியாஜ்ஜியத்தில் ஆக்ஷேபிக்கத்தக்க டிபென்ஸ் யாதொன்றும் கிடையாதென்று சொல்லவேண்டும். இரண்டு மைனர்களும் அடமானத்திற்குப் பின் உண்டானவர்கள். இந்தவழக்கில் ஜில்லா கோர்ட்டில் வாதி தன்னைத் தகப்பனுடைய கடன் கட்டுப்படுத்தாதென்று சொல்லிப்பார்த்து பயன்படாமல் அதைப்பற்றி இந்த அப்பீலில் பிரஸ்தாபிக்கவே யில்லை. ஆகையால் டிபென்ஸ் யாதொன்றும் இல்லாதபடியால் தான் தாய் மாமன் ஈராங்கிகாலத்தில் ஆஜராகவில்லையென்று சொல்லவேண்டும். எதிரியுடன் உடந்தையாக இருந்து அசட்டையாக மைனர்களின் கேஸைத் தவறவிட்டாரென்று சொல்ல நியாயமில்லை. ஆகவே வாதி நிறைவேற்று நடவடிக்கையில் சரியான கார்டியனால் குறிக்கப்படாத விஷயம் எலத்தை ரத்தாக்கக்கூடியதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவதாக 1886-ம் வருஷத்திய டிக்கிரீயின்படி போடப்பட்ட எலமானது ப்ராபர்டி ஆக்ட் 99-வது பிரிவின் அம்சங்களுக்கு விரோதமாயிருக்கிறதென்றும் ஆகையால் அந்த எலம் செல்லத்தகாதென்று வாதிக்கப்படுகிறது. [99-வது பிரிவில் ஒரு அடமானதார் தனக்குச் செல்லாகவேண்டிய வேறுயாதொருபாக்கிக்காகடிக்கிரீ பெற்று அந்த டிக்கிரீயை அனுசரித்துத் தனக்கு அடமானம் வைக்கப்பட்ட சொத்தை ஜப்திசெய்தாலும் அந்த சொத்தை எலத்திற்குக் கொண்டு வருமுன் தன்னுடைய அடமான தஸ்தவேஜின் பேரில் ப்ராபர்படி ஆக்ட் 67 வது பிரிவில்கண்ட விதமாக அதாவது சொத்தை எலத்திற்குக் கொண்டுவரும்படி கோறிக்கொண்டு தாவா செய்து டிக்கிரீ பெறவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.] 99-வது பிரிவின் அம்சங்கள் தாவா எலத்திற்கு இடையூறல்லவென்று சொல்லவேண்டும். ஏனெனில் 1886-ல் 1-ம்பிரதிவாதி மூன்றுவது அடமானத்தை மேடோவர் வாங்கிக்கொண்டு அதன்பேரில் செய்த தாவாவில் தாவாசொத்தை எலம்போடும்படி டிக்கிரீ பெற்றிருக்கிறார். ஆகவே அந்த டிக்கிரீ எலத்திற்கு உத்தரவளிக்கப்பட்ட டிக்கிரீயாக பாவிக்கப்படவேண்டும். அவ்வித டிக்கிரீயின்படி எலம்போடப்பட்டது சட்ட விரோதமல்ல. டிக்கிரீயில் தொகையைக் கொடுக்கும்படியாகவும் இல்லாவிடில் சொத்தை எலம் போடவேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது. தொகை செலுத்தக் காலத்தவணையைக் குறிப்பிடத் தவறிப்போனாலும் அந்தப் பிசகினால் டிக்கிரீ பாக்கிதார்களுக்குக் கெடுதி யாதொன்றும் நேர்ந்ததாகக் காணப்படவில்லை. டிக்கிரீயை அனுசரித்து எலம்போடப்படுமுன் தொகையைச் செலுத்தப் போதுமான காலம் வாதி வகையராக்களுக்கு இருந்திருக்கிறது. ஆகவே 99-வது பிரிவின் அம்சங்களைப் பிரயோகித்து எலத்தை ரத்துசெய்ய நியாயமில்லை. [தொகை பாக்கிக்காக டிக்கிரீ ஏற்பட்டு அதை அனுசரித்து சொத்து ஜப்தியாகியிருந்தால் அந்த சொத்தை அடமானதார் அடமானவியாஜ்ஜியம்செய்து எல டிக்கிரீயடையாமல் எலத்திற்குக் கொண்டுவரக் கூடாது. ஆனால் 1-ம் பிரதிவாதியின் தகப்பன் 1886-ம் வருஷத்திய டிக்கிரீயில் எல டிக்கிரீ பெற்றிருந்தபடியால் மேற்கூறிய ஆக்ஷேபனை ஏற்காதென்று சொல்லவேண்டும். ஒருவன் வெண்ணலை டிக்கிரீபெற்று தன்னிடம் அடமானமாக வைக்கப்பட்டிருக்கிற சொத்தை ஜப்தி செய்தாலும் அடமான தஸ்தவேஜின்பேரில் தாவா செய்ய நியாயம் உண்டானபிறகு எலத்திற்காக தாவா கொண்டுவந்து டிக்கிரீ பெற்றுத் தான் ஜப்திசெய்த சொத்தை எலத்திற்குக் கொண்டுவரவேண்டும். மேற்கூறிய சந்தர்ப்பங்கள் யாதொன்றும் தாவா எலத்திற்குச் சம்பந்தப்படவில்லை.

ஆனால் 1886-ம் வருஷத்திய டிக்கிரீ எல டிக்கிரீயானாலும் அதை அனுசரித்து தாவாசொத்து எலம்போடப்பட்டதற்கு 99-வது பிரிவின் அம்சங்கள் ஏற்காதென்றாலும் அந்த வியாஜ்ஜியத்தில் மேடோவர்தார் தன்னுடைய முந்திய அடமானத்தைப்பற்றியும் எலத்திற்குமுன் தான் மேடோவர் வாங்கியிருந்த முதல் அடமானத்தைப்பற்றியும் சேர்க்காமலிருந்து எல இஸ்தியாரில் மட்டும் தன்பேருக்குள்ள இரண்டுவில்லங்களுக்குட்பட்டு எலம் போடப்படுமென்று சொன்ன காரணத்தால் அநேகர் போட்டிக்கு எலம் கோறாமல் நின்றுவிட்டார்களென்றும் ஆகையால் வாதியின் தகப்பனுடையடிக்கிரீபாக்கிதாருக்குரிய முன் அடமானங்களை மீட்கும் பாத்தியதைக்கு பாதகமுண்டாகித் தானே தாவா சொத்துக்களை எலமெடுத்தமையால் டிரஸ்ட் ஆக்ட் 90-வது பிரிவின்படி எலமெடுத்தவன் வாதியின் தகப்பனுக்கு டிரஸ்டியாக பாவிக்கப்படவேண்டுமென்றும் அதாவது வாதியின் தகப்பன் அல்லது அவனுக்குப்பின் வாதி ஷை சொத்தை மீட்டுக்கொள்ள நியாயமுண்டென்றும் எலமெடுத்தவருக்கு நேர்ந்த செலவைமட்டும்வாதி கொடுக்கக்கடவதென்றும் டிரஸ்ட் ஆக்ட் 90-வது பிரிவை அனுசரித்து வாதிக்கப்படுகிறது.

அடமானதாருக்கு அடமான சொத்தை மீட்டுக்கொள்ள ஒருநியாயமான காலத்தவணையுண்டு. போதுமான காலம் அவருக்கு இருந்திருக்கிறது. எல இஸ்தியாரில் முன் அடமானத்தைக் காணக்கூடாதென்று கட்டாயப்படுத்த சட்டமில்லை. முன் அடமானங்களை பிராதிலும் டிக்கிரீயிலும் காட்டாததைப்பற்றியும் அதை அனுசரித்த எலத்தைப்பற்றியும் எலத்திற்கு முந்தியே ஆக்ஷேபித்திருக்கவேண்டும். எலம்போட்டு 25-வருஷங்கள் கடந்தபின் இப்பொழுது ஆக்ஷேபிக்க விடக்கூடாது. நிறைவேற்றுநடவடிக்கையில்யாதொரு ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதமிருந்தால் எல சமயத்தில் ஆக்ஷேபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி ஆக்ஷேபித்திருந்தாலும் அது கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோன்றி கவனிக்கப்படவில்லையென்று சொல்லத்தகும். பல அடமானங்களைப் பெற்றவன் ஒன்றின்பேரில் மட்டும் தாவா செய்தால் அதில் மற்றவைகளையும் சேர்க்கவேண்டுமென்று எதிரி கட்டாயப்படுத்தக்கூடாது. 2 M. L. J. 188, 31. M. 530, 10 M. L. J. 564, 24. M. 96,12 M. L. J. 383, இவைகளைப்பார்க்கவும். தவிர மற்ற அடமானங்களைச் சேர்க்காதபடியால் அவைகளின்பேரில் பின்னால் வேறு தாவா செய்யும் பாத்தியம் கெட்டுப்போகுமென்று சொல்லலாமேயொழிய அதனால் பிந்திய அடமானத்தின் பேரில் ஏற்படும் டிக்கிரீக்கும் அதை அனுசரித்த எலத்திற்கும் பாதகம் ஏற்பட நியாயமில்லை. ஆகவே 1886-ம் வருஷத்திய பிராதில் மற்ற முன் அடமானங்களைச் சேர்க்காத பிசகு எலத்தை ரத்து செய்யத்தக்க பிசகல்லவென்று சொல்லத்தகும். அந்த எலம் வாதியைக் கட்டுப்படுத்துமென்று சொல்லத்தகும்.

1-ம் பிரதிவாதியின் தகப்பன் 1886-ம் வருஷத்திய நடவடிக்கைகளில் தனக்கு லாபமுண்டாகத்தக்க ஏற்பாடுகளைத் தந்திரமாய் முடித்துக்கொண்டாரென்று பிராதில் சொல்லவில்லை. அதைப்பற்றி விஜாரிக்கும்படி இஷ்யூவும் ஏற்படவில்லை. ஆனால் சொத்தானது குறைந்தவிலைக்கு எலம் போச்சுதென்று சொல்லப்படுகிறது. இருகக்ஷிக்காரர்களும் சொத்தின் எலக் கிறயத்தைப்பற்றி யாதொரு பொருட்டாக நினைக்கவில்லையென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் அதைப்பற்றி இவ்வளவு வருஷகாலத்திற்குப்பின் இஷ்யூ ஏற்படுத்தி மறு விஜாரணைக்கு அனுப்புவது உசிதமல்லவென்று சொல்லவேண்டும். வாதியின் கார்டியன் ஸி. பி. ஸி. 311வது பிரிவின்படி எலத்தை ரத்து செய்ய நடவடிக்கையெடுத்திருக்கவேண்டும். அல்லது எலத்திற்கு முந்தியே கவனிக்கப்படவேண்டிய விஷயமாக இருக்கவேண்டும். இப்பொழுது விஜாரணை செய்ய நியாயமில்லை.

ஆகவே மேற்கூறிய நியாயங்களை அனுசரித்து வாதியின் பிராது தள்ளுபடியானது சரியென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII. M. L. J. 213.

—————o:—————

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

மதுரை ஜில்லா

C. M. A. 285 of 1910-12 ஆகஸ்ட் 1914

கதிரேசன் செட்டியார் Vs ராமஸாமிசெட்டியார்

ஸி. பி. ஸி. ஆர்டர் XXI-ரூல் 90-ன்படி மோசமான நடத்தையால் எலத்தை ரத்து செய்யக்கோறுகிறவன் எலத்தால் வசூலாகும் தொகையில் பங்குவிகிதமடைய லாயக்குள்ளவனாயிருக்கவேண்டும். அல்லது எல சொத்தில் பாத்தியதையுடையவனாக இருக்கவேண்டும். எலத்தொகை கோர்ட்டுக்கு வருமுன் நிறைவேற்று நடவடிக்கை எடுத்திராத வேறொரு டிக்கிரீ பாக்கிதார் இந்த ரூலின்படி எலத்தை ரத்து செய்ய லாயக்குள்ளவனல்ல. அவன் எலத்தால் பாதகமடைந்தவனென்று சொல்லத்தகாது. ஏனெனில் அவனுக்கு, எல சொத்தில் பாத்தியதை ஏற்படவில்லை.

1903-ம் வருஷத்திய அசல்நெ. 167-ல் டிக்கிரி பெற்ற வாதி தாவா சொத்துக்களை ஜப்திசெய்து ஏலத்திற்குக் கொண்டுவந்து ஏலமாகி கிரயதார் ஏலத்தொகையைக் கோர்ட்டில் கட்டியுமாச்சுது. இரண்டு வாரத்திற்குப்பின் கதிரேசன் செட்டியார் என்ற மனுதார் தான் ஏலத்திற்கு முன்னதாகவே அதே பிரதிவாதியின் பேரில் பெற்றிருந்த டிக்கிரியை நிறைவேற்றும்பொருட்டு தாவா சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்து அத்துடன் முந்திய ஏல நடவடிக்கையில் மோசமும் நடந்ததாகவும் ஆகையால் அதை ரத்துசெய்யவேண்டுமென்றும் கோர்ட்டில் கட்டியிருக்கிற தொகையில் தனக்கும் பங்கு பிரித்துக்கொடுக்கவேண்டுமென்றும் கோரிக்கொண்டார். ஏலத்தொகை கோர்ட்டுக்கு வந்து சேருமுன் மனுதார் நிறைவேற்று விண்ணப்பம் கொடுக்காத காரணத்தால் அவருக்கு வசூலான தொகையில் பங்குவிகிதமளிக்க நியாயமில்லையென்றும், அதே காரணத்தால் ஷை ஏலத்தை ரத்து செய்யும்படி மனுதார் விண்ணப்பம் கொடுக்க லாயக்கில்லையென்றும் தீர்மானித்து சப்கோர்ட்டார் மனுதாரின் விண்ணப்பங்களையெல்லாம் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் சில்லரை மனுப்பில் செய்து பங்குவிகிதம் வேண்டுமென்று கோரிக்கொள்ளாமல் ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்று மட்டும் வாதம் செய்தார். ஹைகோர்ட்டார் மனுதாரின் அப்பீலைத் தள்ளுபடிசெய்த உத்தரவின் சுருக்கமாவது:—

புதிய ஸி. பி. ஸி. கோட் ஆர்டர் 21-ரூல் 90-ன்படி ஏலத்தை ரத்து செய்யும்பொருட்டு விண்ணப்பம் கொடுக்க லாயக்குள்ளவன் ஏலத்தால் வசூலான தொகையில் பங்குவிகிதமடையத் தக்கவனாக இருக்கவேண்டும்; அல்லது ஏலத்தால் அவனுடைய பாத்தியதையைக்குக்கெடுதியுண்டாகியிருக்கவேண்டும். மனுதார் பங்குவிகிதமடையப் பாத்திரனல்லவென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் தொகை கோர்ட்டுக்கு வருமுன் நிறைவேற்று விண்ணப்பம் கொடுக்கவில்லை. ஆனால் மனுதார் ஏலத்தால் தன்னுடைய பாத்தியதைக்குக் குறைவுண்டாய்விட்டதென்று சொல்லி ஏலத்தை ரத்துசெய்ய விண்ணப்பம் கொடுக்கலாமென்று வாதிக்கிறார். அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுதாரின் பாத்தியதையாதொன்றும் ஏலத்தால் கெட்டதாகச் சொல்ல நியாயமில்லை. 17 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 80-ல் சொல்லியிருக்கிறபடி "ஒருவனுடைய பாத்தியதைக்கு ஏலத்தால் பாதகமேற்பட்டால்" என்ற வாக்கியத்தில் பாத்தியதை என்ற பதத்திற்கு ஏலசொத்திலுள்ளபாத்தியமென்றும் அர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வித அனுசரித்துப்பார்த்தால் மனுதாருக்கு ஏல சொத்தில் தற்போதைக்குள்ள பாத்தியதை யாதொன்றும் இடையாது. மனுதார் டிக்கிரி பெறுமுன் தாவா சொத்தை உடன் ஜப்திசெய்திருந்த காரணத்தால் சொத்து பாத்தியதை உண்டாகவில்லையென்று சொல்லவேண்டும். பாத்தியதை என்ற வசனத்திற்கு சொத்தில் ஏற்பட்டிருக்கிற பாத்தியதை என்ற குறுகின அர்த்தம் கொடுக்கப்படாமல் ஏல சொத்தின்பேரில் தொடரக்கூடியவன்கூட சொத்து பாத்தியதையுடையவன் என்று யூகித்தால் சொத்தின்பேரில் தொடரக்கூடியவனுக்குச் சேரவேண்டிய யாதொரு பாக்கியானது ஏலமான சொத்திலிருந்து தான் வசூலிக்கவேண்டியதாகுமா அல்லது ஷை யார் தொடருவதற்கு இதரமான சொத்துக்கள் இடையாதா என்ற விஷயம் தீர்மானிக்கப்படவேண்டியதாகும். தவிர டாக்கிதாரன் டிக்கிரி பெற்றவனை ஏலது டிக்கிரி பெறுதவனென்று கவனித்து டிக்கிரி பெறுதவனாயிருந்தால் பாக்கி வாஸ்தவமாய்ச் சேரவேண்டியதுதானா என்ற விஷயமும் இந்த விண்ணப்ப விஜாரணையிலேயே தீர்மானிக்க வேண்டியதாகும். சட்டகர்த்தாக்கள் அவ்வித விஷயங்களையெல்லாம் தீர்மானிக்க வேண்டிய விதமாய் பாத்தியதையுடையவன் என்ற பதத்திற்கு அர்த்தம் பிரயோகிக்க உத்தேசித்ததாக நினைக்க நியாயமில்லை, ஆகவே ஏல சொத்தில் பாத்தியதை ஏற்பட்டிருக்கிறவன் தான் ஏலத்தை ரத்துசெய்ய விண்ணப்பம் கொடுக்கலாமென்று சொல்லவேண்டும்

அன்றியும் வசூலான தொகையில் பங்கு விகிதமடைய லாயக்குள்ளவன் ஏலத்தை ரத்துசெய்ய லாயக்குண்டென்று விதிக்கப்பட்டிருக்கிறது. பழய கோடில் "டிக்கிரி பெற்றவர்" மட்டும் லாயக்குள்ளவன் என்று விதிக்கப்பட்டிருந்தது. புது கோடில் டிக்கிரிபெற்றவர்மட்டு மல்லாமல் பார்ட்டியல்லாத அன்னியனும் சேர்க்கப்பட்டு அதில் பங்கு விகிதத்திற்கு யோக்கியமுள்ளவன் என்று அன்னியனைக் குறிப்பிட்டிருக்கிறது. ஆகையால் பங்குவிகிதம் அடைய லாயக்கில்லாதவேறுடிக்கிரிதாரன்லாயக்கில்லையென்று சொல்லத்தகும். அப்படிப்பட்டவர்களை விலக்கியிருக்கிற கருத்தானது 2-வது யோக்கியதையுள்ளவர்களில் சேர்க்கத்தகாது" அதாவது ஏலத்தால் பாத்தியதைக்குக் குறைவடைந்தவன் ? என்ற வசனத்தில் அவன் சேர்ந்தவனாக நிதானிக்கக்கூடாது. அப்படி நிதானித்தால் சட்டகர்த்தாக்கள் முதலாவது நிலைமையைக் குறுக்கின கருத்து பயனற்றதாய்ப்போகும். ஆகையால் 2-வது ஷரத்தில் பாத்தியதை என்ற பதத்திற்கு சொத்தில் பாத்தியதை என்று நிதானிக்கவேண்டும். ஆகையால் மனுதாருக்கு ஏல சொத்தில் பாத்தியதை ஏற்படாத காரணத்தால் அவர் ஏலத்தை ரத்து செய்ய லாயக்குள்ளவரல்லவென்று சொல்லவேண்டும். மேற்கூறிய காரணங்களால் இந்த மனு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII. M. L. J. 302.

———:O:———



... 1914 ... MADRAS.

சீவ் ஜஸ்டிஸ். & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

வட ஆர்காடு ஜில்லா.

A. S. 126 of 1909—9 ஏப்பிரல் 1914

ராமானுஜ அய்யங்கார் Vs சடகோபாச்சாரியார்

உயில் சாஸனத்தில் பெண்ணினங்களுக்கு ஜீவதசைமட்டும் பாத்தியதை உண்டென்ற நியாயம் எப்பொழுதும் அனுஸரிக்கத்தகாது உயிலின் வசனங்களால் அவளுக்கு அத்த ரீதியாய் சொத்து பாத்தியதை யளிக்கப்பட்டதாக சாஸன கர்த்தாவின் நோக்கம் விளங்கினால் பெண்ணினமென்ற நிலமை அதனால் ஏற்படும் ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதைக்கு இடையூராகாது.

1857-ம் வருஷத்தில் சேஷய்யங்கார் என்றவர் தனக்கு ஆண்சந்ததி இல்லாத காரணத்தால் தனக்குறிய நஞ்சை புஞ்சை நிலங்களையும் தோட்டக்கால்களையும் தன்மனைவிக்கும் மகளுக்கும் பொதுவாய் ஆண்டு அனுபவிக்கும்படி சிலசொத்துக்களையும், தன் தமையனுருடைய மூத்தகுமாரிக்கும் காலஞ்சென்ற இளையகுமாரியின் புத்திரனுக்கும் பொதுவாய் ஆண்டு அனுபவிக்கும்படி சிலசொத்துக்களையும் அளித்து, மிகுதியான சொத்துக்களை சில தர்ம விஷயங்களுக்காக அற்பிதம் செய்துவிட்டார். உயிலின் வசனங்களில் மேற்கூறிய மூன்று வகைக்காகவும் சொத்துக்களை அளித்துவிட்டதாக ஒவ்வொரு வகையிலும் ஒரே மாதிரியாக கண்டெழுதப்பட்டிருக்கிறது. அதன்படி சாஸனகர்த்தாவாகிய மூல புருஷனுடைய தமையன் புத்திரியாகிய அமிருதம்மாள் என்றபெண்ணினத்திற்கு ராகவாசாரிஎன்றஆண் இனத்துடன் சேர்ந்து அனுபவிக்க 2-வது அயிடம் சொத்துக்கள்உயிலினால் அளிக்கப்பட்டிருந்ததால், அமிருதம்மாளுடைய ஜீவதசைக்குப்பின் அவளுடைய நேரான வாரிஸ்கள் அவளுடைய சம பாதி பாகத்தை அடைந்து அனுபவிக்கையில் உயிலினால் அமிருதம்மாளுக்கு ஜீவதசை மட்டும்தான் சொத்து பாத்தியதை உண்டென்றும் ஆகவே அவளுக்குப்பின் அந்த சொத்து பாகமானது மூலபுருஷருடைய இதரமான வாரிஸ்கள் அடையவேண்டுமென்று அபேக்ஷித்து ஷை யார்கள் தாவாசெய்ததில் ஜில்லாகோட்டார் அமிருதம்மாளுக்கு உயிலினால் ஸர்வஸ்வதந்தரபாத்தியதை ஏற்பட்டிருந்ததாக உயிலின் வசனங்களைக்கொண்டு தீர்மான அபிப்பிராயம்கொடுத்து வாதிகளின்பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோட்டார் அப்பீலில் அதே அபிப்பிராயப்பட்டார்கள். ஹைகோட் தீர்ப்பில் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் கொடுத்த தீர்மானச் சுருக்கமாவது :—

வாதிகளுக்காக வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ வி. வி. அனந்த கிருஷ்ணய்யரவர்கள் அமிருதம்மாளுக்கு உயில்படி ஜீவதசைமட்டும் தான் பாத்தியமுண்டென்று வாதிக்கிறார். 22 மதராஸ் 357-லும் இன்னும் சிற்சில ரிபோர்டான தீர்மானங்களிலும், ஒரு ஹிந்துவானவன் மரணசாஸனத்தால் தன்மனைவிக்காவது மகளுக்காவது(22-மதராஸ்கேஸில் மருமகளுக்காவது) தன்னுடைய சொத்துக்களை எழுதிவைத்தால் அவ்விதமான பெண்ணினங்கள் தங்கள் ஜீவதசைமட்டும்தான் அந்த சொத்துக்களை ஆண்டு அனுபவிக்கவேண்டுமென்று சாஸனகர்த்தா எண்ணங்கொண்டிருந்தானென்று அதாவது அவர்களுக்கு உயில் சாஸனத்தால் அல்லாது சொத்தில் என்னவிதபாத்தியம் உண்டாகுமோ அதை மட்டும் அவர்கள் உயிலினால் அடையவேண்டுமென்று சாஸன கர்த்தாவின் கருத்தாக உயிலின் வசனத்திற்கு ஒருகருத்தையும் அனுமானத்தையும்ஏற்படுத்தவேண்டியமுறையென்றுசொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கேஸில் அவ்வித முறையை அனுசரித்துஉயிலின் கருத்தை யூகிக்கலாமா? அதாவது அமிருதம்மாளுக்கு உயில் பாத்தியதை இல்லாவிடில் என்ன பாத்தியதை உண்டோ அது மட்டும் உயிலினால் ஏற்பட்டதென்று சொல்லலாமா? அப்படிப்பார்த்தால் உயிலைத் தவிர்த்து அமிருதம்மாளுக்கு சிறு தகப்பனுடைய சொத்தில் பாத்தியதை யாதொன்றும் கிடையாது. ஆகவே உயிலினால் அமிருதம்மாளுக்கு யாதொரு நன்மையும் கிடையாதென்று சொல்லவேண்டியதாகும். இந்த அசந்தர்ப்பமான கருத்தை தாவாகேஸுக்குப் பிரயோகிக்கத் தகாதென்று சொல்லவேண்டும். ஆனால் ஒருஉயிலின் வசனங்கள் முழுவதையும் கவனித்துப்பார்த்து சாஸன கர்த்தாவின் மனதில் யாதொருபெண்ணினத்திற்கு ஸர்வஸ்வதந்தரமான பாத்தியதை ஏற்படவேண்டுமென்ற கருத்திருந்ததாகத் தோன்றினால் மேற்கூறிய தீர்மானங்

களில் சொல்லியிருக்கிற முறைப்படிசாஸனகர்த்தா எண்ணியிருந்ததாகச் சொல்லத்தகாது.

தாவா உயிலின் வசனங்களைப் பார்த்தால் மூன்று தினுஸாகப் பிரித்து சொத்துக்களை விநியோகம் செய்தபொழுது ஒவ்வொருவருக்கும் ஒரேவிதமான சொற்களால் அந்தந்த சொத்து பாகத்தை அளித்து விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 31 மதராஸ் 176-ல் உயிலினால் நன்கொடை பெற்ற ஆண், பெண் ஆகிய இருவருக்கும் ஒரேவிதமான சொற்களால் சொத்துவிநியோகம் ஏற்பட்டதில் ஆண் இனத்திற்கு எவ்வித பாத்தியதை ஏற்படுமோ அதேவித பாத்தியதை பெண்ணினத்திற்குமுண்டென்று அதாவது ஆணைப்போல்பெண்ணுக்கும் உயிலில் ஏற்பட்டசொத்தில் ஸர்வஸ்வதந்திரபாத்தியதை உண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்க, வக்கில் மிஸ்டர் அனந்த கிருஷ்ணய்யரவர்கள் 31 மதராஸ் கேஸில் ஏற்பட்ட உயிலினால் பெண்ணுக்குஎன்னபாத்தியம் ஏற்பட்டதோ அதுபோலவே ஆண்இனத்திற்கும் ஏற்பட்டதாக பாவிக்கப்படவேண்டுமென்று (தலைகீழானதர்க்கநியாயம்) வாதித்தார். அதாவது 22 மதராஸ் கேஸில் சொல்லிய நியாயமுறைப்படி பெண்ணுக்கு ஜீவதசைமட்டும் பாத்தியதை உண்டாதலால் அதேவித வசனத்தால் நன்கொடைபெற்ற ஆண் இனத்திற்கும் அதேவிதமான ஜீவதசை பாத்தியதைதான் உண்டென்று சொல்லப்பட்டது. [31 மதராஸ் கேஸில் ஒரேவித வசனத்தால் ஆண்பெண் இருவருக்கும் சொத்து அளிக்கப்பட்டிருக்க ஹைகோர்ட்டார் இருவருக்கும் ஒரேவித பாத்தியதை ஏற்படவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு ஆணுக்குள்ளபடிபெண்ணுக்கு முண்டென்று சொல்லியிருக்க வேண்டும். அதைத்திருப்பி வாதி வக்கிலவர்களால் பெண்ணுக்குள்ளபடி தான் ஆணுக்குமுண்டென்றும் ஆகவே ஆணுக்கு ஜீவதசை பாத்தியதைமட்டும் உண்டென்று 31 மதராஸ் கேஸின் உயிலுக்கு அர்த்தபாவப்படுத்தவேண்டுமென்று சாதுர்யமாய் வாதிக்கப்படுகிறது.] ஆனால் அந்தக்கேஸில் சாஸனகர்த்தாவுக்கு அவ்வித அபிப்பிராயமிருந்ததாக எண்ண நியாயமே இல்லை. வாதி வக்கிலவர்கள் சொல்லும் கக்ஷியைப்பார்த்தால்அநேகர்களுக்குஜீவதசைமட்டும் ஒருவர் பாத்தியதை ஏற்படுத்தி அதற்குப்பின் சொத்து என்ன கதியாகிறதென்று சொல்லாமல் விட்டுவிடத்தக்கதாய் உயிலை அனுமானிக்க வேண்டியதாகிறது. சாஸனகர்த்தா அம்மாதிரி கருத்துடையவரென்று சொல்லத்தகாது. 35 கல்கத்தா 896-ல் பிரிவி கௌன்ஸிலார் ஹைகோர்ட் அபிப்பிராயத்திற்கு விரோதமாக உயிலின் வசனங்கள் முழுவதையும் கவனித்துப்பார்த்து சாஸனகர்த்தா தன் சொத்துக்கள் பெண்வயிற்றுப் பேத்திகளுக்கு வாரிஸ் பாத்தியதையால் செல்லாதிருக்க வேண்டுமென்ற கருத்துடன் தன் மனைவிக்குத் தன் சொத்துக்களில் ஜீவதசைமட்டும்பாத்தியதை உண்டாக்கியிருக்கிறாரென்று தீர்மானித்தார்களென்பது நியாயமே. [பெண்வயிற்றுப் பேத்திமார்களுக்குத் தன் சொத்து சேரக்கூடாதென்று எண்ணங்கொண்ட விஷயம் உயிலில் துலங்கினபடியால் தன் மனைவிக்கு ஜீவதசைமட்டும் பாத்தியமுண்டென்று உயிலின் கருத்தை பிரிவிகௌன்ஸிலார் நிதானித்திருக்கிறார்கள். சர்வஸ்வதந்தர பாத்தியதை ஏற்பட்டதாகச் சொன்னால் ஹிந்து லாப்படிக்கு மகளும் பேத்தியும் சொத்தை வாரிஸ்பாத்தியதையால் அடைய நேரிடும்.] மதராஸ் ஹைகோர்ட்டிலும் சொற்பகாலத்திற்கு முன் சிற்சில தீர்மானங்கள் ஏற்பட்டு ஹானரபில்ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யரவர்களும் மற்றொரு நியாயாதிபதியவர்களும் கொடுத்தஅபிப்பிராயத்தில் முந்தியகாலத்து தீர்மான அபிப்பிராயங்கள் எப்படியிருந்தாலும் ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணினங்களுக்கு யாதொரு நன்கொடை யளிக்கப்பட்டால் அது ஜீவதசைமட்டும்தான் ஏற்படவேண்டுமென்ற கருத்தைக்கொண்டு நிதானிக்கப் படாதென்று சொல்லியிருக்கிறார்கள். தாவா உயில் 1857-ல் பிறந்தமையால் அக்காலத்தில் கோர்ட்டார் அனுசரிக்கவேண்டிய தீர்மான நியாயத்தைக்கொண்டு உயிலின் கருத்தை நிதானிக்க வேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. 1857-ல் கோர்ட்டார் 21 மதராஸில் சொல்லப்பட்ட கருத்தின் முறையை அனுஷ்டித்திருப்பார்களென்று சொல்லத்தகாது. எப்படியிருந்தபோதிலும் இந்தக்கேஸில் சாஸனகர்த்தா எல்லோருக்கும் ஒரேமாதிரியாக பரிபூரணமான பாத்தியதையுடன் சொத்தைக் கொடுத்தாரென்றே சொல்லவேண்டும். ஜில்லாகோர்ட் தீர்ப்பு காயமாகி அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.



7 - DEC 1914 MADRAS.

ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் கொடுத்த தீர்ப்பில் சாஸனகர்த்தா அமிருதம்மாளுக்குஜீவதசைமட்டுமல்லாமல் ஸர்வஸ்வதந்தர பாத்தியதையளித்தாரென்று தீர்மானிப்பதற்கு 4-வித காரணங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் :—(1) ஒவ்வொரு விநியோக வசனமும் ஒரேமாதிரியாய் சொத்துக்களை அளித்துவிட்டதாகச் சொன்னதில் ஸர்வஸ்வதந்தர பாத்தியமென்ற கருத்துஅடங்கியிருக்கிறதாகச்சொல்லவேண்டும்; (2) அமிருதம்மாள் ராகவாச்சாரியார்என்ற ஆண் பெண் இருவரும் ஒரேவித பாத்தியதையை அடைய உத்தேசிக்கப்பட்டதாகச்சொல்லவேண்டும். ஆண் இனத்திற்குச் சொத்து அளிக்கப்பட்டால் அது ஜீவதசைமட்டும் ஏற்படுத்தப்படுவது சம்பிரதாயமேயில்லை. ஆகவே ஆண் இனத்திற்குச் சமமான ஸர்வஸ்வதந்தர பாத்தியதை தாவா உயிலினால் ஏற்பட்டதாகவே சொல்லவேண்டும், (3) சாஸன கர்த்தா தர்மத்திற்காக யாதொரு சொத்து பாகத்தை அளித்தவசனத்திற்கு ஒப்பாகவே அமிருதம்மாளுக்கும்விநியோக வசனம்ஏற்பட்டிருப்பதால் தர்மவிஷயத்திற்கு ஜீவதசை மட்டுமுள்ள பாத்தியதை அஸம்பாவிதமாயிருக்கிறபடியால் தர்மத்திற்கு ஏற்பட்டதைப்போல் அமிருதம்மாளுக்கும் தாவா சொத்து பாத்தியதையானது ஸர்வஸ்வதந்திரத்துடன் கூடியதென்று கருதப்படவேண்டும்; (4) தவிர குடும்ப சொத்தில் யாதொரு பாத்தியதையும் உடைத்தாயிராத ஸ்திரீயாகிய அமிருதம்மாளுக்கு ஜீவதசைமட்டும் அனுபவிக்கத்தக்க சொத்துபாத்தியதை சாஸன கர்த்தாவினால் ஏற்படுத்தப்படமாட்டாதென்று சொல்லவேண்டும். ஆகவே மேற்கூறிய நியாயங்களால் வாதிகளின் தாவாதள்ளுபடியானது நியாயமென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. XXVII M.L.J. 329.

———::———

ஜஸ்டிஸ் **சதாசிவ** ஐயர் & ஜஸ்டிஸ் **நேபியர்**

திருச்சினாப்பள்ளி ஜில்லா

S. A 2226 of 1912—11 ஆகஸ் 1914.

முத்துகருப்பமுதலி vs. காத்தப்புடையான்

கடன் கொடுக்கும்படி சிபார்சி செய்தவன் பின்னால் கடன்துகைக்கு ஜாமீன் ஒப்பந்தம் செய்துகொண்டாலும் அக்கடனுக்காக அவன் பேரில் தொடருவதற்கு நியாயமில்லையென்றும், ஜாமீன் ஒப்பந்தத்திற்குப் பிரதிபிரயோஜனமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1-ம் பிரதிவாதியாகிய காத்தப்புடையானுடைய சிபார்சின்பேரில் வாதி ஒருவனுக்குத் துகை கடன் கொடுத்தபின் அந்தத் துகை விஷயமாய் வாதி கடன் வாங்கினவனை நிர்ப்பந்தப்படுத்திவாபிஸ் கேட்ட பொழுது 1-ம் பிரதிவாதி வாதிக்கு அந்தக்கடனுக்காகத் தான் ஜவாப்தாரியென்று ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுத்தார். வாதி 1904-ம் வருஷத்தில் 1-ம் பிரதிவாதியின் பேரில் ஷை ஜாமீன் ஒப்பந்தத்தை ஆதாரமாகக் கொண்டு அரியலூர் டி-மு கோர்ட்டில் அசல் தாவாசெய்து அந்த வியவகாரம் ஹைகோர்ட்டுக்கு 2-வது அப்பீலாகவந்துஹைகோர்ட்டார் ஷை ஜாமீன் ஒப்பந்தத்திற்குப் பிரதிப்பிரயோஜன முண்டாவெனத் தீர்மானித்துப் பைசல் சொல்லும்படி ஜில்லா கோர்ட்டுக்கு ரிமாண்டு உத்தரவு செய்தனுப்பினார்கள். ரிமாண்டு விசாரணையில் ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட வாதி மறுபடியும் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானமே காயமாகி 2-வது அபீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது :—ரிமாண்டின்பேரில் ஜில்லாகோர்ட்டார் கேஸில்ஏற்பட்ட எல்லா இஷ்யூ பாயிண்டுகளைப்பற்றியும் தீர்மானம் அபிப்பிராயம் கொடுத்திருக்க வேண்டுமென்றும் ரிமாண்டு உத்தரவு பிறந்தபின் பார்ட்டிகள் சமாதானமாய்ப் போனதாகச்சொல்லியும் ஜில்லாகோர்ட்டார் ராஜிநாமாவின் பிரகாரம் டிக்கிரீயளித்திருக்க வேண்டுமென்றும், ஜாமீன் உடன்படிக்கைக்குப் பிரதிப் பிரயோஜனம் கிடையாதென்ற ஜில்லாகோர்ட்டாரின் தீர்மானமு சட்டவிரோதமென்றும் ஆக மூன்று விதமான வாதம் வாதிக்காகச் செய்யப்படுகிறது. ஹைகோர்ட்டார் ரிமாண்டு உத்தரவில் ஜாமீன் உடன்படிக்கைக்குப் பிரதிபிரயோசன முண்டாவென்று மட்டும் தீர்மானிக்கும்படி உத்தரவளித்தமையால்மற்றஇஷ்யூக்களைப்பற்றி திரும்பவும் தீர்மானம் கொடுக்க அவசியமில்லையென்று சொல்லவேண்டும். ராஜீநாமா விஷயமாய் ஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயத்தில் பார்ட்டிகள் அனைவரும் சம்மதித்து ராஜிநாமா செய்து கொண்டதாக ஏற்படவில்லையென்றும்

ஆகையால் ராஜிநாமா சம்மதிக்காத பார்ட்டிகளைக் கட்டுப்படுத்தாதென்றும் அதன்பிரகாரம் டிக்கிரீயளிக்கத் தகாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்மானம் சரியானதென்று ஒப்புக்கொள்ள வேண்டும் ஜாமீன் உடன்படிக்கைக்குப் பிரதி பிரயோஜன மில்லையென்று ஜில்லாகோர்ட்டார்அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். சிபார்சு செய்தவனுடைய வார்த்தையை நம்பி ஒருவன்வேறு யாதொருவனுக்குக் கடன் கொடுத்திருந்தால்பின்னால் ஏற்படும் ஜாமீன் ஒப்பந்தத்திற்கு அந்தவிஷயமே சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க பிரதி பிரயோஜனமாகுமென்று வாதிக்கப்படுகிறது. காண்டிராக்ட் ஆக்டின் 127-வது பிரிவில் முக்கியமானகடன்காரனுடைய நன்மைக்காகச் செய்யப்படும் காரியமானது ஜாமீன்தாருக்குப் போதுமான பிரதி பிரயோஜனமாகுமென்று சொல்லப் பட்டிருக்கிறது பிரதி பிரயோஜனம் என்ற வார்த்தைக்கு காண்டிராக்ட் ஆக்டின் 2-வது பிரிவில் ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறவனுடைய அல்லது துகையை திரும்பிக்கொடுப்பதாய் ஒப்புக் கொள்ளுகிறவனுடைய விருப்பத்தின்படி யாதொருவன் நடந்திருந்தால் (துகையைக் கொடுத்திருந்தால்) அதுதான் பிரதி பிரயோஜனமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. 1-ம் பிரதிவாதிவாதியைத்துகைகொடுக்கும்படிவிரும்பியிருந்து அதன்மேல்.வாதி கடன்கொடுத்திருந்தால் அது 1-ம் பிரதிவாதியின் ஜாமீன் ஒப்பந்தத்திற்குப் போதுமான பிரதி பிரயோஜனமாகும். ஆனால் 1-ம்பிரதிவாதி அப்படி விரும்பினதாகச் சொல்ல நியாயமில்லை. துகையைக் கொடுக்கலாமென்று சிபார்சு செய்யப்பட்டதேயொழிய துகைகொடுக்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப்படவுமில்லை. விரும்பப்படவுமில்லை. 20 பம்பாய் 755-ல் சொல்லியபடி விருப்பம் அல்லது வேண்டுகோளானது ஸ்பஷ்டமான வசனங்களாகவு மிருக்கலாம், அல்லது ஸூசனையாகவு மிருக்கலாம்; யூகிக்கப்படலாம். சிபார்சி செய்கிற விஷயமானது விருப்பம், வேண்டுகோளென்ற கருத்திலடங்கியதாக அதாரிடியும் காணப்படவில்லை வியாக்கியானிகளாலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. (W. R. 24 Civil Rulings) 445 ல் சிபார்சி செய்கிறவன் கடனைத் திரும்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவனல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிபார்சி செய்கிறவன் கடனைத் தான் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளாத காரணத்தையிட்டு மேற்கூறியபடி தீர்மானமாகி யிருக்கிறது. சிபார்சியின் கருத்தும் அந்தத் தீர்மானத்தால் விளங்குகிறது. இங்கிலாந்திலுள்ள சட்டமுறைகளின்படியும் சிபார்சிசெய்கிறவனுக்கு பிரதி பிரயோஜனம்ஏற்பட்டதாக பாவிக்கப்படாதென்பதில் சந்தேகமில்லை. சிபார்சி செய்கிறவன் ஜாமீன் வாக்களித்து அவன் சொல்படி யாதொரு காரியத்தை மூன்றாவது மனிதனுடைய நன்மைக்காக நடத்தி, அவ்விதமான ஜாமீன் வாக்கு ஏற்படாவிட்டால் அந்தக்காரியம் செய்யப்பட்டிருக்காதென்றால், அவ்வித சந்தர்ப்பத்தின் பேரில் நடக்கிற காரியம் (கொடுக்கிறதுகை) இந்தியன் சட்ட முறையில் முந்தி நடந்திருந்த காரியமானாலும் பிரதி பிரயோஜனமாக பாவிக்கப்பட்டு ஜாமீன் ஒப்பந்தக்காரன் பேரில் தொடர நியாயமுண்டு. ஆனால் இந்தக்கேஸின் அம்சத்தில் அவ்விதசந்தர்ப்பம்யாதொன்றும் கிடையாது. அதாவது சிபார்சி செய்தகாலத்தில் ஜாமீன் வாக்களிக்கப்படவில்லை. ஆகையால் ஜாமீன்தாரனாகிய 1-ம் பிரதிவாதியின் பேரில் வாதி பின்னால் ஏற்பட்ட ஜாமீன் ஒப்பந்தத்தை யனுஸரித்து தாவா செய்து டிக்கிரியடைய நியாயமில்லை யென்று சொல்லப்பட்டு 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

மேற்கூறிய விதமான ஹானரபில் ஜஸ்டிஸ் நேபியர் அவர்களுடைய தீர்மானத்திற்கு ஒற்றுமையாக ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் சொன்னகாரணச் சுருக்கமாவது:—

யாதொரு கடனைக் கொடுத்து விடுவதாய் ஒப்புக்கொள்ளுகிறவனுக்கு (வாக்களிக்கிறவனுக்கு) முந்திய வேண்டுகோளின் பேரில் நடந்தகாரியமானது பிரதிபிரயோஜனமாகுமாவென்பதைநிர்ணயிப்பது மிகவும் கடினமான காரியமாகும். எப்படிப்பட்ட வேண்டுகோளின் பேரில் எவ்வகையான காரியம் நடந்திருக்கிறதென்று கவனித்து அவ்விதமாய் நடந்தகாரியத்தைப்பின்னால் ஏற்படும் உடன்படிக்கைக்குப் பிரதி பிரயோஜனமாகுமாவென்று நிதானிக்கவேண்டியதாகும். சகலவிதமான வேண்டுகோளும் அதை யனுசரித்து நடந்த சகலவிதமான காரியங்களும்பிரதிபிரயோஜனமாக பாவிக்கத்தகாது.



ஒப்பந்தம்செய்து கொடுக்கிறவனுடையவிருப்பத்தின்பேரில்ஒருவன் யாதொருகாரியத்தைச்செய்தால் அந்தக்காரியம்ஒப்பந்தத்திற்குப்பிரதிபிரயோஜனம் தானென்று காண்டிராக்ட் ஆக்ட் 2(a)-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. A-என்பவன்B-என்பவனிடத்தில் வேண்டிக்கொண்ட ஒரு காரியமாவது B-தன் சட்டையின்இடதுபையிலிருக்கும்பொருளை Bயின் வலது பையில் போட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். B-அப்படி நடந்ததால் தன்னிடமிருக்கும் பொருள் தன்னை விட்டுப் போகவில்லை. இவ்வித வேண்டுகோளினால் B- நடந்து கொண்டால் அது யாதொரு பிரதி பிரயோஜனமாகபாவிக்கத்தகாது.

இங்கிலீஷ் சட்டமுறையில் முந்தி ஏற்பட்ட பிரதிபிரயோஜனமென்ற விஷயமே கிடையாது. வாக்களிக்கும் காலத்திலேயே யாதொரு காரியம் வேண்டிக்கொள்ளப்பட்டு அந்தக்காரியம் முடிந்திருக்கவேண்டும். அதைப்பின்னால் பர்த்திசெய்து கொடுப்பதாய் (கடனைத்திரும்பிக் கொடுப்பதாய்) அப்பொழுதே வாக்களிக்கப் படவேண்டும். இந்தியாவில் வேண்டுகோளின்படி பிரதி பிரயோஜனம் நடந்தகாலத்திலேயே பர்த்திசெய்து கொடுப்பதாய் வாக்களிக்கப்படவேண்டியதில்லை. ஜாமீன்ஒப்பந்தம் பின்னால் ஏற்படலாம். 20 பம்பாய் 755 ன்படி ஒருவன் ஒரு காரியத்தை சட்டப்படி செய்து முடிக்கக் கடமைப்பட்டிருந்தால் அந்தக்காரியத்தை முடிக்கும்படி. யாதொருவன் வேண்டிக்கொண்டால் வேண்டிக்கொள்ளுகிறவனுக்கு அதுபிரதி பிரயோஜனமான காரியமாகாது. 1876 T.A. 309-ஐப்பார்க்கவும். ஆனால் ஜாமீன்தாருடைய வேண்டுகோள் கோரிக்கை, அல்லது விருப்பத்தின் பேரில் பிரதி பிரயோஜனமான காரியம் நடந்திருக்கவேண்டும் இந்தக்கேஸில் 1-ம் பிரதிவாதி சிபார்சி செய்தாரேயொழிய கடன்கொடுக்கவேண்டுமென்று கோறிக்கொள்ளவுமில்லை. விரும்பிக் கொள்ளவு மில்லை. ஒருவனைப்பற்றி சிபார்சி செய்வதற்கும் அவனுக்கு யாதொரு காரியம் செய்து முடிக்கும்படி கோறிக்கொள்வதற்கும் வித்தியாஸம் அநேக சந்தர்ப்பங்களில் மிகவும் சொற்பமாய்த்தோன்றும். ஒரு வியவகாரத்தின் சந்தர்ப்பங்களைக் கவனித்து வித்தியாஸம் கண்டுபிடித்துவிடலாம். சிபார்சி செய்கிறவனைவிட வேண்டிக்கொள்ளுகிறவனுக்கு காரியமு முடியவேண்டுமென்ற கவலையும் ஆவலும் அதிகமாயிருக்கவேண்டும். இந்தக்கேஸில்1-ம் பிரதிவாதி சிபார்சி செய்தாரொன்று மட்டும் கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அது சட்டபாயிண்டல்ல. ஆகையால் அந்த அபிப்பிராயத்தை 2-வது அப்பீலில் மாற்றநியாயமில்லை. ஆகையால் இந்த 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது நியாயமென்று தீர்மானிக்கப்பட்டது சரியே. XXVII M. L. J. 249.

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

C. M. A. 226 of 1913-21 செப்டம்பர் 1914

ஒரு பாக வியாஜ்ஜியத்தில் இருகட்சியினுடைய சம்மதியின் பேரில் பிராதில் கண்டிருக்கிற ஸ்தாவரசொத்துக்களை வாதி அடையவேண்டியதென்று டிக்கிரீயளிக்கப்பட்டது. பிராதில் குறிக்கப்பட்ட சில அயிடங்களில் வாதிக்கு சமபாதிபாகம் தான் உண்டாகையால் டிக்ரீயிலும் அதே பிரகாரம் மேற்கூறிய அயிடங்களில் வாதிக்குப் பாதிபாகம்தான் உண்டென்று காணப்பட்டிருந்தது. பாதிபாகம் இன்னதென்று குறித்துச் சொல்லப்படவில்லை. வாதி தனக்குக் கிடைத்த டிக்கிரீயின் பிரகாரம் கிடைக்க வேண்டிய சில அயிடங்களின் பாதி பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி நிறைவேற்று விண்ணப்பம் கொடுத்ததில் பிரதிவாதி நிறைவேற்று விண்ணப்பத்தை ஆக்ஷேபித்துக்கோர்ட்டார் டிக்கிரீயில கண்ட சொத்துக்களில்வாதிக்குக் கிடைக்வேண்டியுய பாதிபாகம் இன்னதென்று குறித்து பைசல் டிக்கிரீயளித்த பிறகுதான் வாதி நிறை வேற்று விண்ணப்பம் கொடுத்து அந்த பாகத்தைத் தனக்குச் சுவாதீனப்படுத்திக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளலாமென்றும் முதலில் ஏற்பட்ட டிக்கிரியானது பிரதம டிக்கிரீயாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லவே கீழ்கோர்ட்டார் பிரதிவாதியின் ஆக்ஷேபணையை ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கு நிறைவேற்ற அனுமதி கொடுத்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் சில்லரை மனு அப்பீல் தீர்மானத்தில் பிரதிவாதி

யின் ஆக்ஷேபனையை நியாயமென்று ஒப்புக்கொண்டு கீழ் கோர்ட் உத்தரவை ரத்து செய்து விட்டார்கள்.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 1120 of 1913-22 செப்டம்பர் 1914.

ஒருவன் தனக்கு அசையாப்பொருள் ஒன்றிலுள்ள எல்லாவிதமான பாத்தியதையும் வாதிக்கு விடுதலைப் பத்திரத்தால் மாற்றிக்கொடுத்து விட்டதில வாதி அந்த விடுதலைப் பத்திரத்தைக்கிறய தஸ்தவேஜாகபாவித்து அதற்குரியசிலாக்கியத்தை அடைய நியாயமில்லை யென்றும்அதேசொத்தைப் பற்றி வழக்காடும் ஒரு மூன்றாவது மனிதனுக்கு விரோதமாக ஷை விடுதலைப் பத்திரத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு ஜயமடையக் கூடாதென்றும் விடுதலைப் பத்திரமில்லாமலே வாதிக்குஅந்த சொத்தில் ஹக்கு பாத்தியதை இருப்பதாய் ருஜுப் படுத்தினாலொழிய வாதி மேற்கூறியமூன்றாவது மனிதனுடைய வழக்கில் ஜயமடையக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரிஅய்யர்

A. S. 188 of 1911—23 செப்டெம்பர் 1914.

ஸர்க்கார் தண்ணீரினால் பாசனமாகிற இனாம் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை விதிக்க நியாயமில்லையென்றும் அது விஷயமாய்ப் பிரத்தியேகமான உடன்படிக்கை ஏற்பட்டிருக்க வேண்டிய தவசிய மில்லையென்றும், இனாம் கிராண்டில் குறிக்கப்பட்டிருக்கிற நில விஸ்தீரணத்தைக்கொண்டு நீர் கூலி யில்லாமல் சாகுபடிக்குலாயக்குள்ள நிலங்களின் விஸ்தீரணத்தை நிதானிக்க வேண்டியகட்டாயமில்லையென்றும் தீர்மானிக்கப் பட்டது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S. A. 542 of 1913-23 செப்டம்பர் 1914.

ஒரு தஸ்தவேஜை எழுதினவன் என்றகருத்தாக அதாவது அதை எழுதினவன் என்ற நிலைமையை காட்டும்படி கையொப்பம் செய்திருந்தபோதிலும் தஸ்தவேஜானது யாரால் எழுதிக் கொடுக்கப்படுகிறதோ அவன் கையொப்பம் செய்ததை ஷை நெட்டெழுத்துக்காரன் கண்ணால்பார்த்து அதற்குப் பின் ஷை யான் எழுதினவனென்று ஒப்பமிட்ட போதிலும் அந்த நெட்டெழுத்துக்காரன் பத்திரத்திற்குறிய சாட்சியாக மதிக்கப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் ஏய்லிங் &
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

L. P. A. 37 of 1914-24 செப்டெம்பர் 1914.

ஒரு சொத்தை கிறயத்திற்கு வாங்கிக்கொள்வதாய் ஒப்புக்கொண்டவன் ஒப்பந்தப்படி நடக்கத் தவறினபடியால் அவன் பேரில் நஷ்டத்திற்காக தாவா செய்ததில் கோர்ட்டார் வாதிக்குக்கொடுக்கும் நஷ்டப்பரிகாரத்திலிருந்து வாதி அட்வான்ஸாகப் பெற்றுக்கொண்ட துகையைக் கழித்துக்கொள்ளக் கடவதென்றும் எக்ரீமெண்டில அட்வான்ஸ் துகையை இழந்துவிடவேண்டுமென்றும் நஷ்டத்துகை அளிக்கப்பட்டால் அட்வான்ஸ் அதிலிருந்து கழிக்கக்கூடாதென்றும் ஷரத்துக்கள் கண்டிருந்த போதிலும் அவ்வித ஷரத்துக்களை கவனிக்காமலே கோர்ட்டார் நஷ்டத்துகையிலிருந்து அட்வான்ஸ் துகையைக்கழிக்கும்படி கட்டளையிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

ஹிந்து லா கேஸ்.

தகப்பன், மகன் ஆகிய இருவர் அடங்கிய ஒரு ஹிந்துக் கூட்டுக்குடும்பத்தில் தகப்பன் மட்டும் தனிமையாகக் குடும்ப சொத்தை விக்கிறயம் செய்துகொடுப்பதாய் உடன்படிக்கை செய்து கொண்டால் அவ்விதமாய் சொத்தை விக்கிறயம் செய்வதற்கு அவசியம் ஏற்பட்டதாக ருஜுவாகாத பட்சத்தில் ஒப்பந்தத்தை வற்புறுத்தும்படி தகப்பன்பேரில் தாவா செய்ய நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

---



சீவ் ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஹானே,

தஞ்சாவூர் ஜில்லா.

A. S. 152 of 1911—19 ஆகஸ்ட் 1914.

சிங்காரஞ் செட்டியார்

vs

கல்யாணசுந்தரம் பிள்ளை.

---

கிரயம் செய்யப்பட்ட கையோடு மறு விக்கிறயம் செய்து கொடுப்பதாய் எதிர்நடைப் பத்திரமும் பிறந்தால் அவ்விரண்டு தஸ்தவேஜுகளும் சேர்ந்து விக்கிறய நிபந்தனையுடன் கூடிய அடமானக்கடன் பத்திரமாக பாவிக்கப்படவேண்டும்.

ஒரு ஹிந்து அல்லது மகம்மதிய விதவை தன்னுடைய ஜீவதசை பாத்தியதையை அனந்தர வாரிஸ்தாரனுக்கு விடுதலை செய்து கொடுத்ததற்கு முன் ஷையாள் அதே சொத்துபாத்தியதையை வேறுயாருக்கும்பராதீனப் படுத்தியிருந்தால் இந்தப்பராதீனம் அனந்தர வாரிஸ்களைக்கட்டுப்படுத்தாத போதிலும் அவள் ஜீவதசை மட்டும் மேற்கூறிய பராதீனம் பிந்தி ஏற்பட்ட விடுதலைப்பத்திரத்தால் கெட்டுப்போக நியாயமில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

1860-ம் வருஷத்தில் நல்லவிநாயகம் பிள்ளை என்றவருடைய தமையன் சாமிநாத செட்டியாருக்குக் குடும்ப சொத்துக்களை அடமானம் வைத்து வாங்கியிருந்த கடன் துகை ரூ. 7000-ல் ரூ. 3000 மேற்படியாரால் வாபீஸ் செய்யப்பட்டதின்பேரில் சொத்தில் பாதி பாகத்தை அடமான தாரிடமிருந்து திரும்பி யடைந்து மற்ற பாகத்தை அவரிடமே நிற்கும்படி விட்டுத் தன்னுடைய சம்பந்தத்தை விலக்கிக்கொண்டார். அதன் பிறகு 1876-ல் நல்லவிநாயகம் பிள்ளை என்றவருக்கு அடமான தாரராகிய சாமிநாத செட்டியார் ரூ. 6000 மேல் கடன் கொடுத்து முன்சேரவேண்டிய பாக்கி ரூபா 4000-த்துடன் சேர்த்து ரூ. 10,000-க்கு மொத்தமாய் புதிய தஸ்தவேஜை எழுதி வாங்கிக்கொண்டார். அதே சமயத்தில் சாமிநாத செட்டியாரும் நல்ல விநாயகம் பிள்ளையின்பேருக்கு எதிர்நடைப்பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்து இரண்டு தவணையாக ரூபா 10,000-மும் வாபீஸ் செய்யும் பட்சத்தில் முதல் துகை செல்லான உடன் சொத்தின் சமபாதி பாகத்தைத் திருப்பிக்கொடுத்து விடுவதாகவும் மிகுதித் துகையும் செலுத்தப்பட்ட பின் மறுபாதி சொத்தையும் கொடுத்து விடுவதாயும் அல்லது பூராத் துகையையும் ஒரே தடவையாக 1886 ஜூன் 30-க்குள் செலுத்தினாலும் சொத்து முழுவதையும் திரும்பிக் கொடுத்து விடுவதாயும் ஒப்புக்கொண்டிருந்தார். எதிர் நடைப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட வாய்தாவுக்குள் துகை செலுத்தப்படாத பட்சத்தில் எதிர் நடைபத்திரம் செல்லத்தகாதென்று அதாவது அதில் கண்டபடி சொத்தைத் திரும்பியடையும் பாத்தியதையை நல்ல விநாயகம் பிள்ளை இழந்து விடவேண்டியதென்ற ஷரத்தும் அதில் கண்டிருந்தது. நல்லவிநாயகம் பிள்ளை எதிர் நடைப்பத்திரத்தில் குறித்த கெடுவுக்குள் துகையைச் செலுத்தாமலே இறந்துபோனார். 1886-ம் வருஷத்தில் அவருடைய மூத்த தாரம் சாமிநாத செட்டியாரின் பேரில் தான் கெடுவுக்கு முந்திய துகை முழுவதையும் செலுத்த வந்ததாகவும் அதை சாமிநாத செட்டியார் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டாரென்றும் ஆகவே தாவா சொத்துக்களைத் தான் மீட்டுக்கொள்ளலாயக்குள்ளவளென்று தீர்மானம் அடையும் பொருட்டு தாவா செய்தாள். சாமிநாத செட்டியார் எதிரான்ஸரில் கெடுவுக்குள் துகை கொடுக்கவந்ததாகச் சொல்வது வாஸ்தவமல்லவென்றும் நல்லவிநாயகம் பிள்ளையின் இரண்டு தாரங்களும் தன்னிடம் பின்னும் மேலான துகை பெற்றுக்கொண்டு எதிர் நடையில் அவர்களுக்கிருந்த, சொத்தை மீட்கும் பாத்தியதையைத் தன் பேருக்கு விடுதலைசெய்து கொடுத்துவிட்டார்களென்றும் ஆகையால் மூத்ததாரம் ஷை தாவா செய்யத்தகாதென்றும் ஆக்ஷேபித்தார். இளையதாரம் மூத்ததாரத்துடன் சேர்ந்து வழக்காடாத காரணத்தால் பிரதி வாதியாகச் சேர்க்கப்பட்டு அவள் சாமிநாத செட்டியின் எதிரான்ஸருக்கு ஒற்றுமையாக ஸ்டேட்மெண்டு கொடுத்தாள். நல்ல விநாயகம் பிள்ளை எழுதிக் கொடுத்திருந்த A-ஆதாரவும் B-என்ற எதிர்நடைப்பத்திரமும் சேர்ந்து செய்யப்பட்ட நடவடிக்கை அடமானக் கடன்

பாபத்தாகுமா அல்லவாவென்ற ஒரு பிரதமஇஷ்யு விஜாரணையாகி சப் கோர்ட்டார் மேற்கூறிய தஸ்தவேஜுகள் அடமானக்கடன் ஏற்பாடல்லவென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள். மற்ற இஷ்யுக்களைப்பற்றி சாங்கி நடக்குமுன் இருகக்ஷியாரும் சமாதானமாகி மூத்ததாரம் சாமிநாத செட்டியாரிடம் இன்னும் ரூ 1 100-ஐப்பெற்றுக்கொண்டு அவளும் ஒரு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டாள். சமாதானமாய்ப் போனதகவல் கோர்ட்டாருக்குத் தெரிவிக்கப்படவே, பிராது பயிலிலிருந்து எடுபட்டுப் போச்சுது. அதன்மேல்சாமினாதஞ் செட்டியார் 1891-ல் ராமலிங்க செட்டியாருக்கு தாவா சொத்துக்கள் முழுவதையும் சுத்த விக்கிரியம் செய்து கொடுத்துவிட்டார். ராமலிங்க செட்டியாருக்குப் பின் அவருடைய புத்திரனும் பேரனும் அந்த சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு வந்தார்கள்.

இதற்கிடையில் நல்லவினாயகம் பிள்ளையின் மூத்ததாரம் காலஞ்சென்றுவிட்டாள். இளையதாரம் C. D. என்ற இரண்டு ஆதாரவுகளால் அடுத்த அனந்தரவாரிஸ் தாரனுக்கும் அவளுடைய ஸ்வீகாரபுத்திரனாகிய கல்யாண சுந்தரம் பிள்ளையென்ற வாதிக்கும் தாவா சொத்துக்களைப் பற்றிய பாத்தியதையை மாற்றி ஹக்கு விடுதலை செய்துகொடுத்துவிட்டாள். இந்தநடவடிக்கையானது மூத்ததாரம்கொண்டு வந்த பிராதில் அவள்கொடுத்திருந்த ஸ்டேட்மெண்டுக்கு விபரீதமானதென்று கவனிக்கவேண்டும்.

அடுத்த அனந்தரவாரிஸ்தார் இறந்துபோகவே கல்யாணசுந்தரம் பிள்ளையென்ற ஸ்வீகாரபுத்திரன் C. D. என்ற தஸ்தவேஜுகளினால் உண்டான பாத்தியதையை அடைந்து தாவா சொத்துக்களை விக்கிரய பாத்தியதையால் அனுபவித்து வருகிற ராமலிங்கசெட்டியாரின் மகன், பேரன் ஆகிய 1-2 பிரதிவாதிகளின் பேரில் தாவாசொத்துகளை மீட்டுக்கொள்ளும் பொருட்டு கும்பகோணம் சப் கோர்ட்டில் 1910 வருஷத்திய அசல் நெ. 23-ல் பிராது கொடுத்தான்.

பிரதிவாதிகள் எதிரான்ஸரில்-நல்ல வினாயகம் பிள்ளையும் சாமினாத செட்டியாரும் 1876-ல் பிறப்பித்துக்கொண்ட A. ஆதாரவு அடமானக் கடன்பாபத்தல்லவென்றும் சுத்தவிக்கிரியநடவடிக்கையென்றும் B. ஆதாரவினால் ஏற்பட்ட எதிர் நடை உடன்படிக்கையும் காலத்தவணை கடந்தமையால் செல்லத்தகாததென்றும் ஆகவே வாதிக்கு தாவா சொத்துகளை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை கிடையாதென்றும், இந்ததாவாவுக்குக் காலாவதி தோஷம் வந்துவிட்டதென்றும், வாதி ஸ்வீகாரபுத்திரனல்லவென்றும் மூலபுருஷனுடைய இளையதாரம் ஜீவனோடிருக்கிறபடியாலும் அனந்தரவாரிஸ்தாருக்கு சொத்து பாத்தியதை செல்லத்தக்கவிதமாய் அவள்தன்னுடைய பாத்தியதையை நீக்கிவிடவில்லையென்றும் (அதாவது C—D ஆதாரவுகளினால் வாதிக்கு தாவா சொத்தை அடையும் பாத்தியதை ஏற்படவில்லையென்றும்,) வாதி இந்த தாவாசெய்யலாயக்குண்டென்று கோர்ட்டார் தீர்மானித்தாலும் மூலபுருஷனாகிய நல்லவினாயகம்பிள்ளையின் மரணசாஸனத்தால் தாவா சொத்துக்களில் சிற்சில ஹக்குபாத்தியதையை அடையவேண்டியவர்களையும் பார்ட்டிகளாய்ச்சேர்க்காமல்இந்தபிராது செய்யக்கூடாதென்றும் பற்பலவிதமான ஆக்ஷேபனைகளைச் சொல்லி ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள் சப்கோர்ட்டார் பிரதிவாதிகளின் ஆக்ஷேபனைகளை ஏற்றுக்கொள்ளாமல் வாதி கோரியபடி தாவா சொத்துக்களை மீட்டுக்கொள்ளும்படி டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் ரத்தாகி இளையதாரம் ஜீவனோடிருக்குமட்டும் வாதிக்கு தாவா செய்ய பாத்தியம் கிடையாதென்று தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட நியாயச் சுருக்கமாவது:—A. B. ஆதாரவுகள் விக்கிரயஉடன்படிக்கையுடன் கூடிய அடமானக் கடன் பத்திரமாக பாவிக்கப்பட வேண்டுமென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது நியாயமே. இருதாரத்தாருடைய கருத்தைக்கொண்டு விக்கிறயமா அல்லது அடமானக் கடன் பாபத்தா வென்று நிதானிக்க வேண்டியது நியாயமாகும். 1860-ல் ஏற்பட்ட அடமானக்கடன் பாக்கி ரூ 4000-துடன் ரூ 6000 சேர்த்து ரூ 10,000-க்கு மொத்தமாய் 1876-ல் A. ஆதாரவு பிறந்திருக்கிறபடியால் A-ஆதாரவானது முந்திய அடமான தஸ்தவேஜைப் புதிப்பித்ததாகச்



சொல்லவேண்டும். தவிர B-ஆதாரவை கவனித்தால் பாதித் துகையை ஒரு தவணைக்குள்செலுத்தினால் சொத்தில் பாதியைத் திரும்பிக் கொடுத்து விடுவதாய்க் கண்டிருக்க A-ஆதாரவில் கண்ட துகை ரூ. 6000-மும் கடனாகக் கொடுக்கப்பட்டதென்று மதிக்க வேண்டுமேயொழிய சொத்து விக்கிறயத் துகையென்று சொல்லத்தகாது. தவிர சாமினாத செட்டியார் A-ஆதாரவு ஏற்பட்டதற்குப் பின்னும் நல்லவினாயகம் பிள்ளையின் மனைவிகளுக்கு மேம்மேலாகத்துகை கொடுத்து வந்திருக்கிறார். ஆகவே இவ்வித சந்தர்ப்பங்களில் கொடுக்கப்பட்ட துகை கடன் பாபத்தாகவேமதிக்கப்பட வேண்டுமென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது நியாயமே.

1886-ல் மூத்ததாரத்தால் கொண்டு வரப்பட்ட தாவா சமாதானமாகி முடிந்தமையால் அதாவது சாமினாத செட்டியின்பேரில் சொத்தை மீட்டுக்கொள்ளும்பொருட்டு, செய்த வியாஜ்ஜியம் ராஜியாகி அதனால் தாவா சொத்துக்கள் சாமினாத செட்டியாரிடமே நிற்கும்படி நேர்ந்தமையால் அந்த விஷயம் இந்த வாதியின் தாவாவுக்கு ரீஜுடிகேடாவாகாவிட்டாலும் சாமினாத செட்டியார் இரண்டு தாரங்களிடத்திலிருந்தும் விடுதலைப் பத்திரமெழுதி வாங்கியிருப்பதால் அவர்களுக்குறிய அடமானத்தை மீட்கும் பாத்தியதை சாமினாத செட்டிக்குச் சென்று விட்டதாகவும் அந்த விடுதலை ஏற்பாடு வாதியைக் கட்டுப்படுத்தாத போனாலும் இரண்டு தாரங்களும் மறிக்குமட்டும் வாதி அடமானத்தை மீட்கும்படி தாவா செய்ய நியாயமில்லையென்றும் வாதிக்கப்படுகிறது. அதாவது இரண்டு தாரங்களுக்குறிய பாத்தியதை சாமினாத செட்டியாருக்கு மாறிப்போனதால் அவ்விருவருடைய மாணபரியந்தம் அவர்களுக்குறிய பாத்தியதை சாமினாத செட்டியாரிடத்திலும் அவரிடமிருந்து பாத்தியதையடைந்த 1-2 பிரிதிவாதிகளிடத்திலும் தங்கியிருக்கவேண்டுமென்றும் வாதி இந்த தாவாவை இளையதாரம் ஜீவதசைமட்டும் கொண்டுவரக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறது. இந்த வாதத்தைப்பற்றி பிரதிவாதிகள் ஸ்டேட்மெண்டில் 6-வது பாராவில் கண்டிருந்தும் இஷ்யுக்களில்கருதப்பட்டிருந்தும் சப்கோர்ட்டார்இந்தவாதத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கவில்லை. வாதியின் இந்தப் பிராதை அடிக்க இந்த வாதம் ஒன்றேபோதுமானதாகும். ஏனெனில் C. D. ஆதாரவு பிறக்குமுன் இரண்டு தாரங்களால் பிரதிவாதிகளுக்கு (சாமினாத செட்டியாருக்கு) விடுதலைப்பத்திரம் ஏற்பட்டிருப்பதால் அவைகள் C. D. ஆதாரவால் நிராகரிக்கத்தக்கவைகளல்ல. அனந்தரவாரிஸ்களை இரண்டு விடுதலை ஏற்பாடுகள் கட்டுப்படுத்தாதபோனாலும் அவர்கள் ஜீவதசைமட்டும் அவர்களுடைய விடுதலை ஏற்பாடு அனுஷ்டானத்திலிருக்கவேண்டும். மூத்ததாரத்தின் தாவாவில் இளையதாரம் ஸ்டேட்மெண்டில்பிரதிவாதிகளுக்கு அனுஸரணையாகத் தன்னுடைய பாத்தியதையைநீக்கிக்கொண்டிருக்கிறாள். மூத்ததாரமும் வியாஜ்ஜியம் நடந்துக்கொண்டிருக்கும் பொழுதே விடுதலை தஸ்தவேஜெழுதிக் கொடுத்து விட்டாள். மூத்ததாரம் இறந்துபோனாலும் இளையதாரம் ஜீவனோடிருக்கிறபடியால் அவளுக்குப்பின் வாதி தாவா செய்யலாமேயொழிய அதற்குமுன் இந்த தாவா செய்ய நியாயமில்லையென்று சொல்ல வேண்டும்.

இவ்விதமான அபிப்பிராயம் கொண்டிருக்க வாதியின் தாவாவுக்குக் காலாவதி தோஷமென்ற பாயிண்டைப்பற்றி தீர்மானம் கொடுப்பதவசியமில்லை. பின்னால் வாதி வழக்கெடுத்தால் தீர்மானிக்க வேண்டிய பாயிண்டாகும். இந்தப் பிராதில் அதைப்பற்றி முடிவான அபிப்பிராயம் கொடுக்க நியாயமில்லை. என்றாலும் வாதிக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ K. ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் வாதியின் தாவாவுக்கு ஆர்டிகில் 134-ன்படி 12-வருஷ காலாவதி, ராமலிங்கசெட்டியார் விக்கிறயம் பெற்ற காலமாகிய 1891 முதல் தொடங்கநியாயமில்லை யென்றும், வாதியின் தாவாவுக்கு ஆர்டிகில் 141-ன்படி 12-வருஷ காலாவதி மூலபுருஷனுடைய மனைவிகள் இறந்த முதல் கணிக்கப்பட வேண்டு மென்றும் எவ்விதத்திலும் வாதியின் பிராதுக்கு 134-ன்படி காலாவதி தோஷம் சொல்லநியாயமில்லை யென்றும் வாதிக்கிறார். சாமினாத செட்டி ராமலிங்க செட்டியாருக்கு விக்கிறயம் செய்த காலத்தில் தான்பெற்ற அடமான பாத்தியதையுடன் அடமானத்தை மீட்கும் பாத்தியதையும் சேர்ந்திருந்தது. அந்தபாத்தியதை இரண்டு தாரங்களுடைய ஜீவதசைமட்டும் நிலைத்திருக்கவேண்டியது

நியாயமாகும். ஆகையால் அடமானதார் தன்பாத்தியதையை மற்றவனுக்கு மாற்றிவிட்டால் 134-வது ஆர்டிகிலின்படி சொத்தைச் சுவாதீனமடைவதற்காக மாற்றின தேதிமுதல் 12-வருஷகாலாவதி கணிக்கப்பட வேண்டுமென்ற நியாயம் ராமலிங்க செட்டியின் கிறய நடவடிக்கையைப் பற்றின மட்டில் பிரயோகிக்கத்தக்கதல்லவென்று சொல்ல வேண்டும். ஏனெனில் சாமிஞதசெட்டி அடமானபாத்தியதையைமட்டும் மாற்றவில்லை. அடமானத்தை மீட்கும் பாத்தியதையையும் மாற்றியிருக்கிறார். ஆகையால் வாதியின் தாவா ஆர்டிகில் 141-ஐ அனுசரித்தச்செய்யப்பட்டு காலாவதி விடுதலைஎழுதிக்கொடுத்த மனைவிகள் இறந்ததேதிமுதல் கணிக்கப்படவேண்டும். மனைவிகள் அடமானத்தை மீட்கும்பாத்தியதை மாற்றிக்கொடுத்ததற்குப்பதிலாக விக்கிறயம் செய்திருந்தால் அனந்தர வாரிஸ்தார்களுக்கு 141-ம் ஆர்டிகில்படி அவர்கள் இறந்த முதல் 12-வருஷங்களுக்குள் சுவாதீன தாவா செய்ய பாத்திய முண்டாயிருக்க விக்கிறயத்தைவிடக் கம்மியான நடவடிக்கையை நடத்தியிருக்கிற விஷயமாயும் ஏன் 141-வது ஆர்டிகில்படிகாலாவதி கணிக்கக்கூடாது? சாமிஞத செட்டி தான் பெற்ற A. ஆதரவினால் தனக்கு ஸர்வஸ்வதந்திர பாத்தியதை உண்டென்று நம்பி ராமலிங்கசெட்டிக்கு கிறயம் செய்ததாகச் சொல்லத்தகாது. அப்படிச் செய்திருந்தால் 134-வது ஆர்டிகிலை உபயோகப்படுத்தி அடமானம் பெற்றவன் தப்பாக ஸர்வ பாத்தியமும் உண்டென்று நினைத்து டிரான்ஸ்பர் செய்தானென்று சொல்லி அதை அடித்துச் சுவாதீனமடைய டிரான்ஸ்பர் தேதி முதல் 12 வருஷங்களுக்குள் தாவா செய்யவேண்டுமென்றுசொல்லலாம். ஆனால் சாமிஞத செட்டியார் A. ஆதரவை மட்டும் மதியாமல் தான் இரண்டு தாரங்களிடத்திலிருந்து பெற்ற விடுதலை தஸ்தவேஜையும்முக்கியமாய்க்கருதி ராமலிங்க செட்டிக்கு விக்கிறயம்செய்திருப்பதால் விடுதலைப் பத்திரத்தின்படி பாத்தியதையடைந்த பிரதிவாதிகளின்பேரில் வாதிவிடுதலை செய்த மனைவிகள் இறந்துபோன முதல் 12-வருஷங்களுக்குள் தாவாசெய்ய வேண்டுமென்று சொல்லத்தகும். (1871) 14 M. I. A. அனுசரிக்கத்தகுந்தது. (1904) 2 C.L.J. 546ல்ஜஸ்டிஸ் மூக்கர்ஜீ யவர்கள் கொடுத்த மாறான அபிப்பிராயம் அனுசரிக்கத்தகுந்ததல்ல. பிரதிவாதிகளின் மற்ற ஆக்ஷேபனைகளையும் ஏற்றுக்கொள்ள நியாயமில்லை. ஆனால் வாதிக்கு இளையதாரம் இறந்துபோகுமுன் இந்த தாவா செய்ய நியாயமுண்டென்று ஏற்படாதபடியால் வாதியின் இந்தப் பிராதை தள்ளுபடி செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. (1914) M.W.N. 735.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

மங்களூர் ஜில்லா

S. A. 1627 of 1912—14 ஜூலை 1914.

பொம்மப்பா ஹேகாடி

vs

ஜலயா கஷி பம்மாகி

*மரணசாஸனம்—மனைவிக்கு ஜீவனும்ஸம் வியபசாரத்தால் ஜீவனும்சபாத்தியதை கெடுமா? குலாசாரமுறையைப் பிரமாணிகித்து கோர்ட்டார் உயிலின் வசனத்திற்குறிய கருத்தைக் கூட்டவும் குறைக்கவும் நியாயமில்லை.*

மரண சாஸனத்தில் ஒருவன் தன்மனைவிக்குக் குடும்ப சொத்திலிருந்து வருஷந்தோறும் ஜீவனும் சத்திற்காக நெல்வருமான விகிதம் அவளுடைய மாணபரியந்தம் அளிக்கப்பட்டு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார். அவளுடைய துர் நடத்தையால் (வியபசாரத்தனத்தால்) அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்காமல் நாலு வருஷகாலமாய் நிறுத்தப்பட்டிருந்தது. அதன்மேல்அவள் 4-வருஷ ஜீவனும்ச பாக்கியை அடையும் பொருட்டு குடும்பத்தாரின் பேரில் தாவா செய்ததில் டி. மு. கோர்ட்டார் துர்நடத்தையிலிருந்த 4-வருஷங்களுக்குறிய ஜீவனும்சத்தை அவள் அடைய நியாயமில்லையென்றுதீர்மானித்து பிந்தியகாலத்திற்குமட்டும் வாதிகோறியபடி டிக்ரீயளித்தார்கள். அப்பீலில் சப் கோர்ட்டார் வாதியின் துர்நடத்தையால் ஜீவனும்ச பாத்தியதையை முற்றிலும் இழந்துவிட்டதாகச் சொல்லி வாதியின் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் உயிலின் வசனப்படி வாதிக்கு மாண பரியந்தம் ஜீவனும்சம் அடையவேண்டிய நியாயமிருந்தாலும் அவளுடைய நடத்தைப்பிசகால் அதை இழக்கவேண்டுமென்ற குலாசார முறையைப் பிரயோகித்து உயிலில்காணப்படாத அம்சத்தைக்கொண்டு வாதிக்கு விரோதமான தீர்ப்பளிக்க நியாயமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு பிராதில்கண்ட 4-வருஷ பாக்கியுடன் டி. மு. கோர்ட்டார் குறித்த விகிதப்படிக்கு டிக்கிரீயளித்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட நியாயச்சுருக்கமாவது:—

34 பம்பாய் 378-ல் சொல்லியிருக்கிறபடி உயிலின் வசனங்களில் இருவகையான அர்த்தம் ஏற்படக்கூடிய சந்தேகத்திற்கிடமிருந்தாலொழிய ஒரு ஹிந்து எழுதி வைக்கிற உயிலுக்கு ஜாதி மதாசாரத்தின் கொள்கைகளை அனுசரித்து சாஸனகர்த்தாவின் கருத்தை யூகிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். மதாசாரக்கொள்கைகளை அனுசரிக்கவேண்டிய முறை விதியானது உயிலின் வசனங்களுக்கு அர்த்தபாவம் ஏற்படுத்துவதற்காக அனுஷ்டிக்கப்படவேண்டுமேயொழிய மற்றப்படி உயிலின் வசனங்கள் தெளிவான சந்தேகமில்லாத கருத்துடையதானால் அதில்குறிக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்குக் கூட்டவும் குறைக்கவும் மேற்கூறிய ஜாதி மதாசார முறையை அனுஷ்டிக்கத்தகாது. அவ்விதமுறைகளை அனுஷ்டிக்கும்பொழுதும் ஒரு ஹிந்து தனக்குப்பின்தன் மனைவிக்கு ஜீவனும்சை செய்திருந்தால் அவள் பிற்காலத்தில் வியபசாரத்துவ மடைந்தால் ஜீவனும்சத்தை இழந்துவிடவேண்டுமென்று சாஸனகர்த்தா எண்ணமுடையவராயிருந்திருப்பாரென்று யூகிக்கவேண்டிய அவசியமில்லை. [அப்படி எண்ணியிருந்தால் அவ்விதமாய் உயிலில் கண்டெழுதியிருக்கவேண்டும். 26 மதராஸ் லா ஜர்னல் 411-ல் பிரிவிகௌன்ஸிலார் சொல்லியிருக்கிறபடி உயிலின் வசனங்களால் ஏற்படவேண்டிய அம்சங்களைக்கோர்ட்டார் ஒருக்காலும் சேர்க்கக்கூடாதென்றும் எம்மதஸ்தரால் எழுதப்பட்ட உயிலானாலும் கோர்ட்டார் அதில் கண்ட வசனங்களுக்கு நியாயமான கருத்தைத்தரவேண்டியது கோர்ட்டாருடைய முக்கியமான கடமையாகும். இந்தக்கேஸில் சாஸனகர்த்தா தன்மனைவிக்கு மாணபரியந்தம் ஜீவனும்ச ஏற்பாடு செய்திருக்க பின்னால் யாதாருசம்பவம் நடக்கலாமென்றுயோஜித்திருந்தால் அதில்கண்ட அம்சங்களுக்கு விரோதமாக அதிகமான சொற்களைச் சேர்த்திருப்பாரென்று யூகிக்க நியாயமில்லை. ஆகவே உயிலில் கண்டவிதமாக வாதிக்கு மாணபரியந்தம் ஜீவனும்சமளிக்கப்பட வேண்டியது நியாயமாகுமென்று மேற்கண்ட விதமாய் வாதி கோறியபடி டிக்கிரீ யளிக்கப்பட்டது XXVII. M. L. J. 305.

---

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

கஞ்சம் ஜில்லா

A. S. No. 65 of 1911—22 எப்ரில் 1914.

மதனமோஹனதீயோ

vs

புருஷோத்தமதீயோ.

ஸ்வீகார வியாஜ்ஜியம்.

*கணவனுடைய அனுமதிபெற்று எடுக்கப்பட்ட ஸ்வீகாரபுத்திரன் விவாகமாகி 36 வருஷகாலம் ஜமீனை ஆண்டு சந்ததியில்லாமல் மரித்தபின் இரண்டாவது ஸ்வீகாரம் எடுக்கப்பட்டு முதல் ஸ்வீகாரப் புத்திரனுடைய மனைவி ஜீவனோடிருக்கிற காரணத்தால்அவள்ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாய்க்குண்டென்றும் ஆகையால் மூலபுருஷனுடைய மனைவிகணவனுடைய அனுமதியை அனுஸரித்துத் தன் கணவனுக்காக 2-வது ஸ்வீகாரமெடுக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.*

கஞ்சம்ஜில்லாவில் சின்னகிமிடி ஜமீன்தாராகிய ஆதிகொண்டதீயோ அவர்கள் 1868ஹு நவம்பர்மீ 20உயில் அதாவது மாணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன் தனக்கு ஆண் சந்ததி இல்லாத நிமித்தம் தன் மனைவிக்கு ஒரு புத்திரனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும்படி அதிகாரப்பத்திரமெழுதிவைத்துவிட்டுக்காலஞ்சென்றார். அம்மனைவியும்அக்காலத்தில் கர்ப்பமாயிருந்து பின்னால் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். ஜமீன்தாரவர்கள் இறந்தவுடன் அவர்களுடைய அவிபக்த சகோதரராகிய ரகுநாததீயோ என்றவர் ஜமீன்சொத்துகளை ஆண்டுவந்தார். காலஞ்சென்ற ஜமீன்தாரவர்களுடைய பாரியாள் 1870ஹு நவம்பர்மீ 20-ல் கணவனுடைய அதிகாரப்பத்திரத்தை அனுசரித்து பிரஜோ

கிஷோர்தேவ் என்ற பையனை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். ஜமீனை ஆண்டுவந்த ரகுநாததீயோ அவர்கள், ஸ்வீகார அதிகாரப்பத்திரம் மெய்யாய்ப் பிறந்ததஸ்தவேஜல்லவென்று ஆக்ஷேபித்ததின்பேரில் ஸ்வீகாரபுத்திரனுக்காக ஜமீனைசுவாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு வியாஜ்ஜியம் நடந்து பிரிவிகௌன்ஸில்வரையில் வழக்காடப்பட்டு ஸ்வீகார அதிகாரப்பத்திரம் ஏற்பட்டது வாஸ்தவமென்று தீர்மானிக்கப்பட்டு ஜமீன் ரகுநாததீயோ அவர்களிடமிருந்து மாற்றப்பட்டு ஸ்வீகாரப்புத்திரனும் 36-வருஷகாலம் ஜமீனை ஆண்டு அனுபவித்து ரத்னமாலாவென்ற மனைவியைவிட்டுசந்ததியில்லாமல் காலஞ்சென்றுவிடவே ரகுநாததீயோ அவர்களுடைய புத்திரனாகிய வைஷ்ணவதீயோ அவர்கள் ஜமீனைக் கைப்பற்றிக்கொண்டு 15-வது தினமே காலமாயினர். அவருடைய இரண்டு புத்திரர்களும் ஜமீன் சொத்துக்களைக் கைப்பற்றி ஆண்டு வருகையில் மூலபுருஷனுடைய பாரியாள் தான்பெற்ற அதிகாரப்பத்திரத்தின்படி ஸ்ரீ மதன மோஹன தீயோ என்றவாதியை இரண்டாவது ஸ்வீகாரபுத்திரனாக எடுத்துக்கொண்டாள். ஆகவே வாதிக்காக ஸ்வீகாரத்தாயாராகிய குந்தனதேவி அடுத்த சிநேகிதராகிய ரகுநாததீயோ அவர்களின்பவுத்திரர்கள் பேரில் ஜமீன் சொத்துக்களைச் சுவாதீனமடையும் பொருட்டு கஞ்சம் ஜில்லா கோர்ட்டில் 1908ம் வருஷத்தில் அசல் வியாஜ்ஜியம் செய்தார். மைனர் வாதி பின்னால் மேஜராய்ப் போனபடியால் அவரே வழக்கைமேல் நடத்தினார்கள்.

பிரதி வாதிகள் எதிரான்ஸரில் முக்கியமாக மூன்றுவித ஆக்ஷேபனைகளை எடுத்துக்காட்டினர், அவையாவன:—(1) மூல புருஷன் அதிகாரப்பத்திரத்தில் ஒரே ஸ்வீகாரத்திற்கு அனுமதிகொடுத்திருக்க வாதியை இரண்டாவது ஸ்வீகாரமாக எடுத்துக்கொண்டது செல்லத்தகாதென்றும்; (2) முதல் ஸ்வீகாரபுத்திரன் இறந்துபோகவே ஜமீன் சொத்துக்கள் வைஷ்ணவதீயோ என்றவருக்குச்சென்று அவருக்குப் பின் பிரதிவாதிகளாகிய அவருடைய புத்திரரும் ஜமீனை ஆண்டுவரநியாயமுண்டாதலால் அவ்விதமாய் ஜமீன் பாத்தியதை பிரதிவாதிகளுக்குச் சென்றபடியால் அதற்குப்பின் வாதியை மூல புருஷனுடைய புத்திரனாக ஸ்வீகரித்துக் கொண்டது சட்டவிரோதமென்றும் கடைசியாக ஜமீனை ஆண்டுவந்த ஆண்தலையாருக்கு வாதி ஸ்வீகார புத்திரனாகமாட்டாரென்றும் அப்படிப்பட்ட ஸ்வீகாரம் செல்லாதென்றும் அதாவது அவிபக்தான கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த அடுத்த வரிசைக் கிரமத்தால் ஜமீனை அடைந்தவருக்கு சந்ததி இல்லாவிடில மட்டும் அவருக்காக ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் அப்படியிருக்க இரண்டுதலை முறைகடந்தபின் வாதியை மூல புருஷனுடைய ஸ்வீகார புத்திரனாக எடுத்துக்கொண்டது சட்ட விரோதமென்றும்,

(3) முதல் ஸ்வீகார புத்திரனுடைய பாரியாளாகிய ரத்னமாலா ஜீவதசையிலிருக்க அவர்கள் ஸ்வீகாரமெடுத்துக் கொள்ள லாயக்குள்ளவர்களாகையால் அப்படிக்கு ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் ஜமீன் சொத்துக்கள் அவளுடைய ஸ்வீகார புத்திரனுக்குச் செல்லவேண்டியது நியாயமாகுமாதலால் ரத்னமாலா அம்பாள் ஜீவனோடிருக்கிற விஷயம் வாதியின் ஸ்வீகாரத்திற்குத் தடையாகிறதென்றும்; ஆகமூன்றுவித ஆக்ஷேபனை செய்தார்கள்.

ஜில்லா ஜட்ஜியவர்கள் எதிரிகளின் ஆக்ஷேபனைகளை நியாயமென்று ஒப்புக்கொண்டு வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் எதிரிகளின் மூன்றும் வாதத்தை மட்டும் நியாயமென்று ஏற்றுக்கொண்டு வாதியின் ஸ்வீகாரம் செல்லாதென்று அபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் சொன்ன காரணச்சுருக்கமாவது:—

குந்தன தேவியம்மாள் B. ஆதாரவாகிய ஸ்வீகார அதிகாரத்தைக் கொண்டு 2-வது ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாமா என்பது முதலாவது தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும். B. ஆதாரவு பிறந்தது வாஸ்தவமென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள வேண்டிய பய்யன் இன்னொன்று அதில்குறிக்கப்படவில்லை வேறுவிதமான நிபந்தனைகளும் காணப்படவில்லை. ஒரு மகனை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதில் குறிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதி



வாதி தரப்புவக்கிலாகிய ம-ா-ா-ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் ஒப்புக்கொள்ளுகிறபடி ஒரு என்ற பதத்திற்கு ஒருவனுக்கு மேல் எடுக்கக்கூடாதென்றலக்கத்தைக் குறித்த பதமல்ல, யென்றுசொல்லத்தகும். 39 I. A. 142-ல் சொல்லியிருக்கிறபடி ஒருபுத்திரனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும்படி கொடுக்கப்பட்ட அனுமதி வசனத்தால் ஒருவனுக்குப்பின் ஒருவனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று சொல்லவேண்டும். ஆனால் ஆதிகொண்டதீயோ அவர்கள் ஸ்வீகார அனுமதி கொடுத்த பொழுது முதலாவது ஸ்வீகார புத்திரன் இறந்து போவானென்ற யோஜனை அவருக்கு உண்டாயிருக்காதென்றும் இரண்டாவது ஸ்வீகாரமெடுக்க அவசியம் நேரிடுமென்று எண்ணியிருக்கமாட்டாரென்றும் ஆகையால் 2-வது ஸ்வீகாரத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டதாக B. ஆதரவை அர்த்தப்படுத்தக் கூடாதென்றும் பிரதிவாதிகளுக்காக வாதிக்கப்படுகிறது. ஸ்வீகார அனுமதிப்பத்திரத்தை வியாக்கியானப்படுத்தும் முறைவிதிக்கும் மரண சாஸனத்தை அர்த்தப்படுத்தும் முறைக்கும் வித்தியாஸம் கிடையாதென்று சொல்லவேண்டும். பிரயோகப்படுத்தியிருக்கும் வசனங்களையும் எழுதப்பட்ட காலத்திலுள்ள சந்தர்பங்களையும் கவனித்து கர்த்தாவினுடைய கருத்தை அனுமானிக்க வேண்டியதாகும். ஆதிகொண்டதீயோ அவர்களுக்கு தீவிரமான முன் யோசனை இருந்திருக்குமென்று நினைக்கும் பக்ஷத்தில் தன் சகோதரனாகிய ரகுநாததீயோ அவர்களுக்கும் அவருடையசந்ததியாருக்கும் ஜமீன் சொத்துக்கள் ஒருநாளும் செல்லக்கூடாதென்று கருத்திருந்திருக்க வேண்டுமென்று சொல்லக்காரணமுண்டு. முதல் ஸ்வீகாரபுத்திரனுடைய வழக்கில் பிரிவிகௌன்ஸிலார் சொல்லி யிருக்கிறபடி ஆதிகொண்டதீயோவும் அவருடைய சகோதரரும் பரஸ்பரம் மிகவும் பகைஞர்களாயிருந்தார்களென்றும் அதிக சச்சரவால் விரோதம் முற்றிப்போய் ஆதிகொண்டதீயோ அவர்கள் சோரபுத்திரனென்று ரகுநாததீயோ அவர்கள் 1853லேயேவீண்வழக்கெடுத்துத் தோல்வியடைந்திருக்கிறுரென்று ஏற்படுகிறது. ஆகையால் ஆதிகொண்டதீயோ அவர்கள் ஜமீனைத்தன்னுடையவழியிலேயே வைத்துக் கொள்ளவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கவேண்டுமென்று திட்டமாய்ச் சொல்லலாம். ஆகவே முதல் ஸ்வீகாரபுத்திரன் இறந்து போகக்கூடிய சம்பவமானது ஆதிகொண்டதீயோ அவர்களுடைய மனதில் பட்டிருந்தால் சட்டம் இடங்கொடுக்கும்பக்ஷத்தில் 2-வது ஸ்வீகாரமெடுத்துக் கொள்வதிலும் விருப்பமுடையவராயிருந்திருக்கவேண்டுமென்று சொல்லத்தகும். 15 கல்கத்தா வாரக் குறிப்புகளின் 524-ஐப் பார்க்கவும்: தவிர தன் மனைவி கர்ப்பமாயிருக்கும் சமயத்தில் ஸ்வீகார அதிகாரம் கொடுத்திருப்பதைக் கவனித்தால் தனக்கு ஸ்திரீ பிரஜையாக ஏற்பட்டால் ஜமீன் சகோதரனுக்குச் சென்று விடுமென்ற கவலையால் அவ்வித அனுமதிப்பத்திரமெழுதி வைத்தாரென்று சொல்லவேண்டும். ஆகவே ஆதிகொண்டதீயோ அவர்கள் தனக்குத்தகுந்த புத்திரன் ஜமீனை ஆளவேண்டுமென்ற கருத்தையே முக்கியமாய்க்கொண்டிருந்தாரென்று சொல்லவேண்டும். (ஒரு ஸ்வீகாரத்திற்கு மேல் எடுக்கப்படக்கூடாதென்ற கருத்திருந்ததாகச் சொல்லக்கூடாது.) 26 மதராஸ் 681-ஐப் பார்க்கவும். ஒரு ஹிந்துவானவன் தன் மனைவிக்குக் கொடுக்கிற அதிகாரப்பத்திரத்தில் யாதொரு ஷராக்களும் நிபந்தனைகளும் ஏற்பட்டிராவிட்டால் அதில்கண்ட வசனங்களுக்குப் பொதுவான விசாலமுள்ளகருத்தைத் தரவேண்டுமென்று ஷை 26 மதராஸ் கேஸில்பிரிவிகௌன்ஸிலார் விளம்பியிருக்கிறார்கள். அதே தீர்மானத்தில் 2-வது ஸ்வீகாரம் செல்லத்தக்கதல்லவென்று, ஸர் வில்லியம் மாக்னேட்டன் கொடுத்திருக்கிற அபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளத்தகாதென்றும் அது சாஸ்திர பண்டிதர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாயிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பண்டிதர்களின் வியாக்கியானத்தின்படி பார்த்தால் அனுமதிப்பத்திரத்தில் ஒரே ஸ்வீகாரம் மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று குறித்துச் சொல்லியிருந்தாலொழிய வேறொருவனையும் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம். 26 மதராஸில் பிரிவி கௌன்ஸிலார்கொடுத்திருக்கிற அபிப்பிராயம் பண்டிதருடைய நோக்கத்திற்கு இசைந்ததாகவே இருக்கிறது. 1 கல்கத்தா வாரக் குறிப்புகளின் 524-லும் 39 I. A. 142,லும் அதே காரணத்தைச் சொல்லித் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே. B ஆதாரவில் 2-வது ஸ்வீகாரமெடு

க்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதாகவே அனுமானிக்க வேண்டும்.

ஜில்லா ஜட்ஜியவர்கள் மாறுன அபிப்பிராயங் கொண்டதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகிறது:—(1) உரிய ஜமீன் வம்சத்தார்களுக்குள் உத்தரக்கிரியைகளையும் சிரார்த்தங்களையும் நடத்தும்பொருட்டு பிராமணப் புரோகிதர்களை நியமிக்கிற வழக்கத்தினுல் ஆதிகொண்டதீயோ அவர்கள் தன் உத்தரக்கிரியைகளையும் வருஷசிரார்த்தங்களையும் நடத்தும்பொருட்டுப் புத்திரனிருக்க வேண்டுமென்ற ஆவலைக்கொண்டு ஸ்வீகார அதிகாரம் கொடுத்திருக்கமாட்டாரென்றும் (2) அப்படிக்கேதேனும் தன்னுடைய ஜீவாத்மாவுக்குறிய கிரியைகளைச் செய்துவரவேண்டுமென்று கவலை இருந்தபோதிலும் முதல் ஸ்வீகாரபுத்திரன் 36-வயதுமட்டும் ஜீவனேடிருந்தமையால் அக்காலத்திற்குள் ஸ்வீகாரத் தகப்பனுடைய ஜீவாத்மாவுக்கு செய்ய வேண்டிய சகலமான கிரியைகளும் திருப்திகரமாய் நடந்திருக்க வேண்டுமாதலால் பின்னும் கிரியைகளை நடத்தும் பொருட்டு வேறொரு ஸ்வீகாரபுத்திரன் ஏற்படவேண்டிய தவசியமில்லையென்றும் ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயங்கொண்டு 2-வது ஸ்வீகாரம் எடுக்க அனுமதியை B. ஆதரவில் அனுமானிக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறுர்கள். உறிய வம்சத்தைச் சேர்ந்த ஜமீன்தார்கள் பிராமண புரோகிதர்களை நியமித்து அவர்களே இறந்துபோகும் ஜமீன்தார்களுடைய கோத்திரத்தை வகித்துக்கொண்டு உத்தரகிரியைகளையும் வருஷாந்தா திதிகளையும் நடத்திவருவது வாஸ்தவம்தான். இவ்விதமாய்க் கூலிக்கு வேலை செய்யும் குருக்கள் புத்திரன் நடத்திவரும் வண்ணமாக பிதாக்களுக்குறிய கர்மாக்களைத் திருப்தியாகச் செய்து முடிப்பார்களென்று சொல்லசாத்தியமில்லை. கர்மமும் சிரார்த்தமும் செய்வதற்காக மட்டும் புத்திரனிருக்க வேண்டிய கருத்தல்ல.

ஒரு ஹிந்து பிதாவானவர் தன்னுடைய முன்னேர்களுக்கும் (முன்சென்ற பித்ருக்களுக்கும், தன்னுடைய பாக்கிதார்களுக்கும் குடும்ப தேவதைகளுக்கும் மற்ற இதரமான தெய்வங்களுக்கு முறிய கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு புத்திரனை அபேக்ஷிக்கிறுரென்று சாஸ்திரோக்தமாய் ஏற்பட்டிருக்கிறது. கூலிக்குக் கர்மாக்களையும் சிரார்த்தங்களையும் நடத்த நியமிக்கப்படும் பிராமண குருமார்கள் பித்ருக்களுக்குறிய கடமைகளில் சிலவற்றை மட்டும் நடத்திவர சாத்தியமுண்டு. (எனெனில் யாருடைய உத்தரகிரியைகளைச் செய்யும் பொருட்டுநியமிக்கப்படுகிறுர்களோ அவர்களுடைய முந்திய மூன்று தலை முறையான பித்ருக்களுக்கும் சேர்த்துப் பிண்டப்பிரதானம் செய்யவேண்டியதாகிறது). தேவதைகளுக்குறிய கடமைகள், குடும்ப தேவதைக்குறிய பூஜாவிதிகளை நடத்துவது மட்டுமல்ல. பக்தியாக இருந்து தர்ம காரியங்களை நடத்தி வரவேண்டிய கடமையும் அதிலடங்கியிருக்கிறது. தேவதைகளுக்குத் திருப்தி யுண்டாவதற்கு தேவாலயங்களையும் அன்ன சத்திரங்களையும் கட்டிவைக்க வேண்டும். தீர்த்தயாத்திரை செய்யவேண்டும் அன்னதானம் செய்யவேண்டும், கஷ்ட நிவர்த்திசெய்யவேண்டும், குளங்களைவெட்டிவைக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட கடமைகளைக் கூலிக்கு வேலைசெய்யும் குருமார் செய்து முடிக்க சாத்தியமாகாது. மறித்தவருடைய கடன்களைத் தீர்க்கவும் நியாயமாகாது. ஆகவே புத்திரனை அபேக்ஷிக்கும் கருத்துக்கு பிராமண குருக்கள் போதுமான நிலைமையை உடைத்தாயில்லையென்று சொல்லவேண்டும். அவர்கள் புத்திரனுக்குச் சரியான பிரதிநிதி யாகமாட்டார்கள். ஹிந்துக்களுக்கு அப்படிப்பட்ட கருத்தேபுதுமையானதாகும்.

இரண்டாவதாக முதல் ஸ்வீகாரபுத்திரன் 36-வருஷகாலமாய்ப பிதாவுக்குச்செய்துவந்த கிரியாவிதிகளால் பிதாதிருப்தியடைந்திருக்க வேண்டுமென்று சொல்லப்படும் நியாயத்தைப்பற்றி (1874) 22 W.R. 121-ல் பிரிவிகௌன்ஸிலார் சொல்லியிருக்கிற அபிப்பிராயம் போதுமான சமாதானமாகிறது. அந்த அபிப்பிராயம் யாக்ஞவல்கருடைய வாக்கியத்திற்குகந்தபடியிருக்கிறது. அதாவது பிதாக்கள் ஸப்த லோகங்களை அடைந்து ஜனனமரணபதவியைவிட்டு நீங்கி மோட்சமடைவதற்கு புத்திரனும், போனும், கொள்பேரனும் காரணபூதமாகிறுர்கள். ஆகவே ஏகபுத்திரன் 36-வயதுமட்டும்ஜீவனேடிருந்து தகப்பனுடைய சிரார்த்தாதிகளைநடத்திசந்ததியில்லாமல் காலஞ்சென்ற விஷயமானது மூன்று தலைமுறையாக பிதாவுக்குறிய அபீஷ்டங்களை நிறைவேற்றினதற்குச் சமானமாகுமென்று ஹிந்து சாஸ்திரங்களில் காணப்படவில்லை. ஆகையால்B.ஆதரவில் குந்தனதேவிக்கு 2-வது ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளக் கூடாதென்ற கருத்தடங்கவில்லையென்று தீர்மானிக்கவேண்டியதாகும். என்றுலும் இந்தக் கேஸின் சந்தர்பத்தில் முதல் ஸ்வீகாரபுத்திரனுடைய பாரியாளாகிய ரத்னமாலா ஜீவனேடிருக்கும் காரணத்தால் குந்தனதேவியம்மாள் வாதியை 2-வது ஸ்வீகாரமெடுத்துக்கொண்டது பிசகென்று சொல்லவேண்டும். (அதற்குறிய நியாயங்கள் கடைசியாயிண்டாக எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது.)

பிரதிவாதிகளின் இரண்டாவது எதிராக்ஷேபனையைப் பற்றிகவனிப்போம். அதாவது கடைசியாக ஜமீனை ஆண்டுவந்த ஆண்தலைக்கு சந்ததி இல்லாத பட்சத்தில் அவருக்கு ஸ்வீகாரபுத்திரனேற்படவேண்டுமென்றும் அப்படியில்லாமல் ஆதிகொண்டதீயோ அவர்கள் காலஞ்சென்றபின் மூன்றுதலைமுறை ஜமீனை ஆண்டு வந்தபின் ஆதிகொண்டதீயோ அவர்களுக்கு வாதி ஸ்வீகாரபுத்திரனுகஏற்பட்டு ஜமீனை அடையக்கோறுவது சட்டவிரோதமென்று சொல்லப்படுகிறது. குந்தனதேவியம்மாள் கணவனுடைய அதிகாரம் பெற்றுத்தான் 2-வது ஸ்வீகாரமெடுத்திருக்கிறுள். அந்த அதிகாரத்தைச்செலுத்துவதற்குறிய அவசியம் ஒன்றே அதாவது புத்திரஹீனனுக இருக்கவேண்டும். தத்தக மீமாம்ஸத்தின்படி புத்திரன் என்ற பதத்தில் போனும் கொள்பேரனும் அடங்கியிருக்கிறது. தவிர அதிகாரம் பெற்றவள் ஜீவனேடிருந்து ஸ்வீகாரமெடுக்க வேண்டும். அந்த அதிகாரத்தை அவள் வேறு யாருக்கும்மாற்றக்கூடாது. இவ்விதமானசாஸ்திரவிதிகள் ஏற்பட்டிருந்தபோதிலும்நியாயஸ்தலத்தில்கோர்ட்டாரவர்கள் தந்திரஉபாய நியாயத்தைக் கருதி சொத்துக்கள் அடிக்கடி ஒரு கைவிட்டு சித்தவிருத்தியின் பிரகாரம் மறுகை மாறிப்போகாமலிருக்கும் பொருட்டும் சொத்து பாத்தியதை விஷயமாய்க் கலகமும் சமாதானக் குறைவுமுண்டாகக் கூடாதபடி மேற்கூறிய சாஸ்திரவிதத்கு விரோதமாகத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறுர்கள். அதாவது அதிகாரம்பெற்றவர்களும் ஸ்வீகாரமெடுக்கக் கூடாதென்பதற்குச் சில சந்தர்ப்பங்களைத் தீர்மானித்திருக்கிறுர்கள். அந்தத் தீர்மானங்களைக்கவனித்துப் பார்த்தால்அவிபக்த ஹிந்துக்குடும்பத்தில் தலைவன் இறந்தபின் அடுத்தவன் சொத்தை ஆண்டு வரும் நிலைமைக்கும், ஒருவன் இறந்தபின் அவனுடைய வாரிஸ்தார் சொத்தைஅடையும்நிலைமைக்கும்வித்தியாஸமுண்டென்று ஏற்படுகிறது. வாரிஸ் பாத்தியதையால்சொத்தைஅடைந்தவர்களுக்குச் சொத்தில் ஸர்வஸ்வதந்தாபாத்தியதை உண்டாகிறது. குடும்பத்தலைவனுக சொத்தை அடைந்து ஆளுகிறவனுக்கு சொத்து பாத்தியதையானது. ஸர்வ ஸ்வதந்திரத்துடன் கூடியதல்ல. குடும்பத்தலைவன் இறந்தபின் சொத்துபாத்தியதை யாரிடமாவது செல்லவேண்டிய நியாயமாகும். அடுத்தவன் சொத்து பாத்தியதையை அடைந்தாலும் பிற்காலத்தில் அந்த பாத்தியதை வேறு யாருக்கும் சட்டப்படி செல்லக்கூடிய சந்தர்ப்பத்தில் அடுத்தவனுடைய பாத்தியதை விலகிப்போகவேண்டும். 9-மதராஸ் 64, 29-பம்பாய் 51-இவைகளைப்பார்க்கவும். வாரீஸ் பாத்தியதையைக் கொண்டு சொத்தைஅடைந்தவர்களுக்கு அவ்வித அசந்தர்ப்பம் கிடையாது. அவருக்குப் பின்னுள்ள வாரீஸ்தார்களுக்கு அவரால் மிகுதி வைக்கப்பட்ட சொத்து மட்டும் செல்லத் தகும். தாவா ஜமீன் அவிபக்தமானகூட்டுக் குடும்பமாகும். ஆகவே முதல் ஸ்வீகாரபுத்திரன் இறந்தபின் ஜமீனை ஆண்டு வரும் பாத்தியதை அடுத்த ஆண்தலையாகிய வைஷ்ணவதீயோ விடம் சென்று அவருக்குப்பின் அவருடைய இரண்டு மக்களாகிய பிரதிவாதி களிடம் சென்றிருக்கிறது. இந்தப்பிரதிவாதிகள் ஜமீனில் ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதையுடையவர்களல்ல. கூட்டுக்குடும்பத்தைப் பற்றிய தீர்மான நியாயங்களுக்கும் வாரீஸ் பாத்தியதையை அனுசரித்த சொத்து பாத்தியதை விஷயமான தீர்மான நியாயங்களும் வித்தியாஸமாய் ஏற்பட்டிருக்கின்றன. சென்னை இராஜதானியில் ஜமீன் தாரிகளின் வம்சமானது கூட்டுக்குடும்பமாகவே பாவிக்கப்பட்டிருக்கிறது. 30-மதராஸ் 454, 32- மதராஸ் 429, 35-மதராஸ் 108 & 23 M. L. J. 79 இவைகளைப்பார்க்கவும். பிரதிவாதிக்காகவக்கீல்ம-ா-ா-ஸ்ரீ, எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் வாரீஸ் பாத்தியதைக்கும் அடுத்த குடும்பத் தலைவனுடைய ஆதீன பாத்தியதைக்கும் வித்தியாஸம் கிடையாதென்றும் ஹிந்துக் கூட்டுக்குடும்பத் தலைவனும் வாரிஸ் பாத்த்தியதையை அடைந்தவனுக பாவிக்கப் படவேண்டுமென்றும் வாதித்தது 9 மதராஸ் 64-ன் 67- & 77-யும், 18 கல்கத்தா 385-ம் 395, 397-யும், 29

பம்பாய்- 51ன் 58-யும் எடுத்துக் காட்டி ஜமீன்தார்களும் வாரிஸ்களாய் மதிக்கப்படுகிறார்களென்று சொல்லி 1904ம் வருஷத்து 2-வது ஆக்டின் 2-வது கிளாஸ் 2-3-வது உட்பிரிவுகளை எடுத்துக்காட்டுகிறார். ஜமீன்தார் ஸ்தானத்திற்கு வருகிறவர் வாரீஸ் என்று சொல்லப்பட்டபோதிலும் ஜமீனை வாரீஸ்பாத்தியதையால் அடைகிறாரென்று சொல்லத்தகாது. ஹிந்து குடும்பத் தலைவன் குடும்பசொத்தை விநியோகப்படுத்தும் நியாயத்தைப்பற்றி என்ன நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதேவிதமாகவே ஜமீன்தாருடைய நடவடிக்கைகளைப்பற்றியும் சட்ட நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன.

தவிர 9-மதராஸ் முதலியகேஸ்களிலுள்ளசிற்சில வாக்கியங்களை எடுத்து பிரதிவாதி வக்கில் ஆதாரங்கொண்டு வாதம் செய்கிறார்கள். நியாயபாவங்களின் முழுக்கருத்தைவிட்டுப் பிரித்து சிலவாக்கியங்களை மட்டும் ஆதாரமாகக் காட்டகூடாதென்று பலதடவைகளில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆகவேவாரிஸ் பாத்தியதையினால் சொத்தையடைகிறவர்களுக்குக் குடும்பத் தலைவரின் அடுத்த நிலைமையில் நின்று அத்தலைவருக்குப்பின் குடும்பத்தை வகிக்கிறவர்களுக்கும் வித்தியாஸ முண்டென்றே சொல்லவேண்டும்.

மேயின் ஹிந்துலா புஸ்தகத்தில் 191-வது பாராவில் சொல்லியிருக்கிற விதிமுறைப்படி சொத்து பாத்தியதை சட்டப்படி ஒருவரிடம் சென்றுவிட்டால் அவருக்கு சந்ததியில்லாவிடில் ஸ்வீகாரம் அவருக்கு ஏற்படவேண்டுமே யொழிய அவருக்கு முன் சொத்தை ஆண்டவர்களுக்கு ஸ்வீகாரம் ஏற்படக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஹிந்துலாமுறையை அனுசரித்துப் பிரதிவாதிக்காக 2-வது ஆக்ஷேபனைசெய்யப்பட்டது. அதாவது வைஷ்ணவதீயோ அவர்கள் கடைசியாய் ஜமீனை ஆண்டிருக்க அவருக்கு சந்ததி இல்லாவிட்டால் மட்டும் அவருக்காக யாதொரு புத்திரனைஸ்வீகாரமெடுக்கவேண்டியதாகுமென்றும் ஆனால்அவருக்குபுத்திரார்கள் இருப்பதால் ஸ்வீகாரம் வாதியை ஸ்வீகாரமெடுக்கவேண்டிய அவசியமில்லையென்று வாதிக்கப்படுகிறது. அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல…

டுக்குடும்பத்திற்குமேற்கூறிய ஹிந்து லாமுறைபிரயோகிக்கத் தக்கதல்லவென்று வாதிக்காகச் சொல்லப்படுகிறது நியாயமே. ஏனெனில் வாரிஸ்பாத்தியத்தையின் பேரில் சொத்தை அடைந்தவருக்கு ஸர்வஸ்வதந்திர பாத்தியதையுண்டு. அவர் சந்ததி யன்னியில் இறந்தால் மட்டும் அவருக்கு மட்டும் ஸ்வீகாரபுத்திரன் ஏற்பட நியாயமாகும் கூட்டுக்குடும்பத்தலைவனுடைய பாத்தியதையானது ஸர்வஸ்வதந்திரமுள்ளதல்ல. சட்டமுறைப்படி வேறொருவன் பின்னால் சொத்து பாத்தியதையை அடைய லாயக்குண்டானால் குடும்பத்தலைவன் சொத்தை விட்டுவிட வேண்டியதாகும். ஆகையால் குந்தன தேவியம்மாள் சட்டப்படிவைஷ்ணவதீயோ ஜமீனை ஆளவந்த பின் ஸ்வீகார மெடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகார புத்திரனுக்கு வைஷ்ணவதீயோ ஜமீனை ஒப்பவிக்கவேண்டியதுநியாயமாகும். இந்தப் பாயிண்டு விஷயமாய்ப் பிரிவிகௌன்ஸில் தீர்ப்புகள் மேற்கூறிய நியாயமாகவே ஏற்பட்டிருக்கின்றன. (1876) 3 I. A. 174-ல் குடும்பத் தலைவனுக்குப் பின் தன்னுடைய வாரிஸ்களுக்கு ஜமீனைச்செல்லும் படி அனுபவிக்கலாயக்குள்ளவாயினும் ஸ்வீகார புத்திரனுக்கு அவர் ஜமீனை ஒப்புவிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(2) (1876) 4 I. A. 1-ல் சொத்தானது முதல் ஸ்வீகார புத்திரனுக்குச் சென்று அவள் விவாகமில்லாமல் சிசுவாயிருக்கையிலேயே மறித்தமையால் தாய் சொத்தை அடைந்து 2-வது ஸ்வீகாரமெடுத்திருக்கிறாள். பிரிவிகௌன்ஸிலார் ஸ்வீகாரத்தை உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள். இதனால் கடைசியாய் சொத்தை ஆண்ட ஆண் தலைக்கு ஸ்வீகார மேற்பட வேண்டுமென்ற நியாயம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

(3) 29 மதராஸ் 382-ல் முதல் ஸ்வீகாரபுத்திரன் 10-வருஷகாலம் சொத்தை ஆண்டபின் மறித்தார். தாயார் 2-வது ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இதிலும் அந்தநியாயம் தவறிப்போச்சுது. அந்தநியாயத்தை அனுசரித்தால் முதல் ஸ்வீகாரபுத்திரனுக்கல்லவோ ஸ்வீகாரமேற்பட வேண்டும்?



(4) (1907) 34 I. A. 107-ல் இரண்டு சகோதரர்களில் ஒருவனுடைய மனைவி கர்ப்பமாயிருக்கையில் அவர் இறந்துபோனார். மற்ற சகோதரன் தன் பெண்சாதிக்கு ஸ்வீகார அதிகாரம் கொடுத்துக் காலஞ்சென்றார். கர்ப்பமா யிருந்தவளுக்குப் புத்திரன் ஜனித்தபின் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளப்பட்டு ஸ்வீகார தகப்பனுடைய சொத்துக்கள் ஸ்வீகார புத்திரன் பாத்தியமடைய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதில் 10 M. I. A. 279 பிசகென்று தள்ளப்பட்டது. ஆகவே முன் ஜனித்த புத்திரன் கடைசியாகசொத்து பாத்தியதையடைந்திருக்க அவனுக்கு ஸ்வீகாரமேற்படாமல் அவனுடைய சிறியதகப்பனுடைய ஸ்வீகாரப் புத்திரனுக்கு பாத்தியம் மேலானதென்று ஏற்பட்டிருக்கிறது.

(5) 25 பம்பாய் 360-ல் மகனும் மருமகளும்இறந்தபின் தாய்எடுத்த ஸ்வீகாரம்நிலைபெற்றிருக்கிறது. மேற் கூறிய தீர்மானங்களால் கூட்டான ஹிந்துக் குடும்பத்தைப் பற்றின மட்டில் கடைசியாய் சொத்தை ஆண்டவனுக்குத் தான் ஸ்வீகார மேற்பட வேண்டுமென்ற நியாயம் அனுசரிக்கத் தக்கதல்லவென்று சொல்லவேண்டும்.

ஆனால் வாரிஸ்பாத்தியதையால்சொத்தை அடைந்தவனுக்குப் பிந்தி ஏற்படும் ஸ்வீகாரம் பாதிக்காதென்று பரிஷ்காரமாய்த் தீர்மானங்களிருக்கின்றன. (1881)8 I.A. 229; 1885 12 I.A. 137; (1887) 14 I.A. 67; (1898) 8 M.L.J. 173-இவைகளைப்பார்க்கவும். தாவாஜமீன் கூட்டுக்குடும்பமாக பாவிக்கப்படவேண்டிய நியாயத்தால் மேற்கூறிய நியாயப்படி வாதியின் ஸ்வீகாரம் செல்லாதென்று தீர்மானிக்க நியாயமில்லை.

பிரதிவாதிகளின் மூன்றாவது பாயிண்டைப் பற்றி யோசிக்கும் பொழுது வாதியின்தாவாதள்ளுபடியாக வேண்டும். ரத்னமாலாவென்ற முதல் ஸ்வீகார புத்திரனுடைய பாரியாள் ஜீவனோடிருப்பதால் குந்தனதேவியம்மாள் 2-வது ஸ்வீகாரமெடுக்கத்தடையாருமாவென்று தீர்மானிக்க வேண்டியது தான் மூன்றாவது பாயிண்டு. குந்தனதேவியம்மாள் ஸ்வீகாரமெடுக்க அதிகாரம் பெற்றிருக்கிறாள். தன் கணவனுக்குப் புத்திரனாகிலும் பேரனாகிலும் கொள்பேரனாகிலும் இல்லாதிருக்கும் பட்சத்தில் ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாமென்று முந்தியே தத்தகமீமாம்ஸத்தை அனுஸரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளக்காலத்தவணை இன்னதென்று ஏற்படவு மில்லை. அதிகாரம் கிடைத்தவெகு காலத்திற்குப்பின் எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் ஸ்வீகாரம் செல்லத்தகுமென்று தீர்மானிக்கப்பட்டுமிருக்கிறது. ஆனால் பிரதிவாதி தரப்புவக்கிலவர்கள் ஒரு பம்பாய் ஹைகோர்ட்டில் பெஞ்சு கேஸில் (26 பம்பாய் 526-ல்) சொல்லியிருக்கும் நியாயத்தை எடுத்துக்காட்டி ஒரு ஹிந்து ஒரு மனைவியையும் மகனையும் விட்டு இறந்து மகன் விவாகமாகி புத்திரனை அடைந்து அல்லது புத்திரனை ஸ்வீகாரம் செய்துகொண்டு அல்லது இருவகையான புத்திர சந்தானமில்லாமல் மனைவியை (மருமகளை) ஸ்வீகாரமெடுத்துக் கொண்டு தன் வம்சத்தை விருத்தி செய்யும்படி விட்டு விட்டுக் காலஞ்சென்றபின் மூலபுருஷனுடைய மனைவிக்குக்கொடுக்கப் பட்டிருந்த ஸ்வீகார அதிகாரம் பயனற்றுப்போகுமென்று வாதிக்கு ரத்னமாலாவின் நிலைமையைச் சொல்லி குந்தன தேவியம்மாளுடைய B ஆதாரவில்கண்ட அதிகாரம் பயனற்றுப் போகிறதென்று வாதம் செய்கிறார்கள். இந்த தீர்மான நியாயத்தின் மூலத்தை அறிவது இலேசானகாரியமல்ல. ஸ்வீகார மெடுத்துக்கொள்ள அதிகாரம் பெற்றவர்களுக்கு ஒருவிதமான கட்டுமான மிருக்கவேண்டியது நியாயமாகும். ஒருவனுக்குப்பின் ஒருவனாக ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளாதபடிசிலவிதிகள்அனுஷ்டிக்கப்படவேண்டியது அவசியமாகும். இந்தக் கேஸில் முதல் ஸ்வீகார புத்திரன் 36 வயது மட்டும்ஜீவித்திருந்திருக்கிறார். அவருக்குஅப்பொழுதுஆண்சந்ததிகிடையாது. ரத்னமாலாவுக்கு ஸ்வீகார அதிகாரம் கொடுத்திருந்தாரென்று சொல்லக்கூடவில்லை. ஏனெனில் இந்ததாவாவில் அவள்பார்ட்டியல்ல. அவளுக்கு ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள அதிகாரம் கிடையாதென்று உறுதியாய்ச் சொல்லவும் சாத்தியப்படவில்லை. அவள் ஸ்வீகாரம்எடுத்துக்கொண்டால் வாதிக்கு ஜமீனில் யாதொரு பாத்தியதையும் ஏற்படாதென்றும் வாதி வக்கிலவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே வாதியினுடைய பாத்தியதையை அபகரித்

துக்கொள்ளத்தக்க ஒரு ஸ்வீகார புத்திரன்ரத்னமாலாவினால் ஏற்படலா மாகையால் ரத்னமாலாவின் ஜீவதசை மட்டும் குந்தனதேவியம்மாள் மறு ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள நியாயமில்லையென்றுசொல்லவேண்டும். 26 பம்பாய்க் கேஸில் சொத்து மருமகளிடம் வந்து சேர்ந்து விட்டது. மாமியார் மட்டும்தான் ஸ்வீகார அதிகாரத்துட னிருக்கிறாள். ஆனால் மருமகளே ஸ்விகாரமெடுத்துக்கொண்டு தன் கணவனுடைய வம்சத்தை விருத்திசெய்யலாமாகையால் மாமியாருடைய ஸ்வீகார அதிகாரம் பயனற்ற தாச்சுதென்று அந்தக்கேஸில் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கேஸில் சொத்தானது மருமகளிடத்திலும் வந்து சேரவில்லை. மாமியாரிடமும் இல்லை. வைஷ்ணவதீயோவினுடைய மக்களிடத்தில் வந்து சொத்தும்சேர்ந்துவிட்டது. யாரிடம்வந்து சேர்ந்தபோதிலும் ரத்னமாலா ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளும்பட்சத்தில் சொத்தானது அந்த ஸ்வீகாரபுத்திரனிடம் வந்து சேரவேண்டிய நியாயமாகையால் ரத்னமாலா ஜீவித்திருக்கும் விஷயம் குந்தனதேவியின் 2-வது ஸ்வீகார அதிகாரத்திற்குத் தடையாகிறதென்று சொல்லத்தகும். ஆகையால் பிரதிவாதிகளின் மூன்று ஆக்ஷேபனைகளில் இந்த மூன்றுவது ஆக்ஷேபனை மட்டும் வாதிக்குவிரோதமென்று தீர்மானிக்கப்பட்டு வாதியின் அப்பீல் தள்ளுபடியாச்சுது. XXVII. M. L. J. 306.

---

## ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே

### தஞ்சாவூர் ஜில்லா.

### S. A. 467 of 1913—9 செப்டம்பர் 1914.

### ராஜம்மாள்வகையரா vs மாதவயோகிவகையரா

பவந்தமாகவும் பிரதி பிரயோஜனமில்லாமலும் சொத்தை விக்கிறயம்பெற்றவன் சொத்தை சுவாதீனமடைய லாயக்கில்லை யென்று சொத்தை அனுபவிக்கிறவர்கள் ஆக்ஷேபிக்க லாயக்குண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

மாதவயோகி என்றவாதி பாலசுந்தரியம்மாளென்றவிதந்துவினிடமிருந்து தாவாசொத்துக்களை ரெஜிஸ்டர் தஸ்தவேஜினால் விக்கிறயம் பெற்றபின் பால சுந்தரியம்மாள் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்காமல் காலஞ்சென்றுவிடவே ஷை வாதி தாவா சொத்தை அதாவது திருவையாற்றிலுள்ளஒரு வீடுமனையை சுவாதீனமடையும் பொருட்டு அந்த வீட்டிலிருக்கிற பிரதிவாதிகள் பேரில் டி.மு.கோர்ட்டில் இஜெக்ட் மெண்ட் தாவா செய்தார். பிரதிவாதிகள் எதிரான்ஸரில் (1.) பாலசுந்தரியம்மாளுக்கு தாவா சொத்தில் ஜீவதசைமட்டும் அனுபவிக்க பாத்தியமுண்டேயொழிய அதைப்பராதீனபடுத்த லாயக்குள்ளவளல்லவென்றும், (2) பாலசுந்தரியம்மாள் புருஷனுக்குபிரதிவாதிகள்அனந்தரவாரிஸ் பாத்தியதையுடையவர்களென்றும்,(3) 2-ம்பிரதிவாதி பாலசுந்தரியம்மாளின் கணவனுக்கு ஸ்வீகாரபுத்திரனென்றும் (4) தாவாவிக்கிறயம் பவந்தமென்றும் அதற்குப் பிரதிபிரயோஜனமே கிடையாதென்றும் ஆகையால் கிறயம் முற்றிலும் செல்லத்தகாதென்றும் ஆக்ஷேபித்து வாதி ஷை விக்கிறயபாத்தியதையால் தாவா சொத்தை யடைய லாயக்கில்லையென்று வாதித்தார்கள்.

டி. மு. கோர்ட்டார் தாவா விக்கிறயம் பவந்தமென்றும் அது செல்லத்தகாதென்றும் அதன்படி வாதிக்கு தாவாசொத்தில் பாத்தியதை ஏற்படநியாயமில்லையென்றும் தவிற பாலசுந்தரியம்மாளுக்கு அதில் ஜீவதசைமட்டும்தான் பாத்தியமுண்டென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் பிரதி வாதிகளின் ஸ்வீகாரபாத்தியம் செல்லத்தகாதென்று டி.மு-கோர்ட்டாருக்கு ஒத்தபிப்பிராயப்பட்டதுமல்லாமல் அவர்கள் பாலசுந்தரியம்மாளுடைய பர்த்தாவின் அனந்தா வாரிஸ்களல்லவென்ற காரணத்தினால் அவர்கள் விக்கிறயத்தை ஆக்ஷேபிக்கவும் அதற்குப் பிரதி பிரயோஜனம் கிடையாதென்று வாதிக்கவும் லாயக்குள்ளவர்களல்ல வென்று அபிப்பிராயப்பட்டு ரெஜிஸ்டர் தஸ்தவேஜினால் பாத்தியம் கொண்டாடுகிற வாதிக்கு சுவாதீன டிக்ரீ யளித்தார்கள்.

பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் பாலசுந்தரியம்மாளுக்கு தாவா சொத்தை விக்கிறயம் செய்ய பாத்தியதை உண்டென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியானாலும்



தாவா விக்கிறயத்திற்குப் பிரதி பிரயோஜனமில்லையென்றும் அது பவந்த மென்றும் ஆகவே முற்றிலும் செல்லத்தகாதென்றும் பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்க நியாயமுண்டென்றும் டி-மு கோர்ட்டார் அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு விக்கிறயத்தை ரத்து செய்தமையால் அந்த பாயிண்டைப் பற்றி சப்-கோர்ட்டார் தீர்மான அபிப்பிராயங் கொடுத்து அப்பீலை பைசல் செய்யவேண்டுமென்று கேஸை சப்கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்தனுப்பினார்கள். அதற்குக் காரணமாகச்சொல்லப்பட்ட நியாயச்சுருக்கமாவது:—

பொதுவான முறைப்படி சொத்தின் சுவாதீனத்திலிருக்கிறவன்பேரில் இஜெக்ட்மெண்டு பிராது கொண்டுவருகிற விக்கிறயதாரன் நிஜமான சொந்தக்காரனல்லாதபட்சத்தில் அவனுடைய விக்கிறயம் பவந்தமென்றும் எதார்த்தமாய் ஏற்பட்ட நடவடிக்கை யல்லவென்றும் அந்த விக்கிறயம் முற்றிலும் செல்லாதென்றும் எதிர்வாதம் செய்ய லாயக்குண்டென்று சொல்லவேண்டும். வாதியின் வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ, அனந்தகிருஷ்ணய்யாவர்கள் சொத்து பாத்தியமில்லாதவன் சுவாதீனத்திலிருந்தாலும் அவனை வெளிப்படுத்தும் ரெஜிஸ்டர் தஸ்தவேஜின் பேரில் கிறயம் பெற்றவனுடைய பாத்தியதையை ஆக்ஷேபிக்கக்கூடாதென்று வாதித்து அதற்கு ஆதாரமாக 36 பம்பாய் 37-ஐ எடுத்துக்காட்டுகிறார்கள். அதில்கண்ட ஒருவாக்கியம் வாதியின்மேற்கூறிய வாதத்திற்கு அனுஸரணையாக இருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானத்தை கவனித்துப்பார்க்கையில் அதில் சொல்லப்பட்ட நியாயம் இந்தக் கேஸின் அம்சங்களுக் குதவக்கூடியதல்லவென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. அந்த பம்பாய்க் கேஸில் ஹைகோர்ட்டார் கீழ் கோர்ட் அபிப்பிராயத்தைப் பற்றி யோஜித்துப் பின்வருமாறு அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்:—ஒரு சொத்தை பாத்திதயமில்லாதபடி கைப்பற்றிக்கொண்டவன்பேரில் சொந்தக்காரனிடத்திலிருந்து கிறயம் பெற்றவன் இஜெக்ட்மெண்ட் தாவா செய்ததில் சொந்தக்காரன் தான் எழுதிக்கொடுத்த விக்கிறயத்தை ரத்து செய்யும் பொருட்டு தாவாசெய்யும் பட்சத்தில் என்னவிதமான வியவகாரமாடலாமோ அவைகளை யெல்லாம் சொத்தை சுவாதீனமடைந்திருக்கிற அந்நியனும் எதிராக்ஷேபனையில் காட்டி வாதிக்க லாயக்குண்டென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறது பிசகென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத்தீர்மானம் யுக்தமானதென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அவ்வன்னியன் விக்கிறயம் செய்யப்பட்டது பவந்தமென்றும் அதற்குப் பிரதி பிரயோஜனம்கிடையாதென்றும் ஆகவே கிறயம் செல்லத்தகாதென்றும் எதிர் வழக்காடக்கூடாதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டதாகச்சொல்ல நியாயமில்லை. அவ்வித அபிப்பிராயப்பட்டிருந்தால் அதுசரியான அபிப்பிராயமல்லவென்றுசொல்லவேண்டும். 15 பம்பாய் 1-ல்சொல்லப்பட்டிருக்கிற தீர்மானத்தைஅனுசரித்து இஜெக்ட்மெண்ட் தாவாசெய்கிறவனுடைய விக்கிறயம் பவந்தமென்றும் நமோதுக்கு வரத்தக்கதல்லவென்றும் சுவாதீனத்திலிருக்கிற அந்நியனும் எதிராக்ஷேபனை செய்யலாமென்று சொல்லவேண்டும். ஆகையால் சப்கோர்ட்டார் மேற்கூறிய எதிர்வாதத்தைப் பற்றி ஈசங்கிகேட்டு சட்டப்படி அப்பீலைத் தீர்மானிக்கவேண்டுமென்று ரிமாண்டு உத்தரவளிக்கப்பட்டது. XXVII. M. L. J. 445.

---

## ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் நேபியர்

### திருச்சினாப்பள்ளி ஜில்லா

### S.A. 1567 of 1913-8 செப்டம்பர் 1914

### கிருஷ்ணய்யர் vs ராமஸாமி அய்யர்

ஏலச்சீட்டில் ஏஜண்டுக்குத்திருப்திகரமான ஜாமீன் கொடுக்கப்பட வேண்டும். கோர்ட்டார் ஏஜண்டின் யுக்தானுசாரத்தைப் பற்றித் தலையிட நியாயமில்லை. ஏஜண்டுகள் நியாயமில்லாமல், யோஜனையில்லாமல், ஸ்வயஇச்சையாக ஜாமீன் தகுதியானதல்லவென்றுமறுத்துவிட்டதாக ருஜு அம்சம் ஏற்பட்டால்மட்டும் கோர்ட்டார் பிரவேசிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

ராமஸாமி அய்யரும் மற்றொருவரும் ஏலச் சீட்டுக்கு ஏஜண்டுகளா யிருந்து நடத்தி வந்ததில் கிருஷ்ணய்யரென்ற சீட்டுப்புள்ளிக் காரர் 2-வது வாய்தா

வில் எலமெடுத்ததினுல் அவருக்கு ரூ 2700 செலுத்தப்பட வேண்டியதாயிருந்தது. பிந்திய வாய்தாக்களுக்கு ஒழுங்காய் சீட்டுத்துகையைச் செலுத்திவா வேண்டியதற்காக ஏஜண்டுகளுக்குத் திருப்திகரமான ஜாமீன் கொடுத்தால் மட்டும் எலத்துகையைப் பெற்றுக்கொள்ள நியாயமாகும். கிருஷ்ணய்யரவர்கள் ரூ 3000 பெருமானமுள்ள ஒருசொத்தை ஜாமீனுய் எழுதி வைக்கிறதாகத் தெரிவித்ததில் ஏஜண்டுகள் அந்த சொத்து போதுமான ஜாமீனுக மாட்டாதென்று அதை ஒப்புக்கொள்ளமறுத்துவிட்டார்கள். எலத்துகை ஏஜண்டுகளின் வசமே நின்றுவிட்டது. கிருஷ்ணய்யர் ஏஜண்டுகளிடம் நிற்கிற துகைக்கு மாதம் 1க்கு 100க்கு மூன்று விகிதம் வட்டி தனக்குச் சேரவெண்டுமென்று ஷை ஏஜண்டுகளின் பேரில் ஆளைப் பொறுத்து டிக்கிரியளிக்கும்படி ஸ்ரீரங்கம் டி. மு கோர்ட்டில் பிராது கொடுத்தார். பிரதிவாதிகளாகிய ஏஜண்டுகள் தங்களிடம் நின்ற எலத்துகையைக் கோர்ட்டில் டிபாஸிட் செய்து ஸ்டேட்மெண்டில் வாதிகொடுக்கிற ஜாமீன் சொத்தானது அச்சமயத்தில் அதாவது ஸ்டேட்மெண்டு தாகல் செய்யும் சமயத்தில் போதுமான தாகுமென்றும் ஏனெனில் அச்சமயத்தில் வாதியால் செலுத்திவரப்படவேண்டிய பின் சீட்டுத்துகை குறைந்துவிட்டதென்றும்ஆகையால்வாதிகொடுக்கும்சொத்து ஜாமீன் எற்றுக்கொள்ளத் தகுமென்று சொல்லி டிபாஸிட் கட்டியிருக்கிறதுகை வாதியிடம் செலுத்தி விடுவதில் ஆக்ஷேபனை யில்லை யென்றும் தாங்கள் வட்டி செலுத்தக் கடமைப்பட்டவர்களல்லவென்றும் இன்னும் இதரமான வழக்கப்படியுள்ளபாயிண்டுகளையும் குறித்தெழுதி எதிர்வாதம் செய்தார்கள். டி-மு-கோர்ட்டார் வாதிக்கனுகூலமாக டிக்கிரியளித்தும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் மாறுன அபிப்பிராயங்கொண்டு வாதி ஜாமீன் சொத்தானது ரூ 3,000 பெருமான முள்ளதென்றுஅபிப்பிராயப்பட்டும் ஏஜண்டுகள் மற்ற சீட்டுப்புள்ளிகளுக்கு டிரஸ் டீயாகிற நிலமையை வகித்தவர்களாய் ரூ 2700க்குத் தகுந்த படி ஷை சொத்தை ஜாமீனுக எற்றுக் கொள்ளாதது நியாயமான நடத்தை யாகுமென்று அபிப்பிராயப்பட்டு வாதி வட்டி வாங்க நியாயமில்லையென்று தீர்மானித்து எலமெடுத்த 2-வது வாய்தாவுக்குப் பின்தாவா தேதி வரையில் வாதியால் செலுத்தப்படவேண்டிய சீட்டுத்துகை ரூ 200-யும் பிரதிவாதிகளுக்குச் சேரவேண்டியதென்று அபிப்பிராயப்பட்டு அதற்குறிய மவுண்டுதுகை பிரதிவாதிகளால் ஸ்டாம்பாகக் கட்டப்படவேண்டுமென்று உத்தாவளித்து ஆனுல் அவ்வகையில் பிரதிவாதிகள் வாதிக்காகச் செலுத்தியிருக்கிற ரூ 117 என்றும் பிரதிவாதிகள் சொல்லுகிறபடி ரூ 200 அல்லவென்றும், வட்டி விஷயமாய் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்து அவரவர் செலவை அவரவர் வகித்துக் கொள்ளவேண்டுமென்று டிக்கிரியளித்தார்கள். அதன் மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்தார். பிரதிவாதிகளும் ரூ 200க்கு மவுண்டு கட்டும்படி உத்தரவளித்த விஷயமாகவும் செலவு துகையைப் பற்றியும் கிராஸ் அப்பீல்தாகல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் வாதியின் அப்பீலைத் தள்ளுபடி செய்து பிரதிவாதிகளின் செலவு துகை பூராவையும் வாதி செலுத்தக் கடவதென்று தீர்மானித்தது மல்லாமல் ஜில்லா கோர்ட்டார் பிரதி வாதிகளுக்குச் சேரவேண்டியதாய்ச சொன்ன ரூ 200க்கும் மவுண்டு கட்டும்படி உத்தாவளித்தது பிசகென்று சொல்லி வாதிக்குச் சேரவேண்டியஎலத்துகையில் வாஸ்தவமாய் வாதிக்காகச் சீட்டு வகையில் செலுத்தப்பட்டதாக எற்பட்ட ரூ 117 யும் கழித்து பாக்கியை மட்டும் வாதி பெற்றுக் கொள்ளவேண்டியதென்றஉத்தாவளித்து பிரதி வாதிகளின்கிராஸ் அப்பீலை செலவுடன் அனுகூலப் படுத்தினுர்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய காரணங்களாவன :—வாதி வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ T.R. வெங்கட்ராமசாஸ்திரிகள் முதலில் ரூல்படி திருப்திகரமான ஜாமீன் கொடுக்கப்படவேண்டியதென்று வாதித்தார். பின்னுல் அந்த ஜாமீன் ஏஜண்டுகளுக்குத் திருப்திகாமாயிருக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டதின்பேரில் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் எந்த ஜாமீன் போதுமானதென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாகத் தோன்றுமோ அதை ஏஜண்டுகள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்லி ஜில்லாகோர்ட்டார் ஜாமீன் போதுமானதாவென்று நிதானிப்பதில் பிசகான வழியில் சென்றுரென்றும் ஆகையால் ஹைகோர்ட்டார் ஏஜண்டுகளின் நடத்தை சரியானதா அல்லவா வென்று தீர்மானங் கொடுக்க வேண்டியதாகு மென்று வாதித்தார். கீழ்



OFFICE 7 - DEC 1914 MADRAS.

கோர்ட்டார் பிசகான வழியில் மதிப்பிட்டாரென்று சொல்ல நியாயமில்லை. ஏஜண்டுகள் மற்ற சீட்டுப் புள்ளிகளுக்கு டிரஸ்டீகளாக பாவிக்கப்படவேண்டுமென்று சொன்னுரே யொழிய டிரஸ்ட் ஆக்டின்படி ஜாமீன் போதுமானதாவென்று மதித்துப் பார்க்கவில்லை. அவர்களை டிரஸ்டீகளாய் பாவித்தது பிசகல்லவென்று சொல்லவேண்டும். ஆகவே ஏஜண்டுகளின் யுக்தானுஸாரம் சரியாவென்றபாயிண்டு ருஜூ பாயிண்டே யொழிய அது லாபாயிண்டல்ல. ஆகையால் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். ஆனுல் 2-வது அப்பீலில் தலையிடலாமென்ற கருத்துடன் முற்றிலும் ஈரங்கி கேட்டதில் கோர்ட்டாருக்கு ஜாமீன் போதுமானதா அல்லவா என்று தீர்மான அபிப்பிராயம் கொடுக்க நியாயமில்லையென்றும் ஆனுல் ஏஜண்டுகள் யுக்தானுஸாரத்தை நியாயமில்லாமலும் யோஜனையில்லாமலும் ஸ்வயஇச்சைப்படி செலுத்தினுர்களா வென்ற ருஜூபாகமிருக்கிறதாவென்று மட்டும் கோர்ட்டார் கவனித்துப்பாாத்து அப்படி நடந்தார்களென்ற ருஜூபாக மிருந்தால் அவர்களுடைய தீர்மானத்தை மாற்ற நியாய முண்டாகு மென்று திருப்திகாமாய் எற்படுகிறது. ஏஜண்டுகள் தங்கள் இஷ்டமானபடி ஜாமீனை மறுத்துவிடக்கூடாதென்றும் அப்படி மறுத்தால் கோர்ட்டார் பிரவேசிக்கலாமென்றும் வாதிக்கப்படுகிறது. ஏஜண்டுகள் இஷ்டம்போல் ஜாமீனை மறுத்துவிடக் கூடாதென்பது நியாயமே; அப்படி நடந்தால் கோர்ட்டார் பிரவேசிக்கலாமென்ற நியாயம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. (1861) E. R. 904-ல் தீர்மானித்திருக்கிறபடி ஏஜண்டுகள் யுக்தானு ஸாரத்தைச் செலுத்துவதில் அநீதியாகவும் சித்தவிருத்தியின் படியும் தீர்க்கயோஜனை இல்லாமலும் நடந்தார்களென்று ருஜூபாக மிருந்தால் மட்டும் கோர்ட்டார் பிரவேசிக்கலாம். ஏஜண்டுகள் நியாயமானபடி நடக்கவில்லை யென்ருவது யோஜனையில்லாமல் நடந்தார்களென்ருவது ருஜூ எற்படவில்லையென்று ஜில்லா கோர்ட்டார்அபிப்பிராயப்பட்டது சரியே. டி.மு. கோர்ட்டார் ஏஜண்டுகளின்நடத்தை அநீதியும் யோஜனைக்குறைவுமுள்ளதென்று அபிப்பிராயப்பிட்டிருந்த போதிலும் அவருடைய அபிப்பிராயம் பிராதிலும் காணப்படாதஅம்சத்தை அனுஸரித்ததாயிருக்கிறது. ஆகையால், டி. மு. கோர்ட்டாருடைய மேற்கூறியஅபிப்பிராயம் சரியாவென்று ஜில்லாகோர்ட்டாரை அபிப்பிராயம் கொடுக்கும்படி கேட்கவேண்டியதவசியமில்லை. ஆகையால் வாதி சொல்லும் நியாயத்தையும் சந்தர்பத்தையும் கவனித்து வாதிகொடுத்த ஜாமீனை ஒருகோர்ட்டார் போதுமானதென்று அபிப்பிராயம் கொடுத்த விஷயம் கவனிக்கத் தக்கதல்ல. ஏனெனில் கோர்ட்டாருடைய அபிப்பிராயப்படி ஏஜண்டுகள் ஜாமீனைப் போதுமானதென்று எற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவர்களல்ல. இவ்வித காரணங்களைச் சொல்லி வாதியின் அப்பீலை மேற்கண்டவிதமாய்த் தள்ளுபடி செய்தார்கள். XXVII M. L. J. 447.

---

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ**

திருநெல்வேலி ஜில்லா

S. A. 1554 of 1912—18 ஆகஸ்ட் 1914.

**கோபால முப்பனுர்**

vs

**சுப்பிரம்மணிய அய்யர்.**

ஹிந்து தேவாலயத்தில் இலைவாணியர் உட்பிரவேசித்து நான்கு வர்ணத்தாரைப்போல் தரிசனம் செய்யும் பாத்தியதையைப்பற்றியும், ருஜூ பாரத்தைப்பற்றியும், விக்கிரகாராதனையின் மூலகாரணமும், சிவாலயத்தின் பற்பல மண்டபங்களின் விவரமும் விவரிக்கப்பட்டு இலைவாணியருக் கனுகூலமாய்த் தீர்ப்பளிக்கப்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்ந்த பனகுடி என்னும் கிராமத்தில் ஸ்ரீராமலிங்கஸ்வாமி கோவிலின் அம்மன் ஸன்னிதியில் பள்ளியறை பரியந்தமும் சென்று ஸ்வாமியையும் அம்மனையும் தரிசனம் செய்து, ஸேவித்து, அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியங்கள் நடப்பிவித்து சாதாரண தினங்களிலும் உத்ஸவ காலத்தில் மண்டகப்படிநடக்கும் காலங்களிலும் பிரஸாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் இலைவாணியர் குலத்தைச் சேர்ந்த வாதிகளும் அக்குலத்தார் யாவரும் பாத்திய முடையவர்களென்று பிராமணர்கள், வேளாளர்கள், முதலி

யார்களாகிய பிரதிவாதிகளின் பேரில் டிக்லேரேஷன் தீர்மானமடையும பொருட்டும், அவ்வித பாத்தியதையை அனுசரித்து மேற்கூறிய காரியாதிகளை நடத்தும்பொழுது பிரதிவாதிகளும் அவர்களைச் சேர்ந்த குலத்தவர்களும் தடைசெய்யக்கூடாதென்று இஞ்சங்கிஷன் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்றும் வாதிகள் இலைவாணியர் குலத்தாருக்குப் பிரதிநிதிகளாய் திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் அசல் பிராது கொடுத்தார்கள். டி-மு கோர்ட் தீர்மானத்தின் பேரில் ஜில்லாகோர்ட்டில் அப்பீலாகி ஜில்லா கோர்ட்டார் வாதிகளுக்கு விரோதமாய் பைசல் செய்ததில் இலைவாணியர் இதரமான பற்பல ஸ்தலங்களிலுள்ள சிவாலயத்தில் உட்பிரவேசித்து நான்கு வர்ணத்தாரைப்போல் தரிசனாதிகளை நடத்திவரலாமென்று வாதி தரப்பு சாட்சிகளினுல் ருஜூப் படுத்தப்பட்ட போதிலும் தாவா கோவிலில் வாதியின் குலத்தாருக்கு அவ்வித பாத்தியமுண்டென்று ருஜூப்படுத்த வேண்டிய பொருப்பு வாதிகளைச் சேர்ந்ததென்றும் அவ்வித ருஜூ அம்சம் வாதி தரப்பில் பலமாயில்லையென்றும் அந்த ருஜூ அம்சத்தை வாதிக்கனுகூலமாய் பாவிக்கத் தகாதென்றும், பிரதிவாதி தரப்புசாட்சியம் நம்பத்தக்கதல்லவென்று அபிப்பிராயப்பட்டும் அதைகவனிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன்பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்ததில் வாதிக்கனுகூலமான தீர்ப்பளிக்கப்பட்டது. ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் கொடுத்ததீர்ப்பின் சுருக்கமாவது:—

சிவாலயங்களில் மூலவிக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கும் மூலஸ்தானத்திற்கு கர்ப்ப கிருகமென்று சொல்லப்படுகிறது. ஆலயத்தில் அந்தபாகம்தான் மகாபரிசுத்தமானது. அதற்கு அடுத்த வெளிமண்டபத்திற்கு அர்த்தமண்டபமென்றுபெயர். அதற்கும வெளியிலுள்ள பெரிய மண்டபத்திற்கு மகாமண்டபமென்று பெயர். மூலவிக்கிரகம்பொதுவாய் கீழ்முகமாயிருப்பதால் மேற்கூறிய மண்டபங்களின் வாசல் கதவுகளும் கிழக்குமுகமாய்த் தானிருக்கின்றன. ஒருவாசலுக்கு கிழக்கில் அடுத்த வாசலாகஎற்பட்டிருக்கும். பெரிய மண்டபமாகிய மகா மண்டபத்தின் வாசலுக்கு கிழக்கில் மேற்கு முகமாய் பெரிய நந்தி விக்கிரகமும் துவஜஸ்தம்பமும், பலி பீடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில பெரிய சிவாலயங்களில் அர்த்த மண்டபமானது (1) அந்தராளம் (2) முகமண்டபம் (3) துவாரமண்டபம் (4) ஸ்நாபனமண்ட்பம் (5) விருஷமண்டபம், ஆகிய ஐந்து உட்பிரிவுகளாயும் எற்பட்டிருக்கின்றன; மகாமண்டபமானது பெரிய சிவாலயங்களில் (1) பஹிர்மண்டபம், (2) நிருதமண்டபம், என்றஇரண்டு பாகங்களாகப் பிரிந்திருக்கின்றன. தாவா கோவிலைப் போலொத்த சிறிய கோவில்களுக்கு கர்ப்பகிருகம் என்ற மூலஸ்தானத்தைத் தவிர்த்து அதன் வாசலுக்குக் கிழக்கில் துவஜஸ்தம்பம் வரையில் உள்ளபாகம் ஒரேமண்டபமாகக் காணப்படும். ஆகையால் தாவா கோவிலுக்கு கர்ப்பகிருகத்தைத் தவிற அர்த்தமண்டபம் மகாமண்டபம் என்ற தனித்தனியான பாகங்களில்லை. தோரணக்கல் என்றும் தோரணவிளக்கென்றும் தாவா கோவிலில் கர்ப்பகிருகத்திற்கு வெளியிலிருப்பதாய் ருஜூபாகத்தில் துலங்கினபோதிலும் அப்பதங்களுக்கு என்ன கருத்தென்று கீழ்கோர்ட்டார் நிர்ணயிக்கவில்லை. கோவிலுக்குள் போக லாய்க்குள்ளவர்கள் துவஜஸ்தம்பத்திலிருந்து கர்ப்பகிருகம் வரையில் போகலாமென்று பிரதிவாதி தரப்பு 9-வது சாட்சி வாக்குமூலத்தால் எற்படுகிறது. இடையிலுள்ள பற்பலமண்டபங்களும்அவைகளின் உட்பிரிவுகளும் தாவா கோவிலுக்குக் கிடையாதென்று எற்படுகிறது. கர்ப்பகிருகத்தின் வாசலுக்கு வெளியில் அடுத்து ஸபாபதிஸன்னிதி இருக்கிறது. அதுமட்டும் போய் வாதிகள் ஸ்வாமி தரிசனம்செய்து அர்ச்சனை முதலானதுகளை நடத்திவைக்க பாத்தியமுண்டென்று டிக்லேரேஷன் செய்யும்பொருட்டு வாதியின் குலத்தார் கோருகிறார்கள். இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளுகிறபடி கோவில் அர்ச்சகர்கள் மட்டும் தான் கர்ப்ப கிருகத்திற்குள் நின்று பூஜாவிதிகளைச் செய்யலாம். மற்றவர்கள் யாரும் அங்கு செல்லக் கூடாதென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. வெளிமண்டபத்தி லிருந்துதான் மற்ற பிராமணர்களும், பிள்ளைமார்களும், முதலியார்களும் நின்று தரிசிக்கவேண்டும்.

வாதிகள் தங்கள் பிராதில் நினைவில்லாத கால முதல் வழக்கமாகவும் ஹிந்து சாஸ்திரத்தை அனு



சரித்தும் தாவா கோவிலின் வெளிமண்டபத்திலிருந்து மற்றவர்களைப்போல் ஸ்வாமி தரிசனம் முதலியவைகளை நடத்த லாயக்குள்ள ஜாதியாரென்று சொல்லி 1907ல் சில பிள்ளைமாரும் முதலியார்களும் தங்களை துவஜஸ்தம்பத்திற்கு மேற்கே வரக்கூடாதென்று தடுத்ததாகவும் அது பிசகென்று தீர்மானமடையும் பொருட்டு இந்தப்பிராது கொண்டு வந்திருக்கிறார்கள். திருச்சந்தூர், சங்கரநயினர்கோயில் குத்தாலம், ஸ்ரீவைகுண்டம், தென்காசி, மேலவாசல், திருநெல்வேலி, வள்ளியூர், கடயம், தருவை இந்த ஸ்தலங்களில் இலைவாணியர் அர்த்த மண்டபத்திற்குள் சென்று ஸ்வாமி தரிசனம் செய்யலாமென்று வாதி தரப்பு சாட்சிகள் ருஜூப்படுத்தி யிருக்கிறார்கள். அந்தசாட்சிகளின் அந்தஸ்தைப்பற்றி ஜில்லாஜட்ஜியவர்களே மிகவும் மேன்மையாய்ச் சொல்லியிருக்கிறார்கள். 8, 11-ம் சாட்சிகள் திருச்சந்தூர் கோவில் தர்மகர்த்தாக்கள். அவ்விருவரும் தாலுக்கா போர்ட் மெம்பர்கள். 9-வது சாட்சி சங்கான் கோவில் கிராமமுனிசிப்தார்; அவ்வூர் கோவில் பட்டர். ரூ. 750 பேரீஜ்கட்டுகிறவர். 15-வது சாட்சி திருநெல்வேலி தேவஸ்தான மானேஜர். 16வது சாட்சி பிராமணஜாதி பாங்கி ஏஜண்டு உத்தியோகம் வகிக்கிறார். ஆகவே மேலானஜாதியிலும் உத்தியோகத்திலும் அந்தஸ்திலுமுள்ளவர்கள் தங்களுக்குத் தாழ்மையான ஜாதியாரைத் தங்களுக்குச் சமமான நிலமையில்வைத்து மேற்கண்ட விதமாய் வாக்குமூல மளித்திருப்பது பொய்யென்று சொல்லத்தகாது. வாஸ்தவமாய் வாதியின் குலத்தாருக்கு சமமான பாத்தியதை இருக்கிறபடியால்தான் அவர்கள் அவ்வித வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஆனால் வாதியின்குலத்தார் மற்ற ஸ்தலங்களிலுள்ள கோவில்களில்பிரவேசிக்கலாயக்குள்ளவர்களென்று நம்பத்தக்க விதமாய் ருஜூவானபோதிலும் தாவா கோவிலில் அவ்விதமான பாத்தியதை உண்டென்பதை ருஜூப்படுத்தும் பாரத்தை வாதிகளிடமிருந்து விலக்கி பிரதிவாதிகள்பேரில் மாற்றுவதற்கு இதரகோவில்களில் ஏற்பட்டிருக்கிற பாத்தியவிஷயம் போதுமான காரணமாகாதென்று சொல்லி ஜில்லா கோர்ட்டார் ருஜூபாரத்தை வாதிகளின் பேரில் சுமத்தி அவர்கள் திருப்திகரமாய் தாவா கோவிலில் விலக்கப்படாமல் உள்பிரவேசிக்க பாத்தியமுடையவர்களென்று ருஜூப் படுத்தவில்லையென்றும் பிரதிவாதிகளின்சாட்சியம் நம்பத்தக்கதல்ல வென்றும், பிரயோஜனமற்றதென்றும், சொல்லி ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். வாதிதரப்பு சாட்சி வாக்குமூலம் போதுமானபடி இல்லாத காரணத்தால் ருஜூ பாரத்தை பிரதிவாதிகளின்பேரில் மாற்றிப் பிரதி வாதிகள்திருப்திகரமாய்வாதிகளின் கக்ஷியை எதிர்த்தார்களாவென்று கவனிக்கத் தேவை யில்லையென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள்.

ஜில்லா ஜட்ஜியவர்களின் தீர்ப்பிலுள்ள ஸாரமென்னவென்றால் ஒரு கோவிலில் துவஜஸ்தம்பத்திற்கும் கர்ப்ப கிருகத்திற்கு மிடையிலுள்ள எந்த பாகத்திற்கும் செல்லவேண்டுமென்று விரும்புகிற ஹிந்து மதத்தைத்தழுவும் யாதொரு வர்ணத்தார் தன் வகுப்பினருக்கு அந்த பாகங்களில் தடையில்லாமல் போய் வருகிற வழக்கமுண்டென்று ருஜூப்படுத்த வேண்டுமென்று எற்படுகிறது. கோவிலுக்குப்போய்கும்பிடவேண்டுமென்றெண்ணுகிற யாதொருவனுக்கு மேற்கூறிய பொறுப்பைக் கட்டுவது மிகவும் அசாத்தியமான பாரமாகுமென்று சொல்லவேண்டும். இந்தியாவில் அநேக ஜாதி வகுப்புகளுக்கும் எண்ணிறந்த உள் வகுப்புகளுமிருக்கின்றன. முதலியார், பிள்ளைகள், காரக்காட்டார், முதலியவர்களெல்லாரும் சூத்திர ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் அவர்கள் வெவ்வேறு ஜாதியாரென்று வழங்கி வருகிறார்கள். பிராமணர்களுக்குள்ளும் இந்தியாமுழுவதிலும் நூற்றுக்கணக்கான உட்பிரிவுகளிருக்கின்றன. அப்படியிருக்க நான்கு வர்ணத்தாரில் எவ்வித உள் வகுப்பைச் சேர்ந்த யாதொரு யாத்திரிகன் அந்நிய பிரதேசங்களில் சென்று அங்குள்ளதேவாலயத்திற்குள் சென்று ஸ்வாமிதரிசனம் செய்யவேண்டுமென்று பிரியப்பட்டால் அவன் தன்னுடைய ஜாதியை ருஜூப்படுத்தி அந்த வகுப்பினர் கோவிலுக்குள்செல்ல லாயக்குண்டென்று ருஜூப்படுத்தும் வரையில் கோவில் தர்மகர்த்தா அல்லது அச்சமயம் தரிசிக்க வரும் ஜனங்களில் யாவரும் அவனை வெளியில் போகும்படி செய்துவிடலாம். அந்தயாத்திரிகன் விலக்கப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவனல்லவென்று ருஜூப்படுத்த

வேண்டியதாகும். இவ்விதமான கஷ்டத்தை அவ்விதயாத்திரிகனுக்குக் கொடுப்பது மிகவும் உசிதமல்லாத காரியமாகும்.

விக்கிரகாராதனையின் மூலத்தையும் நியாயத்தையும்கவனித்தால் கிருதயுகமாகியமுதல்யுகத்தில் ஜாதிபேதமில்லாமலிருந்து கடவுளை ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலிருக்கிறரென்று பாவித்து ஒருவர் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச்செய்வதே தெய்வஆராதனையென்று மதிக்கப்பட்டு வந்தது. இரண்டாவது யுகத்தில் எல்லோரும் சமமானவர்களென்றமேன்மையான நோக்கம் பழுதாய்ப்போய் மனிதர்களுக்குள்மேன்மை தாழ்மை யென்ற கருத்துகளுக் கிடமுண்டாகிமேலானவர்களிடத்திலிருக்கும் தெய்வகுணங்களை தாழ்ந்தவர்கள் ஆராதிக்க வேண்டுமென்ற நியாயம் நடைபெற்றுவந்தது. அதன் பிறகு தாழ்மையைப்பற்றி இயற்கையாகவே தர்க்கங்கள் ஏற்பட்டு ரிஷிக்கள (புத்திமான்கள்) சச்சரவுகளை நிவர்த்திக்கும் பொருட்டு விக்கிரகாராதனையை ஏற்படுத்தி இப்பொழுது நான்கு வர்ணத்தாராய்ப் பிரிந்திருக்கிற எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவருடைய குணதிசயங்களைப்பற்றி மேன்மையாய் நினைக்கவேண்டியதில் அனுசிதமான விவாதங்கள் உண்டாகாதபடிக்குப் பொதுவான விக்கிரகங்களை எல்லோரும வணக்க வேண்டுமென்று தேவாலயங்களை ஏற்படுத்தினார்கள். ஸ்ரீமத்பாகவதம் 14-ம் அத்தியாயம் 7-ம் ஸ்கந்தம் 4-வது சுலோகத்தைப்பார்க்கவும். விக்கிரகாராதனை நான்கு வர்ணத்தாருக்கும் பொதுவாய் அனுஷ்டிக்கத்தகுந்ததாய் ஏற்படுத்தப்பட்டும், அது மிகவும் மேன்மையான தெய்வ ஆராதனையின் முறையாக மதிக்கப்படவில்லை. பிராமணர்களுக்கு கடவுளை அக்கினி, சூரியன்,மூலமாய் ஆராதிக்க வேண்டுமென்றும் எல்லாவிதத்திலும் முதல் யுகத்தில், அனுஸரிக்கப்பட்டு வந்தமுறையே மிகவும்மேலானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கூறிய விஷயங்களைக் கவனித்தால் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்கிற நான்குவர்ணத்தாருக்கும் ஆராதனை செய்யும்பொருட்டுதேவாலயங்கள்உத்தேசிக்கப் பட்டிருப்பதாகத் தெளிவாய் ஏற்படுகிறது. ஜாதி பிரஷ்டர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கூட தேவாலயத்தில் கடவுளை ஆராதிக்க வேண்டிய நன்மை ஏற்பட்டிருக்கிறது. ஆனல் அவர்கள் துவஜஸ்தம்பத்தைத் தாண்டி செல்லக் கூடாதென்ற கடுமையான நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன. சிலசமயங்களில் கோவிலின் வெளிபிராகாரத்தின் வாசலுக்கு எட்டி நிற்கவேண்டுமென்ற கண்டிப்பும் செய்யப்பட்டு அவர்கள் உதஸ்வ விக்கிரங்களை வீதிகளில் ஊர்கோலம் வருங்காலங்களில் தரிசித்தால் போதுமென்று சொல்லப்படுகிறது. அப்படிக்கேதேனும் ஹத்து மீறி கோவிலுக்குள் பஞ்சமர்களாவது பிரஷ்டர்களாவது பிரவேசித்து விட்டால் தேவாலயம் முழுவதும் சுத்திகரிக்கப்பட வேண்டியதாகும். அதற்குறிய மந்திர தந்திரங்களில் வித்பன்னாயிருக்கிற தந்திரிக்கள் மலையாளத்தில் தானிருக்கிறார்கள். கோவில் அர்ச்சகர்கள் கூட அவ்வித சுத்திக்கிரிபைகளைச் செய்ய லாயக்குள்ளவர்களல்ல. அதற்காக பிரத்தியேகமான சைவோபதேசம் பெற்றிருக்கவேண்டும். அவ்வித உபதேசம்பெற்றாதவர்கள் மூலவிக்கிரகத்தைக் கையால் தொடவேகூடாது, அநேக ஆலயங்களில் குருக்களாகிய அர்ச்சகர்களல்லாத மற்ற பிராமணர்கள்கூட கர்ப்பகிருகத்திற்குள் செல்லக்கூடாதென்று ஏற்பட்டிருக்கிறது. ஒருஆகமத்தில் சைவப்பிராமணகுருக்கள் அர்த்தமண்டபத்தின் முதல்பாகமாகிய அந்தராளத்தில் நின்று ஸேவிக்கவேண்டுமென்றும், வைதிக பிராமணர்கள் அர்த்தமண்டபத்தில்எந்தபாகத்திலும் நிற்கலாமென்றும் மற்ற பிராமணர்கள் முகமண்டபத்திலும் ராஜாக்களும் வைசியர்களும் துவாரமண்டபத்திலும் நிற்கவேண்டுமென்றும் உபதேசம் பெற்ற சூத்திரர்கள் மகாமண்டபத்தின்முதல் பாகமாகிய பகிர்மண்டபத்திலும் என்று பலவிதமாய் விவரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே தந்திரங்களையும் ஆகமங்களையும் பரிசோதித்துப் பார்த்தால் துவஜஸ்தம்பத்திற்குக் கிழக்கே நின்று ஸ்வாமி தரிசனம் செய்வதற்காக மண்டபமே கிடையாதென்றும் அதற்கு மேற்கிலுள்ளமண்டபங்களில் சூத்திரர்களும் அவர்களுக்கு மேலான வர்ணத்தாரும் குறித்த இடங்களிலிருந்து ஸ்வாமி தரிசனம் செய்யலாமென்று ஏற்படுகிறது. அப்படியானல் ஒரு சூத்திரனையாகிலும் அவனுக்கு மேலான நிலைமையுடையவனையாகிலும் துவஜஸ்தம்பம் தாண்டி உள்ளே வரக்கூடாதென்று தடுத்தால் அந்த வகுப்பினர் துவஜஸ்தம்பம் தாண்டிவருகிற வழக்கமில்லையென்று ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பானது தடுக்கிற நபரைச் சேர்ந்ததாகும். அப்படிப்பட்ட வழக்க மிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அது நியாயமில்லாத வழக்கமாகு மென்று சொல்லத்தகும். ஏனெனில் நான்கு வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் சாஸ்திரப்படிக்குச் செல்ல லாயக்குள்ள இடத்திற்கு வழக்கமுறையால் தடைசெய்யப்படுவது நியாயமல்ல. ஆனல் ஒரு வழக்கமானது (யாதொரு ஆசார ஒழுக்கமானது) மிக்க துர்நடத்தையான சம்பிரதாயமாயிருந்தாலொழிய அது சரியான ருஜுஅம்சத்தால் வழங்கி வருகிறதென்று ஏற்படும்பக்ஷத்தில் அந்த வழக்கம் சாஸ்திர விதிகளுக்கு விரோதமாயினும் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானங்களிருக்கிறபடியால் அந்தத் தீர்மானங்களை அனுஸரிக்க வேண்டிய கடமையாகிறது. 31 மதாராஸ் 236-ல் (கமுதி கேஸில்) அசல்கோர்ட்டாருடைய தீர்மானத்தில் சொல்லியிருக்கிறபடி ஒருவழக்க முறையானது நீதிக்கு விரோதமா யிருந்த போதிலும் அந்த வழக்கமுறையைத் தள்ளுபடி செய்யக்கூடாதென்று சொல்ல வேண்டும். சில ஜாதியர்களைத் தொட்டால் தீட்டுதோஷம் பிராமணர்களுக்கு மட்டுமல்ல சூத்திரர்களுக்கும் அவ்வித தோஷம் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திரர்களில் மிகவும் உயர்ந்த அந்தஸ்தி லிருந்தவர்கள் தாழ்ந்த சூத்திரர்களைத்தொட்டால் தோஷமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்த தோஷத்தால் பரிகாரம் செய்யவேண்டிய கடமை பிராமணர்களுக்குஏற்பட்டது போல் சூத்திரர்களுக்கு ஏற்படாத போதிலும் சூத்திரர்கள் தாழ்ந்தவர்களைத் தொடாமலிருக்கப் பிரயத்தனப் படுகிறார்கள். இந்தக் கேஸில் பிரதிவாதி தரப்பு 1-வது சாட்சி சூத்திர ஜாதி வேளாளராயிருக்க அவர் சில தாழ்ந்த வேளாளர்களைத் தொட்டுக்கொள்ள மாட்டா ரென்று வாக்கு மூலங்கொடுத்திருக்கிறார். மரவர்களையும் இடையர் களையும் தொட மாட்டேனென்று சொல்லி யிருக்கிறார். மரவர், இடையர், ஆசாரிகள், கம்மாளர்கள், பிள்ளைகள், தாழ்ந்த குலத்து முதலியார்கள் பிள்ளைகள் ஆகிய அனைவரும் பிராமணர்களுக்கடுத்த வகுப்பில் ஒன்ருய்க்கலந்து நிற்கிறார்களென்று அதே சாட்சி ஒப்புக்கொள்ளுகிறார். பிரதிவாதி தரப்பு 14-வது சாட்சியோ - குரவர்கள், ரெட்டிகள், நாயகாள் இவர்கள் கோவிலுக்குள் போகலாமென்றுசொல்லியிருக்கிறார். அதாவது கர்ப்பகிருகத்திற்கு வெளியிலுள்ள மண்டபத்திற்குள் செல்லலாமென்று சொல்லி யிருக்கிறார்கள். வாதியின் குலத்தார் சூத்திர ஜாதியானலும சொற்பகாலத்திற்குமுன் கொஞ்சம் ஏழுமைத்தனமாயும் செல்வாக்கில்லாதவர்களாகவுமிருந்திருக்கிறார்கள். ஆனல் பிள்ளைமாரும் முதலியார்களும் எக்காலத்திலும் மிக்க செல்வாக்குள்ளவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

இலை வாணியருடைய ஜாதி நிலைமையைப் பற்றி யோஜிக்கு மிடத்து—" வாணியன் " என்ற தமிழ் பதமானது" வணிஜ" என்ற ஸம்ஸ்கிருதவார்த்தையிலிருந்து வந்ததென்று சொல்லவேண்டும. வணிஜ (பானியா என்ற வட நாட்டுச்சொல்லுக்கு) என்ற பதத்திற்கு வியாபாரத் தொழிலுடைய வைசியன் என்று அர்த்தமாகும். வாணியன் என்ற தமிழ்ச் சொல்லுக்குத் தனிமையான கருத்தாவது எண்ணை வியாபாரம் செய்கிறவன் என்பதேயாம். எண்ணை வர்த்தகம் செய்கிறவன் தைலத்தை அடையும் பொருட்டு வித்துக்களை நசுக்கிப் பிழிந்தால் அவன்பாவமானதொழிலை அனுஸரிக்கிறவனென்று மதிக்கப்படுகிறன். எண்ணையைப் பிழியும்வாணியர்களுக்கு செக்கான் என்ற பெயருண்டு. செக்கில்எள்ளையும் மற்ற விதைகளையும் போட்டுத் திருகி எண்ணையை எடுக்கிறபடியால் அவன் செக்கானென்று சொல்லப்படுகிறன். மனு 4-வது அத்தியாயம் 85-வது ஸ்லோகத்தில் எண்ணில்லாத பற்பல வித்துக்களை நொருக்கிப்பிழியும் செக்கானது ஆடு மாடுகளைக் கொல்லுமிடத்திற் கொப்பாகுமென்று சொல்லி செக்கான் என்ற திலவாணிய ஜாதியாரை அசுத்தமான ஜாதியாரென் றுரைத்திருக்கிறார். ஆனல் இந்தக்கேஸில் வாதிகள் இலைவாணியஜாதியாராகச் சொல்லப்படுகிறது. அவர்கள் வெற்றிலை வியாபாரம் செய்கிறவர்களாகும். வாணியன் என்ற பெயரும் அவர்களுக்குக் கூடச்சேர்ந்து வருவதால் தப்பான அர்த்தம்கொள்ளக்கூடாது. (வாணியர் என்ற பதத்திற்கு ஸம்ஸ்கிருத மூலத்தின்படி வர்த்தகர் என்று வைத்து இலைவாணியர் என்றதற்கு இலை வணிஜர் - இலை வர்த்தகர்என்று அர்த்தப்படுத்தினல் . வாணியன்- செக்கான்- திலவாணியன் என்ற பதங்களின்கருத்திலடங்காது). இலை வாணியர்களுக்கு



7 - DEC 1914 MADRAS

“சேனை குடையன்” என்ற பெயருமுண்டென்று (Thurston's Castes & Tribes Vol. VI. Page 360) சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடிக்கால்பிள்ளைமார் அல்லது பிள்ளைமாரென்றும் பெயருண்டு. வெத்திலைக்கொடி பயிர் செய்கிறபடியால் கொடிக்கால்பிள்ளைமார் என்றும் அழைக்கப்படுகிறார்கள். 1891-ம் வருஷத்தில் ஸென்ஸஸ் கணக்கெடுத்தபொழுது தஞ்சைடிஸ்டிரிக்ட் மானியூலை அனுசரித்து இலைவாணியர்களை செக்கார்களுடன் தப்பாய்ச் சேர்க்கப்பட்டிருந்ததாகவும் இலை வாணியர்கள் அதிக மேலான அந்தஸ்துடையவர்களென்றும் அவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களையும் விட மேலான ஜாதியாரென்றும் 1901-ம் வருஷத்திய ஸென்ஸஸ் ரிபோர்ட்டில் 177-ம்பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டுக் கோட்டைச் செட்டிமாருக்கு மேலானவர்களென்று சொல்லப்பட்டது சரியான தகவலாயிருக்காதென்றாலும் அவர்கள் எண்ணை வர்த்தகம் செய்கிற வாணியர்களுடன் சம்பந்தப் பட்டவர்களென்று சொல்லத்தகாது சாஸ்திரப்படிக்கு வர்த்தகர்கள். வைசியர்களென்று சொல்லப்படவேண்டும். ஆனால் மத்தியகாலங்களில் பிராமணர்கள் க்ஷத்திரியர்களையும் வைசியர்களையும் கீழ்ப்படுத்தி விட்டமையால் க்ஷத்திரியர், வைசியர்களிலநேகர் சூத்திரர்களாய் விட்டார்கள் எவ்விதத்திலும் இலைவாணியர் சூத்திரர்களென்பதிலாவது சந்தேகமில்லையென்று சொல்லவேண்டுமேயொழிய சூத்திரர்களுக்கும் தாழ்மையான ஈன ஜாதியார்களாகிய பள்ளர்கள், சக்கிலியர்கள்பறையர்களுடன் சேர்ந்தவர்களல்லவென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

சூத்திரர்களுக்குத் தாழ்ந்தஜாதியாரில் பிரதிலோமர்களென்றும் அந்தியஜர்களென்றும், பிரஷ்டர்களென்றும், பதிதர்களென்றும் பலதினுஸுகளுண்டு. பிராமணன் என்ற நிலமையாலேயே கோவிலுக்குள்போக லாயக்குள்ளவன்கூட 13 மதராஸ் 293-ல் விதவையை விவாகம் செய்துகொண்டமையால் பதிதனாய்ப் போனானென்று பிரதிவாதிகளால் ருஜுப்படுத்தப்பட்டபடியால் வாதியாய் வந்த பிராமணனுக்கு கோவிலில் பிரவேசிக்க லாயக்கில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 28 சிவாகமங்களில் காமிதாகமம் முக்கியமாய் எடுத்துரைக்கப்படுகிறது மற்ற ஆகமங்களின் ஸாரமானது 18 பத்ததிகளில் எடுத்துரைக்கப்பட்டு அவைகளில் முக்கியமாய்ஸகலாகமஸாரம், வருணபத்ததி, நிர்வசனபத்ததி இவைகள்தான் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவைகளில் சொல்லியிருக்கிறபடி சூத்திரர்கள் துவஜஸ்தம்பத்திற்கு மேற்கிலுள்ள மகாமண்டபத்திலிருந்துகொண்டு ஸேவிக்க லாயக்குண்டு.

13 மதராஸ் கேஸில் அசல்கோர்ட் தீர்மானத்திற்கு ஒற்றுமையாக—தேவாலயமானது எல்லா ஜாதியாருக்காகவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆனால் உள்ளேசெல்லுகிற சிலாக்கியமானது சிலகட்டுமானத்தில வைக்கப்பட்டிருக்கிறதென்றும் பறையர்கள் தேவஸ்தானத்தின் கச்சேரி வாசலில் கூடநிற்கக்கூடாதென்றும் சூத்திரர்களும்பாணியர்களும் கோவிலின் உள்மண்டபத்திற்குள் பிரவேசிக்கலாமென்றும் பிராமணர்கள்மகா பரிசுத்தமான பாகங்களுக்குள்ளும் செல்லலாமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்தக்கேஸில் வாதியாகிய (விதவா விவாகம் புரிந்த பிராமணன் கோவிலுக்குள் பிரவேசிக்க லாயக்கில்லையென்று ருஜுப்படுத்தவேண்டிய கடமை பிரதிவாதிகளின்பேரில் சுமத்தப்பட்டது நியாயம்தான் என்று இந்த தாவாகேஸில் ஜில்லா ஜட்ஜியவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதே நியாயத்தை அனுஸரித்தே ஒரு சூத்திரனும் துவஜஸ்தம்பத்தைத் தாண்டி அதற்குமேலுள்ள மண்டபத்திற்குச் செல்லலாமென்று சாதாரணமாய் பாத்தியமிருக்க அந்த சூத்திரனையாவது அவனுடைய குலத்தாரையாவது விலக்கவேண்டுமென்று கோறுகிறவர்கள் அவனையும் அவன் குலத்தாரையும் கோவிலுக்குள் வரவிடுகிற வழக்கமில்லையென்று ருஜுப்படுத்த வேண்டும்.

கமுதிக்கேஸில் (31 மதராஸ் கேஸில்) சாணார்களைக் கோவிலுக்குள் வரவிடக்கூடாதென்ற வாதிகள் ஷை சாணார்களைப்பற்றி ருஜுஅம்சங்களைத் திரளாகவிடத் தயாராயிருந்தமையால் அவர்களே ருஜுபாரத்தை எற்றுக்கொண்டிருக்கிறார்கள். சாணார்களை சூத்திரர்கள்கூட தொடமாட்டார்களென்ற நியாயம் அவர்கள் கள் இறக்கும் தொழிலைப்பற்றியதாயிருக்க அத்தொழில் பாவமானதென்று மதிக்கப்பட்டு அதைப்பற்றி ருஜுபாகம் ஏராளமாய் கிடைத்தது. இந்தக்கேஸில் வாதி தன்னை விலக்கினது பிசகென்று தாவா செய்கிறான். கமுதிக்கேஸில் வாதி பிரதிவாதிகள் விலக்கப்படவேண்டுமென்று தாவா செய்தார். ஒரு ஜாதியார் தெய்வ ஆராதனையில் சேரவேண்டிய பாத்தியதையைத் தேடும்விஷயத்தில் அவர்கள் வாதிகளாய் இருந்தால் ருஜுபாரம் ஒருவர்பேரிலும் பிரதிவாதிகளாய் வந்தால் ருஜுபாரம் மற்றொருவர்பேரிலும் எற்படுத்தவேண்டுமென்று வித்தியாஸப்படுத்த நியாயமில்லை. இந்தக்கேஸில் வாதி சூத்திரஜாதியிலும் தாழ்ந்தவனென்று பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கவில்லை. அப்படி ஆக்ஷேபித்திருந்தால் வாதிகள் அப்படிப்பட்ட தாழ்ந்த ஜாதியாரல்லவென்று ருஜுப்படுத்தவேண்டும். அப்படிக்கில்லாமல் மற்ற தேவாலயங்களில் வாதிகளின் பாத்தியதை என்னவிதமாயிருந்தபோதிலும் வாதிகள் (இலைவாணியர்) தாவா கோவிலுக்குள் வருகிற வழக்கமில்லையென்று ஆக்ஷேபிக்கிறபடியால் அந்த வழக்கத்தை பிரதிவாதிகள்தான் ருஜுப்படுத்தவேண்டும். ஆனால் பிரதிவாதிகள் அவ்வித வழக்கமிருப்பதாக அதாவது வாதியின் குலத்தார் விலக்கப்பட்டவர்களென்ற வழக்கமிருப்பதாக ருஜுப்படுத்தவேயில்லை. தவிர வாதிகள் பிரத்தியக்ஷமாய் சூத்திரஜாதியாரானபடியால் அவர்கள் மகாமண்டபத்திலிருந்து ஸேவிக்க லாயக்குள்ளவர்களென்று தீர்மானிக்கப்பட்டு அவர்களுக்கு அந்தப்படி டிக்கிரீயளிக்கவேண்டியது நியாயமாகும். 14 Travancore L. R. 56-ல் வடதேசத்திலிருந்து வந்த ஒரு பாட்டியா வர்த்தகன் மலையாளத்திற்கு அந்நியனாகயிருந்தும் அவன் உயர்ந்த குலத்தோனாகையால் அம்பலப்பழைகோவில் மண்டபத்திலிருந்து தரிசனம் செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். தவிர இந்தியா முழுவதிலும் ஆயிரக்கணக்கான உட்பிரிவுகள் இருக்கின்றன. அதில் யாதொருவர் ஒரு கோவிலுக்குள் பிரவேசிக்கப்பிரியப்பட்டால் அவன் நான்கு வர்ணங்களின் ஒன்றில் சேர்ந்தவனென்று ருஜுப்படுத்தினால் போதுமானதாகும். அவ்வகுப்பினருக்கு ஒரு கோவிலில் பிரவேசிக்கும் வழக்கம் இல்லையென்றும் அவர்கள் விலக்கப்பட்டவர்களென்றும் ருஜுப்படுத்தும் பொருப்பானது அவ்வகுப்பினரை விலக்கவேண்டுமென்று கோருகிறவர்களைச் சேர்ந்ததாகும்.



ஆகையால் வாதிகள் கோறிக்கொண்டபடி டிக்கிரீயளிக்கப்பட்டு கீழ் கோர்ட் டிக்கிரீ ரத்து செய்யப்பட்டு ஆனால் பிராமணர்கள், முதலியார், பிள்ளைமார் இவர்களுக்குப்பின் நின்று தரிசனம்முதலானதுகளைச் செய்யவேண்டுமென்ற நிபந்தனையும் டிக்கிரீயில் குறிக்கப்பட்டது. ஹானரபில் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்களும் அதே அபிப்பிராயங் கொடுத்தார்கள். XXVII M. L. J. 253.

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

**ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.**

C. M. A-55 of 1913-20 அக்டோபர் 1914.

மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்ட் 12-(2) பிரிவின்படி கடன்களைத் தீர்க்க சக்தியற்றுப்போனவனை இன்ஸால்வெண்டு என்று தீர்மானித்து அவனுடைய ஆஸ்தியைக் கடன் காரர்களுக்குப் பங்கிட்டுப் கொடுக்கவேண்டுமென்று கோர்ட்டாருக்கு பாக்கிதாரில் ஒருவன் விண்ணப்பம் கொடுக்கப்பட்ட தகவல் மற்ற பாக்கிதார்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். அவர்களுக் கேதாகிலும் ஆக்ஷேபனையிருந்தால் அதைப்பற்றி ஈரங்கி கேட்ட பிறகுதான் கோர்ட்டார் அவ்விதவிண்ணப்பத்தின் பேரில் யாதொரு உத்தரவளிக்கவேண்டும். மற்ற பாக்கிதார்களுக்கு நோட்டீஸில்லாமலும் அவர்களுடைய ஆக்ஷேபனைகளைக் கேளாமலும் கோர்ட்டார் கடன் காரனை இன்ஸால்வென்டென்று தீர்மானிக்கிற உத்தரவு சட்ட விரோதமான தாகுமென்று தீர்மானிக்கப்பட்டதும் தவிர, நோட்டீஸ் பெற்றிராத ஒருபாக்கிதாரன் மற்றொரு பாக்கிதாரனால் கொடுக்கப்பட்ட விண்ணப்பத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தனக்குச் சேரவேண்டிய பாக்கித்துகைக்கு ஜாமீனாக யாதொரு சொத்தை அடமானமாக எழுதி வாங்கிக்கொண்டு தன்னையும் ஷை நடவடிக்கையில் பார்டியாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று மனுக்கொடுத்தும் கோர்ட்டார் அம்மனுவைத்தள்ளுபடி செய்துவிடும்பட்சத்தில் அவ்வித ஜாமீன் பெற்ற பாக்கிதாரன் இன்ஸால்வென்ஸி விண்ணப்பத்தின் பேரில் பிறந்த உத்தர

வினுல் பாதகமடைந்தவனுகிருனென்றும் ஆகவே அப்படிப்பட்டவன் அவ்வித உத்தரவின் பேரில் மாகாண இன்ஸால் வென்ஸி ஆக்ட் 46-வது பிரிவின்படி அப்பீல் செய்ய லாயக்குண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S.A. 1411 of 1908-15 அக்டோபர் 1914.

எகக் குடும்பமாய் வசித்து வருகிற ஹிந்து குடும்பத்தார் அனைவரும் கிறிஸ்தவ மார்க்கத்திற்குமாறி விட்டால் அவர்கள் அதற்குப் பின்னும் எக குடும்பமாகவே ஹிந்து குடும்பத்தாரைப்போல வசித்து வருகிறார்களென்று ருஜுப்படுத்தப் பட்டபோதிலும் அவர்களுடைய குடும்ப சொத்து பாத்தியதையானது கிறிஸ்தவர்களுக்குறிய இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்டின்படி எற்படுமே யொழிய ஹிந்து லா முறைப்படி சொத்து பாத்தியதை மாறிப்போக நியாயமில்லையென்று 10 மதராஸ் 69, (1912) மதராஸ் வாரக்குறிப்புகளின் 386, இவைகளை யனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 81 of 1913-15 அக்டோபர் 1914.

ஸி. பி. ஸி ஆர்டர் 41 ரூல் 27-ன்படி அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட்டில் ரிகார்டாகாத சாட்சியம்சத்தையாகிலும் தாகலாகாத தஸ்தவேஜையாகிலும் எற்றுக்கொள்ள லாயக்குள்ளவர்களல்ல. ஆனால் அசல் கோர்ட்டார் எற்றுக் கொள்ள வேண்டிய ருஜுபாகத்தை எற்றுக்கொள்ள மறுத்து விட்டாலும் சரி அல்லது அப்பீல் கோர்ட்டாருக்குத் தீர்மானமுடிவடைவதற்கு அவசியமென்று தோன்றுகிற சாட்சியம்சத்தை அல்லது யாதொரு தஸ்தவேஜை ஆஜர்படுத்தும்படி உத்தரவளித்தாலும் சரி அவ்வித சந்தர்ப்பங்களில் மட்டும் அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட்டில் எற்படாதசாட்சியத்தையும் தஸ்த வேஜையும் எற்றுக்கொள்ளலாம். கோர்ட்டார் அவ்விதமானருஜுபாகத்தைஎற்றுக்கொள்ளும்பொழுது அவ்வித அனுமதி கொடுத்ததற்குக்காரணத்தை ரிகார்ட்செய்ய வேண்டும். மேற்கூறிய சந்தர்பபங்களில் அப்பீல் கோர்ட்டார் புதிய ருஜு அம்சத்தை எற்றுக்கொள்ள அனுமதி கொடுக்காவிட்டால் அந்தக் காரணத்தை 2-வது அப்பீலுக்கு ஒருகிரௌண்டாக ஆதாரங் கொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

C. R. P. 858 of 1913-20 அக்டோபர் 1914.

சுவாதீனத்திற்காகவும் மத்தியகால வரும்படிக்காகவும் சேர்த்துக்கொடுத்த பிராதில்பிந்திய காலத்து வரும்படியைப் பற்றியும் டிக்கிரீயில் பரிகாரமளிக்கப்படவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்க் கோறப்பட்டும் டிக்கிரீயில் பிந்தியகாலத்து வரும்படியைப் பற்றி யாதொரு பிரஸ்தாபமும் செய்யப்படாதிருந்தால் அதற்காகப் பின்னல் வேறு தாவா செய்யக்கூடாதென்றும் முந்திய டிக்ரீயானது ரீஜுடிகேடாவாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே

Crl. R. Case 326 of 1914-21 அக்டோபர் 1914.

கோயமுத்தூர் ஜில்லாவிலுள் வர்த்தகர்கள்பம்பாய் வாஸிகளாகிய எதிரிகளுக்கு சில உண்டியல்களை அனுப்பி அதில் அடைதுகையை வசூலிக்கும்படி கோறிக்கொண்டதில் எதிரிகள் வசூலித்த துகையை தங்கள் சொந்தச் செலவுக்காக உபயோகப்படுத்திக் கொண்டபடியால் அவர்கள் பேரில்நம்பிக்கை மோசத்திற்காகக் கொண்டு வந்த பிராதைக் கோயமுத்தூர் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் விஜாரிக்கக் கூடாதென்றும் கிரிமினல் புரொஸிஜர் கோடின் 181 (2) வது பிரிவின்படிக்கு பம்பாயிலுள்ள மாஜிஸ்டிரேட்டாரின் அதிகாரவாம்புக்குள் குற்றம் நடந்ததாக பாவிக்கப்பட்டு பம்பாயில் பிராது கொடுக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே

S. A. 2026 of 1912-21 அக்டோபர் 1914.

ஸி. பி. ஸி. 73 (2)-வது பிரிவின்படி யாதொரு துகையை பற்பல டாக்கிதார்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டியதாயிருக்க பங்கு விகிதம் அடைய



லாயக்கில்லாதவனுக்குத் தப்பிதமாய்த் துகை செலுத்தப்பட்டிருந்தால் அந்தத்துகையை வாபிஸ் செய்யும்படி அத்துகை அடைய லாயக்குள்ளவன் கட்டாயப்படுத்தலாம். அதற்காகச் செய்யவேண்டிய தாவாவுக்கு காலாவதி ஆக்டின் 62-வது ஆர்டிகில் பிரகாரம் பிரதிவாதியிடம்துகை செலுத்தப்பட்ட காலமுதல் மூன்று வருஷ வாய்தா உண்டென்றும் காலத்தவணை எற்பட்டிருக்காத தாவாக்களுக்கு 120-வது ஆர்டிகிலின்படி வியாஜ்ஜிய மூலம் எற்பட்ட முதல் 6-வருஷகாலாவதி யென்ற வாதம் சரியானதல்ல வென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S. A. 1573 of 1912—21 அக்டோபர் 1914.

ஒரு ஹிந்து மைனரின் கார்டியன் மைனருக்குச் சொந்தமான சொத்துக்களை ரூ. 1425க்கு விக்கிறயம் செய்து விடவே விக்கிரயத்துகையில் ரூ. 762க்கு மட்டும் மைனர் கட்டுப்படக்கூடிய அவசியம் நேரிட்டதாகவும் மீதித்துகையை கார்டியன் அனுவசியமாய் செலவு செய்திருப்பதாகவும், ஆகையால் மைனர் தாவாவிக்கிறயங்களைப் பூராவும் ரத்து செய்யவேண்டுமென்று செய்த பிராதின் பேரில் கோர்ட்டார் கிறயம் பெற்றவனுக்கு மைனர் ஷை ரூ. 762யும் கொடுத்துவிடும் பட்சத்தில் விக்கிறயம் முழுவதும் ரத்தாக வேண்டியதென்று டிக்கிரீயில் காணுவது நியாயமே யொழிய அத்துகைக்குத் தக்கபடி யுள்ள சொத்தின் விக்கிறயத்தை உறுதிப்படுத்தி மற்ற பாகத்தை மட்டும் ரத்து செய்யும்படி டிக்கிரீயளிப்பது பிசகான முறையாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1913 M. W. N. 735 ஐப் பார்க்கவும்.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 868 of 1913—21 அக்டோபர் 1914.

வாதி சில நிலங்களுக்குத் தன்பேரில் பட்டா எற்படவேண்டுமென்று கொடுத்த பிராதில் ஜில்லா கலக்டர் அவசியமான பார்டியாகச் சேர்க்கப்படவேண்டுமென்றும் அப்படிசேர்க்கப்படாத காரணத்தைப்பற்றிய ஆக்ஷேபனை ஆரம்பத்தில் செய்யப்படாமல் வியாஜ்ஜியம் 2-வது அப்பீலுக்கு வந்தபொழுது செய்யப்பட்டதால் அந்த ஆக்ஷேபனையை உத்தேசித்து ஜில்லா கலக்டரவர்களைப் பார்டியாகச் சேர்க்க அவசிய மில்லாதபடிக்குப் பிராதை பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியமாக மாற்றிக்கொடுக்கும்படி வாதிக்கு ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் அனுமதி கொடுத்தார்கள்.

---

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 720 of 1913—21 அக்டோபர் 1914.

ஒரு ஹிந்து மைனருடைய கார்டியனிடத்திலிருந்து நல்லெண்ணத்துடன் துகைகொடுத்துசொத்து விக்கிறயம்பெற்றவன் கிறயத்துகை சரியான விஷயத்திற்காக உபயோகப் படுத்தப்படுகிறதாவென்று கவனிக்கவேண்டிய கடமை யில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.

L. P. A. 100 of 1913—21 அக்டோபர் 1914.

டெம்பொரெரி இஞ்சங்கிஷன் கட்டளையைமீறி நடக்கிற ஒரு பார்டியை ஜெயிலுக்கனுப்பவேண்டுமென்று கோறப்படும்விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த உத்தரவின்பேரில் ஸி. பி. ஸி. ஆர்டர் 43 ரூல் 1-கிளாஸ் (R)-ன்படி அப்பீல் செய்யலாமென்று 35 அலகபாத் 425-ஐ அனுசரித்து ஹானரபில் ஜஸ்டிஸ்ஒல்ட்வீல்ட்துரையவர்கள் அபிப்பிராயங்கொடுத்தார்கள். ஹானரபில் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்களோ மேற்கூறியவிதமான உத்தரவுகளுக்கு அப்பீல் கிடையாதென்று தீர்மானங்கொடுத்தார்கள்.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

A. S. 61 of 1912—26 அக்டோபர் 1914.

ஒரு ஹிந்து விதவையானவள். ஒரு பையனை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளவேண்டுமென்று அடுத்த அனந்தர வாரிஸ்தாரனை அனுமதிகேட்டதற்கு அவர் தன்னுடைய அனந்தரவாரீஸ்பாத்தியதைக்கு இடையூறுண்டாகுமென்ற காரணத்தால் சம்மதி கொடுக்க மறுத்துவிட்டபின் எட்டிய இதரமான

தாயாதிகளின் சம்மதத்தைப்பெற்றுக்கொண்டு அவள் ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள். அந்த ஸ்வீகாரத்திற்குச்சமீப தாயாதி தன்னுடைய ஸ்வய நன்மையைக்கருதி அனுமதிகொடுக்க மறுத்தமையால் இதரமான எட்டிய தாயாதிகளின் அனுமதியின்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஸ்வீகாரம் செல்லத்தகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் சதாசிவயய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

C. M. A. 7 of 1914—26 அக்டோபர் 1914.

நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் குடும்ப மானேஜர் நடத்திவந்த வர்த்தகத்தில் கடன் ஏற்பட்டு அந்த வர்த்தகக்கம்பெனியின்பேரில் டிக்கிரி பிறந்து அதை நிறைவேற்றுவதற்காக அக்குடும்பத்தைச் சேர்ந்த சில மைனர்களுக்குறிய குடும்ப சொத்துக்களை ஜப்தி செய்ததில் அந்த சொத்துக்கள் வர்த்தகத்தைச் சேர்ந்த சொத்தல்லவென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. அந்த ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்ளப்படாமல் செட்டிமார்களின் குடும்ப சொத்துக்கள் வர்த்தகத்தின் கொள் முதலாகவே பாவிக்கப்பட வேண்டுமென்றும் ஆகவே வர்த்தகக் கம்பெனியின் பேரில் பிறந்த டிக்கிரித் தொகைக்காக குடும்ப சொத்தின்பேரில் தொடரலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

—...—

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்.

S. A. 696 of 1913—15 அக்டோபர் 1914.

வாதியின் பேரில் பிரதிவாதி பெற்ற டிக்கிரியானது வாதியைக் கட்டுப்படுத்தாதென்று டிக்லேரேஷன் தீர்மானமடையும் பொருட்டும் அந்த டிக்கிரியைப் பிரதிவாதி நிறைவேற்றக் கூடாதென்று இஞ்சங்ஷன் கட்டளை பிறக்க வேண்டுமென்றும் கொடுத்த பிராதுக்கு டிக்கிரியில் கண்ட தொகைக்குதக்கபடி மவுண்டு கட்டவேண்டிய அவசியமில்லையென்றும் வாதி இஷ்டமானபடி பிராதுக்கு மதிப்பிட்டு ஸ்டாம்பு டியூடி செலுத்தலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் ஏப்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 2304 of 1913—15 அக்டோபர் 1914.

ஒரு அடமானக்கடனை வசூலிக்கும் பொருட்டு தாவா செய்தமுன் பிரதிவாதி அடமானத் தொகையைக் கொடுத்தும் அதை வாதி சரியான காரணமில்லாமல் மறுத்து விட்டதாக ஏற்பட்டதில் வாதி பிரதிவாதியின் செலவுத்தொகைக்கு ஜவாப்தாரியாக வேண்டுமென்று 5 மதாஸ் 284-ஐ அனுஸரித்துத் தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜி.

C. R. P. 2123 of 1911—6 அக்டோபர் 914.

வாதி டிக்கிரித் தேதியிலிருந்து 2- மாதங்களுக்குள் யாதொரு தொகையை செலுத்தினல் மட்டும் அவருக்கு தாவா சொத்துக்களின் ஒருபாதியை அடைய பாத்தியமுண்டென்று டிக்கிரியில் கண்டிருக்க இரண்டு மாதத்தவணைக்கு மேல் வாதிக்கு வாய்தாகொடுக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

A. S. 340 of 1918—7 அக்டோபர் 1914.

ஒரு மாஜிஸ்டிரேட் மற்றும் சில பேர்வழிகளுடன் கூடிப்பேசி வாதியின் பேரில் ஒரு பொய்ப்பிராது தொடுத்து சிக்ஷை செய்ய வேண்டுமென்று ஆலோஜனை செய்தாரென்று சொல்லப்பட்டு அவ்விதமாகவே பிராது ஏற்பட்டு அதுதள்ளுபடியான பிறகு மாஜிஸ்டிரேட்டின் பேரில் நஷ்டப்பரிகாரமடையும்பொருட்டு செய்யும் தாவாவுக்கு 1860-ம் வருஷத்திய 18,வது ஆக்டின் அம்சங்கள் இடையூறாகாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது அவ்வித சந்தர்ப்பத்தில் மாஜிஸ்டிரேட்டின்பேரில் மான நஷ்டப்பிராது செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

A. S. 143 of 1911—8 அக்டோபர் 1914.

மேடான நிலத்திலுள்ள ஜலத்தைத் தாழ்ந்திருக்கும் பக்க நிலத்தில் வடிந்து போகும்படிசெய்ய இயற்கையான பாத்தியதை உண்டென்றும் அவ்விதமாய் வடியும் ஜலத்தைத் தாழ்ந்த நிலக்காரன் தடுக்கக்கூடாதென்றும், இயற்கையாயேற்பட்டிருக்கிற ஒருநீரோடையின் ஜலமானது ஒழுங்கானகால் வழியாய்ச் செல்லாதபோதிலும் தாழ்ந்தநிலக்காரன் மேட்டு நிலத்தில் அந்த ஜலம் தங்கிப் போகும்படி தடை செய்யக்கூடாதென்றும் 25 M. L. J. 476 ஐ அனுஸரித்துத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு இயற்கையான நீரோடைக்கு நேர்மையானகரைக்கட்டில்லாத போதிலும் அதினுடைய அகலம் பற்பல விதமாறுதலையடைந்தபோதிலும் அந்த ஓடை இயற்கையான ஓடைக்காலென்றே சொல்லப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

—...—

ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்.

Crl. R. Case 488 of 1914—8 அக்டோபர் 1914.

யாதொரு விஷயத்தைப் பற்றி ஸிவில் நடவடிக்கை எடுத்தபின் அதே விஷயத்தை பற்றி கிரிமினல் தரப்பில் பிராது கொடுத்தால் ஸிவில் கோர்ட் தீர்மானம் ஏற்படுமட்டும் கிரிமினல் நடவடிக்கை மேல நடத்தப்படாமல் தடை செய்யப்படவேண்டியது அவசியமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜி.

S. A. 1931 of 1913—12 அக்டோபர் 1914

முதல் அடமானதார் அடமானத்தொகை பாக்கிக்காக செய்த வியாஜ்ஜியத்தில் பிந்திய அடமானதாரும் விண்ணப்பம் கொடுத்துப் பார்ட்டியாகச் சேர்ந்தும் பிந்திய அடமானத்தைப்பற்றி யாதொருபிரஸ்தாபமும் செய்யாமல் வாதியும் பிரதிவாதியும்ராஜியாகி ராஜிநாமா தாகல் செய்து அந்தப்படிக்கு டிக்கிரியும் பிறந்தது. அந்த டிக்கிரியின் ஷரத்துப்படிக்கு அடமான சொத்தானது வாதிக்கு (முதல் அடமானதாருக்கு) மாற்றப்பட்டிருந்த போதிலும் பிந்திய அடமானதார் தன்னுடைய பாக்கியைவசூலிக்கும் பொருட்டு ஷை சொத்தின் பேரில் தொடர்ந்து வேறு தாவா கொண்டு வரலாமென்றும் முந்திய பிராதில் அவர்பார்ட்டியாக இருந்த விஷயம் பாதிக்காதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

—...—



ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

S. A. 1944 of 1913—16 அக்டோபர் 1914.

ஒரு அடமான வில்லங்கத்திலிருக்கிறசொத்தை விக்கிறயம் செய்துகொடுத்து அதில் அடமானதாரின் சாட்சி யொப்பத்தை வாங்கின போதிலும் விக்கிறயம் வில்லங்க சுத்தியாகச் செய்யப் பட்டதென்று கிறய தஸ்தவேஜில் காணப்படாத காரணத்தால் அடமானதார் தன்னுடையபாக்கிக்காகப் பெற்ற டிக்கிரியை நிறைவேற்றும் பொருட்டு ஷை சொத்தின் பேரில் தொடரலாமென்றும் கிறயதஸ்தவேஜில் சாட்சி யொப்பம் செய்தவிஷயம் இடையூறாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

C. M. P. 1293 of 1913—22 அக்டோபர் 1914.

கீழ் கோர்ட்டுகளில் தாகலாகாத யாதொருபுதிய ருஜூ அம்சத்தைக் கண்டு பிடித்ததாகச் சொல்லி அதை ஏற்றுக்கொண்டு 2-வது அப்பீலைப் பைசல் செய்யும்படி கேட்க நியாயமில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

A. S. 222 of 1912—23 அக்டோபர் 1914.

ஒரு இனாம்தார் குறித்த ஒரு இடத்திலுள்ள தண்ணீரில் 3-ல் ஒரு பாகத்தைத் தன்னுடைய நிலங்களுக்குப்பாசனம் செய்துகொள்ளலாமென்று இனாம் கிராண்டில் சொல்லப்பட்டிருக்க அதில் கண்டிருக்கிற விஸ்தீரணமுள்ள நிலங்களுக்கு மட்டும் ஷை தண்ணீரை உபயோகப் படுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லையென்றும் மூன்றில் ஒரு பங்கு ஜலத்தை மட்டும் உபயோகித்து, அதை நிலப் பாசனத்திற்குமட்டும் உபயோகித்து வரும் பட்சத்தில் பாசனமாகும் நிலவிஸ்தீரணம் கிராண்டில் கண்ட அளவுக்குமேலிருந்தாலும் பாதகமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

—...—

ஜஸ்டிஸ் ஏய்லிங்.

C. R. P. 145 of 1913—26 அக்டோபர் 1914.

காலஞ்சென்ற அவிபக்த சகோதரன் எழுதிக்கொடுத்திருந்த பிராமிஸரி நோட்டின்பேரில் தாவாசெய்யப்பட்டு பிரதிவாதியின் பேரில் இறந்த

போன சகோதரனுடையசொத்துபாகத்தைப் பொருத்து மட்டும் எக்ஸ்பார்டி டிக்கிரீயளிக்கப்பட்டது அந்த எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றவேண்டுமென்று பிரதிவாதி விண்ணப்பம் கொடுத்து மாகாண ஸ்மால் காஸ் கோர்ட் ஆக்டின் 17-வதுபிரிவின்படி டிக்கிரீத் துகையைக் கோர்ட்டில் டிபாஸிட் கட்டினர். எக்ஸ்பார்டி டிக்கிரீ மாறிப்போய் மறு விஜாரணை நடந்து முன்போலவே பிரதிவாதியின் பேரில் டிக்கிரீயளிக்கப்பட்டால் கோர்ட்டில் கட்டியிருக்கும் டிபாஸிட் துகை அந்த டிக்கிரீ பாக்கிக்காகச் செல்லவேண்டியது நியாயமாகுமென்றும் அந்த டிபாஸிட் துகையானது காலஞ்சென்ற சகோதரனுடைய சொத்து பாகத்திலிருந்து ஏற்பட்டதா வென்று விஜாரணை செய்யவேண்டிய அவசிய மில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———...———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S. A. 158 of 1913—13 அக்டோபர் 1914.

ஒரு அடமானக்கடன் துகையைபற்பலவாய்தாக்களில் செலுத்திவிட வேண்டியதென்றும் யாதொரு வாய்தாவில் துகை செலுத்தப்படாவிட்டால் அடமானதார் அசல் துகை பாக்கி முழுவதையும் அதிகமான வட்டி விகிதத்துடன் வாய்தா தவறின தேதிக்குப்பின் வேண்டும்போது வசூலித்துக் கொள்ள லாயக்குண்டென்றும் அடமான தாரனுடைய சம்மதத்தின்பேரில் அடமானசொத்தானது சொந்தக் காரனுடைய சுவாதீனத்திலேயே இருக்க வேண்டியதென்றும் வட்டிக்குபதிலாகமாசூலை அடமான தாரனுக்கு சொந்தக்காரன் செலுத்தி வர வேண்டியதென்றும் ஷரத்துக்களுடன் எழுதப்பட்டிருக்கும் தஸ்தவேஜானது பிரதமத்தில் போக்கியதஸ்தவேஜாக பாவிக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது பந்தகப் பத்திரமாகபாவிக்கப் பட்டிருந்தாலும் சரி யாதொரு வாய்தா தவறிப் போனபின் அந்த தஸ்தவேஜானது பந்தகப் பத்திரமாக மாறிப்போய் விடுகிறதென்றும் ஆகவே அதில் கண்ட ஷரத்துப்படி பாக்கித்துகையை அடமானதார் வசூலிக்கும் பாத்தியதையானது, சொத்து சுவாதீனம் இதரரளிடத்தில் சென்று அனுபோக பாத்தியதை அடமானதாருக் கில்லாமல் போனகாரணத்தால், கெட்டுப் போகாதென்றும், அவ்வித சொத்து அந்நியனுடைய அனுபோகத்தில் சென்றுவிட்டால் அவ்வித அனுபோகம் சொந்தக் காரனுக்கு விரோதமாகுமே யொழிய அடமான தாருக்குறிய கடன்துகை பாத்தியதைக்கு விரோத முண்டாக்காதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 12 வருஷகாலமாக அந்நியன் ஷை சொத்தை அனுபவித்துவந்தால் சொந்தக்காரனுடைய பாத்தியதை கெடுமேயொழிய அடமானதாருக்குறியஹக்கு பாத்தியதைக்கு அவ்வனுபோக பாத்தியதை பாதகமாகாதென்று ஏற்படுகிறது. போக்கியமாக ஏற்பட்டு சுவாதீனம் அன்னியனிடம் சென்று 12 வருஷமாக அனுபோகம்நீடித்துப் போனல் போக்கியதாரனுடைய பாத்தியதைக்குக் குறைவுண்டாகும். ஆனல் பந்தகக்காரனுக்கு அவ்வித அசந்தர்ப்பம் ஏற்பட நியாயமில்லை. வாய்தா தவறின உடன் துகையைஅதிகவட்டியுடன் செலுத்தக் கடமைப்படும் ஏற்பாடானது பந்தகதஸ்தவேஜின் அம்சமாகிறது.

———...———

# மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்.

(மதுரைஜில்லா.)

S. A. 2349 of 1913—28 ஆகஸ்டு 1914.

முத்துக்கருப் சாம்பன் vs முத்துசாம்பன்.

ப்ராபர்டி ஆக்ட் 54-வது பிரிவு-ரூ. 100-க்குட்பட்ட சொத்தை அடமானபாத்தியதையால் அனுபவிக்கிறவனுக்கு வாய்மொழி விக்கிறயம் செய்தால் கிறயத்தை அனுஸரித்து பிரத்தியேகமான சுவாதீனம் செய்துகொடுக்க வேண்டிய அவசியமில்லை அடமானதாரனிடம் சொத்தை கிறயதாரனக அனுபவிக்கும்படி கேட்டுக்கொண்டால் கிறய நடவடிக்கை பூர்த்தியானதாகும். ஆனல் வாய்மொழி விக்கிறயமில்லாமல் ரெஜிஸ்டராகாத தஸ்தாவேஜினல் அடமானதாரனுக்குக் கிறயம் ஏற்பட்ட விஷயத்தில் எழுத்துமூலமாய் ஏற்பட்ட கிறயம் கட்டாயம் ரெஜிஸ்டராக வேண்டுமாகையால் ரெஜிஸ்டர்தஸ்தாவேஜினல்அந்த சொத்தைக் கிறயம் பெற்றவனுடைய பாத்தியதை மேலானதென்று தீர்மானிக்கப்பட்டது.



முத்து சாம்பன் என்ற வாதி அளகர் சாம்பன் என்றவனிடத்திலிருந்து தாவாசொத்தைரெஜிஸ்டர் தஸ்தவேஜினல் கிறயம்பெற்றுதஸ்தவேஜில் கண்ட பிரகாரம் ஷை சொத்தின் பேரில் ஷை அளகர் சாம்பனல் 1-ம் பிரதிவாதிக்கு1894ஸு டிசம்பர்மீ 8உ ல் ஏற்பட்ட ஒத்திக் கடனைத் தீர்த்துசொத்தை மீட்டுக்கொள்ளும் பொருட்டு1-5 பிரதிவாதிகளின் பேரில் திருமங்கலம் டி-மு-கோர்ட்டில்பிராதுசெய்தார். பிரதிவாதிகள் எதிரான்ஸரில் 1897 டிசம்பரில்1-ம் பிரதிவாதிக்கு ஒத்தி ஏற்பட்டது வாஸ்தவமென்றும் ஆனல் அளகர் சாம்பனே 1898ஸு ஏப்ரல்மீ 6உ ல் 1-ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தை ரெஜிஸ்டராகாதஒரு தஸ்தவேஜினல் விக்கிறயம் செய்து கொடுத்து விட்டதாகவும்அதுமுதல்பிரதிவாதிகளே தாவா சொத்துகளை சொந்தக்காரர்களாக சுவாதீன அனுபோகத்திலிருக்கிறதாகவும் வாதியின் (1912-ம் வருஷத்திய) இந்த வியாஜ்ஜியத்திறகுக் காலாவதி தோஷம் வந்து விட்டதென்றும் ஆக்ஷேபித்தார்கள்.

டி-மு-கோர்ட்டார்வாதிக்குபிரதிவாதிகள் பெற்ற விக்கிறய தஸ்தவேஜின் தகவலும் அதையிட்டு அவர்களின் சுவாதீன அனுபோகமும் தெரியுமென்றும்ஆகவேவாதிதான்பெற்ற விக்கிறயத்தைப்பாராட்டி ஒத்தியை மீட்டுக்கொள்ள லாயக்கில்லை யென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதாவது வாதியின் கிறய தஸ்தவேஜு ரெஜிஸ்டராகியும் பிரதிவாதிகளின் கிறயதஸ்தவேஜானது ரெஜிஸ்டராகாமலும்இருந்த விஷயத்தால் வாதியின் கிறயபாத்தியதைமேலானதாகுமென்றாலும்வாதி பிரதிவாதியின் பாத்தியதையைத் தெரிந்து கிறயம்பெற்றபடியால் வாதி ரெஜிஸ்டர் பத்திரத்தால்மேலான பாத்தியதையுடையவனென்று சொல்லத்தகாதென்றும் அபிப்பிராயப்பட்டு டி-மு-கோர்ட்டார் வாதியின்பிராதைத்தள்ளுபடி செய்து விட்டார்கள்.அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் மாறுன அபிப்பிராயங் கொண்டு வாதிக்கு அனுகூல டிக்கிரீ யளித்ததில் பிரதி வாதிக்கு விக்கிறயம் ஏற்பட்ட காலத்தில்பிரதிவாதிகள் அடமான பாத்யதையில் சொத்தை சுவாதீனமடைந்து அனுபவித்து வந்தமையால் அவர்கள் பெற்ற கிறயத்தை அனுஸரித்துகிறய சொத்தானது சுவாதீனப்படுத்திக்கொடுக்கப்படவில்லை யென்றும் ப்ராபர்டி ஆக்ட் 54-வதுபிரிவின்படி ரூ. 100-க்குள்பட்ட யாதொரு விக்கிறயமானது ரெஜிஸ்டர் தஸ்தவேஜினல் ஏற்படாதபட்சத்தில் விக்கிறயகாலத்தில் சொத்து சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்படவேண்டுமென்றும் அவ்வித சுவாதீனம் இந்தக்கேஸில் பிரதிவாதிகளுக்குக் கிடையாதென்றும் பிரதிவாதிகள் பெற்ற ரெஜிஸ்டராகாத விக்கிறயப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றும் அப்படிப்பட்டதஸ்தவேஜினல் சொத்துபாத்தியதை அளிக்கப்பட்டால்மட்டும் சுவாதீனமும் அப்பொழுதே கொடுக்கப்பட்டதாக பாவிக்கப்படாதென்றும் ஆகவே பிரதிவாதிகள் சொல்லுகிறபடி வாய்மொழியாய்த் தங்களுக்கு தாவா சொத்து கிறயம்செய்து கொடுக்கப்பட்டதென்று நம்பினலும் வாய்மொழி விக்கிறயத்திற்கு முந்தியே பிரதிவாதிகள் ஒத்தி பாத்தியதையில் சொத்தை சுவாதீனமடைந்திருக்கிறபடியால் வாய்மொழி விக்கிறயத்திற்குப்பின் சுவாதீனம் ஏற்படவேண்டிய சட்டமுறை அனுஷ்டிக்கப் படவில்லையென்றும் ஆகவே வாய்மொழி விக்கிறயமும் செல்லத்தகாதென்றும் 34 கல்கத்தா 207-ஐ அனுஸரித்து மேற்கண்டவிதமாய்த் தீர்மானம் செய்தார்கள்.

அதன் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் 34 கல்கத்தா கேஸின் அபிப்பிராயம் சரியானதல்லவென்றும் அதாவது முந்திய ஒத்திபாத்தியதையினல் சுவாதீனமடைந்திருக்கிறவனுக்கு வாய்மொழி விக்கிறயம் செய்தால் அந்த விக்கிறயம் செல்லாதென்ற கல்கத்தா தீர்மானம் சரியான அபிப்பிராயமல்லவென்றும் ஆனல் இந்தக்கேஸில் பிரதிவாதிகள் வாய்மொழி விக்கிரயத்தை ஆதாரம் கொள்ளாமல் ரெஜிஸ்டராகாத தஸ்தவேஜையும் அதை அனுஸரித்த சுவாதீனத்தையும் ஆதாரங்கொண்டு எதிர்வழக்காடுகிறபடியால் வாய் மொழி விக்கிறயம் என்ற பாயிண்டைப்பற்றி முதலில் ஏற்படாத கக்ஷியைப் பின்னல் பேசஇடங்கொடுக்கக் கூடாதென்றும் ஆகவே யாதொரு கிறயம் தஸ்தவேஜினல் ஏற்படும் விஷயத்தில் அந்த தஸ்த வேஜானது கட்டாயமாக ரெஜிஸ்டராகி யிருக்க வேண்டுமென்றும் பிரதிவாதிகளின் கிறய தஸ்தவேஜானது ரெஜிஸ்டராகாதபடியால் அது செல்லத்தக்க தல்லவென்றும் வாதி

யின் கிரய பாத்தியதை மேலான தென்றும் தீர்மானித்து பிரதிவாதிகளின் 2-வது அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட சில முக்கிய நியாயங்களாவன:—

முந்தியே அடமான பாத்தியதையால்சுவாதீனத்திலிருக்கவாய்மொழியாய் சொத்தை விக்கிரயம் செய்த அது முதல் அவரை ஸர்வ ஸ்வதந்தரத்துடன் சொந்த பாத்தியதையக் கொண்டாடி அனுபவிக்க வேண்டிய தென்று விரும்பிக் கொண்டால் அந்த வாய்மொழி விக்கிரயம் என் செல்லத்தகாது? காலி செய்யச்சொல்லி அடுத்த நிமிஷத்தில் வாய்மொழியாய் விக்கிரயம் செய்து சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டிய முறையானது அனாவசிய மாகும். ரூபா 100-க்குள்பட்ட வாய்மொழி விக்கிரயத்திற்குப் பின் சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டிய முறையிருக்கிறது. ஆனால் முந்தியே வேறுவகையில் சுவாதீனத்திலிருக்கிறவனுக்கு யாதொரு எற்பாடினால் சுவாதீனநிலைமையை மாற்றி சொந்தக்காரனுக்குவதில் ப்ராபர்டி ஆக்டின் மேற்கண்ட முறைக்கு விரோத மாகாதென்று சொல்லவேண்டும். 13 மதராஸ் 324-ல் அடமான பாத்தியதையால் சுவாதீன மடைந்தவனுக்கு அதே சொத்தை விக்கிரயம் செய்வதாய் ஒப்புக்கொண்டால் சொத்தை சுவாதீனம் செய்து கொடுக்க வேண்டுமென்ற சட்டமுறைபூர்த்தியாகிவிடுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 9 மதராஸ் 267-ல் டெனெண்டுகள் விக்கிரயம் பெற்றவர்களுடைய பாத்தியதையை ஒப்புக்கொண்டால் அது விக்கிரயம் பெற்றவர்களுக்குச் சுவாதீனப்படுத்திக் கொடுத்ததற்குச் சமான மாகுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிது. 7 பம்பாய் 452-ல் நன்கொடை பெற்ற பற்பலர்களில் ஒருவன் முந்தியே நன் கொடை யளிக்கப்பட்ட சொத்தின் சுவாதீனத்தி லிருந்தால் அவனைப் பார்த்து நன்கொடையளித்தவன் தான்சொத்து சுவாதீனத்தைவிட்டுவிலக்கிக்கொண்டதாகச் சொன்னமாத்திரத்தினாலேயே நன்கொடையானது செல்லத் தகுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (நன்கொடைச் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்படவேண்டியசட்டமுறையை கவனிக்கவும்.)

ஆகையால் ப்ராபர்டி ஆக்ட் 54-வது பிரிவின்படி வாய் மொழியான விக்கிரயத்திற்குப்பின் சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்படவேண்டுமென்ற நியாயத்தை அனுஸரித்து ரூ 100க்குக் குறைந்த விக்கிறய எற்பாடுகளெல்லாம் சுவாதீனம் முந்தியே கிறயதாரனிட மிருக்கும் சந்தர்ப்பங்களில் வாய்மொழியாய் முடியக் கூடாதென்றும் ரெஜிஸ்டான தஸ்தவேஜினால் முடிக்கப்படவேண்டு மென்றும் சொல்லத்தகாது. முந்தியே சுவாதீனத்திலிருக்கிறவனுக்கு வாய்மொழியாய் விக்கிறயம் செய்தால் கிறயம் பெற்றவனுடைய சுவாதீன நிலைமையை மாற்றுவதற்குரிய கிரியாம்சங்களை நடத்தினால் போதுமானதென்று சொல்லவேண்டும்.

ஆனால் இந்தக்கேஸில்பிரதிவாதிகள்வாய்மொழியான விக்கிறயத்தை ஆதாரங்கொள்ளவில்லை. அவ்வித விக்கிறயம் ஏற்பட்டதாக ருஜுபாகமும் இல்லை. இஷ்டவும் எற்படவில்லை. எழுத்துமூலமான தஸ்தவேஜைக்கொண்டு பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்கிறார்கள். ஒரு கிறயதஸ்தவேஜானது எழுத்து மூலமாய் ஏற்பட்டால் அது கட்டாயம் ரெஜிஸ்டாரகவேண்டும். இல்லாவிடில் தஸ்தவேஜானது பிரயோஜனமற்றுப் போகுமென்று சட்டமிருக்கிறது. துகை ரூ. 100க்கானாலும் அதற்கு மேலானாலும் எழுத்துமூலமாய் எற்படும் விக்கிறயங்கள் ரெஜிஸ்டராகி யிருக்கவேண்டும். ரெஜிஸ்டாராகாத கிறயதஸ்தவேஜை ருஜுபாகத்தில் எற்றுக்கொள்ளக்கூடாதென்று தீர்மானங்களிருக்கின்றன. பிரதிவாதிகள் தாவாவுக்குமுன் 12-வருஷம் அனுபோக முடைத்தாயிருந்தபோதிலும் அனுபோகம் எவ்விதமான அனுபோகமென்று காட்டுவதற்கு ரெஜிஸ்டாராகாத கிறயதஸ்தவேஜானது உபயோகப்படத்தகாது. ஆகவே பிரதிவாதிகள் ஒத்திதார்களென்று மதிக்கப்பட்டு வாதி ஒத்தியை மீட்டுக்கொள்ள லாயக்குண்டென்று சொல்லவேண்டும். மேற்கண்ட காரணங்களால் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII. M.L.J. 497.

———•••———



ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

வட-ஆற்காடு ஜில்லா)

ராமகிருஷ்ணம செட்டி vs வவ்வாதி செங்குவய்யர்.

S. A. 877 of 1912—27 ஜுலை 1914.

ப்ராபர்டி ஆக்ட் 100-வது பிரிவு 68 (c)-வது பிரிவு—அடமான சொத்தை தீர்வை பாக்கிக்காக ஏலம்போட்டதில்அடமானத்திற்குட்பட்டு ஏலமெடுத்தவன் அதிலுள்ளமரங்கள்சிலவற்றை வெட்டிக்கொண்ட நஷ்டத்திற்காக அடமான தாரனுக்கு உத்தரவாதியாகிறான். அடமானதாரனுக்கு மட்டுமல்ல, யாதொருகடனுக்காக சொத்தில் ஹக்குபாத்தியதையுடையவனுக்கும் சொத்தில் சேதமுண்டாக்குகிறவன் ஜவாப் தாரியாகிறான். சொந்தக்காரன் நஷ்டமுண்டாக்கினாலும் சரி அவனுடைய வாரிஸ்கள் அல்லது ஏலமெடுத்தவனைப் போலொத்த யாதொரு மேடோவர் தாரனாகிலும் சரி அவ்வித நஷ்டமுண்டாக்கினால் அதற்கு உத்தரவாதம் செயயக்கடவனாகும்.

ஒருவன் யாதொரு ஸ்தாவரசொத்தை அடமானத்திற்கு வாங்கி அதிலிருந்து வரும் லாபத்தை (மாசூலை) ஒரு தர்ம விஷயத்திற்காக செலவு செய்யப்படவேண்டுமென்று தஸ்தவேஜில் கண்டெழுதி வாதிகளை அந்ததர்மத்தை நடத்திவரும்படி டிரஸ்டிகளாய் அந்த தஸ்தவேஜில் நியமனம்செய்திருந்தார். தீர்வை பாக்கிக்காக அந்த சொத்தானது ஏலம் போடப்பட்டதில் 5-ம் பிரதிவாதியாகிய ராமகிருஷ்ணம செட்டியார் அந்த சொத்தை அடமான வில்லங்கத்திற்குட்படுத்தி ஏலமெடுத்தார். அதன் பின் அவர் ஏலமெடுத்த சொத்திலிருந்தசில மரங்களை வெட்டி எடுத்துக்கொண்டு போய் விட்டார். ரெவினியூ ஏலமானது சட்டமுறைப்படி ரத்தாச்சுது. அடமானதாருக்காக டிரஸ்டிகள் வாதிகளாய் திருப்பதி டி. மு. கோர்ட்டில் ப்ராபர்டி ஆக்ட் 68 (b)-வது பிரிவின்படி அடமானசொத்துக்குக் குறைவேற்பட்ட படியால் அதாவது 5-ம்பிரதிவாதி அதிலுள்ள மரங்களை வெட்டிக்கொண்டு போனதால் சொத்தின் விலை மதிப்புக்குக் குறைவேற்பட்ட படியால் கடனாளி கடன் துகையைக் கொடுக்கு மட்டும் தாமதிக்காமல் உடனே பூராக் கடன் துகையையும் வசூலிக்கும்படி தாவா செய்யலாமாகையால் அடமான கடன் துகை முழுவதையும் வசூலிக்கும பொருட்டு சொந்தக்காரன் பேரில் தாவா செய்து 5-ம் பிரதிவாதியின் பேரில் அவன் வெட்டி எடுத்துக்கொண்டுபோன மரத்தின்கிறயத்திற்குத் தக்கபடி டிக்கிரீயளிக்க வேண்டுமென்றும் அந்தப்பிராதில் கோறிக்கொண்டார்கள். வாதிகளுக்குக் கோறியபடி டிக்கிரீயானதில் 5-ம் பிரதிவாதி மட்டும் அப்பீல் செய்து சப்கோர்ட்டிலும் தோல்வியடைந்தார்.

ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—தாவா தஸ்த வேஜானது அடமானப் பத்திரமல்ல வென்றும் ஆகையால் ப்ராபர்டி ஆக்ட் 68 (4)வது பிரிவின் அம்சங்களைப் பிரயோகித்து வாதிகள் அடமானத் துகைக்காக தாவா செய்யக்கூடாதென்றும் தாவா தஸ்தவேஜானது தாவா சொத்தின் பேரில் ஹக்கு ஏற்படுத்தப்பட்ட கடன் பத்திர மென்றும் அப்படிப்பட்ட தஸ்தவேஜின்பேரில் (குறித்தகெடுவுக்கு முன்) வாதிகள் தாவா செய்யக் கூடாதென்றும், தவிற தாவா தஸ்தவேஜானது அடமான தஸ்தவேஜாக பாவிக்கப்பட்டாலும் 68 (b)-வது பிரிவின்படி அடமான சொத்துக்கு யாதொரு குறை வுண்டாகும்படி அடமானம வைத்த சொத்துக்காரன் நடந்து கொண்டால் மட்டும் அடமானதார் சொத்துக்கு ஏற்பட்ட நஷ்டமல்லாமல் பூரா கடன் துகையையும் அடமானம் வைத்தவன்பேரில் தாவாசெய்து வசூலிக்கலாமே யொழிய 5-ம் பிரதிவாதியைப் போலொத்த மேடோவர்தார் (அடமானத்தை மீட்டுக்கொள்ளும் அதிகாரத்தைமேடோவர் வாங்கின ரெவினியூ ஏலதார் சொத்துக்கு யாதொருநஷ்டமுண்டாக்கினால் வாதி அடமானகடன் துகைக்காக 68(b)-வது பிரிவின்படி தாவா செய்ய லாயக்கில்லை யென்றும், அதாவது அடமான கடனை சொந்தக்காரன் கொடுத்துத் திருப்பு மட்டும் சொத்தை அடமானதார் வைத்திருக்கலாமே யொழிய அதற்கு முன்துகை வேண்டுமென்று தாவா செய்ய பாத்தியமில்லை யென்றும் 5-ம்பிரதிவாதிக்காக ஆக்ஷேபிக்கப்படுகிறது.

தாவா தஸ்தவேஜில் பற்பல இடங்களில் தாவா சொத்தானது அடமானம் வைக்கப்பட்டிருக்கிறதென்ற வசனங்கள் காணப்படுகிறது. ஆகையால் அதை அடமானப்பத்திரமென்று தான் சொல்லவேண்டும். அப்படியானால் ப்ராபர்டி ஆக்ட் 68 (b)-வது பிரிவின்படி அந்த சொத்துக்கு யாதொரு குறைவேற்பட்ட உடனே அடமானக்கடனை வசூலிக்கும்பொருட்டு வாதி தாவாசெய்ய லாயக்குண்டெ

ன்று சொல்லவேண்டும். ப்ராபர்டி ஆக்ட் 100-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி தஸ்தவேஜானது அடமானப்பத்திரமானாலும் சரி, யாதொரு சொத்தின்பேரில் ஹக்குமட்டும் ஏற்பட்டபோதிலும் சரி வாதிகடன் துகையை வசூலிக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டுக்கும் ஒரேவிதமாக ஏற்படுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே 68 (b)-வது பிரிவின்படி கடன் துகையை வசூலிப்பதற்கு தஸ்தவேஜானது இருவகையில் எதுவானாலும் தாவாசெய்ய லாயக்குண்டென்று சொல்லவேண்டும்.

அடமானம்வைத்த சொந்தக்காரனால் சொத்துக்கு நஷ்டமேற்பட்டால்மட்டும் கடன் துகைக்கு தாவாசெய்யலாமென்று வாதிக்கப்படுகிறது. அதாவதுவாஸ்தவமாய் சொத்துக்கு நஷ்டமானது மேடோவர் அல்லது கிறயம்பெற்றவனால் ஏற்பட்டிருந்தபோதிலும் அவ்வித விக்கிறயதார் அல்லது சொந்தக்காரனுடைய வாரிஸ்கள்பேரில் கடன் துகைக்காக தாவா செய்யக்கூடாதென்று சொல்லப்படுகிறது. அந்தவாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஒரு அந்நியன் யாதொரு அடமான சொத்துக்குத் தீங்கு செய்தால் அவன்பேரில் அடமானதார் நஷ்டத்திற்காகத் தொடரலாமென்பதற்கு சட்டமேற்படவேண்டியதில்லை. அப்படியிருக்க 68 (b)-வது பிரிவினால் சொத்துக்கு நஷ்டமுண்டாக்கினவன் அடமானம் வைத்த சொந்தக்காரனாகவே யிருந்தால் அவன்பேரில் அந்த நஷ்டத்திற்காகமட்டுமல்ல பூராக்கடன் துகைக்கும் தாவாசெய்ய முறையுண்டாயிருக்கிறது.

தவிற ஒருவன்பேரில் தாவாசெய்யும்பாத்தியதை ஏற்படும்பொழுது அவனுடைய வாரீஸ்கள் பேரிலும்அவனுடைய நிலமையை அடைந்த 5-ம் பிரதிவாதியைப்போலொத்தவன் பேரிலும் அதேவிதமான நியாயத்தைக்கொண்டு கடன் துகை பூராவையும் நஷ்டத்தையும் வசூலிக்க தாவாசெய்யநியாயமுண்டென்றுசொல்லவேண்டும். ஆகவே 5-ம் பிரதிவாதியால் ஏற்பட்டநஷ்டத்திற்காக அவன்பேரில்டிக்கிரீயளிக்கப்பட்டது சரியென்று தீர்மானிக்கப்பட்டது XXVII M. L. J. 494.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா

S. A. 1557 of 1912-27 ஜூலை 1914

பீர்மகம்மது ராவுத்தர் vs நாகூர் ராவுத்தர்.

**அடமான தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட காலத்தவணைக்குமுன் சொத்தைமீட்டுக்கொள்ள நியாயமில்லை. பத்திரத்தில் வாய்தாவுக்குமுன்மீட்டுக்கொள்ளும் ஷரத்துக்கள் கண்டிருக்கவேண்டும்.**

தாவா சொத்தை 7-வருஷத்திற்கு போக்கியத்திற்கு எழுதி வாங்கிக் கொண்டவாதி அதற்குப்பின் ஷை சொத்தைக் கிறயத்திற்கு வாங்கிக்கொண்ட 3-ம் பிரதிவாதியினிடமிருந்து சுவாதீனமடையும் பொருட்டு செய்ததாவாவில் 3-ம் பிரதிவாதிதான் போக்கியத்துகையைச்செலுத்திவிடுவதாய் ஒப்புக்கொண்டும் அதை அங்கீகரிக்காமல் வாதி 7-வருஷத்திற்கு தாவா சொத்துக்களை அனுபவிக்க நியாயமுண்டாகையால் அந்த கெடுவுக்கு முன் துகையைக்கட்டி போக்கியத்தை ரத்து செய்ய லாயக்கில்லை யென்று டி. மு. கோர்ட்டாரும் சப்கோர்ட்டாரும் அபிப்பிராயப்பட்டு வாதிக்கு சுவாதீன டிக்கிரீயளித்தார்கள். ஹை கோர்ட்டார் 2-வது அப்பீலிலும் அதே அபிப்பிராயங் கொண்டு 2-வது அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் ஸாராம்சமாவது:— போக்கிய தஸ்தவேஜில் "நாங்கள் தங்களிடத்தில் வகை இரண்டிலும் ரூபாய் ஆயிரம் ரொக்கம் பற்றிக் கொண்டபடியால் நீர் அடியில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலங்களை ஸர்க்கார் கிஸ்தி முதலானதுகளைச் செலுத்திக்கொண்டு அனுபவித்து வருவீர்களாகவும். அசல் துகை ரூ 1000-யும் ஏழு வருஷத் தவணையில் பெற்றுக்கொண்டுநிலங்களைஒப்புவித்துவிடுவீராகவும்" என்ற வசனங்கள் கண்டிருக்கிறது. 36 அலகபாத் 195க்குச் சரியான 26 மதராஸ் லா ஜர்னல் 474-ல் பிரசுரமா யிருக்கிற பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தின்படி அடமான தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட கெடு வாய்தாவுக்கு முன் அடமானத்தை மீட்டுக்கொள்ள அனுமதி கொடுக்கக் கூடாதென்றும் பத்திரத்தில் கண்டகெடு வாய்தாவுக்கு முன் துகையைச் செலுத்தி அடமானத்தை மீட்டுக் கொள்ளலாமென்ற ஒரு ஒப்பந்த மிருந்தால் மட்டும் அவ்விதமாய் மீட்டுக்கொள்ள அனுமதி கொடுக்கலாமென்றும் சொல்லவேண்டும். இந்தக் கேஸில் அவ்விதமான ஒப்பந்த மிருந்ததாக ருஜூ அம்சம் கிடையாது. 23 மதராஸ் 33-ல் சொல்லப்பட்டிருக்கிற சில அபிப்பிராயங்கள்மேற்கூறியபிரிவிகௌன்ஸில் தீர்மானத்திற்குவிபரீதமா யிருந்தால் அந்த அபிப்பிராயம் பிரிவி கௌன்ஸில் தீர்ப்பினால் மாறிப் போச்சுதென்று மதிக்கத்தகும். ஆகையால் வாதியும் அடமானம் எழுதிக் கொடுத்தவரும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி வாதி தாவா சொத்துகளை 7-வருஷத்திற்கு சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி யாச்சுது. XXVII M. L. J. 483.

---



ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் மில்லர்

(தஞ்சாவூர் ஜில்லா)

S.A.1279 of 1904-19 செப்டம்பர் 1907.

அருணாசலப்பிள்ளை vs. சம்பூரணத்தாச்சி.

**கூட்டுக்குடும்பத்தைச்சேர்ந்த பாட்டன் தன் 3-வது தாரத்திற்குத் தன் சொத்து பாகத்தில் ரூ 3000த்தை எழுதிவைத்துவிட்டு ரூ 8000 பெருமான மிகுதியைத் தன் மைனரான பேரனுக்குச் சேரும்படி ஏற்பாடு செய்துவிட்டார். அதற்கு மைனரின் தாயும் தாய் மாமனும் சம்மதி கொடுத்தார்கள் ஷை நடவடிக்கை பாக விசுத்திப் பத்திரமா வென்று தீர்மானிக்காமலே மைனரின்நன்மையைக்கோறிகார்டியன்கள்சம்மதித்தபடியால் மைனர் மேஜரானபிறகு அந்த நடவடிக்கையைநிராகரிக்கத் தகாதென்று தீர்மானிக்கப்பட்டது.**

வாதியும் வாதியின் பாட்டனாரும் ஒரு கூட்டுக் குடும்பத்திலுள்ள மெம்பர்களாயிருக்கையில் பாட்டனார் மூன்றாவது விவாகம்புரிந்து அவளால் மூன்று புத்திரிகளை அடைந்தார். வாதி மைனராக இருக்கையில் வாதியின் தாயார் தாய் மாமன் ஆகிய இருவருடைய சம்மதத்தைப்பெற்றுப் பாட்டனார் தன் மனைவிக்குக் குடும்பசொத்தில் ஒரு பாகத்தை எழுதிவைத்து அதிலுள்ள வருமானத்தைத் தன் ஜீவதசை மட்டும் தான் அடையவேண்டுமென்றும் அந்தசொத்து பாகத்தில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் விலக்கி ஆகவே தன்னுடைய பாகத்திலிருந்து அந்தசொத்து பிரித்துக்கொடுக்கப்படவேண்டுமென்றும் கண்டிருந்தார். ஷை தஸ்தவேஜில்கண்ட சொத்துபாகத்தின் மதிப்பு ரூ. 3000 மாகும். வாதியின் வசத்திலிருக்கும் சொத்து சுமார் ரூ. 7000 அல்லது ரூ. 8000 பெருமானமுள்ளதாகும். வாதி இரண்டு கோர்ட்டுகளில் ஷை தஸ்தவேஜானது தன்னைக்கட்டுப்படுத்தாதென்று ஆக்ஷேபித்தும் ஜயமடையாமல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் தோல்வியடைந்தார். ஹைகோர்ட்டாரின் தீர்ப்புச் சுருக்கமாவது:—

பாட்டனார் எழுதிவைத்த தஸ்தவேஜானது பாகவிசுத்திப் பத்திரமாக மதிக்கப்படலாமாவென்ற பாயிண்டைப்பற்றி விவாதம் மிகவும் பலமாய்ச் செய்யப்பட்டது. ஆனால் அதைப்பற்றித் தீர்மானம் கொடுக்கவேண்டிய அவசியமில்லையென்று சொல்லவேண்டும். ஏனெனில் பாட்டனாருக்குப் பிரியமிருந்தால் யாருடைய சம்மதியையும் அபேக்ஷிக்காமலே தன்னுடையபாகம் முழுவதையும் அதாவது குடும்ப சொத்தில் ஒருபாதியைத் தன் மனைவிக்குக்கொடுத்து பாகப்பிரிவினை செய்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. வாதியின் கார்டியன்களாயிருந்ததாயாரும் தாய் மாமனும் பாட்டனார் செய்த ஏற்பாட்டுக்குச் சம்மதிகொடுத்தது மைனருடைய நன்மைக்காகவேஏற்பட்டது. இல்லாவிடில் பாதி சொத்து மேற்கண்டவிதமாய்ப் பிறிந்துபோக இடமாயிருக்கும். வாதி ஷை தஸ்தவேஜை எழுதும் காலத்தில் மேஜராயிருந்து சம்மதம் கொடுத்திருந்தால் அந்த தஸ்தவேஜானது செல்லத்தகுமென்று சொல்லவேண்டும். ஆகையால் மைனருக்காக அவருடைய கார்டியன்கள்சம்மதி கொடுக்க லாயக்குள்ளவர்களாதலால் பிரதிவாதிக்குக் கிடைத்தசொத்து பாகத்தை வாதி ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி யாச்சுது. XXVII M. L. J. 485.

---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் &
ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்.

(சேலம் ஜில்லா)

S.A. 2093 of 1912- 10 ஆகஸ்ட் 1914.

பால விஸ்ஹாந்தம் vs. பெருமாள்செட்டி

அடமானத்துகையைக் கொர்ட்டில் கட்டின காரணத்திலேயே அடமானதார் தான் பெற்றிருக்கும் குடிக்கூலி எக்ரிமெண்டின் படிக்கு வாடகை பாக்கியை வசூலிக்கும் பாத்தியதை நீங்கிப் போகாது. அடமானக்கடன்கொடுத்தபடி சொத்தானது மீட்டுக் கொள்ளப்படும் வரையில் அடமானதார் சொத்தின் சுவாதீனத்திலிருக்க வேண்டியது நியாயமாகும். ஆகவே குடிக்கூலியையும் அதுமட்டும் வசூலித்து வரலாயக்குண்டு.

ஒரு சொத்தைப்பற்றி மூன்று தஸ்தவேஜுகள் ஒரேகாலத்தில் ஏற்பட்டிருந்தது. (1) வாதிக்கு அந்த சொத்தானது சுத்த விக்கிரயம் செய்யப்பட்டிருந்தது. (2) வாதி சில நிபந்தனையின் பேரில் அந்த சொத்தை மறுவிக்கிறயம் செய்து கொடுப்பதாய் ஒரு எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்தார் (3) அதே சொத்தை கிறயம் செய்தவனிடத்திலேயே குத்தகைக்கு ஒப்படைத்து அதற்காக ஒரு குத்தகைச்சிட்டும் எழுதிவாங்கினார். அப்படியிருக்க வாதி குத்தகை சீட்டில் கண்ட வாய்தா கடந்தபின் பாக்கி ஏற்பட்ட குத்தகைப் பணத்திற்காகவும் குத்தகைதாரனை இஜெக்ட் செய்யவும் வாதி சேலம் டி. மு. கோர்ட்டில் அசல் தாவா செய்தார். பிரதிவாதி எதிரான்ஸரில் மேற்கூறிய மூன்று தஸ்தவேஜுகளின் ஏற்பாடானது விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமான நடவடிக்கை யாகுமென்றும் அடமானத்துகையை தாவா தேதிக்கு முன்னதாகவே கோர்ட்டில் டிபாஸிட் செய்தாய்விட்டதென்றும் அதை வாதி அந்தத்துகையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டமையால் டிபாஸிட் செய்த தேதிமுதல் வாதிக்குத்தகைப்பணம் சேரவேண்டிய நியாயமில்லை யென்றும் எதிர்வாதம் செய்தார். டி. மு. கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் எதிர் வாதத்தைஏற்றுக்கொள்ளாமல் ... தஸ்தவேஜுகளால் மறு விக்கிறயம்செய்யவேண்டிய நிபந்தனையுடன் கூடிய விக்கிறயம் வாதிக்கு ஏற்பட்டிருப்பதாய் அப்பிராயப்பட்டு மறு விக்கிறயம் ஏற்படாத நிமித்தம் வாதி குத்தகைப் பத்திரத்தின்பேரில் இந்ததாவாகொண்டு வந்தது நியாயமென்று தீர்மானித்து வாதிக்குக் கோறியபடி டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதி வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்து தாவா தஸ்தவேஜுகள் மூன்றும் சேர்ந்து விக்கிறய நிபந்தனையுடன் கூடிய அடமானமாக மதிக்கப்பட வேண்டு மென்பதற்கு ஆதாரமாக வக்கீல் ம- ா- ா-ஸ்ரீ வி. வெங்கடாச்சாரியாரவர்கள் மூலமாக 31 அலகபாத் 300, 37 மதராஸ் 348, 22 அலகபாத் 149, 23 மதராஸ் 114 இவைகளை எடுத்துக்காட்டினர்.

வாதிக்காக வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ B. சீதாராமராவ் அவர்கள் தாவா நடவடிக்கைகள் அடமானமா அல்லவாவென்ற பாயிண்டைப்பற்றித் தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் குத்தகைச்சீட்டின் பேரில் இந்ததாவா செய்யப்பட்டிருப்பதால் வாதியிடமிருந்து சொத்தின் சுவாதீன பாத்தியம் நீங்கிப் போகுமட்டும் வாதி அதைசுவாதீனப்படுத்திக் கொண்டு அனுபவிக்க லாயக்குண்டென்றும் கோர்ட்டில் அடமானத்துகை டிபாஸிட் செய்யப்பட்டதினாலேயே அடமானத்திற்குறிய பரஸ்பரசம்பந்தம் நீங்காதென்றும் வாதித்து 34 கல்கத்தா 223, 31 பம்பாய் 527 இவைகளை எடுத்துக்காட்டினர்.

ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்த தீர்மானத்தின் சுருக்கமாவது:— இந்த தாவா கோர்ட் பீஸ் ஆக்ட் 7-வது பிரிவின் (11)-வது கிளாஸின்படி ஒருவருஷத்திய குத்தகைப் பணத்தின் பேரில் மவுண்டு கட்டிக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகையால் சொத்து பாத்தியத்தைப்பற்றி அதாவது வாதி கிறயதாரனா அடமானதாரனா வென்ற பாயிண்டு தீர்மானிக்கப்படவேண்டிய அவசியமில்லை. கீழ் கோர்ட்டார் மூன்று தஸ்தவேஜுகளைப்பற்றிகொண்ட அபிப்பிராயத்தை சரியென்று ஏற்றுக் கொள்வதாய் எண்ணப்பட வேண்டியதில்லை. அவைகள் அடமான தஸ்தவேஜுகளாக பாவிக்கப்பட்டாலும் அடமானம்ரத்தாகுமட்டும்வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தி லிருக்க லாயக்குண்டு. எதிரி கோர்ட்டில் பணம் கட்டிவிட்டதால் வாதி தாவாதஸ்தவேஜுகளின்படி சொத்தின் சுவாதீனத்திற்காக தாவா செய்ய லாயக்கில்லையென்று சொல்லக்கூடாது. இந்த ஒரு கிரௌண்டினாலேயே 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. XXIIM.L.J.475.



5 - JAN 1915

ஜஸ்டிஸ் சங்காரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

(கிருஷ்ணா ஜில்லா)

A. S. 57 of 1911—19 ஆகஸ்ட் 1914.

கோடிபட்டி சுப்பன் vs. கோடிபட்டி நரசம்மா.

பாபண்ணா என்ற மூல புருஷன் 1881-ல் சில ஸ்வயார்ஜித சொத்துக்களையும் மனைவியையும் விட்டு சந்ததியில்லாமல் காலமானார். அவருடைய சகோதரனுக்கு ஒரு மைனர் குமாரனிருந்தான். காலஞ்சென்ற மூலபுருஷன் அந்த மைனரை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாரென்ற காரணத்தால் ஷை சொத்துக்களை ஷை மைனரின் ஜனக தகப்பன் சுவாதீனப்படுத்திக்கொண்டார். மூலபுருஷனுடைய பாரியாளாகிய நரஸம்மாள் ஸ்வீகாரத்தைப் பொய்யென்று நிராகரித்து ஷை மைனரின் வசமிருந்த தன் கணவன் சொத்துக்களை சுவாதீன மடையும் பொருட்டு 1882-ம் வருஷத்தில் தாவா செய்ததில் மைனரின் தகப்பன் கார்டியனாக ஏற்பட்டு மைனரின் ஸ்வீகாரபாத்தியதை எதிரான்ஸரில் சொல்லி வழக்காடினார். அந்தப்பிராதில் நரஸம்மாள் தன் கணவனால் ஒரு உயில் ஏற்பட்டிருந்ததாகவும் ஆனால் அவர் அந்த உயிலை ஜீவனிருக்கும்போதே நிராகரித்து ரத்துசெய்து விட்டாரென்றும் சொல்லித்தான் ஜீவதசைமட்டும் சொத்து முழுவதையும் ஆண்டு அனுபவிக்க லாயக்குண்டென்று சொல்லி சொத்தை சுவாதீனமடையக் கோறினாள். மைனரின் கார்டியனே உயிலை எழுதிவைத்த தகவல் தனக்குத் தெரியாதென்றும் அது வாஸ்தவமாய் ஏற்பட்டிருந்தபோதிலும் அது மைனரின் பாத்தியதைக்கு விரோதமாகப் பிரயோகிக்கத் தகுந்ததல்லவென்றும் ஆக்ஷேபித்தார். டி-மு-கோர்டார் ஸ்வீகாரம் பொய் யென்றும்; உயிலைப்பற்றின மட்டில் இருதரப்பாரும் மறுப்பதாலும், தவிற மூலபுருஷன் மிகவும் அவஸ்தையான நிலமையிலிருக்கும்பொழுது உயில் எழுதப்பட்டதாக ருஜு அம்சத்தில் காணப்படுவதாலும் உயிலின் உண்மையைப்பற்றி யாதொரு தீர்மான முடிவடையவேண்டியதவசியமில்லையென்றும் சொல்லி நரஸம்மாளுக்கு சுவாதீன டிக்கிரீ யளித்தார்கள்.

அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் ஸ்வீகாரம் ருஜுவாகவில்லையென்றும் உயில் பிறந்தது வாஸ்தவமென்றும் ஆனால் அதை மூலபுருஷன் நிராகரித்து ரத்துசெய்துவிட்டதாக ருஜுவாகிறதென்றும் அபிப்பிராயப்பட்டு கடைசியாக மைனருக்கு விரோதமாய் அப்பீலை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். நரஸம்மாள் சுவாதீன டிக்கிரீயின்படி சொத்துக்களை கைவசப்படுத்திக்கொண்டு 1897-ம்வரை மட்டும் ஆண்டு அனுபவித்துவிட்டு 1897-ல் சொத்துக்கள் முழுவதையும் அதே மைனருக்கு மேஜராடியான பிறகு நன்கொடை யளித்து விட்டாள். மூல புருஷனுடைய அனந்தர வாரிஸ்கள் மேற்கூறிய நன்கொடைப்பத்திரம் செல்லாதென்றும் அது தங்கள் பாத்தியதையை கட்டுப்படுத்தாதென்றும் டிக்லேரேஷன் தீர்மானமடையும்பொருட்டு சப் கோர்ட்டில் நன்கொடை பெற்றவன் பேரிலும் நரசம்மாள் பேரிலும் தாவா செய்தார்கள். பிரதிவாதிகள் எதிரான்ஸரில் உயில் பிறந்தது வாஸ்தவமென்றும் அதன்படி மூலபுருஷனுடைய தாவா சொத்துக்களில் ஒருபாதி நரசம்மாளுக்கும் மறுபாதி ... மைனருக்கும் சேரவேண்டிய நியாயமென்றும் ஆகவே நரசம்மாளென்ற 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு (மேஜராய் போன பாதிபாகஸ்தனுக்கு நன்கொடை யளித்தது செல்லத்தகுமென்றும் முந்திய பிராதில் மைனரின் கார்டியன்உயிலை ஏற்றுக்கொண்டு எதிர் வழக்காடாமல் ஸ்வீகாரம் என்ற தப்பு வாதத்தைச்செய்து கேஸைக்கெடுத்துவிட்டமையால் கார்டியனுடைய நடத்தைப்பிசகால் ஏற்பட்ட டிக்கிரீயினால் மைனர் கட்டுப்பட நியாயமில்லையென்றும் ஆகவே முந்திய டிக்கிரீயானது உயிலைப்பற்றி இப்பொழுது ஆதாரங்கொள்ளாதிருக்கும்படி ரீஜுடிகேடாவாகாதென்றும் சொல்லி நன்கொடையைக் காயப்படுத்தவேண்டுமென்று கோறிக்கொண்டார்கள். 1-ம் பிரதிவாதியாகிய நரசம்மாளும் முன் வழக்கின் தீர்மானம் இந்த வழக்குக்கு ரீஜுடிகேடாவாகாதென்று வாதம் செய்தாள். சப்கோர்ட்டார் மைனரின் கார்டியன் முன் வழக்கில் பொய்யென்று தெரிந்து சொத்து முழுவவையும் தன் மகனுக்கே வரவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு உயிலை ஒப்புக்கொள்ளாமல் ஸ்வீகாரம் என்ற தப்பு வழக்காடினாரென்று அபிப்பிராயப்பட்டு அவ்விதமான கார்டியனுடைய துர்நடத்தையால் ஏற்பட்ட டிக்கிரீ மைனரைக்கட்டுப்படுத்தாதென்று தீர்மானித்து 2-ம் பிரதிவாதியின் எதிர் வாதத்திற்கு முந்திய டிக்கிரீ ரீஜுடிகேடா

வாகாதென்று தீர்மானித்து உயிலை வாஸ்தவமென்று நம்பி நன்கொடை செல்லத்தகுமென்று சொல்லி வாதிகளின் (அனந்தர வாரிஸ்களின்) பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹானரபில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் கொடுத்த தீர்மானச் சுருக்கமாவது:—

முந்திய வழக்கில் மைனரின் கார்டியன் தன் மகனுக்கு உயிலின் பிரகாரம் பாதி சொத்து தான் கிடைக்குமென்ற காரணத்தால் அதைஒப்புக்கொள்ளாமல் பொய்யென்று தெரிந்து ஸ்வீகார வாதம் செய்தாளென் பதில் சந்தேகமில்லை. பொய் வாதம் செய்து முன் வழக்கைக்கெடுத்து மைனருக்கு விரோதமான டிக்கிரீ ஏற்படச்செய்தாள். அந்த டிக்கிரீயினால் மைனர் கட்டுப்பட்டவனல்ல. அது இந்த தாவாவுக்கு ரீஜுடிகேடாவாகாது. நரஸம்மாள் 1883-ல் தாவா சொத்துக்களைச் சுவாதீனமடைந்து நன்கொடைத் தேதியாகிய 1897 வரையில் அனுபவித்திருக்க அவள் 1887-ல்தான் சுவாதீனம் பெற்றாளென்றும் ஆகையால அவள் உயில்படி சுவாதீன மடைந்திராமல் ஜீவனாம்ச பாத்தியதையை நாடி அனுபவித்துவந்ததாகவும் அப்படிப்பட்ட அனுபோகம் 1887 முதல்தான் ஏற்பட்டதென்றும் வாதிக்கப்படுகிறது. (அதாவது உயில்படி சொந்த பாத்தியதையைக்கொண்டாடாமல் விதந்துவானவள் கணவன் சொத்தை அடைய தாவா செய்து சுவாதீனம் பெற்று 12-வருஷங்கள் அனுபவித்து வந்தபின் நன்கொடை யளித்தாளென்றும் ஆகவே அனுபோக பாத்தியதையால் ஸ்வதந்தரம் ஏற்பட்டதென்ற கக்ஷிக்கு விரோதமாக அவள் சுவாதீனம் பெற்ற வருஷம் 1887-என்றும் அப்படிப்பார்த்தால் 12-வருஷமாகவில்லையென்றும் வாதிக்கப்படுகிறது.) இந்த வாதம் கீழ் கோர்ட்டில் செய்யப்படவில்லை. அதை இந்த கோர்ட்டில் எற்றுக்கொண்டால் மறு விஜாரணைக்காக அனுப்பி அந்த பாயிண்டைப்பற்றி ருஜு அம்சத்தைக்கண்டறியவேண்டும். அப்படி மறு விஜாரணைக்கனுப்ப நியாய மேற்படவில்லை.

நரஸம்மாள் முந்திய வழக்கில் உயிலை நிராகரித்து அது ரத்தாச்சுதென்றும் சொல்லி அதன்படி பாத்தியம் கொண்டாடாமலிருக்க இந்த வழக்கில் உயிலை ஆதாரங்கொண்டு எதிர் வழக்காடக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. அதாவது உயில் ரத்தாச்சுதென்ற தீர்மானத்திற்குப்பின் சொத்தானது அவளுக்குப்பின் சட்டப்படியுள்ள அடுத்த வாரிஸ்தாருக்கு அமைக்கப்பட்டிருக்க அதன் பிறகு உயிலை ஆதாரங்கொள்ளும்படி அனுமதி கொடுக்கக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. இந்த வாதமும் கீழ் கோர்ட்டில் செய்யப்படவில்லை. அதைப்பற்றி இந்தக்கோர்ட்டில் வாதம் செய்யவிடக்கூடாது. எனெனில் புது சாட்சி யம்சம் ஏற்படவேண்டியதாகும்.

ஆகவே உயிலை ஆதாரங்கொள்வது நியாயமாகும். உயில் மெய்யாய் பிறந்ததென்பதில் சந்தேகமில்லை. முந்திய வழக்கில் பிராதுடனே ஆஜர் படுத்தப்பட்டிருந்தது. கைம்பொப்பமும் ருஜுவாகியிருக்கிறது. 4 5 வாதிகளின் தகப்பன் அந்த உயிலில் சாட்சி யொப்பம் செய்துமிருக்கிறார். கிராமகர்ணன் சாட்சியொப்பம் செய்திருக்கிறார். அவர் சாட்சியாக வந்து உயில் மனோராஜியில் எழுதிக் கொடுக்கப்பட்டதென்று சொல்லியிருக்கிறார்.

உயிலை சாஸனகர்த்தா நிராகரித்தாரென்றாவது ரத்து செய்து விட்டாரென்றாவது ருஜுவாகமே கிடையாது. முந்திய வழக்கில் ஜில்லா கோர்ட்டார், உயில் ரத்தாய்ப்போய்விட்டதென்று நம்புகிறார். அதற்கு உயிலை மறைக்க அக்கரையுடன் கூடிய 4-5 வாதிகளின் தகப்பனுடைய சாட்சியமே ஆதாரமாயிருந்தது. அவனுடைய சாட்சியத்தில் நம்பிக்கைவைக்க நியாயமில்லை. பிரதிவாதி தரப்பு சாட்சிகளின் வாக்கு மூலத்தை நம்பி சப்கோர்ட்டார் உயில் ரத்தாகவில்லையென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். ஆகவே உயிலை ரத்தானதாகத் தீர்மானிக்கக் காரணமில்லை.

மேற்கூறிய காரணங்களால் நன்கொடை நிலைத்து சப்கோர்ட் டிக்கிரீ சாபமாச்சுது.

ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாகத் தீர்ப்புச் சொன்னதில் 1-ம் பிரதி வாதிக்கு முந்திய வியவகாரம் ரீஜுடிகேடா வாராதென்பதற்குக் காரணமாகச் சொன்னதாவது:—



முந்தின வழக்கில் நரஸம்மாள் தன் கணவனுடைய சொத்தை அடைந்து அனுபவிக்கும் பாத்தியதையைப்பற்றி ஸ்வீகாரத்தைப் பாராட்டி வந்த மைனருக்கு விரோதமாய் வழக்கெடுத்தாள். அது சுவாதீன வழக்கு. தன் ஸ்வய பாத்தியதையை நிலைநாட்ட செய்த தாவாவாகும். வாதிகள் அந்தப் பிராதை நரஸம்மாள் கணவனுடைய எஸ்டேட்டுக்குப் பிரதிநிதியாகிய நிலைமையில் நடத்தினாளென்றும் அனந்தர வாரிஸ்களாகிய தங்களுடைய பிரதிநிதியாக ஸ்வீகாரமென்று வந்த அந்நியனுக்கு சொத்து செல்லாதிருக்கும்படி அந்த வழக்கெடுத்தாளென்று சொல்லி அதில் அவள் பெற்ற அனுகூல டிக்கிரீயானது இந்த வாதிகளுக்கு அனுகூலமானதாகுமென்றும் அந்த அனுகூல டிக்கிரீயைப் பிரயோகித்து நரஸம்மாள் உயிலின் ஆதாரத்தைக் கொண்டு விபரீதமான வழக்காடக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். நரஸம்மாள் முன் வழக்கில் வாதிகளுக்குப் பிரதிநிதியாக வழக்கெடுத்தாளென்று வைத்துக்கொண்டாலும் அவள் இன்னும் ஜீவனோடிருக்கிறாள். இந்தப் பிராதில் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறாள். அந்தப் பிரதிநிதி ஸ்தானம் இன்னும் அவளுக்கு இந்த வழக்கிலும் இருக்கவேண்டும். வாதிகளும் காலஞ்சென்றவருடைய எஸ்டேட்டைப் பற்றி பிரதி நிதிகளாக இந்த வழக்கொடுக்கிறார்களென்று சொல்ல நியாயமில்லை. ஒருவருக்கொருவர் விரோத நிலைமையை வைத்துக்கொண்டு இருதரத்தாரும் ஒரே எஸ்டேட்டுக்குப் பிரதி நிதிகளாயிருக்கக்கூடாது. ஆகையால் முன் வழக்கில் நரஸம்மாள் வகித்த நிலைமையைத் தொடர்ந்து வகிக்கிறபடியால் முன் வழக்கில் அவளுக்கு அனுகூல பிரதி கூல தீர்மான முடிவுகளை வாதிகள் உபயோகப்படுத்தக்கூடாது. ஆகவே முந்திய வழக்கானது இந்தக் கேஸுக்கு ரீஜுடிகேடாவாகாதென்பதற்கு மேற்கூறிய காரணங்கள் சொல்லப்பட்டன. XXVII. M.L.J. 486.

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஹானே.
S. A. 2562 of 1913—5 நவம்பர் 1914.

ஒரு ஹிந்து எழுதிவைத்த உயில் சாஸனத்தில் தனக்கு ஒரு புத்திரனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் அதிகாரத்தைத் தன் மனைவிக்கும் இன்னும் இரண்டு பந்துக்களுக்கும் கூட்டாக ஏற்படுத்தினதில் அவ்விதமான அதிகாரத்தை அனுஸரித்து எடுத்துக் கொள்ளப் பட்ட ஸ்வீகாரம் செல்லத்தகாதென்றும் கூட்டாகக் கொடுத்த அதிகாரமானது பிரயோகிக்கத் தகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (27 M.L.J. 40).

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.
S. A. 1280 of 1913—5 நவம்பர் 1914.

நிறைவேற்று நடவடிக்கையின் பேரில் ஜப்தியாகி யிருக்கிற யாதொரு நிலத்தை டிக்கிரீ பாக்கிதாரன் ஜப்திக்குப்பின் ஒரு வருஷத்திற்குக்குத்தகைக்கு ஒப்படைத்ததில் சொத்தானது பலனற்றுப் போகாமலிருக்கும்படி செய்த மேற்படி குத்தகை ஒப்படையானது ஜப்தியின் காரணத்தால செல்லத்தகாதென்று சொல்ல நியாய மில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (27 M.L.J. 40)

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஹானே.
S. A. 2669 of 1913—5 நவம்பர் 1914.

ஒரு தேவாலயத்தின் திருப்பணிச் செலவுக்காகத் தொகை வேண்டுமென்ற தர்மகர்த்தாவினுடைய சொல்லை நம்பி கோவில் சொத்தின் பேரில் தர்மகர்த்தாவுக்கு அடமானக்கடன் கொடுத்தவன் மேற்படி சொத்திலிருந்து கடன் தொகையை வசூலித்துக் கொள்ள லாயக்குள்ளவனென்று தீர்மானிக்கப்பட்டது. (27 M.L.J. 40)

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஹானே
S. A. 2610 of 1913—5 நவம்பர் 1914.

இரண்டு டிக்கிரீ பாக்கிதார்களால் ஜப்தியாகியிருக்கும் யாதொரு சொத்தை விக்கிரயம் பெற்றவனிடத்தில் மேற்படி யார்களிருவருக்கும் ஏற்பட்ட தொகையைச் செலுத்தும்படியாக விக்கிறயத்தொகையில் ஒரு பாகம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொகையை வாதி மேற்கூறிய டிக்கிரீ பாக்கிதாரன் பேரில் பெற்றவேறொரு டிக்கிரீபாக்கிக்காக ஜப்தி செய்து விட்டார். கிறயம் பெற்றவர் மேற்படி ஜப்தியை மதியாமல் கிறய தஸ்தவேஜில் கண்ட இரண்டு முன் ஜப்தியில்

கண்டதுகையைச் செலுத்திவிட்டார். வாதி கிறயம்பெற்றவன் பேரில் தாவாசெய்து ஜப்தியான துகையைத்தான் அடையவேண்டுமென்று சொல்லி வழக்காடினதில் (1) ப்ராபர்டி ஆக்ட் 55 (2)-வது பிரிவின்படி கிறயத்துகையில் கிறயம்பெற்றவன் தன்னிடம் நிறுத்திவைத்துக் கொண்டிருந்ததுகையை கிறயத்திற்கு முன் சொத்தை ஜப்தி செய்திருந்த பாக்கிதார்களுக்குக் கொடுத்து ஜப்தியை விடுதலை செய்து கொள்ள பாத்தியமுடையவர்களாகிறார்களென்றும் (2) வாதி விக்கிறய பாக்கித்துகையை ஜப்திசெய்த காலத்தில் அந்தத் துகையில் கிறயம் செய்து கொடுத்த பாக்கிதாரனுக்கு என்ன ஹக்குண்டோ அதுமட்டுந்தான் வாதிக்கு ஏற்படுமென்றும் (அதாவது இரண்டு முன் ஜப்திக்காருடைய பாக்கியைத் தீர்க்கும்படி கட்டாயப் படுத்தும் பாத்தியதை மட்டும்தான் கிறயம் செய்த பாக்கிதாரனுக்குண்டாகையால் வாதிக்கும் அந்தத் துகையில் அதேவித பாத்தியதைக்குமேல் யாதொன்றும் ஏற்பட நியாயமில்லையென்றும் (3) முந்திய பாக்கியைத் தீர்க்கும் பொருட்டு நியாயமானபடி செலுத்தப்பட்ட துகையை வாபிஸ் அடைவதற்கு வாதி லாயக்குள்ளவனல்லவென்றும் தீர்மானிக்கப் பட்டது. 21 மதராஸ் லாஜர்னல் 883 ஐ அனுஸரித்து மேற்கூறிய தீர்மானம் ஏற்பட்டது. (27 M.L.J. 39)

---

ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்.

S.A. 1058 of 1914—30 அக்டோபர் 1914.

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 13-வது பிரிவு 3-வது கிளாஸில் ஒரு ரயட்டானவன் தன் சொந்தச் செலவைக்கொண்டு நிலத்தை விருத்தி செய்து அதிகபலனடையும் பட்சத்தில் மாகூல் அதிகமான காரணத்தாலாவது அல்லது சாகுபடியினுடைய மாறுதலை யிட்டாவது நிலச்சுவான்தார் அந்த நிலத்திற்கு அதிகமான தீர்வை விதிக்கக் கூடாதென்றும் அவ்வித சந்தர்ப்பத்தில் அதிகத் தீர்வை விதிக்கலாமென்ற வழமை அல்லது ஒப்பந்தமிருந்தபோதிலும் அவ்வழமையும் ஒப்பந்தமும் செல்லத்தகாதென்றும் சட்டவிதி ஏற்பட்டிருக்கை. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வருமுன் ஒரு ரயட்டானவன் தன் சுவாதீனத்திலிருக்கும் நிலத்தை சொந்தச் செலவு செய்து அபிவிர்த்தி செய்து சுவான்தாரனுக்கு அவ்வித சந்தர்ப்பத்தில் அதிகத்தீர்வை செலுத்துவதாய் டை ஆக்ட் நமோதுக்கு வருமுன் ஒப்புக்கொண்டிருக்கும் பட்சத்தில் டை ஆக்டின் 13-(3)-வது பிரிவின் சிலாக்கியத்தைப் பாராட்டாமல் அதிகத்தீர்வை விதிக்கப்பட்டால் செலுத்தக் கடமைப் பட்டவனாகிறானென்று ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாகவும் மாறுன அபிப்பிராயங் கொடுத்த ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானத்திற்கு விரோதமாயும் ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள் தீர்மானங் கொடுத்தார்கள். ஆகவே ஆக்டுக்கு முன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி ஆக்டுக்கு முன்பென்பண்டு சொந்த செலவு செய்து நிலத்தை விருத்தி பண்ணினலும் அதிகத் தீர்வை செலுத்தக்கடவனென்று ஏற்பட்டது. (27 M.L.J. 38).

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S.A. 2106 of 1913—28 அக்டோபர் 1914

ஒரு வெற்றுக்கடுதாசியில் (ஸ்டாம்பில்லாத காகிதத்தில்) உயிலென்ற பெயரிட்டெழுதின தஸ்தவேஜில் சாஸன கர்த்தாவின் சொததுக்கள் உயிலில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு சாஸன கர்த்தாவின் மரணத்திற்குப் பின் செல்லவேண்டுமென்று கண்டிருந்தது. ஆனல் அம்மட்டும் சாஸன கர்த்தாவுக்கு ஜீவதசை வரையில் அதை அனுபவிக்கிற பாத்தியதைமட்டும் தான் உண்டென்ற கருத்து டை தஸ்தவேஜில் துலங்க வில்லை. இப்பேர்ப்பட்ட தஸ்தவேஜானது சாஸன கர்த்தா தன்னிஷ்டம் போல் ரத்தாகக்கூடிய உயில் சாஸனமென்று சொல்லப்படவேண்டுமே யொழிய அதை ஒரு ஸெட்டில்மெண்டு பத்திரமென்றும் அதைப்பின்னல் மாற்றக்கூடாதென்றும அதில் கண்ட சொத்துக்களில் சாஸனகர்த்தாவுக்கு ஜீவதசைமட்டும் அனுபவிக்கும் பாத்தியதை மட்டும் உண்டென்றும் சொல்லத்தகாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு உயில் சாஸன கர்த்தாவின் மரணத்திற்குப் பின் தான் பிரயோகிக்கத் தருந்ததஸ்தவேஜாகும். மரணத்திற்குமுன் எக்காலத்திலும் உயிலை ரத்து செய்துவிடலாம்.



ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்கள் கொடுத்த அபிப்பிராயத்தில்:— "ஹிந்துக்கள் உயில் எழுதிவைக்கிறதறகுக் காரணமாக தற்சமயத்தில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களையும் பின்னல் ஏற்படவேண்டிய சம்பவங்களையும் எடுத்துரைப்பது வழக்கமுண்டு. உயிலில் உரைக்கப்பட்ட சம்பவங்கள் நடந்தேறின காரணத்தால் உயில் பிறக்காவிடில் சொத்தை அடையத்தக்க அடுத்த பாத்தியஸ்தனுக்கு விரோதமாக டை உயில் ரத்தாகத் தக்கதல்லவென்று சொல்லக்கூடாதென்று" சொன்னர்கள். அதாவது உயில்கண்ட ஷரத்தின்படி ஒருவன் யாதொருகாரியத்தை நடத்ததினல் சொத்து பாத்தியதை உண்டாகுமென்று ஏற்பட்டிருக்க அந்தக்காரியத்தை டை யான் முடிவிட்டதாகச் சொலலி உயிலை ரத்தாக்கத்தகாதென்று வாதிக்கக் கூடாதென்பதேயாம். உயிலை எப்பொழுதும் சாஸனகர்த்தா ரத்தாக்கலாம்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் கொடுத்த அபிப்பிராயத்தில்:— "ஒருவன் உயிலில் கண்டஷரத்துப்படிநடந்தமையால் சாஸனகர்த்தா டை உயிலில் ஏற்பட்டநன்மையை டை யானுக்கு உறுதியாக வாக்களித்து விட்டாரென்றசொல்லி அந்த உயிலை டை யார் மாற்றக்கூடாதென்று வாதிக்கக் கூடாதென்று" சொன்னர்கள். 19 மதராஸ் லாஜர்னல் 106-ஐப் பார்க்கவும்:—(27 M.L.J. 37)

---

ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்

C.R.P. 998 of 1912—27 அக்டோபர் 1914

எஜமானிடம் பவர்பெற்ற எஜண்டொருவன் எஜமானுக்காக பத்து வழி செய்து வந்ததில் அதாவது கடனுக்கு சரக்கு வாங்கி வந்ததில் ஏற்படும் பாக்கித்துகைக்கு யாதொரு வட்டித்துகையும் சேர்த்துக் கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது 1-கல்கத்தா லாஜர்னல் 199-ஐப்பார்க்கவும். கடனுக்கு சரக்குப்பிடிக்கிற எஜண்டு வட்டி தருவதாய் ஒப்புக்கொண்டால் எஜமான் வட்டிக்குக் கட்டுப்படுகிறனென்று தீர்மானிக்கப்பட்டது. (1914) M.W.N 225.

———:(0):———

C.R.P. 853 of 1913 —30 அக்டோபர் 1914

ஸ்மால் காஸ் நம்பர்களை பைசல் செய்ய அதிகாரம் பெற்ற ஒரு டிஸ்ரிக்ட் முன்சிப் அவர்கள் ஒரு ஸ்மால்காஸ் நம்பரை அசல் வியாஜ்ஜியமாக எடுத்துக்கொண்டு விசாரணை செய்து தீர்மானம் கொடுத்தாலும் அந்தத் தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் விண்ணப்பம் கொடுக்கலாமே யொழிய ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. டி-மு-கோர்ட்டார் தப்பான முறையாக நடக்கும்விஷயத்தில் ஹைகோர்ட்டார் யாதொரு பார்ட்டியின்விண்ணப்ப மில்லாமலே ரிவிஷனில் பிரவேசித்து டி-மு கோர்ட்டாருடையநடவடிக்கையை மாற்றலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 33 மதராஸ் 323, 20 M.L.J. 722 இவைகளைப் பார்க்கவும். (1914). M.W.N. 223

———(0)———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

S. A. 162 of 1911—3 நவம்பர் 1914

ஜீவதசைமட்டும் சொத்தை அனுபவிக்க பாத்தியதையுடையவரிடத்திலிருந்து டை பாத்தியதையை மட்டும் விக்கிறயம் பெற்றவர் கிறயம் செய்தவர் இறந்தபின் ஒத்திக்கடனைத் தீர்த்து சொத்தை ஒத்திதாரனிடமிருந்து தன்வசப்படுத்திக் கொள்ள நியாயமில்லையென்றும் கிறயம் செய்தவர் மறித்த காலத்தில் ஒத்திதாரனிடமுள்ள வட்டி துகைக்கு மேல் நிற்கும் வருமானத்திற்குமட்டும் கிறயம் பெற்ற வாதி பாத்தியமுடையவ ராகுமென்றும் கேவலம் ஜப்திசெய்த காரணத்தால் ஜப்தியான சொத்தில்யாதொரு பாத்தியதையும் ஏற்பட நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. (1914) M.W.N. 226.

———(0)———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் of ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 135 of 1913—4 நவம்பர் 1914

பிரதிவாதி தன்னுடைய சகோதரனல்லவென்று ஒரு டிக்ளரேஷன் தாவா கொண்டுவரலாமென்று தீர்மானிக்கப்பட்டது. (1914 M.W.N. 226).

———(0)———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்
S. A. 1566 of 1913—6 நவம்பர் 1914.

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 151-வது பிரிவின்படி ஒரு ரயட்டானவன் தான் அனுபவிக்கும் நிலம் முழுவதையும் சாகுபடிக்கு லாயக்கில்லாமல் கெடுத்து விட்டால் மட்டும் அவனை நிலச்சுவான்தார் இஜெக்ட் செய்யலாம், அவன் பேரில் இஞ்சங்கிஷன் தாவா செய்யலாம்; அல்லது நஷ்டத்தை கட்டிக் கொடுக்கும்படியும் நிலத்தைச்சீர் திருத்தும்படியும் கட்டாயப்படுத்தலாமே யொழிய ஒரு ரயட்டினுடைய அனுபோகத்திலிருக்கிற நிலத்தின் ஒரு பாகம் மட்டும் கெட்டுப்போனால் அவன் பேரில் மேற்கண்ட விதமான பரிகாரங்கள் தேடக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (1914 M.W.N. 226).

———(0)———

S.A. 902 of 1913—6 நவம்பர் 1914.

ஒரு டிரஸ்டியானவன் தர்மசொத்தை சாசுவதமான குத்தகைக்கு ஒப்படைக்கக்கூடாதென்றும் முந்திய தர்ம கர்த்தாக்கள் அவ்விதமான சாசுவத குத்தகைக்கு ஒப்படைத்து வந்திருக்கிற காரணத்தைக் கொண்டு அதை சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க வழக்கமல்லவென்றும் குத்தகைக்குசொத்தை அனுபவிக்கிறவன் சொத்தில் யாதொரு விருத்திபம்சம் செய்திருந்தால் அதற்காக ஏற்பட்ட செலவை ப்ராபர்டி ஆக்ட் 51-வது பிரிவின்படி நிலச்சுவான்தாரனிடம் அடைய லாயக்குள்ளவனல்ல வென்றும் தீர்மானிக்கப்பட்டது. (1914 M.W.N. 226.)

———(0)———

ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ
L.P.A 21 of 1914—28 அக்டோபர் 1914.

ஒரு கோவில் தர்மகர்த்தா கடன்வாங்கிகோவில் செலவுக்காக அத்துகையை உபயோகப்படுத்தினதில்வியவகாரம் ஏற்பட்டு அக்கடன் வாங்க அவசியமே கிடையாதென்று ருஜுவானபிறகு அக்கடன் துகைக்குக் கோவில் சொத்துக்கள் பிணையாகாத போதிலும் தர்ம கர்த்தாவின் பேரில் ஆளைப் பொருத்து டிக்கிரீயளிக்க நியாய முண்டென்று தீர்மானிக்கப்பட்டது. 1914. (M.W.N. 214.)

———(0)———

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் &
ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்
14 அக்டோபர் 1914.

ஒருடிக்கிரீ தன்னைக்கட்டுப்படுத்தாதென்றும் அந்த டிக்கிரீ பாக்கிக்குத் தன் சொத்துக்கள் தொடரத்தக்க தல்லவென்றும் வாதி கொடுத்த டிக்லேரேஷன் பிராதுக்கு வாதி தன் இஷ்டம்போல் மதிப்பிட்டு பவுண்டு கட்டலாமென்றும் ஏனெனில் வாதி கேட்கிற டிக்லேரேஷனை யனுஸரித்து முடிவான பரிகாரமும் வாதிக்களிக்கப்படும் டிக்கிரீயிலேயே ஏற்படுகிறதென்றும் ஆகவே இத்தகைய பிராதை டிக்லேரேஷன் தாவாவென்று மட்டும் மதித்து குறித்த ஸ்டாம்பு டியூடி செலுத்தவேண்டிய தில்லையென்று தீர்மானிக்கப் பட்டது. (1914. M.W.N. 218).

———(0)———

## மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

புல் பெஞ்சு கேஸ்.
சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் எய்லிங் &
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.
(தென் மலையாளம் ஜில்லா.)
C.R.P. 186 of 1913—22nd செப்டம்பர் 1914.
கோவிந்தன் நாயர் vs. நாணு மேனன்.

ஒரு தர்வாடின் கார்ணவனாகிய நாகப்ப மேனன் என்றவர் கார்ணவன் என்ற நிலைமையில் அதாவது குடும்ப மானேஜர் என்ற ஸ்தானத்தில் செலுத்த வேண்டிய கடனுக்காக ஏற்பட்ட டிக்கிரீயை நிறைவேற்றும்பொருட்டு பிடி வாரண்டு பிறந்து ஜெயிலுக்கனுப்பபடவேண்டிய சமயத்தில் வேலப்ப மேனன் என்றவருக்கு ஒரு பிராமிஸரி நோட் எழுதிக்கொடுத்து நோட்துகை ரூ. 210-யும் மறுதினத்தில் கோர்ட்டில் செலுத்திவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் ஷை வாரண்டில் கண்ட துகை செலுத்தப்பட்டு டிக்ரீ பாக்கியானது தீர்ந்து போய்விட்டது. பிராமிஸரி நோட்டில் தான் தர்வாடின் கார்ணவன் என்றும் மானேஜர் என்றும் மேலேகண்டெழுதியும் கையொப்பம் செய்த இடத்தில் தன் பெயரை மட்டும் குறித்து எழுதி யிருந்தார்.



ஷை நோட்டை யேடோவர் வாங்கி யிருந்த வாதி நாகப்ப மேனன் காலஞ்சென்றபின் தர்வாடின் கார்ணவன் ஸ்தானத்திற்கு வந்திருந்த நாநாமேனன் என்றவர்பேரில் நோட்டில்கண்டதுகையை வசூலிக்கும் பொருட்டு பிரதிவாதியின்பேரில் ஆளைப் பொருத்தும் ஷை தர்வாடின் சொத்தைப்பொருத்தும் டிக்கிரி யடையும்பொருட்டு பாலக்காடு சப்-கோர்டில் தாவா செய்ததில் காலஞ்சென்ற கார்ணவனாகிய நாகப்ப மேனனுடைய சொத்துக்கள் ஏதேனும் பிரதிவாதியின் வசமிருந்தால் அதைப் பொருத்துமட்டும் டிக்கிரீ யளித்து தர்வாடின் சொத்துக்கள் தாவாநோட்டுக் கடனுக்கு பாத்தியப்பட்டதல்லவென்று தீர்மானித்தார்கள். வாதி அதன்பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் வாதியின் விவாதத்தை தீர்மானிக்கும்பொருட்டு புல் பெஞ்சுக்கு ரிபர் செய்தார். புல் பெஞ்சு தீர்மானத்தில் ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாகி சப்-கோர்ட் தீர்ப்புக் காயமாச்சுது. அதற்குக் காரணமாக வாதி இந்த தாவாவைகாலஞ்சென்ற கார்னவன் எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டின்பேரில் செய்தாரே யொழிய முந்திய வியாஜ்ஜிய மூலமாகிய குடும்பக் கடனுக்காகஏற்பட்டிருந்த டிக்கிரீபாக்கியைத் தான்செலுத்தினதாகவும் அந்தத்துகையை அடைய வேண்டுமென்றும் கோறிக்கொள்ளாத படியால் குடும்ப சொத்துக்களின்பேரில் வாதிக்குப் பரிகாரம் ஏற்படநியாயமில்லையென்றும் நோட்டை எழுதிக்கொடுத்தவருக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரதிவாதியினிடமிருந்தால் அதன் பேரில் தொடர்ந்து நோட் பாக்கியை வசூலிக்க வேண்டுமென்றும் தீர்மானித்து மேற்கண்ட விதமாய்ப் பைசல் செய்தார்கள். 23 மதராஸ் 597-ல் ஏற்பட்டிருக்கிற நியாயம் இந்தக்கேஸுக்கு உதவக்கூடியதல்லவென்று சொல்லப்பட்டது. XXVII. M. L. J 595.

———...———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.
கோயமுத்தூர் ஜில்லா.
Crl. M. P. 344 of 1914—27 ஆகஸ்ட் 1914.
கோயமுத்தூர் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள்-
மனுதார்.

ஈரோட் சப்மாஜிஸ்டிரேடார் அவர்கள் ஒரு எதிரியை கொலை, கலகம், கொடுந்துன்பம், துராகிருதப் பிரவேசம் ஆகிய நான்குவிதமான குற்றங்களுக்காக பிரதம விஜாரணை செய்து கொலை, கொடுந்துன்பம் ஆகிய குற்றங்களைப்பற்றி ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் மட்டும் விசாரணை செய்து பைசலளிக்கலாமாகையால் எல்லாவிதமான குற்றங்களுக்காகவும் எதிரியின்பேரில் குற்றம் ஏற்படுவதாய் அபிப்பிராயப்பட்டு எதிரியை ஸெஷனுக்குக் கமிட் செய்தார். ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் கமிட்டான கேஸின் ரிகார்டுகளைப் பரிசீலனை செய்து கொலை, கொடுந்துன்பம் ஆகிய குற்றங்களை ஸ்தாபிக்கத்தக்க ருஜுவாகம் தெளிவாய் ஏற்படவில்லையென்று கண்டு தவிர கொலைக் குற்றத்தைப்பற்றி போலீஸார் இன்னும் துப்பறிய நியாயமிருக்கிறதென்றும் உண்மையைதீர விஜாரிக்க வேண்டிய நியாய மிருக்கிறதென்றும் ஆகவே மாஜிஸ்டிரேட்டார் ரிகார்ட்டு செய்திருக்கிற ருஜு அம்ஸங்களைக்கொண்டு ஸெஷனில் விஜாரணை செய்யும்பக்ஷத்தில் எதிரி கொலைக்குற்றத்தைப் பற்றினமட்டில் விடுதலை யடைய வேண்டியதாகுமென்றும் அப்படிக்கானால் போலீஸார் பின்னும் கொலையின் உண்மையைப்பற்றி விஜாரித்தறிய ஏதுகாம் உண்டாகாதென்றும் சொல்லி மாஜிஸ்டிரேட்டார் எதிரியைக் கமிட்செய்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்று ஹைகோர்ட்டாருக்கு கிரி. பு. கோ. 215-வது பிரிவின்படி ரிபர் செய்து கேட்டுக்கொண்டார்கள். ஹைகோர்ட்டார் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களின் கோறிக்கையின்படி கமிட்செய்தஉத்தரவை ரத்து செய்யத்தகாதென்று தீர்மானித்த உத்தரவின் சுருக்கமாவது:—

கமிட் செய்த உத்தரவை மாற்றுவதற்கு சட்டபாயிண்டு ஏற்பட வேண்டியதவசியமாகும். சின்னகவுண்டன் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லியும் அவன் மாண்டுபோனதாகவும் அல்லது கொடுந்துன்பமடைந்ததாகவும் ருஜு அம்சமே கிடையா

தென்று ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் சொல்லுகிருர். மற்ற குற்றங்களை மாஜிஸ்டிரேடாரே விஜாரித்துப் பைசல் செய்யலாம். எதிரியை குறைவான சாட்சியத்தால் விடுதலை செய்தால் மறுபடியும் கொலையின் உண்மையைப்பற்றி போலீஸார் துப்பறியும் பட்சத்தில் மறுபடியும் எதிரியைக் கொலைக்காகச் சார்ஜி செய்ய இடமிராதென்ற காரணத்தால் கமிட்டான உத்தரவை ரத்துசெய்யும்படி ஹைகோர்ட்டார் உத்தரவளிப்பது நியாயமல்ல. ருஜூ அம்சம் குறைவாயிருந்தால் எதிரியை விடுதலை செய்யவேண்டியது நியாயமாகும். 6 அலகபாத் 98-ல் சொல்லப்பட்ட நியாயத்தை அனுசரிக்கத்தகுந்ததல்ல. 13 பம்பாய் 209-ல் ஏற்பட்டிருக்கும் தீர்மானத்தை அனுசரித்து கமிட் செய்த உத்தரவை மாற்றத்தகாதென்று தீர்மானிக்க வேண்டும். XXVII. M.L.J. 593.

———...———

ஜஸ்டிஸ் ஏப்லிங் & ஜஸ்டிஸ் டைபாப்ஜீ,

(கோதாவரி ஜில்லா)

Crl R. Cases 106 & 151 of 1914

25 ஆகஸ்ட் 1914.

ஸ்ரீராமுலு vs. வீரேசலிங்கம்.

ராஜமஹேந்திரபுரத்தில் மிஸ்டர் பார்ட்ஸ்வெல என்ற ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாரவர்கள் ஒரு அவதாருக்கேஸை விஜாரணை செய்து எதிரியின் பேரில் குற்றப்பத்திரிகையும் வாசித்தபிறகு மாற்றப்பட்டுப் போகவே அவருக்குப்பின் வந்த மிஸ்டர் ஸ்டூவார்ட் துரையவர்கள் கிரி. பு. கோட் 350-வது பிரிவில் கண்ட சட்ட விதியை அனுஸரித்து கேஸை புனர் விஜாரணை செய்து 253-வது பிரிவின்படி எதிரியை டிஸ்சார்ஜ் செய்தார். அதன் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேடாரவர்கள் 437-வது பிரிவின்படி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் எதிரியை டிஸ்சார்ஜ் செய்தது பிசகென்று சொல்லி மறுவிஜாரணைக்கு உத்தரவளித்தார்கள். அதாவது எதிரியைக் குற்றவாளியென்று தீர்மானிக்கவேண்டிய நியாயமிருக்க டிஸ்சார்ஜ் செய்தது பிசகென்று சொல்லி மறுவிசாரணையின்பேரில் ஆலோசனை செய்து கேஸைத்தீர்மானிக்க வேண்டுமென்று ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு உத்தரவளித்தார்கள்.

எதிரி அதன் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் மறு விஜாரணைக்கு உத்தரவளிக்க அதிகாரமில்லையென்று சொல்லி அதாவது ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் எதிரியை 253-வது பிரிவின்படி டிஸ்சார்ஜி செய்தபோதிலும் முந்திய மாஜிஸ்டிரேட்டார் எதிரியின் பேரில் குற்றப்பத்திரிகை வாசித்திருந்தமையால் சட்டப்படி பிந்திய மாஜிஸ்டிரேட்டார் செய்த உத்தரவானது 258-வது பிரிவின்படி பிறந்த விடுதலை உத்தரவாக மதிக்கப்படவேண்டுமென்றும் அவ்வித விடுதலை உத்தரவின் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் பிரவேசிக்க நியாயமில்லையென்றும் சொல்லி அந்த மறு விஜாரணை உத்தரவை ரத்து செய்யும் பொருட்டு ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்தார். ஹைகோர்ட்டார் மறுவிஜாரணை உத்தரவை ரத்து செய்த தீர்மானத்தில் கண்ட நியாயச் சுருக்கமாவது:—

ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டார் எதிரியை விடுதலை செய்த உத்தரவானது 258-வது பிரிவின்படி ஏற்பட்டதானுல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு அதன் பேரில் பிரவேசிக்க நியாயமில்லை. மிஸ்டர் ஸ்டூவார்ட் துரையவர்கள் 350-வது பிரிவின்படி புனர் விஜாரணை செய்யத் தொடங்கும்பொழுது முந்திய மாஜிஸ்டிரேட்டார் குற்றபத்திரிகை படித்துவிட்டு மாற்றிப் போனபடியால் அந்த குற்றப் பத்திரிகையை ரத்து செய்துவிட்டு நவீனமாய் கேஸை விஜாரித்தார் என்று சொல்லலாமாவென்று கவனித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பாயிண்டு விஷயமாய் மதராஸ் ஹைகோர்ட்டாருடைய தீர்மான அபிப்பிராயம் யாதொன்றும் காணப்படவில்லை. மற்ற ஹைகோர்ட்டாரும் நேரான அபிப்பிராயம் கொடுக்கவில்லை. ஆனுல் (1903) 38 P. R. Cr. P. 35-ல் பஞ்சாப் சீவ் கோர்ட்டார் இதேவிதமான சந்தர்ப்பத்தில் முந்திய மாஜிஸ்டிரேட்டார் படித்த குற்றப்பத்திரிகை நமோதிலிருக்கிறதாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும் புனர்விஜாரணையில்விடுதலையான எதிரி டிஸ்சார்ஜ் ஆனதாக பாவிக்கத்தகாதென்றும் குற்றம் படிக்கப்பட்டபின் விடுதலையானவனென்றும் ஆகவே அதற்குப்பின் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் பிரவேசித்தது மறுவிஜாரணைக்கு உத்தரவளிக்க நியாயமில்லையென்றும் தீர்மானித்திருக்கிருர்கள். 350-வது பிரிவில் தெளிவான வசனங்கள்



ஏற்படவில்லை. இரண்டாவது மாஜிஸ்டிரேட்டார் முந்தி ஏற்பட்ட ருஜூபாகத்தை ஆதாரமாகக்கொண்டு மேல் விஜாராணை நடத்தலாம்: அல்லது யுக்தமானுல் மறுபடியும் எல்லா சாட்சிகளையும் விஜாரணை செய்து பைசலளிக்கலாம். ஆனுல் புனர் விஜாரணை செய்தால் எதிரிமுன் விஜாரிக்கப்பட்டயாதொரு சாட்சியைத் திரும்ப விஜாரிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தலாமென்று டை 350-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. தவிறவும் எதிரிக்கு புனர் விஜாரணை நடந்த காரணத்தால் யாதொரு கெடுதியும் நீதிக்குறைவும் நேரிட்டதாகத் தோற்றமிடத்து டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரும் ஹைகோர்ட்டாரும் பிரவேசித்து எதிரிக்கு ஏற்படும் தண்டனையை மாற்றி விடலாமென்றும் டை சட்டப் பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய விதிமுறைகளால் முந்திய மாஜிஸ்டிரேட்டார் படித்த குற்றப்பத்திரிகை ரத்தானதாக பாவிக்க நியாயமாகாது. புது மாஜிஸ்டிரேட்டார் முந்திய நடவடிக்கையின் நிலமையை மாற்றலாமென்று சொல்லத்தகாது. பிரதம விஜாரணையாகி குற்றப்பத்திரிகை படிக்கப்பட்டபின் கேஸானது அயன் விஜாரணையாக மாறிப் போய்விடுகிறது. அச்சமயத்தில் வேறொரு மாஜிஸ்டிரேட்டார் நடவடிக்கை நடத்துவதானுல் அயன் விஜாரணையை நடத்துவதாகவே பாவிக்க வேண்டும். அதாவது குற்றப்பத்திரிகை நமோதிலிருப்பதாகவே சொல்லவேண்டும். அதாவது பிந்திய நடவடிக்கையில் விடுதலையானவன் 253-வது பிரிவின்படி டிஸ்சார்ஜ ஆனவனல்ல, ஆனுல் 258-வது பிரிவின்படி விடுதலையானதாக பாவிக்கப்படவேண்டும், வாரண்ட் கேஸில் சார்ஜ்படிக்கு மட்டும் பிரதம விஜாரணை என்றும் அதன் பின் அயன் விஜாரணையாகுமென்றும் மதராஸ்ஹைகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிருர்கள். 32 மதராஸ் 218, 32 மதராஸ் 220 இவைகளைப் பார்க்கவும். ஆகவே சார்ஜ் படிக்கப்படுமுன் வேறு மாஜிஸ்டிரேட்டார் கேஸை விஜாரித்தால் அதுவும் பிரதம விஜாரணையென்று சொல்லப்படவேண்டும். அயன்விஜாரணையாக மாறிப்போன நடவடிக்கை அயன்விஜாரணையாகவே ஏற்பட்டு பின்னுல் ஏற்படும் பைசல் (விடுதலை உத்தரவு) 258-வது பிரிவின்படி ஏற்பட்டதென்று சொல்லப்படவேண்டும். முந்திய மாஜிஸ்டிரேட்டார் படித்த குற்றப் பத்திரிகையை பிந்திய மாஜிஸ்டிரேட்டார் அவமதிக்கவும் மறக்கவும் கூடாது. அவர் முந்திய மாஜிஸ்டிரேட்டின் நிலமையை தரித்தவராகவே பாவிக்கப்படவேண்டும். அதாவது பிந்திய மாஜிஸ்டிரேட் அக்குற்றப் பத்திரிகையைப் படித்து மேல் விஜாரணை நடத்தினதாகச் சொல்லவேண்டும். ஒரே மாஜிஸ்டிரேட் கேஸை விஜாரிக்கும் சமயத்தில் குற்றப்பத்திரிகை வாசித்தபின் எதிரி கோறிக் கொண்டால் வாதி தரப்பு சாட்சிகளை திரும்பவும் விஜாரிக்க வேண்டிய கடமையாகும். அப்படி விஜாரித்து குற்றப்பத்திரிகைப் படித்தது நியாயமல்லவென்று ஏற்பட்டால் எதிரி விடுதலையாகலாம். ஆனுல் பிரதம விஜாரணை என்ற நிலமையானது ஒரு மாஜிஸ்டிரேட்டிடமிருந்து வேறு ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு மாறிப் போகும் பட்சத்தில் பிந்திய மாஜிஸ்டிரேட்டார் போலீஸாருக்கு ரிபர் செய்து கேஸின் தகவலைப் பரிசீலனை செய்து ரிபோர்ட் அனுப்பும்படி உத்தரவளிக்கலாமென்று சொல்லத் தகாது. 350-வது பிரிவின்படி பிந்திய மாஜிஸ்டிரேட் மறுவிஜாரணை செய்யத் தொடங்கினுலும் அவருக்கு பிரதம விஜாரணையின் நிலமை உண்டானபோதிலும் போலீஸ் ரிபோர்ட்டுக்காக அனுப்பும் அதிகாரம் ஏற்படாதென்று 9 மதராஸ் 28உல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயத்தில் நியாயத்தைப்பற்றி பலமாய் வாதிக்கத் தேவையில்லை. எவ்விதத்திலும் யாதொரு நிலமையை அடைந்திருக்கும் கேஸை வேறொரு மாஜிஸ்டிரேட்டார் எடுத்து நடத்த நேரிட்டால் எந்த நிலமையில் அது நின்றதோ அதே நிலமை மாறத்தக்கதல்ல. ஆகையால் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்ட பின் தாவா கேஸுக்கு ஏற்பட்ட நிலமையானது மிஸ்டர் ஸ்டூவார்ட் துரையவர்கள் புனர்விஜாரணை நடத்தும்பொழுது மாறிப்போகவில்லையென்று சொல்லவேண்டும். எதிரியின் விடுதலை உத்தர்வானது குற்றப்பத்திரிகை படிக்கப்பட்டபின் ஏற்பட்டதாக பாவிக்கப்பட்டு அதன் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் 437-வது பிரிவின்படி மறு விஜாரணைக்கு உத்தரவளிக்க சட்டமில்லையென்று சொல்லப்பட்டு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவு ரத்தாச்சுது. XXVII. M.L.J. 589.

———•———

### ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்.

(சேலம் ஜில்லா)

Crl. R. Case. No. 295 of 1914

12 அக்டோபர் 1914

சிதம்பரகுருக்கள் vs. செங்கோட கவுண்டன்.

சிதம்பரகுருக்கள் என்றமனுதார் தான் நத்தி, வெள்ளாழ கவுண்டர்களுக்கு குருவா யிருப்பதால் ஷை ஜாதியாருக்குச் சொந்தமான சேலம் சின்னம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் செய்ய லாயக்குள்ளவ னென்றும் எதிர் மனுதார்கள் ஷை சடங்குகளை அந்நியனைக்கொண்டு மாமூலுக்கு விரோதமாய் செய்து முடிக்க எற்பாடு செய்கிறதாயும் கலகம் உண்டாககத்தக்க தகரார் நடக்கிறதாயும் ஆகவே எதிர்மனுதார்கள் ஷை கோவிலுக்குள் பிரவேசித்து கும்பாபிஷேக சடங்குகளைச் செய்ய விடாமல் தடுக்கும்படி உத்தரவளிக்க வேண்டுமென்றும் சேலம் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாரிடம் விண்ணப்பம் கொடுத்ததில் மாஜிஸ்டிரார் மனுதாருடைய பாத்தியதையை சரியானபடி ருஜுப்படுத்தவில்லை யென்றும் அவருடைய பாத்தியதையை வில்வில் கோர்ட் மூலமாய் ஸ்தாபிக்கு மட்டும் மனுதார் அவ்வித சடங்குகளை நடத்தக்கூடாதென்றும் கட்டளை யிட்டார்கள்.

அதன்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்ததில் முக்கியமாய் மூன்று கிரௌண்டுகளை எடுத்துச்சொல்லி வாதம்செய்தார் அவையாவன:—

(1) ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் கிரி-பு-கோ 147-வது பிரிவின்படி செய்த உத்தரவு சட்டவிரோத மென்றும் அதாவது மனுதாருடைய பாத்தியதைப்பற்றிய விவாதம் 147-வது பிரிவிலடங்கியதல்ல வென்றும் ஆகவே ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாருக்கு மேற் கூறிய உத்தரவளிக்க அதிகாரவரம்பில்லையென்றும்;

(2) சமாதானக் குறைவும் கலகமும் நேரிடக்கூடுமென்று மாஜிஸ்டிரேட்டார் தீர்மான முடிவு சொல்லாமல் மேற்கூறிய உத்தரவளித்தது ஒழுங்கீன மென்றும்;

(3) மனுதாருடைய பாத்தியதையைப்பற்றி வில்வில் கோர்ட்டார் யாதொரு தீர்மானம் கொடுக்கலாயக்கில்லாதிருக்க மனுதாரைத் தன்னுடைய பாத்தியதையைப் பற்றி வில்வில் கோர்ட்டில் ஸ்தாபித்துக் கொள்ளும்படி உத்தரவளித்ததும் சட்டவிரோதமென்றும் அவ்விதமாய் ஸ்தாபிக்கு மட்டும் தன்னுடைய பாத்தியதையை அனுசரித்து கும்பாபிஷேகம் நடத்தக்கூடாதென்று மாஜிஸ்டிரேட்டார் உத்தரவளித்தது பிசகென்றும்;

ஆக மூன்றுவித நியாயங்களைச் சொல்லி வாதித்ததில் ஹைகோர்ட்டார் ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்ததில் சொன்ன முக்கிய காரணங்களாவன:—

முதலாவது பாயிண்டைப்பற்றி கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானங்களும் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களும் ஒன்றுக் கொன்று வித்தியாஸமாய் எற்பட்டிருக்கின்றன. 37-கல்கத்தா 578-38-கல்கத்தா 387-இவைகளில் ஒரு கோவிலில் பூஜாரியாக நடந்து வரும் பாத்தியதையானது கிரி-பு-கோ-147-வது பிரிவிலடங்கிய அம்சமல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் ஹைகோர்ட்டிலே அதாவது 29-மதராஸ் 237, 11-மதராஸ் 323 இவைகளில் ஒரு பள்ளிவாசலில் காஜியாக உத்தியோகம் செய்துவரும் பாத்தியதையைப் பற்றிய விவாதம் 147-வது பிரிவில் அடங்கிய அம்சமாகுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கேஸில் கும்பாபிஷேகம் நடத்தும் பாத்தியதைக்கும் மேற்கூறிய மதராஸ் கேஸில் சொல்லப்பட்டிருக்கிற பாத்தியதைக்கும் வித்தியாஸமிருப்பதாகச்சொல்லக்கூடாது. தவிற மதராஸ் தீர்மானத்தை அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கவேண்டும்.

இரண்டாவது பாயிண்டைப்பற்றி யோஜிக்குங்கால் மனுதார் தன்னுடைய விண்ணப்பத்திலும் வாக்குமூலத்திலும் கலகத்திற்கு ஆஸ்பதமான தகரார் எற்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். மாஜிஸ்டிரேட்டார் செய்த உத்தரவில் கலகம் நேரிடக்கூடியதாகஸ் பஷ்டமானவசனங்களால் சொல்லாத போதிலும் எல்லாபார்டிகளும் அவ்வித சம்பவம் நேரிடுமென்று பயந்திருந்ததாகவே தோன்றுகிறது. 2-கல்கத்தா வாரக்குறிப்புகளின் 670-ல் 147-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார்



செய்யும்உத்தரவில் தன்னுடைய அபிப்பிராயத்தில் கலகம் நேரிடும்என்று சந்தேகப்பட்டதாக யாதொரு வசனத்தை ரிகார்டு செய்யவேண்டிய கட்டாயமில்லையென்றும் 147-வது பிரிவில்அவ்வித ரிகார்ட் செய்யும்படி விதிக்கப்பட வில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக்காரணத்தால் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவுபிசகென்று சொல்லத்தகாது.

மூன்ருவதாக மனுதாரின் பாத்தியதையானது ஒரு மதசம்பந்தமான சடங்கா சாரத்தைப் பற்றியதென்றும் ஒரு தேவாலயத்தை யாதொரு குறித்த விஷயத்திற்காக உபயோகப்படுத்தி அதையிட்டு சில வருமானங்களை அடையத்தக்க பாத்தியதையல்லவென்றும் தீர்மானித்து ஆகவே மனுதாரின் பாத்தியதை வில்வில் கோர்ட்டாருடைய அதிகாரவரம்புக்குள்ளடங்கிய தல்லவென்றும் தீர்மானிக்கிறதற்குத்தக்க அம்சங்கள் யாதொன்றும் இந்தக் கேஸின் ரிகார்டுகளில் புலப்படவில்லை. ஆகவே மனுதாரின் ஆக்ஷேபனைகள் யாவற்றும் பயனற்றதாகும். மாஜிஸ்டிரேட்டார் செலவுதுகை விஷயமாய் செய்த உத்தரவைப்பற்றி பிரவேசிக்கக்காரணமில்லை ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது. XXVII. M. L J. 587.

---

### ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.

(கர்நூல் ஜில்லா)

Crl. M. P. 178 ot 1914—16 செப்டம்பர் 1914

ராமிரெட்டி vs பப்ளிக்ப்ராஸிகியூடர்

கர்நூல் ஜில்லாவில் ராமிரெட்டி என்ற மனுதார் சப்மாஜிஸ்டிரேட்டா ரவர்களுக்கும் ஒருபோலீஸ் ஆபிஸருக்கும இரண்டு ரிபோர்ட்டுகளை எழுதியனுப்பியதில் அந்த ரிபோர்டின் பேரில் சப்மாஜிஸ்டிரேட்டார் பிரதம விஜாரணை செய்து கிரி. பு. கோ 164-வது பிரிவின்படி மனுதாரனிடம் பிரமாண வாக்குமூலம் எழுதிவாங்கினர் ரிபோர்டில் கண்ட நபர்கள் பேரில் கிரிமினல் நடவடிக்கைகள் நடந்து கேஸ் ஸெஷனுக்குக்கமிட்டாகிஸெஷன் விஜாரணையில் மனுதாரை இ.பி. கோ 182, 193 வது பிரிவுகளின்படி பிராஸிகியூஷன் செய்யும்படி ஜட்ஜியவர்கள் சாங்கிஷன் அனுமதி கொடுத்தார்கள். அதாவது மனுதார் சப் மாஜிஸ்டிரேட்டுக்கும் போலீஸாருக்கும் அனுப்பிய ரிபோர்ட்டுகள் பொய்யான ரிபோர்டுகளென்று ஸெஷன் விஜாரணையில் எற்பட்டு அதற்காக 182-வது பிரிவின்படிபிராஸிகியூஷன் செய்யவேண்டு மென்றும் மனுதார் மாஜிஸ்டிரேட்டார் முன் கொடுத்த வாக்குமூலத்திற்கும் ஷை ரிபோர்டுக்கும் வித்தியாஸ மிருந்தது மன்றி ஸெஷன் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலமும் மாஜிஸ்டிரேட்டார் முன் கொடுத்த ஸ்டேட்மெண்டுகளில் ஒன்றுக்கு வித்தியாச மிருந்தபடியால் மனுதாரனை 193-வது பிரிவின்படி பிராஸிகியூஷன் செய்யவேண்டுமென்றும் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் சாங்கிஷன் அனுமதி கொடுத்தார்.

அதன் பேரில் மனுதார் ஹைகோட்டில் மனுக்கொடுத்து சாங்கிஷன் உத்தரவை ரத்துசெய்யவேண்டுமென்று கோறிக்கொண்டதில் ஹைகோர்ட்டார் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களுக்கு சாங்கிஷன் கொடுக்க அதிகாரம் கிடையாதென்றுதீர்மானித்து சாங்கிஷனை ரத்து செய்த உத்தரவின் காரணச் சுருக்கமாவது:—

சாங்கிஷன் அனுமதி கொடுக்கும் முறையினது கிரி-பு-கோ 195-வது பிரிவில் சொல்லபபட்டிருக்கிறது. 195-(7)-ல் சாங்கிஷன் அனுமதியை எந்த அதிகாரியின் முன் குற்றம் நடந்ததோ அவருகிலும் அல்லது அந்த அதிகாரியின் உத்தரவுக்கு மேல் அப்பீல் அதிகாரம்பெற்ற அடுத்த மேலதிகாரியும் அதே குற்றத்தைப்பற்றி பிராஸிகியூஷன் செய்யும்படி அனுமதிகொடுக்கலாம். மனுதார் சப் மாஜிஸ்டிரேட்டாருக்கும் போலீஸ் ஆபிஸருக்கும் அடுத்த அப்பீல் அதிகாரியல்ல சப்மாஜிஸ்டிரேட்டார் சாங்கிஷன் கொடுக்கலாம். அல்லது அவருக்கு அடுத்த ஆபீல் அதிகாரிசாங்கிஷன் கொடுக்கலாம் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் சப்மாஜிஸ்ரேட்டுக்கு அடுத்த மேலதிகாரியல்ல. ஆகவே ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் 182-வது பிரிவில் எற்படும் குற்றத்தைப்பற்றி சாங்கிஷன் கொடுத்தது சரியல்ல.

இ. பி. கோ 193-வது பிரிவின்படி பொய்வாக்குமூலம் கொடுத்ததாகப் பிராஸிகியூஷன் செய்யும்படி அனுமதி கொடுக்க வேண்டுமானல் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கும் இரண்டு வாக்கு

மூலங்களைப்பற்றியும் அனுமதி கொடுக்க அதிகாரமுடையவராயிருக்கவேண்டும். அப்படி யிருக்க இந்தக்கேஸில் விரோதமான இரண்டுவாக்குமூலங்களில் ஒன்று சப்மாஜிஸ்டிரேட் முன் கொடுக்கப்பட்டதாயும் மற்றொன்று ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள்முன்கொடுக்கப்பட்டதாயுமிருக்கிறது. ஆகவே இவ்வித வித்தியாஸமேற்பட்டதற்காக ஸெஷன்ஸ் கோர்ட்டார் சாங்கிஷன் அனுமதி கொடுக்க நியாயமில்லை. சப் மாஜிஸ்டிரேட்டார் முன் கொடுத்த வாக்கு மூலத்தைப் பற்றியும் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களுக்கு சாங்கிஷன் கொடுக்க அதிகாரமிருந்தால் பரவாயில்லை. மேல்சொன்ன காரணங்களினால் சப் மாஜிஸ்டிரேட்டுக்கு அடுத்த அப்பீலதிகாரியாக ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களை மதிக்கக்கூடாது. ஆகவே மனுதாரின் பேரில் ஏற்பட்ட சாங்கிஷன் அனுமதி ரத்தாகவேண்டியது நியாயமாகும்.

ஆனால் சப்-மாஜிஸ்டிரேட்டார் தன்முன் சொல்லப்பட்ட இரண்டு வித்தியாஸமான ஸ்டேட்மெண்டைப்பற்றி சாங்கிஷன்கொடுக்கநியாயமுண்டாகையால் சப் மாஜிஸ்டிரேட்டார் முன் ஸர்க்கார் வக்கீலவர்கள் சாங்கிஷன் அனுமதி கேட்கலாமென்று சொல்லப்பட்டது. XXVII, 586.

---*---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர். & ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள்.

(தஞ்சாவூர் ஜில்லா.)

S. A. 2335 of 1913—13 ஆகஸ்ட் 1914.

கிருஷ்ணசாமி பிள்ளை vs கோதண்டராம நாயகன்

நாகப்பட்டணத்தில் நீலாயதாட்சி என்ற ஒரு ஸ்திரீயானவள் 1-வது ஆதாரமாகிய ஒரு டிரஸ்ட் பத்திரத்தால் தனக்குச் சொந்தமானசிலசொத்துக்களை அதாவது சில கடைகளை ஸ்ரீ நீலாயதாட்சி அம்பாளுடைய கோவிலுக்கென்று அற்பிதம் செய்து ஆனால் தன் ஜீவிய காலபரியந்தம் தானே டிரஸ்டியாக இருந்து அந்த சொத்தை மானேஜ்மெண்டு செய்து வருவதாயும் தனக்குப் பின் கோதண்டராம நாயகன் என்ற வாதி வகையறாக்கள் டிரஸ்டிக்களாக ஷை சொத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டு ஷை கோவிலுக்குறிய சில குறித்த கட்டளைகளை நடத்தி வரவேண்டுமென்று ஷை தஸ்தவேஜில் கண்டு எழுதியிருந்தாள். 1907 எப்பிரல் 12-ல் அதாவது அவள் மரித்த தினத்திற்கு முன் தினத்தில் ஒரு உயில் எழுதி முன் எழுதிவைத்த டிரஸ்ட் பத்திரத்தை ரத்து செய்து அந்த சொத்துக்களை அதே கோவிலுக்கே புதிய ஏற்பாடாக அற்பணம் செய்துவிட்டாள். ஆனால் இதில் மேற் சொல்லிய நபர்களை டிரஸ்டிக்களாய் ஏற்படுத்தவில்லை. அவள் மரணபரியந்தம் தாவா சொத்துக்களை அவளே அனுபவித்து வந்து அவளுக்குப்பின் உயிலின் ஷரத்துகளின் பிரகாரம் கோவிலதிகாரிகள் அதை சுவாதீனமடையப் பிரயத்தனப்படும் பொழுது முந்திய தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட வாதிவகையறாக்கள் உயில் பத்திரத்தால் முந்திய தானசாஸனம் ரத்தாக மாட்டாதென்றும் அதன்படி தாவா சொத்துக்களைத் தாங்கள் சுவாதீனப் படுத்திக்கொள்ள பாத்திய முண்டென்றும் டிக்ளரேஷன் டிக்கிரி யடையும்பொருட்டு நாகை டி. மு. கோர்ட்டில் தாவா செய்தார்கள்.

டி-மு. கோர்ட் தீர்மானத்தின்பேரில் சப் கோர்ட்டில் அப்பீலாகி அங்கு வாதிகளுக்கனுகூலமாய் டிக்கிரி ஏற்பட்டது. அதன் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—

முதலில் எழுதி வைக்கப்பட்டடிரஸ்ட் பத்திரத்தினால் நீலாயதாட்சியம்மாள் தாவா சொத்தை கோவிலுக்கு பரிபூரணமாய் அர்பணம் செய்து விட்டாளா (நன் கொடை யளித்து விட்டாளா); அப்படியானால் அந்த ஏற்பாட்டை அவள் பின்னால் மாற்ற லாயக்குண்டா வென்பதுதான் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமாகும். டிரஸ்ட் பத்திரத்தின் வசனங்களைப்பார்க்குமிடத்து அவள் பரிபூரணமாய் நன்கொடையளித்து விட்டதாகவே சொல்லவேண்டியதாகும். ஏனெனில் அதில் "இந்தநன்கொடைப்பத்திரத்தால் இன்றையதினம் ஷை கடைகளை ஸ்ரீ நீலாயதாட்சி அம்பாளுக்குக் கொடுத்துவிட்டேனென்று" சொல்லியிருக்கிறாள் பின் வசனங்களில் "இராத்திரி காலங்களில் தர்மத்திற்காக ஒருகட்டளை ஏற்படுத்துகிறேன்" என்று சொல்லியிருப்பது வாஸ்தவந்தான். அந்த



வசனங்களால் அவள் சொத்தை கோவிலுக்குப் பின்னால் அர்ப்பணம் செய்ய உத்தேசித்ததாகவும் தஸ்தவேஜை எழுதினசமயத்திலேயே நன்கொடையளித்ததாக யூகிக்ககூடாதென்று சொல்ல நியாயமாகாது. அர்பணம் செய்த சொத்து விஷயமாய் விவரமான ஏற்பாடுகளைப் பின்னால் உத்தேசித்ததாக ஷை வசனங்களால் விளங்குகிறது. அதில் ஷை சொத்துக்களின் மூலாதார தஸ்தவேஜுகளையும் டிரஸ்ட் பத்திரத்தையும் அன்றையதினமே தனக்குப்பின் டிரஸ்டிகளாய் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரான கோதண்டராம நாயகனிடம் ஒப்புவித்து விட்டதாகக் கண்டிருக்கிறது. ஆனால் அவ்விதமாய் ஷை தஸ்தவேஜுகள் ஷையாரிடம் கொடுக்கப்படவில்லை. அது வாஸ்தவமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்விஷயத்தால் அவள் அர்பணம் செய்வதாய் எண்ணினகாரியத்தை பரிபூரணமாய் முடிக்கவில்லையென்று வாதிக்கப்படுகிறது. உடனே இறந்து போவதாய் சந்தேகித்து அவள் அம்மாதிரி தஸ்தவேஜில் எழுதி யிருக்கிறாள். அதாவது தஸ்தவேஜுகளை பிந்திய டிரஸ்டிகளிடம் உடனே கொடுத்து விடுவதாய் எழுதியிருக்கிறாள். ஆனால் அவள் அச்சமயம் பிழைத்துக் கொண்டமையால் தஸ்தவேஜில் கண்டபிரகாரம் அவளே மரணபரியந்தம் டிரஸ்டியாக யிருக்க நியாயமுண்டாதலால் தஸ்தவேஜுகளை தன்னிடம் வைத்துக்கொண்டிருந்திருக்கிறாள். ஆகையால் டிரஸ்ட்பத்திரம் பூர்த்தியாகவில்லையென்று சொல்லத்தகாது.

அன்றியும் அவள் 1894-ல் டிரஸ்ட் பத்திரம் எழுதி வைத்திருக்க 1906-ல் ஒரு ரெஜிஸ்டர் பத்திரம் எழுதி அதில் தான் முன் செய்த நன்கொடையை ரத்துசெய்துவிடுவதாய்க் கண்டெழுதியிருக்கிறாள். முன் எழுதிவைத்த தஸ்தவேஜினால் தான் ஷை சொத்தை அர்பணம் செய்து விட்டதாக ஒப்புக்கொண்டு ஆனால் அந்த அர்பணத்தை மாற்ற அதிகார மிருப்பதாய் நம்பி மேற்கூறிய ரெஜிஸ்டர் தஸ்தவேஜை எழுதி யிருக்கிறதாகச் சொல்லவேண்டும். முன் செய்த நன் கொடைப் பத்திரப்படி நடக்க மனமில்லையென்று ஷை தஸ்தவேஜில் சொல்லியிருக்கிறாள். ஆகவே முன் எழுதிய டிரஸ்ட் பத்திரத்தால் அவள் நன்கொடையளித்தது வாஸ்தவமென்று ஏற்படுகிறது. அதற்குப்பின் அவளுடைய நடத்தையால் ஷை நன்கொடையை மாற்றினதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. யாதொரு நன்கொடை யளித்தபின் பிந்திய நடத்தை ஷை நன்கொடையை ரத்தாகாதென்று திண்ணமாய்ச் சொல்லவேண்டும். டிரஸ்ட் பத்திரம் எழுதும் காலத்தில் நன்கொடைக்குறிய காரியங்களை யெல்லாம் செய்து முடித்து விட்டாள். அதில் கண்ட காரியங்களை சரிவர நடத்தாவிட்டால் அவள் நம்பிக்கை மோசத்திற்குப் பாத்திரமாகிறாளே யொழிய டிரஸ்ட் பத்திரம் பூர்த்தியாகவில்லை யென்று சொல்லத்தகாது. சட்டப்படி ஏற்பட்ட தஸ்தவேஜை அவளுடைய நடத்தைக் குறைவானது கெடுக்காதென்று சொல்லவேண்டும். பூர்த்தியான டிரஸ்ட் பத்திரத்தை ஏற்படுத்தினவள் மாற்றக் கூடாதென்று இந்தியன் டிரஸ்ட் ஆக்டில் சொல்லி யிருக்கிறது. இங்கிலீஷ் லாவும் அதேவிதமாய் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு மாறான தீர்மானங்கள் யாதொன்றும் எடுத்துக் காட்டப்படவில்லை. ஆனால் அந்த சட்ட நியாயத்திற்கு அனுஸரணையாக பல தீர்மானங்களிருக்கின்றன. (1904) 91 Law Times 192-ஐ பார்க்கவும் பிரதிவாதிக்காக 12 மதராஸ் 387-எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதில் டிரஸ்டில் கண்ட நிபந்தனைகள் நடைபெறாத விஷயத்தில் டிரஸ்ட் பூர்த்தியானதாகச் சொல்லத் தகாதென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் அந்தக் கேஸில் இரண்டு சகோதரர்களுக்குப் பொதுவான பாத்தியமுள்ள சொத்தை ஒருவன் மட்டும் டிரஸ்ட் பத்திரத்தால் அற்பிதம் செய்திருக்கிறார். ஜஸ்டிஸ் பார்க்கர் துரையவர்கள் தஸ்தவேஜின் அம்சங்கள் நடைபெறாத விஷயத்தில் தஸ்தவேஜானது பிரயோஜனப்படாதென்று சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் அடுத்த வாக்கியத்தில் இரண்டு அவிபக்த சகோதரர்களில் ஒருவன் மட்டும் சொத்தை அர்ப்பணம் செய்திருக்கிறானென்று சொல்லி யிருப்பதால் அதை முக்கிய காரணமாய்க் கருதி ஷை அபிப்பிராயம் கொடுத்திருப்பதாய்ச் சொல்லவேண்டுமே யொழிய அந்த அபிப்பிராயத்தை ஒரு சட்டமுறையாய் அனுஷ்டிக்க வேண்டுமென்று எண்ணின தாகச் சொல்ல நியாயமாகாது. மகம்மதிய லாப்படி நன்கொடை

யளிக்கப்பட்ட சொத்தானது உடனே சுவாதீனம் செய்து கொடுக்கப்படவேண்டும். அந்த நியாத்தை உத்தேசித்து 15 அலகாபாத் 321-ல் சுவாதீனப் படுத்திக் கொடுக்கப்படாத நன்கொடை பத்திரம் செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் உதவக்கூடியதல்ல. ஆனால் (1870) 2 N. W. P. H. C. R. 120-ல் ஸ்வய இச்சையாக ஒருவன் யாதொரு நன்கொடை ஏற்பாடு செய்தால் அவன் அதைப் பின்னால் மாற்றலாயக்கில்லையென்று தீர்மானிக்கத்பட்டிருக்கிறது. (1911) 2 M. W. N. 376, (1911) 2 M. W. N. 382 இவைகளைப் பார்க்கவும். 14 B. L. R. 295-ம் மேற்கூறிய நியாயத்திற்கு அனுகூலமாயிருக்கிறது. மேற்கூறிய காரணங்களால் நீலாயதாட்சியம்மாள் தாவா சொத்தை முதலில் டிரஸ்ட் பத்திரத்தால் கோவிலுக்கு அர்ப்பணம் செய்துவிட்டமையால் அந்த தஸ்தவேஜை அவள் பின்னால் மாற்றலாயக்கில்லையென்றும் ஆகவே அவளுக்குப் பின் வாதி வகையராக்கள் ஷை சொத்தை சுவாதீனமடைந்து கோவிலுக்குறிய தர்மத்தை நடத்திவர நியாமாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. XXVII. M. L. J. 582.

———*———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஹானே.

(விசாகப்பட்டணம் ஜில்லா)

A. S. 280 of 1911- 7 ஆகஸ்ட் 1914

வெங்கடசுப்பாராஜுகாரு vs.
கந்தம் வெங்கட்ராயுடு.

1-ம் பிரதிவாதியின் பித்ரார்ஜித சொத்தின் பேரில் வாதி 1-ம் பிரதிவாதிக்குக் கொடுத்திருந்த அடமான கடனை வசூலிப்பதற்காக அடமான சொத்துக்களை எலம் போடவேண்டுமென்று வாதி காகினாடா சப்கோர்ட்டில் அசல் வியாஜ்ஜியம் செய்து அடமான தஸ்தவேஜானது ஏற்பட்ட 276 தினங்களுக்குப்பின் பிறந்த 2-ம் பிரதிவாதியாகிய 1-ம் பிரதிவாதியின் மகனையும் பார்ட்டியாகச் சேர்த்து அவி பக்தர்களான இருவரைப் பொருத்தும் டிக்கிரீயடைய வேண்டுமென்று கோறிக்கொண்டதில் 1-ம் பிரதிவாதி வாதியின் பரிகாரத்திற்கு ஆக்ஷேபனை செய்யவில்லை. 2-ம் பிரதிவாதியோ அடமான தஸ்தவேஜானது உண்மையாய் ஏற்பட்டதல்லவென்றும் அது வாஸ்தவமானாலும் தன்னை அது கட்டுப்படுத்தாதென்றும் ஆக்ஷேபித்தார். வாதியின் கக்ஷியாவது அடமான தஸ்தவேஜானது ஏற்பட்ட காலத்தில் 2-ம் பிரதிவாதி உற்பத்தியாகவில்லையென்றும் ஆகையால் அவன் அடமானத்தின் நியாயத்தை ஆக்ஷேபிக்க லாயக்கில்லையென்பதேயாம்.

சப்கோர்ட்டார் 2-ம் பிரதிவாதியின் ஆக்ஷேபனையை ஏற்றுக்கொண்டு அதாவது அடமானம் ஏற்பட்ட 276-வது தினத்தில் 2-ம் பிரதிவாதி ஜனித்தமையால் எவிடென்ஸ் ஆக்ட் 112-வது பிரிவின்படி பிரஸவித்த 280-தினங்களுக்கு முன் கர்ப்ப உற்பத்தி உண்டாயிருக்கவேண்டுமென்ற நியாத்தை அனுஸரித்து அடமானத் தேதிக்கு 4-தினங்களுக்கு முந்தியே 2-ம் பிரதிவாதி தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியாகியிருக்கவேண்டுமென்றும் ஆகவே 2-ம் பிரதிவாதிக்கு பித்ரார்ஜித சொத்தில் ஹக்கு பாத்தியதை ஏற்பட்டபின் தாவா அடமானம் செய்யப்பட்டதென்றும் தீர்மானித்து 1-ம் பிரதிவாதியினுடைய பங்கு விகிதத்தைப் பொருத்து மட்டும் டிக்கிரீ யளித்து 2-ம் பிரதிவாதியின் குடும்பசொத்து பாகத்தைப் பொருத்தமட்டில்வாதியின் பிராதைச் செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டார் அபிப்பிராய நியாயம் பிசகென்று ஏற்பட்டு வாதி கோறியபடி குடும்ப சொத்து முழுவதையும் எலம் போடும்படி உத்தரவளிக்கப்பட்டது. அதற்குக் காரணமாகச் சொன்னதாவது:—

எவிடென்ஸ் ஆக்ட் 112-வது பிரிவைக் கவனித்தால் ஸ்திரீபுமான்களுக்கு சட்ட சம்மதமான விவாக சம்பந்தம் நமோதிலிருக்கும் காலத்திலாவது அல்லது அவ்வித் சம்பந்தம் நீங்கிப்போன முதல் 280 தினங்களுக்குள்ளாவது பிறக்கும் குழந்தை அந்தப் புமானுடைய புத்திரன் என்று உறுதியாய்ச் சொல்லலாமென்று ஏற்படுகிறது. அதிலும் ஸ்திரீயானவள் சம்பந்தம் நீங்கின பின் 280 தினங்களுக்குள் மறுவிவாகம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கவேண்டும், மேற்கூறிய சட்ட விதியினால் ஸ்திரீபுமான்கள் கூடி வசித்த சமய முதல் 280 தினங்களுக்குள் பிறந்த குழந்தை அவனுக்குப் பிறந்ததென்று அனுமானிக்க தகுமே யொழிய ஒரு சிசுபிறந்த 280 தினங்களுக்கு முன் கர்பத்தில் உண்டானதாக ஷை சட்டவிதியினால் அனுமானிக்கத் தகாது. (புருஷன் அக்குழந்தை தன்னுடைய தல்லவென்று ஆக்ஷேபிக்கக்கூடாதே யொழிய சிசுவானவன் பிறந்த 280 தினங்களுக்கு முந்தியே உண்டானதாக வாதிக்க ஷை 112-வதுபிரிவின் நியாயம் உதவக்கூடியதல்ல). 280 தினங்களை ஒரு சுமாரான மதிப்பாக சட்டகர்த்தர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். டேயிலர் முதலிய டாக்டர்மார்கள் கர்பத்தில் நிற்கும் காலத்தை சிலசமயங்களில் அதிகமாயும் சிலசமயங்களில் கம்மியாகவும் இருக்கக்கூடுமென்று விளம்பியிருக்கிறார்கள். ஆகையால் யாதொரு குழந்தை பிறந்த 276 தினங்களுக்குமுன் கர்போற்பத்தியானதாக அனுமானிக்க பலமான காரணங்களிருப்பதாய் தோன்றவில்லை. ஸ்திரீபுமான்கள் தொடர்ந்த காலமாய்க் கூடி வாழும் சந்தர்பங்களில் தாயும் கர்ப உற்பத்தியானதைக் குறிப்பாய் சொற்பதினங்களுக்குள்ளாகச் சொல்ல முடியாது: ஹிந்துலாவிலும் பிரஸவத்திற்கு இவ்வளவு தினங்களுக்கு முன் கர்பஉற்பத்தியாகியிருக்கவேண்டுமென்று குறித்தவிதிமுறைஏற்படவில்லை. 8 மதராஸ் 89-ல் சொல்லியிருக்கிறபடி ஸ்திரீபுமான்கள் அடிக்கடி சேர்ந்திருக்கும் சந்தர்பங்களில் எந்த நிமிஷத்தில் கர்ப உற்பத்தி யாச்சுதென்று ஒரு தீர்மான அபிப்பிராயம் அடையத்தக்கவிதமாக சாஸ்திர ஆராய்ச்சியானது இன்னும்உதவக்கூடிய நிலமைக்கு வரவில்லையென்று சொல்லவேண்டும். அவ்வித நிலமையைக்கருதி 8 மதராஸ் கேஸைத் தீர்மானித்த நியாயாதிபதிகள் பொருள் கொடுத்து சொத்தை வாங்குவோன் அக்காலத்தில் கிறயம்செய்கிறவனுடைய பாரியாள் கர்பவதியாயிருக்கிறாளாவென்று விஜாரணை செய்யக் கடமைப்பட்டவனல்லவென்று சவுகரியக்குறவை உத்தேசித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கர்பத்திலிருக்கிற புத்திரன் துகை கொடுத்துக் கிறயத்திற்குவாங்குகிறவனுக்கு விரோதமாக பித்ரார்ஜித சொத்தில் பாத்தியம் கொண்டாட சாத்தியமில்லாமலிருக்கலாமென்றும் சொல்லியிருக்கிறார்கள். மேற்கூறிய அபிப்பிராயத்தின் நியாயத்தைப்பற்றி தர்க்கம் செய்யத் தேவையில்லை. ஏனெனில் 2-ம் பிரதி வாதி அப்பீல் ஈாங்கிக்கு ஆஜராகி எதிர் வாதம் செய்யவில்லை. இந்தக்கேஸின் தன்மையை கவனித்தால் தாவா அடமானத்திற்குமுன் 2-ம்பிரதிவாதி கர்பத்தில் உற்பத்தியானதாகத் தெளிவான ருஜு க்கொடுக்கவில்லையென்றும் ருஜுப் படுத்தவேண்டிய பொருப்பு 2-ம் பிரதிவாதியைச் சேர்ந்திருக்க அந்த அம்சத்தை ருஜுப்படுத்தத் தவறினபடியால் அவனுடைய ஆக்ஷேபனை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்லவென்றும் சொல்லவேண்டும்.

மேற் கூறிய காரணங்களால் வாதியின் அப்பீல் அனுகூலமாகி பூரா சொத்தின்பேரில் வாதிக்குப் பரிகார மளிக்கப்பட்டது. XXVII M.L.J. 580.

———o———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

(கிருஷ்ணாஜில்லா)

A. S. 129 of 1913—22 செப்டம்பர் 1914.

கஞ்சர்ல வெங்கட்ராமன்

vs.

கோகந்தி வெங்கட்ராமய்யா.

தாவா சொத்தானது பாபய்யாஎன்ற மூலபுருஷனுக்குச் சொந்தமா அல்லது அவனுடைய மனைவியாகிய கன்னம்மாளுக்குச் சொந்தமாவென்று தீர்மானிக்கவேண்டிய இந்தக் கேஸின் வரலாறாவது: பாபய்யாவுக்கு ராமசந்துருடு என்ற குமாரனிருந்தான். பாபய்யா 1859-லும் அவனுடைய குமாரன் 1875-லும் இறந்துபோனார்கள். பாபய்யா இறந்த உடன் அவனுடைய புத்திரனாகிய ராமசந்துருடுவின் கார்டியன் சிலசொத்துக்களைப் பாராதீனம் செய்து மிருக்கிறார். ராமசந்துருடு 1875-ல் இறந்த உடன் அவனுடையபாரியாளாகிய கோடம்மாளுக்கும் பாபய்யாவின் பாரியாளும் ஷை ராமசந்துருடுவின் தாயுமாகிய கன்னம்மாளுக்கும் தாவா சொத்துக்களைப்பற்றி விவாதம் ஏற்பட்டு சமாதானமாகிஇருவரும் சொத்துக்களைபங்கு பிரித்துக்கொண்டார்கள். கன்னம்மாளுக்கு வந்த பாகத்தை ஷையாருடைய புத்திரிகளும் அவர்களுடைய சந்ததியாரும் அடைந்து அனுபவித்து வந்தார்கள். கோடம்மாள் பாகமான வெகுகாலத்திற்குப் பின் வாதியை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். கோடம்மாள் இறந்தபின் ஷை ஸ்வீகார புத்திரனாகிய

வாதி கன்னம்மாளிடமிருந்தசொத்தை அனுபவித்து வந்த பெண்வயிற்று பேரன்மார்களின் பேரில் தாவாசெய்து தன்தாயார் கன்னம்மாளுக்கு ஜீவனும் சத்திற்காக மட்டும் ஷை சொத்துபாகத்தை யளித்தாளென்றும் கன்னம்மாள் இறந்த உடன் தன் தாயார் ஷை சொத்துக்களை வாபிஸ் அடையாமலிருந்து விட்டாளென்றும தான் ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளப்பட்ட காரணத்தால் பிரதி வாதிகளின் வசமிருக்கும் சொத்தைத் தான் அடைய லாயக்குண்டென்றும் ஆகவே அந்த சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் கோறிக் கொண்டான். பிரதிவாதிகளோ தாவா சொத்து பாகமானது கன்னம்மாளின் தகப்பனாகிய அக்கய்யாவின் சொந்தமானதென்றும் ஆகவே கன்னம்மாள் அந்த சொத்தை ஸ்திரீ தனமாக அடைந்து அனுபவித்து வந்ததாகவும் அவளுக்குப்பின் அவளுடைய வாரிஸுகளாய்த் தாங்கள் அனுபவித்து வருவதாயும் அதில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் கோடம்மாளுடன் செய்து கொண்ட ஏற்பாட்டினால் கன்னம்மாள் தாவா சொத்தில் கோடம்மாளுடைய ஹக்கு பாத்தியதை, யை விலக்கி விட்டாளென்றும் எதிரான்ஸர் கொடுத்தார்கள். சப்கோர்ட்டார் ஸ்வீகார புத்திரனாகிய வாதிக்கனுகூலமாக டிக்கிரீயளித்தார்கள். அதன் மேல் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

ஜமீன் கணக்குகளைப் பரிசோதித்துப்பார்த்தால் 1802-ல் தாவா நிலம் அக்கய்யா வென்ற ஒருவருடையதென்று துலங்குகிறது. அந்த மனிதன் கன்னம்மாளுடைய தகப்பனாகிய அக்கய்யாவென்று நம்பத்தக்க ருஜுவாகம் யாதொன்றும் கிடையாது. தவிற பாபய்யாவும் அவனுடைய மகன் ராமசந்துருடுவும் தாவா சொத்துக்களை வெகுகாலம் அனுபவித்து வந்திருப்பதாய் ருஜுவாகி யிருக்கிறது. ஆகையால் பாபய்யாவும் ராமசந்துருடுவும் தாவா சொத்துக்களை அக்கய்யா என்றவனிடமாவது அவனிட வாரீஸ்களிடமிருந்தாவது கிறயத்திற்கு வாங்கியிருக்க வேண்டுமென்று சொல்லலாம். அக்கய்யா கன்னம்மாளுடைய் தகப்பனென்று துலங்கவில்லை. ஆகவே தாவாசொத்து கன்னம்மாளுடையதல்ல அவளுடைய கணவன் சொத்தாகும். ஆகவே வாதியாகிய ராமசந்துருடுவின் ஸ்வீகாரபுத்திரனுக்கு தாவா சொத்து பாத்தியமாகும்.

ஆனால் ராமசந்துருடு இறந்தபின் கன்னம்மாள் மருமகளாகிய கோடம்மாளிடம் தனக்கு சொத்தில் ஒரு பாகத்தைக் கேட்டிருக்கலாம். கோடம்மாளும் கேட்டபடி சம்மதித்துக் கொடுத்திருக்கலாம். கன்னம்மாளுடைய பெண்வயிற்று போப்பிள்ளைகளுடைய நன்மைக்காக அந்தசொத்தை வாங்கியிருக்கலாம். அவ்விதமாக பிரதி வாதிகளுக்கு தாவா சொத்துகிடைத்ததாக அனுமானிக்கத்தகும். கோடம்மாள் பின்னால் கன்னம்மாளுடைய ஜீவனும் சத்திற்காக தாவா சொத்து பாகத்தைக் கொடுத்ததாகச் சொல்லியுமிருக்கிறாள். அப்படியிருக்க பிரதி வாதிகள் கோடம்மாளுடைய ஸ்வீகார புத்திரனுடைய பாத்தியத்தைக்கும் அனந்தர வாரிஸ்களின் பாத்தியதைக்கும் விரோதமாக தாவாசொத்தை கோடம்மாளுக்குப் பின் அனுபவிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். வாதியின் தாவாவுக்குக் காலாவதி தோஷமும் கிடையாது. ஏனெனில் ஒரு ஸ்வீகாரபுத்திரனுக்கு பாத்தியமுள்ள ஸ்தாவர சொத்தை அடையும்பொருட்டு ஸ்வீகாரத் தேதி முதல் 12-வருஷகாலாவதி யுண்டென்று 144-வது ஆர்டிகிலைப் பிரயோகித்து 26 மதராஸ் 143, 19 பம்பாய் 809, 2 பம்பாய் லா ரிபோர்ட் 411, 9 கல்கத்தா வாரக் குறிப்புகளின் 795-இவைகளில் பரிஷ்காரமாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பார்த்தால் ஸ்வீகாரத் தேதிக்கும் தாவா தேதிக்கும் இடையில் 12-வருஷகாலம் ஏற்படவில்லை. ஆகவே பிரதிவாதிகளின் அப்பீல் தள்ளுபடி யாகவேண்டியது நியாயமாகும். இவ்விதகாரணங்களை ஹானாபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்க அதே தீர்மானமுடிவை யடைந்த ஹானாபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யா வர்கள் கொடுத்ததீர்ப்பில் சொன்ன காரணச்சுருக்கமாவது:—

காலாவதி பாயிண்டைப்பற்றி யோஜிக்கும் விஷயத்தில் வாதிக்கு ஸ்வீகாரத் தேதிக்கு முன் சுவாதீன பாத்தியதை ஏற்படாதாகையால் வாதிக்கு



வியாஜ்ஜிய மூலம் ஸ்வீகாரமெடுத்த தேதியில் தான் ஏற்படும். அது முதல் 144-வது ஆர்டிகில்படி 12-வருஷகாலாவதி யுண்டென்று சொல்ல வேண்டும். ஒரு ஸ்திரீயின் மரணத்திற்குப்பின் யாதொரு ஸ்தாவர சொத்தை சுவாதீனமடைய பாத்திய முடையவனுக்கு வியாஜ்ஜியமூலம் அந்த ஸ்திரீ இறந்த தேதியில் தொடங்கும். 141-வது ஆர்ட்டிகில்படி அதற்கு 12-வருஷ காலாவதி யுண்டு. ஸ்திரீக்குப்பின் பாத்தியதை யடையகிறவன் ஸ்வீகார புத்திரனல்ல. அனந்தர வாரிஸ்தார்கள்தான் அந்த நிலமையை அடைந்திருககக்கூடும். ஆகவே 141-வது ஆர்டிகில் அனந்தரவாரிஸ்களுடைய வியாஜ்ஜியத்திற்காக ஏற்பட்டிருக்கிறது ஸ்வீகார புத்திரர்களுக்கு ஸ்தாவர சொத்தைப் பற்றி வியாஜ்ஜிய மெடுக்க காலாவாதியைக் குறிக்கும் ஸ்பஷ்டமான ஆர்ட்டிகில் கிடையாது. ஆகையால் 144-வது ஆர்டிகிலைப் பிரயோகித்து யாதொரு ஸ்தாவர சொத்தை அடையக் கோறுகிறவன் பிரதிவாதியின் சுவாதீனம் அவனுக்கு விரோதமாய் ஏற்படும் காலமுதல் 12-வருஷங்களுக்குள் வியாஜ்ஜியம் செய்ய வேண்டுமென்ற நியாயப்படி ஸ்வீகாரபுத்திரன்ஸ்வீகாரத்தேதியில் பாத்தியதையை அடைந்தவனாகிறபடியால் அது முதல் 12-வருஷங்களுக்குள் வியாஜ்ஜியம் செய்யவேண்டிய தாகும். கோடம்மாளுக்கு என்ன பாத்தியதை உண்டோ அது மட்டும் தான் கன்னம்மாளுக்கும் ஏற்படும். கோடம்மாள் இறந்தபின் கன்னம்மாளுக்கு கிடைத்த பாத்தியதை நீங்கிப் போகிறது. ஆகவே கன்னம்மாளுடைய வாரிஸ்களிடமிருந்து சொத்தை அனந்தர வாரிஸ்களடைய கோடம்மாள் இறந்தமுதல் 12-வருஷமும் கோடம்மாளுடைய ஸ்வீகார புத்திரனுக்கு ஸ்வீகாரத் தேதிமுதல் 12வருஷமும் காலாவதி ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். ஆகவே வாதியின் இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்று பற்பல அதாரிடிகளை எடுத்துச் சொல்லித் தீர்மானம் கொடுத்தார்கள். XXVII M. L. J. 569.

—————(o)—————

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

—————(o)—————

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்.

S. A. 119 of 1913—15 அக்டோபர் 1914.

ஒரு ஹிந்து விதவை தன் கணவனுடைய சொத்துக்களை தன் சொந்த ஸ்திரீதனமாக பாவித்து அவைகளை தன் மூன்று புத்திரிகளுக்கு உயில்சாஸனத்தால் நன்கொடை யளித்ததின் அம்மூவரும் தங்களுக்குள் அச்சொத்துக்களை பாகித்துக்கொண்டு அனுபவித்து வருகையில் ஒரு பெண் காலஞ்சென்ற பிறகு மற்றை இரண்டு பெண்களும் காலஞ்சென்ற சகோதரியின் சொத்து பாகத்தை ஷையாளின் வாரீஸ்தார்களிடமிருந்து திரும்பி யடைவதற்கு காரணமாக ஷைசொத்துக்கள் தங்கள் தாயின் ஸ்திரீதனமல்லவென்றும் அவைகள் தகப்பனுக்குச் சொந்த மென்றும் செய்த வாதம் சரியானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு மரண சாஸனத்தினால் நன்மைலாபமடைந்த பலர்களில் ஷை மரண சாஸனத்தால் அல்லாது வேறுவகையான பாத்யதை யில்லாதவர் மற்றவர்களுக்கு ஷை உயிலால் ஏற்படும் நன்மைலாபத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. தவிர பாககாலத்தில் ஒருவருடைய ஜீவதசைக்குப் பிறகு ஷையாருடைய சொத்து விஹிதமானது மற்ற பாகஸ்தர்களுக்கு செல்லக்கூடாதென்பதைப்பற்றிய யாதொரு ஏற்பாடானது ஒரு ரிஜிஸ்தர் தஸ்தவேஜினால் செய்யப்படவேண்டியதில்லை.

—————

S. A. 1270 of 1912—15 அக்டோபர் 1914.

மதராஸ் ரிவினியூ ரிகவரி ஆக்ட் 59 வது பிரிவின்படி நடக்கும் ரிவினியூ ஏலம் வில்லங்க சத்தியாய் ஏற்படவேண்டியதாயினும் ஒரு அடமானதார் சுவான்தாருடைய மோசக்கருத்தைக் காட்டி அடமான சொத்தை தீர்வை பாக்கிக்காக ரிவினியூ ஏலத்திற்கு கொண்டுவரும்படி செய்து நேமனெட்டாக அச்சுவான்தார் ஷை சொத்தை கிரயத்திற்கு வாங்கினதாக சொல்லும் சந்தர்பத்தில் ஷை ரிவினியூ ஏலமானது வில்லங்க சத்தியாய் ஏற்பட்டிருக்க வேண்டிய நியாயம் பாவிக்கப்பட வேண்டியதில்லை. ஷை

சொத்தானது அடமான வில்லங்கத்திற் குட்பட்டிருப்பதாகவே சொல்லப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———0———

**ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஹானே.**

**S. A. 2026 of 1914—21 அக்டோபர் 1914.**

நிறைவேற்று நடவடிக்கையில் கோர்ட்டாரால் வசூலிக்கப்பட்ட துகையில் பங்கு விகிதம் அடையலாயக்குள்ள பற்பல டிக்ரீ பாக்கிதார்களில் ஒருவர் அப்பங்கு விகிதம் அடையலாயக்கில்லாதவருக்குச் சென்றதாக சொல்லி அத்துகையை பெற்றுக் கொண்டவரிடமிருந்து வாபீஸ் வாங்கவேண்டுமென்று கோரிக்கொள்வதற்கு வியாஜ்யமூலம் மேற்கண்ட விதமாய் செலுத்தப்பட்ட தேதியால் உண்டாகிறபடியால் அதற்காகச் செய்யுந் தாவாவுக்கு 62-வது ஆர்டிகில்படி 3-வருஷ காலாவதி உண்டென்று தீர்மானிக்கப்பட்டது. கோர்ட்டார் பிசகாய் ஒருவனுக்கு வசூலான துகையிலிருந்து பங்கு பிரிவினை செய்துகொடுத்த நடவடிக்கையின் பேரில் அதாவது சி. பி. சி. 73-வது பிரிவின்படி ஏற்பட்ட உத்திரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் விண்ணப்பம் கொடுக்கப்பட்ட விஷயத்தில் ஷை விண்ணப்பம் பைசலாக சென்ற காலதாமதமானது மேற்கூறிய தாவாவுக்கு ஏற்பட்ட 3 வருஷ காலாவதிக்கு கூடிவராது. ஏனெனில் செலுத்தப்பட்ட துகையை வாபஸ் அடைய அசல் தாவா செய்யும் முறை ஏற்பட்டிருக்க ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் விண்ணப்பம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அவ்விண்ணப்பம் பைசலாக வேண்டியதற்காக வேண்டிய காலதாமதம் கூடிவர நியாயமில்லை.

———...———

**ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ**

**C. M. A. 193 of 1913—23 அக்டோபர் 1914.**

ஒருவனை இனசால்வென்டென்று தீர்மானிக்கப்பட்ட உத்தரவின்பேரில் ஒரு பாக்கிதாரன் அப்பீல் செய்யும் பக்ஷத்தில் அந்த அப்பீல் நடவடிக்கையில் இதர பாக்கிதாரர்கள் அவசியமான பார்ட்டிகளல்ல.

மாகாண இன்சால்வன்சி ஆக்டை யனுசரித்து செய்யப்படும் நடவடிக்கைகளுக்கு காலாவதி ஆக்ட் 17 வது பிரிவு ஏற்காதென்று தீர்மானிக்கப்பட்டது.

———0———

**ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்**

**C. R. P. 654 of 1913—27 அக்டோபர் 1914**

முந்தி ஏற்பட்ட ஒரு ஹைகோர்ட் தீர்மானத்திற்கு மாறாக பிறந்த சப்கோர்ட் தீர்ப்பை மாற்றும்படி சப்கோர்ட்டுக்கு ரிவ்யூ விண்ணப்பம் கொடுக்க போதுமான காரணம் ஆகும்.

அந்த ரிவ்யூ விண்ணப்பத்தை மாறுதலின் பேரில் வருகிற சப்ஜட்ஜியவர்களும் பிடித்துப் பைசல் செய்யலாம் அதாவது ஒரு சப்ஜட்ஜியவர்கள் கொடுத்த மேற்கண்ட விதமான தீர்ப்பைமாற்றுதலின் பேரில் பின் வரும் வேறொரு ஜட்ஜியவர்கள் ரிவ்யூ செய்யலாம்.

———()———

**C. R. P. 998 of 1912—27 அக்டோபர் 1914.**

ஒரு பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்தவன் தன் கையால் பின் புறத்தில் யாதொரு துகையை நோட்டின் வட்டி வகைக்காக செலுத்தினதாக செல்லெழுதி கையொப்பம் செய்யா திருந்தபோதிலும் காலாவதி ஆக்டு 19 வது பிரிவுபடி மேற்கூறிய செல்லானது உதவக்கூடிய தாகுமென்றும் செல்லி கீழ் கையொப்பம் செய்யப்படாத குறைவு பாதகமாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———()———

**C. R. P. 828 of 1913—27 அக்டோபர் 1914.**

1741ம் வருஷத்தில் ஒரு மிட்டாதாருக்கு தாவா சொத்தை கிராண்டாக அளிக்கப்பட்டிருந்தது அந்த மிட்டாதார் ஷை சொத்தின் ஸ்வாதீனத்திலிருந்து அனுபவித்து வருகிற பிரதிவாதிகளின் மீது தீர்வை பாக்கிக்காக கொண்டுவந்த தாவாவில் தாவா தேதிக்கு முன் 100 வருஷகாலமாக பிரதிவாதிகளும் அவர்களின் முன்னோர்களும் ஷை நிலங்களில் குடிவார பாத்தியதையை வுடைத்தா யிருந்தார்களென்று ஏற்பட்டிருக்க, அதற்கு முந்தியும் அதாவது கிராண்டு தேதியிலும் கூட பிரதிவாதிகள் மேற்கூறிய நிலத்தை அனுபவித்து வந்ததாக அனுமானிக்கலாமென்று தீர்மானிக்கப் பட்டது.



OFFICE OF THE RE[GISTRAR] REGISTERED 25 JAN 1915 MADRAS

அன்றியும் மிட்டாதார் தன்னுடைய கிராண்டில் கண்ட சில அம்சங்களை ருஜுப்படுத்துவதற்காக அசல் கிராண்டை ஆஜர் படுத்த முடியாமல் அவ்வித கிராண்டு பிறந்திருப்பதாக ஜில்லா கலெக்டர் அவர்கள் கவரன்மெண்டுக்கு எழுதியனுப்பிய ஒரு கடிதத்தையும் அத்துடன் அனுப்பப்பட்ட கிராண்டின் தர்ஜிமாவையும் தருவித்துக் காட்டியதில் எவிடன்ஸ் ஆக்ட் 35-வது பிரிவின்படி மேற்கூறிய ரிகார்டுகள் ருஜு பாகத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல வென்றும் அசல் கிராண்டுக்கு பதிலாக ஷை ரிகார்டுகள் பாவிக்கப்படக் கூடாதென்றும் தீர்மானிக்கபபட்டது.

———(0)———

**ஜஸ்டிஸ் ஓல்ட் பீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.**

**L. P. A. 22 of 1914—29 அக்டோபர் 1914.**

இன்சால்வெண்டு கொடுத்த பாபர் விண்ணப்பத்தில் கண்ட அவருக்கு சொந்தமான சொத்து ஜாபிதாவில் ஒரு சொத்தை குறித்தெழுத தவறிவிட்ட காரணத்தால் கீழ் கோர்ட்டார் சி. பி. சி. ஆர்டர் 33, ரூல் 5 (A)ல் விதிக்கப்பட்டிருக்கிற முறைப்படி விண்ணப்பம் எழுதப்படவில்லை என்று சொல்லி விண்ணப்பத்தை பைல் செய்து கொள்ளாமல் வாபீஸ் செய்துவிடவே ஹைகோர்ட்டார் அந்த சொத்தை எழுதத் தவறின குறைவால் விண்ணப்பம் வாபீசு செய்யத் தகுந்ததல்ல வென்று தீர்மானித்து கீழ் கோர்ட்டார் கேசின் ருஜு அம்சத்தில் நீதி நியாயத்தை சரியானபடி செலுத்தவில்லை என்ற காரணத்தை யிட்டு ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்து கீழ்கோர்ட்டு உத்திரவை மாற்ற நியாயமாகுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

———•———

**ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள்**

**C.R.P. 223 of 1913—30 அக்டோபர் 1914.**

ஒரு நிலச்சுவான்தார் டெனென்டின் பேரில் தீர்வை பாக்கிக்காக சிவில்கோர்ட்டில் செய்த பிராதில் தாவா கிராமமானது எஸ்டேட் நிலமென்றும் ஆகவே சிவில் கோர்ட்டார் ஷை பிராதைப் பிடிக்க அதிகாரவரம்பு இல்லையென்று ஆக்ஷேபித்ததில் அவ்விஷயத்தை ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பு டெனன்டுகளைச் சேர்ந்ததாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதாவது தாவா கிராமத்தில் டெனன்டுகள் குடிவார பாத்தியதை யுடையவர்களென்று ருஜுப்படுத்த வேண்டுமென்று ஏற்பட்டது.

———•———

**S. A. Nos. 1058 to 1077 of 1913—**

**30 அக்டோபர் 1914.**

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வந்ததற்குமுன் ஒரு நிலத்தில் செய்யப்பட்டிருந்த செய் நேர்த்தி செலவுகள் விஷயமாய் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு ஷை ஆக்டின் 18 (3)-வது பிரிவின் அமசங்கள் பிரயோகிக்கத்தக்கதல்ல. அதாவது மேற் கூறிய பிரிவின் அம்சத்தால் ஒரு ரயட்டானவன், தான் அனுபவிக்கிற நிலத்தில் சொந்த செலவைக் கொண்டு சீர்திருத்தம் செய்து மாகூலை அபிவிருத்திசெய்யும் பக்ஷத்தில் அதிகத் தீர்வையை நிலச் சுவான்தாருக்கு கொடுக்கவேண்டியதில்லை என்று ஏற்படுகிறது. ஆனால் ஆக்ட் நமோதுக்கு வருமுந்தி யாதொரு நிலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு தீர்வை விஷயமாய் யாதொரு உடன்படிக்கை பிறந்திருந்தால் அதை நிராகரிக்கத் தக்கதாய் மேற்கூறிய சட்டப்பிரிவின் அம்ஸத்தை உபயோகிக்கக் கூடாது.

———(0)———

**ஜஸ்டிஸ் சங்கரநாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்**

**A. S. 25 of 1913—4 நவம்பர் 1914**

ஒரு அனந்தர வாரிஸ்தார் ஒரு மைனர் விதவைக்காக ஷை யாளுடைய சொத்து விஷயமாய் யாதொரு அடமான நடவடிக்கை செய்ததில் ஷை விதவை மேஜர் என்று அடமானதாரனுக்கு தெரிவித்திருக்கபின்னால் ஏற்படும் அடமான வியாஜ்யத்தில் அவ்விதவையானவள் அடமானக்காலத்தில் மைனராயிருந்தாளென்று அனந்தர வாரீஸ்தார் எதிர்வழக்காடக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

———(0)———

**ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஹானே**

**S. A. 2631 of 1913—5 நவம்பர் 1914.**

தாவா நிலம் சாத்தூர் டிவிஷனல் ஆபீஸர் எல்லையில் இருந்தபொழுது ஷை யார் முன் நடந்த தாவாவை கவரன்மெண்டாரால் ஷை நிலம் தூத்துக்குடி

சப்-டிவிஷனல் ஆபீசருடைய எல்லைக்குள் மாற்றப்பட்டதின் நிமித்தம் தூத்துக்குடி டிவிஷனல் ஆபீசர் அந்ததாவாவை தங்கள்முன் விஜாரித்து பைசல் செய்ததில் சாத்தூர கோர்ட்டிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்படவேண்டிய டிரான்ஸ்பர் உத்தரவு பிறக்கவேண்டியமுறை அனுவஸ்யமென்று தீர்மானிக்கப்பட்டது. சி.பி.சி. 150-வது பிரிவையும் எஸ்டேட்ஸ் ஆக்ட் 192-வது பிரிவையும் சேர்த்துப்படித்துப்பார்க்கும்போது மேற்கூடிய நியாயம் ஏற்படுகிறது.

---

ஜஸ்டிஸ் சங்கரநாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

A. S. 182 of 1912—12 நவம்பர் 1914.

காலஞ்சென்ற ஒரு ஹிந்துவின் மூத்த தாரம் ஜீவனோடிருக்கையில் அவளிடம் கலந்துகொள்ளாமல் இளயதாரம் ஸபிண்டர்களுடைய சம்மதம் பெற்றும் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள அதிகாரமுடையவளல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

ஸ்வீகாரவிஷயமாய் சென்னையில் வழங்கும் சட்ட முறைக்கும் பெங்கால், பாம்பே ராஜதானிகளில் வழங்கும் முறைகளுக்கும் வித்தியாசமிருந்தும் சென்னையிலுங்கூட இரண்டுதாரங்களில் மூத்ததாரத்துக்கு ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள மேலான பாத்தியம் உண்டென்று பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கிறது. 5 பாம்பே ஹைகோர்ட் ரிபோர்ட்கள் 187-39 கல்கத்தா 582 இவைகளை அனுசரித்தும் 28 மதராஸ் 315ஐ கவனித்தும் மேற்கண்ட அபிப்ராய தீர்மானம் கொடுக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் &ஜஸ்டிஸ் டயாப்ஜீ

C. R. P. 839 of 1913—12 நவம்பர் 1914.

A-B என்ற இருவரும் சேர்ந்து ஒருவருக்கு ஜாயிண்டாக எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டில் A என்பவன் மாத்திரம் நோட்டுக்கு காலாவதி கடந்து போகமலிருக்கும்பொருட்டு செல்லெழுதி வைத்தார். B யின்பேரில் துடருவதற்கு காலாவதி தோஷமேற்பட்டபடியால் இருவர் பேரிலும் கொண்டு வரப்பட்ட தாவாவில் கீழ் கோர்ட்டார் நோட்டுக்கடன் துகை பூராவுக்கும் A என்பவன் பேரில்மட்டும் டிக்ரியளித்து B யைப்பற்றினமட்டில் காலாவதி தோஷத்தால் பிராதை தள்ளுபடி செய்துவிட்டார்கள். A என்பவன் டிக்ரிதுகை பூராவையும் வாதிக்குச்செலுத்திவிட்டு டிக்ரியின் சம பாதிதுகையை B யினிடமிருந்து வசூலிக்கும்பொருட்டு அதாவது B என்பவனுக்காக A செலுத்தின விகிதத்தை வசூலிக்கும்பொருட்டு தாவா செய்ததில் A என்பவருக்கு இந்த வியாஜ்ய மூலம் வாதிக்கு டிக்ரிதுகை செலுத்தின தேதியில்தான் துடங்கினதென்று அபிப்பிராயப்பட்டு A ன் தாவாவுக்கு காலாவதி அந்த தேதியிலிருந்து கணிக்கப்படவேணுமென்று ஹைகோர்டார் தீர்மானித்தார்கள். B யின்பேரில் வாதிக்கு பரிகாரம் பாராய் போனபோதிலும் A என்பவந்தான் செலுத்த வேண்டிய துகைக்கு மேலாக அதாவது B யின் நிமித்தமாக துகைசெலுத்தினதேதியில் வியாஜ்ய மூலம் ஏற்பட்டு தாவாசெய்யநியாயம் உண்டாகுமேயொழிய அதற்கு A என்பவனுக்கு தாவா செய்ய முகாந்தரமில்லை.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஹானே

A. S. 2021 of 1913—11 நவம்பர் 1914.

ஒரு தஸ்தவேஜில் யாதொரு துகை பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் யாதொரு அடமானக்கடன் பூராவும் செல்லாகவேண்டிய நிமித்தம் ஒருவியாபாரத்தில் கூடிவரும் லாபத்தை செல்லுவைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஒரு உடன் படிக்கையும் குறித்தெழுதப்பட்டிருந்ததில் மேற்கூறிய விதமான தஸ்தவேஜானது ஒரு ரசீது அல்ல என்றும் கட்டாயமாய் ரிஜஸ்டர் ஆகவேண்டிய பத்திரமாகுமென்றும் 9 பம்பாய் 254 ஐ அநுசரித்து தீர்மானிக்கப்பட்டது.

---

S. A. 1553 of 1913—11 நவம்பர் 1914.

கடன் காரர்களை மோசம் செய்யவேணுமென்ற கருத்தோடு யாதொரு சொத்துவிக்கிரயம் செய்யப்பட்டதாக ஏற்பட்ட சந்தர்பத்தில் கிரயம் பெற்றவன் ஏதோ சிற்சில தொகையை சொத்து பாத்தியஸ்தனுக்கு செலுத்தி யிருந்ததாக சொல்லி கிரயத்திற்கு பிரதிபிரயோஜனம் உண்டென்று வாதித்து விக்கிறய சொத்தை சுவாதீனமடையும் பொருட்டு



தாவா செய்ததில் மேற்கண்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சிற்சில பிரதிப் பிரயோஜனத்தால் சொத்து பாத்தியதை மாறிப்போனதாக பாவிக்கத்தக்கதென்று தீர்மானிக்கப்பட்டு கொடுத்த துகைக்கு சொத்தின்பேரில் ஹக்கு ஏற்படுத்துவதும் உசிதமல்லவென்றும் கொடுத்த துகையை கைக்கடனாக பாவித்து தாவா செய்து வசூல் பண்ணிக்கொள்ளவேண்டுமென்றும் அல்லது கிரயம்பெற்றவனுடைய பின் உபயோகத்திற்காக ஷை துகையை எதிரியின் வசம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாவனையாக அதை வாபீஸ் அடையும்படியும் பரிகாரம தேடலாமென்றும் அபிப்ராயங் கொடுக்கப்பட்டது.

———(o)———

S. A. 2308 of 1913—5 நவம்பர் 1914.

ஓர் சாசுவத கவுல் தஸ்தவேஜில் குறித்த வருஷாந்தர குத்தகைத்தீர்வை எழுதப்பட்டிருந்தும் அதன்பின் பார்ட்டிகள் குறைந்ததீர்வையை பெற்றுக்கொள்ளுவதாக உடன்படிக்கை செய்துகொண்டு அந்த உடன்படிக்கையின்படி 20 வருஷகாலமாக குறைந்த தீர்வை செலுத்திவரப்பட்டு பின்னால் ஆதியில் ஏற்பட்ட கவுலின்பட்டி உயர்ந்த தீர்வை விகிதத்தை வசூலிக்கவேண்டுமென்று நிலச்சுவான்தார் கொண்டுவந்த பிராதில் பிந்திய உடன்படிக்கையையும் அதன்படி நடத்தேறிவந்த (இருபது வருஷத்திய கணக்கையும் ஆதாரமாககொண்டு பிரதிவாதிகள் எதிராக்ஷேபனை செய்ததில் பிந்திய உடன்படிக்கைக்கு பிரதி பிரயோஜனம் கிடையாதென்று தீர்மானித்து அந்த உடன்படிக்கை பார்ட்டிகளை கட்டுப்படுத்த நியாயமில்லையென்றும் காண்டிராக்ட் ஆக்ட் 63-வது பிரிவின்படி 20 வருஷமாய் குறைந்த தீர்வையை பெற்றுக்கொண்ட விஷயத்தால் மிகுதியான துகை இனாமாய் தள்ளிக் கொடுக்கப்பட்டதாக யூகிக்கப்படவேண்டுமென்றும் ஆதியில்பிறந்த குத்தகைச் சீட்டை வியாக்யானப்படுத்துவதற்கு பார்ட்டிகள் பின்னால் பரஸ்பரமாய் நடந்துகொண்டுவந்த விஷயமானது அதாவது குறைந்த தீர்வையை வசூலித்துவந்த விஷயமானது ருஜுவில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சங்கரநாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்சர்.

A. S. 189 of 1912—5 நவம்பர் 1914.

ஒரு ஏஜண்டானவன் முதலாளிக்கு சேரவேண்டியகடன் வகைக்காக சரக்குகளை பாக்கிதாரனிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடாதென்றும் அவ்வேஜண்ட் தன் கையிலிருக்கும் எஜமானுடைய பண்டிலிருந்து யாதொரு இனாமளிக்கவாவது அக்ரமமான செலவுகள் செய்யவாவது (சட்ட விரோதமான விநியோகம் செய்யவாவது) கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

A. S. 109 of 1914—2 நவம்பர் 1914.

ஒரு ஹிந்து தகப்பன் ஒரு ஸ்தாவர சொத்தை ரூ. 100-க்கு மேல்பட்டதுகைக்கு ரிஜஸ்டராகாத தஸ்தவேஜில் விக்ரயம் செய்துகொடுத்தபின் கிரயம் பெற்றவன் சொத்தை சுவாதீனமடைந்தும் ரிஜஸ்டராகாத தஸ்தவேஜினால் யாதொரு சொத்து பாத்தியதையும் ஏற்பட நியாயமில்லாமலிருக்க சுவாதீன மடைந்தமுதல் 12 வருஷகாலத்துக்கு மேல் சொத்தை அனுபவித்து வந்தகாரணத்தால் சட்டப்படிக்கு அன்னியனாக சொத்தை கைவசப்படுத்திக்கொண்டு அநுபோக பாத்தியதையை கொண்டாடுகிற நிலமையிலிருக்கையில் மூல புருஷனுடைய மைனர் புத்திரர்கள் ஷை சொத்தை சுவாதீனமடையும்பொருட்டு தாவாசெய்ததில் தகப்பனுடைய பாத்தியதைக்கு நிராகரிப்பாக 12 வருஷங்களுக்குமேல் சொத்தை அனுபவித்துவந்தவனை அப்புறப்படுத்தும்பொருட்டு தகப்பனே தாவா செய்ய இடமிருக்க அத்தகப்பனுக்கு வியாஜ்யமூலம் ஏற்பட்ட தேதிமுதல் 12 வருஷங்களுக்குப்பின் தகப்பனாகிலும் அவன் மைனர் குமாரர்களாகிலும் தாவாகொண்டுவர நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

---

## ஹைகோர்ட் தீர்மானங்கள்.

———o———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஹானே.

(மதுரை ஜில்லா)

A. S. 141 to 144 of 1908—20 ஆகஸ்ட் 1914.

சுந்தரராஜன் vs குப்புஸாமி அய்யர்

குப்புஸாமி அய்யரென்ற ஸௌராஷ்டிர குலத்தைச் சேர்ந்த வாதி (Ampthill Patent Loom) அடைப்பட்டு முறை யென்று சொல்லப்படும் நூதனமான ஒரு நெசவு தறியைக் கண்டு பிடித்ததாகச் சொல்லி அதைப்போலொத்த கருவியை வேறு யாரும் செய்து நெய்யக்கூடாதென்று லைஸன்ஸ் பெறவேண்டு மென்று 1888-வது வருஷத்திய V-வது ஆக்டாகிய (Inventions & Designs Act) பேடெண்டு ஆக்டின்படி விண்ணப்பம் கொடுத்து 1902-ல் பேடெண்டையும் பெற்றுக்கொண்டார். அவ்வித கருவியைக் கொண்டு வாதி நெசவுவேலை [illegible]து வரும்பொழுது பிரதிவாதி அதேவிதமான [illegible]யை உண்டு பண்ணி வேலை செய்து வந்ததாகவும் ஆகவே அவர் வாதியின் பேடெண்டுக்கு இடையூராகவும் சட்ட விரோதமாகவும் நடந்ததாகச் சொல்லி அதைப்பற்றி பிரதிவாதியின் பேரில் மதுரை ஜில்லா கோர்ட்டில் இஞ்சங்கிஷன்கட்டளை பிறப்பிக்கவேண்டு மென்று பிராது கொடுத்ததில் ஜில்லா ஜட்ஜியவர்கள் பிரதிவாதியின் நடத்தை சட்டப் பிசகானதென்று அபிப்பிராயப்பட்டு வாதி கோரியபடி டிக்கிரீ யளித்தார்கள்.

அதன்மேல் பிரதி வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானமே காயமாகி அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. அப்பீல் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—1888-ம் வருஷத்திய பேடெண்ட் ஆக்டின் 20-வது பிரிவின்படி பேடெண்டுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளுகிறவனுக்கு பேடெண்டு லைஸன்ஸ் கொடுக்கக் கூடாதென்று யாவரும் ஆக்ஷேபிக்கலாம். அவ்வித ஆக்ஷேபனை செய்வதற்கு ஷை சட்டப் பிரிவில் பற்பல கிரௌண்டுகள் (காரணங்கள்) குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் விண்ணப்பத்தில் கண்ட செயலானது நூதனமானதல்லவென்றும் அவ்விதமான செயல்கள் அதற்கு முந்தியே கண்டு பிடிக்கப்பட்டு வேலை நடந்துவருகிறதென்ற விஷயம் ஒருவித ஆக்ஷேபனைக் காதாரமான கிரௌண்டாகு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருவனுக்கு பேடெண்டு லைஸன்ஸ் கிடைத்த பிறகு அவனுக்கு விரோதமாய் பேடெண்டில் கண்ட லைஸன்சுக்கு மீறி நடந்தவன் பேரில் எடுக்கப்படும் பிராதில், எதிரி 20-வது பிரிவில் கண்ட ஆக்ஷேபனைகளை யெல்லாம் எடுத்துச் சொல்ல சட்ட நியாயம் கிடையாது. ஷை சட்ட பிரிவில் கண்டவிதமான ஆக்ஷேபனைகளை யெல்லாம் பேடெண்டு விண்ணப்பம் பெண்டிங்கிலிருக்கும்பொழுது லைஸன்ஸ் கொடுக்கப்படுமுன் செய்யத்தகுமே யொழிய பேடெண்டு கொடுக்கப்பட்ட பிறகு அதை மீறி நடக்கிறவர்கள் பேரில் நடத்தப்படும் தாவாக்களில் அவ்வித ஆக்ஷேபனைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி எதிர் வழக்காடக் கூடாதென்று ஏற்பட்டிருக்கிறது.

தவிர ஷை ஆக்டின் 29-(4)-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி யாதொரு பிரதிவாதி பேடெண்டில் கண்ட வேலையானது நூதனமானதல்ல வென்று கோர்ட்டில் எதிர் வழக்காடவேண்டுமானால் ஷை பேடெண்டுக்காக விண்ணப்பம் கொடுக்கப்பட்ட தேதிக்கு முந்தியே அந்தப் பிரதிவாதி அல்லது அவனுடைய முதலாளி அதேவிதமான வேலையை யாதார்தமாகவும் பைரங்கமாகவும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தில் எந்த பாகத்திலாவது நடத்தி வந்ததாக ருஜூப்படுத்தவேண்டுமென்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பேடெண்டு கொடுக்கப்படுமுன் 20-வது பிரிவின்படி செய்யக்கூடிய ஒரு ஆக்ஷேபனையை பேடென்டு கொடுக்கப்பட்ட பின் நடக்கும் கோர்ட் வியவகார காலத்தில் செய்யவேண்டுமானால் மேற்கூறிய நிபந்தனையின் அம்சங்கள் ருஜூவாகவேண்டும். பிரதி வாதியே பைரங்கமாய்பேடென்டில்கண்டவிதமானவேலையைபேடெண்டுவிண்ணப்பம்கொடுக்கப்படுமுன் நடத்தி வந்திருப்பதாகவும் ஆகவே அது நூதன மல்லவென்றும் ரூபிக்கவேண்டும். அப்படியிருக்க மேற் கூறிய நிபந்தனையின் அம்சங்களை ருஜூப்படுத்த அவசியமில்லை யென்று இந்தக் கேஸில் பிரதிவாதி வாதிக்கு அதற்கு இரண்டு காரணங்களை எடுத்துச் சொல்லுகிறார். அதாவது—(1) பேடெண்டில் கண்டவேலையானது நூதனமல்ல வென்று சொல்லாமல் அவ்வித வேலைத்திறமையானது பேடெண்டுக்கு லாயக்கான வேலையல்லவென்று சொல்லப்படுகிறது. இங்கிலாந்தில் நடந்த பேடெண்டு வழக்குகளில் யாதொரு பேடெண்டில் கண்ட விஷயம் நூதனமல்ல வென்று ஆக்ஷேபிப்பதுடன் அது பேடென்டுக்கு யோக்கியமான அம்சமல்லவென்றும் பிரத்தியேகமான எதிர் கக்ஷியாடுவது வழக்கமாயிருந்திருக்கிறது. அநேக நூலாசிரியர்கள் மேற்கூறிய இரண்டுவித ஆக்ஷேபனைகளை வித்தியாஸமானதென்று பிரித்துக்காட்டியிருக்கிறார்கள். மற்றும் சில நூலாசிரியர்களோ இரண்டுவித ஆக்ஷேபனைகளும் ஒரே கருத்திலடங்கினதென்றும் அதாவது பேடெண்டுக்கு யோக்கியமல்லாத விஷயம் (வேலை) சாதாரணமான வேலையென்றும் நூதனமானதல்ல வென்றும் ஆகவே நூதனமல்ல வென்ற இரண்டாவது ஆக்ஷேபனைக்கும் பேடெண்டுக்கு லாயக்கில்லை யென்ற ஆக்ஷேபனைக்கும் வித்தியாசமில்லை யென்று எழுதியிருக்கிறார்கள். ஹைகோர்ட் அசல் தாப்பில் 1911-ம் வருத்திய அசல் நெ. 178-ல் பிரதிவாதி யாதொரு பேடெண்டில் குறிக்கப்பட்டிருந்த வேலைத்திறமையானது பேடெண்டுக்கு யோக்கியமானதல்லவென்று செய்த பிரத்தியேகமான ஆக்ஷேபனையை கோர்ட்டார் (ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களே) ஏற்றுக்கொள்ளவில்லை. 1888-ல் ஏற்பட்ட ஆக்டின் அம்சங்களையும் 1911-ல் பிறந்த (II-வது) புதிய பேடென்டு ஆக்டின் அம்சங்களையும் கவனித்து பார்க்குமிடத்து மேற்கூறிய இருவித ஆக்ஷேபனைகளுக்கும் வித்தியாஸமில்லை யென்றே சொல்லவேண்டும். 1888-வது வருஷத்திய ஆக்டின் 20-வது பிரிவில் யாதொரு வேலைத்திறமை பேடெண்டுக்கு யோக்கியமான தல்லவென்ற ஆக்ஷேபனையின் அம்சம் குறிக்கப்படவே யில்லை. சட்ட கர்த்தாக்கள் இரண்டையும் ஒரே அம்சமாக பாவித்திருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். ஆகையால் பிரதிவாதி செய்கிற ஆக்ஷேபனையானது நூதனம்என்ற பாயிண்டில் அடங்கியதாகும். அப்படியானால் 29-(4)-வது பிரிவில் கண்ட நியாயப்படி ருஜூ அம்சமில்லாமல் மேற்படி ஆக்ஷேபனையை இந்த தாவாவில் செய்ய இடங்கொடுக்க கூடாதென்று சொல்லவேண்டும்.



இரண்டாவதாக ஒரு வேலைத்திறமையானது நூதன மல்லவென்று வியவகாரத்தில் பிரதிவாதி ஆக்ஷேபிக்ககூடிய 1888-வது வருஷத்திய ஆக்டின் 29-(4)-வது பிரிவில்கண்ட நிபந்தனையானது 1911-வது ஆக்டில் கிடையாதென்றும் ஆகவே இந்த அப்பீல் ஈரங்கியாகிறகாலத்தில் நமோதுக்கு வந்த புது ஆக்டை அனுஸரித்து நடக்கவேண்டியது நியாயமாகுமென்றும் ஆகவே புது ஆக்டில் கண்டபடி பேடெண்டைக்கொடுக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்க என்னகாரணங்களை எடுத்துக்காட்டலாமோ அவைகளை யெல்லாம் பேடெண்டாக்டின்படி நடக்கும் கோர்ட் வியவகாரங்களில் எதிரான்ஸரில்சொல்லிக்கொள்ளலாமென்றும் வாதிக்கப்பட்டு தாவா தறிவேலை நூதனமல்லவென்றுமட்டும் பிரதிவாதி 1911-ம் வருஷத்திய புது ஆக்டை அனுஸரித்து ஆக்ஷேபிக்கலாமென்றும் பிரதிவாதியே பேடெண்டு விண்ணப்பத்திற்குமுன் அதேவித தறியைக்கண்டுபிடித்து பைரங்கமாய் வேலைசெய்து வந்ததாக ருஜூப்படுத்தவேண்டிய பழைய ஆக்டின் அம்சத்தைப் பிரயோகிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும் வாதிக்கப்படுகிறது. இதனால் அப்ஈரங்கி கேட்கிற கோர்ட்டாரும் அசல் வழ[illegible] மறு ஈரங்கி கேட்கிற கோர்டாராக [illegible]து மறு ஈரங்கி காலத்தில் நமோதுக்கு வந்திருக்கிற சட்ட முறையை அப்பீல்கோர்ட்டார் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அசல் கோர்ட் தீர்மானம் ஏற்படும்காலத்தில் 1888-வது ஆக்ட் நமோதிலிருந்தது. அப்பீல் ஈரக்கிகாலத்தில் 1911-வது வருஷத்திய புதுஆக்ட் நமோதுக்கு வந்துவிட்டது. ஆகையால் அப்பீல் கோர்ட்டார் 1911-ம் வருஷத்திய ஆக்டின்படி நடக்கவேண்டுமென்று வாதிக்கப்பட்டு அதற்காதாரமாக 21 M.L.J. 31-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற புல் பெஞ்சு கேஸின் தீர்மான நியாயம் யெடுத்துக் காட்டப்படுகிறது. ஷை புல் பெஞ்சு கேஸில் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் ஒரு வசனத்தைப்பற்றி யோஜிக்கும்பொழுது மேற்கூறிய அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தால் ஒரு பொதுவானமுறை ஏற்பட்டதாகச் சொல்லத்தகாது. யாதொரு சட்டம் ஏற்பட்டதற்குமுன் தாகலான நடவடிக்கைகளுக்கும் ஷை சட்டமுறை அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று பொதுவாய்ச் சொல்வதற்கு மேற்கூறிய புல் பெஞ்சு தீர்மானம் போதுமான அதாரிடியாகமாட்டாது. அன்றியும் 1897-ம் வருஷத்திய ஜெனரல்

கிளாஸஸ் ஆக்டின் அம்சங்களைக் கவனித்தால் பிந்திய ஆக்டானது முந்திய ஆக்டை ரத்தாக்கும் நியாயத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது ஜெ. (General Clauses Act) ஆக்டின் 6-(e)-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி புது ஆக்ட் அமுலுக்கு வருமுன் தாகலாய் நடைபெற்றுவரும் சட்ட நடவடிக்கைகளின் விஷயமாய் புது ஆக்டின் அம்சங்கள்தான் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று புது ஆக்டில் கண்டிருந்தால்மட்டும் முந்திய ஆக்டின் அம்சத்தை நிராகரிக்கலாம். இல்லாவிடில் அதாவது புது ஆக்டில் அவ்வித அம்சம் குறித்துச் சொல்லப்படாவிட்டால் பழய ஆக்ட் அமுலிலிருக்கும்பொழுது தாகலாய் பெண்டிங்கிலிருக்கும் நடவடிக்கைகளுக்கு பழய ஆக்டின் அம்சங்களே பிரயோகிக்கப் படவேண்டும். 1911-வது வருஷத்திய புது பேடெண்டு ஆக்டில் முந்தி தாகலான நடவடிக்கைகளுக்கும் புது ஆக்டே அனுஷ்டிக்கத்தகுமென்று சொல்லப்படவில்லை. ஆகவே தாவா கேசானது பழய ஆக்ட் அமுலிலிருக்கும்பொழுது தாகலானபடியால் பிரதிவாதி பழய ஆக்டின்படி நடக்கவேண்டும். அதாவது வாதியின் தறிவேலையை பேடெண்டு விண்ணப்பம் தாகலாகு முன் பிரதிவாதியே கண்டுபிடித்து நடத்திவந்ததாக ருஜுப்படுத்தவேண்டும். அப்படிக்கில்லாமல் தாவா தறிவேலை நூதனமானதல்லவென்று மட்டும் எதிர்வாதம் செய்யக்கூடாது.

ஆகையால் பிரதிவாதி மேற்கூறிய ருஜு அம்சத்தை இந்தக்கேஸில் திருப்திகரமாய் பிரயோகித்திருக்கிறாராவென்று கவனித்துப் பார்க்கவேண்டியது கோர்ட்டாருடைய கடமையாகும். அதாவது பழய ஆக்டின் 29-(4)-வது பிரிவின்படி பிரதிவாதி ருஜு அம்சம் விட்டிருக்கிறாரா வென்று நிதானித்துப் பார்க்கவேண்டும்.

(பேடெண்டு பெற்ற வாதி லைஸென்ஸை பற்பல பேர் வழிகளுக்கு டிரான்ஸ்பர் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே பேடெண்டின் சிலாக்கியத்தை அடைந்தனுபவிக்கிற பற்பல வாதிகளும் தனித்தனியாக பிரதிவாதி வகையறாக்கள் பேரில் நடவடிக்கை யெடுத்திருக்கிறார்கள் போலும், அதனால் தான் அப்பீல்கள் 141 முதல் 144-வது நம்பர்களாக தாகலாகி யிருக்கின்றன).

பிரதிவாதிகள் மேற்கூறிய பாயிண்டை அதாவது பேடெண்டு விண்ணப்பம் தாகலாகுமுன் பிரதிவாதி வகையறாக்கள் அதே விதமான தறிவேலையை பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் எங்கேயாகிலும் பகிரங்கமாய் நடத்திவந்தார்களென்ற பாயிண்டைப் பற்றி பிரதிவாதிகள் சரியானபடி ருஜுபடுத்தவில்லையென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஒரு நம்பரிலுள்ள பிரதிவாதியைத் தவிர மற்றவர்கள் முந்திய தறிவேலை செய்த விஷயத்தைப்பற்றி சாட்சியம்சம் விடவேயில்லையென்று அப்பீல் வாதி வக்கீல் ஒப்புக்கொள்ளுகிறார். ஆகவே 143-நி. அப்பீலைத் தவிர்த்து மற்ற அப்பீல்கள் தள்ளுபடியாகவேண்டியதென்று இப்பொழுதே சொல்லவேண்டும். 143-நி. அப்பீல் வாதியும் சாட்சியம்சம் சிலவாராய் விட்டபோதிலும் அது ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் பிரயோஜனமில்லையென்றும் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இது விஷயமாய்ச் சொல்லும்பொழுது பேடெண்டு ஆக்டின் 37-வது பிரிவில் சொல்லியிருக்கிற சட்ட விதியைப் பற்றி பிரஸ்தாபித்து பிரதிவாதி ஆக்ஷேபிக்கிற பாயிண்டுகளைப்பற்றி ஸ்டேட்மெண்டு தாகல் செய்து அதில் குறிக்கப்பட்டிருக்கிற விஷயங்களை மட்டும் தான் விஜாரணை காலத்தில் ருஜு அம்சம் விடலாமென்றும் ஆனால் இந்தக் கேஸில் பிரதிவாதி அவ்வித ஸ்டேட்மெண்டு தாகல் செய்யாமல் விஜாரணை காலத்தில் ருஜு அம்சம் விட்டிருக்கிறாரென்றும் ஜில்லா ஜட்ஜியவர்கள் குறை கூறியிருக்கிறார்கள். ஆனால் பிரதிவாதியை ஸ்டேட்மெண்டு தாகல் செய்யும்படி நோடீஸ் கொடுக்கவில்லை. விஜாரணைகாலத்தில்தான் அவ்வித ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமென்ற சட்டவிதி யிருப்பதாகத் தெரியவந்தது. அன்றியும் பிரதிவாதி கேஸின் ஆரம்பத்தில் ஒரு பிரமாணப்பத்திரிகை தாகல்செய்திருக்கிறார். அதில் தாவா தறியைப் போலொத்த கருவியைக் கொண்டு தான் முந்தியே வேலை நடத்தி வந்ததாகவும் அதைப்பற்றி விவரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பிரமாணப்பத்திரிகையை ஸ்டேட்மெண்டாக பாவிக்கலாம். அதில் கண்ட விவரங்களை ஆராய்ந்து பார்த்தால் பிரதிவாதியின் ருஜு அம்சம் நம்பத்தக்கதல்லவென்று சொல்லவேண்டும். அந்த பிரமாணப் பத்திரிகையில் ஒபில முனிசாமி



அய்யர் என்றவர் தாவா தறியைப்போலொத்த தறியைக்கொண்டு 15-வருஷங்களுக்கு முன் சார்பு ராமஸாமி நாயகர் மூலமாய் வேலை நடத்திவந்ததாகச் சொல்லி யிருக்கிறது. விஜாரணை காலத்தில் மேற் கூறிய விஷயம் ருஜுப்படுத்தப்படவேயில்லை. ஆனால் வேறுவிதமான விஷயம் ருஜுப்படுத்தப்பட்டு பிரமாணப் பத்திரிகையில் கண்ட தகவல் மெய்யல்லவென்று ஏற்பட்டது. ஒபில முனிசாமி அய்யர் கொடுத்த வாக்குமூலத்தில் தான் தறிவேலையைத் துவக்கவில்லை யென்றும் 1900-ல் முதல் முதல் தான் தாவா தறிவேலையில் நெய்யப்பட்ட துணிகளை மிருகக் குறியுடைய கரைக்கட்டுள்ளதாய் கிரயத்திற்கு வாங்கினதாகவும் சொல்லியிருக்கிறார். இதைப்பற்றி மேல் யோஜனை செய்ய வேண்டிய அவசியமே கிடையாது. ஏனெனில் பிரதிவாதிவிசாரணைகாலத்தில் முற்றிலும்வேறுவிதமான கதையை ஆதாரங்கொண்டு ருஜுவிட்டிருக்கிறார். அதாவது தான் 26-வது சாட்சியாகிய தஞ்சை வாஸி கோஸ் கிருஷ்ணய்யரிடம் தாவா தறிவேலையைக் கற்றுக்கொண்டதாகச் சொல்லுகிறார். இதுவும் நம்பத்தக்கதல்லவென்று ஜில்லா ஜட்ஜியவர்களுக்கு ஒத்துச்சொல்லவேண்டும். கிருஷ்ணய்யர் தாவா தறிவேலையைக் காசிதேசத்தில் போய் கற்றுக்கொண்டதாகச் சொல்லுகிறார். இந்த விதமான தறிவேலைகாசியிலுள்ளவர்களுக்குத் தெரியுமென்ற விஷயத்திற்கு யாதொரு ரூபகாரமும் கிடையாது. ஆனால் கிருஷ்ணய்யருக்குத் தெரிந்த விதமான தறிவேலை மதுரையில் கற்றுக்கொள்ளப்பட்டதாக ருஜு அம்சமிருக்கிறது. இந்தப் பிரதிவாதியே கிருஷ்ணய்யருக்குகற்றுக்கொடுத்ததாக அனுமானிக்க நியாயமிருக்கிறதே யொழிய கிருஷ்ணய்யரிடம் இந்தப்பிரதிவாதி கற்றுக்கொண்டதாகச் சொல்ல இடமேயில்லை. அதுவும் வாதி பேடெண்டுக்காக விண்ணப்பம்கொடுத்தபின் பிரதிவாதி அந்த தகவலைத்தெரிந்து அந்தத் தறியின் மர்மத்தைக் கற்றுக்கொண்டு தஞ்சை கிருஷ்ணய்யருக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்போலும். அடைப்பட்டு வேலைசெய்வதற்காக மதுரைக்குப்போனவகையில் செலவான தொகையைக் குறித்தெழுதப்பட்ட கணக்கு கிருஷ்ணய்யர் வசமிருக்கிறதாகப் புலப்படுகிறது. வாதி 1901-ல் பேடெண்டுக்காக விண்ணப்பம் கொடுத்திருக்க அந்தத்தேதிக்குப்பின் அதாவது 1901-ஜூன் 18-ல் மதுரையிலுள்ள T. K. வெங்கட்ராமய்யரென்ற ஒரு ஜவுளி வியாபாரி பாலய்யன் என்ற இந்தப் பிரதிவாதிக்கு கோஸ் கிருஷ்ணய்யர் வகைக்காக ஒரு அடைப்பட்டு வேலை செய்வதற்காக கூலியும் கொடுத்திருக்கிறார். இதுகளைப் பார்க்குமிடத்து கோஸ் கிருஷ்ணய்யர் 1901-ல் மதுரைக்குப்போய் வேலை கற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்றும் இந்தப் பிரதிவாதிக்கு அதற்குமுன்னமேயே இந்த வேலையின் மர்மம் தெரியுமென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இந்தப் பிரதிவாதி கிருஷ்ணய்யரிடமிருந்து 1897-ல் கற்றுக் கொண்டதாகச் சொன்ன இந்தப் பிரதிவாதியின் வாக்குமூலம் நம்பத்தகாது. அன்றியும் கிருஷ்ணய்யர் பாலய்யன் என்ற இந்தப் பிரதி வாதியை வெங்கட்ராமய்யர் வீட்டில் முதல் சந்தித்ததாகச் சொல்லியிருக்கிறார். பாலய்யன் வெங்கட்ராமய்யரிடம் வேலைசெய்வதாய் ஒப்புக்கொண்ட உடன்படிக்கையின் தேதி 1900மே 26உ. யாகிறது. அப்படியானால் கிருஷ்ணய்யர் இந்தப் பிரதி வாதியை முதல் முதல் 1900-ல் சந்தித்திருக்கவேண்டும். இதனாலும் பாலய்யா 1897ல் கிருஷ்ணய்யரிடம் இந்தத் தறிவேலையைக் கற்றுக்கொண்டதாகச் சொல்வது உண்மையல்ல. பிரதிவாதி வேறு எவ்விதத்திலும் இந்த வேலையைக் கற்றுக்கொண்டதாக சொல்லவுமில்லை. வாதியின் விண்ணப்பத் தேதிக்கு முன் இந்தப்பிரதிவாதி தாவா தறிவேலை செய்து வந்ததாக ருஜு பாகமும் கிடையாது.

இந்தப்பிரதிவாதி 1900 மே 26-ல் வெங்கட்ராமய்யரிடம் செய்து கொண்ட உடன்படிக்கையால் கண்ட வசனங்களால் இந்தப் பிரதிவாதிக்கு தாவா தறிவேலை அதற்கு முந்தியே தெரிந்திருக்கலாமென்று வாதிக்கப்படுகிறது. அந்த உடன் படிக்கையில் புதிதாய் நெய்யப்பட்ட மாதிரியைக் கொண்டுவருவதாய்ச் சொல்லியிருக்கிறது. அடைப்பட்டு மோஸ்தர் என்று குறித்தெழுதப்படவில்லை. அன்றியும் 1900த்தில் இந்தப் பிரதிவாதி வாதிகளை அதாவது கோறை நாறுகளை ஏராளமாய் வாங்கினதாக ருஜுவிருக்கிறது. வாதியின் பேடெண்டு பெற்ற தறியில் ட்வைன் கயிறு உபயோகப்படுத்தி வரப்படுகிறது. கோறைநாறு மிகவும் தொந்தரவானவேலை. அது கர்நாடகமானதறிவேலைக்காக உபயோகப்பட்டு வந்திருக்கிறது. கோ

றையினாலும் வாதியின் தறியைப்போல் மிருகக் குறிவைத்த கரைக்கட்டு நெய்யப்படலாமென்றாலும் அதுகடினமானவேலை. கர்நாடக வேலையாகும். வாதி விண்ணப்பம் கொடுக்குமுன் 1900-ல் தறிவேலையின் மாதிரியைப் பூர்த்திசெய்து கொண்டு சென்னையில் சாட்டர்டன் துரையவர்களிடம் காட்ட வந்திருக்கிறார். இச்சமயங்களில் டை தறியின் மர்மம் வெளியாகி யிருக்கக்கூடும். அதைப்போல் காபியடிக்க ஆதியிலேயே அநேகர் பிரயத்தனப்பட்டிருக்கலாம்.

ஒருஜவுளி வியாபாரி தன்னிடமிருந்து அடைப்பட்டு மோஸ்தர் தறியொன்றை செய்து கொடுப்பதாக அட்வான்ஸ் வாங்கிக்கொண்டு தறியைச் செய்து முடிக்கத்தவறின ஒரு நெசவுகாரன் பேரில்தாவா செய்த ரிகார்டு ஒன்று பிரதிவாதிக்காக தாகல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தப் பிரதிவாதிக்கு அவனுடைய இனத்தானொருவன் ஒரு பதில் கார்ட் எழுதி அதில் இந்தப் பிரதிவாதி செய்கிற அடைப்பட்டு வேலையில் கரைக் கட்டை மட்டும் அந்த மோஸ்தரில் செய்யலாமா துணி முழுவதையும் அதே மோஸ்தரில் நெய்யலாமா வென்று எழுதிக்கேட்கப்பட்டிருக்கிறது. இந்தக்கார்ட் 1901 மார்ச்சில் எழுதப் பட்டிருக்கிறது. இதனால் இந்தப் பிரதிவாதிக்கு வாதியின் தறிவேலையின் மர்மம் எட்டி அதுபோல் செய்யப் பிரயத்தனப்பட்டு வந்ததாகச் சொல்லலாமே யொழிய வாதி விண்ணப்பம் கொடுத்ததற்கு முந்தியே இந்தப் பிரதிவாதியின் தறியைப்போல் வேலை செய்து வந்ததாக யூகிக்கக் கூடாது. தவிற டை கார்ட் எந்த கடிதத்திற்கு பதிலோ அது வெளிவரவில்லை. வெளிவந்தால் பாதகமாயிருக்கும். அதற்காகவே மறைக்கப் பட்டிருக்கலாம். மற்ற விதமான ருஜுபாகங்களைக் கவனிக்தால் 1900க்கு முன் மதுரையில் தாவா தறியில்நெய்யத்தக்க கரைக்கட்டுவேலை நடந்து வந்ததாகக் காணப்படவில்லை யென்று பரிஷ்காரமாய் ஏற்படுகிறது. தாவா தறிவிஷயமாய் மிகவும் விசாலமாய் எடுத்துப் பரிசோதிக்க இச்சமயம் விரும்பத்தகாத காரியமாகும். ஏனெனில் ஹைகோர்ட் அசல் தரப்பில் வாதியின் பேடெண்டை ரத்து செய்வதற்காக நடவடிக்கைகள் பெண்டிங்கிலிருக்கின்றன. இந்த அப்பீல்களைப்பற்றின மட்டில்பிரதிவாதிகள் வாதியின் விண்ணப்பத் தேதிக்கு முன் தாவா தறியைப் போலொத்த வேலையைச் செய்து வந்ததாக திருப்திகரமாய் ருஜுப்படுத்தவில்லையென்று தீர்மானித்து இந்த அப்பீல்கள் தள்ளுபடியாகவேண்டுமென்று சொல்லத்தகும். XXVII M. L. J. 573.

———()———

## ஜஸ்டிஸ் ஸ்யிலிங் & ஜஸ்டிஸ் நேபியர்

(கிருஷ்ணா ஜில்லா)

S. A. 73 of 1913—28 ஆகஸ்ட் 1914.

பாபி ரெட்டி vs. வெங்கடா சார்யுலு.

ஜமீன்தாரிடமிருந்து கிராண்டு பெற்று தாவா கிராமத்தை அனுபவித்து வருகிற ஒரு அக்கிரகாரம்தார் 1910-ம் வருஷத்திய அசல் நெ 566-ல் பெஜவாடா டி. மு. கோர்ட்டில் டை நிலத்தின் சுவாதீனத்திலிருக்கிற பிரதிவாதிகளை இஜெக்ட் செய்யும் பொருட்டு தாவா செய்ததில் பிரதிவாதிகள் இந்த தாவா ஸிவில் கோர்ட்டில் செய்யக்கூடாதென்றும் தாவா கிராமம் எஸ்டேட் நிலமாகுமென்றும் ஆகவே வாதி இந்த இஜெக்ட் மெண்டு பிராதை ரெவின்யூ கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கவேண்டு மென்றும் தவிற வாதி தங்களை அப்புறப்படுத்தத் தக்க நியாயம் யாதொன்றும் ஏற்படவில்லை யென்றும் எதிராக்ஷேபனை செய்தார்கள். டி. மு. கோர்ட் தீர்மானத்தின் பேரில் பந்தர் சப் கோர்ட்டில் அப்பீலாகி அங்கு வாதிக்கனுகூலமாய் டிக்கிரீ யளிக்கப்பட்டது. அதன் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொன்ன காரணச் சுருக்கமாவது:—

தாவா நிலங்களிருக்கும் அக்கிரகாரம் எஸ்டேட் நிலமா வென்று தீர்மானிக்கவேண்டியது முதல் பாயிண்டாகும். எஸ்டேட் நிலமென்று ஏற்படும் பட்சத்தில் ஸிவில் கோர்ட்டாருக்கு இந்த தாவாவை விஜாரித்துப்பைசலளிக்க அதிகாரவரம்பில்லை யென்பது நிச்சயமே. ஆனால் ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பில்லை யென்று சொல்லுகிற பார்ட்டிதான் அவ்விஷயத்தை ருஜுப்படுத்தவேண்டிய நியாயமாகும். அதாவது இந்தக்கேஸில் பிரதிவாதிகள் ருஜுப்படுத்தவேண்டிய தென்று சொல்லத்தகும். ஆகையால் பிரதிவாதிகள் ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பில்லை யென்று ருஜுப்படுத்த மூன்று பாயிண்டுகளைப் பற்றி சாட்சியம் விடவேண்டிய தாகும். அதாவது:—



(1) ஜமீன்தாரால் வாதிக்குக் கிடைத்த கிராண்டு நில வருமானம்மட்டுமா அல்லவா?

(2) ஆதியில் கிராண்டு பெற்றவர்களுக்கு கிராண்டுகாலத்தில் குடிவாரபாத்தியத்தையுமிருந்ததா இல்லையா ?

(3) தாவா கிராண்டானது கவர்ன்மெண்டாரால் உறுதியாகி அங்கீகரிக்கப்பட்டதா?

மூன்றாவது பாயிண்டைப்பற்றி தகரார் செய்யப்படவில்லை. முதலாவது பாயிண்டைப் பற்றியும் ருஜு அம்சத்தை கவனித்தால் கிராண்டளித்த ஜமீன்தாருக்கு தவா நிலங்களில் வருமான பாத்தியதை மட்டுமிருந்த படியால் ஜமீன்தார் அந்த பாத்தியதையை மட்டும் தான் கிராண்டில் கொடுத்திருக்கவேண்டும். இரண்டாவது பாயிண்டைப்பற்றிதான் தீர்மானிக்கவேண்டியது கடினமானகாரியமாகிறது. பிரதிவாதி தரப்புவக்கிலவர்களே 2-வது பாயிண்டு விஷயமாய் யாதொரு ருஜு அம்சமும் விடவில்லை யென்று ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அதைப்பற்றிய ருஜுபாரம் வாதியைச் சேர்ந்ததாயிருக்க கீழ்கோர்ட்டார் தப்பாக டை பாரத்தைத் தங்கள் பேரில் சுமத்தியிருக்கிறார்களென்று புகார் சொல்லுகிறார். 27 M. L. J. 233-ல் ரிபோர்ட்டாகியிருக்கும் தீர்மானத்தை அனுசரித்து ஒரு கிராமம் எஸ்டேட் நிலமாகுமாவெனத் தீர்மானிப்பதற்கனுஸாரணையாக கிராண்டு காலத்தில் கிராண்டு பெற்றவர்களுக்குக் குடிவாரபாத்தியதை கிடையாதென்று அனுமானிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். அதாவது கிராண்டு காலத்தில் கிராண்டு பெற்றவர்களுக்கு குடிவார பாத்தியமிருந்ததாகவே அனுமானித்து அப்படியல்லவென்று யார் சொல்லுகிறார்களோ அவர்களே அதை ருஜுப்படுத்த வேண்டுமென்று சொல்லத்தகும். ஆகவே 2-வது பாயிண்டைப்பற்றி பிரதிவாதிகள்தான் ருஜுப்படுத்தி யிருக்கவேண்டும். வாதிகளுக்கு கிராண்டுகாலத்தில் குடிவார பாத்தியதை கிடையாதென்று ருஜுப்படுத்தியிருக்கவேண்டும். யூகிக்க வேண்டிய முடிவை தீர்மானிக்கத்தக்க விஷயங்கள் ரூபிக்கப்படலாம். ஆனால் இந்தக்கேஸைப் போலுள்ள பூர்வீகமான கிராண்டு விஷயமாய் வேறுவித ருஜுபாகம் கிடைப்பதரிதாகும். இந்தக் கேஸில் பிரதிவாதிகள் டை பாயிண்டைப்பற்றி அப்படிப்பட்ட ருஜு அம்சமே விடவில்லை. ஆகையால் அதிகார வரம்பைப்பற்றி சப்கோர்ட்டார் அடைந்த தீர்மான அபிப்பிராயம் சரியே. பிரதிவாதிகளை இஜெக்ட செய்ய போதுமான காரணமிருக்கிறதாவென்ற விஷயத்தைப்பற்றி கீழ் கோர்ட்டார் அடைந்த அபிப்பிராயம் மாற்றத்தக்கதல்ல. அது முடிவான தீர்மானமென்றுசொல்லவேண்டும். மேற்கூறிய காரணங்களால் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M.L.J. 567.

———...———

## ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்.

(விசாகப்பட்டணம்)

Crl. R. C. No. 774 of 1913—27 பிப்ரவரி 1914.

அப்பலராஜு vs. ஸுரப்பராஜு.

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் 163-வது பிரிவின்படி யாதொருவன் ஒரு எஸ்டேட் நிலத்தை சாகுபடி செய்தவனிடமிருந்து சட்டப்படி டிரான்ஸ்பர் பெற்றாகிலும் அல்லது டை யானுடைய வாரிஸாகிற நிலமையினாலாவது டை நிலத்தை அனுபவிக்காமல் வேறுவிதமான ஒழுங்கீன நடத்தையால் டை நிலத்தில் பிரவேசித்து அனுபவிக்கிறவனை நிலச்சுவான்தார் இஜெக்ட் செய்யலாம். 212-வது பிரிவின்படி மேற்கண்டவிதமாய் இஜெக்ட் மெண்டு டிக்கிரீ பிறந்தும் நிலத்தை விட்டுப் போகாதவன் பேரில் கிரிமினல் தாப்பில் பிராது கொடுத்து ரூ. 500 வரையில் அபராததண்டனை விதிக்கச் செய்யலாம். சட்டவிதிகள் இவ்விதமாய் ஏற்பட்டிருக்க ஒரு நிலச்சுவான்தார் தாவா நிலத்தைத் தகப்பனுக்குப்பின் மகன் தொடர்ந்து அனுபவித்து வருகையில் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட் நமோதுக்கு வருமுன் மகனை வெளிப்படுத்த நோடீஸ் கொடுத்து அதாவது அவனுக்கு குடிவார பாத்தியத்தை யில்லையென்ற காரணத்தால் அவனை இஜெக்ட் செய்ய நியாய முண்டென்று சொல்லி நோடீஸ் கொடுத்து டிக்கிரீயும் பெற்றார். டிக்கிரீப்படி அந்த ரயட்டானவன் காலி செய்யாதபடியால் நிலச்சுவான்தார் பித்தபுரம் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிராது கொடுத்து அந்த ரயட்டுக்கு அபராதம் போட வைத்தார்.

அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் தகப்பன் அனுபவித்த நிலத்தை மகன் தொடர்ந்து அனுபவித்ததால் அதாவது வாரிஸ் பாத்தியதையால் எதிரிநிலத்தை அடைந்து அனுபவித்தமையால் அவனை 163-வது பிரிவின்படி இஜெக்ட் செய்ய நியாயமில்லையென்றும் ஆகவே எதிரியின்பேரில் பிறந்த டிக்ரீ 163-வதுபிரிவின்படி ஏற்பட்டதாக பாவிக்கத்தகாதென்றும் எதிரியை 212-வது பிரிவின்படி தண்டிக்கக் கூடாதென்றும் தீர்மானித்து அபராத தண்டனையை ரத்து செய்து விட்டார்கள். XXVII. M. L. J. 676.

---

ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.

(திருச்சினாப்பள்ளி ஜில்லா)

**S. A. 434 of 1913—10 செப்டம்பர் 1914.**

நாராயணரெட்டி vs. காமாட்சியம்மாள்

ஒரு தகப்பன் இறந்துபோகுமுன் தன்னுடைய சொத்துக்களைப்பற்றி உயிலெழுதிவைத்து அதில் தன்னுடைய மைனர் குமாரன் மேஜராகும் பட்சத்தில் அதாவது மைனர் தசையிலேயே மரிக்காத பட்சத்தில் ஷை சொத்துக்களை அடையவேண்டுமென்றும் இல்லாவிடில் அதாவது மைனராகவே தன் மகன் இறந்துபோனால் ஷை சொத்துக்கள் ஒரு கோவிலுக்குச் சேர்ந்து விடவேண்டுமென்றும் கண்டு அதுமட்டும் 1-ம் பிரதிவாதி டிரஸ்டியாக சொத்துக்களை ஆண்டு வரவேண்டியதென்று சொல்லி அவைகளை 1-ம் பிரதிவாதியின்வசம் ஒப்புவித்துவிட்டார். தகப்பன் காலஞ்சென்ற பிறகு மைனர் மகன் தன் கார்டியன் மூலமாய் கரூர் டி-மு-கோர்ட்டில் 1-ம் பிரதிவாதி யிடமிருக்கும் சொத்துக்களை தன் வசப்படுத்திக் கொள்வதற்காக தாவா செய்து தகப்பன் எழுதிவைத்த உயில் செல்லத்தகாதென்றும் சொத்துக்கள் பூர்வீகமான கூட்டுக்குடும்பசொத்தென்றும் தகப்பன் இறந்த பின் சொத்து பாத்தியதை தனக்குள் வந்து சேர்ந்து விட்டதென்றும் சொல்லி வழக்காடினான். ஈரங்கிவாய்தாவுக்கு முன் ஷை மைனர் வாதியும் இறந்து போகவே அவனுடைய வாரிஸ்தாராகிய நாராயணரெட்டியென்றவர் மைனருக்கு பதிலாக கேஸை நடத்தும்படி ரிகார்டில் சேர்க்கப்பட்ட பின் 2-ம் வாதி மைனர் காலஞ்சென்றபின் உயிலின் அம்சத்தை அனுஸரித்து தாவா சொத்துக்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு அனுபவித்துவந்த கோவிலதிகாரிகளையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து வியாஜ்ஜியத்தை மேல்நடத்தினார். டி-மு-கோர்ட் தீர்ப்பின்பேரில் திருச்சினாப்பள்ளி சப்கோர்ட்டுக்கு அப்பீலாகி அங்கு மைனர் வாதியின் வியாஜ்ஜிய மூலமும் இந்த 2-ம் வாதியின் வியாஜ்ஜிய மூலமும் ஒரே விதமானதல்லவென்றும் ஆகவே மைனர் வாதியின் வழக்கை 2-ம் வாதி மேல்நடத்தக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டு 2-ம் வாதிக்கு விரோதமாகப்பைசலளிக்கப்பட்டது. அதின்பேரில் 2-ம் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் பிசகென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீலைத் திரும்பவும் பயிலுக்கெடுத்து ஈரங்கி கேட்டுப் பைசலளிக்கும்படி சப்கோர்ட்டுக்கு ரிமாண்டு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் சொன்னகாரணச்சுருக்கமாவது:—

சப்கோர்ட்டார் தாவா உயிலை இரண்டுபாகமாகப் பிரித்து அதில் இரண்டாவது பாகத்தைப்பற்றி மைனர் வாதி வழக்காட அவசியமில்லாமல் முதல் பாகத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு ஆகவே உயிலின் செலாக்கியத்தை அனுஸரித்து மைனர் வாதி வழக்கெடுத்ததாகவும் அவ்வித வழக்கின்வியாஜ்ஜிய மூலத்திற்கும் மைனர் வாதியின் அடுத்தவாரிஸ் பாத்தியதையை அடைந்த 2-ம் வாதியின் வியாஜ்ஜிய மூலத்திற்கும் ஒற்றுமையில்லையென்றும் அதாவது 2-ம் வாதி கூட்டுக்குடும்ப சொத்தின் பாத்தியதையைக் கொண்டாடி வழக்கை மேல் நடத்துவதாய் சப்கோர்ட்டார் அனுமானித்து 2-ம் வாதியின்வியாஜ்ஜியம் உயிலின் அம்சத்தைச் சார்ந்ததல்லவென்ற கருத்துடன் சப்கோர்ட்டார் 2-ம் வாதிமைனர் வாதியின் வழக்கை மேல் நடத்தக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள் போலும். அது சரியான அபிப்பிராயமென்று சொல்லத்தகாது. மைனர்வாதி உயிலை ஆதாரமாகக்கொண்டு வியாஜ்ஜியம் செய்யக் கடமைப்பட்டவன் என்பது சந்தேகிக்கத் தகுந்தது. உயிலைக்கொண்டு வாதாடி அதை ஸ்தாபிக்க வேண்டிய கடமை டிரஸ்டியாகிய 1-ம் பிரதிவாதியைச் சேர்ந்ததேயொழிய மைனர் வாதி உயிலைப்பற்றி பாத்தியங் கொண்டாட அவசியமேயில்லை. எப்படியானாலும் மைனர் வாதி உயிலின் அம்சங்களை நிராகரித்து தகப்பனுக்குப்பின் தாவா சொத்துக்களைத் தான் சுவாதீனமடைய யோக்கியமுள்ள



வனென்று சொல்லித் தான் பிராது செய்திருக்கிறார். அந்தவழக்கை மைனர் வாதியின் அடுத்த வாரிஸ்தார் மேல் நடத்த ஆக்ஷேபிக்கக் கூடாது. மைனர் வாதி இறந்தபின் தாவா சொத்துக்களின் சுவாதீனம் கோவிலார் வசம் மாறிப்போய்விட்டதென்று சொல்லி 2-ம் வாதி கோவிலாரையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்தபோதிலும் 1-ம் பிரதிவாதியும் மற்ற பிரதிவாதிகளும் உயிலின் பாத்தியதையால் தாவா சொத்துக்களைக் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்களென்று 2-ம் வாதி சொல்லியிருப்பதால் 2-ம் வாதி உயிலை ஆதாரமாகக்கொண்டு வழக்காடுகிறதாகச் சொல்லக்கூடாது. மற்ற பிரதிவாதிகளும் உயிலின்படி சொத்தை அடைந்ததாய்ச் சொல்லுகிறார்களேயொழிய வேறுவிதமான காரணத்தால் சொத்தை அடைந்ததாகச் சொல்லவில்லை. ஆகையால் பிரதிவாதிகளனைவரும் உயிலை ஆதாரம்கொண்டிருக்கிறார்களென்றும் அதுசெல்லத்தகாதென்றும் கூட்டுக் குடும்ப சொத்தாகையால் தாவா சொத்து தகப்பனுக்குப்பின் மைனர் வாதிபடையவேண்டிய நியாயமென்றும் மைனர் வாதி வழக்காடினதாக பாவித்து அவருக்குப்பின் 2-ம் வாதி அதே வழக்கை மேல் நடத்துவது நியாயமென்றும் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக இந்த கோர்ட்டில் வேறொரு நியாயம் பிரதிவாதிகளுக்காக எடுத்துச் சொல்லப்பட்டது. அதாவது மைனர் கார்டியன் மூலமாய் இந்த வழக்கை நடத்தினபடியால் அதேமைனர் தன் கார்டியன் சரியாய் வழக்காட வில்லையென்று பின்னால் வழக்காடலாமென்றும் அதனால் மைனர்வாதியின் பரிகாரம் ஸ்வய நலத்தையொட்டினதாகுமென்றும் வாரிஸ்கள் அதேபரிகாரத்தைத் தொடர்ந்து நடத்தி அடையக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறது. இந்த நியாயத்தை ஒப்புக்கொள்ள யாதொரு அதாரடியும் காணப்படவில்லை. அது யுக்தமாய்த் தோன்றவுமில்லை. ஆகையால் எதிரிகளின் கக்ஷியும் சப்கோர்ட் தீர்மானமும் ஒப்புக் கொள்ளத்தகாதென்று மேற்கண்டவிதமாய் அப்பீல் ரிமாண்டாச்சுது. XXVII. M. L. J. 674.

---

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

(மதராஸ்)

**O. S. A. No. 77 of 1914—6 நவம்பர் 1914.**

விஸ்வநாதரெட்டி vs. கேமர் துரை.

கேமர் துரையென்ற வாதி பிரதிவாதியின்பேரில் இங்கிலாந்து தேசத்திலுள்ள ஹைகோர்ட்டில் தனக்குச் சேரவேண்டிய பாக்கித் துகை £ 425-17-2-க்காக தாவா செய்து பிரதிவாதிக்கு நோடீஸ் ஸர்வானபின் எதிரான்ஸராக ஸ்டேட்மெண்டு தாகல் செய்யவேண்டிய முறைக்கு பதிலாக சிற்சில வினாக்களுக்கு விடையெழுதி அனுப்பவேண்டுமென்று உத்திரவளிக்கப்பட்டும் அவ்வித விடைகளை எழுதியனுப்பாத காரணத்தால் ஹைகோர்ட்டார் எதிரிக்கு எதிர்வாதம் செய்யும் சிலாக்கியத்தை மறுத்துவிட்டு பிரதிவாதியின் பேரில் வாதி கோறியபடி டிக்கிரீயளித்தார்கள். பிரதிவாதி சென்னைவாஸியாயிருப்பதாலும் அவனுடைய சொத்துகளும் சென்னையிலிருப்பதாலும் வாதி இங்கிலாந்தில் பெற்ற டிக்கிரீயின் பரிகாரத்தை பிரயோகப்படுத்தும் பொருட்டு ஷை டிக்கிரீயை ஆதாரமாய்க் கொண்டு மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் பிரதிவாதியின் பேரில் தாவா செய்து இங்கிலீஷ் டிக்கிரீயில்கண்ட துகையை பிரதிவாதியினிடமிருந்து வசூலிக்கத்தக்கபடி இங்கும் வேறு டிக்கிரீ யளிக்கவேண்டுமென்று கோறிக்கொண்டார். பிரதிவாதி எதிரான்ஸரில் இங்கிலீஷ் கோர்ட்டாருக்கு வாதியின் பிராதை ஏற்றுக்கொள்ள அதிகாரவரம்பில்லையென்றும் இங்கிலீஷ் கோர்ட் டிக்ரீயானது நியாய விசாரணை செய்யப்படாமல் பிறந்ததென்றும் ஆகையால் அவ்வித டிக்ரீயை ஆதாரமாகக் கொண்டு வாதி மதராஸ் ஹைகோர்ட்டில் தாவா செய்யக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார். ஹானரபில் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் பிரதிவாதியின் ஆக்ஷேபனைகளை ஒப்புக்கொள்ளாமல் இங்கிலீஷ் டிக்கிரீயில் கண்ட பிரகாரம் வாதிக்குப்பிரதிவாதியின்மேல் தீர்ப்பளித்தார்கள். அதன்மேல் பிரதிவாதி அப்பீல் செய்ததில் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்களின் தீர்மானம் சரியல்லவென்று ஏற்பட்டு நியாய முறையைப் பற்றி விஜாரணை செய்யாமல் பிறந்த இங்கிலீஷ் டிக்கிரீயின்பேரில் வாதி இந்த தாவா கொண்டுவரக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டு வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. அப்பீல் தீர்ப்பின்

ஸாராம்சமாவது:— ஸி. பி. ஸி. 13-வது பிரிவின் கிளாஸ் (b)-யில் சொல்லியிருக்கிறபடி அந்நிய தேசத்தில் பிறந்த டிக்ரீயின்மேல் இந்தியாவில் செய்யப்படும் பிராதை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அந்த டிக்ரீயானது வியவகார நியாயத்தைக் கவனித்து பிறந்ததா யிருக்கவேண்டும். தாவா இங்கிலீஷ் கோர்ட் டிக்கிரீயானது பிரதிவாதியின் எதிர் நியாயம் கேட்கப்படாமல், பிரதிவாதிக்கு டிபென்ஸ் இல்லையென்று பாவிக்கப்பட்டு வாதிகோரிய பரிகாரத்தின் நியாயத்தைப்பற்றி ஆராய்ந்து பாராமல் அளிக்கப்பட்ட டிக்ரீயாகக் காணப்படுகிறது. இப்பேர்ப்பட்ட டிக்ரீயானது பின்னால் கொண்டுவரப்படும் தாவாவுக்கு ஆதாரமாகப் பார்ட்டிகளைக் கட்டுப்படுத்தாதென்று சொல்லவேண்டும். பிரதிவாதியின் ஸ்டேட்மெண்டு கிடையாதென்ற காரணத்தால், எதிர்வாதமே கிடையாதென்று பாவித்து, ஈரங்கிகாலத்தில் எதிரியை வியவகாரத்தின் நியாயத்தைப்பற்றி ஆக்ஷேபித்துப்பேச அனுமதி கொடுக்காமல், பிறந்த டிக்கிரீயானது நியாய முறையை கவனித்துப் பிறந்ததாக எப்படி பாவிக்கலாம்? (1876) 1 P. D. 393-ல் பிரதிவாதி ஆஜராகாத காரணத்தால் வாதிக்கனுகூலமாய் பிறந்த டிக்ரீயானது நியாயமுறையை கவனித்து பிறந்த டிக்ரீயாக பாவிக்கப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1904) P-41-லும் அதேமாதிரி அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதி ஆஜராகாத காரணத்தால் பிறந்த டிக்ரீயின் தன்மைக்கும் பிரதிவாதி சில குறித்த வினாக்களுக்கு விடை எழுதி தாக்கல் செய்யத்தவறினதால் பிறந்த டிக்ரீயின் தன்மைக்கும் வித்தியாசப்படுத்த நியாயமில்லை. ஏனெனில் விடையெழுதிக் கொடுக்காத விஷயத்தால் பிரதிவாதி ஆஜராகாதவனாக பாவிக்கப்பட்டுதான் டிக்ரீயளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே மேற்கூறிய இரண்டு அதாரிடிகளின் தீர்மானத்தால் தாவா கேஸில் பிறந்த இங்கிலீஷ் டிக்ரீயானது நியாயமுறையை கவனித்துப் பிறந்ததல்லவென்றே சொல்லவேண்டும். அன்றியும் 31 Ch. D. 478-ல் விடை எழுதிக்கொடுக்காத காரணத்தால் எதிரிக்கு டிபென்ஸ் கிடையாதென்று விலக்கி வாதிக்கு ஏற்பட்ட டிக்கிரீயைப்பற்றிக் கொடுத்த தீர்மானத்தில் ஜஸ்டிஸ் பார்ஸன் துரையவர்கள் (Parson, J.) ஒருகேஸின் நியாயத்தைப்பற்றி விஜாரணை செய்யாமல் தீர்மானம் கொடுக்கக்கூடாதென்றும் அப்படிக்கல்லாமல் பிறந்த தீர்மானத்தை மதிக்கவே கூடாதென்று மிகவும் பலமாய் எடுத்துரைத்திருக்கிறார்கள். 23 Q.B.D. 124-ல் அசல்கோர்ட்டார் எதிரி விடை யெழுதிக் கொடுக்காத காரணத்தால் எதிரியின் பேரில் அளிக்கப்பட்ட ஒரு டிக்கிரீயை ரத்துசெய்து விட்டார்கள். ஆனால் அப்பீல் கோர்ட்டார் எதிரியின் பிரமாணப் பத்திரிகையில் எதிர் வழக்காடத்தக்க பாயிண்டுகள் யாதொன்றும் காணப்படாத காரணத்தால் முதல் பிறந்த தீர்மானத்தை ரத்துசெய்ய மறுத்துவிட்டார்கள். அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மான நியாயம் தாவா கேஸுக்கு விரோதமல்ல. மேற்கூறிய தீர்மானங்கள் ஜஸ்டிஸ் பேக்வேல் துரையவர்களுக்கு எடுத்துக்காட்டப்படவில்லையென்று தோன்றுகிறது. ஆகையால் தாவா கேஸில் பிறந்த இங்கிலீஷ் கோர்ட் டிக்கிரீயானது நியாய விஜாரணையின்பேரில் ஏற்பட்ட டிக்கிரீயல்லவென்று தீர்மானிக்கப்படவேண்டும்.

அவ்விதமாய்ப் பிறந்த டிக்ரீயை ஆதாரமாய்க் கொண்டு வாதி இந்த தாவா கொண்டு வரலாமாவென்று யோசித்துப்பார்க்குமிடத்து இந்தப் பிராதையும் இவ்விஷயங்களையும் கவனித்தால் வாதி இங்கிலீஷ் கோர்ட் தீர்ப்பின்மேல் இந்தப்பிராது கொண்டு வந்திருக்கிறாரே யொழிய ஆதியில் பிரதிவாதியின் பேரில் ஏற்பட்ட வியாஜ்ஜிய மூலத்தைக் கொண்டு இந்தப் பிராது கொண்டு வந்ததாகக் காணப்படவில்லை. ஆகவே சட்டப்படி ஒழுங்கான முறையில் பிறந்த அந்நிய தேசத்து டிக்கிரீயினால் ஏற்படும் பரிகாரத்தை எதிரி திருப்திசெய்யவேண்டிய கடமை யென்ற விஷயமானது தாவா கேஸுக்கு வியாஜ்ஜியமூலமாகிறது. (1867) 8 W.R. 32 & (1845) M. & W. 628-இவைகளைப் பார்க்கவும். வியாஜ்ஜிய மூலத்திற்குரிய அந்நியதேசத்து டிக்கிரீயானது நியாய விஜாரணை யில்லாமல் ஏற்பட்டதாயிருந்தால் அந்த டிக்கிரீ முடிவான (ஆக்ஷேபிக்கத்தகாத) தல்லவென்று இந்தியாவின் சட்டமுறையில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவ்விதமான தீர்ப்புகள் வியாஜ்ஜியமூலமாக ஏற்றுக்கொள்ளத் தகாதென்று சொல்லவேண்டும். நியாய விஜாரணையில்லாமல் ஏற்படும் அந்நியதேசத்து தீர்மானம் பின்னால் செய்யப்படும் புனர் வியாஜ்ஜியத்திற்கு இடையூறா



காதென்று 1877-ல் ஏற்பட்ட இந்தியன் கோடில் (C. P. C)-யில் விதிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய சட்டம் ஏற்படுமுன்னமேயே அதாவது (1871) W. R. 500-ல் வியவகார விஷயத்தைப்பற்றி நியாய விஜாரணை செய்யாமல் ஏற்படும் அந்நிய தேசத்து தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளவே கூடாதென்று தீர்மான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானம் நியாயமானதோ அல்லவோ, அல்லது பின்னால் ஏற்பட்ட இங்கிலீஷ் தீர்மானங்களுக்கு ஒற்றுமையா யிருக்கிறதோ அல்லவோ என்ற விஷயத்தை கவனிக்காமல், அந்த அபிப்பிராயம் இந்திய சட்ட விதிகளில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அந்தசட்ட விதியை அனுஸரிக்கவேண்டியது கடமையாகும். 1877-ம் வருஷத்திய ஸி. பி. ஸி-யில் அந்நிய தேசத் தீர்ப்புகள் பிந்திய வழக்குகளுக்கு இடையூறாகுமாவென்ற விஷயத்தைப்பற்றி யோஜிக்கப்பட்டிருக்கிறதேயொழிய அந்நிய தேசத்தீர்ப்புகளே புதிய வியாஜ்ஜிய மூலத்திற்கிடமாகுமாவென்ற விஷயத்தைப்பற்றி யோஜிக்கவில்லை. 1888-ல் ஏற்பட்ட ஸி. பி. ஸி-யில் 14-வது பிரிவில் சில குறித்த அந்நிய தேசத்தீர்ப்புகளின் பேரில் கொண்டுவரப்படும் தாவாக்களில் இந்திய கோர்ட்டார் கேஸின் தன்மையைப்பற்றியும் நியாயத்தைப்பற்றியும் விஜாரணை செய்து பைசலளிக்கலாமென்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் 14-வது பிரிவின் அம்சங்கள் எல்லாம் அந்நிய தேசத்தீர்ப்புகளின் பேரில் கொண்டுவரப்படும் தாவாக்களுக்கும் ஏற்றதாகுமென்றும் புதிய தாவாக்களுக்கு ரிஜுடிகேடாவாகச் சொல்லப்படும் அந்நிய தேசத்தீர்ப்புகளுக்கும் ஏற்றதாகுமென்றும் விளங்குகிறது. அதாவது அந்நிய தேசத்தீர்ப்புகளின் பேரில் வியாஜ்ஜியம் செய்தாலும் ஸரி அல்லது அவ்வித தீர்ப்புகளை பிந்திய தாவாவுக்கு ரிஜுடிகேடாவாக உபயோகப்படுத்த வேண்டுமானாலும் ஸரி அத்தீர்ப்புகள் ஸி. பி. ஸி. 14-வது பிரிவின் (புதுகோடு 13-வது பிரிவின்) அம்சங்களுக்குத் தக்கதாயிருக்கவேண்டும். தாவா கேஸில் பிறந்த இங்கிலீஷ் கோர்ட் டிக்கிரீயானது 13 (b) யின் அம்சங்களுக்கு விரோதமாயிருக்கிறது. ஆகவே வாதி அந்தத்தீர்ப்பை ஆதாரமாய்க் கொண்டு தாவா செய்யக் கூடாதென்று சொல்லவேண்டும். ஏனெனில் அது நியாயவிஜாரணையின் பேரில் பிறந்த தீர்மானமல்ல.

இங்கிலீஷ் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பைப்பற்றி எதிரி ஆக்ஷேபித்ததில் அதைப்பற்றி தீர்மானங் கொடுக்கவேண்டிய அவசியமேயில்லை. இங்கிலாந்திலுள்ள ஹைகோர்ட், பார்லிமெண்டாரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இங்கிலீஷ் கோர்ட்தீர்ப்பின் அதிகார வரம்பைப்பற்றி இந்திய கோர்ட்டார் ஆக்ஷேபிக்கக் கூடாது. நியாய விஜாரணை இல்லாத இங்கிலீஷ் தீர்ப்புகள் இந்தியாவில் ஆதாரங்கொள்ளப்படக்கூடாதென்று மேலேசொன்ன அபிப்பிராயம் இங்கிலீஷ் தீர்ப்புகளின்பேரில் கொண்டுவரக்கூடிய வியாஜ்ஜியானுகூலத்திற்கு மிக்க பாதகமாகிற தென்பதில் சந்தேகமில்லை. ஆனால் 22 கல்கத்தா 222-ல் பிரிவிகௌன்ஸிலார் தீர்மானித்திருக்கிறபடி இங்கிலீஷ்பார்லிமெண்டாரால் இங்கிலாந்திலுள்ள ஹைகோர்ட்டுகளுக்கு அதிகார வரம்பேற்படாவிட்டால் இங்கிலீஷ் ஹைகோர்ட் தீர்ப்பின்பேரில் இந்தியாவில் தாவா செய்யவேகூடாது. 28 கல்கத்தா 641-ஐப் பார்க்கவும். மேற்கூறிய காரணங்களால் எதிரியின் 2-வது ஆக்ஷேபனை நியாய மானதென்று தீர்மானிக்கப்பட்டு வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. XXVII M. L. J 670.

---

ஜஸ்டிஸ் **சதாசிவய்யர்** & ஜஸ்டிஸ் **ஹானே.**

(செங்கல்பட் ஜில்லா)

A. S. 693 of 1913—16 நவம்பர் 1914.

சிவபாத முதலி vs. தியாகராஜ செட்டியார்.

ஏகத்தூர் ஜமீன் கிராமத்தை மாஜி ஜமீன்தாரிடமிருந்து வாதி தியாகராஜ செட்டியார் கிறயத்திற்கு வாங்கும் பொழுது மாஜி ஜமீன்தார் பிரதிவாதிகளாகிய டெனெண்டுகளிடமிருந்த குடிவார பாத்தியதையை 1900-ம் வருஷத்தில் தீர்வை பாக்கிக்காக ஏலத்திற்குக் கொண்டுவந்து அந்த குடிவார பாத்தியதையை மாஜி ஜமீன்தாரே ஏலத்தில் கிறயம் பெற்றமையால் வாதி ஷை ஜமீன்தாருக்குறிய ஏல விக்கிறயத்தால் ஏற்பட்ட குடிவார பாத்தியதையையும்கூட சேர்த்துக் கிறயம் பெற்றார். ஆகவே வாதிக்கு தாவா கிராமத்தில் மேல்வார பாத்தியதையையுடன் குடிவாரபாத்தியதையு—மேற்பட்டிருக்கிறபடியால் கிறயமான குடிவாரபாத்தியதையை அனுசரித்து பிரதிவாதிகளை இஜெக்ட் செய்யவேண்டுமென்று 1906-ல் திருவள்ளூர் டி. மு. கோர்ட்டில்

பிராது கொடுத்தார். அக்காலத்தில் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வரவில்லை. டி. மு. கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஆனால் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் 5-வது இஷ்யூவைப்பற்றி கீழ் கோர்ட்டார் வாதிக்கு விரோதமாய்த் தீர்ப்பளித்தது பிசகென்றுசொல்லி கேஸின் நியாயத்தைக் கவனித்து மறுவிஜாரணை செய்து பைசலளிக்கும்படி டி.மு. கோர்ட்டாருக்கு ரிமாண்டு உத்தரவளித்தார்கள். இந்த 2-வது அப்பீல் தீர்மானம் 1911 ஆகஸ்ட் 2உல் ஏற்பட்டது. அக்காலத்தில் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வந்துவிட்டது. டி.மு. கோர்ட்டார் மறுவிராஜாரணைக்குக் கேஸை எடுத்தபொழுது பிரதிவாதிகள் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 6-வது பிரிவின் 1-வது கிளாஸில் கண்ட நியாயத்தைச் சொல்லி அதாவது எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வந்த காலத்தில் யாதொரு நிலத்தின் அனுபோகத்தை யுடையவர்களுக்குக் குடிவாரபாத்தியதை உண்டாய் விட்டதாகுமாதலால் பிரதிவாதிகளுக்கு 1908-ம் வருஷத்திலேயே குடிவார பாத்தியதை உற்பத்தியாகிவிட்டதென்றும் ஆகவே வாதியாகிய நிலச்சுவான்தார் தங்களை இஜெக்ட் செய்யக் கூடாதென்று ஒரு புதிய ஆக்ஷேபணை செய்தார். அதன்பேரில் டி. மு. கோர்ட்டார் இரண்டு புதிய இஷ்யூக்களை ஏற்படுத்தினார்கள். அதாவது 1908-ல் பிரதிவாதிகளுக்குக் குடுவாரபாத்தியதை உண்டாய்விட்டதா வென்றும் அந்த வாதத்தை பிரதிவாதிகள் இந்தமறுவிஜாரணை காலத்தில் செய்யலாமாவென்ற இஷ்யூக்கள் ஏற்பட்டு சாங்கி நடந்தபின் டி. மு. கோர்ட்டார் பிரதிவாதிகளுக்கனுகூலமாய்த் தீர்ப்பளித்து வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில் ஜில்லாகோர்ட்டார் மாறான அபிப்பிராயங்கொண்டு 6-வது பிரிவின் கருத்திலடங்கிய சுவாதீனத்திலுள்ள ரயட்டுகளாக இந்தப் பிரதிவாதிகளை மதிக்கக்கூடாதென்றும் ஆக்ட்நமோதுக்குவருமுன்னமேயே பிரதிவாதிகளின் பாதியதையானது ஏலத்தில் மாறிப்போய் விட்டதாயும் ஆகவே ஏலமானபிறகு நிலத்தை விட்டுப்போகாத பிரதிவாதிகள் சட்டப்படியுள்ள பாத்தியதையால் சுவாதீனமடைந்தவர்களல்ல வென்றும், 6-வது பிரிவின்படி குடிவாரபாத்தியம் ஏற்படுவதற்கு, ஆக்ட்நமோதுக்கு வருமுன் குடிவார பாத்தியதை இல்லாமல் குத்தகை வாய்தா கடந்துபோனபின் நிலத்தைவிடாமல் தொடர்ந்து அனுபவிக்கிற ரயட்டுகளாயிருக்க வேண்டுமென்றும், இந்தப் பிரதிவாதிகளின் பேரில் ஆக்ட் நமோதுக்கு வருமுந்தியே இஜெக்ட்மெண்டு நடவடிக்கைகள் தொடங்கி நடைபெற்று வருவதால் அவர்கள் சரியான நிலமையில் நிலத்தை அனுபவிக்கிறவர்களல்லவென்றும் சொல்லி பிரதிவாதிகளுக்கு விரோதமாய் இஜெக்ட்மெண்டுக்காக டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் ரத்தாகி டி-மு. கோர்ட் தீர்ப்பு காயமாச்சுது ஆகவே பிரதிவாதிகளின் குடிவார பாத்தியதை ஸ்தாபிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணச் சுருக்கமாவது:—36-மதராஸ் 439-லும் 21 M. L. J. 81-லும் பிரசுரமாயிருக்கிற புல்பெஞ்சு தீர்மானத்தில் ஒரு ரயட்டின் பேரில் நிலச்சுவான்தார் இஜெக்ட்மெண்டு டிக்ரீ பெற்றபின் அது அப்பீலாகி எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வந்த தேதியில் அந்த அப்பீல் பெண்டிங்கிலிருந்தாலும் கூட ரயட்டானவன் ஆக்டின் 6-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற சிலாக்கியத்தைப் பாராட்டி குடிவார பாத்தியதை உடைத்தானவனாகிறானகையால் அப்பீல் கோர்ட்டார் நிலச்சுவான்தாருக்கு விரோதமாய் ரயட்டின் குடிவார பாத்தியதை அங்கீகரித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புல்பெஞ்சுக்கு ரிபர் செய்த உத்திரவில் "சுவாதீனத்திலிருக்கிற ரயட்டின்மீது இஜெக்ட்மெண்டு டிக்கிரீ ஏற்பட்டால் அந்த டிக்கிரீயான தேதிமுதல் ரயட்டின் சுவாதீன நிலமை நீங்கிப்போய் விடுகிறதென்ற நிலச்சுவான்தாருடைய வாதம் சுவாதீனத்தையும் ஆதீனபாத்தியதையையும் குழப்பமுண்டாக்கத்தக்க விதமாய் கலந்து பேசுவதுபோலாகுமென்றும் ஆகவே அவ்வித வாதத்தை ஒரு பொருட்டாய் கவனிக்கக் கூடாதென்று" எடுத்துரைத்திருக்கிறார்கள்.

1909-ம் வருஷத்தில் எஸ்டேட்ஸ் ஆக்டின் சீர்திருத்தத்தின் 3-வதுபிரிவில் 1908-வதுவருஷத்திய ஆக்டின் 6-வது பிரிவின் கருத்தை விளக்கிச் சொன்னதில் ரயட்டாக ஒரு நிலத்தை அனுபவித்துவந்து ஆக்ட் நமோதுக்கு வந்த காலத்திலும் தொடர்ந்த



சுவாதீனத்தால் அனுபவித்து வருகிறவன் 6-வது பிரிவின் சிலாக்கியத்தைப் பற்றி குடிவார பாத்தியதையை அடைந்தவனாக மதிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இந்தப் பிரதிவாதிகளும் பழய தரிசல்லாத சாகுபடிக்கு லாயக்கான நிலத்தில் ஆக்ட் நமோதுக்கு வருங்காலத்தில் தொடர்ந்த அனுபோகத்தை யுடையவர்களாகிறார்களென்றே சொல்லவேண்டும். அப்படியானால் அவர்கள் 6-வது பிரிவின்படி தாவா நிலத்தில் சாசுவதமான குடிவார பாத்தியதை அடைந்துவிட்டார்களென்று மதிக்கப்படவேண்டும். 8-வது பிரிவின் 1-வது கிளாஸில் தீர்வை பாக்கிக்காக ஏலம் போடப்பட்ட குடிவார பாத்தியதையை கிறயத்திற்கு வாங்கும் நிலச்சுவான்தார் ரயட்டென்ற நிலமையையும் பாத்தியதையும் கொண்டாடி அந்த நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளக் கூடாதென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது. வாதி 190[illegible]-ல் கிறயம்பெற்ற உடனேயே நிலத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டாலும் அந்த நிலம் ஆக்டின் கருத்துப்படி சாகுபடிக்கு லாயக்கான ரயட்டி லாண்டாகாது. 185-வது பிரிவையும் மற்ற சில சட்டப்பிரிவுகளையும் கவனித்துப் பார்த்தால் குடிவார பாத்தியதையை விக்கிறயம் செய்த விஷயத்தால் ரயட்டி லாண்டானது பிரைவேட் நிலமாக மாறிப்போகாதென்று ஏற்படுகிறது. ஆகவே தாவா நிலம் ரயட்டி லாண்டாகிறது. பிரதிவாதிகள் அதை சாகுபடி செய்வதற்காகவே உபயோகப்படுத்தி வருகிறார்கள். நிலச்சுவான்தாருக்குத் தீர்வை கொடுக்க வேண்டிய கடமையைப்பற்றி ஆக்ஷேபணைசெய்தவர்களுமல்ல. குடிவார பாத்தியதை ஏலத்தில் விக்கிறயமாய்ப் போன காரணத்தால் ஆக்ட் நமோதுக்கு வருமுன்குடிவாரபாத்தியதையற்றவர்களாயிருந்தபோதிலும் அவர்கள் ரயட்டி லாண்டை வேளாண்மைக்காக தீர்வை செலுத்தும் கடமையை நிராகரிக்காமல் அனுபவிக்கிற காரணத்தால் ரயட்டென்னும் நிலமையை இழக்காமல் ஆக்ட் நமோதுக்கு வந்த தேதியில் குடிவார பாத்தியதையை அடைந்தவர்களாய் பாவிக்கப்படவேண்டியதவசியமாகும். (1911) M.W.N. 798-ல் ஜஸ்டிஸ் ஏயிலிங் துரையவர்களும் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களும் 1878-ல் குடிவார பாத்தியதையை நிலச்சுவான்தார் தீர்வை பாக்கிக்காக ஏலமானதில் கிறயம் பெற்றும் அந்த நிலம் ரயட்டி லாண்டாகத் தொடர்ந்து வருவதாய் மதிக்கப்படவேண்டுமென்றும் ஆக்ட் நமோதுக்கு வருங்காலத்தில் சுவாதீனத்திலிருக்கிறவனுக்கு 6-வது பிரிவின்படி குடிவார பாத்தியதை உண்டாய்விட்டதென்றும் தீர்மானத்திருக்கிறார்கள். அந்தக் கேஸில் நிலச்சுவான்தார் குடிவாரபாத்தியதையை ஏலமெடுத்த பின்னும் ரயட்டை டெனெண்டாக அங்கீகரித்தாரென்ற காரணத்தையிட்டு மேற்கூறிய விதமாய்த் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அது நியாயம்தான் என்றும் அந்தக் கேஸின் நியாயம் தாவா கேஸுக்கு உதவாதென்றும் வாதிக்காகச் சொல்லப்படுகிறது. அந்தக் கேஸில் நிலச்சுவான்தார் ரயட்டை பண்ணைக் குடியாளாய் நிலத்தில் சுவாதீனப் படுத்திவைத்திருந்திருக்கிறார். அன்றியும் ரயட்டிலாண்டை சுவாதீனமுடையவனுக்கு ஆக்ட் நமோதுக்கு வந்ததேதியில் சாசுவதமான குடிவாரபாத்தியதை வந்துவிடுகிறதென்ற பெரும் நியாயத்தைக்கொண்டு அந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும்.

சரியான குடிவாரபாத்திய முடையவனை ஆக்ட் நமோதுக்கு வந்த சொற்பதினங்களுக்கு முன் யாதொருவன் துராகிருதமாய்வெளிப்படுத்தி நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டால அவ்வித அந்நியனுக்கும் ஆக்ட் நமோதுக்கு வந்ததேதியில் 6-வது பிரிவின்படி குடிவார பாத்தியதை வந்துவிடுமோவென்று கேட்கப்படுகிறது. 6-வது பிரிவில் ஆக்ட் நமோதுக்கு வந்த காலத்தில் சுவாதீன மடைந்தவனுக்கு "நிலச்சுவான்தாருக்கு விரோதமான" குடிவார பாத்தியதை ஏற்படுமென்ற வசன மில்லாவிடினும் ஏற்படும் குடிவாரபாத்தியதையானது சாசுவதமானதாகுமென்ற வசன மிருப்பதாலும் அதே பிரிவில் நிலச்சுவான் தாரைப் பற்றிய பாத்தியதை விஷயமாய் பற்பல ஷரத்துகள் ஏற்பட்டிருப்பதாலும் குடிவாரபாத்தியதையானது நிலச்சுவான்தாருக்கு விரோதமாக உண்டாகுமென்று கருதப்பட்டிருக்கிறதாகவும் நிலச்சுவான்தாரைத் தவிற இதரயான பாத்தியஸ்தர்களுக்குள் ஏற்படும் விவாதத்திற்கு 6-வது பிரிவின் அம்சங்கள் சாதகபாதகத்தை உண்டாக்காதென்று சொல்லவேண்டும். அதாவது ரயட்டுகளுக்குள் ஒருவருக்கொருவர் குடிவார பாத்தியதையைப்பற்றி விவாதம் செய்து கொண்டால் ஆக்ட் நமோதுக்கு வந்தகாலத்தில் சுவாதீனமுடைய ரயட்டின் பாத்தியம் மேலான

தென்று 6-வது பிரிவின் அம்சத்தைப்பிரயோகித்து வாதிக்கக் கூடாதென்று சொல்லவேண்டும்.

கடைசியாக வாதி குடிவார பாத்தியதையை அனுசரித்து இந்த தாவா செய்தாரென்றும் நிலச்சுவான்தாரின் நிலமையில் பிராது கொண்டுவரவில்லையென்றும் சொல்லப்படுகிறது. 8-வது பிரிவின்படி ரயட்டின் பாத்தியதையை எலமெடுத்த நிலச்சுவான்தார் ரயட்டென்னும் நிலமையை அமைத்துக் கொள்ளக்கூடாதென்று சொல்லியிருப்பதால் அதாவது அவ்வித கிறயத்தால் தன்னுடைய சுவான்தார் என்னும் நிலையான அந்தஸ்தை விட்டு விடக்கூடாதென்று சொல்லியிருக்கிறபடியால் அவ்வித விக்கிறயமானது சுவாதீனத்திலிருக்கும் ரயட்டுக்கு விரோதமாக ஏற்பட நியாயமில்லை. ஆனால் மூன்றாவது மனிதன் எலமெடுத்திருந்தால் அவனுக்கு சுவாதீனத்திலிருக்கும் ரயட்டின் மீது தாவா செய்து தன் விக்கிறய பாத்தியதையைப் பாராட்டி இஜெக்ட்மெண்டு டிக்கிரீ பெறலாம். 1914 M.W.N. 798-ல் இதேவித நியாயம் ஏற்பட்டிருக்கிறது. அந்த தீர்மானத்தை அனுசரித்து வாதியின் பிராதை டி-மு. கோர்ட்டார் தள்ளுபடி செய்தது நியாயமென்று சொல்லவேண்டும். XXVII M. L. J. 665

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் நேபியர்

ராமனாதபுரம் ஜில்லா

C. M. A. 7 of 1914—26 அக்டோபர் 1914

சார்டர்டு பாங்கி ஏஜெண்ட் அருணாசலம் செட்டி

vs.

வெள்ளையப்ப செட்டி.

ரங்கூனில் வர்த்தகம் செய்து வந்த நாட்டுக்கோட்டை செட்டிமாருடைய கம்பெனியின்பேரில் பர்மா சீவ்கோர்ட்டில் பிறந்த டிக்கிரீயை நிறைவேற்றும்பொருட்டு ஷை டிக்கிரீயானது ராமனாதபுரம் சப்கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு அந்த இலாகாவிலுள்ள புள்ளத்தீன் என்னும் கிராமத்திலுள்ள பிரதிவாதி கம்பெனியாருடைய சில குடும்ப சொத்துக்கள் ஜப்தியாகி ஏலத்திற்குக்கொண்டுவரப்பட்டதின்பேரில் அக்குடும்பத்தைச் சேர்ந்த சில மைனர்கள் கம்பெனியின்பேரில் ஏற்பட்ட கடனுக்காக குடும்ப சொத்துக்களின்பேரில் தொடரக் கூடாதென்று ஆக்ஷேபித்து ஜப்தியை விடுதலை செய்யவேண்டுமென்று சப்கோர்ட்டில் பாத்தியமனுக்கொடுத்தார்கள் சப்கோர்ட்டார் பாத்தியமனுதாரின் ஆக்ஷேபணையை அங்கீகரித்து ஜப்தியை விடுதலை செய்து விட்டார்கள். அதன்பேரில் டிக்கிரீபாக்கிதார் ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் தாகல் செய்ததில் 27 மதராஸ் லா ஜர்னல் 631ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற (சிதம்பரம் செட்டி vs. ராமசாமிசெட்டி) தீர்மான அபிப்பிராயத்தை அனுசரித்து நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் விஷயத்தில் குடும்ப சொத்துக்களும் வர்த்தகத்தின் மூலதனமாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும் குடும்ப சொத்திற்கும் வர்த்தக மூலதனத்திற்கும் வித்தியாசம் கிடையாதென்றும் சொல்லி இந்தியாவில் நடக்கும் கே. பி. கம்பெனியினுடைய கிளைவர்த்தகமாக ரங்கோன் கம்பெனி நடந்து வந்தமையால் ரங்கோன் கம்பெனியின்பேரில் ஏற்பட்ட டிக்கிரீபாக்கிக்காக கே.பி. கம்பெனியைச் சேர்ந்த முதலாளிகளின் குடும்பசொத்துக்களின்பேரில் தொடர நியாயமுண்டென்றும் குடும்ப வியாபாரத்தில் சேராத மைனர்களின் சொத்து யாதொன்றும் ஜப்தியான சொத்தில் சேர்ந்ததாக காணப்படவில்லையென்றும் ஆகவே சப்கோர்ட்டார் ஜப்தியை விடுதலைசெய்தது பிசகென்று அபிப்பிராயப்பட்டு பாத்தியமனுவின்பேரில் ஏற்பட்ட உத்திரவைரத்துசெய்து ஜப்தியை உறுதிப்படுத்தினார்கள் XXVII. M. L. J. 654.

———:O:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

வட ஆற்காடு ஜில்லா

A. S. 216 & 217 of 1911—6 அக்டோபர் 1914

ராஜா வெங்கடப்ப நாயனிம் வாரு

vs.

ராஜா திம்ம நாயனிம் வாரு.

பாகப்பிரிவினைக்கு யோக்கியமில்லாத காளஹஸ்தி ஜமீன்தாராகிய 1-ம் பிரதிவாதியின்பேரில் ஷை ஜமீன் வம்சத்தைச் சேர்ந்தவராயும் இதற்கு முன் இரண்டாவது தலைமுறையில் ஜமீன்தாராக இருந்த முத்து வெங்கடப்பா என்றவருடைய சகோதராகிய ராஜா வெங்கடப்ப நாயனிம்வாரு என்றவர் 1910-ம் வருஷத்திய அசல் நெ. 17-ல் தான் தனிமையாகவும் அசல் நெ. 9-ல் தானும்



தன்னுடைய ஸ்வீகார புத்திரனும் சேர்ந்து சித்தூர் ஜில்லா கோர்ட்டில் தங்களுக்கு மாதம் ரூ 650 விகிதம் ஜமீனிலிருந்து ஜீவனாம்சமாககொடுத்து வரப்படவேண்டுமென்று முந்திய ஜமீன்தாராகிய அக்கப்பா என்றவரால் ஏற்பட்ட ரெஜிஸ்டர் தஸ்தவேஜில்கண்டபடி 1-ம்பிரதிவாதி தங்களுக்கு ஒழுங்காய்க்கொடுத்துவராதகாரணத்தால் அந்ததஸ்தவேஜில் கண்டபடி தங்களுக்கு மாதந்தோறும் ரூ 650 செலுத்திவரப்படவேண்டிய கடமையை ஸ்தாபிக்கும்பொருட்டும் பாக்கி நிற்கும் ஜீவனாம்சத்தொகை பூராவையும் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கும்பொருட்டும் பாக்கித்தொகைக்கும் பிற்காலத்தில்செலுத்தப்படவேண்டிய தொகைக்கும் ஜமீன் சொத்துக்களின்பேரில்ஹக்கு ஏற்படவேண்டுமென்றும் ஜமீன் சொத்துக்களை அடமானம் பெற்றவர்களுடைய பாத்தியதை தங்கள் ஜீவனாம்ச ஹக்குபாத்தியதைக்குப் பிந்தியதாக ஏற்படவேண்டுமென்றும் தீர்மானமடையும் பொருட்டு டிக்லேரேஷன் தாவா செய்தார்கள். அடமானதார்களும் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். 1-ம் பிரதிவாதியாகிய ஜமீன்தார் எதிரான்ஸரில் வாதிகளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியது நியாயம்தானென்றும் ஆனால் ஜமீனுடைய தற்கால நிலமையானது தாழ்மையாய்ப்போனதாகவும் ஆகவே வாதிகளுக்கும் அவர்களுடைய கிளைவம்சத்தாருக்கும் மாதம் 1-க்கு ரூ 400-க்குமேல் கொடுத்துவரக் கட்டிவராதென்றும் ஜமீன் எஸ்டேட் கோர்ட் ஆப் வார்ட்ஸின் மானேஜ்மெண்டிலிருந்த காலத்திலும் அவர்களுக்கு ரூ 400-விகிதமாய்த்தான் கொடுத்து வரப்பட்டதென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். ஜில்லா கோர்ட்டார் வாதிகளுக்கும் அவர்களுடைய கிளைவம்சத்தாருக்கும் மாதம் ரூ 400 விகிதம் ஜீவனாம்சம் கொடுத்து வரப்படவேண்டுமென்றும் செலுத்தப்படாத முந்திய மாதங்களுக்கும் அதே விகிதப்படி கணக்கிட்டு ஏற்படும் தொகைக்கு எஸ்டேட் சொத்துக்களின் பேரில் ஹக்கு ஏற்படுத்தி வாதிகளுக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் வாதிகள் ரெஜிஸ்டர் உடன் படிக்கைகளில் கண்டபடி தங்களுக்கு ரூ. 650 விகிதம் சேரவேண்டுமென்றும் அதற்குக் குறைந்த தொகையைப் பெற்றுக்கொள்ள நியாயமில்லை யென்றும் சொல்லி ஜில்லா கோர்ட் டிக்கிரீயின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் தீர்ப்பைக் காயம் பண்ணி அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—1-ம் பிரதிவாதி 1890-ம் வருஷத்திய அசல் நெ. 12-ல் அக்காலத்தில் ஜமீன்தாராக இருந்த முத்து வெங்கடப்பா அவர்கள் பேரில் பாகவியாஜ்ஜியம் தொடுத்து மற்ற சகோதரர்களையும் அதில் பார்ட்டிகளாய்ச் சேர்த்திருந்தார். அந்த வழக்கு சமாதானமாய் முடிந்து ராஜீநாமா விண்ணப்பம் தாகல் செய்யப்பட்டு அதில் ஜமீன் பிரிவினைக்கு லாயக்கில்லை யென்று ஒப்புக்கொள்ளப்பட்டதும்தவிற ஜமீன்தாருடைய சகோதரர்களுக்கு (இந்த வாதி, 1-ம் பிரதிவாதியுள்பட), ஜீவனாம்சபாத்தியதை உண்டென்றும் தாவாதேதி முதல் 10-வருஷமட்டும் ஒவ்வொருசகோதரருக்கும் அவர்களுடைய ஆண்சந்ததிகளுக்கும் மாதம் 1-க்கு ரூ 600 விகிதமும் அதற்குப்பின் ரூ 700 விகிதமும் எஸ்டேட்டின் வருமானத்திலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றும்கண்டெழுதியிருந்தது. ஜில்லாகோர்ட்டார் அந்த ராஜீநாமாவில் கண்ட ஏற்பாட்டின்படி டிக்ரீயில் கண்டெழுதி பைசல் தீர்மானம் கொடுத்தார்கள் அதன்பேரில் ராஜீநாமாவில் சேராத சில பார்ட்டிகள் ராஜீநாமா டிக்கிரீயைப்பற்றி திருப்தி யடையாமல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் பாகப்பிரிவினைக்காக செய்யப்பட்ட தாவாவில் பிறக்கும் டிக்கிரீயில் ஜீவனாம்ச விஷயமாய் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப்பற்றிய விவரம் யாதொன்றும் காணப்படக்கூடாதென்று தீர்மானித்து ஜில்லா கோர்ட்டாருடைய டிக்ரீயில் அந்த அம்சத்தை விலக்கும்படி உத்தரவளித்தார்கள். முத்து வெங்கடப்பாவென்ற ஜமீன்தாரவர்கள் இறந்துபோகவே அக்கப்பா வென்ற சகோதரன் ஜமீன் ஆதீனத்தை அடைந்தார். அவருடைய காலத்தில் 4-ம் பிரதிவாதியாகிய ஒரு சகோதரனும் 6-ம் பிரதிவாதியின் தகப்பனாகிய மற்றொரு சகோதரனும் அக்கப்பா வென்ற ஜமீன்தார் பேரில ஜீவனாம்சத்திற்காக தாவாக்கள் செய்து சம்மதத்தின்பேரில் மாதம் 1-க்கு ரூ. 650 ஜீவனாம்சமாக கொடுக்கப்படவேண்டுமென்று டிக்கிரீ பெற்றார்கள். வாதியும் 1-ம் பிரதிவாதியாகிய இப்பொழுது ஜமீன் ஆதீனத்திற்கு வந்திருக்கிறவரும் அக்கப்பா என்றவரிடத்திலிருந்து ரெஜிஸ்டர் உடன்படிக்கைப் பத்திரத்தால் மாதம் ரூபா 650 ஜீவனாம்சமடைய

வேண்டியதாய் எழுதி வாங்கிக்கொண்டார்கள். அக்கப்பா இறந்த உடன் 1-ம் பிரதிவாதி ஜமீன்தாராக ஏற்பட்டார். வாதியும் வாதியின் ஸ்வீகார புத்திரனும் மேற்கூறிய அக்கப்பாவினிடமிருந்து பெற்ற ரெஜிஸ்டர் தஸ்தவேஜினால் தாங்கள் ஜமீன் எஸ்டேட்டுக்கு பாக்கிதார்களாய்விட்டதாகவும் கேவலம் ஜீவனாம்சபாத்தியதையை மட்டும் அடைந்தவர்களல்லவென்றும் அந்த உடன்படிக்கைப்பத்திரமானது அக்கப்பாவையும் அவருக்குப்பின் வருகிற ஒவ்வொரு ஜமீன்தாரையும் கட்டுப்படுத்துமென்றும் ஆகவே அந்த தஸ்தவேஜில் கண்ட தொகைக்குக் குறையாமல் தங்களுக்குச் செலுத்திவரப்பட வேண்டுமென்று வாதிக்கிறார்கள். அன்றியும் ராஜீ நாமாவானது சொத்து பாத்தியதை விஷயமாய் செய்யப்பட்ட வியவகாரத்தைத் தீர்ப்பதற்காக ஏற்பட்டதால் அந்த ராஜீநாமாவில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகளெல்லோரும் அவருடைய வாரிஸ்களும் அதில் கண்ட அம்சங்களுக்குக் கட்டுப்படவேண்டிய நியாயமாகுமென்றும் அந்த ராஜீநாமாவில் ஏற்பட்டிருக்கிற பாத்தியதையின்படியும் அதில் குறிக்கப்பட்ட பார்ட்டிகளுக்கு நிலையாக அமைந்து விட்டதாயும் வாதிகளுக்காகச் சொல்லப்படுகிறது. கடைசியாக ரூ. 650 மிகவும் அதிகமான தொகையல்லவென்றும் ஜமீன் எஸ்டேட்டிலிருந்து எளிதில கொடுக்கக் கூடிய தொகைதானென்றும் வாதிக்கப்படுகிறது.

சப்-கோர்ட்டார் ரூ. 400 நியாயமான தொகையென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார். அது ஒப்புக்கொள்ளத்தக்க அபிப்பிராயமாகுமென்று சொல்ல வேண்டும். உடன்படிக்கை பத்திரமானது முந்திய 1890-ம்வருஷத்தில் நடந்த பாக வியாஜ்ஜியத்திலேற்பட்ட ராஜீ நாமாவை அநுஸரித்து எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ராஜீநாமாவில் ஜீவனாம்சத் தொகை ரூ. 600—ரூ. 700 என்றவீதமாய்க் கண்டிருக்க உடன்படிக்கையில் ரூ. 650 என்று குறித்திருக்கிறது. தவிர தொகை கொடுக்கப்படவேண்டிய வாய்தாதேதிகளும் இரண்டிலும் வித்தியாஸமாயிருக்கிறது. ராஜீநாமாவில் ஜீவனாம்சத்தொகையானது எஸ்டேட்டின் வருமானத்திலிருந்து கொடுக்கப் படவேண்டுமென்று கண்டிருக்க உடன்படிக்கையில்எஸ்டேட் சொத்திலிருந்தும் அதன் வருமானத்திலிருந்தும் செலுத்தப்படவேண்டு

---

165405


# TAMIL LAW JOURNAL.

## தென் இந்திய வியவகார சிந்தாமணி.

1913 ஜூலை 17உ முதலில் பிரசுரமாய் வருகிற இந்த தமிழ் லா ஜர்னல் தென் பாகத்திலுள்ள வியவகாரஸ்தர்களும் மற்ற அருமையறிந்த கனவான்களும் கோரிக்கொண்டபடி 1914 ஜனவரிமுதல் **வாரந்தோறும்** பிரசுரமாய் வருகிறது.

சந்தா விபரம்.

வருஷ சந்தா ரூ. 5–0–0 ஆறுமாதத்திற்கு ரூ. 3–0–0

மூன்பணம் அல்லது வி. பி. உத்தரவின்றியில் பத்திரிகைகள் அனுப்பப்படமாட்டாது.

**Vol. I of 1913 (July to December) Price Rs. 2 0 0.**

(ஜூலை முதல் டிசம்பர் முடிய பிரசுரமான) "வியவகார சிந்தாமணி"
1–வது வாலியூம்—அட்டவணையுடன், விலை ரூ. 2–0–0
Vol. II of 1914. 2-வது வாலியூம் அட்டவணையுடன் ரூ 5-0-0.

விலாசம்:—மானேஜர், தமிழ் லாஜர்னல் ஆபீஸ், வெபெரி, சென்னை.